மானியம், துணை மானியம், நிதி ஒதுக்கீடுகள் மீது

# கலைஞரின் சட்டமன்ற உரைகள்

## (பாகம் - 1)



மானியம், துணை மானியம், நிதி ஒதுக்கீடுகள் மீது

# கலைஞரின்
# சட்டமன்ற உரைகள்
## (பாகம் - 1)

வெளியீடு :
தமிழ்க்கனி பதிப்பகம்
சென்னை - 600 004

விற்பனை உரிமை :
பூம்புகார் பதிப்பகம்
127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108.

முதல் பதிப்பு : மே, 2008

894.8115
TAN
ANNA CENTENARY LIBRARY
G002401

விலை ரூ. **290/-**

உரிமை : ஆசிரியர்க்கே

Printed & bound by Eagle Press, Chennai - 600 013.

# என்னுரை

1956ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்றது தி. மு. கழகத்தின் மாநில மாநாடு. தி. மு. கழகம் 1949ல் தொடங்கப்பட்டு ஏழாண்டுகள் ஆகியிருந்தன. அப்போதெல்லாம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், தி. மு. க. குறித்துப் பேசினாலும், எழுதினாலும், பேட்டி கொடுத்தாலும் - ஓர் அறைகூவல் விடத் தவற மாட்டார். "தி. மு. க. காரர்கள் வெட்ட வெளியில் நின்று பேசுகிறார்களே; அவர்களுக்கு மக்கள் ஆதரவு இருப்பது உண்மையானால் சட்டசபைக்கு வந்து பார்க்கட்டுமே !'' என்பதுதான் அந்த அறைகூவல் - அவரது அந்த அறைகூவலை அன்பான அழைப்பாகவே கருதி, அறிஞர் அண்ணா அவர்கள், "இனிமேல் வரும் தேர்தல்களில் தி. மு. க. போட்டியிடும்'' என்று ஒரு தீர்மானத்தை, திருச்சி மாநில மாநாட்டில் கூடியிருந்த லட்சோபலட்சம் மக்களின் தீர்ப்பாகவே வெளியிட்டார்.

அதன் விளைவாகக் கட்சியின் முன்னணித் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடும் இடங்களை - அண்ணா அவர்களே; கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் அறிவித்தார். அப்போது

நண்பர்கள் வற்புறுத்தலுக்கு இணங்க; நான் எனது பிறந்த ஊரான ''திருக்குவளை'' உள்ளிட்ட நாகைத் தொகுதியில் நிற்கலாமென்று முடிவு செய்துகொண்டு சென்னைக்கு வந்தேன். சென்னையில் அண்ணா அவர்கள், அன்றைய தலைமைக் கழகமிருந்த ராயபுரம் அறிவகத்தில் இருந்தார்கள். சந்தித்தேன். அண்ணா கையாலேயே என் பெயரை ''குளித்தலை தொகுதி''யில் குறிப்பிட்டு; என்னைக் கேட்காமலேயே அறிவித்துவிட்டார். மறுத்துரைக்காமல் குளித்தலையில் வேட்பாளராக நின்றேன். அந்தத் தேர்தலில் தூத்துக்குடி தொடங்கி, நாகை வரையில் இருந்த அனைத்துத் தொகுதிகளிலும் நான் ஒருவன் மட்டுமே குளித்தலையில் வென்றேன். ஆம்; சட்டப்பேரவை நுழைவுக்கான கதவு இப்படி எனக்குத் திறக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் அறிஞர் அண்ணா தலைமையில், நான், பேராசிரியர் க. அன்பழகனார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திருமதி சத்தியவாணிமுத்து, ஏ. கோவிந்தசாமி, ப. உ. சண்முகம், விருதாசலம் எம். செல்வராஜ், எம். பி சுப்பிரமணியம், ம. பா. சாரதி, களம்பூர் அண்ணாமலை, ஆனந்தன், இருசப்பன், பி. எஸ். சந்தானம், சி. நடராஜன் ஆகிய நாங்கள் 15 பேர் வெற்றிபெற்று, சட்டப்பேரவையில் இடம்பெற்றோம்.

அன்று முதல் இன்று வரை அனைத்துத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் எனக்கு; ஆம் கழகத்துக்கு; நான் போட்டியிட்ட தொகுதிகளில் வெற்றியைத்தான் அளித்தார்கள்.

இந்த ஐம்பது ஆண்டுக்காலத்தில் நான் சட்டப்பேரவையில், பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆற்றிய உரைகளை அவற்றின் அகல நீளம் கணக்கிடாமல் அப்படியே அச்சியற்றித் தருகிற அரிய பணிக்குத் தன்னை ஒப்படைத்துக்கொண்ட தம்பி சண்முகநாதனை என்னால் மறக்கவே முடியாது. அவரது முயற்சிதான் அடுக்கடுக்கான இந்தத் தொகுப்புகள் என்பேன்.

1938 முதல் 70 ஆண்டுக்கால என் பொது வாழ்க்கையில் - அரசியல் வாழ்வில் ஓர் அங்கமான சட்டப்பேரவையில் தொடர்ந்து 50 ஆண்டுக் காலம் நான் ஆற்றிய பணிகளை, அந்த அவையில் ஆற்றிய இந்த உரைகள் விளக்கிடும் என்பதில் ஐயமில்லை.

சொல்லாடலில் சூடும், சுவையும் மாறி மாறி காணலாம் - அதன் காரணமாக மனித நேயம் - நாகரிகம் - பண்பாடு இவற்றை அணுப்பொழுதும் மறந்ததுமில்லை; அரசியல் பகை காரணமாக அறவே துறந்ததுமில்லை.

அவற்றில் சிலவற்றுக்குச் சான்று கூற விழைகிறேன். நான் பிறந்த ஊர்

திருக்குவளையில் என் அன்னையின் பெயரால் ''அஞ்சுகம் தாய் சேய் நல விடுதி''யை முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம்தான் திறந்துவைத்தார். என் அன்னை அஞ்சுகம் அம்மையார் மறைந்தபோது எனக்கு முன்பு சென்று என் இல்லத்தில் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தியவர் அன்றைய முதல்வர் திரு. காமராஜர் !

காமராஜருக்கும் எனக்குமிடையே எவ்வளவோ கடுமையான அரசியல் போராட்டம் - ஆனால் அவர் மறைந்த பிறகு சென்னையில் காமராஜர் சாலை - சென்னையிலும், விருதுநகரிலும் காமராஜர் நினைவகம் - கன்னியாகுமரியில் வரலாற்றுச் சின்னமாக காமராஜர் மணி மண்டபம் - சென்னை விமான நிலைய உள்நாட்டு முனையத்திற்கு காமராஜர் பெயர் - அவர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட சட்டம் - இத்தனையும் அரசியல் பண்பாட்டின் அடையாளமாக நான் உருவாக்கியது - அதுபோல அவர் நினைவு போற்ற எத்தனையோ ஏற்பாடுகள்.

மனித நேயத்துடன் அரசியல் நடத்தப்பட்டது - அராஜகங்களுக்கிடையிலேயும் அன்பு மலர் பூத்தது.

இப்படி பல வடிவெடுத்த சூழ்நிலைகள் - சமுதாய மாற்றங்கள் -

இவைகள் கடந்த ஐம்பதாண்டுகளில் எப்படியெல்லாம் வானத்தில் அலையும் மேகங்களைப் போல மாறி மாறிக் காட்சியான போதிலும் - மனிதனுக்குரிய மாண்பினை மாற்றிக்கொள்ளாமல்தான் என் அரசியல் பாதை அமைந்தது என்பதை நினைவூட்டி;

அரசியல் மாற்றங்களுக்கேற்ப இந்தத் தொகுப்பு உரைகளில் தலைகாட்டும் கருத்துக்கள், வார்த்தைகள், வாசகங்கள் அனைத்துக்கும் ஒரு பொதுமன்னிப்பை அளித்து;

என் நெஞ்சில் எழுந்த எண்ணங் களுக்கு - வாழ்த்து வழங்கி வலிமை சேர்த்திட வேண்டுகிறேன்.

அன்புள்ள,

22/4/2007

# பதிப்புரை

காலத்தை வென்று, ஞாலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய வலிவும், பொலிவும் பெற்றவை கலைஞர் அவர்களின் நூல்கள். அவரது நூல்கள் பலவற்றைப் பதிப்பிக்கும் பொறுப்பும் சிறப்பும் தமிழ்க்கனி பதிப்பகத்திற்கு ஏற்கனவே வழங்கப் பட்டிருக்கிறது. கலைஞர் அவர்களுக்கு முழுமையாக நிறைவு தரும் வண்ணம் பதிப்பித்துத் தருவதென்பது மிகவும் கடினமான காரியம். எனினும், ஒவ்வொரு முறையும் திறன் அனைத்தையும் ஒருமுகப்படுத்தி, உழைத்து உருவாக்கிப் பதிப்பித்ததால்தான் மீண்டும் மீண்டும் அந்தப் பெருமை தமிழ்க்கனிப் பதிப்பகத்தார்க்கு கிடைத்து வருகிறது.

கலைஞர் அவர்களின் :

**பொன்னர் சங்கர்**

**தொல்காப்பியப் பூங்கா**

**தாய் காவியம்**

**முத்துக்குளியல்**

**சிந்தனையும் செயலும்**

**காலப்பேழையும் கவிதைச் சாவியும்**

போன்ற கற்கண்டுச் சொல்லோவியங்களைப் பதிப்பித்திடும் நல்ல வாய்ப்புக்களைப் பெற்று நாமணக்க நன்றி செலுத்தி நாளெல்லாம் மகிழ்ந்திருக்கிறோம். அந்த வரிசையில் மற்றுமொரு வாய்ப்பு தற்போது கிட்டியிருக்கிறது.

''சட்டப்பேரவையில் கலைஞர்'' பொன்விழா கொண்டாடப்படும் இந்தக் குதூகலமான வேளையில், கடந்த ஐம்பதாண்டுகளில், தமிழ்நாடு சட்டப் பேரவையில் கலைஞர் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறுபட்ட பொருள்

களில் ஆற்றிய உரைகளையெல்லாம் தொகுத்துப் பதிப்பிக்கும் பேறு தமிழ்க்கனி பதிப்பகத்தாருக்கு வாய்த்திருக்கிறது.

ஆளுநர் உரைமீது உரைகள்

தொழில்துறை பற்றி உரைகள்

காவல்துறை பற்றி உரைகள்

நிதிநிலை அறிக்கையின் மீது உரைகள்

காவிரி பிரச்சினை மீது உரைகள்

ஒத்திவைப்பு, கவனஈர்ப்பு தீர்மானங்களின் மீது உரைகள்

தகவல்கள், அறிக்கைகள், விளக்கங்கள்மீது உரைகள்

அரசு தீர்மானம், சட்ட முன்வடிவுகள் மீது உரைகள்

மானியம், துணை மானியம், நிதி ஒதுக்கீடுகள் மீது உரைகள்

என சட்டப்பேரவையில் அவர் ஆற்றிய உரைகள் பகுக்கப்பட்டு பதிக்கப்பட்டு வெளிவருகின்றன.

"கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வேட்பமொழியும்" சொல்லேருழவர் கலைஞர். திறனறிந்து சொல்லைச் சொல்லுவதும், பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மையறிந்து சொல்லுவதும் கலைஞர் அவர்களுக்கு இயல்பாக வரப்பெற்ற கலையாகும். செறிந்த சிந்தனை, தேர்ந்த சொற்கள் - இவையிரண்டும் கலைஞரது சொற்பொழிவுகளின் அடிநாதங்களாகும். சட்டப்பேரவையில் கலைஞர் ஆற்றிய உரைகளைப் படிக்கும்போது இந்த உண்மைகளை யாரும் எளிதில் உணர முடியும். பரபரப்பும் விறுவிறுப்பும், ஆழமும் அழகும் மிகுந்திருக்கும் அவரது உரைகள் காலத்தின் கண்ணாடிகளாகும். அவரது உரைகளில் காணப்படும் நுட்பமான புள்ளிவிவரங்களும், வாதத்திறமையும், நகைச்சுவையும் படிப்பவர்களின் கருத்தை நிச்சயம் கவர்ந்திழுக்கக்கூடியவை.

அரசியலிலும், அரசுத்துறைகளின் செயல்பாடுகளிலும் ஆர்வமுள்ளோர் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய இந்த நூல்களுக்கு தமிழ்கூறும் நல்லுலகில் மிகுந்த வரவேற்பு கிடைத்திடும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எங்களுக்கு நிரம்ப உண்டு.

**– தமிழ்க்கனி பதிப்பகத்தார்**

# பொருளடக்கம்


| உரை எண். | தேதி | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | 11.07.1957 | நீர்ப்பாசனத் துறை மானியம் | 17 |
| 2. | 19.07.1957 | விவசாயத் துறை மானியம் | 23 |
| 3. | 26.03.1958 | நீர்ப்பாசனத் துறை மானியம் | 28 |
| 4. | 22.03.1961 | கல்வி மானியம் | 34 |
| 5. | 11.07.1962 | தேர்தல், மாநில ஆட்சித் தலைவர் மானியம் | 39 |
| 6. | 09.03.1963 | மாநிலச் சட்டப் பேரவை, தேர்தல்கள் மானியம் | 53 |
| 7. | 11.03.1963 | வேளாண்மைத் துறை மானியம் | 62 |
| 8. | 15.03.1963 | ஆதி திராவிடர் நலத் துறை மானியம் | 68 |
| 9. | 21.03.1963 | தொழில் துறை மானியம் | 81 |
| 10. | 23.03.1963 | கூட்டுறவுத் துறை மானியம் | 90 |
| 11. | 01.04.1963 | கல்விக் கொள்கை மானியம் | 99 |
| 12. | 18.03.1964 | காவல் துறை மானியம் | 116 |
| 13. | 25.03.1964 | சிறைச்சாலை மானியம் | 132 |
| 14. | 08.03.1966 | மாவட்ட ஆட்சி நிர்வாகத் துறை | 144 |
| 15. | 10.03.1966 | சட்டமன்றம், தேர்தல் | 159 |
| 16. | 11.03.1966 | காவல் துறை மானியம் | 176 |

| | | | |
|---|---|---|---|
| 17. | 15.03.1966 | வருவாய்த் துறை மானியம் | 191 |
| 18. | 22.03.1966 | ஆதி திராவிடர் நலத் துறை மானியம் | 203 |
| 19. | 29.03.1966 | நிதி ஒதுக்கீடு | 223 |
| 20. | 04.07.1967 | போக்குவரத்துத் துறை | 242 |
| 21. | 10.07.1967 | நீர்ப்பாசனத் துறை | 260 |
| 22. | 10.07.1967 | நீர்ப்பாசனத் துறை | 273 |
| 23. | 17.02.1968 | முதல் துணை மதிப்பீடு | 288 |
| 24. | 16.03.1968 | போக்குவரத்துத் துறை | 300 |
| 25. | 23.03.1968 | பாசனத் திட்டங்கள் | 327 |
| 26. | 21.03.1969 | மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சேர்க்கை | 362 |
| 27. | 26.03.1969 | நான்கு மானியங்கள் | 371 |
| 28. | 28.07.1971 | நிதி நிலை ஒதுக்கீடு | 383 |
| 29. | 28.03.1973 | துணை மானியம் | 394 |
| 30. | 29.03.1973 | நிதி ஒதுக்கீடு மசோதா | 399 |
| 31. | 27.11.1973 | துணை மதிப்பீடு | 413 |
| 32. | 28.11.1973 | நிதி ஒதுக்கீடு மசோதா | 425 |
| 33. | 01.04.1974 | மாநில ஆட்சித் தலைவர்கள் | 432 |
| 34. | 21.12.1974 | நிதி ஒதுக்கீடு மசோதா | 454 |
| 35. | 22.03.1975 | இறுதித் துணை மதிப்பீடு | 460 |

மானியம், துணை மானியம், நிதி ஒதுக்கீடுகள் மீது

# கலைஞரின்

# சட்டமன்ற உரைகள்

# தாமரைத்தீவான்

## புலவர் கா. குஞ்சிதபாதி

# மானியம், துணை மானியம், நிதி ஒதுக்கீடுகள் மீது கலைஞரின் சட்டமன்ற உரைகள்

## நீர்ப்பாசனத் துறை மானியம்

உரை : 1 நாள் : 11.07.1957

**கலைஞர் மு. கருணாநிதி** : சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட வெட்டுப் பிரேரணை நீர்ப்பாசன வசதி சென்னை மாநிலத்தில் இன்னும் எந்த எந்த வகையில் நீர்ப்பாசனம் தேவைப்படுகிறது என்பதைப் பற்றிய குறிப்புகளை இங்கே தருவதற்கு ஆசைப்படுகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் நீர்ப்பாசன வசதிகளால் பயன்பெறும் நிலப்பரப்பு இன்னும் எவ்வளவு அதிகமாகும் என்ற புள்ளி விவரங்களை நாம் ஒரு முறை காண்பது மிக மிக நலம் என்று கருதுகிறேன். வட நாட்டிலே இருக்கின்ற மாகாணங்களில் நீர்ப்பாசன திட்டங்களால் பயன் பெறுகின்ற நிலத்தினுடைய பரப்பும் மேலும் எவ்வளவு அதிகரிக்கிறது என்பதையும், நம்முடைய சென்னை மாநிலத்தில் இத் திட்டங்களால் மேலும் பயன்பெறக் கூடிய பரப்பையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர்ப்பாசன திட்டங்களால் பஞ்சாப் மாகாணத்தில் பதினேழு லக்ஷம் ஏகரா நிலப்பரப்பு மேலும் அதிகமாக பயன் பெறப்போகின்றது. ஓரிஸா மாகாணத்தில் பதினாறு லக்ஷம் ஏகரா நிலப் பரப்பு மேலும் அதிகமாக பயன் பெறப் போகின்றது.

உத்திரப் பிரதேசத்தில் 1,310,000 ஏகரா.

மேற்கு வங்காளத்தில் 1,270,000 ஏகரா.

ராஜஸ்தானில் 1,160,000 ஏகரா.

பீகாரில் 1,140,000 ஏகரா.

பம்பாயில் 1,000,000 ஏகரா.

மத்திய பிரதேசத்தில் 400,000 ஏகரா.

ஆந்திராவில் 290,000 ஏகரா.

பரிதாபத்துக்குரிய நம் சென்னை மாநிலத்தில் 140,000 ஏகராதான் அதிகப்படியாக இந்த நீர்ப்பாசன வசதிகளால் பயன்படப்போகிறது என்பது இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட புள்ளி விவரங்களிலிருந்து நமக்குத் தெரியவருகிறது. புள்ளி விவரத்தையொட்டி பேசவேண்டும் என்று கூறப்பட்ட காரணத்தால், வெறும் ''வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது'' என்பதை மாத்திரம் சொல்லாமல் புள்ளி விவரங்களையும் குறிப்புகளையும் நான் அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். மத்திய சர்க்கார் சென்னை மாநிலத்தில் ஆற்று நீர் மேட்டுப் பகுதிகளிலும் பயன்படவேண்டும் என்பதற்காக ஆற்று நீர் இரைப்புத் திட்டம் என்ற ஒரு திட்டம் 1951-52-ம் ஆண்டில் அமுலாக்கப்பட்டு, அதற்காக மத்திய சர்க்கார் 50 சத விகிதம் மான்யம் தருவதாக ஒப்புக்கொண்டார்கள். அப்படித் தரப்பட்ட மான்யத்தை 1953-ம் ஆண்டு நிறுத்திவிட்ட காரணத்தால் அந்த ஆற்று நீர் இரைப்புத் திட்டத்தை சென்னை மாநில சர்க்கார் நிறைவேற்றமுடியாமல் சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டு, இறுதியில் பரிபூரணமாக நிறுத்தப்பட்டுவிட்டது என்பதை மறக்க முடியாது. இந்த ஆற்று நீர் இரைப்புத் திட்டம் இல்லாததன் காரணமாக ''பம்ப்செட்டுகள்'' பொருத்தி, மேட்டுப்பகுதிகள் வளப்படுத்தப்படும் வசதி ஏற்படாமல் போகின்றது என்பதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. சென்னை மாநிலத்தில் நீர்ப்பாசனத் திட்டங்கள் அதிகமாக இல்லை என்பதற்குச் சொல்லப்படும் காரணங்களில் மிகமிக முக்கியமான காரணம் ''இங்கு பெரிய ஆறுகள் கிடையாது'' என்பதுதான். ஒரு சில ஆறுகளினுடைய தண்ணீரை கடலில் கலக்காமல் நாங்கள் பார்த்துக்கொள்ளுகின்றோம் என்று

அமைச்சர் பெருமக்கள் எடுத்துச் சொன்னார்கள். கடலில் விழுகின்ற காரணத்தால் மாத்திரம் ஆற்று நீர் வீணாகி விடவில்லை. வேறு சில காரணங்களாலும் வீணாகப் போகின்றது என்று சட்டநாத கரையாளர் எடுத்துக் கூறினார்கள். அது மாத்திரம் அல்ல. கடலில் கலக்கின்ற தண்ணீர் தடுக்கப்பட்டால் மட்டும் போதாது ! ஆற்று நீர் கழனிகளில் பயன்படாத நிலையில் மணலிலேயே சேர்ந்து வீணாகப் போகின்றது என்பதை மறந்து விடக்கூடாது. என்னுடைய குளித்தலைத் தொகுதியைப் பற்றி கவர்னர் பெருமான் உரையின் மீது எழுந்த விவாதத்தின்போது நான் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன். குளித்தலைத் தொகுதி மிக மிக வளமான தொகுதி என்று குளித்தலைத் தொகுதியின் தலைநகரில் இறங்கும் ஒருவர் சொல்லலாம். உண்மையில் குளித்தலைத் தொகுதியை குளித்தலை, மாயனூர், வெள்ளையணை என்று மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒருவர் வரிசையாகப் பயணம் நடத்தினால் குளித்தலை தொகுதி வளமான தொகுதி, எழிலான தொகுதி என்று எண்ண ஆரம்பித்து அடிக்கரும்பை சுவைப்பது போல் சுவைத்து, மாயனூர் சென்றால் நடுக்கரும்புக்கு வந்து, பிறகு வெள்ளியணைக்கு வரும்போது நுனிக்கரும்பை சுவைப்பது போல் முடியும். வெள்ளியணையில் குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல், வறண்ட நிலங்களாக உள்ள பல இடங்களை அங்கே காண முடியும். குடகனாறு திட்டம் அங்கே தேவை, அத்தகைய குடகனாறு திட்டம் நிறைவேற்றப்படுமானால் 10,000 ஏகரா புஞ்சை நிலங்களை நஞ்சை நிலங்களாக மாற்ற முடியும் என்று 1951-ம் ஆண்டிலிருந்து பெரிய கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. இந்தக் கிளர்ச்சியை ஏதோ பலாத்காரப் போராட்டம் என்று நான் குறிப்பிடுகிறேன் என்று யாரும் கருதக்கூடாது. அங்கேயிருக்கும் பொதுமக்கள் - அந்தக் குடகனாறுத் திட்டம் தேவை என்று கூறி, 1951-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 19ம் தேதியில் மராமத்து மந்திரியிடமும் 1952-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 2-ந் தேதியில் நிதி அமைச்சரிடமும், 1953-ம் வருஷம் ஜனவரி மாதம் 12-ந் தேதியில் ரெவின்யூ அமைச்சரிடமும், 1954-ம் வருஷம் ஜனவரி மாதம் 11-ந் தேதியில் முதல் அமைச்சரிடமும் அதற்கான மனுக்களைத் தந்து,

குடகனாறுத் திட்டத்தைக் கவனிக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டது.

பழனி மலையிலிருந்து உற்பத்தியாகிற குடகனாறு - ஏறத்தாழ 86 மைல் நீளமுள்ள ஆறு-சுமார் 30 மைல் தூரம் திண்டுக்கல் தாலூகாவில் ஓடி, ஆயிரம் ஏக்கரா நிலத்திற்கு மாத்திரம் பயன்படுத்தப்பட்டு, அங்கிருந்து மிச்சமுள்ள 56 மைல் நீளம், அதனுடைய தண்ணீர் எல்லாம் வீணாகப் போய், அமராவதியில் கலக்கிறது என்ற நிலைமையில், வேடசெந்தூருக்கு அருகேயுள்ள கல்வார்பட்டி என்னும் இடத்தில் ஒரு நீர்த்தேக்கம் அமைத்து, அந்தத் தண்ணீர் அங்கே பயன்படுத்தப்பட, சுமார் 23 மைல் நீளமான ஒரு வாய்க்கால் வெட்டப்பட்டால், வெள்ளியணை, வீரவல்லி, ஜெகதாபி, உப்பிடமங்கலம் என்ற பல ஏரிகள் நிரம்பி, பத்தாயிரம் ஏக்கரா நிலம் அங்கே சாகுபடி ஆகும் என்றும், அதற்குப் பன்னிரண்டு லட்சம் ரூபாய் செலவாகும் என்று கரூர் PWD சூபர்வைசர் அதற்கு ஒரு திட்டமே தயாரித்துக் கொடுத்தார். அப்படித் தயாரிக்கப்பட்ட அந்தத் திட்டத்தைப் பெற்ற மக்கள், திருச்சி எக்ஸிக்யூடிவ் என்ஜினீயர் அலுவலகத்திற்கு 1953-ம் வருஷம் அக்டோபர் மாதம் 22-ந் தேதியில் மனு மூலம் தெரிவித்தும், இதுவரை கேட்பாரற்று அந்த மனு அங்கே தூங்கிக் கொண்டிருக்கிறது.

பன்னிரண்டு லட்சம் ரூபாய் செலவு செய்தால் பத்தாயிரம் ஏக்கரா நிலம் அங்கே பயன்படும், புஞ்சை, நஞ்சையாக மாறும் என்று சொல்லப்படுகிறது. இந்த நேரத்தில், மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களுக்கு - சபாநாயகருடைய அனுமதியின் பேரில் ஒன்று தெரிவிக்க ஆசைப்படுகிறேன். ஆரணியாறுத் திட்டத்திற்கு 104.19 லட்சம் ரூபாய் செலவானாலும் பயன்படுகிற நிலங்கள் ஐந்தாயிரம் முதல் ஏழாயிரம் ஏக்கராதான். இதனால் ஆரணியாறு திட்டம் தேவை இல்லை என்று நான் கூறவில்லை. ஐந்தாயிரம் முதல் ஏழாயிரம் ஏக்கரா நிலங்களுக்குப் பயன்படுகிற ஆரணியாறு திட்டத்திற்கு 104.19 லட்சம் செலவாகும் என்று சொல்லப்படுகிறது. கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத் திட்டத்திற்கு 184.03 லட்சம் ரூபாய் செலவாகும் என்றும், அதனால் பயன் பெறுவது 7,500 ஏக்கரா நிலம் என்றும் சொல்லப்படுகிறது. இப்படி 184 லட்சமும், 104 லட்சமும்

செலவிட்டு ஏழாயிரம், ஐந்தாயிரம் ஏக்கரா நிலங்கள் பயன்பெறுகிற நேரத்தில், பன்னிரண்டு லட்ச ரூபாய் செலவில் பத்தாயிரம் ஏக்கர் பயன்பெறுகிற ஒரு குடகனாறு திட்டத்தை இதுவரை, இவ்வளவு கோரிக்கைகளுக்குப் பிறகும், அந்த வட்டாரத்துப் பொதுமக்கள் அத்தனைபேரும் மனுச் செய்து கொண்ட பிறகும், மந்திரிகள் வந்த நேரத்திலே அவர்களைத் தூது சென்று பார்த்த பிறகும் கவனிக்கப்படவில்லை என்பது மிகமிக வருந்தத்தக்க ஒன்று.

மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளையெல்லாம் கிழக்கு நோக்கித் திருப்புவதற்கு முயற்சிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. பரம்பிக்குளத்துத் தண்ணீரை தமிழகத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு பெரும் முயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே தவிர, ஆனால், ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் அந்தத் திட்டம் கவனிக்கப்பட்டு, பரம்பிக்குளம் தண்ணீர் பயன்பட முயற்சி எடுத்துக்கொள்ளப் படவில்லை.

இங்கே ஆறுகள் இல்லை, ஆகவே திட்டங்கள் இல்லை என்று கூறுவது, ''ஆடத்தெரியாத ஒருத்தி முற்றம் கோணல்'' என்று சொல்வதை ஒக்கும் என்று நான் குறிப்பிடுகிறேன். ஆறுகள் இல்லை என்றாலும், இருக்கிற ஆறுகளையாவது பயன்படுத்துகிற அத்தகைய எண்ணம் ஏன் பிறக்கவில்லை என்று நான் கேட்கின்றேன். புராணத்திலே படித்தது உண்டு-பகீரதனுக்காகப் பரமசிவன் ஆகாயத்திலிருந்து கங்கையை வரவழைத்தான் என்று. அப்படியிருக்க, பச்சைத் தமிழர் ஆட்சியில் பரம்பிகுளத் தண்ணீரைத்தானா வரவழைக்க முடியாது?-கொஞ்சம் எடுத்துப் பேசினால், உற்சாகத்தோடு அந்த வேலையில் ஈடுபட்டால்- ஆகாத காரியமா இது என்று நான் கேட்கிறேன்.

திட்டங்கள் பல இருக்கின்றன. அவைகள் நிறைவேற்றப் படவேண்டும், நிறைவேற்றப்படக்கூடிய திட்டங்கள் இவ்வளவு காட்டியும் கூட, அவைகளை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையே என்று எதிர்க்கட்சிக்காரர்கள் பார்த்துச் சொன்னால், அந்தத் திட்டங்கள் உடனடியாக நிறைவேற்றப்படவேண்டும்.

குடகனாறு திட்டம் அவசர அவசியமாக நிறைவேற்றப் படவேண்டும் என்றே சொல்ல விரும்புகிறேன்.

வெள்ளையணைப் பகுதியில் சென்று மந்திரி அவர்கள் சுற்றிப் பார்த்தால் அங்கு இருக்கும் அவல நிலை தென்படும் என்று நான் குறிப்பிட விரும்புகின்றேன். குளித்தலை வட்டாரத்தில் 273 குளங்கள் இருக்கின்றன. அந்த 273 குளங்களில் வரும் மழைத் தண்ணீரைக் கொண்டு பெரும்பகுதி நிலத்தை நல்ல முறையிலே வளப்படுத்த முடியும். அதற்கான முயற்சிகளும் இந்த அரசாங்கத்தாரால் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் கோருகிறேன்.

திட்டங்களைக் கூறிவிடுவதால் மாத்திரம் போதாது. அந்தத் திட்டங்களை நிறைவேற்றுகிற ஆற்றலும், அத்தகைய திறமையும் ஒரு அரசு பெற வேண்டுமென்றும், அப்படிப் பெற வேண்டிய நிலையைத்தான் வள்ளுவர் அவர்கள்- ''கொடுங்கோன்மை'' அதிகாரத்தில் அல்ல- ''அமைச்சு'' என்ற அதிகாரத்தில், மிக அழகாக எடுத்துச் சொல்லுகிறார்-

''முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்''.

நல்ல திட்டங்களைப் போட்டாலுங்கூட, அந்தத் திட்டங்களை முறையாக எண்ணினாலுங்கூட, அந்தத் திட்டங்களை மூளியாகச் செய்து முடிப்பார்கள் திறமை இல்லாதவர்கள் என்று கூறியிருக்கிறார். நான் இந்த அரசாங்கத்தை, அப்படிச் செய்வார்கள் என்று கூறவில்லை அப்படி செய்யக் கூடாதென்றுதான் கூறுகிறேன். நாம் குறளை எடுத்துக் கூறினால், வல்லினம், மெல்லினம் தெரியாதவர்கள் குறள் பற்றிப் பேசுகிறார்கள் என்று கூறிவிடலாம் அமைச்சரவர்கள், வல்லினம் மெல்லினம் தெரிகிறதோ இல்லையோ - நான் சார்ந்த இனம் தமிழ் இனம், திராவிட இனம் என்று உயர்ந்திருக்கிறேன். அதை உணராதவர்களுக்கு அதை உணர்த்தி, இந்த நீர்ப்பாசனத் திட்டங்கள் தமிழகத்திற்கு உள்ளபடியே பயன்படுவதற்கு சென்னை மாநில அரசு உடனடியாக வேலை செய்யவேண்டு மென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கின்றேன்.

# விவசாயத் துறை மானியம்

உரை : 2 நாள் : 19.07.1957

**கலைஞர் மு. கருணாநிதி** : சட்ட மன்ற தலைவர் அவர்களே, குறிப்பிட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். விவசாயத்தை நம்பியும் விவசாயத்தால் பெருமை பெற்றும் திகழ்கின்ற நமது நாட்டில் விவசாயத்திற்கு மிக மிக முக்கியமானது நல்ல விதைகள். அத்தகைய நல்ல விதைகளை வளர்த்துத் தருகிற பொறுப்பை மாநில அரசு ஏற்றிருக்கிறது என்று கனம் நிதி அமைச்சர் தந்த அறிக்கையிலும் நேற்றைய தினம் விரிவுரை ஆற்றிய விவசாய அமைச்சருடைய பேச்சிலும் காணப்படு கின்றது. நல்ல விதைகளைத் தருவதற்காக 400 விதைப் பண்ணைகள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறுவப்படும் என சென்னை அரசாங்கத்தினுடைய செய்தித்துறை வெளியீடான ''உழவனுக்கு'' என்ற நூலில் காணப்படுகிறது. அதே நேரத்தில் 400 விதைப் பண்ணைகளை நிச்சயமாக நிறுவுவார்கள் என்ற மகிழ்ச்சி பெற்றாலும் நிதி அமைச்சருடைய நிதி நிலை அறிக்கையிலும் விவசாய அமைச்சருடைய பேச்சிலும் பார்த்தால் 360 பண்ணைகள்தான் செய்தி தெரிய வருகிறது. 400 பண்ணைகள் நிறுவப்படும் என்ற செய்தியையும் 360 பண்ணைகள் நிறுவப்படும் என்ற செய்தியையும் ஒப்பிட்டுப் பார்த்தால் 40 பண்ணைகள் குறைந்து போனதாகத் தெரிய வருகிறது.

**மாண்புமிகு திரு. மு. பக்தவச்சலம்** : தென் கன்னடம், மலையாளம் முதலிய பிரதேசங்கள் சேர்ந்து இருந்த காலத்தில் ப்ளானிங் கமிஷனால் 400 பண்ணைகள் நிறுவப்படுவதாக

உத்தேசிக்கப்பட்டிருந்தது. அவைகள் இப்பொழுது பிரிந்து போய்விட்டபடியால் அவை 360-க்குக் குறைந்து போய் விட்டது என்பதை மட்டும் கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கலைஞர் மு. கருணாநிதி :** ''உழவனுக்கு'' என்கின்ற அரசினர் நூலில் வந்த செய்தியும் புள்ளி விவரங்களையும் வைத்துக்கொண்டுதான் நான் சொன்னேன். பரவாயில்லை இந்த 360 விதைப் பண்ணைகளை வைத்துக் கொண்டு நல்ல விதைகளைக் கொடுக்க முடியும் என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அது எந்த அளவில் விவசாயிகளுக்குச் சேரப் போகிறது எந்த அளவில் அவர்கள் அனுகூலம் அடையப்போகிறார்கள் என்பது தெரியவில்லை. விவசாயிகளும், மற்றும் தொழிலாளர்களும் இந்த மானியத்தில் உள்ளடங்கி இருக்கும் மீனவர்களும் எந்த அளவில் பயனடையப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை. பனிக்கட்டியானது ஒருவருடைய கையிலிருந்து பத்துப் பேருடைய கைக்கு மாறும்போது கடைசியில் போய்ச் சேருபவர் கையில் ஒன்றும் இல்லாமல் போய் விடும். அந்த அளவில்தான் இந்த விதைகளையும், கடனையும், விவசாயக் கருவிகளையும் விநியோகம் செய்யும் முறை ஆகிவிடுகிறது. இடையே உள்ளவர்கள் அந்த அளவுக்கு அவைகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

விவசாயக் கல்லூரி ஒன்று கோவையில் இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1956-57-ல் மட்டும் இந்தக் கல்லூரிக்கு என்று 7 லட்சம் ரூபாய் செலவிடப்படும் என்று அரசாங்கச் செய்தித்துறை வெளியிட்டுள்ள ''உழவனுக்கு'' என்ற நூலில் 24-ம் பக்கத்தில் பார்த்தேன். ஏழு லட்சம் ரூபாய் அதற்கு என்று செலவிடப்பட்டதாக இருந்தால் உள்ளபடியே அதைக் கண்டு எல்லோரும் மகிழ்ச்சி அடைய வேண்டியதுதான். இந்த ஆண்டு கனம் நிதி அமைச்சர் அவர்கள் விவசாயக் கல்லூரித் துறைக்கு 5.96 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார். 1956-57ல் ஏழு லட்சம் ரூபாய் விவசாயக் கல்லூரிக்கு ஒதுக்கிவிட்டு இப்பொழுது ஐந்து லட்சத்து சொச்சம் ரூபாய் ஒதுக்குவதாக இருந்தால் அதைக் கண்டு நாம் பூரிப்பு அடையக்கூடிய நிலையில் இல்லை என்பதை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

முந்திரித் தொழிலைப்பற்றி நான் சிறிது கூற விரும்புகிறேன். அடிக்கடி நான் முந்திரித் தொழிலைப்பற்றி குறிப்பிடுகிறேன் என்று நினைக்க வேண்டாம் - முந்திரித் தொழில் சம்பந்தமாக இங்கே ஒன்றைக் எடுத்துக்காட்டாமல் இருக்க முடியாது. நல்ல காரியத்திற்காகவே நெய்வேலிப் பகுதியில் பல முந்திரிக் காடுகளை உற்பத்தி செய்வதற்கும் முந்திரி பயிரிடுவதற்கும் புதிய புதிய இடங்களைத் தேடி அலையாமல் நெய்வேலியில் முந்திரிக்காடு அழிக்கப்படுவதால் பாதிக்கப்படுகிறவர்களிடம் நஷ்டஈடு கொடுத்தால் அதை வைத்துக் கொண்டு அவர்களே இடத்தை வாங்கி பயிரிடுவதற்கு தயாராக இருக்கிறார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.


கடந்த மாதத்தில் நான் விழுப்புரம் சென்றிருந்தேன். அப்பொழுது புகைவண்டி நிலையத்திற்குப் பக்கத்தில் ஒரு புதிய ஆலை இருப்பதைப் பார்த்தேன். அது என்ன என்று கேட்டதற்கு மணிலாவிலிருந்து வனஸ்பதியைக் தயாரிக்கக் கூடிய ஆலை என்று கூறினார்கள். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அரசாங்கத்தினிடமிருந்து பத்து லட்சம் ரூபாய் கடன் வாங்கி வனஸ்பதி உற்பத்தி செய்வதற்கு என்று ஆலையை அமைத்தார்கள் என்றும் அப்படி கடனைப் பெற்று ஆலையைக் கட்டினார்கள் என்றும், கட்டிடங்களைக் கட்டிவிட்டு இயந்திரங்களை வரவழைத்து அவைகளையும் அங்கு அமைத்தார்கள் என்றும் அதன் பிறகு அந்த ஆலை வேலை செய்யவில்லை என்றும் சொன்னார்கள். கட்டிடங்கள் கட்டி இயந்திரங்களை அமைத்து ஆலை வேலை செய்யவில்லை என்பதோடு ''வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே, பாதாள மூலி படருமே'' என்ற பழைய பாடல் ஒன்றை, ஞாபக மூட்டுவதாகவும் இருக்கிறது அந்த இடம் ! கட்டிடம் சீரழிந்து சிறப்பு அழிந்து இயந்திரங்கள் துருப்பிடித்துப்போன நிலையில் காணப்படுகின்றன. இதை உடனடியாகக் கவனித்து அந்த வனஸ்பதி ஆலைக்கு மீண்டும் புத்துயிர் அளித்து அதனால் அங்கு விளையும் மணிலா அங்குள்ளவர்களுக்கு உள்ளபடியே பயனளிக்கக் கூடிய நிலையை உண்டாக்கி அதன் மூலம் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள தொழிலாளர்களை பயனடையச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அங்குள்ள தொழிலாளப் பெருமக்கள் அரசாங்கத்தை வாழ்த்துவார்கள் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

நேற்றைய தினம் அமைச்சர் அவர்களுடைய உரையில் வேறு ஒரு உரையிலும் காணப்படாத ஒரு நல்ல செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். தூத்துக்குடியில் ஆண்டுதோறும் முத்துக் குளித்தல் நடைபெறும் என்றும், அதனால் அரசாங்கம் கணிசமான வருமானத்தைப் பெறலாம் என்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களுக்கு, கனம் சபாநாயகர் வாயிலாக, ஒன்று கூறிக்கொள்ள விரும்புகின்றேன். 1524-ம் ஆண்டில் போர்த்துகீசியர் இந்த நாட்டிலே வந்த காலத்திலே கன்யாகுமரியில் முத்து எடுக்கும் தொழில் மிக மிகச் சிறப்பாக நடைபெற்றது என்றும், அதற்குப் பிறகு பிரிட்டிஷார் ஆதிக்கத்தின்கீழ் இந்த நாடு வந்த பிறகு மதுரை நாயக்கர்களும், இராமனாதபுரம் ராஜாக்களும், எட்டையபுரம் ராஜாக்களும் அந்தத் தொழிலை அங்குள்ள மீனவர்களைக் கொண்டு திறம்பட நடத்தினார்கள் என்றும் சரித்திரத்தில் பார்க்கிறோம். இன்றைய தினம் கூட, கன்யாகுமாரி முனையிலிருந்து இராமேசுவரம் வரையுள்ள கடற்பரப்பில் நல்ல முத்துச் சிப்பிகள் விளையும் பாறைகள் ஏராளமாக இருக்கின்றன என்றும், பரிசீலனை நடத்தினால் நல்ல முத்துகளைப் பெறலாம் என்றும் அந்த மாவட்டத்தில் உள்ள பெரும்பாலோர் கூறுகிறார்கள், அதையும் கவனித்தால், கிரேக்கம் யவனம் போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று தமிழகத்தின் பெருமையை எப்படி முத்துக்கள் அன்றொரு நாள் உயர்த்தினவோ, அதைப் போல இன்றும் தமிழகத்தின் பெருமையை வெளிநாடுகளில் உயர்த்துவதற்கு அவைகள் பயன்பெறும் என்று நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயத்திற்கு மிக முக்கியமானவை விதை, ரசாயன எரு என்பதோடு மாத்திரம் அல்ல ; நீர்ப்பாசனம் என்பதோடு மாத்திரம் அல்ல ; விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற விவசாயிகளும் முக்கியமானவர்கள் என்பதையும் நான் இங்கே எடுத்துக்காட்ட வேண்டியது அவசியம் இல்லை என்றே கருதுகிறேன். விவசாயிகள் வளத்தோடு வாழ்ந்தால்தான், அவர்களுடைய வியர்வை துடைக்கப்பட்டு, அவர்களுடைய கண்ணீர் துடைக்கப்பட்டு களிப்பு ஏற்பட்டால்தான் விவசாயம் நல்ல முறையிலே நாட்டில் பெருக முடியும் என்பதையும் விவசாய அமைச்சர் அவர்கள் உணராதவர் அல்ல.

ஆனால், குறிப்பாக, என்னுடைய குளித்தலைத் தொகுதியைப் பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். அங்கே இருக்கும் நங்கவரம் பகுதியில் விவசாயத் தொழிலாளர்கள் ''முச்சலிகா'' என்று அடிமை முறிச் சீட்டுகள் ஆட்பட்டு, அந்த அடிமை முறிச் சீட்டை 10,15 ஆண்டுகளுக்கு முன் அம்மாதிரி எழுதிக்கொடுத்திருந்த காரணத்தால், இன்றைய நியாய வாரச் சட்டத்தின் விளைவைத் துர்விநியோகப்படுத்துகிற வாக்குவன்மை படைத்த வழக் கறிஞர்களும், மற்றவர்களும், மிராசுதார்களும் அந்த விவசாயிகோர்ட்''-டிலும் வேறு கோர்ட்களிலும் நடக்கும் வழக்குகள் 300-க்கு மேல் ஏற்பட்டு விட்டன. அங்கு இருக்கும் மிராசுதார்கள் விவசாயிகளுக்குச் சொல்லி விட்டார்கள்-'' நடைபெறும் 300 வழக்குகளும் விசாரிக்கப்பட்டு முடிவு கூறிய பிறகுதான் நீங்கள் எல்லாம் எங்களுடைய நிலத்தில் இறங்க வேண்டும் ; அது வரை கூலி அடிமை முறையில் சீட்டு எழுதி கொடுத்துவிட்டுத்தான் இறங்கவேண்டும்'' என்று. அதன் காரணமாக இன்றைய தினம் விவசாயிகள் நிலத்திலே இறங்குவதற்கு அஞ்சி இருக்கிறார்கள் - நிலத்திலே இறங்கினால் கைது செய்யப்படுவோம் என்ற பீதியுடன். மூன்று நாட்களுக்கு முன்பு, அதாவது சென்ற ஞாயிற்றுக்கிழமை, நடந்த நிகழ்ச்சியொன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். குளித்தலையில் நிகழ்ந்த விவசாயிகள் கோரிக்கை தினத்தன்று காலையில் 8 விவசாயிகள் போலீசாரால் கைது செய்யப்பட்டு, பிறகு ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்கள். அந்த அளவு நிலத்திலே இறங்கின விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதே நிலைமை நீடிக்குமானால் 8 ஆயிரம், 9 ஆயிரம் ஏக்கரா நிலத்தில் சாகுபடி நின்றுவிடக் கூடிய நிலைமையும், விவசாயம் ஒழுங்காக நடைபெற முடியாத நிலைமையும் குளித்தலைத் தொகுதியில் நங்கவரம் பகுதியில் ஏற்படும் என்றும் கழனிகள் களங்களாகும் என்றும் கூறி, இத்தகைய விவசாயிகளுடைய நிலைமை பரிசீலிக்கப்பட்டு, அவர்களுக்கு உடனடியாக உதவி செய்தோமானால், விவசாயம் செழிப்படையச் செய்தவர் களாகவும், விவசாயிகளுடைய தேவையை நாம் உணர்ந்தவர் களாகவும் ஆவோம் என்று குறிப்பிட்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகின்றேன்.



## நீர்ப்பாசனத் துறை மானியம்

உரை : 3 நாள் : 26.03.1958

**கலைஞர் மு. கருணாநிதி :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசன மான்யத்தின் மீது கொண்டுவரப் பட்டுள்ள வெட்டு பிரேரணைகளை - தோழர்கள் நல்லசிவம் அவர்களும், ஷண்முகம் அவர்களும் கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரணைகளை - ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தென்னகத்தில் நீர்வளம் நல்ல முறையில் பாதுகாக்கப் பட்டால்தான் நல்ல செழிப்பும், பசுமையும் இருக்க முடியும் என்கிற கருத்தினை அமைச்சர் அவர்களுக்கு நான் கூறி தெரிய வேண்டுமென்ற அவசியம் இல்லை.

பழைய காலத்திலே நம்முடைய தமிழ் மன்னர்கள் நீர் வளத்தைப் பெருக்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு பெரிய பெரிய திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்றும், அவைகளுக்கு எல்லாம் சிகரம் வைத்தது போல கரிகாலப் பெருவளத்தான் கட்டிய கல்லணை இன்றையதினம் காட்சி தருகிறதென்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

வசதிகளும், வாய்ப்புகளும் குறைந்திருந்த அந்தக் காலத்தில் - விஞ்ஞானம் பெருக்கம் இல்லாத அந்தக் காலத்தில்- அத்தகைய ஒரு கல்லணையைக் கட்டி அந்தப் பகுதியை செழிப்பாகவும், சீராகவும் ஆக்கிய அந்தப் பெருமையினையும், அதைவிட அதிகமான வசதியும், வாய்ப்பும் விஞ்ஞானப்

பெருக்கும் மிகுந்துள்ள இந்த நேரத்தில் நாம் செய்கின்ற நீர்வளத் திட்டங்களையும் எண்ணிப் பார்க்கும்போது - அதையும் இதையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது - மிக மிக குறைந்த அளவில் தான் நம்முடைய வேலைகள் நடைபெற்றிருக்கின்றன என்று கூற விரும்புகிறேன்.

இவைகளுக்கு எல்லாம் காரணம் என்ன என்று கூறும் போது - வரவு செலவு அறிக்கையில், நிதி அமைச்சர் அவர்கள் உரையிலும், இந்த நீர்ப்பாசன மானியத்தை கோரியிருக்கின்ற அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் தந்திருக்கிற அறிக்கையிலும் - குறிப்பிடப்படுகிற ஒரே ஒரு காரணம் இயற்கையின் இடையூறுகள் நமக்குப் பெரும் முட்டுக்கட்டையாக இருக்கின்றன என்பதுதான். இயற்கையான வசதிகள் இல்லாத காரணத்தினால் நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட முடியவில்லை என்கிறார்கள். அதே நேரத்தில் நீர்ப்பாசன வசதியைப் பெருக்குவதற்கான வழித்துறைகள், அதற்கேற்ற இயற்கை வசதிகள் நம் மாநிலத்தில் எங்கெங்கே கிடக்கின்றன என்பதையும், அவற்றை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதையும் பற்றி பல முறை இந்தப் பேரவையில் பல அங்கத்தினர்களால் எடுத்துச் சொல்லப்பட்டு வந்தும் கூட அவை கவனிக்கப்படவில்லை என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

சேலம் மாவட்டத்தில் சேர்வராயன மலையிலுள்ள வட பகுதியில் வாணியாற்றில் அணை கட்டப்படுமானால் ஹரூர் தாலூகா முழுவதும் பாசன வசதி பெறும் என்பதாக அந்தப் பகுதி மக்கள் பல பல மனுக்கள் எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்கு சர்வே செய்யப்பட்டு ஒரு லட்சத்திற்கு மேல் செலவு ஆகியிருந்தும் அந்தத் திட்டம் கைவிடப்பட்டதா, இல்லையா என்ற சந்தேகக் குறியோடு நின்று இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

புதுக்கோட்டைப் பகுதியில் அக்கினியாறு, கோரையாறு, வெள்ளாறு, குண்டாறு போன்ற காட்டாறுகள் ஓடுகின்றன. அப்படி ஓடுகின்ற காட்டாறுகளை அந்தப் பகுதியிலுள்ள நிலங்களுக்குப் பாசன வசதி கொடுக்கும் வகையில் தடுத்துத் தேக்க சில திட்டங்கள் சொல்லப்பட்டன. அக்கினியாற்றுக்கு

அணை கட்டினால் அந்தப் பகுதி நல்ல செழிப்பும், பசுமையும் அடையும் என்று அந்த வட்டாரத்து மக்கள் என்னைக் காணுகின்ற போதெல்லாம் சொல்கிறார்கள். அந்த வட்டாரத்திலுள்ள மந்திரி அவர்களைச் சந்தித்தும் கூறியிருக்கிறார்கள். 1950-ம் ஆண்டு என்று எனக்கு நினைவு-கனம் பக்தவத்சலம் அவர்கள் அக்கினியாறு திட்டத்தைப் பார்வையிட்டு, வழி முறைகளை எடுத்துக் கூறி, தண்ணீர் கணக்கு இவைகளையெல்லாம் போட்டு திட்டத்தை உருவாக்க நல்ல முயற்சி எடுப்பதாக கூறியிருக் கிறார். ஆனாலும் இன்றைக்கு அந்த முயற்சியும் கைவிடப்பட்டு விட்டதா, இல்லையா என்ற சந்தேகக் குறியோடு நின்று இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

நெல்லை மாவட்டத்திலிருந்து வந்திருக்கிற மதிப்பிற் குரிய நண்பர்கள் பேசியிருக்கிறார்கள். கீரியாறு, வேம்பாறு, பம்பையாறு முதலிய நல்ல பல திட்டங்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை நிறைவேற்ற அரசினரின் முயற்சியை எதிர்பார்த்துத் தவங்கிடக்கின்றனர் என்று கூற விரும்புகிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கோமுக நதித் திட்டம் இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. வடவாறு சீர்திருத்தம் செய்யப்படவில்லை. பனமலை ஏரி திட்டம் நிறைவேற்றப் படவில்லை. அதோடு தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள நந்தன் கால்வாய் திட்டம், நந்தன் பெயர் பெற்ற அந்த மாவட்டத்திலே, நந்தன் பரம்பரைப் புகழை நிலைநாட்ட அந்தப் பரம்பரையில் இருந்தே வந்துள்ள அமைச்சர் அவர்கள் இன்னும் நிறைவேற்றாமலிருப்பதைக் கவனித்து உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படி நம் மாநிலத்தில் இயற்கை வசதிகள் அதிகமாக இருந்தும் அவைகளைப் பயன்படுத்திக்கொள்ளும் முயற்சியில் ஈடுபடாமல், இயற்கை வசதி இல்லை என்று ஒரு வார்த்தையில் கூறி விடுகிறார்களே என்று வியப்படைகிறேன். அப்படிச் சொல்லி விடுவதின் காரணமாக நிறைவேற்றப்படவேண்டிய பல திட்டங்களை நிறைவேற்றாமல் விட்டு விடுகிறார்கள் என்று கூற விரும்புகிறேன்.

வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் செய்யாறு அணைக்கட்டு, சதுப்பேரி, களம்பூர் ஏரி, வடவேடு

ஏரி, கமண்டலநாக நதி திட்டங்கள் போன்ற பல திட்டங்கள் எடுத்துக் கூறப்பட்டும் கவனிக்கப்படவில்லை. குறிப்பாகவும், சிறப்பாகவும் என்னுடைய தொகுதியாகிய குளித்தலை பகுதியில் குடகநாறு திட்டத்தைப் பற்றி நான் மிக மிக விளக்கமாக பல முறை எடுத்துக் கூறியிருக்கிறேன். அந்தக் குடகனாறு திட்டத்தின் படி திண்டுக்கல் வட்டம் வேடசாந்தூருக்கு அருகேயுள்ள கல்வார்பட்டியில் ஒரு நீர்த்தேக்கம் கட்டி கீழ்ப் பக்கமாக சுமார் 20 மைல் நீள வாய்க்கால் வெட்டினால் என்னுடைய குளித்தலைத் தொகுதியில் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பாசன வசதியைப் பெறும் என்று கூறியிருக்கிறேன். வருகிற ஏப்ரல் மாதம் 5-ந்தேதி கூட சர்வ கட்சித் தோழர்களைக் கொண்ட விவசாயி மகாநாட்டைக் கூட்டுவதாக இருக்கிறது. குடகனாறு திட்டத்தைப் பற்றி சென்ற ஆண்டு மந்திரி கக்கன் அவர்கள் சொல்லும்போது - சென்ற ஆண்டு ஜூலை மாதம் 12-ந்தேதி என்று நினைவு - அமராவதி திட்டத்திற்குத் தண்ணீர் விடப்பட்டதும் அது கவனிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அமராவதி திட்டத்துக்கு தண்ணீர் விட்டாகி விட்டது. ஆகவே இதையும் கவனிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் காவேரி பிரிவில் தூர்ந்து போயிருக்கிற வாய்க்கால்களை சென்ற பத்து ஆண்டு காலமாக- சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே - மராமத்து செய்யவில்லை. அந்தக் காவேரி கால்வாய்கள் வெட்டப்படுமானால் இன்னும் அந்தப் பிரதேசத்தின் வளம் அதிகமாகப் பெருக வழியேற்படும் என்று கூற விரும்புகிறேன்.

இவைகளையன்னியில் கிருஷ்ணா, கோதாவரி திட்டங் களுக்கு நம் சர்க்கார் செய்கிற முயற்சிகளைப் பாராட்டுகிறேன். இன்றைக்கு ஆந்திராவில் அந்நதிகளின் 10 சதவீதம் தண்ணீர்தான் உபயோகப்படுகிறது. அவர்களே அணை கட்டிக் கொண்டாலும் 40 சத வீதம் தான் அவர்களுக்கு பயன்படும் என்றும், மிச்சம் இருக்கிற 60 சத வீதம் வீணாகப் போகாமல் தமிழக மாவட்டங்களுக்குப் பயன்படும் வகையில் செய்யலாம் என்றும் குறிப்பிட விரும்புகிறேன். அந்த வேலையை 'விரைவில்' செய்ய திட்டமிடவேண்டும். அது அமைச்சர் அவை விரைவில் என்று சொல்கிற வார்த்தைக்கு கொள்கிற புதிய

பொருள் போல் இல்லாமல் 'சீக்கிரமாக' நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அது போலவே, சென்ற ஆண்டு பாலாறு திட்டத்தைப் பற்றி எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் எந்த வகையிலே பாலாற்றில் இருக்கிற தண்ணீரை 'சப் சாயில் வாட்டர்' மூலம் எந்த அளவு நிறைவேற்ற முடியும் என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதுவும் இது வரையில் கவனிக்கப்படவில்லை. அதிலும் அமைச்சர் அவர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்துமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். பெரிய திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை என்று கூறும்போது 176 கோடி ரூபாய் செலவில் பக்ரா நங்கல் அணைக்கட்டுத் திட்டமும், 116 கோடி ரூபாய் செலவில் ஹீராகுட் திட்டமும், 140 கோடி ரூபாய் செலவில் தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டமும், இது போன்று பல பல திட்டங்களுக்கு வழியில்லை, பெரிய திட்டங்களுக்கு இயற்கை வசதியில்லை என்று கூறும்போது நான் இங்கு ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதாவது, சில ஆண்டுகளுக்கு முன்னர், ஸர்.ஸி.பி. ராமசாமி அய்யர் அவர்கள், கங்கைத் தண்ணீர் குமரி வரையில் கொண்டு வரப்படுமானால் தென்னாடு வளம்பெறும் என்று ஒரு பெரிய திட்டத்தை வெளியிட்டிருக்கிறார்கள். நீங்கள் தான் தென்னாடு பிரிய வேண்டுமென்று கேட்கிறீர்களே, அந்தத் தண்ணீரை அவர்கள் கொடுப்பார்களா என்று கக்கன் அவர்கள் விடை பகரக் கூடும். தென்னாடு பிரிய வேண்டுமென்று நாங்கள் கூறும்போது நட்புறவு முறைகளோடுதான் ஒரு நாடு இன்னொரு நாட்டில் இருந்து விடுதலை பெறவேண்டுமென்று கூறுகிறோமே தவிர நதி, வளங்கள் போன்ற பல வளங்களைப் பகிர்ந்துகொள்ளக் கூடாது என்று நாங்கள் கூறவில்லை. கங்கையில் வீணாகப் போகும் தண்ணீரை தென்னகத்திற்குக் கொண்டு வரும் முயற்சியை ஸர்.ஸி.பி. ராமசாமியின் 'ட்ரான்ஸ் கான்டினெட்டல் கனால்' திட்டத்தை வெகு விரைவிலே செய்து முடிப்பதற்கும், அதற்காகிற செலவை மத்திய அரசாங்கத்திலிருந்து கேட்பதற்கும் இந்த அமைச்சரவை துணிவு பெற வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக, வடக்குள்ள ராஜ்யங்களில் கட்டப்படுகிற அணைத் திட்டங்களுக்கு மத்திய அரசாங்கம் பண

உதவி செய்கிறது. ஆனால் இங்கு நம் அமைச்சர் அவர்களால் காலையில் தரப்பட்ட இந்த அறிக்கையில், இங்கு கட்டப்படுகிற திட்டங்களுக்கும், இங்கு செய்யப்படுகிற பாசன வேலை களுக்கும் மக்களிடமிருந்துதான் நாங்கள் பெரிதும் எதிர்பார்க் கிறோம் என்ற வாசகம் காணப்படுகிறது. இத்தகைய நிலைமை வடக்கில் உள்ள ராஜ்யங்களில் இருக்கிறதா, இல்லையா என்று தெரியவில்லை. ஏனென்றால் நான் அடிக்கடி வடக்கே போகாதவன். ஆகவே, மக்களிடமிருந்து வாங்கித்தான் நாம் இக்காரியங்களைச் செய்ய வேண்டுமா என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த நீர்பாசனத் திட்டம் மான்யத்தின்மீது கொண்டுவரப்பட்ட இந்த வெட்டுப் பிரேரணையை நான் ஆதரிக்கிற இந்த நேரத்தில் இந்த அணைக்கட்டுக்களை யெல்லாம் இங்கு நீங்கள் கட்டவேண்டுமென்றும் இல்லாவிடில் நாங்கள் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே கட்டிக்கொள்கிற அணையையாவது அனுமதிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

## கல்வி மானியம்

**உரை : 4** **நாள் : 22.03.1961**

**கலைஞர் மு. கருணாநிதி** : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்தின் மீது தரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் என்னுடைய கருத்துக்களை இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். இந்தியாவிலே ஆரம்பப் பள்ளிகளில் குழந்தைகளுக்காகத் தயாரிக்கப்படும் பாடப் புத்தகங்களின் தரம் பெரும்பாலும் மோசமானதாக இருக்கிறது, உள்ளடக்கம், அச்சு, அமைப்பு எல்லாமே மிகவும் மோசம் என்று நான் சொல்லவில்லை. டிசம்பர் மாதம் 28-ம் தேதி கான்பூரில் நடைபெற்ற அகில இந்தியக் கல்வி மகாநாட்டிற்குத் தலைமை வகித்த நமது கல்வி அமைச்சர் திரு. சுப்ரமணியம் அவர்கள் எடுத்துக் காட்டியிருப்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கல்வியின் தரம் குறைந்திருப்பதற்குக் காரணம் ஆரம்பப் பள்ளிப் புத்தகங்களின் அமைப்பும், உள்ளடக்கம் என்று சொல்லப்படுகிற பொருள் அடக்கமும் கூடத் தரக் குறைவானதாக இருக்கிறது என்பதை அம் மகாநாட்டில் நமது கனம் அமைச்சர் அவர்கள் சொன்னதோடு அல்லாமல் அதைத் திருத்துவதற்கு தக்க வழிவகைகளைக் காணவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன். கல்வியின் தரம் குறைவாக இருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஆசிரியர்களின் வாழ்க்கை நிலை சரியான அளவிற்கு உயர்த்தப்படாதது ஒரு காரணம். கல்வித்தரம் உயர வேண்டுமென்றால் ஆசிரியர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததாக வேண்டும். ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகமாக உயர்த்தியிருக்கிறோம் என்ற

காரணத்தினால் மட்டும் அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியாகி விட்டது என்பதற்கு ஒரு சான்றாகக் காட்டுவார்களேயானால், அதற்கு நான், அல்ல, டெல்லி பாராளுமன்றத்தில் மத்திய அரசின் கல்வி அமைச்சராக இருக்கும் ஸ்ரீமாலி அவர்கள் ஆசிரியர்களுக்குக் கொடுத்துள்ள சம்பள உயர்வு, தற்போது ஏற்பட்டிருக்கும் பண்டங்களின் விலைவாசி உயர்வால் பயன்படாமல் போய் விட்டதென்று அண்மையில் குறிப்பிட்டுக் காட்டியிருப்பதை இங்கு தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆசிரியர்களால் எப்படி மாணவர்களுக்கு நிம்மதியாகப் பயிற்சி அளிக்க முடியும் என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். பால் சாப்பிடுவது உடம்பிற்கு நல்லதென்று பள்ளிகளில் போதித்து விட்டு வீட்டிற்குச் செல்கிற ஆசிரியர் தன் குழந்தை குட்டிகளுக்குப் பால் வாங்கித்தர வக்கற்ற நிலையில், வழியற்ற நிலையில், வாடிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் பள்ளிக்கூடத்தில் கரும் பலகையில் பால்காரி என்று எழுதிக் காட்டி, ''பா,ல் ; கா, ரி,'' என்று எழுதிக் காட்டி மாணவர்களுக்குப் பாடம் போதிக்கின்ற நேரத்தில் திரும்பி வீட்டிற்கு செல்லும்போது பால்காரி பழைய கடனைக் கேட்க காத்திருப்பாளே என்ற நினைவு அவர் உள்ளத்தில் தோன்றுமானால் அவர் போதிக்கும் பாடம் அத்துடன் தடைப்பட்டுப் போகும் என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. இன்றைய தினம் ஆசிரியர்களுக்குத் தரப்படுகிற வேலை, மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பது என்பது மட்டுமல்ல, இன்று ஆசிரியர்களுக்குப் பல பல வேலைகளை அரசினர் தந்திருக்கிறார்கள், சென்சஸ் எடுப்பது ஆசிரியர்களின் வேலையாக இன்றைய தினம் தரப்பட்டிருக்கிறது. வாக்காளர் பட்டியல் சேகரிப்பது ஆசிரியரின் வேலையாகத் தரப்பட்டிருக்கிறது, கொடி விற்பனை செய்ய வேண்டியது அவர்களது வேலையாகத் தரப்பட்டிருக்கிறது. சிலவிடங்களில் பரிசுப் பத்திரங்கள் விற்க வேண்டிய நிலையும் இருக்கிறது, ஆசிரியர்களுக்கு. பள்ளிக்கூடச் சீரமைப்பிற்கு வேண்டிய சாமான்கள் சேகரிப்பது போன்ற இக்கட்டான நிலையில் இருக்கிறார்கள் ஆசிரியர்கள். மதிய உணவுத் திட்டத்திற்குப் பொருள் பெறும் காரியத்தையும் அவர்கள் செய்ய வேண்டியிருக்கிறது. நான் இந்தக் காரியங்கள் வேண்டாமென்று கூறவில்லை. மதிய உணவு அளிப்பதும் பள்ளிச் சீரமைப்பும்

அத்தியாவசியமானவை என்பதை நான் உணர்ந்திருந்தாலும் அவைகளுக்காக நேரத்தைச் செலவிடும் ஆசிரியர்கள், பள்ளியில் பாடம் போதிக்கும் நேரத்தை கொள்ளை கொண்டு இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடவேண்டியவர்களாயிருக் கிறார்கள் என்பதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த ஏழெட்டு வேலைகளை ஆசிரியர்கள் பார்க்கும் போது, அவர்களுக்கு அதற்காகத் தனிச் சலுகைகள் தரப்பட்டாலும் கூட, தரப்படவில்லை என்று எனக்குத் தெரியும், அப்படித் தரப்பட்டாலும் கூட இந்த வேலைகளைச் செய்து கொண்டு பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்த அவர்களால் இயலுமா என்பதை மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் பரிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களுக்குப் பல இடங்களில் எப்படி போலீஸ்காரர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படுகிறதோ அதே போன்று ஆசிரியர்கள் கிராமங்களில் குடியேறி குடியிருப்பதற்கு வீடில்லாமல் தவிக்கும் நிலையில் அவர்கள் இன்று இருப்பதால் கிராமங்களில் ஆசிரியர்களுக்கு வீடு கட்டித் தருகிற திட்டத்தை இந்தச் சர்க்கார் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பள்ளிகளின் கல்வித் தரம் உயர பாடப் புத்தகங்கள் எவ்வளவு முக்கியமானதோ அதேபோல் ஆசிரியர்களின் நிலையும் உயர்வது அவசியம். அதே போன்று பள்ளி நிர்வாகமும் ஒரு முக்கிய பொறுப்பாகும். பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் உரையில் நமது கல்வியமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் கூறியதாக எனக்கு நினைவு, மாவட்டக் கழக உயர்தர ஆரம்பப் பள்ளிகளை பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் விட்டு விட்டு, மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளை சர்க்காரே எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்திருப்பதாகவும் உயர்நிலைப் பள்ளிகளை சர்க்கார் நிர்வாகத்தில் நேரிடையாகக் கொண்டு வருவது சர்க்கார் திட்டம் என்று கனம் அமைச்சரவர்கள் கூறியிருப்பதாகக் கருதுகிறேன். ஆனால் அது எப்படி செயல்படுகிறது என்றால் அதற்கு ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் திருவாரூர் கழக உயர்நிலைப் பள்ளியை, நான் கேள்விப்பட்டேன், திருவாரூரிலுள்ள ஒரு திடீர் காங்கிரஸ்காரர், ஒரு பணக்காரருக்கு அந்தப் பள்ளியைத் தனிப்பட்ட முறையில் மாற்றித் தருவதற்கான

முயற்சிகள் வெகு வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. திருவாரூர் பொது மக்களும், சர்வ கட்சிக்காரர்களும் அந்த முறை கூடாது, அந்தப் பள்ளியை மாவட்டக் கழக நிலையிலிருந்து தனிப்பட்ட ஒருவரின் உரிமையாக மாற்றக் கூடாது என்றும், அவர் நில உச்ச வரம்பிலிருந்து தப்பித்துக் கொள்ள இக் காரியத்தை மேற்கொள்கிறார் என்றும் திருவாரூர் மக்கள் குரல் எழுப்புகிறார்கள். அதற்கிடையில்கூட அந்தப் பள்ளியைத் தனியார் நிர்வாகத்தில் விடுவதற்கான வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதை நான் இங்கு ஞாபக மூட்ட விரும்புகிறேன். ஒரு காங்கிரஸ்காரருக்குக் கொடுக்கக் கூடாது என்று நான் கருதுவதாக கனம் அமைச்சர் அவர்கள் எண்ணினால் திருவாரூரில் நடை பெற்றுக் கொண்டிருக்கிற நகராண்மைக் கழகம் காங்கிரஸ் காட்சியின் தலைமையில்தான் நடைபெறுகிறது, அந்தக் கழகம்வழி இந்தப் பள்ளி இயங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். அடுத்து, கல்லூரிகளில் மாணவர்கள் எந்த அளவு சங்கடப்படுகிறார்கள் என்றது குறித்து கான்பூரில் பேசிய கனம் அமைச்சர் அவர்கள் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இன்டர்மீடியேட் வகுப்பை ஒழித்தது எவ்வளவு தவறானது என்று அவர் அங்கு சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். நாமும் உணர்கிறோம். செகண்டரி பள்ளிகளில் பிரதேச மொழியில் பாடங்களைக் கற்பித்தால் அவர்கள் ப்ரீயூனிவர்ஸிட்டிக்கு போகும் போது அவர்கள் எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில் படிக்க வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். திடீரென்று ஏற்படும் மாறுதல் காரணமாக மாணவர்கள் தங்களை ஒரு ஆண்டில் சரிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. ஆகவே ப்ரீ யூனிவர்ஸிட்டியை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக உயர்தர செகண்டரிப் பள்ளி, 11-வது வகுப்பு ஏற்படுத்திய பிறகு மற்றொரு சிரமமும் ஏற்படுமென்று கூறியிருக்கிறார்கள். 11-வது வகுப்புவரை பிரதேச மொழியில் கற்கும் மாணவர்கள் பட்டப் படிப்பிற்குச் செல்கிறபோது அங்கே ஆங்கிலத்தில் படிக்க வேண்டியிருப்பதால் சர்வகலாசாலையின் தரம் பாதிக்கப்படும். தொழில் நுட்பப் படிப்பிற்காகச் செல்லக்கூடிய மாணவர்களுக்குப் பல தொல்லைகள் ஏற்படுமென்றும் கூறியிருக்கிறார்கள். இந்த

நிலையை மாற்றுவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் என்ன வழி செய்யப் போகிறார்கள்? கல்லூரிகளில் பிரதேச மொழியைத் தொடர்ந்து வைக்கப் போகிறார்களா, கோவையில் செய்திருப்பதைப் போன்று சென்னை கல்லூரிகளிலும் அத்தகைய முறையைப் புகுத்துவதற்கு வேண்டிய முயற்சியில் ஈடுபடப்போகிறார்களா அல்லது 11-வது வகுப்பில் எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில் போதிப்பது பற்றி ஆராயப் போகிறார்களா, இப்பொழுதுள்ள நிலையில் அது இல்லை என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. ஆகவே, இது பற்றியதொரு விளக்கத்தை கனம் அமைச்சர் அவர்கள் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக இந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு (பிரைவேட் கான்டிடேட்) தனிப்பட்ட முறையில் பரீட்சை எழுதுகின்றவர்கள் தங்கள் ஊரில் அருகாமையில் இருக்கின்ற சென்டர்களைக் கேட்கின்றார்கள். நாகையில் இருக்கின்ற ஒரு மாணவன் அதன் அருகாமையில் இருக்கின்ற ஒரு சென்டரை குறிப்பிட்டுக் கேட்டிருந்தும்கூட, அந்த சென்டர் கொடுக்கப் படாமல், தொலைவிலுள்ள கடலூர் சென்டருக்கு அனுமதி கொடுக்கிறார்கள். இதனால் அந்த மாணவர்களுக்குப் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. இந்த நிலைமைகளை எல்லாம் அடுத்த ஆண்டிலாவது அகற்றுவதற்கு சர்க்கார் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக மாணவர்கள் அரசியலில் பங்கு பெறலாமா என்பதைப்பற்றி இந்த மாமன்றத்தில் பல முறைகள் விவாதிக்கப்பட்டிருக்கிறது. அதோடு சர்வகட்சிகள் ஒன்று சேர்ந்து இதன் மீது எடுத்த முடிவு என்னவாயிற்று? அந்த முடிவை யார் மீறினார்கள்? மாணவர்கள் மகாநாடுகளில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகச் சொற்பொழிவாளர்களோ கலந்து கொண்டு இந்த முடிவை மீறினார்களா? அல்லது காங்கிரஸ் தலைவர்களோ அல்லது காங்கிரஸ் அமைச்சர்களோ இம்மாதிரியான மகாநாடுகளில் நாம் எடுத்த முடிவை மீறி கலந்து கொண்டார்களா? என்பதைப் பற்றி சற்று யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

## தேர்தல், மாநில ஆட்சித் தலைவர் மானியம்

**உரை : 5** நாள் : 11.07.1962

**கலைஞர் மு. கருணாநிதி** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மன்றத்தின் முன்பு வைக்கப்பட்டுள்ள தேர்தல்கள், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் பற்றிய மான்யத்தின் மீது தரப்பட்டுள்ள வெட்டுப் பிரேணையின் மீது நான் சில கருத்துக்களை என் கட்சி சார்பாகக் கூற விரும்புகிறேன். வெட்டுப் பிரேரணை என்பது ஒரு மரபுக்காக குறிப்பிட்ட தொகையிலிருந்து வெட்டுவதாக எடுத்துச் சொல்லப்பட்டு, ஆனால் ஒதுக்கப்பட்டுள்ள மான்யங்களுக்காக அதிகமாக செலவழிக்க வேண்டுமென்று அதற்கான தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிற சம்பிரதாயம் இருக்கிறது என்றாலும், இந்த மான்யத்திலுள்ள ஒரு சில பிரச்சினைகளைப் பொறுத்த வரையில் உள்ளபடியே ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையை வெட்ட வேண்டுமென்ற கருத்தை இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். இங்கு இந்த விவாதத்தில் பேசிய எங்கள் கட்சி உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் நமது முதலமைச்சர் அவர்களை மிக அதிகமாக புகழ்ந்தார்கள். அந்த புகழ்ச்சிக்கு எல்லாம் முதலமைச்சர் அவர்கள் அருகதையுடையவர்கள் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் திரு. மதியழகன் அவர்கள் ஒரு சிறிய சோதனை செய்து பார்த்தார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். கடுமையான குற்றத்தை எடுத்துச் சொல்கிற நேரத்தில் கனம் முதலமைச்சர் அவர்களின் முகம் மிக சுருங்கி விடுகிறது. புகழ்ச்சியாக சொல்லும்போது அவருடைய முகம் எப்படியிருக்கிறது என்று பார்ப்போம் என்பதற்காக அந்தத்

தந்திரத்தைக் கையாண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். அந்தசோதனையில் திரு. மதியழகன் அவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள் என்றே நான் கருதுகிறேன். (கனம் திரு. கு. காமராஜ் : சாமர்த்தியமாக கிண்டல் செய்வது தெரியாமல் இல்லை) புகழுரையைத் தாங்கும் இதயமும், மனப் பக்குவமும் இருப்பதுபோல் ஆட்சியில் இருக்கிற, அவல நிலையையும் நிர்வாகத்திலுள்ள கேடுபாடுகளையும் எடுத்துச் சொல்லும்போது அந்த மனப் பக்குவம் இருக்கவேண்டுமென்பதற்காக இதை குறிப்பிட்டேனே தவிர, வேறு அல்ல, தேர்தலைப் பற்றிய வெட்டுப் பிரேரணை மீது நான் அதிகமாக பேச விரும்ப வில்லை. காரணம், கவர்னர் உரை மீது நடந்த விவாதத்தில் அது பற்றி நான் வெகு விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறேன்.

**திரு. கோ. வெங்கட்ராமன்** : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். திரு. மதியழகன் அவர்கள் பேச்சுக்கு திரு. கருணாநிதி அவர்கள் கருத்துரை வழங்குவதை திரு. மதியழகன் அவர்கள் ஒப்புக் கொள்கிறார்களா என அறிய விரும்புகிறேன்.

**திரு. மு கருணாநிதி** : தேர்தலைப்பற்றி அப்பொழுது நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகவே தேர்தலைப் பற்றி இங்கு அதிகமாகப் பேச விரும்பவில்லை. ஆளும் கட்சியைச் சார்ந்த அம்மையார் அவர்கள் பேசும்போது, தேர்தலில் எதிர்கட்சியில் உள்ளவர்கள் ஆள்மாறாட்டம் செய்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஆள் மாறாட்டம் செய்ததாக சொல்லப்படும் தேர்தல் வழக்குகள் எல்லாம் எல்லாக் கட்சி சார்பிலும் நீதி மன்றங்களில் இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் எடுத்துக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே அதை பிரித்துக் கூற நான் விரும்பவில்லை. ஆனால் ஆள் மாறாட்டம் வாக்காளர்களைப் பொறுத்து மட்டுமில்லை அபேட்சகர்களைப் பொறுத்திருக்கக் கூடிய வகையிலும் மாலை வரை பட்டுச் சட்டை போட்டுக்கொண்டிருந்தவர்கள் ஆறு மணிக்குப் பின்னர் அமைச்சரை சந்தித்த பிறகு கதர் சட்டை போடுமளவுக்கு ஆள் மாறாட்டம் நடைபெற்று தேர்தலில் போட்டி போட்டிருக் கிறார்கள். அப்படிப்பட்ட ஆள் மாறாட்டத்தைப் பற்றி, சுதந்திரத்திற்காக தியாகங்கள் செய்தோம் என்று தங்கள் பரம்பரையை எடுத்துச் சொல்லி பெருமைப்படுகிற ஆளும்

கட்சியை சார்ந்தவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகத்தில் யாரும் புதிதாக வந்து சேரவில்லையா என்று கேட்கலாம். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேறு கட்சியில் இருந்து வந்து சேருவதற்கும், எதிர்கட்சியில் இருந்து ஆளும் கட்சியில் போய் சேருவதற்கும் இருக்கும் பெரிய வித்தியாசத்தை கனம் அமைச்சர் அவர்கள் உணரவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற கட்சிகளுக்கு ஆளும் கட்சியிலிருந்து சிலர் வருகிறார்கள் என்றால் அடக்கு முறைக்கு ஆளாகிவருகிளார்கள். அதுவும் பயங்கரமான அடக்கு முறைகள் எல்லாம் தலைகாட்டத் தயாராயிருக்கிறது. நாட்டுப் பிரிவினை என்று பேசினால் அவர்களுக்கு எப்படி எப்படி தண்டனைகள் தரப்படும் என்று சொல்கிற அடக்கு முறைகள் உருமிக்கொண்டிருக்கிற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வருகிறார்கள். ஆளும் கட்சிக்கு செல்கிறவர்கள் இந்த இடுக்கண்களிலிருந்து தங்களை விடுவித்து கொள்ளவும், அங்கே சென்றால் பல வசதிகள், சலுகைகள் பெறலாம் என்பதற்காகவும் செல்கிறார்கள் என்ற வித்தியாசத்தையும் ஆளும் கட்சியினர் உணரவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். தேர்தலைப்பற்றி பேசவில்லை என்று குறிப்பிட்டேன். ஆனால் தமிழ்நாட்டிலுள்ள தேர்தல்களைப் பற்றி இங்கு பேச விரும்புகிறேன். நமது கனம் நிதியமைச்சர் அவர்கள் அறநிலைய அமைச்சராக இருக்கிற காரணத்தினால் அத்தகவலை இந்நேரத்தில் எடுத்துச் சொல்வதுதான் சாலப்பொருத்தமாகயிருக்கும், வேறு வாய்ப்பு கிடைக்காது என்பதற்காக அதை இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டில் உள்ள கோவில்களிலுள்ள தேர்கள் எல்லாம் பழமை அடைந்துவிட்ட காரணத்தினால் ஏலம் போடப்படுகின்றன. அப்படி ஏலம் எடுக்கிறவர்கள் பத்து பேர்கள் இருபது பேர்கள் சேர்ந்து கொண்டு 2,000 அல்லது 3,000 ரூபாய்க்கு ஏலத்தில் எடுக்கின்றார்கள். அப்படி எடுத்து, வடபுலத்திலுள்ள பம்பாய் போன்ற இடங்களிலுள்ளவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் 15 ஆயிரம் ரூபாய் என்று இப்படி

விற்கிறார்கள். அங்கு அந்தத் தேரிலுள்ள கலைப் பொருட்களை எல்லாம் தனியாக எடுத்து, பழைய காலத்தில் மரங்களினால் செய்யப்பட்ட அந்தச் சிற்பங்கள் வெளிநாடுகளில் 50 ஆயிரம் ரூபாய், 60 ஆயிரம் ரூபாய் என்று விற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதை நான் எடுத்துச் சொல்கின்ற காரணத்தால், அமைச்சர் அவர்கள் திடீரென்று திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள வர்களுக்கு கடவுள் மீது-கோவிலின் மீது-தேரின் மீது-நம்பிக்கை வந்து விட்டது என்று முடிவுரையில் கூறக் கூடும். கிரேக்க ரோமானிய நாட்டில் எல்லாம், கலைகளிலுள்ள சிறப்பைக் காட்டுவதற்காக, அங்கிருந்த கடவுள்களின் உருவங்களை எல்லாம்-மாஜி கடவுள்களை எல்லாம் கலைச் செல்வங்களாக்கி கலைக்காட்சியாக வைத்திருக்கிறார்கள். அந்த அளவில் இவைகளையும் நாம் காட்சிப் பொருட்களாக வைத்துக் காப்பாற்றவேண்டும் என்ற நோக்கத்தோடு, அறநிலையங்களை நடத்துபவர்கள் அக்கறை காட்டவேண்டும் என்பதற்காகத்தான் இதை கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

அடுத்து, மந்திரிகள் சுற்றுப்பயணம் செய்வதைப்பற்றி எதிர் கட்சியிலுள்ள பல அங்கத்தினர்கள் இங்கே பல கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். ஆளும் கட்சியிலிருந்து சில அங்கத்தினர்கள் இதைப்பற்றி சுட்டிக்காட்டினார்கள். 1960-61ல் மந்திரிகளின் சுற்றுப்பயணத்திற்காக 97,903 ரூபாயும் 1961-62ல் ஒரு லட்சம் ரூபாயும் செலவழித்து, 1962-63ல் 1,12,500 ரூபாய் செலவு என்று திட்டம் போடப் பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. மந்திரிகள் சுற்றுப்பயணம் செய்யவேண்டியதுதான். இந்த மன்றத்திற்கு முதல் முதலாக நான் வந்த காலத்தில் மந்திரிகள் அவசியம் இருந்தால் மாறுவேடத்தில்கூட போய் பார்க்க வேண்டும் என்று கூறியிருக்கிறேன். சிலருக்கு மாறுவேடம் கூடத் தேவையில்லை, இவ்விதம் மாறுவேடத்தில் போனால் பல விஷயங்களை, மக்களுடைய குறைகளை அறிந்து கொள்ளலாம் என்று சொன்னோம். ஆனால் சுற்றுப்பயணத்திற்கும் ஓர் அளவு இருக்க வேண்டும். எதிர்க்கட்சிகளை மட்டம் தட்டுவதற்கென்றே, எதிர்க்கட்சிகளை அழைப்பதற்கென்றே. எதிர்க்கட்சிகளை தாக்குவதற்கென்றே இந்த சுற்றுப்பயணத்தைப் பயன்படுத்திக்

கொள்வார்கள் என்றால், நான் மிக மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன், சர்க்கார் காரியமாகப் போகும் போது கட்சி வேலைகள் செய்வது தவறா என்று கனம் அமைச்சர் அவர்கள் வாதிடக் கூடும். சர்க்கார் காரியமாக சுற்றுப்பயணம் போகிறார்கள் என்றால், அதற்காக செலவழிக்கப்படும் பணம், சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் இவைகள் எல்லோருடைய வரிப்பணத்தைப் பெற்றுதான் சர்க்கார் செலவு செய்கின்றது. எல்லோருடைய வரிப்பணத்தைப் பெற்றுத்தான் சர்க்கார் நடைபெறுகிறது. அவ்விதம் வருகின்ற வரிப் பணத்தைக் கொண்டு அதை செலவு செய்து - கட்சி வேலைகளை நடத்துவது என்றால், அது சரியானதல்ல, முறையானது அல்ல, நேர்மையானது அல்ல, என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன். அப்படியில்லாமல், சர்க்காருடைய காரியமாக வருகிற நேரத்தில் மந்திரிகளுடைய நிகழ்ச்சிநிரலில் - கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ராமையா அவர்கள் சுற்றுப்பயணம் செய்கின்ற ஒரு நிகழ்ச்சி நிரல் - பலருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தக் கோட்டையிலிருந்துதான் அனுப்பப்பட்டிருக்கிறது. 19-ம் தேதி இரவு 7-15க்குப் புறப்படுகிறார், மறுநாள் காலை 3-50க்கு தஞ்சாவூர் வருகிறார், 10 மணிக்கு மாவட்ட வளர்ச்சி கழகக் கூட்டத்தில், எம்.எல்.ஏ.க்களையும் எம்.பி-களையும் கலந்து பேசுகிறார் நான்கு மணிக்கு.

"Discussion with Members of District Congress Committee Presidents of Taluk and Town Congress Committees".

என்று நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வரி செலுத்துகின்றவர்களில் எல்லாக் கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள். நாங்கள் கொடுக்கின்ற - இந்த நாட்டு மக்கள் அனைவரும் கொடுக்கின்ற - வரிப்பணத்தை செலவு செய்து சுற்றுப்பயணம் செய்து கட்சி வேலைகள் செய்வது சரிதானா என்பதை நியாய உணர்ச்சியோடு கனம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, மந்திரிகள் சுற்றுப்பயணம் செய்யும் போது, அவர்களுடைய பேச்சுக்களை எல்லாம் சுருக்கெழுத்தாளர்கள் எடுப்பதில்லை, அதே நேரத்தில் எதிர்க்கட்சிகள், அது சுதந்திரக்

கட்சியாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக்கழகமாக இருந்தாலும் சரி - எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் பேசுகின்ற பேச்சுக்கள் மட்டும் சுருக்கெழுத்தாளர்கள் மூலமாக குறிப்பு எடுக்கப்படுகிறது. அவ்விதம் குறிப்பு எடுக்கப்பட்டு அதன் மூலம் எதிர்க்கட்சியினரின் மீது ஏதாவது வழக்கு போடலாமா என்று சர்க்கார் திட்டமிடுவதற்கு சாதகமாக இருக்கிறது. எதிர்க்கட்சியினரின் பேச்சுக்களை குறிப்பு எடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அதைப் போலவே ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசுவதையும், அமைச்சர்கள் பேசுகின்ற பேச்சுக்களையும் குறிப்பெடுக்க வேண்டாமா என்பதை - கனம் அமைச்சர் அவர்கள் யோசித்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு கனம் அம்மையார் அவர்கள் ஓரிடத்தில் பேசும்போது ''என்னுடைய கையில் இப்போது துப்பாக்கியிருந்தால் அண்ணாத்துரையை சுட்டிருப்பேன்'' என்று பேசினதை நானே என் காதால் கேட்டேன். அதற்குப் பின்னால் அவர்கள் கூறினதற்கு பதில் கூறுகிற முறையில், அடுத்த பக்கத்தில் நடந்தக் கூட்டத்தில் கூறினேன், ''கனம் அம்மையார் அவர்களுக்கு இட்டிலி, தோசை சுட்டு பழக்கமில்லை போலிருக்கிறது, அதனால்தான் ஆளையாவது சுடலாம் என்று புறப்பட்டிருக்கிறார்கள்'' என்று பதிலும் கூறினேன். இவ்விதம் ஆளும் கட்சியிலுள்ள உறுப்பினர் மட்டும் கூறவில்லை, இன்னும் சில மந்திரிகள் பேசுகின்ற பேச்சைக் கேட்டால் - இந்த சபையிலுள்ள தாய்மார்கள் யாரும் கோபித்துக்கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்... பேசின் பிரிட்ஜ் அருகில் நடந்த கூட்டத்தில் ஒரு அமைச்சர் பேசும் போது திராவிட முன்னேற்றக் கழகத்தை விபசார முன்னேற்றக் கழகமாக பெயர் மாற்றிவிடலாம் என்ற அரிய கருத்தை தனக்கிருக்கின்ற இயல்புக்கு ஏற்ற வகையில் எடுத்துப் பேசினார்கள், இவற்றையெல்லாம் குறிப்பெடுக்க வேண்டாமா? இப்படிப்பட்ட பேச்சுக்களை எல்லாம் சுருக்கெழுத்தாளர்கள் மூலமாக குறிப்பெடுத்து அதை அமைச்சர்களின் பார்வைக்கு கொண்டு வந்து அதன் பேரில் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டாமா என்று கேட்கிறேன். எதிர்க்கட்சியினர் இம்மாதிரி பேசவில்லை என்றோ, பேசியே இருக்கமாட்டார்கள் என்றோ நான்

மறுக்கவில்லை. எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில் இவ்விதம் ஏதாவது ஒருவர் பேசினால், உடனடியாக தலைவரால் மறுக்கப்பட்டு மன்னிப்புக் கேட்கின்ற நிகழ்ச்சியை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்பேர்ப்பட்ட நிகழ்ச்சி ஆளும் தரப்பில் இருக்கிறதா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். நேற்று முன் தினம் கனம் அமைச்சர் அவர்கள் எதிர்கட்சியினர் தொகுதிக்கு என்று ஒன்றும் செய்யாமல் இருப்பதில்லை, அப்படி சொல்வது தவறு என்று கூறினார்கள். யார் வெற்றி பெற்றாலும் பொதுவாக செய்யவேண்டிய வேலைகளை எல்லாம் செய்துகொண்டுதான் இருப்போம். இதில் கட்சி வித்தியாசமொன்றும் காட்டுவதில்லை என்ற நீதி வாக்கியத்தை கனம் நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். சென்ற தடவை குளித்தலை தொகுதியில் கனம் அமைச்சர் கக்கன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ''குடகனாறு திட்டமா வேண்டும் கருணாநிதிக்கல்லவா வோட்டு போட்டீர்கள். அவரிடம் போய் கேளுங்கள் என்று பேசியிருப்பதை (கனம் திரு. கக்கன் எழுந்தார்) இந்த மன்றத்தின் முன்னால் நான் இதை எடுத்துச் சொல்லுகின்ற நேரத்தில் கனம் அமைச்சர் கக்கன் அவர்கள் அப்போது மறுக்கவுமில்லை. ஆனால் இப்போது மறுப்பதற்கு ஆதாரத்தைத் தேடுகிறார் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்** : கனம் சபாநாயகர் அவர்களே, குளித்தலையில், மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. கருணாநிதி அவர்களின் பக்கத்துணையாக நின்று, இப்போது சட்டசபை அங்கத்தினராக இருக்ககூடியவர் - அவர்கள் கூட, அந்தமாதிரி நான் சொல்லவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி** : அந்த அங்கத்தினர் அப்போதே தங்களை மறுத்துப் பேசினதும் எங்களுக்குத் தெரியும். அடுத்து, பெண்களைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தார் ஆபாசமாகப் பேசுகிறார்கள், மரியாதை கெட்டு பேசுகிறோம் என்று கனம் அம்மையார் ஒருவர் இந்த மன்றத்தில் குறிப்பிட்டார்கள். நாங்கள் பெண்களைப்பற்றி உதாரணம் காட்டுவது தவறா, எங்கள் தலைவர்களில் யாராவது

பெண்களைப்பற்றி தவறாக பேசியிருக்கிறோம் என்ற ஆதாரங்களை அம்மையார் அவர்கள் தரவில்லை. எதிர்க்கட்சியிலுள்ள நாங்கள் பெண்களைப்பற்றி ஆபாசமாகப் பேசுகிறோம் என்று சொல்லுகிற நேரத்தில், பெண்களும் சற்று அடக்க உணர்ச்சியோடு பேச வேண்டும். இன்றைய தினம் ஆளும் கட்சியிலிருக்கின்ற என்னுடைய மதிப்பிற்குரிய சகோதரியார் அவர்கள் அவ்விதம் பேசவில்லை என்பதை வருத்தத்தோடு இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

Srimathi T.N. ANANDANAYAKI : Sir, on a point of order, this is an insinuation against the lady Members of the House. Unless the Hon. Member withdraws these remarks, he is not fit to be a member of this House.

Mr. SPEAKER : The hon. Member may please repeat her point of order.

Srimathi T.N. ANANDANAYAKI : Mr. Speaker, the remarks made by the hon. Member just now about the lady Members of the House is highly defamatory and insinuating. If the hon. Member does not withdraw those remarks, I am afraid he is not fit to sit here as an honourable Member of this House.

Mr. SPEAKER : I think the hon. Member Srimathi Anandanayaki is objecting to the words 'அடக்கமாக பேச வேண்டும்'.

Srimathi T.N. ANANDANAYAKI : Yes, Sir. It is a highly defamatory and insinuating remark made against the lady Members of this House.

Mr. SPEAKER : Apart from that, I do not want any Member to attack the other Members of the House individually or even collectively. The hon. Member Sri M. Karunanithi may now proceed.

**திரு. மு. கருணாநிதி** : அடுத்து, கவர்னர் பதவியைப்பற்றி இந்த மான்யத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். கவர்னருக்கு

தரப்படுகிற சம்பளம், கவர்னர் பதவிக்காக ஆடம்பரமாக செய்யும் செலவினங்கள், இவைகள் எல்லாம் ஆண்டுதோறும் 10 லட்சம் ரூபாய் செலவு செய்யப்படுகிறது. இத்தகைய செலவுகள் மக்களுடைய வரிப்பணத்திலிருந்து செலவு செய்யவேண்டாம் என்ற கருத்தைத்தான் நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். கவர்னருடைய சம்பளத்திற்கு என்று 59,400 ரூபாயும் அவர்களுடைய காரியாலயச் செலவிற்காக 70,200 ரூபாயும் சுற்றுப்பிரயாணத்திற்காக 66,000 ரூபாயும் விருந்து கேளிக்கைகளுக்காக 25,000 ரூபாயும், மருத்துவ பராமரிப்புக் காக 22,300 ரூபாயும் ஆகிய இப்படிப்பட்ட செலவுகளை எல்லாம் சேர்த்து 62-63-ம் ஆண்டுக்கு 6,05,100 ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. 61-62ல் 5,82,000 ரூபாயாக இருந்தது. 1960-61ல் ரூ. 4,83,711 ஆகியிருக்கிறது. கவர்னருடைய வீட்டுப் பராமரிப்புக்கு, மாளிகை பராமரிப்புக்கு ஆண்டுதோறும் 2-3 லட்ச ரூபாய் ஆகிறது. ரிப்பேர் செலவு என்ற வகையில் ஆண்டுதோறும் 2 லட்ச ரூபாய் ஆகிறது. 1960-61ல் பராமரிப்புக்கு ரூ. 3,62,000 ஆகியிருக்கிறது-ரிப்பேருக்கு ரூ. 1,90,000 ஆகியிருக்கிறது. 1961-62ல் பராமரிப்புக்கு ரூ. 2,41,400 ஆகியிருக்கிறது - ரிப்பேருக்கு ரூ. 2,21,000 ஆகியிருக்கிறது. 1962-63ல் பராமரிப்புக்கு ரூ. 2,85,000 போடப்பட்டிருக்கிறது- ரிப்பேருக்கு ரூ. 2,21,000 போடப் பட்டிருக்கிறது. இப்படி ஆண்டுதோறும் 2 லட்சம் 2½ லட்சம் ரூபாய் இந்த மாளிகைக்கு ரிப்பேர் செலவு ஆகிறது என்று கணக்கு தரப்படுகிறது. அதற்கு விவரங்கள் இல்லாவிட்டாலும், கவர்னர் என்ற பெயரால் ரூ. 10 லட்சம் செலவழிப்பது நியாயம் தானா? தர்மம்தானா? காந்தி வழியில் போய்க் கொண்டிருக்கிறோம் என்று சொல்லக் கூடிய ஆளும் கட்சி அமைச்சர்களைப் பார்த்து, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக, இப்படிப்பட்ட செயல் மேலும் மேலும் தொடரலாமா என்று கேட்க விரும்புகிறேன். கவர்னர் பதவி தேவைதானா என்று கேட்டால் மாநிலத்தில் குழப்பம் ஏற்பட்டால், குழப்பம் எற்பட்டு கட்சி மந்திரி சபை கலைக்கப்பட்டால், அப்போது கவர்னர் ஆட்சி நிறுவுவதற்கு கவர்னர் தேவை என்று, ஊரிலே தீப்பிடிக்கும், அதற்காக தீ அணைக்கும் படை போல கவர்னரை வைத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். மின் விளக்கு அணைந்து விட்டால் மெழுகுவர்த்தி ஏற்றி வைக்கிறோம்.

மெழுகுவர்த்தி குறைந்த செலவில் கிடைத்தாலும், மின் விளக்கு அணைந்தவுடன்தான் கடையிலே ஓடிப்போய் மெழுகுவர்த்தி வாங்கி ஏற்றி வைக்கும் நிலையில், குறைந்த செலவில் நடக்கக் கூடிய காரியத்தில் கூட இப்படி நடைபெறுகிறது. 14-15 மாநிலங்களிலும் இந்திய சர்க்கார் கவர்னரை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும், குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் 10 லட்சம் ரூபாய் செலவழிப்பது நியாயம்தானா? மாநிலத்தில் குழப்பம் வந்தால் என்ன செய்வது என்று கேட்கலாம். பக்கத்து மாநிலமாகிய கேரளத்தை உதாரணம் காட்டலாம், வேண்டுமானால் டில்லியில் 4-5 கவர்னர்களை வைத்துக்கொண்டு, குழப்பம் நேரிட்டால். குழப்பங்களை சமாளிக்க அந்த மாநிலத்திற்கு அனுப்பி விடுங்கள் என்று மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லக்கூடாதா என்று கேட்கிறேன். கவர்னர் நமது மாநிலத்துக்கு தேவையில்லை என்று சொன்னால், கவர்னர் வேண்டாமென்று கூறுவது அரசியல் சட்டத்திற்கு விரோதம் என்று கூறுகிறார்கள். அரசியல் சட்டத்துக்கு விரோதம் என்ற கூறி எத்தனையோ பெரும் பொறுப்புகளிலிருந்து நழுவி விடக்கூடாது, வேண்டுமானால் அரசியல் சட்டத்தை மாற்றுகிற துணிவு ஏற்படவேண்டும். அரசியல் சட்டம் மாற்றவே கூடாத ஒன்றல்ல - மாற்றவே முடியாத ஒன்றுமல்ல.

Mr. SPEAKER : This House cannot amend the Constitution.

**கலைஞர் மு. கருணாநிதி** : ஆகவே மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடத்திலே இந்த கவர்னர் பதவியினால் ஆண்டுதோறும் இழக்கின்ற 10 லட்சம் ரூபாயை இழக்கக் தயாராயில்லை. ஆகவே கவர்னர் பதவி தேவையில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கவேண்டுமென்று இந்த மான்ய வெட்டுப் பிரேரணை மூலமாகக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**கலைஞர் மு. கருணாநிதி** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, நமது கல்வி அமைச்சர் அவர்களுடைய தமிழ் ஆர்வம், இன்றைய தினம் மாணவர்களிடையே பெருத்த வேதனையை உண்டாக்குகிற அளவுக்கு குறைந்து விட்டது என்பதை

கண்டிக்கிற அளவில் கோவையிலும், பொள்ளாச்சியிலும் உள்ள மாணவர்கள் அடையாள மறியலில் ஈடுபட்டிருக்கிற இந்த நேரத்தில், கல்வி மான்யக் கோரிக்கைமீது எங்கள் கட்சி சார்பிலே, கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையின் மீது சில வார்த்தைகளை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏறத்தாழ 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிற இந்த மான்யம் வரவேற்கத்தக்கது என்றாலும், 25 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிற இந்த நிறுவனத்தில் இயக்குநருக்குக் கீழே துணை இயக்குநர்கள் 4 பேர்கள்தான் இருக்கிறார்கள் என்பது பரவலாக கல்வி மக்களிடத்தில் செழிப்படைய வேண்டும் என்ற திட்டத்தை விரைந்து நிறைவேற்றக்கூடியதாக அமையவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆரம்பக்கல்வி, உயர்தரக் கல்வி இவைகளைப் பிரித்து அப்படிப்பட்ட கட்டங்களுக்குக்கூட தனியாக இயக்குநர்கள் அமைக்க வேண்டும் என்கின்ற என்னுடைய எண்ணத்தை நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக தமிழிலே ஆர்வம் உள்ளவர்களும், தமிழிலே புலமை மிக்கவரும் தமிழ்பற்றி ஆராயவும், திருத்தவும் வேண்டும். ஆனால் தமிழ் விடைத்தாள்களை திருத்துவதற்கான பொறுப்புகளிலேகூட அவர்கள் அமைக்கப்படுவதில்லை என்கின்ற குற்றச்சாட்டை நான் இங்கே உதாரணத்தின் மூலம் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கோவையில் தமிழ் விடைத்தாள்களை அதுவும் எஸ்.எஸ்.எல்.சி. தமிழ் விடைத்தாள்களை திருத்துவதற்கான பெரிய பொறுப்பில் கோவையில் உள்ள அரசாங்க உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் கணக்கு பி.டி. அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் கொங்கணி உயர் நிலைப் பள்ளியில் சமூக இயல் ஆசிரியர் தமிழ் விடைத்தாள்களைத் திருத்துவதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் இதற்கு உதாரணமாகும் என்று நான் கூறுகிறேன்.

டெக்ஸ்ட் புக் கமிட்டிக்கு அனுப்பப்படுகிற புத்தகங்கள் பற்றி ஓரிரண்டு உதாரணம் கூற விரும்புகிறேன். நேரம் அதிகம் இல்லாத காரணத்தினால் நான் அதை விளக்கமாகக் கூறாமல், சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'குறள் நெறிக் கதைகள்' என்கின்ற

7-ம் வகுப்புப் புத்தகம் அரசினால் அங்கீகரிக்கப்பட்டதாக புத்தகத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால், இது அரசினரால் அங்கீகரிக்கப்பட்டதா என்பதே ஆராய்ச்சிக்குரிய விஷயம். 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் இது அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டக் குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், புத்தகத்தில் பதிப்பிக்கப்பட்ட ஆண்டு 1962 என்று போடப்பட்டிருக்கிறது. அந்த காலகட்டத்தைப் பற்றிய வேறுபாட்டைப்பற்றி கவலையில்லாவிட்டாலும், இந்தப் புத்தகம் பாடப்புத்தகக் குழுவினால் அங்கீகரிக்கப்படத்தக்கத் தரம் வாய்ந்ததா, தகுதி மிக்கதா என்று நான் அறிய விரும்புகிறேன். இந்தப் புத்தகத்தில் முதல் பக்கத்தில் கவி ரவீந்திரநாத் தாகூரின் தேசிய கீதம் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த கீதத்தில் மொத்தம் ஏறத்தாழ 5 அல்லது 6 பிழைகள் இருக்கின்றன. அரசினர் எப்படி இந்தப் புத்தகங்கள் இருக்க வேண்டும் என்பதற்கான ஒரு மாதிரி பிரதியை புத்தகங்கள் வெளியிடுபவர்களுக்கு அனுப்பி யிருக்கிற அதே நேரத்தில்,

ஜன கண மன அதிநாயக ஐயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல வங்கா
விந்த்ய ஹிமாசல ஜமுனா கங்கா
உச்சல ஜலதி ரங்கா

என்றிருப்பதில், முதல் வரியில் 'ஜெயஹே' என்பதற்கு 'ஐயஹே' என்று தவறாக அச்சிடப்பட்டிருக்கிறது. ''விந்திய ஹிமாசல'' என்பதற்கு ''விந்த்ய ஹிமாசல'' என்றிருக்கிறது. ''யமுனா'' என்பதற்கு ''ஜமுனா'' என்றிருக்கிறது. பக்கத்திற்குப் பக்கம் இவ்வாறு அபரிமிதமான பிழைகள் இருக்கின்றன. இந்தக் குறள் நெறிக் கதைகள் என்ற புத்தகத்திலே பல இடங்களிலே ''த்'' கிடையாது. பல இடங்களில் ''ப்'' கிடையாது. பல இடங்களில் ''கொண்டான்'' என்பதற்கு ''கோண்டான்'' என்ற இருக்கிறது. ''பெற்றான்'' என்பதற்கு ''பேற்றான்'' என்றிருக்கிறது. ஐந்து பிழைகளுக்கு மேற்பட்டிருந்தால் அந்தப் புத்தகத்தை டெக்ஸ்ட்

புக் கமிட்டி அங்கீகரிக்கக் கூடாது என்று விதி இருக்கிறது. இம்மாதிரிப் புத்தகங்கள் எல்லாம் குப்பைத் தொட்டிகளுக்குத் தான் போகவேண்டுமேயொழிய, மாணவர்கள் கைக்குச் சென்றால் கல்வித் தரம் உயருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, கல்விக்கு அதிகாரியாக இருக்கிற இயக்குநர் நெ. து. சுந்தர வடிவேலு அவர்கள் கல்வியைப் பரப்புவதற்கான பணிகளிலே ஈடுபட்டிருக்கிறார். அதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்த நாட்டிலே இருக்கின்ற ஆசிரியர்கள் கல்வித் துறையில் இருக்கின்ற அதிகாரிகளைப் புகழ்வதும், அதிகாரிகளின் பிள்ளை குட்டிகளைக்கூடப் புகழ்வதான நிலைமை இருக்கிறது. நான் இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், அரசாங்கத்திலுள்ள அதிகாரிகள் பாராட்டப்படக்கூடிய அல்லது புகழப்படக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுமானால், அதனால் பாராட்டுகிறவர்களும், புகழுகிறவர்களும் சலுகைகள் பெறுவதற்கான வழி இருக்கிறது. சமூகத் தொண்டில் ஈடுபட்டவர்கள், பொது நல வாதிகள் புகழப்படுவதிலே அர்த்தம் உண்டு. அது வரவேற்கத் தக்கதும்கூட. ஆனால் அரசாங்கப் பணியில் இருக்கின்ற அதிகாரிகளைப் புகழ்வது அவ்வளவு நல்லதல்ல என்பதை ஒரு உதாரணம் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். சமீபத்தில் கல்வித் துறை இயக்குநரின் திருமகன் வள்ளுவன் இயற்கை எய்தியதைக் குறித்து நானும் அதிர்ச்சியடைந்தேன். அதுபற்றி என்னுடைய அனுதாபத்தை இப்பொழுதும் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக 'அவருடைய' திருமகன் வள்ளுவனுடைய படத்தை எல்லாப் பள்ளிகளிலும் வெளியிட வேண்டும்? திட்டைக்குடி உயர்நிலைப்பள்ளி மாணவர் குழு வள்ளுவனுடைய படத்தை வெளியிட வேண்டிய அவசியமென்ன? இவைகள் எல்லாம் கல்வி அதிகாரிகளிடத்திலே சலுகைகள் பெறுவதற்காக ஏற்பட்ட முயற்சிகளா என்பதை அறிய விரும்புகிறேன். ஓரத்தநாடு சரகம் ஆசிரியர்கள் குழு மூலமாக தஞ்சை மாவட்டத்திலே அவருடைய பிள்ளையின் நினைவு மலர் ஒன்றை வெளியிட்டிருக்கிறார்கள். கல்வி இயக்குநரும், ஆறு, குளம், பாக்குவெட்டி, இவைகளைப் பற்றி 10 புத்தகங்களை

வெளியிட்டிருக்கிறார். அப்புத்தகங்களை வெளியிட்ட முருகன் கம்பெனி என்ற கம்பெனிக்கும், இன்னொரு வெளியீட்ட கத்திற்கும் நீண்ட தொடர்பு இருக்கிறது. எஸ். எஸ். எல். ஸி. வகுப்புக்கு ஒவ்வொரு வருடமும் அவ்வெளியீட்டகத்தின் புத்தகங்கள் இங்கிலீஷ் நான்டீடெயில்டாகவும், தமிழ் நான்டீடெயில்டாகவும் வைக்கப்படுகின்றன. அதிகாரம் இவ்வாறெல்லாம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. இப்படி வேண்டியவர்களுக்கு சில சலுகைகளும், உரிமைகளும் வழங்கப்படுகின்றன என்பதைக் கண்டித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.



## மாநிலச் சட்டப் பேரவை, தேர்தல்கள் மானியம்

**உரை : 6** **நாள் : 09.03.1963**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே இன்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் தந்துள்ள வெட்டுப் பிரேரணைகளின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகள், ''மாநிலச் சட்டப்பேரவை, தேர்தல்கள் மாநிலத் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர், ஓய்வு உபகாரத் தொகைகள்'' ஆகிய நான்கு பகுதிகளில் கோரப்படுகிற மானியக் கோரிக்கைகள் ஆகும். சென்ற ஆண்டு இந்த மானியக் கோரிக்கை பற்றிய விவாதத்தில், ''சட்டப்பேரவை'' என்ற மானியத்தின் மீது தனியாகவும், மற்ற மூன்று பகுதிகள் மீது தனியாகவும் எடுத்துக்கொண்டு விவாதம் நடைபெற்றது. அந்தக் காரணத்தினால் சட்டமன்ற மானியத்தைப்பற்றிப் பேசுகிற பேரத்தில் நல்லதொரு அமைதியான சூழ்நிலையும், சட்ட மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஒருமித்த கருத்தோடு தங்கள் தங்களுடைய எண்ணத்தை எடுத்துத் தெரிவிக்கக்கூடிய சுமுகமான நிலைமையும் சென்ற ஆண்டு விவாதத்தில் ஒளிவிடக் கண்டோம். ஆனால், இந்த ஆண்டு, சரியாகவோ தவறாகவோ, விரும்பாத காரணத்தாலோ அல்லது நினைக்காத காரணத்தாலோ அல்லது அந்தக் கருத்தை யாரும் வெளியிடாத காரணத்தாலோ இந்த நான்கு மானியக் கோரிக்கைகளும் ஒன்றாக இணைந்துவிட்ட காரணத்தால், இந்த மானியக் கோரிக் கையின்

விவாதத்தில் இதுவரையில் இல்லாத சூடும் சுவைக்குறைவும், சுருதி பேதமும் ஏற்படுவதற்காக நான் மிக மிக வருந்துகிறேன்.

இந்தச் சட்ட மன்றம் நல்ல பாரம்பரியத்தைப் பெற்று வளர்ந்து வருகிற ஒரு சட்ட மன்றம் ஆகும். இந்த சட்டமன்றத்தினுடைய தலைவர்களாக இது வரையில் வீற்றிருந்தவர்கள் எல்லாம், இந்த மன்றத்தினுடைய பெருமையை மிகவும் சிறப்பாகக் காப்பாற்றக்கூடிய அளவிலும், நல்ல கனிவு காட்டியும், கருணை மழை பொழிந்தும், கட்சி வேறுபாடு இல்லாமலும், மறைமுகமாகக்கூட கட்சி எண்ணத்தை மனதிலே கொள்ளாத நிலையில் இந்த மாமன்ற நடவடிக்கைகளை நடத்திச் சென்றிருக்கிறார்கள். அவ்வழியிலே, சென்ற ஆண்டு தொடங்கி இதுவரையிலும். இந்த மாமன்றத்தை, சட்ட மன்றத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிற தாங்கள் மிகத் திறமையோடு நடத்தி வருகின்றீர்கள், சட்ட மன்றத்தின் நடவடிக்கைகளில் சூடு பிறக்கின்ற நேரத்தில் தணித்தும், சுருதி பேதம் ஏற்படுகிற நேரத்தில் அதை நிறைவு செய்தும், இந்த மன்றத்தை நடத்திச் செல்கிற தங்களுக்கும், தங்களுக்கு உறுதுணையாக இருக்கும் மன்றத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எங்களுடைய கட்சியின் சார்பாக மீண்டும் மீண்டும் நன்றியையும் வணக்கத்தையும் நாங்கள் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேம்.

விவாதங்கள்-அது வரவு செலவுத் திட்டத்தின் மீதுள்ள விவாதமாக இருந்தாலும், வேறு சில சட்டங்கள் நிறைவேற்றப்படும் விவாதமாக இருந்தாலும்-நல்ல முறையில் நடைபெறுகின்றன. நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்கு இறுதியில் உரையாற்றிய நேரத்தில், நேற்றை தினம் நம்முடைய மதிப்புக்குரிய நிதி அமைச்சர் அவர்கள் பேசும் போது எதிர்கட்சி எந்த அளவுக்குச் செயல்படுகிறது என்பதையும் எந்த அளவுக்குத் திறமையோடு இயங்குகிறது என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். அதைப்போலவே இன்றைய தினம் இந்த மானியத்தின் மீது பேசிய ஈரோட்டை சேர்ந்த கனம் காங்கிரசு உறுப்பினர் ஒருவர், எதிர்க்கட்சி யினுடைய திறமைகளை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டினார்கள். ஈரோட்டிலிருந்து எங்களுக்குப் பாராட்டுக் கிடைக்கிறது என்றாலே அதற்குத் தனி மகிழ்ச்சி உண்டு. அது கிடைக்கவேண்டிய இடத்திலிருந்து கிடைக்காமற்போனாலும்,

கிடைக்குமா என்று சந்தேகப்பட்ட இடத்திலிருந்து கிடைக்கிறது என்பதற்காக நாங்கள் மிக மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த மாமன்றத்தில் நம் சட்டமன்ற மாணியத்தைப் பற்றி இங்கு பேசுகிற நேரத்தில் குறிப்பிட வேண்டியது மிக மிக முக்கியமாக ஒன்று உண்டு. இந்தச் சட்ட மன்றத்தில் சில நேரங்களில் சூடு அதிகமாகி விவாதங்கள் நடைபெற்றன என்று நான் குறிப்பிட்டேன். அவைகளில் முக்கியமாக, இந்த மன்றத்திற்குச் சம்பந்தப்படாதவர்கள் வெளியிலே இருப்பவர் களுடைய பெயர்கள் அடிக்கடி இங்கு இழுக்கப்பட்டன. அந்தப் பெயர்கள் சொல்லப்படாவிட்டாலும், 'இவரைத்தான் குறிப்பிட்டு இருப்பார்கள்' என்று வெளியே இருப்பவர்கள் பத்திரிகை நிருபர்கள், தாங்களாகவே கற்பனை செய்து, பெயரைக்கூடப் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்கள். நேற்றையதினம் நிதி அமைச்சர் அவர்கள், 'வெளியிலே இருக்கிற ஒரு பெரியவர்' என்று குறிப்பிட்டார்கள். ஆனால், பத்திரிகையில் 'எந்த பெரியவரை இவர் குறிப்பிட்டார்' என்று பெயர் பொறித்து, தலைப்புச் செய்திகள் வந்திருக்கின்றன.

ஆகவே இந்த மன்றத்தில் பேசுகிற நேரத்தில் மன்றத்திற்குச் சம்பந்தம் இல்லாதவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில் மிகவும் அமைதியுடனும், எச்சரிக்கையுடனும் குறிப்பிட வேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பெரியவருக்காக நாங்கள் வக்காலத்து வாங்குகிறோம் என்றோ, அவர்களின் கொள்கையும் எங்கள் கொள்கையும் ஒன்றாகக் கலந்துவிட்டது என்றோ யாரும் தயவு செய்து கற்பனை செய்துக் கொள்ளக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த மாமன்றத்தில் திரு.ராஜகோபாலாச்சாரியார் படம் அழகாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்த படத்தின் கீழே தன் இருதயத்திலும், அறிவிலும் மகத்தானவர் என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு பெரியவரைச் சிறைச்சாலையில் தள்ள வேண்டுமென்று சொல்லுகிற அளவு இந்த மன்றத்தில் பேசப்படுவது மிகவும் வருந்தத்தக்கதாகும். இத்தகைய நிலை விவாதத்தில் நீடிக்குமானால் இந்த மன்றம் தன்னுடைய பழம் பெருமையையெல்லாம் இழந்துவிடக் கூடுமோ என்ற அச்சத்தினால் நான் இதைத் தங்கள்

கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். தாங்கள் அருள் கூர்ந்து, மனம் விரும்பி அத்தகைய சொற்களைச் சட்டமன்ற நடவடிக்கை ஏடுகளில் இருந்து எடுப்பதற்கு முயற்சி செய்வீர்களானால் நான் பெரிதும் நன்றி தெரிவிப்பதற்குக் கடமைப்பட்டவனாக இருப்பேன் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன். பொதுவாக சட்டமன்ற விவாதங்களில் நல்ல கண்ணியத்தை வளர்க்க வேண்டுமென்பதற்காகவே நான் இதை இங்கே எடுத்துக்காட்டுகிறேனேயொழிய, நம்முடைய பெருமைமிக்க பழைய மரபு, பண்பாட்டை ஒட்டி சட்டசபை நடவடிக்கைகள் செல்லவேண்டுமென்ற ஆசையின் காரணமாக இக்கருத்தை வெளியிடுகிறேனே தவிர வேறு இல்லை. இதன் காரணமாக சுதந்திரக் கட்சியோடு திராவிட முன்னேற்றக் கழகம் இணைந்து விட்டது என்று யாரும் எடுத்துக் கொள்ளக்கூடாது. சீன வெறியர்கள் இந்த நாட்டைத் தாக்குவதற்கு வட எல்லையில் கால் வைத்தவுடனே திராவிட முன்னேற்றக் கழகம் இந்திய சர்க்காரோடு இத்தாக்குதலை முறியடிப்பதற்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பது என்று முடிவு செய்தது. அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசோடு இணைந்துவிட்டது என்று சொன்னவர்கள் உண்டு. நல்ல வேளையாக அப்படிப்பட்ட எண்ணம் நிலைபெற்றுவிடாத அளவுக்கு இந்தச் சட்டமன்றத்தில் நடந்த விவாதங்கள் இரண்டையும் வேறுபடுத்தியே காட்டும் அளவில் அமைந்ததற்கு நான் ஓரளவு பெருமைப்படுகிறேன். சீன வெறியர்கள் நம்நாட்டைத் தாக்குவதற்கு முனைந்த போது முழு மூச்சுடன் அத்தாக்குதலை முறியடிக்க வேண்டும் என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் தன் ஒத்துழைப்பை இந்திய சர்க்காருக்கு அளிக்க முன்வந்ததே தவிர காங்கிரஸ் கட்சிக்கு அல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் அளிக்கின்ற ஆதரவு ஆளும் கட்சிக்கு அல்ல, நாட்டை ஆளும் அரசாங்கத்திற்கே ஆகும். இன்றையதினம் எதிர்கட்சிகளுக்கும் ஆளும் கட்சிக்குமே பலவகையில் அபிப்பிராயபேதம் இருந்தாலும் கூட பொது எதிரியான சீனர்களை எதிர்ப்பதற்கு சர்க்காரின் கை ஒருமுகமாக வலுப்பட வேண்டும் என்பதற்காக இந்த ஆதரவையும், ஒத்துழைப்பையும் நல்க முன் வந்திருக்கிறோம். இன்றைக்கும்கூடப் பார்க்கலாம். பெரிய ஆலயங்களில் க்ளோபுகள் கட்டித் தொங்கவிட்டிருப்பார்கள்.

அந்த க்ளோப் லஸ்தர் விளக்குகளைப் பார்த்தால் அந்த விளக்குகளுக்குள் ஒரு கண்ணாடி டம்ளரைப் பொருத்தி அதில் பாதி எண்ணை, பாதி தண்ணீர் விட்டுத் திரியை போட்டு எரியவிடுவது தெரியும். சூடேறி க்ளாஸ் உடைந்து விடக்கூடாது என்பதற்காக தண்ணீர் விடப்படுகிறது, மேலும் எண்ணெய் குறை வாக விட்டாலும் போதும், தண்ணீரின் மேல் மிதப்பதனால் மேலாகவே எண்ணெயிருக்கும் என்ற காரணங்களுக்காகத் தண்ணீர் விடப்படுகிறது என்று சொன்னாலும் எண்ணெய்யோடு தண்ணீர் கலந்தாலும் விளக்கு எரிகிறது. இருள் நீங்க அது பயன்படுகிறது. குறைவாக எண்ணெய் இருந்தாலும் அதை மேலாகக் கொண்டுவந்து நிறுத்தி விளக்கை எரித்து இருளைப் போக்கப் பயன்படுகிறது. இந்த அளவில் பார்த்தால் காங்கிரசை எண்ணெய் என்றோ, திராவிடமுன்னேற்றக் கழகத்தைத் தண்ணீர் என்றோ சொல்ல நான் முன்வரவில்லை. அதைப்பற்றி நாட்டம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. இந்த இரண்டும் இணைவதனால் இன்றைய தினம் நம் நாட்டைச் சூழ்ந்து கொண்டிருக்கிற போராகிய மேகத்தின் கரிய இருளை நீக்கப் பயன்படும். ஆலயங்களில் விளங்கும் க்ளோப், லஸ்தர் விளக்குகளைப் போன்று விளங்குகிற சர்க்கார், எல்லா கட்சியின் ஆதரவையும் பெற்று செயலாக ஒளிவிட்டு பொது எதிரியாகிய சீனர் தொடுத்த யுத்த மேகத்தினால் நாட்டைச் சூழ்ந்து கொண்டிருக்கும் இருட்டை விரட்டுகிற முயற்சிக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியின் சர்க்காரை ஆதரிக்க முன்வந்தது நாட்டிலே ஒரு பலம் பொருந்திய சுமுகமான நிலையை உண்டாக்கியிருக்கிற காட்சியைத்தான் காண்கிறோம்.

இந்த நேரத்தில் இடைத்தேர்தல் வர இருக்கிறது என்ற அறிவிப்பை தின ஏடுகளில் காண்கிறோம். மத்திய சர்க்கார் நியமித்துள்ள இந்தக் குழுவானது விரைவில் இடைத்தேர்தலை நடத்தித் தீரவேண்டுமென்று அறிக்கை சமர்ப்பித்திருப்பதாக அறிகிறோம். அதன்படி மூன்று நான்கு இடைத்தேர்தல்கள் வர இருக்கின்றன. இந்த இடைத்தேர்தல்கள் இப்போது அவசியம் தானா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். இடைத் தேர்தலே வேண்டாம் என்ற எண்ணத்தில் நான் கூறவில்லை.

முதல் அமைச்சர் தெரிவித்துள்ள கருத்துப்படி இந்த இடைத் தேர்தல் ஏற்பட்டுள்ள ஸ்தானங்களில் இருந்து சென்ற தடவை எந்த எந்த கட்சி அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக் கிறார்களோ அந்த அந்தக் கட்சியில் இருந்தே ஒருவரை நியமனம் செய்துவிடலாம் என்கிற யோசனை கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒன்றுதான். கட்சிகளின் சார்பாகத் தேர்தெடுக்கப்பட்டு வந்துள்ள இடங்களுக்கு இம்மாதிரி சங்கடம் இல்லாமல் நியமனம் செய்துவிடலாம். ஆனால் சுயேச்சை அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற தொகுதியாக இருந்தால் திரு. காமராஜ் அவர்களுடைய யோசனைப்படி யாரைத் தேர்ந்தெடுப்பது என்ற சங்கடம் எழக்கூடும் என்ற காரணத்தினால் எதிர்க்கட்சியிலுள்ள சிலரும் முக்கியமாக திராவிட முன்னேற்றக் கழகம் அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ஆயினும் இடைத்தேர்தல் வருகிற நேரம் எப்படிப்பட்டது? நாட்டில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்கிற காலத்தில், நெருக்கடி அவசர நிலைமை பிரகடனம் செய்யப்பட்டு எதிர்க்கட்சிகளின் பேச்சுரிமை கட்டுப் படுத்தப்பட்டு வைத்திருக்கிற காலத்தில், இருக்கிற உரிமையையும்கூட பறித்து சிறையில் பிடித்துக் தள்ளி வைக்க வேண்டும் இடைத் தேர்தலை நடத்துவது என்றால் அவசர நிலைமைப் பிரகடனத்தையாவது வாபஸ் பெறுங்கள். இல்லையென்றாலும் எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பூட்டு போடாமல் முன்பிருந்த பேச்சுரிமையையாவது வழங்கிவிட்டு இடைத் தேர்தலை நடத்துங்கள். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் உணர்வார்கள். இல்லாதபட்சத்தில் வீணான கலவரங்களும், குழப்பமும்தான் நாட்டில் ஏற்பட இடமுண்டாகும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சிந்தனையில் தேக்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இடைத்தேர்தல் நடத்தப்படுவதாக இருந்தால் பேச்சுரிமை வழங்கப்பட வேண்டும். பேச்சுரிமையைக் கட்டுப் படுத்திவிட்டு இடைத்தேர்தலை நடத்துவது சரியல்ல. அப்படி நடத்துவதானது வீண் குழப்பங்களையும், இப்போது ஏற்பட்டிருக்கிற அமைதி குலைவையுமே ஏற்படுத்த ஏதுவாக இருக்கும். இன்றைக்கு

ஊர்காவல் படை என்று அமைத்திருக்கிறோம். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஒரே சீரிய எண்ணத்தில் ஒன்றுபட்டிருக்கும் முயற்சியே ஊர்க்காவல் படை. இன்றையதினம் கட்சிப் பாகுபாடின்றி எல்லோரும் நமக்கெல்லாம் பொது எதிரியான சீனரை விரட்டியடிக்கவேண்டும் என்றே கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ் நிலையில் இடைத்தேர்தலைக் கொண்டுவந்து நிறுத்தினால் ஊர்க்காவல் படையினரும் அந்தக் கட்சி இந்தக் கட்சி என்று தேர்தலில் கலந்து கொள்ள இரண்டுபட வேண்டுமா? இதைப்பற்றியெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அடுத்தபடியாக தமிழக மாநிலத்தைப் பொறுத்த வரையில் தேர்தல் தலைப்பில் கூறவேண்டுமென்றால் 41 பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு செல்லும் நிலைமை இருந்தது. இனி மக்கள்தொகை கணக்குப்படி 41-இல் இருந்து அது 38 ஆகக் குறைகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை மக்கள் தொகை கணக்கை வைத்து ஏற்படுகிறது. மக்கள் தொகை 51-ல் இருந்து 61-ஆம் ஆண்டு முடிய பார்க்கிற போது நம் ராஜ்யத்தில் மக்கள் தொகையின் பெருக்கம் மிகமிகக் குறைவாக இருக்கிறது. அஸ்ஸாம் மாகாணத்தில் 34.3 சதம் ஏற்றமும், பீகாரில் 19.75 சதம் ஏற்றமும், மத்தியப்பிரதேசத்தில் 24.25 சதம் ஏற்றமும், கேரளத்தில் 24.55 சதம் ஏற்றமும், மேற்கு வங்கத்தில் 32.94 சதம் ஏற்றமும் ஏற்பட்டிருக்கிறபோது தமிழகத்தில் மட்டும் 11.73 சதம் ஏற்றம்தான் இருக்கிறது என்று கணக்கு காட்டுகிறது. மேற்கு வங்கத்திலும், அஸ்ஸாமிலும் மக்கள் தொகை அதிகமாகப் பெருகியிருக்கிறது என்பதை வெளியிடுகிற நேரத்தில் அங்கு சுரங்கத் தொழிலும், வேறு பல ஆலைத் தொழில்களும், எண்ணெய் சுரங்கங்களும் பெருகியிருக்கிற காரணத்தினால் மக்கள்தொகை பெருகியிருக்கிறது என்று காரணம் காட்டியிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தில் மக்கள்தொகை குறைந்திருப்பதற்குக் காரணம் புரியவில்லை, புதிராக இருக்கிறது என்று காரணம் கூறாமல் விடப்பட்டிருக்கிறது.

ஒருவேளை குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை மத்திய சர்க்காரின் உத்தரவுகளை ஒழுங்காக அமுல் நடத்தப்படுகிற முறையை மற்ற மாகாணங்களையெல்லாம்விட சிறப்பாகவும், ஒழுங்காகவும் கொண்டிருக்கிற இந்த மாநில சர்க்கார் அவ்விஷயத்திலும் அவர்களுடைய கட்டளையை நிறை வேற்றுகிற முறையில் மிகத் தீவிரமாக நடந்துகொண்டு விட்டார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக மக்கள் தொகை குறைந்துவிட்டதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. குறைந்து விட்டது என்பதற்காகக் கவலைப் படவில்லை. முன்னால் அது குறைந்ததனால் பார்லிமென்டில் நமக்குள்ள ஸ்தானம் 38 ஆகக் குறைந்துவிட்டதே என்பதுதான் கவலை. கனம் மதியழகன் குறிப்பிட்டது போல நமக்குள்ள எண்ணிக்கை குறைந்துவிடாதிருக்கவும், சட்டமன்ற உறுப்பினர்களின் தொகையை அதிகப்படுத்தவும், இப்போது நாம் அனுப்புவது 5 என்று இருப்பதை 7 என்றாவது உயர்த்தவும் முயற்சி எடுத்துக்கொண்டாகவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படி ஆக்கப்படுமானால் இந்த மன்றத்திலே 266 உறுப்பினர்கள் இடம் பெறக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, அதையும் இந்த அரசு மிகத் தீவிரமாகக் கவனிக்க வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாநகராட்சி மன்றத்தைப் பொறுத்தவரை ஒரு சில உறுப்பினர்கள் சிறைச்சாலைக்குச் சென்ற காரணத்தினாலோ, மாநகராட்சி மன்றத்திற்கு வரக் கூடிய சூழ்நிலை அவர்களுக்கு அமையாத காரணத்தினாலோ, திராவிட முன்னேற்ற கழகத்தைச் சார்ந்த ஒருவரும், சயேச்சை அங்கத்தினர் ஒருவரும், கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர் ஒருவரும், ஆக எட்டுப் பேர் தங்களுடைய பதவியை இழந்திருக்கிறார்கள். அப்படிப் பதவியிழந்தவர்களை மீண்டும் பதவியிலே அமரக் கூடாது என்று நீதிமன்றம் கட்டளையிட்டுவிட்டது. அந்தக் கட்டளையைப் பற்றி நான் ஆராய விரும்பவில்லை ; தகாது. அந்த எட்டுப் பேர் இல்லாமலே மாநகராட்சி மன்றம் நடைபெறுவது சாத்தியமாகலாம். ஆனால் தங்கள்

ANNA CENTENARY LIBRARY
CHENNAI - 600 005.

தொகுதிகளினுடைய உறுப்பினர்களைப் பெறாமல் இருக்கக்கூடிய அந்தப் பகுதி மக்களுடைய சிரமங்களை எண்ணிப் பார்த்து, இந்த அரசு ஒரு புதிய சட்டத்தின் மூலமாகவாவது அவர்களை மீண்டும் மாநகராட்சி மன்ற அங்கத்தினர்களாக இணைத்துக்கொள்ள வழி வகைகளைக் காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, இங்கு பேசப்படுகிற விஷயங்களுக்கு மந்திரி பதில் சொல்வதோடு அமைந்துவிடாமல், மந்திரிகள் கூறுகின்ற உறுதிமொழிகள் எல்லாம் செயல்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கு முன்பு உறுப்பினராகப் பணியாற்றிய ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள், ''இவைகளையெல்லாம் குறித்து வைத்துக் கொண்டு 'ஆகட்டும், பார்க்கலாம்' என்ற நிலைமையில் இருந்து விடாதீர்கள்; கேள்விகளுக்கு இருக்கும் மதிப்புகூட விவாதங்களுக்கு அளிக்கப்படுவதில்லை. இங்கே பேசப்படுகின்ற கருத்துக்களைக் குறித்து அலுவலாளர்களைக் கொண்டு தக்க நடவடிக்கைகள் அவற்றின் பேரில் எடுக்க வேண்டும். ஆகவே, வந்தனம், உறுப்பினர்களுக்கு நன்றி, என்று சொல்லிப் பேச்சை முடித்துக் கொள்ளாதீர்கள்'' என்று பலமுறை இந்த மன்றத்திலே எடுத்துக் கூறி இருக்கிறார்கள். விவாதங்களின்போது நல்ல உறுதி மொழிகளைத் தரும் அமைச்சர்கள், அந்த உறுதி மொழிகளை நல்லபடி செயல்படுத்த வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

G 002401
894.8115
TAM

## வேளாண்மைத் துறை மானியம்

உரை : 7 நாள் : 11.03.1963

**கலைஞர் மு. கருணாநிதி** : சட்ட மன்றத் துணைத்தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறைபற்றி கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர் தந்திருக்கிற வெட்டுப் பிரேரணைக்கு ஆதரவாக என்னுடைய கருத்துக்களை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

விவசாயத்துறையில் இந்த நாட்டு உழவர் பெருங்குடி மக்கள் எந்த அளவுக்கு இன்றைய தினம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரங்களை இந்த மன்றத்தில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மிக அழகாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்களுடைய குறைந்த வருமானமும், அவர்கள் தலையில் விழுந்திருக்கிற பெருத்த செலவுகளும் எந்த வகையில் உழவர்கள் குடும்பங்களில் வறுமைப் புயலை நுழைய விட்டிருக்கிறது என்ற விவரங்கள் இங்கே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் இருக்கிற ஏழை விவசாயிகளுடைய கூலியைக் குறைந்தபட்ச கூலியாக ஆக்க வேண்டுமென்பதற்கான காரணங்களை இந்த வெட்டுப் பிரேரணையை முன்மொழிந்து பேசிய கனம் உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். குறைந்தபட்ச கூலி விகிதம் இல்லாத காரணத்தினால் ஆங்காங்கு நிலப் பிரபுக்களுக்கும், தனிப்பட்ட விவசாயக் கூலிகளுக்கும் இடையே நடைபெறுகின்ற சச்சரவுகளில் காவல்துறையினர் கூடச் சரியான நீதியை வழங்க முடியாத அளவுக்கு பிரச்சினை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கண்கூடாகக்

காண்கிறோம். குறைந்தபட்சக் கூலி என்று நிர்ணயித்துவிடுவோமேயானால் ஏழை விவசாயிகளுக்கு இன்ன வேலைக்கு இன்ன அளவு கூலி கிடைக்கும் என்ற அளவில் ஒரு ஒழுங்கு ஏற்பட்டு கழனிகளில் சென்று களிப்போடு வேலை செய்வதற்கான வாய்ப்பும் வசதியும் ஏற்படும். ஆகவே இந்த மன்றம் விவசாயிகளுக்குக் குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிப்பதில் தீவிரம் காட்டவேண்டுமென்று இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேசுகின்ற நேரத்தில் நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டு ஒரு உணவுப் பொருளின் விலை கிராக்கியாக விற்பனையாகிற தென்றால் உடனடியாக அதே உணவுப் பொருளை மற்ற எல்லா விவசாயிகளும் உற்பத்தி செய்ய முன்வந்து விடுகிறார்கள். அதன் காரணமாக அந்த ஆண்டு அந்த உணவுப் பொருளின் விலை ஒரேயடியாகச் சரிந்துவிடுகிறது. இத்தகைய ஒரு சூழ்நிலைதான் நம் நாடெங்கும் ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்க நாட்டை எடுத்துக் கொண்டால் அங்கங்கே பயிரிடப்படுகிற விளை பொருள்களின் மதிப்பு திடீரென்று குறைந்துவிடாதிருக்க அங்கங்கே குறிப்பிட்ட அளவுக்குத்தான் குறிப்பிட்ட தானியங்களைப் பயிரிடலாம் என்ற அளவு நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. அதே மாதிரியாக இன்ன இன்ன பூமியில் இன்ன இன்ன அளவுக்குத்தான் இன்ன இன்ன பயிரை வைக்கலாம் என்ற அளவு நிர்ணயிக்கப்படுமானால் விவசாயப் பொருள்களின் விலையில் திடீர் சரிவு ஏற்படாது என்று சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பிட்ட பொருள்களைத்தான் விளைவிக்க வேண்டு மென்ற ஒரு கட்டுப்பாடும், அப்படிப்பட்ட ஒரு நிர்ணயமும் நம்முடைய நாட்டிலும் கொண்டு வரப்படுமானால் உணவுப் பொருள்களுடைய மதிப்புக் குறையாமலும், கிராக்கியாகச் சென்ற ஆண்டு விற்ற உணவுப் பொருள் இந்த ஆண்டு மலிந்து போகிற நிலைமையையும் தவிர்க்க முடியும். தவிர உற்பத்தி செய்கிற ஏழை விவசாயக் குடிமகன், உற்பத்திக்கும், தன் தேவைக்குமான வேறு பொருள்களை, வேறு பண்டங்களை வாங்குகிற நேரத்தில் அவைகளுடைய விலை பெரிதும் ஏற்றம் பெற்றிருக்கிற காரணத்தினால் அதைத் தாங்க முடியாத

அளவுக்கு, அவனுடைய இல்லத்தை இன்னல் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் காண்கிறோம். ஆகவே, அதை மனதில் கொண்டு, இந்த அரசினர் உணவு தானியப் பொருள்கள் விளைவிப்பதில் ஒரு நிர்ணயம் செய்வது சாலச் சிறந்ததாகும் என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன். விவசாயிகளுடைய வாழ்க்கை வேதனை நிரம்பியதாக இருக்கிறதென்பதையும், அவர்கள் பெறுகின்ற வருமானம் மிக மிகக் குறைவாக இருக்கிறதென்பதையும் எடுத்துக் கூறும் நேரத்தில், ஆளும் கட்சி உறுப்பினர்கள், அதிலும் குறிப்பாக, காங்கிரஸ் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள் - 'இந்த நாட்டின் கிராமப் புறங்களைப் போய்ப் பார்த்தால் எங்கு பார்த்தாலும் வளமை கொஞ்சுகிறது. பேன் இல்லாத தலை இருக்கிறது, சட்டை இல்லாத ஆள் இல்லை, ஈருளி கேட்டால் கிடைப்பதில்லை' என்று நாட்டினுடைய முன்னேற்றத்தைப்பற்றி எடுத்துக் கூறினார்கள். அதே நேரத்தில் அன்றாட ஏடுகளில், 'பட்டினியின் காரணமாகத் தங்களுடைய குழந்தைகளைப் பதைபதைக்கக் கொன்றுவிட்டுத் தாங்களும் தற்கொலை செய்து கொண்டார்கள்' என்ற செய்திகளும் வெளிவருகின்றன. 1961-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12-ஆம் நாள் நடைபெற்ற வழக்கில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் அளித்துள்ள தீர்ப்பினுடைய சாராம்சத்தை இங்கே எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

கரூரில் காமாட்சி என்ற 25 வயது கூட நிரம்பாத ஒரு பெண், தன்னுடைய இரண்டு குழந்தைகளைக் கொன்றுவிட்டு, தன்னுடைய மூத்த மகனைக் கொல்ல முயன்றதாகவும், தானும் தற்கொலை செய்ய முயன்றதாகவும் குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை அளிக்கப்பட்டார். ஆயுள் தண்டனையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் அப்பீல் செய்யப்பட்டாலும் கூட, உயர்நீதிமன்ற நீதிபதிகளான எம். அனந்தநாராயணனும், திரு. டி. வெங்கடாத்ரியும் வழக்கை விசாரித்து நீதி வழங்கிய நேரத்தில் குறிப்பிட்ட ஒரு வாசகத்தைப் படிக்க விரும்புகிறேன்.

''வாழ வழியின்றி வறுமையின் காரணமாகக் குழந்தைகளைக் கொன்றாள். இதற்குப் பரிகாரம் காணுவது சர்க்கார் பொறுப்பு. மக்கள் எப்படியாவது வாழ்ந்தால் போதும் என்பது சர்க்காரின்

இலட்சியமாக இருக்கக்கூடாது. அவர்கள் நல்வாழ்க்கை நடத்த வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது சர்க்காருடைய பொறுப்பாகும்.

குற்றத்தை மெய்ப்பிக்கும் சாட்சியங்களைப் பற்றியும் குற்றத்திற்குரிய தண்டனைகளைப்பற்றியும்தான் எம்மைப் போன்ற நீதிபதிகள் கவனிக்க வேண்டும். குற்றத்திற்கான காரணங்களைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு சீர்திருத்தவாதி அல்லது அரசியல்வாதியைச் சேர்ந்தது.

இந்த வழக்கில் செய்யப்பட்ட குற்றம் தனி மனிதர் செய்த குற்றமல்ல ; சமூகத்தையே உறுத்துகின்ற பரிதாபகரமான செயல். இம்மாதிரி நடைபெற அனுமதிக்கக்கூடாது.

ஏனைய நாடுகளிலே வறுமையில் உழல்பவர்களுக்கு, ஏதாவது வேலையளித்து, தேவையான ஊதியம் அளிக்கும் நிறுவனங்கள் ஏராளம் இருக்கின்றன.

நமது மாநிலம் விவசாயத்தை முக்கியமானதாகக் கொண்டது. சாகுபடி காலத்தில் வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட மாநிலத்தில் இது போன்ற நிறுவனங்கள் ஏற்படுத்துவதற்குத் தொல்லை இருக்காது. அப்படி ஏதாவது தொல்லைகள் இந்தப் பிரச்சினையில் ஏற்பட்டால் அதைச் சமாளிக்க வேண்டும். எதிர்காலத்திலாவது இது போன்ற நிகழ்ச்சிகள் ஏற்படக்கூடாது.

பரிதாபத்திற்குரிய இந்த அப்பீல் மனுதாரரும் அவருடைய கணவரும் நல்ல உடல் வலிமையுள்ளவர்களாக இருந்தும், பிச்சையெடுக்கத் துணியாத காரணத்தினால் இத்தகையதோர் இழிவான வழிகளில் இறங்க நேரிட்டதற்குத் தேவையில்லாதவாறு சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு'' என்று தங்களுடைய தீர்ப்பிலே இரண்டு நீதிபதிகளும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை நான் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுவதற்கு எடுத்துக் கூறுவதாகத் தயவுசெய்து கருதக் கூடாது. நீதிபதிகள் சொன்ன கருத்தை இந்த அரசினர் தங்கள் இதயத்தில் ஏற்றி, நாட்டிலே தற்கொலைக்கு வழி இல்லாதபடி, ஒரு முழக் கயிற்றை, ஒரு துளி விஷத்தை,

ஆழமான கிணற்றைத் தேடிக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான அபலைகளை, அனாதைகளை ஏழை உழவர்களைக் காப்பாற்ற இந்த அரசு முன்வரவேண்டு மென்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியத்திலே, கால்நடை வளர்ச்சியைப் பற்றிப் பலர் எடுத்துக் கூறினார்கள். அவைகளைப் பற்றி என்னுடைய கருத்தைத் தெரிவிக்கும் நேரத்தில், ''இந்தியக் கால்நடைகளின் எண்ணிக்கை பெரிதேயன்றி அவற்றின் தரம் உயர்ந்ததன்று. இந்தியப் பசு சராசரி 413 ராத்தல் பால் தருகிறது. பிற நாடுகளில் 2,000 முதல் 7,000 ராத்தல் வரை பால் தரும் பசுக்கள் உள்ளன. பெரும்பான்மையும் பயனற்ற கால்நடைகளாக இருப்பதால் அவை உழவர்களுக்குப் பாரமாகவே உள்ளன'' என்று இந்த மன்றத்தில் வீற்றிருக்கிற டாக்டர் பா. நடராசன் அவர்கள் ஒரு நூலில் குறிப்பிட்டிருப்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்த மாதம் இந்தியாவுக்கு விருந்தினராக வர இருக்கின்ற லார்டு லிட்டன் என்ற பெரியவர் ''ஹவுஸ் ஆப் லார்ட்சில்'' மார்ச் மாதம் 5-ஆம் தேதியன்று பேசியிருக்கும் பேச்சைக் குறிப்பிட விரும்புகிறேன்.

''இந்திய மக்களது நிலங்களில் உலா வந்திடும் பல்லாயிரக் கணக்கான மிருகங்கள் கொல்லப்பட இந்திய மக்களது மத நம்பிக்கை அனுமதித்தால் இந்தியாவின் உணவுப் பிரச்சினையின் பெரும் பகுதி நிவர்த்தி செய்யப்படலாம்'' என்று அவர் பேசியிருக்கிறார். இதை நான் எடுத்துச் சொல்லுகின்ற நேரத்திலே, 'பசுக்களைக் கொள்வதா? கால்நடைகளைக் கொல்வதா? என்று என்மீது சிலர் பாய்ந்திடக்கூடும். அவர்களுக்கு நான் ஒன்றை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்திய சர்க்காருடைய செலவில், விவசாய முறைகளையும், கால்நடைகளையும் பற்றி அறிந்து வருவதற்காக அமெரிக்கா சென்று திரும்பி, அருமையான புத்தகம் ஒன்றையும் எழுதியிருக்கிறார், பழைய கோட்டையைச் சேர்ந்த கனம் பார்வதி அர்ச்சுனன், எம்.எல்.ஏ., அவர்கள். அவர்கள், 'எனது, வெளிநாட்டு அனுபவம்' என்ற நூலில்.

''அமெரிக்காவில் பாலுக்குத் தகுதியற்றதாக இருக்கும் பசுக்களையெல்லாம் ஒழித்து விடுகிறார்கள். அதனால் அந்த விவசாய மக்கள் பொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்கு இந்த முறை ஓரளவுக்குத் துணை புரிகிறது.'' என்று கூறிவிட்டு, அடுத்து அம்மையாருக்கு இந்தியாவின் மத நம்பிக்கை பற்றிய பயம் வருவதன் காரணமாக -

''சர்க்கார் இது பற்றி நன்கு சிந்தித்து வீணாகும் நாட்டின் பொருளாதார விரயத்தைத் தடுக்க வேண்டும். பசுக்களைத் தெய்வம் எனத் துதிக்கும் நமது நாட்டில் இது விஷயத்தில் குறிப்பாகவும் ஆழ்ந்தும் சிந்தித்து ஒரு முடிவை எடுக்க வேண்டும். அப்போதுதான் விவசாயத் துறையில் நாம் கணிசமான அளவு முன்னேற்றத்தைக் காண முடியும்'', என்று அம்மையார் அவர்கள் அந்த நூலில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையும் மனத்திலே வைத்து, இந்த நாட்டின் விவசாயி களுடைய நிலை உயர கால்நடை வளர்ச்சி எவ்வளவு இன்றியமையாதது என்பதை உன்னிப்பாக பார்த்து, எதிர்க்கட்சி சார்பில் எடுத்துரைக்கப்பட்ட - குறைந்தபட்ச கூலி நிர்ணயம் - விளைபொருள்களை விளைவிக்க நிர்ணயம் செய்யவேண்டும் என்பது பற்றிய கருத்துக்களையெல்லாம் மனத்தில் கொண்டு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

## ஆதி திராவிடர் நலத்துறை மானியம்

**உரை : 8** நாள் : 15.03.1963

**கலைஞர் மு. கருணாநிதி** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்று இந்த மன்றத்திலே வைக்கப்பட்டுள்ள ஆதி திராவிடர் நல மானியத்தின்மீது எங்களுடைய கட்சியைச் சேர்ந்த கனம் அழகுமுத்து அவர்கள் வைத்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பல ஆண்டு காலமாகச் சமுதாயத்தினுடைய அடித்தளத்திலே அழுத்தப்பட்டு முன்னேற வழியில்லாமல் முடங்கிக் கிடந்த ஒரு சமுதாயத்திற்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டு மென்கின்ற புரட்சிகரமான நோக்கம் இந்தியாவில், குறிப்பாகவும் சிறப்பாகவும் தமிழகத்தில், பல ஆண்டு களுக்குமுன்பே தோன்றியிருக்கிறது என்பதனை, இந்த உணர்ச்சியைத் தட்டி எழுப்பிய பெருமை ஏதோ ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு என்று இல்லாமல், பழங்குடி மக்களுடைய முன்னேற்றத்தில் அக்கறை கொண்டிருக்கிற தமிழகத்தைச் சேர்ந்த சான்றோர்கள் உணர்ந்திருக்கிறார்கள். எல்லா அரசியல் கட்சிகளுமே அந்தக் கொள்கையை ஒத்துக்கொண்டும், அதற்காகப் போராடிக்கொண்டிருக்கிறது என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். அந்த வகையில் இந்த மான்யத்தில், ஹரிஜனங்களுக்காக, பின் அடைந்திருக்கிற மக்களுக்காக, ஆதிவாசிகளுக்காக, ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 3 கோடியே 90 லட்சம் ரூபாய் என்பது போதுமானது அல்ல என்பதை எதிர்த் தரப்பிலிருந்து மாத்திரமல்ல, ஆளும் கட்சித் தரப்பில் இருக்கிற

தோழர்கள் பலரும் இங்கே அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். வெட்டுப் பிரேரணை என்பது இந்த

மன்றத்திலே எதிர் கட்சியினரும், ஆளும் கட்சியினரும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கு ஒரு விவாதத்தை அமைப்பதற்காகப் பயன்படுத்துகிற முறையே அல்லாமல், இத்தனை ரூபாயை வெட்ட வேண்டும் என்று நாங்கள் குறிப்பிட்டிக்கின்றது, மான்யத் தொகையிலிருந்து, உண்மையிலேயே வெட்ட வேண்டும் என்ற பொருளில் அல்ல. அந்த வகையில் ஆளும் கட்சி அன்பர்கள் அத்தனை பேருமே இந்தத் தொகையை அடுத்த ஆண்டிலாவது மேலும் கூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறினார்கள். நாங்கள் இந்த மான்யத்தைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் குறைபாடுகளை எடுத்துச் சொல்லுகிறோம் என்றால், தேவையானவைகளை எடுத்துச் சொல்லுகிறோம் என்றால், அரசினரைக் குற்றம்சாட்ட வேண்டுமென்பதற்காக அல்ல என்பதை அரசினர் உணர்ந்து, மேலும் மேலும் பின்னடைந்து கிடக்கிற மக்களுக்கு, சமுதாயத்தினுடைய கீழ்த்தட்டிலே இன்றைய தினம் கேவலமாக ஆக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு, புதிய தெம்பும், நல்ல வாழ்வு வளமும் அளிப்பதற்காகத்தான் நாங்கள் எடுத்துக் கூறுகிறோம் என்று உணர்ந்து அந்த நிலையில் காரியங்களை அணுகவேண்டுமென்று எடுத்துக்கூறி கொள்ளுகிறேன்.

இந்த ஹரிஜன நலத்துறை அலுவல்களை கவனிப்பதற்காக ஒரு துறை ஏற்பாடு செய்யப்பட்டு இந்த இலாகா சம்பந்தப்பட்ட அளவிலே, கல்வி, வீட்டு வசதி, பொதுச் சுகாதாரம், விவசாயம், குடிசைத் தொழில் என்ற பல தலைப்புகளில் தங்கள் காரியங்களை ஆற்றி வருகிறார்கள். நல்ல நோக்கத்திற்காகச் செலவழிக்கப்படுகிற இந்த மானியத் தொகை யாருக்காக செலவழிக்கப்படுகின்றதோ அவர்களுடைய இருண்டு கிடக்கின்ற இல்லங்களில் கதவைத் தட்டி, ''இந்தா உனக்கு இன்பம்'' என்று சொல்லப்படுகிற அளவுக்குப் பயன்படுவதாக இருக்கிறதா என்று கேட்டால், எதிர்கட்சியில் இருக்கிற நாங்கள் மட்டுமல்ல, ஆளும் கட்சியில் இருக்கிற அவர்கள் உள்ளத்தில் கை வைத்து எண்ணிப் பார்க்கிற நேரத்தில், ''இல்லைதான், இது அணுகவேண்டியவர்களை அணுகவில்லை'' என்பதை நிச்சயமாக ஒப்புக்கொள்வர்கள்.

கல்வித் துறையில் நான் இங்கே சில கருத்துக்களை எடுத்துக் கூற விரும்புகிறேன். கல்வியைப் பொறுத்தவரையில் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்படுகிற முறை பாராட்டப்படவேண்டிய ஒன்று என்றாலும், இந்த உபகாரச் சம்பளம் அளிக்கப்படுகிற முறையில் சில மாறுதல்களைச் செய்யவேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன். உபகாரச் சம்பளம் பெறுகிற மாணவன் புதிதாகச் சேருகின்ற நேரத்தில் உபகாரச் சம்பளம் பெறத் தகுதி வாய்ந்தவர்கள் என்று நற்சான்றிதழ் பெற்றுத்தந்து, பிறகு உபகாரச் சம்பளம் தரத் தொடங்குகிறார்கள். இடையில் வகுப்பிலே தேர்வு பெறாமல் தோல்வி அடைந்து விடுவார்களானால், அவர்களுக்கு மீண்டும் உபகாரச் சம்பளத்தைப் புதுப்பித்துக்கொள்ள நற்சாட்சிப் பத்திரம் தேவைதான். ஆனால், இப்போது இருக்கின்ற முறையில் ஆண்டுதோறும் உபகாரச் சம்பளம் பெறுவதற்கு நற்சாட்சிப் பத்திரத்தைப் புதுப்பித்துக்கொள்ளும் சிக்கல் அந்த மாணவனுக்கு ஏற்படுகிறது. தேர்விலே தோல்வி அடையாமல் வெற்றி பெற்றாலும் இந்தச் சிக்கலிலிருந்து விடுபடமுடியவில்லை. ஆசிரியரிடத்திலும், தாசில் தாரிடத்திலும், போலீஸ் இன்ஸ்பெக்டரிடத்திலும், சட்டமன்ற உறுப்பினர் அல்லது நகரசபை உறுப்பினர்கள் ஆகிய அவர்களிடத்திலும் நற்சாட்சிப்பத்திரத்தைப் பெற்று அதற்குப்பின் அந்த மாணவன் ஹரிஜன நலத்துறை அதிகாரியிடத்திலிருந்து உபகாரச் சம்பளத்தை பெறுகிற வாய்ப்பை அடைய முடிகிறது. இதற்கு இடையில் அவன் படுகின்ற இன்னல்கள் எவ்வளவு என்று, அவனுக்கு ஏற்படுகிற சிரமங்கள் எவ்வளவு, விரயம் ஆகின்ற நேரம் எவ்வளவு என்று எண்ணிப் பார்த்து, இனியாவது ஆண்டுதோறும் இப்படி புதுப்பித்துக் கொள்ளும் முறையை நிறுத்தி, ஒரு முறை உபகாரச் சம்பளத்தைப் பெறுவதற்குத் தகுதி பெற்ற மாணவன் என்றால், தொடர்ந்து அதை அளிக்க வசதி செய்து தரவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வியை பொறுத்தவரையில் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற இந்த நல்லேட்டில், மிக அழகாக

நம்முடைய அமைச்சர் கக்கன் அவர்கள் தந்திருக்கிற இந்தப் புத்தகத்தில், ஹரிஜனங்களுடைய முன்னேற்றம் ஏறத்தாழ 8 வகையிலே எப்படி முன்னேறியிருக்கிறது என்பதற்கான எழிலோவியம் தீட்டப்பட்டிருக்கிறது. அப்படி ஹரிஜனங் களுடைய பள்ளிக்கூடம் எப்படி இருக்கிறது என்று இந்தப் படத்தைப் பார்த்து புரிந்து கொள்ளுகிறவர்கள், நேர்த்தியான கட்டிடம் என்றுதான் கூறுவார்கள். ஆனால் பல இடங்களிலே இப்படிப்பட்ட ஓட்டுவில்லைக் கட்டிடம் இல்லாமல் கூரைக் கட்டிடத்தில் கற்றுத் தருகின்ற நிலையும், திண்ணைப் பள்ளிகளாக இருக்கக்கூடிய நிலையிலும் இருக்கின்றது. அது மாற்றப்படவேண்டும். கல்விக்கூடங்களில் கல்வி பயிலுகிற ஹரிஜன மாணவர்கள், பின் தங்கிய மாணவர்கள் அவர்கள் கல்வி பயிலுகிற நேரத்தில் ஆபத்து விளைவிக்காத கட்டிடங்கள், விபத்துக்களை அளிக்காத கட்டிடங்கள் தேவை என்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஹரிஜன நல விடுதிகளில் 93 விடுதிகளை அரசினர் ஏற்று நடத்துகிறார்கள், மற்றவைகளை தனிப்பட்டவர்கள் நடத்துகிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. சென்ற ஆண்டு விவாதத்திற்கு பதில் அளித்த அமைச்சர் அவர்கள் மற்ற விடுதிகளை அரசினர் எடுத்து நடத்தாததற்குக் காரணம் அந்த விடுதிகளில் ஊழல்கள் எதுவும் இல்லாது நடைபெறுகிறது, ஆகையால் நாங்கள் ஏற்று நடத்த வேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் எல்லா விடுதிகளும் ஊழல் இல்லாமல் ஒழுங்காக நடைபெறுகிறது என்று சொல்ல முடியாது. சில குறிப்பிட்ட விடுதிகளை நான் இங்கே எடுத்துச் சொல்ல முடியும். விவரம் கேட்டால் அவைகளை அரசாங்கத்திற்கு விளக்க முடியும். உதாரணத்திற்கு ஒன்று சொல்லுவேன், குறிஞ்சிப்பாடியிலுள்ள ஹரிஜன நல விடுதி ஊழல் நிறைந்ததாக ஆகிவிட்ட காரணத்தினால், உடனடியாக அரசினர் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளெல்லாம் எழுதி, கடைசியில் மந்திரிகள் கைக்கு வந்த நேரத்தில் கைவிடப்பட்டது என்ற செய்தி உள்ளபடியே சோகத் தகவல்தான் என்பதை இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது.

ஹரிஜன வீட்டுப் பெண் குழந்தைகளுக்கு உடை வழங்குகிற திட்டம் இருக்கிறது. ஆனால் ஆண் பிள்ளைகளுக்கு உடை வழங்குகிற திட்டம் இல்லை என்பதை நாங்கள் மாத்திரமல்ல, ஆளும் கட்சியில் இருக்கிற உறுப்பினர்களும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

அடுத்து, இந்தத் துறையில் வீட்டு மனைகள் வழங்குகிற திட்டம். இவர்கள் வாழ்வதற்கான மனைகளை ஆர்ஜிதம் செய்வதற்காக இன்றைய தினம் திட்டமிட்டு அந்த வகையிலே எவ்வளவு மனைகளை ஆர்ஜிதம் செய்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எத்தனை காலனிகளுக்கு என்று சொன்னால் ஒருவேளை தருகின்ற புள்ளிவிவரம் குறைவாகத் தோன்றி தேர்தல் நேரத்தில் பயன்படாமல் போய்விடும் என்று கருதினார்களோ என்னவோ, எத்தனை மனைகள் என்ற கணக்கைத் தந்திருக்கிறார்கள். 1961-62ல், 18,769 வீட்டு மனைகள் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றும், 19,227 மனைகள் அளிக்கப்பட்ட வீட்டு மனைகளின் மொத்த எண்ணிக்கை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எத்தனை காலனிகளுக்கு வழங்கப்பட்டது என்று தெரியவில்லை. இடையிடையே ஏற்படுகிற பொறுப்பற்ற செயலை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. அரக்கோணம் தாலுகாவின் அருகில் பாடி என்ற கிராமம் இருக்கிறது. பழங்காலத்தில் அது ஒரு ஜமீன் கிராமம். அந்த கிராமம் இன்றைய தினம் அரசினர்களுக்குச் சொந்தமாக ஆக்கப்பட்டிருக்கிற கிராமம். அந்த கிராமத்தில் 12 ஏகரா நிலம் ஒரு வருட காலமாக ரெவின்யூ டிபார்டுமெண்டின் கீழ் இருந்துவருகிறது. அந்த 12 ஏகரா நிலத்தைத் தங்களுக்கு ஆர்ஜிதம் செய்து தரவேண்டுமென்று அங்கிருக்கிற ஹரிஜன மக்கள் மனுப்போட்டு கோரிக்கை விடுத்திருந்தார்கள். ஆனால், அந்த ஊரிலுள்ள மணியக்காரர் அந்த நிலம் தனக்குத்தான் சொந்தம் என்று வாதாடி, இல்லை என்று சொல்லி தங்களுக்குத் தேவை என்று வேண்டுகோள் விடுத்த ஹரிஜன மக்கள் 50 பேரை போலீஸ்காரர்கள் பிடித்து சிறைச் சாலையிலே அடைக்கச் சொல்லியிருக்கிறார்கள். இது ஒன்று இரண்டு மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற சம்பவமாகும். இது எப்படி இருக்கிறது என்றால், சர்க்கார் நிலத்தை ஆர்ஜிதம் செய்யவேண்டும் என்ற

நல்ல நோக்கம் கொண்டிருந்தாலும், இடையிலே இப்படிப்பட்டவர்கள் இருந்து அதைத் தடுக்கிறார்கள். சிதம்பரம் நடராசரை நந்தனார் வழிபட விரும்பியபோது, நந்தி மத்தியில் வழிவிட மறுத்தது என்று கதை உண்டு. பிறகு ''சற்றே விலகி இரும் பிள்ளாய்'' என்று கூற, நந்தி விலக கதை முடிந்தது. நான் அரசினரைக் கேட்டுக்கொள்கிறேன், இப்படிப்பட்ட மணியக்கார நந்திகளைப் பார்த்து ''சற்றே விலகி இரும் பிள்ளாய்'' என்று எச்சரிக்கை விடுவது அரசினரின் பொறுப்பாகும். இல்லாவிட்டால், நல்ல நோக்கங்களோடு தீட்டப்பட்ட திட்டங்கள் ஹரிஜனங்களுடைய வீடுகளுக்குப் போய் சேராமல், இடையிலே தடுக்கப்பட்டுவிடும் என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அஃதேபோல், ஹரிஜன காலனிகளுக்கு மின்சார வசதி என்ற அளவிலே, 1957-58ல் மின்சார வசதி பெற்ற ஹரிஜன காலனிகளின் தொகை 90, அதற்காக அளிக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 1,54,818 என்று குறிப்பிடப்பட்டிருந்தது. 1961-62ல் 235 காலனிகளுக்கு அளிக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 1,50,000 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்ன காரணம் இந்தச் செலவு குறைந்ததற்கு என்ற விளக்கம் இதில் இல்லை. அந்த விளக்கத்தை கனம் அமைச்சர் அவர்கள் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களுக்கு மின்சார வசதி, பொது சுகாதார வசதி, இவைகளோடு, விவசாயத்திற்கான வசதிகளைச் செய்து கொடுப்பது என்ற அளவில், அவர்களுக்கு மாடு, மற்ற விவசாயக் கருவிகள் இவைகளை வாங்குவதற்காக விவசாயிகளுக்கு, ஹரிஜனங்களுக்கு, ரூ. 400 கடனாக அளிக்கப்படுகிற திட்டம் இருக்கிறது. ஆனால், அந்தக் கடன் அவர்களுக்குக் காலத்திலே கிடைப்பதில்லை. இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், கடன் பெற தகுதி உள்ளவர்களுக்கு 2 ஏகரா சொந்தமாக இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. குத்தகைக்கு வைத்து பயிரிடுபவர்களுக்கு இந்த ரூ. 400 கடன் கிடைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. அப்படிப்பட்டவர்களுக்கு கடன் கிடைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கவேண்டும். அவர்கள் கடன் பெறுவதற்கு அங்குள்ள மணியக்காரர்கள் கையெழுத்து

பெறவேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறது. மணியக்காரர்களுக்கும் அங்குள்ள மக்களுக்கும் ஏதாவது சொந்தத் தகராறு இருக்குமானால், உள்ளபடியே இந்தக் கடனைப் பெறுவதற்கு தகுதியுடையவர்கள்கூட பெறக்கூடிய நிலைமை இல்லாமல் அற்றுப் போய்விடுகிறது. அவர்களுடைய குத்தகைச் சீட்டு, கிஸ்தி கட்டியதற்கான ரசீது இவைகளை வைத்து கடன் தொகை அளிப்பதற்கான நிலைமைகளை ஆராய்ந்து, கடன் தொகை அளிக்கவேண்டுமென்று நான் அரசினரை மிக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

3 கோடி 90 லட்ச ரூபாய் செலவழிக்கப்படுகிறது என்று சொல்லப்படும் பொழுது, பார்ப்பதற்கும், கேட்பதற்கும் பளபளப்பான திட்டங்களாக அவைகள் இருக்கின்றனவே தவிர, அவைகள் போய்ச் சேரவேண்டிய இடத்தில் போய்ச் சேரவில்லை என்பதை அரசினர் மிக மிக கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். முன்பு இந்த மன்றத்தில் வீற்றிருந்த எங்கள் கட்சித் தலைவர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்தில் ஹரிஜன மான்ய விவாதத்தின்போது பேசுகையில், உதாரணமாகக்கூட ஒன்று குறிப்பிட்டார்கள். இவ்வளவு பணம் செலவழிக்கின்றீர்களே, அது எங்கே போய்ச் சேருகிறது என்று நாங்கள் கேட்கிற நேரத்தில், எங்கே போய்ச் சேருகிறது என்ற ஆச்சரியம் உங்களுக்கே ஏற்படுகிறது. இது எப்படியிருக்கிறது என்றால், ஒரு அரசன் ''நான் செலவழிக்கிற பணம் என்ன மக்களிடத்தில் போய்ச் சேருகிறதா?'' என்று கேட்க, அமைச்சர் அந்த அரசரைப் பார்த்து, அவருடைய கையிலே பனிக்கட்டியைக் கொடுத்து, ''இதை 10 பேர் கையிலே கொடுங்கள்'' என்று குறிப்பிடுகிறார். அரசர் 10 பேர் கையில் கொடுத்துவிட்டு, கடைசியில் அது அரசர் கைக்கு வருகிற நேரத்தில் ஒரு துளி நீர்தான் மிச்சம் இருந்தது. இப்படி 10 பேர் கையிலே கொடுத்த பனிக்கட்டிபோல் இன்றைய தினம் அரசினர் ஹரிஜனங்களுக்காக செலவழிக்கப்படுகிற பணம் போய்ச் சேருகிறது என்று கருதுகிறேன் என்று சொன்னார். பெரிய தொகை ஹரிஜனங்கள் கைக்கு போய்ச் சேருவதில்லை. தொகை பெரும் தொகை என்று அரசினர் குறிப்பிடலாம். இது போதாத தொகை என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே குறிப்பிட்டார்கள் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

ஹரிஜனங்களுக்குக் கட்டித்தரப்படுகின்ற வீடுகள் எத்தனை நாட்களுக்கு நிற்கின்றன? ''நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே'' என்று சுவரைப் பார்த்து அல்லவா கேட்கவேண்டியிருக்கிறது. இதே மன்றத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. கவுந்தப்பாடியில் ஏழை ஹரி ஜனங்களுக்காக கட்டப்பட்டிருந்த வீடு திறப்பு விழாவுக்கு முன்னால், ஒரு நாள் பெய்த மழையிலேயே, இருந்த இடம் தெரியாமல் குட்டிச்சுவராகிவிட்ட செய்தி இந்த மன்றத்திலேயே எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. அது போலவே, தென் ஆற்காடு மாவட்டத்தில் கோண்டூரிலும் - கடலூருக்குப் பக்கத்து கிராமம் - கச்சரப்பாக்கத்திலும் - தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கிராமம் - கட்டப்பட்ட ஹரிஜனக் காலனிகளிலுள்ள வீடுகளெல்லாம் இடிந்து பாழடைந்து போய்விட்டன. அண்மையில் திருவண்ணாமலைத் தொகுதியில் இடைத் தேர்தல் வருகிறது. அமைச்சர் அவர்கள் அப்பொழுது அத்தகைய காட்சிகளைப் பார்ப்பதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படும். பல ஹரிஜனக் காலனிகளிலுள்ள வீடுகள் இடிந்து பாழடைந்து இருக்கிற நிலைமையைக் காணலாம். இந்த நிலைமையிலே ரூ.1,000 வீடு கட்டுவதற்காக வழங்கப்படுகிற அந்தப் பணம் போதாது. அவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு ரூ. 3,000 கொடுக்கவேண்டும் என்று இந்த மன்றத்தில் அடிக்கடி திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சார்பிலே எடுத்துக் கூறியிருக்கிற கருத்தை நான் மேலும், மேலும் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, ஹரிஜனங்களில் மதம் மாறிய ஹரிஜனங்கள் என்ற ஒரு பிரிவு இருக்கிறது. அவர்கள் மதம் மாறிவிட்ட காரணத்தினாலேயே, சமுதாயத்தில் பெறவேண்டிய சலுகைகளைப் பெற்று மிக்க சந்தோஷமாக வாழ்கிறார்கள் என்று எண்ணுவது தவறு. ராமன் ராபர்ட்டாக மாறி விடலாம். நெற்றியில் விபூதி பூசிக்கொள்வதற்குப் பதிலாக கழுத்தில் சிலுவை அணிந்திருக்கலாம். ஆனால் அவன் அதே சேரியில்தான் சாக்கடை ஓரத்தில், பன்றிகளும், நாய்களும் நடமாடுகின்ற பயங்கரமான இடத்தில் இன்றைய தினம் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அப்படிப்பட்டவர்களுக்கு இன்று தனித்

தொகுதி முறையில்கூட இடம் இல்லாமல், அவர்கள் மதம் மாறிய ஹரிஜனங்கள் என்ற பெயரால் ஒதுக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு இன்று தனித் தொகுதி முறையில்கூட இடம் இல்லாமல், அவர்கள் மதம் மாறிய ஹரிஜனங்கள் என்ற பெயரால் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவில்லை. அவர்கள் மதம் மாறியிருக்கலாமே தவிர, அவர்களுடைய வாழ்க்கையில் வளம் ஏற்படவில்லை. அவர்கள் இன்றைக்கு அடித்தட்டிலேயேதான் கிடக்கிறார்கள் என்பதை மனதில் கொண்டு, அவர்களை உய்விக்க தனித் தொகுதி முறையில் அவர்களுக்கு இடம் தரவேண்டுமென்பதையும் நான் இந்த மன்றத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன். அவர்களுடைய வீடுகள், சேரிகள் என்ற பெயரால், காலனிகள் என்ற பெயரால், நகரங்களிலும், கிராமங்களிலும் எங்கேயோ ஒரு மூலையில் கட்டிக்கொடுப்பது என்ற நிலைமை இருக்கிறது. ஹரிஜனங்களுக்கு கட்டிக் கொடுக்கப்படுகிற காலனிகள், புதிய காலனிகள் கட்டப்படுகிற நேரத்திலாவது, ஊருக்கு நடுவில் கட்டினால் என்ன? ஏன் மறுபடியும் மறுபடியும் மூலைக்குத் தள்ளுகிறார்கள்? ஏன் சாக்கடை ஓரத்திற்கு தள்ளுகிறார்கள்? சாக்கடை ஓரத்தில் குடியிருக்கச் சொல்லுகிறார்கள்? ஊருக்கு நடுவில் இருக்கலாகாதா? அக்கிரஹாரத்திற்குப் பக்கத்தில் சேரி இருக்கக்கூடாதா? முதலியார் வீடுகளுக்குப் பக்கத்தில் அவர்களுக்கு வீடுகள் இருக்கக்கூடாதா? செட்டியார் வீடுகளுக்குப் பக்கத்தில் அவர்களுக்கு வீடுகள் இருக்கக்கூடாதா? ஏதோ தப்பித் தவறி எம்.எல்.ஏ. ஆகிவிட்ட காரணத்தினால், தப்பித் தவறி படித்துவிட்ட காரணத்தினால் அவர்கள் வேண்டுமானால் ஊருக்கு நடுவிலே குடியிருக்கிறார்கள், அவர்களால் முடிகிறது. ஆனால், வாழ்க்கையிலே கடைக்கோடியில் இருக்கிற சாதாரண இந்த நாட்டு ஹரிஜனத் தோழன் இன்றைக்குப் புறக்கணிக்கப்பட்ட நிலைமையில்தான் இருக்கிறான். அண்ணல் காந்தி சொன்னார், ஆலயங்களைத் திறந்துவிட்டோம் என்று பெருமை பேசுவதிலே அர்த்தமில்லை. ஆனால், இந்த ஆலயங்களில், இந்த நாட்டில்

இருக்கிற ஹரிஜனங்கள் சென்று வழிபடுவதற்கு சட்டம் துணை புரிகிறதே தவிர, வழிபடுவதற்கு இன்றைய தினம் நடவடிக்கை இருக்கிறதா, நடைமுறையில் அது நடக்கிறதா, இல்லை, அது மாத்திரமல்ல. ஆலயங்களுக்குச் சென்று ஆண்டவனைத் தொழலாம் என்று ஹரிஜன மக்களுக்கு உரிமை அளிக்கப் பட்டிருக்கிறதே தவிர, ஆண்டவனுக்கு அருகாமையில் இருந்து, ஆண்டவனுக்குப் பூஜை செய்வதற்கும், ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்வதற்கும். . . . .

Srimathi T.N. ANANDANAYAKI : Sir, on a point of order, the hon. Member, Sri M. Karunanithi never goes to the temple. How can be know about the worship and other things?

Mr. SPEAKER : It is not a point of order. The hon. Lady Member, Srimathi T.N. Anandanayaki, I think is a lawyer and she must know what is a point of order. It is not at all a point of order. Let the hon. Lady Member resume her seat.

**கலைஞர் மு. கருணாநிதி** : கனம் தலைவர் அவர்களே, கொலை செய்தவர்கள்தான் கோர்ட்டுக்குப் போகவேண்டும் என்பதல்ல. கொலைக் குற்றங்களில் வாதாடுவதற்கும் கோர்ட்டுக்குப் போகலாம் என்பது அங்கத்தினருக்குத் தெரியும். ஆண்டவன் ஆலயத்திற்கு நேரடியாகச் சென்று ஹரிஜன மக்கள் வழிபடலாம் என்ற உரிமை இருக்கிறதே தவிர, ஆலயத்தில் இருக்கும் ஆண்டவனுக்கு பூஜை செய்வதற்கோ, அபிஷேகம் செய்வதற்கோ உரிமை அளிக்கப்படவில்லை. அப்படிப்பட்ட உரிமை அளிக்கப்படாததற்கு என்ன காரணம்? தீண்டாமையை ஒழிப்பதற்குத் தீவிரமாகப் பிரசாரம் செய்ய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதற்காக ஹரிஜன வாரம் கொண்டாடப் படுகிறது என்றும், ஹரிஜன தினம் கொண்டாடப்படுகிறது என்றும், மாவட்ட வாரியாக ரூ. 1,000 செலவழிக்க வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்காக இவ்வளவு பணம் செலவழிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. ஆனால் அந்தப் பிரசாரம் ஒழுங்காக நடைபெறுகிறதா? திரு. ஜெயபிரகாஷ் நாராயண் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டியின் அறிக்கையிலே கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது :

''கிராமப் புறங்களில் வாழும் ஏழை எளியவர்களின் பொருளாதார நிலை முன்னேற வேண்டுமானால் அவர்களுக்குப் பொதுப் பணிகளில் வேலை கிடைப்பதற்கு வேண்டிய வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும்.

கிராமங்களில் உள்ளவர்கள் 80 சதவிகிதத்தினர் ரூ. 1,000க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உள்ள 'நொடித்துப்போன தொகுதியினர்' ஆண்டுக்கு ரூ. 500க்குக் குறைவாக வருவாய் பெறுபவர்கள் அதில் 50 சதவிகிதமாக இருக்கிறார்கள். வேலை செய்து பிழைக்கத் தயாராக இருக்கும் ஒவ்வொரு குடிமகனுக்கும் வேலை கிடைக்கும் என்ற உத்திரவாதத்தை அரசு அளிக்க வேண்டும். அந்தப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். இவ்வாறு வெளிப்படையாகப் பிரகடனம் செய்துவிட வேண்டும்.

சமுதாயத்தின் எல்லாத் துறைகளிலும் அமைதியான முறையில் மாபெரும் சமூகப் புரட்சி ஏற்பட்டு சாதி முறை வேருடன் ஒழித்துக் கட்டப்பட்டாலன்றி, கிராமப்புற ஏழைகளின் நலன், மறுமலர்ச்சிக்கான திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது.''

இவ்வாறு 1961-ம் ஆண்டிலேயே இந்தக் குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. ஹரிஜனங்களுடைய மாபெரும் தலைவர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் கூட ஹரிஜனங்களுடைய வாழ்க்கைத் தரம் இன்னும் உயரவில்லை என்றுதான் கூறியிருக்கிறார்.

தீண்டாமை ஒழிப்பு விளம்பரத்திற்காக இந்த சர்க்கார் தைரியமாகச் செய்தது என்ன? ஹரிஜன வாரத்தைக் கொண்டாடுவதைத் தவிர, ஹரிஜன தினத்தைக் கொண்டாடுவதைத் தவிர, வேறு என்ன செய்திருக்கிறார்கள்? இப்பொழுது நாம் 1963-ம் ஆண்டிலே இருக்கிறோம். 7 அல்லது 8 ஆண்டுகளுக்கு முன்பு தீண்டாமையை ஒழிப்பதற்காக இந்த சர்க்கார் ரூ. 5,000 செலவில் 30,125 சுவரொட்டிகளை அச்சிட்டது. அந்தச் சுவரொட்டியிலே போடப்பட்ட படம் என்ன? ஒரு ஏழை ஹரிஜனத்தோழனை வைதீக முறையிலே வாழ்கிற பெரியவர் ஒருவர் ''தொடாதே'' என்று சொல்லுகிற படம்.

அப்படிச் சொன்னவர் இன்றைய அரசியல் சட்டத்தின்படி, தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்படி, கைது செய்யப்பட்டு சிறையிலே அடைக்கப்படுகிறார் என்ற முறையிலே அந்தப்படம் அமைந்திருந்தது. அந்தப் படத்தை யார் எதிர்த்தார்கள்? பார்ப்பன சமூகத் தலைவர்கள் யாராவது எதிர்த்தார்களா இல்லை. எதிர்த்தவர்கள் திருச்சியிலே உள்ள நான்கு, ஐந்து பேர். ஒரு பத்திரிகை இதைப்பற்றி குறிப்பிட்டு எழுதியது. உடனே இந்த அரசு 30,000 சுவரொட்டிகளையும் தூக்கி எறிந்துவிட்டது. ரூ. 5,000 நஷ்டத்திற்குப் பொறுப்பாக்கிக் கொண்டது. ஏன் இந்த அரசுக்கு தைரியம் வரவில்லை? ஒரு குறிப்பிட்ட வகுப்பினரை மட்டும் குறிக்கும் படம் அல்ல அது. இன்றைக்கு பூணூல் போட்டவர்களும், முடி வைத்துக்கொண்டிருப்பவர்களும் பார்ப்பனர்கள் சமூகத்தில் மட்டும் இல்லாது பிற சமூகங்களிலும் இருக்கிறார்கள். அந்த உருவம் பார்ப்பனர்களை மட்டும்தானா குறிப்பிடும்? வன்னியகுல க்ஷத்திரியர்களும் ஆசாரிக் குலத்தினருங்கூட முடி வைத்துப் பூணூல் அணிகிறார்கள். அதனால் நான் மாத்திரமல்ல, தோழர் விநாயகம், மாஜி எம். எல். ஏ. கூட இதைப்பற்றிக் கேட்டார். தீண்டாமை ஒழிப்பிற்கான சுவரொட்டிகளை வெளியிட வந்த இந்த சர்க்கார் ஏன் பயந்தது? ஏன் அவர்களுக்குத் துணிவு வராமல் போய்விட்டது? நாலைந்து பேர்கள் எதிர்த்தார்கள் என்பதற்காக இந்த சுவரொட்டிகளை மூட்டை கட்டி வைத்து விட்டார்கள். அதனால் என்ன லாபம் பெற்றார்கள்? பச்சைத் தமிழர் ஆட்சி ஆயிற்றே, பாராட்டுப் பல குவித்துக் கொண்டவர்களாயிற்றே, யாரோ சொன்னார் என்பதற்காக, அந்த சுவரொட்டிகளை மூட்டை கட்டி வைக்கலாமா? பொதுவாக, அடித்தளத்தில் மாற்றம் ஏற்பட்டால் தான், இன்றைக்கு கடவுளின் பெயராலும், மதத்தின் பெயராலும், கீழ் மட்டத்திலே தள்ளப்பட்டிருக்கிற ஹரிஜன குடிமகனுடைய நிலை உயர முடியும். அவனுக்கு நல்ல துணிவும், எண்ணமும் ஏற்படும். அப்படி ஒரு மாறுதல் ஏற்பட்டால்தான் அரசு செலவழிக்கிற மூன்று அல்லது ஐந்து கோடி பணத்தின் முழுப் பயனையும் பெற முடியும். அவனுக்கு நல்ல துணிவும், எண்ணமும் ஏற்படும். அப்படி பயன் தரத்தக்க வகையில் திட்டங்களைத் தீட்டும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன். அந்தத் திட்டங்கள் ஏழை ஹரிஜன மக்களுடைய வீடுகளை

அண்டாதபடி செய்து விடவேண்டாம். அவர்கள் நல்வாழ்வு பெறாத வகையில், அவர்களுக்கு அதிகாரிகள் செய்கின்ற கொடுமைகளினால் என்றென்றும் அவர்கள் ஏழை மக்களாக இருந்து கொண்டு, எந்தவிதமான முன்னேற்றமும் அடையாமல், தேர்தல் காலத்தில் எந்தக் கட்சிக்காரர்கள் வேண்டுமானாலும் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் கைப்பாவைகளாக வைத்திருக்கும் நிலைமை போகவேண்டும். தேர்தல் காலத்தில், சதுரங்கக் காய்களைப்போல் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இந்த நாட்டிலே உள்ள ஹரிஜன மக்கள் இருக்கிறார்கள். ஆகவே ஹரிஜனங்களுக்காக நல்ல முறையில் பாடுபடுகிறோம் என்றால், அவர்கள் நல்வாழ்வுக்காக விழைகிறோம் என்றால், திட்டங்கள் போடுவது பெரிதல்ல, ஆனால் அப்படி போடப்பட்ட திட்டங்கள் நல்ல முறையிலே நிறைவேற்றப் படுகிறதா, அதிகாரிகள் மோசடிகளைச் செய்கிறார்களா என்று பார்க்க வேண்டும். ஊழல்கள் மலிந்திருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். அவைகளைப் போக்குவதற்குத் தக்க நடவடிக்கை எடுத்தால்தான், திட்டங்கள் வாழும். திட்டங்கள் வாழ்ந்தால்தான் இன்றைய தினம் தாழ்த்தப் பட்டவர்கள் என்று சமுதாயத்தின் ஒரு கோடியிலே கிடக்கிற ஹரிஜன மக்கள் முன்னேற முடியும். பொருளாதாரத் துறையிலே அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படுவதுதான் நல்லது என்று பிரசாரம் செய்யப்பட்டப் போதிலும், ஜாதி அடிப்படையிலே தாழ்த்தப்பட்டிருக்கிற ஹரிஜன மக்களின் நிலையை உயர்த்துவது நம்முடைய குறிக்கோளாக இருப்பதால், அப்படிப்பட்ட நல்ல குறிக்கோள் நிறைவேற்றப்படுகிற வகையிலே அவர்களுக்கு எல்லாவிதமான சலுகைகளையும் சாதி அடிப்படையில்தான் வழங்கவேண்டிய நிலைமை இருக்கிறது என்று கூறிக்கொண்டு, இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

# தொழில் துறை மானியம்

உரை : 9 நாள் : 21.03.1963

**கலைஞர் மு. கருணாநிதி** : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தொழில்துறை மான்யத்தின்மீது எதிர்கட்சி நண்பர்கள் தந்திருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என் கருத்துக்களை இங்கு கூற விரும்புகிறேன். எனக்கு முன் பேசிய ஆளுங்கட்சி அம்மையார் அவர்கள் கோவை மாவட்டத்தில் தொழில்துறை வளர்ச்சி அடைய ஆரம்பித்து தற்போது ஒரு மந்தமான நிலை அங்கு ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எங்களுக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம் அவர்கள் அவர்களது மாவட்டத்தைப்பற்றி மட்டும் குறிப்பிட்டார்கள். நாங்கள் இந்த மாநிலத்தைப் பொறுத்தே குறிப்பிடுகிறோம். அவ்வளவுதான். ''மந்தநிலை ஏற்பட்டிருக்கிறது தொழில் வளர்ச்சியில்'', என்று அம்மையார் அவர்கள் கூறிய அந்த வாக்கியத்தின் அடிப்படையில்தான் என் பேச்சு இங்கு அமைகிறது என்பதை முதலில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசிய எங்கள் தோழர்கள் அனைவரும் வடக்கு வாழ்கிறது. தெற்கு தேய்கிறது என்ற வார்த்தையை இங்கு பயன்படுத்திய நேரத்தில் ஆளும் கட்சியில் உள்ள நண்பர்கள் எல்லாம் இது பழைய பல்லவி, ஒருவர் பல்லவியை ஆரம்பித்தார், மதியழகன் அனுபல்லவிக்கு வந்திருக்கிறார் என்று நண்பர் மாதா கவுடர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாங்கள் பல்லவி, அனுபல்லவி என்ற நிலைமையிலே இருக்கிறோம். ஆனால் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் டெல்லிக்குப் போய் சண்டை போடாமல் சரணம் என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்பதற்காக வருந்துகிறேன்.

தொழில் துறை மான்யத்தின்மீது பேசுகிற நேரத்தில் பின்தங்கிக் கிடக்கிற தமிழகத்தை முன்னுக்கு கொண்டு

வருவதற்கு மேலும் பல தொழில் நிலையங்களை உருவாக்கவும், தொழில் துறையில் அதிகக் கவனம் செலுத்தவேண்டுமென்று தான் நாங்கள் கூறுகிறோம். வடக்கு தெற்கு என்று பேசுகிற காரணத்தினால் வடக்கு என்ற திசையின்மீதே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கோபம் என்று யாரும் கருதிவிடக் கூடாது.

எங்கள் கழகத் தோழர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னர் இங்கு பேசியபோது குறிப்பிட்டார்கள், ''தெற்கு சேலம் வாழ்கிறது, வடக்கு சேலம் வாடுகிறது'', என்று. இன்றையதினம் பேசிய ஆளும் கட்சியைச் சார்ந்த ராஜாராம் அவர்கள் தென் ஆற்காடு மாவட்டத்தில் ''தெற்குப் பகுதி வாழ்கிறது, வடக்குப் பகுதி வாடுகிறது'' என்று குறிப்பிட்டார்கள். ஆகவே இந்தப் பிரச்சனை ஏற்றத்தாழ்வின் அடிப்படையில் எழுகிற பிரச்சினையே தவிர திசையைப் பொறுத்து ஏற்படுகிற நிலை அல்ல.

தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கிற தென்னகம் தொழில் துறையில் முன்னேற வேண்டும் என்பதற்காக எடுத்துக் கொள்ளப்படுகிற முயற்சிகள் இவை என்பதை மனதில் கொள்ளவேண்டும். நம் தொழில் துறை அமைச்சர் அவர்கள் சுலபமாகச் சொல்லிவிடுவார்கள். நம் தொழில் துறை அமைச்சர் அவர்கள் சுலபமாகச் சொல்லிவிடுவார்கள். நேற்று திரு. அரங்கண்ணல் அவர்கள் பேசியபோது அதற்குப் பதில் கூறிய அமைச்சர் ''பிரசங்கங்களால் பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாது'', என்று குறிப்பிட்டார்கள். சட்ட மன்றம் என்று ஒன்று கூட்டி இங்கு விவாதம் நடைபெறுவதற்குக் காரணமே இங்கு சொல்லப்படுகிற கருத்துக்கள், இங்கு எடுத்துக் கூறும் குறைகளுக்கு பரிகாரம் காணப்படவேண்டும் என்பதுதான். அவற்றைத் தொகுத்து நம் மாநில அமைச்சர்கள் டெல்லியில் இருப்பவர்களிடம் எடுத்துச் சொல்லி ஆவன செய்யவேண்டு மென்பதற்காகத்தானேயன்றி வேறு அல்ல.

அப்படி என்ன தமிழகம் பின்தங்கிக் கிடக்கிறதா என்று கேட்பவர்களுக்கு சில புள்ளிவிவரங்களை என்னால் தர முடியும். பம்பாய் மாநிலத்தில் இருப்பவர்களில் சம்பாதிப்பவர்களின் எண்ணிக்கை 43%. அவர்களால்

பாதுகாக்கப்படவேண்டியவர்கள் 57% பேர்கள். தமிழகத்தில் சம்பாதிப்பவர்கள் 31%. அந்த 31% பேர்களால் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் 69% பேர்கள் இருக்கிறார்கள். இதை மறந்துவிடக் கூடாது. தமிழகத்தில் உழவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற விவசாயியின் ஆண்டு வருவாயைவிட வட மாநிலங்களிலுள்ள உழவனின் வருவாய் ஏறத்தாழ 200 ரூபாய் அதிகமாக இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மூன்றாவது திட்ட இறுதியில் தொழில்துறை வருமானம் இந்தியாவில் கிழக்குப் பகுதியில் 54.60 சதவிகிதமாக உயரும். அகில இந்திய தொழில்துறை வருமானமும் 34.94 சதவிகிதமாக உயரும். ஆனால் தென்னகத்தில் 17.90 சதவிகிதம்தான் இருக்கும். இது சமநிலையில்லாத முறையில் பிரதேசங்களை வளர்ப்பதன் போக்கு. இது இன்ஸ்டிட்யூட் ஆப் பப்ளிக் ஒப்பினியன் பொருளாதார அறிக்கையில் இருப்பதாகும்.

குறிப்பாக பிரதேச வருமானம் எப்படியிருக்கிறது என்று பார்ப்போமானால் 1950-51 லிருந்து 1965-66 வரை உள்ளதை கவனிப்போம். ஆந்திராவை எடுத்துக்கொண்டால் 73.31 சத விகிதம், கேரளாவில் 63.53 சதவிகிதம். தமிழகத்தில் 79.61 சதவிகிதம், மைசூரில் 82.01 சதவிகிதம், ஒரிசாவில் 229.37 சதவிகிதம், பஞ்சாபில் 189.75 சதவிகிதம், டில்லியில் 177.03 சதவிகிதம் இருக்கின்றன. தமிழகத்தின் வருமானம் 79.61 சத விகிதம்தான். இது பொருளாதார அறிக்கையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

பிரதேச வாரியாக தொழிற்துறையில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு நபரின் சராசரி வருமானம் எவ்வளவு என்று பார்க்கலாம். ஆந்திராவில் 31.24 சதவிகிதம், கேரளாவில் 12.70 சதவிகிதம், மைசூரில் 29.56 சதவிகிதம், ஒரிசாவில் 166.77 சதவிகிதம், டெல்லியில் 60.19 சதவிகிதம், தமிழகத்தில் 39.99 சதவிகிதம் என்ற நிலையைக் காண்கிறோம். தமிழகத்தைவிட குறைந்திருக்கிற வட மாநிலங்களின் புள்ளி விவரங்களோடு ஒப்பிடாமல் அதிகமாக உள்ள மாநிலங்களோடு ஒப்பிடுகிறீர்களே, இது உங்கள் பிரசாரத்திற்காக அல்லவா என்று தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும்.

''தம்மின் மெலியாரை நோக்கித்
தமதுடைமை அம்மா பெரிதென்று அகமகிழ்க !''

என்று காட்டப்படுகிற தத்துவப் பொன்மொழியை அரசியல் துறையில் இழுக்க வேண்டாம். சராசரி வருமானம் பிற மாநிலங்களில் எவ்வளவு உயர்வாக இருக்கிறது, தமிழகத்தில் எவ்வாறு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுவது, நாம் எந்தளவு பின்தங்கிக் கிடக்கிறோம் என்பதை எண்ணி நம் தொழில் வளத்தையும், பொருளாதார வளத்தையும் பெருக்கிக் கொள்வதற்காகத்தான். ''போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து'' என்பது பேராசைக்காரனிடம் கூற வேண்டிய உபதேசமே தவிர, பெரும் பசிக்காரனிடம் சொல்லும் பழமொழியாக இருத்தல் கூடாது. ''கிட்டாதாயின் வெட்டனமற'' என்பதை டெல்லியைக் கேட்டுப்பார்த்து அவர்கள் தர மறுத்த பிறகு நீங்கள் கையாளும் அறிவுரையாகக் கொள்ளாமல் ''முயற்சி திருவினையாக்கும்'' என்ற முனைப்புடனும், ''ஊழையுமுப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்'' என்று கனம் உறுப்பினர் ஈரோட்டார் கூறிய குறள் வழிக்கிணங்கவும் செயல்படவேண்டும் எனக் கூறுவேன். தமிழகத் தொழில் துறை வளர டெல்லியிடம் மேலும் போராடுங்கள்.

தொழில் வளர்ச்சிக்கு தொழிலாளருடைய நலன் மிக மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும். தொழிலாளருடைய வளமும், தொழிலாளருடைய நலமும் பாதுகாக்கப்பட்டால் தான், அவர்களுடைய உரிமைகள் ஒழுங்காக அளிக்கப்பட்டால் தான், தொழிலாளர்களுடைய வாழ்வில் நிம்மதி இருந்தால்தான், தொழில் துறையில் நாம் எதிர்பார்க்கிற உற்பத்தி பெருகவும், நாடு பொருளாதாரத்தில் முன்னேறவும் வழிவகை காண முடியும், இந்தியாவில் மண்ணியல், சுரங்க இயல், கனி இயல் ஆகியவற்றிற்கான சங்கத்தின் அறிக்கை கூறுகிறது, இந்தியத் தொழிலாளிக்கும் வேறு நாடுகளில் இருக்கிற தொழிலாளிக்கும் உள்ள திறமையைப்பற்றி, அந்த அறிக்கையில், ஒரு நாளுக்கு ஒரு ஆங்கில நாட்டுத் தொழிலாளி 7 டன்னும், ஜெர்மானிய நாட்டுத் தொழிலாளி 8.99 டன்னும், அமெரிக்கத் தொழிலாளி 21.68 டன்னும், இந்தியத் தொழிலாளி 2.7 டன்னும்தான்

அகழ்ந்து எடுக்கிறார்கள் என்று சுரங்க இயல், மண் இயல், கனி இயல் சங்கத்தின் அறிக்கை குறிப்பிடுகிறது. இதை நான் சொல்லுவதற்குக் காரணம், இந்தியத் தொழிலாளி ஏன் இந்த அளவுக்குத் திறமைக் குறைவாக உற்பத்தியை - அது மண் இயல், கனி இயல், சுரங்க இயல் துறையில் மாத்திரம் அல்ல, பஞ்சாலை ஆகட்டும், சணல் தொழிற்சாலையில் ஆகட்டும், அல்லது காகிதத் தொழிற்சாலையில் ஆகட்டும், படைப்புத்திறன் ஏன் இந்தியத் தொழிலாளிக்குக் குறைந்திருக்கிறது என்பதை ஆராயவேண்டும் என்பதைக் குறிப்பிடுவதற்காகத்தான். அவனுடைய உடல் வலு சரியாக இல்லை. உடல் வலுவைப் பேணிப் பாதுகாக்கின்ற அளவுக்கு ஊதியம் இல்லை என்று காரணம் காட்டப்படுகிறது. அதையும் உடனடியாக ஆய்ந்து அறிந்து அரசு அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

இன்றைய தினம் நெருக்கடி நிலைமையை உத்தேசித்து சிலபல தொழிலாளர்களுடைய கோரிக்கைகள், நியாயமான கோரிக்கைகளாக இருந்தால்கூட, அவைகளை நெருக்கடி நிலைமையிலே கூடுமான வரையில் ஒத்தி வைப்பது என்று தொழிற் சங்கங்களெல்லாம் முடிவு எடுத்திருகின்றன. அதற்கு தொழிலதிபர்களும் ஒத்துழைப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் தொழிலதிபர்கள் சொன்னபடி நடக்கவில்லை. நேற்றைய தினம் கூடிய தமிழ்நாடு இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் நிர்வாகக் குழுவின் தீர்மானத்தை எடுத்துப் பார்த்தால் இந்த பல்வேறு வரிகளின் மொத்தச் சுமையும் ஏழைத் தொழிலாளர்கள்மீதே விழும் என்று குறிப்பிட்டு, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும், ராஜ்யத்தில் தொழில் உறவு முறை மோசமடைந்து வருவதாக நிர்வாகக் கமிட்டி கருதி, தொழில் அமைதித் தீர்மானத்தைப்பற்றி தொழில் அதிபர்கள் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை என்று தமிழ்நாடு இந்திய தேசீய தொழிற் சங்க காங்கிரஸ் குற்றம் சாட்டுகிறது.

கடைசியாக நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில், சென்னையில் உள்ள பி.அண்ட். சி. மில்லில் சிக்கனச் சீரமைப்பைத் தொடர்ந்து, ஆட்குறைப்பு செய்யப்பட்டிருப்பதையும் குறிப்பிட்டுவிட்டு,

ஐவுளித் தொழில் ஊதிய போர்டு சிபாரிசுக்கு ஏற்பவோ, சிக்கனச் சீரமைப்புபற்றி தேசீய உடன்பாட்டுக்கு ஏற்பவோ, சிக்கனச் சீரமைப்பு இல்லை என்று பி. அண்ட் ஸி. மில் நிர்வாகம் இந்தச் சீரமைப்பின் பேரால் பல தொழிலாளர்களை இன்றைய தினம் வேலையை விட்டு நீக்கியிருப்பதைக் கண்டிக்கிற வகையில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. தொழிலாளர் வாழ்வு பாதிக்கப்பட்டால், தொழிலாளர்களுடைய உள்ளம் வாடுவதற்கான நிலைமைகள் தோன்றுமேயானால், நாம் எதிர்பார்க்கிற உற்பத்தி அதுவும் இந்த நெருக்கடியான நிலையில் நாம் எய்த முடியுமா, நாம் அடைய முடியுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

எனக்கு முன் பேசிய கனம் மதியழகன் அவர்கள் தொழில் துறை பெரும்பாலும் தனியார்துறை வசமே ஒப்படைக்கப் பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்த மாமன்றத்தில் 1957-ம் ஆண்டிலிருந்து, திராவிட முன்னேற்றக் கழகம் இடம் பெற்ற நேரத்திலிருந்து, பொதுத் துறையை வளர்க்க வேண்டுமென்றும், தனியார் துறைக்கு ஆக்கம் அளிக்கிற போக்கினை அரசினர் திரும்பப் பெறவேண்டும் என்றும் வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். எந்த தனிப்பட்ட முதலாளியும் நாட்டில் இருக்கிற ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு தொழிலை உருவாக்க வேண்டும் என்ற லட்சிய நோக்கத்தோடு ஆரம்பிப்பதில்லை. லாப நோக்கத்தோடு, தனக்கு எவ்வளவு லாபம் கிட்டும் என்று லாபக் கணக்கைப் பார்த்துக் கொண்டுதான் முதலாளி வர்க்கத்தினர், தனியார் துறையில் தொழிலில் ஈடுபடுகிறார்கள். தனியார் தொழில்களுக்கு அரசாங்கம் எல்லாச் சலுகைகளையும் தந்து, தனியார் துறையை மேலும் மேலும் ஊக்கப்படுத்திக் கொண்டு போவதும், கேட்டால், இதற்குப் பெயர்தான் ஆவடி சோஷலிஸம் என்று கூறுவதும், இந்த கலப்பட பொருளாதாரம்தான் காங்கிரஸ் கட்சியின் தத்துவம் என்று கூறுவதும், உள்ளபடியே முற்போக்கு சக்திகளால் ஒத்துக்கொள்ளக்கூடிய நிலை அல்ல என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தனியார் துறைக்கு அரசினர்மூலம் தரப்படுகிற கடன் அல்லது நிதிக் கார்ப்பொரேஷன்மூலம் தரப்படுகின்ற உதவிகள் எப்படி

தரப்படுகிறது என்றால் யாரோ சில வேண்டியவர்களுக்கு, அதிகாரத்திலே இருப்பவர்களுக்கும் அந்த முதலாளிகளுக்கும் உள்ள தொடர்பு, சொந்தம், பந்தம், பாசம், இவைகளை வைத்துத்தான் தரப்படுகிறது என்று நான் சொன்னால் அதை இந்த அமைச்சரவை உளமார மறுக்க முடியாது என்று நான் கூறிக்கொள்வேன். அந்த நிலை இங்கு மாத்திரம் இல்லை. இந்தியாவிலேயே, இந்த நிதிக் கமிஷன்பற்றி ஆராய்வதற்காக, திருமதி சுசேதா கிருபலானி, 1955-ம் ஆண்டில் என்று கருதுகிறேன், அப்போது போடப்பட்ட குழுவுக்குத் தலைவராக இருந்த அவர்களே இதைச் சொல்லியிருக்கிறார்கள். வேண்டியவர்களுக்கு இப்படிப்பட்ட உதவிகள் தரப்பட்டு, தனிப்பட்ட முதலாளிகளுக்குச் சலுகைகள் தரப்படுகின்றன என்று அவர்கள் அந்தக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

ஆகவே தனியார்துறை நீக்கப்பட்டு, பொதுத் துறைக்கு இந்த சர்க்கார் தங்களை இழுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் மிக மிகப் பணிவன்போடு இங்கே கேட்டுக்கொள்வேன். அமைச்சர் சொல்லலாம், தனியார் துறையில் பணம் இருக்கிறது, அவர்களிடத்தில் நாமும் கொஞ்சம் பணம் கொடுக்கிறோம், ஆகவே தொழில் துறையை விருத்தி செய்யக்கூடிய நிலையில் அவர்களுடைய முதலீடு உள்ளது, உதவி செய்யக்கூடிய நிலையில் உள்ளது நாங்கள் தரும் பணம் என்று.

நான் அவர்களுக்கு யோசனை வழங்குவேன். அமைச்சர் அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன். ஏன் அரசாங்கம் ஒரு தொழிலுக்கு 50 சதவீதம் மூதலீடு செய்து, மிச்சம் உள்ள பணத்தைப் பொது மக்களிடத்தில் வசூலிக்கக் கூடாது? பொது மக்கள் பங்கெடுத்துக்கொள்ள மாட்டார்களா? பங்குதாரர்களாகச் சேர மாட்டார்களா? இன்றைய தினம் பொது மக்கள் பங்குதாரர்களாகச் சேரவில்லையா? தனிப்பட்டவர்கள் ஆரம்பிக்கிற தொழில்களில் பொது மக்கள் பங்கெடுத்துக்கொண்டு, அவர்களையே நம்பிப் பங்குப் பணம் போடுகிற நேரத்தில், நம்பிக்கையும், நாணயமும் நிறைந்த சர்க்காரை நம்பிப் பொது மக்கள் பங்கெடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறார்களா?

பொது மக்கள் பணம் சரி பகுதி அல்லது நிர்ணயிக்கிற பகுதி பொது மக்களிடத்திலிருந்து பெற்று, அரசினர் இன்ன சதவிகிதம் தருவது என்று நிர்ணயித்து பொதுமக்களும் அரசினரும் சேர்ந்தாவது பொதுத் துறைத் தொழில்களை நடத்தலாம். இப்படி ஒரு முறையையும் இத்துடன் அரசினர் எல்லாத் துறைகளையும் எடுத்து நடத்துவது என்று இன்னொரு முறையையும் இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற நேரத்தில் குறிப்பிட்டார்கள், தனியார் துறையில் அவர்கள் நடத்துகிற பெரிய தொழில்களில் பெரும் லாபம் அடைந்தாலும், பெருமளவுக்கு வரி போட்டுப் பிடுங்கிக்கொள்கிறோம் என்று தெரிவித்தார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கிறோம் ; நேராக மூக்கைத் தொடுவதற்கு பதில் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுகிறோம் என்கிற வாதமாகத்தான் எங்களுக்குத் தெரிகிறது. ஆகவே தொழில் துறையைப் பொறுத்தவரையில் பொதுத் துறைக்கு, தீவிரமாக, அவசர அவசரமாக இந்தத் துறை மாற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக பொருளாதாரத் திட்டத்தை அகில இந்திய ரீதியில் வைத்திருக்கிற காரணத்தினால்தான் சில பிரதேசங்கள் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. முன்னேற முடியாத காரணத்தை எடுத்துக் கூறும்போது, எங்களால் மாத்திரம் சொல்லப்படுகிற கருத்து அல்ல, அமைச்சராக வீற்றிருந்து தற்சமயம் ஆளும் கட்சி உறுப்பினராக இருக்கிற மதிப்புக்குரிய ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், நேற்று அல்ல, சென்ற கிழமை அல்ல, 1955-ல் சொல்லியிருக்கிறார். ‘‘நம் ராஜ்யத்தில் எவ்வளவு வரிபோட முடியுமோ, அந்த அளவுக்குப் போட்டாகிவிட்டது. மத்திய சர்க்காரிடமிருந்து கிடைப்பது அதிகமாயில்லை. மத்திய சர்க்காரிடம் உதவி வேண்டும் என்று கேட்பது தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் குறைவு. தலைவிதி என்று நினைத்துக்கொண்டு நாம் சும்மா இருந்து விடுகிறோம். மத்திய சர்க்காரிடம் இதை வற்புறுத்த வேண்டும். அழுகிற பிள்ளைக்குத்தான் ஏதாவது கிடைக்கும். ஆகையினால் தமிழ் நாட்டு மக்கள் அதிகக் கூச்சல் போட வேண்டும்.

அப்போதுதான் ஏதாவது கிடைக்கும். நமது மந்திரிகள் மத்திய சர்க்காரிடம் சண்டை பிடித்து வெற்றி காண வேண்டும்'' என்று 1955-ம் ஆண்டு ஆகஸ்ட் 23-ம் நாள் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் கூறியிருக்கிறார்.

ராஜா சர் முத்தையா செட்டியார், காங்கிரஸ் கட்சிக்கு இன்றைக்கு மிக மிக வேண்டியப் பிரமுகர், அவர் சொல்லியிருக்கிறார், ''இங்கே உட்கார்ந்துகொண்டு பேசிப் பிரயோசனமில்லை, டில்லிக்குச் செல்லுங்கள் அங்கு சென்று சண்டை போடுங்கள், டில்லிக்குச் செல்லுங்கள், டில்லி சலோ, டில்லி சலோ'' என்று இந்த மன்றத்தில் பல தடவை குறிப்பிட்டிருக்கிறார்.

அவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்தால், நாங்கள் மாத்திரம்தான் சொல்லுகிறோம் என்பதில்லை. அந்தந்த மாவட்டத்திற்கு, அந்தந்தப் பகுதிகளுக்கு இன்னின்ன தொழிற்சாலைகள் வேண்டும் என்று எதிர்க்கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களும் உங்களைப் பார்த்து தைரியமாகக் கேட்கிறபோது, அந்த தைரியத்தைப் பெற்று, டில்லி சென்று, தெளிவாக, தைரியமாக வாதாடி, தமிழகம் வாழ்வதற்கு, தமிழகத்தில் தொழில்கள் சிறப்பதற்கு, தொழில்கள் மூலம் தமிழகம் வளம் பெறுவதற்கு, தமிழக மக்களுடைய வாழ்க்கை நலம் பெறுவதற்கு, உறுதுணையாக இந்த அமைச்சரவை போராட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

## கூட்டுறவுத் துறை மானியம்

**உரை : 10** **நாள் : 23.03.1963**

**கலைஞர் மு. கருணாநிதி :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்று கூட்டுறவு மான்யத்தின்மீது எங்கள் கட்சியின் சார்பிலே எனது நண்பர் வடிவேலு அவர்கள் தந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கூட்டுறவு துறையில் நீண்ட நெடுங்காலமாக நல்ல அனுபவம் பெற்றவர்கள் அந்த கூட்டுறவுத் துறையிலே மேலும் நல்ல முன்னேற்றம் காணவேண்டும் என்கிற நோக்கத்தோடோ என்னவோ, அண்மையிலே ஆளும் கட்சியோடு கூட்டுறவு கொண்டு, இன்றைய தினம் அமைச்சராகப் பணி புரிந்து இந்தத் துறையை மேலும் மேலும் வளர்ப்பதற்காக நல்ல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக இந்த நேரத்திலே அவருக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாநிலம் கூட்டுறவுத் துறையில் வேறு மாநிலங்களை விட உயர்ந்து விளங்குகிறது என்றும், மேம்பட்டு இருக்கிறது என்றும் கூறப்படுகிறது. ஆனால் அத்தகைய ஒப்பிட்டுப் பார்க்கிற தன்மை, உயர்ந்து விளங்குகிறது என்று குறிப்பிடுகிற விமர்சனம், கூட்டுறவுத் துறையினுடைய திறமையைப் பொறுத்ததாக இருக்கிறது என்று என்னால் கூற முடியுமே தவிர, அதே நேரத்தில் திறமைக்கும் நேர்மைக்கும் இடையிலே இருக்கிற வேறுபாட்டையும் நான் இங்கே உணர்த்தாமல் இருக்க முடியாது. இங்கு பேசிய பல உறுப்பினர்கள் நல்ல நோக்கத்தோடு உருவாக்கப்பட்டுள்ள

இந்தக் கூட்டுறவுத் துறையில் எங்கெங்கே தவறுகள் விளைகிறது. எங்கெங்கே பொல்லாச் செயல்கள் நடைபோடுகின்றன என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஏழை எளியவர்கள் வாழ்விலே நிம்மதி பெறவும், அவர்களுக்கும் செல்வர்களுக்கும் இடையிலே இருக்கிற இடைத்தரகர்கள் முறை ஒழிக்கப்படவும், அவர்கள் வேளாண்மைத் துறையிலும், வேறு பல துறைகளிலும், வாழ்வில் வளம் பெறவும் இந்தத் துறை ஒரு காலத்திலே மிகப் பெரியவர்களால் எடுத்துச் சொல்லப்பட்டு 1904-ம் ஆண்டில் ஜெர்மனி நாட்டிலே இந்தக் கூட்டுறவுத் துறையினுடைய தந்தை என்று கூறப்படுகிற ரைஃபிஸன் என்பவர் முயற்சி பின்பற்றப்பட்டு, இந்தியாவிலே 1904-ல் கூட்டுறவு முறையில் கடன் வழங்குவது என்ற நிலையில் சட்டம் உருவாக்கப்பட்டு, 1912-ம் ஆண்டு கடன் வழங்குவதற்கு மாத்திரம் இல்லாமல், அதைப் போலவே பண்டங்களை உற்பத்தி செய்தல், வாங்குதல், அவைகளை விற்பது, வீடு கட்டுவது, இன்ஷ்யூரன்ஸ் முதலிய எல்லாத் துறைகளிலும் இந்தக் கூட்டுறவு முறையை விரிவுபடுத்த வேண்டுமென்று அந்தச் சட்டம் உருவெடுத்தது. ஏறத்தாழ 50-வது ஆண்டு விழாவைக் கொண்டாடி நடைபோட்டுக்கொண்டிருக்கிற இந்தத் துறை மேலும் வளரவேண்டும் என்றபதற்காக நாங்கள் எடுத்துச் சொல்லுகிற யோசனைகளை இந்தத் துறையின் அமைச்சர் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பயன்படுத்துவோர் கூட்டுறவு சங்கம் என்கிற நிலைமையில் 50,000 மக்கள் கொண்ட நகரங்களில் இன்றைய தினம் பயன்படுத்துவோர் கூட்டுறவு சங்கம் அமைகிறது என்றும், அதனுடைய முக்கிய நோக்கம் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. விலைவாசிகளைக் கட்டுப்படுத்த இந்த அரசினர் இந்தத் துறையிலே மேற்கொண்டிருக்கிற முயற்சிக்கு நான் பாராட்டுதலைத் தெரிவிக்காமல் இருக்க முடியாது. ஆனால் 50,000 மக்கள் கொண்டிருக்கிற நகரத்தில்தான் இந்த பயன்படுத்துவோர் கூட்டுறவு சங்கம் இருக்க முடியும் என்கிற நிலைமையிலிருந்து, மேஜர் பஞ்சாயத்து போன்ற இடங்களில்கூட, விலைவாசியை கட்டுப்படுத்துவதையே

முக்கிய நோக்கமாகக் கொண்டு அதற்கான முயற்சிகளில் ஈடுபடத் தொடங்குவோருக்கு ஆதரவு நல்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய சர்க்காரிடமிருந்து, மத்திய அமைச்சர்களிடமிருந்து மாநில சர்க்காருக்கு ஒரு வேண்டுகோள் வந்தது. அந்த வேண்டுகோள் - பெட்ரோல் பம்ப்களும், சர்வீஸ் ஸ்டேஷன்களும் கூட்டுறவு முறையில் இயங்கிட வகை செய்யவேண்டுமென்ற முறையில் மாநில சர்க்காருக்கு அறிவுறுத்துகிற வேண்டுகோள். அதை இந்த அரசினர் எந்த அளவு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள், அப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபட்டவர்களுக்கு இந்த அரசு ஆக்கமும் ஊக்கமும் தர முன்வர இருக்கிறார்களா என்கிற விவரங்களை அறிவதற்கு ஆவலாக இருக்கிறோம். அதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நம்புகிறேன்.

கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்த வரையில் வேறு மாநிலங்களோடு நம் மாநிலத்தை ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் திறமை மிகுந்தது என்று எடுத்துச் சொன்னாலும், எண்ணிக்கை அளவில் இந்த மாநிலத்தில் கூட்டுறவு சங்கங்கள் குறைவாகத்தான் இருக்கின்றன. ஆந்திர மாநிலத்தில் 1 லட்சம் மக்களுக்கு 63 சங்கங்கள் என்றும், அஸ்ஸாம் மாநிலத்தில் 1 லட்சம் மக்களுக்கு 59 கூட்டுறவு சங்கங்கள் என்றும், பீஹார் மாநிலத்தில் 1 லட்சம் மக்களுக்கு 62 சங்கங்கள் என்றும், பஞ்சாபில் 1 லட்சம் மக்களுக்கு 158 சங்கங்கள் என்றும், மத்தியப் பிரதேசத்தில் 1 லட்சம் மக்களுக்கு 82 சங்கங்கள் என்றும், உத்திரப் பிரதேசத்தில் 1 லட்சம் மக்களுக்கு 91 சங்கங்கள் என்றும் இருக்கிற நிலைமையில் தமிழகத்திலே 1 லட்சம் மக்களுக்கு 45 சங்கங்கள்தான் இருப்பதாக 1958-59ம் ஆண்டு புள்ளிவிவரம் கூறுகிறது.

அது மாத்திரமல்ல, கிராம கூட்டுறவு சங்கங்கள் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால், கடன் வழங்குகிற கிராம கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை, ஆந்திராவில் 12,527 ; பீகாரில் 16,222 ; மத்திய பிரதேசத்தில் 20,629 ; பஞ்சாபில் 17,107 ; உத்தர பிரதேசத்தில் 57,136 ; மேற்கு வங்கத்தில்

13,000 சொச்சம். ஆனால், தமிழ் நாட்டில் 9,500 என்ற நிலையிலே புள்ளிவிவரம் இருக்கிறது. இதையெல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம், இன்னும் இங்கே 9,000 கூட்டுறவு சங்கங்கள்தான் இருக்கின்றன, அவைகளை ஏன் விரிவுபடுத்தக் கூடாது என்பதைக் காட்டுவதற்குமட்டுமல்ல ; 1958-ல் தேசீய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமத்திற்கு ஒரு கூட்டுறவு சங்கம் இருக்கவேண்டும் என்று ஒரு யோசனை இருந்தும், அது அமல் படுத்தும் நேரத்தில் சில இடையூறுகள் ஏற்பட்ட காரணத்தினால், 1959-ல் மேதா குழுவினர் சமர்ப்பித்த யோசனைகளுக்கு இணங்க 3,000 மக்களுக்கு ஒரு கிராம கூட்டுறவு சங்கம் என்ற நிலைமையில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. அது 3,000 மக்களுக்கு ஒரு கிராம கூட்டுறவு சங்கம் என்ற முறையிலே 9,500 சங்கங்கள் என்ற அளவோடு நின்று இருக்கலாம். அதற்கு மேல் யோசித்து கிராம மக்கள் நலன் பெறவேண்டும் என்று 3,000க்குப் பதிலாக 2,000க்கு ஒரு சங்கம் என்ற அளவிலாவது சங்கங்கள் நிறுவ வேண்டும், கிராம மக்கள் நல்ல பயன் பெறுவதற்கு ஆக்கபூர்வமான முயற்சியில் ஈடுபடவேண்டும் என்பதை வலியுறுத்தவே சொல்லுகிறேன். கூட்டுறவு சங்கங்கள் அதிகமாகத் தோன்றாததற்குக் காரணம், எனக்கு முன் பேசியவர்கள் சிலர் குறிப்பிட்டது போல, பிரசாரங்கள், நல்ல விளம்பரங்கள் கிராம மக்களை ஈர்க்கும் அளவுக்கு இங்கே நடைபெறாததுதான். அந்த முறையில் நாம் முன்நின்று கிராம மக்கள் பேராதரவு தரும் வகையில் அவர்களை ஈடுபடுத்த முனையவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொழிலாளிகளுடைய நலனுக்காக நன்கொடை அளித்து வீடு கட்ட கடன் வழங்கும் திட்டம் இருக்கிறது. அது மத்திய அரசு நன்கொடை கொடுப்பதால் செயல்படும் திட்டம். தொழிற் சாலைகளில் தொழிலாளிகள் கூட்டுறவு சங்கங்கள் மூலம், அவர்களுக்கு வீடு கட்ட தரப்படுகிற தொகை, 65 சதவிகிதம் கடன் ஆகவும், 25 சதவிகிதம் நன்கொடையாகவும், 10 சதவிகிதம் தொழிலாளியே ஏற்கவேண்டும் என்ற நிலையிலே இருக்கிறது. அந்த கடன் உதவி எப்பொழுது தரப்படுகிறது? வீடு கூரை மட்டம் கட்டின பிறகு முதலில் 50 சதவிகிதமும், பிறகு மீதமுள்ள 50 சதவிகிதம் வீடு கட்டி முடித்த பிறகும் கொடுக்கப்படுகிறது. தொழிலாளிகளுக்கு ஏற்படுகின்ற சங்கடம்

என்னவென்றால், மனை விலை ஏறி இருப்பதால், கட்டட சாமான்கள், செங்கல் மற்ற பொருள்கள் விலை உயர்ந்திருக்கிற காரணத்தால், அவன் கொடுக்க வேண்டிய 10 சதவிகித பங்கை செலுத்த முடியாமல், அந்த அளவிலே தொழிலாளிகளுக்கு வீடு கட்டும் இந்த திட்டம் வெற்றிகரமாக இல்லை. கிராமங்களில் வீடு கட்டும் திட்டத்தில் மனை நீங்கலாக ஆகிற செலவில் 80 சதவிகிதம் கடன் ஆகவும் தரப்படுகிறது. விளை நிலத்தை ஈடாகத் தந்தால், 87 ½ சதவிகிதம் கடனாகத் தரப்படுகிறது. இதற்குப் பதிலாக வீடு கட்டும் திட்டத்திலே, வாடகைக்கு காலனிகளைக் கட்டி, கிராமத்தில் இருக்கும் மக்களுக்கு வீடுகளைச் சொந்தமாக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். கடனைப் பெறுவதற்கு ஈடாக மனைகளையோ அல்லது வேறு சொத்துகளையோ, விளை நிலங்களையோ காட்ட வேண்டிய நிலைமையில் மாறுதல் ஏற்படவேண்டும். நடுத்தர வர்க்கத்தினர் ஆனாலும் சரி, அதற்குக் குறைந்த நிலையில் இருக்கிறவர் களானாலும் தரப்படும் கடன் உதவி விஷயத்தில் கூட்டுறவு நிறுவனங்கள் நல்ல முறையைப் பின்பற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். கிராமங்களில் ஆகட்டும், சிறு நகரங்களிலாகட்டும், இந்தக் கடன் உதவி பெற்று கட்டப்படுகிற வீடுகளெல்லாம் நகரப் புரத்தின் எல்லையில், அதன் ஓரத்தில்தான் அமைகின்றன. உள்ளே நகரத்தின் நடுவே அல்லது கிராமத்தின் நடுவே அதற்கு போதுமான இடம் இல்லாத காரணத்தினால் அப்படி ஓரங்களில் வீடுகள் கட்டப்படுகின்ற காரணத்தினால் வெளியிலே பார்வைக்கு அழகாக, கிராமத்தில் கட்டப்படுகின்ற புது வீடுகள் இருக்கின்றனவே தவிர, கிராமங்களின் உள்ளே இருக்கும் வீடுகள் பொலிவு இழந்தும் இடிபாடு உள்ளதாகவும் காட்சி அளிக்கின்றன. ஆகவே புதிய வீடுகள் கட்டுவதற்கு மட்டுமல்லாமல், பழைய வீடுகளைப் புதுப்பிக்கவும் இந்தக் கடன் உதவி திட்டம் அமல் படுத்தப்படவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்வேன். ''அதற்கு பாங்குகள் மூலம் அத்தகைய கடன்களைப் பெற்றுக் கொள்ளலாம்'' என்று அமைச்சர் சொல்லலாம் ; ஆனால் இந்த முறையில்தான் 20 ஆண்டு காலத்தில் அவர்கள் கொஞ்சம் கொஞ்சம் ஆக அந்தக் கடனைத் திருப்பித்தரும் சூழ்நிலையும்

அப்படிப்பட்ட வாய்ப்பும் சலுகையும் இருக்கிறது. ஆகவே இந்தக் கடன் உதவித் தொகை புது வீடு கட்டுவதற்கும் பழைய வீட்டை பழுது பார்க்கவும் அளிக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுதுதான் கிராமம் பொலிவு கெடாமல் புதுக்கோலம் பூணும். அதை ஆழ்ந்து சிந்தித்து இந்த நல்ல முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தக் கூட்டுறவு இயக்கத்தில் குறைபாடுகள் நிறைய இருக்கின்றன. அதை நான் சொல்லும்போது அமைச்சரவர்கள் அதை நிலாவில் உள்ள களங்கம் என்று வருணித்தாலும் வருணிக்கலாம், ஆனால் என்னைப் பொறுத்த வரையில், அது அழகான உடலில் உள்ள புண் என்பேன் ; அழகான உடலில் சிறு புண் வந்தாலும் அது புறையோடும் அளவுக்குப் போய் விடக்கூடாது என்ற எச்சரிக்கையோடு இந்தக் குறைபாடுகளை அணுகவேண்டும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைய தினம் கூட்டுறவு நிறுவனங்கள் கட்சிக் கண்ணோட்டத்தோடு பல சந்தர்ப்பங்களில் அணுகப்படுகின்றன. இல்லை என்று கூற முடியாது. உதாரணமாக ஒரு நகரத்தில் நெசவாளர்களுக்கான கூட்டுறவு அமைப்புகள் இரண்டு இருந்தன. அந்த நகரத்தில் மூன்றாவது கூட்டுறவு அமைப்பு ஒன்று தேவை என்று பல காலமாக முயன்றார்கள். அப்பொழுது அவர்களுக்குச் சொல்லப்பட்ட பதில் என்னவென்றால் ''இரண்டு அமைப்பிலே ஏதாவது ஒன்றில் சேருங்கள்'' என்று உபதேசிக்கப்பட்டது. இதில் ஒரு அமைப்பு காங்கிரஸ் கட்சி சார்புடையது ; மற்றொன்று கம்யூனிஸ்ட் கட்சி சார்பு உடையதாக இருந்தது. ஆகவே, அந்த மக்கள் கட்சி சார்பு இல்லாத ஒரு புது அமைப்பில் நாங்கள் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். நெடுங்காலத்திற்குப் பிறகு அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. அப்படி அங்கீகாரம் அளிக்கப்பட்ட பிறகு, இப்பொழுது உள்ள முறையில் முதல் ஆண்டில் இந்த கூட்டுறவு நிறுவனத்திற்கான டைரக்டர்களை நியமிக்கும் முறையில் யாரை நியமிக்கலாம் என்ற ரெஜிஸ்ட்ரார்

அவர்களுக்கு சிபாரிசு செய்து ஒரு பத்துப் பெயர்களைத் தந்தார்கள். அதை ரெஜிஸ்ட்ரார் பார்த்துவிட்டு, குறிப்பிட்ட ஒரு பெயரை அடித்து விட்டு - அவர் திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்தவர் என்ற காரணமோ என்னவோ எனக்குத் தெரியவில்லை, அந்தக் குறிப்பிட்ட பெயரை அடித்துவிட்டு - அந்தத் தொகுதி எம்.எல்.ஏ பெயரை இணைத்துவிட்டார். ஆன்ால் அந்த தொகுதி எம்.எல்.ஏ ''நான் டைரக்டராக இருக்கமுடியாது'' என்று மறுத்துவிட்ட பிறகுகூட முதலில் அடிக்கப்பட்ட பெயர் சேர்க்கப்பட்டதா என்று பார்த்தால், சேர்க்கப்படவில்லை. வேறொரு நபரை, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரை இணைத்துக்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகள் கூறினார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம், இப்படிப்பட்ட கட்சிக் கண்ணோக்கோடு கூட்டுறவு சங்கங்கள் செயல்படக்கூடாது என்பதை சுட்டிக்காட்டத்தான். கட்சிக் கண்ணோட்டத்தோடு நடைபெறுகிறது என்பதற்கு நான் இன்னும் பல உதாரணங்களை கொடுக்கக்கூடும், அதை மெய்ப்பிக்க முடியும். அதிகாரிகள் மட்டுமல்ல, அமைச்சர்களே கூட சில நேரங்களில் பலியாகிவிடக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது என்பதை வருத்தத்தோடு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். எதிர்க் கட்சிக் கூட்டங்களில் ஆளும் கட்சிக்காரர்கள் கலந்து கொள்ளக் கூடாது என்று கட்சி அறிக்கை ஒன்று வெளியிட்டிருப்பது எனக்குத் தெரியும். உதாரணமாக அண்மையில்,இரண்டு மூன்று கிழமைகளுக்கு முன்பு, கள்ளக்குறிச்சிக்கு அருகே நெசவாளர்களின் காலனி திறப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த நெசவாளர்களின் காலனி திறப்பு விழாவில் மதிப்பிற்குரிய அமைச்சர், கூட்டுறவுத் துறைக்காகப் பாடுபடும் அமைச்சர் கனம் மன்றாடியார் அவர்கள், கலந்துகொள்வதாக இருந்தது. அதே நெசவாளர் காலனி திறப்பு விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் கலந்துக்கொள்வதாகவும் இருந்தது - இந்த மன்றத்திலே இருப்பவர் அல்ல, வெளியே உள்ள எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர். ஆனால் அவர் அந்த காலனி திறப்பு விழாவிற்கு என்று புறப்பட்டுப் போய் பாதி வழி சென்ற பிறகு, அவருக்கு தந்தி வருகிறது, ''வரவேண்டாம்; மந்திரியவர்கள் தன் சுற்றுப்பிரயாணத்தை ரத்து செய்துவிட்டார், விழாவிற்கு அவர்

வரவில்லை'' என்று. என்ன காரணம்? அதுவரையில் வந்தவர், பக்கத்து ஊர் வரை வந்தவர், எதிர்க்கட்சிக்காரர் கலந்துகொள்கிறார் என்ற ஒரு காரணத்திற்காக - அந்தத் தலைவர் அவர்களுக்கு நீண்ட நெடுங்காலமாக, புதிய தொடர்பு ஏற்படுவதற்கு முன்பே, அவர் இவருடைய பழம்பெரும் நண்பராக இருந்தாலும் கூட, கட்சியின் உத்தரவை நிறைவேற்றவேண்டும் என்ற காரணத்தினால் - அந்த இடத்திற்கு வர அச்சப்பட்டு, அமைச்சரவர்கள் கள்ளக்குறிச்சிக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டது. இந்த அளவில் கட்சிக் கண்ணோட்டத்தோடு கூட்டுறவு அமைப்புகள் இயங்கக் கூடாது. அதிலும் மந்திரிகள் அதில் தங்களுடைய செயல்களை ஈடுபடுத்தக்கூடாது என்று நான் கேட்டுகொள்கிறேன். கூட்டுறவு அமைப்பில் இன்றைய தினம் இப்படிப்பட்ட கட்சி வேறுபாடுகளும், கட்சி மாச்சரியங்களும் ஏற்படுவதற்குக் காரணம், அங்கு இருக்கும் தலைவர்கள், அங்கே இருக்கிற அங்கத்தினர்கள் தங்களை யாரும் அசைக்க முடியாது என்ற எண்ணத்தில் இருப்பதினால்தான். இன்றையதினம் அவர்கள் அசைக்கப்படுவதற்கு சட்டமில்லாத காரணத்தினால்தான், 3 வருடங்களுக்கு மேல் ஒருவர் தொடர்ந்து தலைவராக இருக்கக்கூடாது என்ற சட்டம் இந்த மன்றத்தில் வந்து அது நிறைவேற்றப்படாத நிலைமை ஏற்பட்ட காரணத்தினால், யாரும் தங்களை அசைக்க முடியாது என்ற அளவில் உடும்புப் பிடியாக அந்த ஸ்தாபனத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் காரணத்தினால்தான் அவர்கள் எதையும் செய்ய முடிகிறது. அங்கு வேறு யாருக்கும் அங்கே வழி விடுவதில்லை. கூட்டுறவு இயக்கம் ஜனநாயகத்திலே அமைந்திருக்கிற முறையிலே செயல் படாத அளவுக்கு நிலைமை முற்றிவிட்டது. ஆகவே, மீண்டும் இந்த மன்றம் புனராலோசனை செய்து அப்படிப்பட்ட தலைவர்கள் 3 தடவைக்கு மேல் பதவி வகிக்கக் கூடாது என்ற நிலைமையில், 3 தடவைக்கு மேல் பதவி வகிப்பவர்கள் தொடர்ந்து இருக்கக்கூடாது என்ற அளவில் சட்டம் இயற்றுவதற்கு மீண்டும் யோசனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கட்சி மாச்சரியங்களுக்கு கடைசியாக ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன். அரக்கோணம் தாலுகாவில் பணப்பாக்கம் பிர்க்காவில் கூட்டுறவு விவசாய பாங்கில் கடன் தருவதற்காக கடன் கேட்டவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு, கையெழுத்திடவேண்டிய நிலையில், தலைவர் 'யார், இவருக்கா கடன்' என்று புருவத் தை நெறித்து, 'இவர் தேர்தலில் எனக்கு எதிராக இருந்தாரே' என்று கேட்டு, கையெழுத்திட மறுத்துவிட்டதாகச் செய்தி வருகிறது. இவைகளெல்லாம் கூட்டுறவு ஸ்தாபனத்தில் புறையோடக்கூடிய புண்களாக ஆகிவிடாமல் எச்சரிக்கையோடு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நல்ல நோக்கத்தோடு தொடங்கப்பட்ட, இன்றையதினம் வேறு மாநிலங்களை விட விசேஷமாக நடைபெறுகிறது என்று பாராட்டப்பட்டிருக்கிற, கூட்டுறவு இயக்கம் மேலும் மேலும் வளத்தோடும் நல்ல பெயரோடும், சீரோடும், சிறப்போடும், புகழோடும், பொலிவோடும். வளர்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



# கல்விக் கொள்கை மானியம்

**உரை : 11** நாள் : 01.04.1963

**கலைஞர் மு. கருணாநிதி :** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டுள்ள கல்விக் கொள்கையைப் பற்றி என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். நேற்று முன் தினம் இந்தக் கொள்கையைப் பற்றி ஆளும் கட்சி உறுப்பினர் ஈரோடு நண்பர் அவர்கள் பேசும்போது, 'கல்வியைப் பிடித்திருந்த சனி தொலைந்தது' என்று சொன்னார்கள். அவர் பேசிய அந்தத் தினம்கூட சனிக்கிழமைதான். சனி தொலைவதற்கு ஞாயிறு காரணமாக இருந்து கல்விக் கொள்கை என்ற திங்கள் இப்போது வந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறக்கூடும். சனி தொலைவதற்குக் காரணமாக இருந்த ஞாயிறு என்பதற்குச் சூரியன் என்றுகூடப் பொருள் உண்டு. அந்தச் சூரியனை உதயசூரியன் என்று நான் குறிப்பிடுகிறேன் என்று அமைச்சர் அவர்கள் கருதிக்கொண்டால் அதை நான் மறுக்க விரும்பவில்லை. இந்தக் கல்விக் கொள்கை திங்களாக வந்திருக்கிறது என்று நாம் எண்ணிக் கொள்வோமானால் - திங்கள் என்றால் சந்திரன், அந்தச் சந்திரனிலே களங்கம் இருப்பதுபோல் கல்வி கொள்கையிலே இருக்கின்ற களங்கங்களை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. நிலவிலே களங்கம் இருப்பதால் அதனுடைய நேர்த்தி கெட்டு விடுவதில்லை என்று வாதிக்கலாம். நிலவிலே களங்கம் இருக்கலாம். ஆனால் கல்வியிலே களங்கம் இருக்கக் கூடாது. அந்தக் காரணத்தினாலேதான் ''கற்க கசடற...'' என்று பெரியவர்கள் கூறினார்கள். ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'' என்று நம்முடைய நாட்டிலே பழமொழி வழங்கி வருகிறது. கண் எனத்தக்க எண்ணும் எழுத்தும் ஏறத்தாழ 15 ஆண்டுகாலக் காங்கிரஸ் ஆட்சியில் பல்வேறு முறைகளை

அடிக்கடி மாற்றுகின்ற காரணத்தால் எப்பாடுபடுகின்றன என்பதை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. இந்த 15 ஆண்டு காலத்தில் கல்விக்காகச் செலவிடப்பட்டிருக்கின்ற தொகை ஏறத்தாழ 150 கோடி ரூபாய் அல்லது 200 கோடி ரூபாய் இருக்கும். ஆனால், இவ்வளவு பெருந்தொகையைக் கோடிக் கணக்கில் செலவிட்டும், ஏற்பட்டிருக்கின்ற திட்டங்கள் அடிப்படையிலே ஏற்பட்ட குழப்பமோ, மொழிக்கொள்கை அடிப்படையில் உள்ள குழப்பமோ நீங்கிற்றா என்றால் இல்லை.

கடந்த 15 ஆண்டு காலமாக, முதல் தடவை ஏற்பட்டது காங்கிரஸ் சர்க்கார், அடுத்தது கழகத்தினுடைய சர்க்கார், அடுத்தது கம்யூனிஸ்டு சர்க்கார், அடுத்தது காங்கிரஸ் சர்க்கார் என்ற அளவிலே இங்கு சர்க்கார் அமையவில்லை, ஒரே நிலையான சர்க்கார் 15 ஆண்டு காலமாக ஆட்சிப் பொறுப்பிலே இருந்து கல்விக்காக 150 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் அளவுக்குப் பொருந்தொகையைச் செலவழித்து, அதற்குப் பிறகும் இந்தத் துறையிலே குழப்பந்தான் மிச்சம் என்ற நிலைமை இருக்குமானால், உள்ளபடியே எங்களுடைய வருத்தத்தை எப்படித் தெரிவிக்காமல் இருக்க முடியும்? எத்தனை வருஷம் படிப்பது என்பதிலே குழப்பம் ஏற்பட்டு, 11 ஆண்டாக இருந்தது 10 ஆக மாற்றப்பட்டு, மறுபடியும் 11 ஆண்டு என்ற நிலைமைக்குக் குழப்பமும், சரித்திரமும் புவியியலும், சமூகப் பாடம் என்கிற நிலைமையிலே மாற்றப்பட்டு, பிறகு சமூக இயல் பாடங்கள் சரியானவையாக இல்லையென்ற காரணத்தால் மறுபடியும் சரித்திரம், புவியியல் என்று செய்ய வேண்டுமென்ற குழப்பமும், விருப்பப் பாடம் இருந்து, இடையிலே நீக்கப்பட்டு மறுபடியும் வேறு உருவில் வந்திருக்கிற குழப்பமும், ஆறாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் படித்தால் போதும் என்று சொல்லி, மறுபடியும் மூன்றாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் படிக்கவேண்டுமென்ற இத்தகைய குழப்பமும், வடி கட்டும் முறை முதலிலே இருந்து பின்னர் நீக்கப்படுகிற குழப்பமும், கல்வியைப் பொறுத்த அளவிலே கடந்த 15 ஆண்டு காலத்திலே ஏற்பட்ட பயங்கரமான குழப்பங்கள் ஆகும். பயங்கரமான குழப்பங்கள் என்று ஏன் சொல்லுகிறேன் என்றால், கல்வியிலே இளம்சிறார்கள், பிஞ்சு மனம் படைத்தவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதுதான். அவர்கள் ஈடுபட்டிருக்கின்ற இந்தத் துறையிலே அவர்களுடைய

எதிர்கால வாழ்க்கையோடு விளையாட்டு நடத்துவது போல் வேதனையான விளையாட்டுக்களைக் கடந்த 15 ஆண்டுக் காலமாக ஏறத்தாழ 200 கோடி ரூபாய் செலவிலே நடத்தி வருவது முறைதானா, தர்மமா, நியாயமா, நேர்மையா என்பதை உள்ளபடியே சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அன்றையதினம் புலவர் கோவிந்தன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு 'அப்படியானால் இப்போது ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லையா?' என்று கேட்டார்கள். அது வேறு பிரச்சினை. இப்போது ஏற்பட்டிருக்கும் மாற்றங்களைக் குறித்து எங்களுடைய கருத்தைத் தெரிவிக்கும் நேரத்தில், இப்படிப் பலவிதமான மாற்றங்களை, 15 ஆண்டு காலமாக ஒரே நிலையான சர்க்காராக இருந்தும் நீங்கள் செய்ததற்கு என்ன காரணம்? ஆளும் கட்சி கனம் உறுப்பினர் திரு. பழனி அவர்கள், 'இப்போது வந்திருக்கும் திட்டந்தான் ஒழுங்கான முறையில் போடப்பட்ட அருமையான திட்டம், இந்தத் திட்டத்தைத் தயாரித்தவர்கள் அறிஞர்கள் என்று புகழத்தக்கவர்கள்' என்று சொன்னார்கள், அப்படியானால் போன தடவை திட்டம் போட்டது யார்? இப்போது போடப்பட்ட திட்டந்தான் ஒழுங்கானது, அறிவுடைமைக்கு ஏற்ப போடப்பட்ட திட்டம், இதைப் போட்டவர்கள்தான் அறிஞர்கள் என்றால், இதற்கு முன்பு குழப்ப நிலைமையில் திட்டங்களைப் போட்டவர்கள் யார்? வேடிக்கையாக ஒவ்வொரு தடவையும் ஆளும் கட்சியின் சார்பிலே கல்வித் துறையிலே குழப்பங்களை ஏற்படுத்துவதும், கட்சிக் கட்டுப்பாட்டின் காரணமாக அதற்கு ஆளும் கட்சியினர் ஆதரவு கொடுப்பதும், அவ்வப்போது மாறுதல்களைச் செய்வதும் நியாயந்தானா? 'அப்படியானால் இந்த மாறுதலை, இப்போது ஏற்பட்டிருக்கும் மாறுதலை நீங்கள் விரும்ப வில்லையா?' என்று புலவர் கோவிந்தனைப் பார்த்துக் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். சாதாரண உதாரணந்தான், வீட்டிலே சாப்பிடுகிற நேரத்தில் சமையல்காரன் குழம்பிலே புளியை அதிகமாகக் கரைத்து விட்டான் என்று சொன்னதும், அதைச் சரிக்கட்ட உப்பைப் போட்டு, உப்பு அதிகமாகிவிட்ட காரணத்தால் தண்ணீரைக் கொட்டி, பிறகு புளி,

உப்பு இல்லாத காரணத்தால் மறுபடியும் அவற்றைப் போட்டு 'ஏற்றுக்கொள்ளுகிறீர்களா?' என்று கேட்டால், அன்றைய தினத்தில் வேண்டுமானால் சாப்பாட்டை ஏற்றுக் கொள்ளலாமே தவிர, சமையல்காரனைத் தொடர்ந்து ஏற்றுக் கொள்ள முடியுமா என்பதைப்பற்றி யோசிக்கத்தான் வேண்டும். இப்படிப்பட்ட குழப்ப நிலைமையில் 15 ஆண்டு காலமாக 200 கோடி ரூபாய் செலவழித்த பிறகு, இப்போது மாறுதல் செய்து ஒழுங்கான திட்டத்தை வகுத்து இந்த மன்றத்திலே வைத்திருக்கும் நிலையில், எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அத்தனை பேருடைய உள்ளத்து உணர்ச்சிகளுக்கும் மதிப்பளித்து இந்த திட்டத்தை நிலையாக ஆக்குவதற்கு நீங்கள் முயற்சி எடுக்கவேண்டும் என்பதற்காகத் தான் நான் இதைக் குறிப்பிட்டுக் காட்டினேன்.

கல்வித்துறை வட்டாரங்களில் புனர் பரிசீலனை செய்யப்பட்டு தான் இப்போது இத்திட்டம் வந்திருப்பதாக கொடுக்கப் பட்டிருக்கிற இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. புனர் பரி சீலனை செய்யப்பட்டதின் அழகு எப்படியிருக்கிறது. புனர் பரிசீலனை செய்யப்பட்டு மன்றத்திற்கு வந்த பிறகு சரித்திரத்திலும், புவியியலிலும் பரீட்சை வேண்டுமென்று திருத்தம் தரப்படுகிறது. இந்த வெள்ளை அறிக்கை வெளியான பிறகு தமிழகத்தில் உள்ள ஆசிரியர்களும், கல்வித்துறை நிபுணர்களும் அவர்கள் கோரிக்கைகளை அதற்குப் பிறகுதான் தெரிவிக்க நேரம் தரப்பட்டு சரித்திரத்திலும் புவியியலிலும் பரீட்சை வேண்டுமென்று வலியுறுத்துகிற நிலையில், திருத்தம் ஆளும் கட்சியினரால் இன்றைய தினம் கொண்டு வரப் பட்டிருக்கிறது. இப்போதாவது ஒழுங்கான முறையில் புனர்பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறதா? கலக்கவேண்டி யவர்கள் அத்தனை பேர்களும் கலக்கப்பட்டிருக்கின்றனரா? அடிமட்டத்திலுள்ள ஆசிரியர்களின் எண்ணங்கள் சரியாக அறியப்பட்டிருக்கின்றவா? என்ற ஐயப்பாடு திடீரென்று திருத்தம் வந்த பிறகு எனக்கு ஏற்படுகிறது. இத்திட்டப்படி மூன்றாம் படிவத்திலுள்ள மாணவனின் பாடத்திட்டங்கள் ஏறக்குறைய ஏழாம் வகுப்பு மாணவனுக்கு இருக்கிறது. மூன்றாம் படிவ மாணவன் ஒன்பதாம் வகுப்புக்குச் செல்ல

முடிகிறது. ஏழாம் வகுப்பு மாணவனுக்கு மூன்றாம் படிவ பாடத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தாலும், ஏழாவதில் இருந்து எட்டாவதுக்குத்தான் செல்ல முடிகிறது. இனி ஒரு பரிதாப நிலை, சென்னை போன்றயிடங்களில் மூன்றாம் படிவத்தில் இடம் இல்லாததால் ஏழாம் வகுப்பிற்குச் சேர்க்கப்பட்டு இன்றைய தினம் கல்விக் கொள்கை மாற்றத்தால் மூன்றாம் படிவத்தில் இடம் இல்லாது ஏழாம் வகுப்பிற்குச் சென்ற மாணவன் எங்கே செல்வது என்ற கவலை மாணவர் வட்டாரத்தில் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அமைச்சர் அவர்கள் என்ன தீர்வு காணப்போகிறாரோ தெரியவில்லை.அவர்கள் பதிலில் அதைக் கூறுவார்கள் என்று ஆவலோடு நான் எதிர்பார்க்கிறேன்.

அடுத்து, வட்டார மொழிகளை போதனை மொழிகளாக ஆக்க வேண்டும், பயிற்சி மொழிகளாக ஆக்கவேண்டுமென்ற கொள்கை இன்று நேற்றல்ல ஏற்பட்டது. இந்த மன்றத்தில் உள்ள ஆளும் கட்சி கனம் அங்கத்தினர்களுக்கு நான் பெருமையோடு சொல்லிக் கொள்வேன். ''நாஷனல் லாங்குவேஜ் பார் இந்தியா'' என்ற புத்தகம் 1941-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் மதிப்பு மிகுந்த பண்டித நேரு அவர்கள் எழுதியுள்ள மொழிப்பற்றிய கட்டுரையில் குறிப்பிடுகிறார், ''பல்கலைக் கழக கல்வி அந்தந்தப் பிராந்திய, வட்டார மொழியில் இருந்து தீரவேண்டும்'' என்று கூறியிருக்கிறார்கள். இப்படி எடுத்துரைத்திருப்பது நேரு அவர்கள் மட்டுமல்ல, நாவலர் சோமசுந்தர் பாரதி அவர்கள் 20-5-1948இல் திருச்சி வானொலியில் பேசும்போது குறிப்பிட்டார்கள். 'ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மனி முதலிய பிறமொழிகளில் திறம்பட எழுதிய அறிவு நூல் அனைத்தையும் மொழி பெயர்த்து உதவத் தூண்டுதல் வேண்டும். இன்னும் மேதைகள் ஆராய்ந்து தெளிந்த அரும்பொருள் பற்றி அவர்களைக் கொண்டு புதிய நூல்களை ஆக்குதல் வேண்டும். இருவகை நூல்களும் உயர்தரப் பள்ளிகள், பெரிய கல்லூரிகள் எங்கும் அருந்திறன் உடைய பேராசிரியரால் பயிற்றப்படுதல் வேண்டும். அயராது இந்த முறை கையாளின் உயர்தரக் கல்விக்கு ஆங்கிலப் பயிற்சியை ஐயிரண்டாண்டில் அறவே விடலாம்.'' பத்து ஆண்டுகளில் ஆங்கிலப் பயிற்சியை

அறவே விடும் அளவு இந்த நூல் எழுதப்படவேண்டுமென்று நாவலர் சோமசுந்தர பாரதியார் கூறியிருக்கிறார் 1948இல். 1947இல் காங்கிரஸ் ஆட்சி அமைகிறது. அதற்கு நேரு அவர்கள் தலைவராக அமைகிறார். அவர் எழுதிய புத்தகத்தில் அந்தந்த வட்டார மொழிகளில்தான் கல்லூரிப் பயிற்சிமொழி இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு நாட்டில் தொழில்கள் வளரவும், திட்டங்கள் பெருகவும், அறிவு செழிக்கவும், ஆற்றல் பொங்கிடவும் அடிப்படையானது கல்வி. ஆக, பயிற்சி மொழி அந்தந்த வட்டார மொழியில், அந்தந்தப் பிராந்திய மொழியில் இருக்கவேண்டுமென்றது நேரு போன்ற பெரும் தலைவர்கள் ஒப்புக் கொண்ட உண்மை. ஆனால், கல்லூரிகளில் வட்டார மொழியில் கல்வியைப் பரப்ப என்ன முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது? முயற்சி எடுத்தோம், ஆனால் அந்த முயற்சிகள் வெற்றி அளிக்கும் அளவிற்கு அவகாசம் இல்லாமல் போய்விட்டது, தயக்கம் ஏற்பட்டுவிட்டது என்றெல்லம் இன்றைய தினம் நம் கல்வி அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கல்லூரித் தமிழ் குழு 1960-ஆம் ஆண்டில் இந்த மன்றத்தில் சமர்ப்பித்த செயல் நிலை அறிக்கையில் தமிழ்குழுத் தலைவர் திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் இந்த சட்டமன்றத்தில் சமர்ப்பித்த கல்லூரி செயல் நிலை அறிக்கையில் என்ன குறிப்பிடுகிறார்கள்? ஆசிரியர்கள் இந்த போதனா மொழியில் அக்கறை காட்டவில்லையா? அக்கேள்விக்கு திரு. தாமோதரன் அவர்கள் அறிக்கையில் அழகாகப் பதில் அளித்திருக்கிறார்கள். ''தமிழில் கல்லூரிப் பாடங்களை நடத்துவதற்கு ஆசிரியர்களின் ஆர்வமும், தகுதியும் எந்த நிலையில் இருக்கின்றன என்பதை அறிந்து கொள்ளக் குழு விரும்பிற்று. அதன்படி ராஜ்யத்தில் உள்ள எல்லாக் கல்லூரிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. பல்வேறு கல்லூரிகளிலிருந்து வந்த பதில்கள் கல்லூரித் தமிழ் குழுவினருக்கு மிகவும் உற்சாகமூட்டக் கூடியவைகளாக இருக்கின்றன. தமிழில் பாடங்களை நடத்துவதற்கு ஆசிரியர்கள் ஊக்கம் காட்டியிருக்கின்றனர். ஓரளவேனும் தயக்கம் இருக்கக் கூடும் என்று நினைத்த குழுவினருக்கு இந்த மகிழ்ச்சியான முடிவு எதிர்பாராததாக அமைந்தது'' என்று சொல்லி

யிருக்கிறார்கள். ஆசிரியர்கள் அக்கறையோடு இதை வரவேற்கிறார்கள் என்பதற்கு இதை விட வேறு என்ன சான்று வேண்டும்? கலைச்சொற்கள் கிடைக்கவில்லையா? தமிழில் பயிற்சி மொழியை, ஆர்வத்தோடு பரப்ப கலைச் சொற்கள் கிடைக்காமல் போய் விட்டனவா? அதுபற்றியும் திரு. தாமோதரன் அவர்கள் இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக் கிறார்கள். ''கல்லூரித் தமிழ்க் குழுவினரின் முதல் கவனம் கலைச் சொல்லாக்கத்தில்தான் சென்றது. கல்லூரியில் இருந்தும் கல்வி நிபுணர்களிடமிருந்தும் பட்டியல்கள் உரிய காலத்தில் திரும்பி வந்தன. அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்ட கல்வி நிபுணர்கள் தங்கள் கருத்துக்களையும் திருத்தங்களையும் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள பெரு மக்கள் இவ்வாறு ஒத்துழைத்த செயல், குழுவினருக்கு மிகவும் ஊக்கம் ஊட்டுவதாக இருந்தது'' என்று கூறியிருக்கிறார்கள். பிறகு என்ன வேண்டும்? அப்படிக் கிடைத்த கலைச் சொற்களைப் பரப்ப வழியில்லாமல் போய் விட்டதா? அதற்கும் பதில் தருகிறார். ''இவ்வாறு முடிவு செய்யப்பட்ட கலைச் சொற்களை ஒன்று சேர்த்து சென்னையில் உள்ள அரசாங்க அச்சுக்கூடமும், கோவை கலைக் கதிர் அச்சுக்கூடமும், 14 பட்டியல்களை மூன்றே வாரங்களில் அச்சிட்டுக் கொடுத்தன'' என்று குறிப்பிட்டிருக்கிறார். பிறகு என்ன? பாட நூல் வெளியிட கலைச் சொற்கள் அமைய வழி காணவில்லையா? ''பாட நூல்களைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும், ஒவ்வொரு குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழுக்கள் தகுந்த பாட நூல்களைத் தேர்ந்தெடுத்து தெரிவித்தது. முதலாண்டில் புத்தகங்களுக்கு அதிக கிராக்கி இருக்க முடியாது என்பதால் பிரசுரகர்த்தாக்கள் தயக்கம் காட்டினர். 1963-ல் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ் பயிற்சி மொழி ஆகும்போது புத்தகங்களுக்கு நல்ல கிராக்கி இருக்குமென்று குழு உறுதி கூறியது''. புத்தகங்களை வெளியிட்டார்களா? இடையில் ஒன்று சொல்லப்படுகிறது. லண்டன் போன்ற நகரங்களில் உள்ள இந்திய நாட்டு பிரசுரகர்த்தாக்கள் பிரதிநிதிகள் காட்டிய தாமதத்தால் மொழி பெயர்ப்பிற்கான உரிமை கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. அது பற்றி கூறும்போதும், ''மொழி

பெயர்ப்பு உரிமை பெறுவதற்கு சில நூல்களுக்குத் தாமதம் ஏற்பட்டது. ஆனால், இப்படி நேர்ந்து விட்டால் என்ன செய்யலாம் என்று ஒரு மாற்றுத் திட்டத்தை குழு முதலிலேயே எண்ணி வைத்திருந்தது. அதன்படி அந்தந்தப் பாடத்தில் சிறந்த புலமையும் தெளிவும் கொண்ட நிபுணரைத் தேர்ந்தெடுத்து தமிழில் புத்தகம் எழுதச் செய்வது என்று முடிவாயிற்று. குழுவின் முயற்சி வீண் போகவில்லை. வெளியிடுவோரும் நூல் ஆசிரியர்களும் காட்டுகின்ற ஆர்வத்தை பார்க்கும்போதும் அரசாங்க ஆதரவையும் தாராள மனப்பாங்கையும் காணும்போதும், ஜூன் மாதத்துக்குள் சிறந்த நூல்களை வெளியிடுவதில் வெற்றி காணமுடியும்'' என்று குறிப் பிட்டிருக்கிறார். 1960 ஜூனுக்குள் நூல்கள் வெளியிடுவதில் வெற்றி காணமுடியும்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். 1960 ஜூனுக்குள் நூல்கள் வெளியிடுவதில் வெற்றி காணலாம் என்று கூறியிருப்பதுபோல் நூல்கள் வெளிவந்திருக்கின்றனவா? 52 புத்தகங்களின் பட்டியல் என்னிடம் இருக்கிறது. பொருளாதாரம், பொது அறிவியல், வரலாறு, இந்திய அரசியல் அமைப்பு... இன்ன பிற 52 நூல்களின் பட்டியல் என்னிடம் இருக்கிறது. 1961-62-இல் அரசாங்கச் செலவில் 57,883 ரூபாய் செலவில் 37 புத்தகங்கள் தயாராகியிருக்கின்றன. ஆக கலைச்சொற்கள் இல்லாமையினால் தமிழைப் பயிற்சி மொழியாகப் பரப்ப இயலவில்லை என்று சொல்வது சரியான காரணமாகாது. செயல் நிலை அறிக்கை கடைசியாக ஒன்று குறிப்பிடுகிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் பேச்சிலே குறிப்பிட்ட வாசகத்திற்கான பதில்தான் அது 'சிக்கல்கள் அதிகம் இருக்கின்றன, பிரச்சினைகள் அதிகம் இருக்கின்றன, நிறைவேற்ற முடியவில்லை' என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1960-ஆம் ஆண்டில் கல்லூரித் தமிழ்க் குழு செயல் நிலை அறிக்கையில் -

''பல்கலைக் கழகப் போதனா மொழியாகத் தமிழை ஆக்குவதில் உள்ள பிரச்சினைகளையும் சர்க்கார் அறியாமல் இல்லை, சிக்கல்களை நினைத்துக் கொண்டிருந்து செயலிலே தளர்ந்தால் குடியாட்சித் தத்துவம் வெறும் ஏட்டுச் சுரைக்காய் ஆகிவிடும். மேலும் ஆக்கச் சிந்தனை வளர்வதற்கு இந்நாட்டு மக்களுக்கு என்றுமே வாய்ப்பு ஏற்பட முடியாமல் போய்விடும்'' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்வளவுக்கும் பிறகு செயல் நிலைக் குழுவினுடைய தலைவர் 'சிக்கல்களைப் பற்றி கவலைப் படாதீர்கள், குடியாட்சித் தத்துவத்தை உணருங்கள்' என்று சொன்ன பிறகும் கூட, தளரா உள்ளம் படைத்த நம்முடைய அமைச்சர் பெருந்தகை இதிலே தயக்கம் காட்டுவானேன்? உள்ளபடியே செயல் முறையிலே ஏற்பட்ட தயக்கமாகக் கருதவில்லை. சிந்தனையிலே ஏற்பட்ட தயக்கமாகத்தான் நான் அதை கருதுகிறேன்.

அன்றைக்கு 'இரண்டு அமைச்சர்களுக்குள்ளேயே போராட்டம்' என்று குறிப்பிட்ட போது, 'எங்களுக்குள்ளேயே போராட்டத்தை மூட்டிவிட விரும்புகிறீர்களா? அதைக் கொஞ்சம் விளக்குங்கள்' என்று கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்களைப் பார்த்து அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நான் அதை விளக்க விரும்புகிறேன்.

நம்முடைய பழைய கல்வி அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் இந்த மன்றத்தில்தான் வீரா வேசத்துடன் பேசினார்கள்.

''என்றாவது ஒரு காலத்தில் இந்த மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்களில் ஏதாவதொன்றில் ஆங்கிலம் போதனா மொழியாக இல்லாமல் போகுமேயானால் அந்த இடம் தமிழ் மொழிக்குக் கிடைக்குமே தவிர இந்திக்கு அல்ல என்பதை இந்த அரசாங்கம் திட்டவட்டமாகக் கூற விரும்புகிறது'' என்று பழைய கல்வி அமைச்சரவர்கள் இந்த மன்றத்திலேதான் வீரக்குரல் எழுப்பினார்கள். இப்படி வீர நெஞ்சத்தோடு...

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : நானும் கல்வி அமைச்சர் பொறுப்பை ஏற்ற இரண்டு நாட்களுக்குள்ளாக இவ்வாறு வீர முழக்கம் செய்யாவிட்டாலும், இதை அப்படியே திட்டவட்ட மாகத் தெரிவித்தேன். தியாகராயக் கல்லூரியில் கல்லூரி ஆசிரியர்கள் மாநாட்டில் பேசும்போது நான் இதை நன்றாகச் சொன்னேன்.

**கலைஞர். மு. கருணாநிதி** : இந்தி அளவிலே அதைக் கூறி இருக்கலாம். தமிழைப் பயிற்சிமொழி ஆக்கவேண்டுமென்று கூறவில்லை என்பதைக் குறித்து நான் வருத்தம் தெரிவிக்காமல் இருக்க முடியாது.

இன்றைய கல்வி அமைச்சர் அவர்களின் தயக்கத்திற்குக் கூறும் காரணங்களில் ஒன்றிரண்டை நாம் ஆராயவேண்டும்.

‘‘பிராந்திய மொழிகளோடு ஆங்கில மொழியும் கல்லூரிகளில் பயிற்சி மொழியாக இருக்கவேண்டும் என்று தேசீய ஒருமைப்பாட்டுக் குழுவினர் ஆலோசனை வழங்கி இருக்கிறார்கள். ஒரு சிலர் வற்புறுத்துவதுபோல் பல்கலைக் கழகத்தில் தமிழ் மட்டும் பயிற்சி மொழியாக இருந்தால் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள்’’. இது நம்முடைய அமைச்சர் அவர்களின் திருக்கரத்தால் எழுதப்பட்ட வாதங்கள். ‘பயிற்சி மொழிப் பிரச்சினை’ என்ற பெயரால் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினுடைய வெளியீடாக வந்திருக்கும் புத்தகத்தில்தான் அவர் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்.

இதற்கு உடனடியாகப் பதிலை இன்றைய கல்வி அமைச்சருக்கு அன்றைய கல்வி அமைச்சர் மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். ‘‘பயிற்சி மொழிப் பிரச்சினை’’ என்கிற இன்றைய கல்வி அமைச்சருடைய புத்தகமும். ‘‘தமிழால் முடியும்’’ என்கிற அன்றைய கல்வி அமைச்சருடைய புத்தகமும் இருக்கின்றன, இரண்டு புத்தகங்களையும் நான் இங்கே பேச வைக்க விரும்புகிறேன்.

இன்றைய கல்வி அமைச்சர் கூறிய அந்த வாசகத்திற்கு அன்றைய கல்வி அமைச்சர் தந்திருக்கும் பதில் என்ன?

‘‘ஆங்கிலம் வளமுள்ள மொழி, உலகிலெல்லாம் வியாபித்துள்ள மொழி, ஆனால் நம்முடைய கல்வி பயனுள்ளதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மொழியையும் பயன்படக்கூடிய முறையிலே உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும், என்கிறபோது தாய் மொழியல்லாத ஒரு மொழி இருக்கிறவரையில் கருத்துக்களைப் புரிந்து கொள்ள முடியாது. சிந்தனா சக்தி வளர்ச்சி ஏற்படாது. அந்த அடிப்படையில் பார்க்கும்போது ஆங்கிலத்திற்கு இடமில்லை. வட்டார மொழிதான் போதனா மொழியாக அமையவேண்டு மென்பதில் யாருக்கும் அபிப்பிராயபேதம் இருக்க இடமில்லை’’ என்று அவர் குறிப்பிடுகிறார்.

அடுத்து இன்றைய கல்வி அமைச்சர் இன்னொரு இடத்தில் ''ஒரு சிலர் வற்புறுத்துவது போல் பல்கலைக் கழகத்தில் தமிழ் மட்டும் பயிற்சி மொழியாக இருந்தால் தேசீய ஒருமைப்பாடு பாதிக்கப்படும்... பல்கலைக்கழகங்கள் எல்லாம் தனித்தனி ஸ்தாபனங்கள் ஆகி பிரிவு மனப்பான்மை வளர இடம் ஏற்பட்டு விடும்'' என்று 'பயிற்சி மொழிப் பிரச்சினை' என்கிற புத்தகத்தில் குறிப்பிடுகிறார்.

அன்றைய கல்வி அமைச்சர்-''சர்வகலாசாலை போதனை மொழி பற்றி அகில இந்திய ரீதியிலும் சிந்திக்கப்பட்டது. சர்வ தேச மொழி என்ற முறையில் ஆங்கிலத்தை ஒரு மொழியாகக் கற்பது அவசியம் என உணரப்பட்டாலும், ஆங்கிலத்தில் பாடங்களைப் போதிப்பது கூடாது'' என்று 'தமிழால் முடியும்' என்கின்ற புத்தகத்தில் கூறி இருக்கிறார்.

இன்றைய கல்வி அமைச்சர் என்ன கூறுகிறார்?

உலகில் உள்ள எல்லா நாடுகளும் தங்களுடைய நாட்டுக் குழந்தைகளுக்கு அந்தந்த நாட்டுத் தாய்மொழியுடன் பிற மொழிகளையும் கற்றுத் தருகிறார்கள். எகிப்து நாட்டில் அராபிய மொழியுடன் ஆங்கிலம் கற்றுத் தரப்படுகிறது. ரஷ்ய நாட்டில் பல பிரதேசங்களில் ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும் போது தமிழ் நாட்டில் மொழிப் பிரச்சினை அர்த்தமற்றது என்றே தோன்றும்,'' என்று கூறியிருக்கிறார்.

இதற்கு அன்றைய கல்வி அமைச்சர் கூறுவதென்ன?

''உலகில் உள்ள எந்த நாடுகளைப் பார்த்தாலும், அவரவர்களுடைய மொழியிலே பாடம் சொல்லிக் கொடுக்கும்போது, ஆங்கில மொழியையும் கூடவே கற்றுக் கொள்ள முடியும் என்று ஏற்படுகிறது. ஆங்கிலத்தைப் போதனா மொழியாக இல்லாமலே கற்றுக்கொள்ள முடியும் என்பதை அவர்கள் நிரூபித்திருக்கிறார்கள். நம்முடைய குழந்தைகளுக்கு அறிவுக்குறைவா? திறமைக் குறைவா? என்றுதான் நான் கேட்கிறேன்''. என்று அன்றைய கல்வி அமைச்சர் இன்றைய கல்வி அமைச்சரைப் பார்த்துக் கேட்கிறார்.

'பரீட்சார்த்தமாகக் கோவையில் தமிழைக் கல்லூரிப் பயிற்சி மொழியாக்கும் திட்டத்திற்குப் போதிய மாணவர்கள் வரவில்லை' என்பது இன்றைய கல்வி அமைச்சரவர்களுடைய வாதம். இன்றைய கல்வி அமைச்சருடைய இந்த வாதத்தை, அன்றைய கல்வி அமைச்சர் எப்படித் தீர்த்து வைக்கிறார்?

''இப்பொழுது நாம் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஆக்கி, சட்டம் வகுத்து அது ஆட்சி மொழி ஆகிக்கொண்டும் வருகிறது, கூடிய சீக்கிரம் எல்லா விவகாரங்களும் இங்கு தமிழிலேயே நடக்கும். அப்படியிருக்கும் போது ஆங்கிலம் படித்தவர்கள் இந்த நிர்வாகத்தை எப்படி நடத்த முடியும்? முடியாது. ஆகவே தமிழ் படித்தவர்களுக்குத்தான் உத்தி யோகத்தில் முதல் இடம் கொடுக்கப் போகிறோம் என்றால், தானாகவே இதற்கு முக்கியத்துவம் வந்து விடும்'' என்று அன்றைய கல்வி அமைச்சர் அருமையாகப் பதில் சொல்கிறார்.

இன்றைய கல்வி அமைச்சர் ''நக்கீரர், திருமுருகாற்றுப் படையில், 'தமிழகம் உவப்ப, பாரதம் உவப்ப' என்று கூறவில்லை, 'உலகம் உவப்ப' என்று தெளிவாக்கியதின் மூலம் அவருடைய உலகக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்தி யிருக்கிறார்'' என்று சொல்கிறார்.

இதற்கு அன்றைய கல்வி அமைச்சர் -

''மொழியைப் பற்றிப் பேசும்போது - உலகத்தைப்பற்றிப் பேசியவர்கள், நாட்டை மறந்து விட்டார்கள், நாட்டைப் பற்றிப் பேசியவர்கள் உலகத்தை மறந்துவிட்டார்கள் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்'' என்று கூறியிருக்கிறார்.

இதை நான் எடுத்துச் சொல்வதற்குக் காரணம், ''பயிற்சி மொழிப் பிரச்சினை'' என்ற பெயரில் நம்முடைய கல்வி அமைச்சர் வெளியிட்டிருக்கும் புத்தகத்தில் சில கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள் என்பதற்காகத்தான். உள்ளபடியே சட்ட மன்றத்தில் அவரைக் காணும் நேரத்தில் மென்மையான குரலில், சில நேரங்களில் எதிர்க் கட்சிகளைக் குத்த வேண்டு மென்பதற்காக உபயோகிக்கும் சில வார்த்தைகளைத் தவிர, அத்தனை வார்த்தைகளும் தென்றலாக விழும், அப்படிப்பட்ட

கல்வி அமைச்சரை இங்கே சந்தித்திருக்கிறேன். ஆனால், 'பயிற்சி மொழிப் பிரச்சினையில்' சந்தித்திருக்கிற கல்வி அமைச்சராக இருக்கிற அவர் மிக மிக முரட்டுத்தனம் வாய்ந்த கல்வி அமைச்சராக இருக்கிறார் (எதிர்க்கட்சித் தரப்பில் ஆரவாரம்).

சட்டமன்றத்திலே சொல்லும் நேரத்தில் என்னென்ன மொழிதான் இங்கே அனுமதிக்கப்படலாம். எந்த அளவுக்கு நாகரிகமாகத் தாக்க வேண்டும் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால், நான் அவருடைய இந்தப் புத்தகத்திலே தேடி எடுத்த வார்த்தைகளைச் சொல்கிறேன். தமிழை போதனா மொழி ஆக்கவேண்டுமென்று வலியுறுத்துகிற கட்சியைப் பற்றி அவர் குறிப்பிட்டிருக்கும் வாசகங்கள் என்ன? 'வழி இல்லாதவர்கள்', 'இழிதகையாளர்', 'மூடத்தனம் கொண்டவர்', மாமேதையர்', 'பேதைகள்', 'தேம்பி அழும் திருக்கூட்டத்தார்' என்கிற இத்தகைய வாசகங்கள் வெட்கக்கேடான நிலைமையை உண்டாக்கியிருக்கின்றன. எதிரே காணும் நேரத்தில் மென்மை யாகவும், மிருதுவாகவும் பழகிக் கொண்டிருக்கும் நம்முடைய கல்வி அமைச்சரா அப்படி எழுதினார் என்று நாங்கள் வியப்படையும் அளவுக்கு அந்த நூலில் இத்தகைய வாசகங்கள் போடப்பட்டிருக்கின்றன. சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வர்களும், தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களும், கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும், தமிழை போதனா மொழி ஆக்கவேண்டு மென்று கல்வி அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தில் இரண்டொரு இடங்களில் பிழைகள் இருந்தன. அந்தக் கடிதத்தைப் புத்தகத்தில் எடுத்து போட்டு 'ஒழுங்காகத் தமிழில் கடிதம் எழுதத் தெரியாதவர்கள், தமிழ் போதனா மொழியைப் பற்றிப் பேசுவதா?'' என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குக் கோபமா படுவது? இந்த நிலைமை இருக்கிறதே என்று வருத்தம் அல்லவா படவேண்டும்? இப்படிப்பட்ட கடிதங்கள் எழுதப்படுகிற நிலைமை இருக்கிறதே, தமிழுக்குச் சரியான ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கப்படவில்லையே என்று வருத்தம் அல்லவா பட்டிருக்கவேண்டும்? இப்படியா புத்தகத்தில் போட்டு உலகத்திற்குக் காட்டுவது 'எங்களுடைய தமிழின் இழிநிலையைப் பார், தமிழ் தாழ்ந்து கிடக்கும் கோரத்தைப் பார்' என்று உலகத்திற்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பவர்கள்

எழுதிய அந்தப் புத்தகத்திலாவது பிழை இல்லாமல் இருக்கிறதா? 'தெய்வீகம்' என்பதற்கு 'தெய்விகம்' அதைப்போல 'உலக வழக்கு' என்பதற்கு 'உலகவாழ்க்கை' என்று குறிப்பிட்டிருக்கிறது. அதற்காக ''இந்தப் புத்தகத்தை எழுதியவருக்குத் தமிழ் அறிவு இருக்கிறதா?'' என்றா கேட்டுவிடுவது? அந்தக் கடிதத்திலே வந்த பிழையைக் காட்டுவதற்கு, மந்திரியினுடைய மனதிலே இருக்கும் பிழைகளைச் சேர்த்து, 'உங்களுக்குத் தமிழை வளர்க்க என்ன போக்கியதை இருக்கிறது?' என்று கேட்கும் முறையில் 'மூடத்தனம்', 'இழிதகையாளர்' என்றெல்லாம் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது உள்ளபடியே என் போன்றவர்களுடைய உள்ளத்திலே மிகுந்த வேதனையை அளித்திருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது.

கடைசியாக, நான் இங்கே கொடுத்திருக்கும் திருத்தத்தைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்தி மொழியில், அதாவது இரண்டாவது மொழியில், இந்தி அல்லது இந்திய மொழிகளில் ஒன்று என்ற பகுதியில் பொதுத் தேர்வு இருத்தல் ஆகாது' என்ற திருத்தத்தை நான் இங்கே கொடுத்திருக்கிறேன். அதை வலியுறுத்தவும் போகிறேன். அந்தத் திருத்தத்தைப் பற்றிக் குறிப்பிடும் நேரத்தில் திரு. மணி மொழியார், பேசும்போது 'இந்தியிலே பரீட்சை வேண்டாமென்று சொல்கிறீர்களே, சரித்திரத்திலே புவியியலிலே பரீட்சை வேண்டுமென்கிறீர்களே, என்ன அர்த்தம்?' என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நான் அப்போது குறிக்கிடுவது முறையல்ல. இப்போது அதற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். 'ஆறு வயது பெண்ணுக்கும் அறுபது வயதுக் கிழவனுக்கும் திருமணம் வேண்டாம்' என்றால் உடனே அப்படித் திருமணம் வேண்டாமென்று சொன்னவனைப் பார்த்து, ஒரு வாலிபமான பையனுக்கும், யவனமான மங்கைக்கும், திருமணம் நடைபெறும் நேரத்தில், 'அன்றைக்கு ஆறு வயதுப் பெண்ணுக்கும், அறுபது வயது கிழவனுக்கும் திருமணம் வேண்டாமென்று சொல்லிவிட்டு இப்போது மாத்திரம் எப்படி ஒத்துக் கொள்கிறாய்' என்று கேட்பது?

(சிரிப்பு)

இந்திப் பரீட்சை கிடையாது என்று நீங்கள் முதலில் சொன்னீர்களே, கனம் சபாநாயகர் மூலமாக நான் கனம் கல்வி அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் சொன்ன நேரத்தில் எல்லாப் பாடங்களுக்கும் பரீட்சையை எடுத்துவிட்டா சொன்னீர்கள்? எந்தப் பாடத்திற்கும் பரீட்சை கிடையாது, இந்திக்கும் கிடையாது என்றா சொன்னீர்கள்? மத்திய அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் டில்லி ராஜ்ய சபா மன்றத்தில், 'என்ன காரணம் பற்றியோ தமிழ் நாட்டில் இந்திப் பரீட்சையை எடுத்து விட்டார்கள்' என்று கோபத்தோடு சூசகமாக எடுத்துக் காட்டி, 'இது தேசீய ஒருமைப்பாட்டு தீர்மானத்திற்கு ஒத்தது அல்ல, அதற்கு முரணானது' என்று சுட்டிக் காட்டிய பிறகு, நமது அமைச்சர் பெருந்தகை அவர்கள் இங்கே நிருபர்களிடத்தில் பேசியபோது வீரத்துடன் பதில் கொன்னார்கள். என்ன சொன்னார்கள்? இந்திப் பரீட்சை கிடையாது என்று சொன்னார்கள். அதற்காகப் பாராட்டுதலை இந்த மன்றத்தில் பெற்றார்கள். இந்திப் பரீட்சை கிடையாது என்று கூறிய அவர், அதற்கு முன்பு பத்திரிகை நிருபர்களைக் கண்டு பேசிய நேரத்திலே இந்திப் பரீட்சை கூடாது என்பதற்குச் சில நல்ல பல காரணங்களை எடுத்துக் கூறியிருக்கிறார். ''இரண்டாவது பாகத்தில் மொழிப் பரீட்சை வேண்டாமென்று செய்ததற்குக் காரணம் முக்கியமானது, இந்தப் பரீட்சையில் குறைந்த பட்ச மார்க் வாங்க வேண்டுமென்று விதி கிடையாது. அந்த விதி செய்த பிறகு பரீட்சைக்குச் செல்லும் மாணவன் அந்தப் பரீட்சையில் ஒன்றுமே எழுதாமல் வெறும் காகிதத்தை மடித்துக் கொடுத்து விட்டுப் போகிறான். இது அந்த மொழியை அவமதிப்பதாகும். இம்மாதிரியான பரீட்சை கேலிக் கூத்து வேண்டாம் என்றுதான் பரீட்சை ரத்து செய்யப்பட்டது. இம்முறை புதிதல்ல; முன்பு படிக்கும்போது 'பி' க்ரூப் பாடத் திட்டம் இருந்தது; அதில் பரீட்சை கிடையாது'' என்றெல்லாம் ஆதாரங்களை தேடி, அள்ளி அள்ளிக் கொடுத்தார் நிருபர் களிடத்தில், அதுமாத்திரமல்லாமல் ஜனவரி மாதம் 7-ம் தேதி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் 'இந்திப் பரீட்சையில் தேறு வதற்காகக் குறைந்தபட்ச மார்க் இருக்கவேண்டும் என்பது தமது சொந்த கருத்து என்றும், அவ்வாறு குறைந்தபட்ச மார்க் நிர்ணயித்தால் பின்வழியாக இந்தியைப் புகுத்த சர்க்கார்

முயற்சிப்பதாக ஆட்சேபம் கிளம்பும் என்றும், தற்சமயம் சர்ச்சை எதுவும் தோற்றுவிக்கத் தாம் விரும்பவில்லையென்றும் ஆகவே இந்திப் பரீட்சையைக் கைவிடுவது பொருத்தமானது என்றும் பக்தவத்சலம் குறிப்பிட்டார்'' என்று பத்திரிகைகளில் வந்திருக்கிறது. பிறகு ஏன் இப்போது சர்ச்சையைக் கிளப்புகிறார்கள்? லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் அங்கே சர்ச்சையைக் கிளப்பிய பிறகு, அதை மூடி மறைக்க வேண்டிய நிலைமைக்கு, குழப்பத்தைத் தீர்க்க வேண்டிய நிலைக்கு அத்தகைய நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டார்களா? அந்தக் குழுவில் அமர்ந்து வலுவூட்டிய பெரியவர்களுள் மிக முக்கிய மானவர்கள், டாக்டர் ஏ.எல். முதலியார் அவர்களிடம் ஜனவரி 13-ல் நிருபர்கள் பேட்டி கண்டபோது, அவரும் சொல்லியிருக்கிறார், இரண்டாவது பிரிவு மொழியில் பரீட்சை நடத்தும் திட்டம் கைவிடப்பட்டது பற்றி கேட்கப்பட்டபோது அவரும் சொன்னார், ''குறைந்தபட்ச தரம் இருந்து வருவதுதான் பிரச்சனை. இல்லையேல் பரீட்சைகள் வெறும் ஏமாற்று வித்தைதான். முன்பெல்லாம் 'க்ரூப்' பாடங்களில் பரீட்சைகள் எதுவும் நடந்தது இல்லை'' என்றுதான் அவரும் குறிப்பிட்டிருக்கிறார். கடைசியாகச் சொல்லுவேன், அமைச்சர் அவர்கள் பரீட்சை வைப்பதற்குக் காரணங்களை வலியுறுத்தும்போது பரீட்சையில் தேறியவர்கள், நல்ல எண் எடுத்தவர்களுக்கு ஸ்காலர்ஷிப் இருக்கிறது. ஆகவே பரீட்சை இருந்தால்தான் நல்ல எண்களை எடுத்து ஸ்காலர்ஷிப் பெற முடியும்? என்று அவர்கள் கேட்டார்கள். இங்கே இந்தியைத் திணிப்பதற்கு மத்திய சர்க்காரால் நடத்தப்படுகிற ஒரு மறை முகமான தூண்டுகோல் அல்லவா? அதைப்பற்றி யோசித்துப் பார்க்க வேண்டாமா? இதன் மூலமாக இந்தி திணிக்கப்படவில்லை என்று நீங்கள் கருதுகிறீர்களா? மறைமுகமாகத் திணிப்பதற்கு இதுவும் ஒரு வழி இல்லையா? வேறு மாநிலங்களில் இந்தி கட்டாயமாக இருக்கிறது, இங்கே அப்படிக் கட்டாயம் இல்லை என்று கூறினால் அம்மாதிரியாக இருக்கக் கூடிய நிலைமைக்கும் காரணம் யார்? 1937-ம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாகவும், இயக்கம் கொண்ட போர்க்கோலமும், இரண்டு மூன்று பேர்கள் பிணமாக ஆனதும், தாய்மார்கள்

காராக்கிருகத்தில் தொல்லைகள் அனுபவித்ததையும் மறந்து விட முடியுமா? அந்தப் போராட்டங்களின் விளைவுகளையும் பொருட்படுத்தாமல் இப்போது மறைமுகமாக இந்தி திணிக்கப்படுகிறது. நமது குடியரசுத் தலைவர் மதிப்புக்குரிய டாக்டர் ராதா கிருஷ்ணன் அவர்கள் கல்கத்தாவில் ஜனவரி 20-ல் நிகில் பாரத வங்க பாஷா பிரச்சார சமிதியின் புதுக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டியபோது குறிப்பிட்டிருக்கிறார், ''இந்தியைப் பரப்ப இப்போது முயற்சி செய்யப்படுவதால் அதன் எதிர்காலம் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. இந்தி பேசப்படாத பிரதேசங்களிலும் ஹைஸ்கூலில் இந்தி கட்டாயமாகப் போதிக்கப்படுகிறது. துளசிதாசர், மீராபாய் நூல்களைப் பரப்பினால் மேலும் இந்தி பரவும்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே இந்தியைப் பரப்புவதற்கான மறைமுக முயற்சிகள் நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்குத் துணை போக வேண்டும் என்று ஹிந்தியில் பரீட்சை வைப்பது, நல்ல எண் எடுக்கவேண்டுமென்று சொல்வது, மாடரேஷன் என்றெல்லாம் மழுப்புவது அத்தனையும் மறைமுகமாக ஹிந்தியைத் திணிக்க நீங்கள் போகிற துணையே அல்லாமல் வேறு அல்ல.

கடைசியாகக் கேட்டுக்கொள்வேன், நமது கல்வி அமைச்சரை எல்லா மாநிலங்களிலும் இருக்கிற அமைச்சர்கள் வயதோடு ஒப்பிடும்போது, அறிவோடு ஒப்பிடும்போது, அனுபவத்தோடு ஒப்பிடும்போது, தியாக உள்ளத்தோடு ஒப்பிடும்போது அவர்களிலே யாருக்கும் தாழ்ந்த கல்வி அமைச்சர் இல்லை ; உங்கள் குரலை உயர்ந்த குரலாக ஆக்கிக் கொண்டு, மத்திய அமைச்சர் திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்களுடைய குரலை மங்க அடிக்கிற விதத்தில் கிளப்பி, இந்திப் பரீட்சை கிடையாது என்று சொல்லுங்கள். அதற்கு அவர்கள் முடியாது என்று சொன்னால் மான உணர்ச்சியோட ராஜினாமா செய்யப் போகிறோம் என்றாவது அறிவித்து விடுங்கள், அதுவே தக்க வழி, என்று கூறி உரையை முடித்துக்கொள்கிறேன்.



## காவல் துறை மானியம்

**உரை : 12** **நாள் : 18.03.1964**

**கலைஞர் மு. கருணாநிதி** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, போலீஸ் அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தில் மானியம் கோரப்பட்டு எங்கள் கட்சி நண்பர்களால் அளிக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில கருத்துக்களைக் கூறிக் கொள்வதற்கு விரும்புகிறேன். இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் காலையிலிருந்து விவாதம் சிறிது சிறிதாகச் சூடேறி, தங்களுடைய குறுக்கீடுகளால் அந்த சூட்டோடு சுவையும் ஏறி, விவாதம் ஏறத்தாழ இறுதிக் கட்டத்திலே வந்து நின்றுகொண்டிருக்கிறது.

**கனம் சபாநாயகர்** : இந்த நேரத்தில் கொஞ்சம் சூடு குறைந்திருக்கிறது.

**கலைஞர் மு. கருணாநிதி** : எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தில் போலீஸ் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு, போலீஸ் இலாகாவைப் பற்றித் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குள்ளேயே முரண்பாடான கருத்துக்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதைப் பற்றி அவர்கள் அவர்களுடைய பேருரையிலே விளக்குவதற்கு முன்னதாக, இந்தக் கருத்துக்களும் பயன்படும் என்பதற்காக அந்த விளக்கத்திற்கு ஏதுவாக அது பற்றி நான் கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை போலீஸ் இலாகாமீது தனிப்பட்ட முறையில் எந்த விதமான வெறுப்புணர்ச்சியும், என்றைக்கும் இருந்தது கிடையாது. போலீஸ் இலாகாவின் அரும்பெரும் செயல்களைத் திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறது ; அதே நேரத்தில்

போலீஸ் இலாகா தவறான வழிகளிலே செல்லுகின்ற நேரத்தில் சுட்டிக் காட்டுகின்ற அந்தச் செயலையும் புரிந்து கொண்டிருக்கிறது. இதே மன்றத்திலே 1962-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் என்று கருதுகிறேன் - போலீஸ் மானியத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகின்ற நேரத்திலே, அமைச்சர் களும், மற்றவர்களும், போலீஸாரை இந்த அளவுக்குப் பாராட்டி உங்கள் பக்கம் இழுத்துக் கொள்ள எண்ணுகிறீர்களா என்று கூடக் கேட்டார்கள். நான் பாராட்டுரைகளை வழங்கிவிட்டு, இருக்கிற குறைபாடுகளையும் அப்போதே எடுத்து உரைத்தேன். நாங்கள் நல்லவைகளைப் பாராட்டவும் செய்வோம்: தீயவைகளைக் கண்டிக்கவும் செய்வோம். அதுதான் ஒரு நாணயமான எதிர்க் கட்சிக்கு உரிய இலக்கணம். அந்த நாணயமான இலக்கணத்தின் அடிப்படையிலேதான் இன்றைய தினம் இந்த விவாதத்திலே கலந்துகொண்ட திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தங்கள் எண்ணங்களை இந்தக் கருத்தரங்கிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, போலீஸ் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அதிலே எந்தவிதமான முரண்பாடான கருத்துக்களும் இல்லையென்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போலீஸ் இலாகா 35,000 பேர் பணிபுரிகின்ற ஒரு பெரும் இலாகா, இந்தப் போலீஸ் இலாகாவில் ஏறத்தாழ, 25,000 கான்ஸ்டபிள்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய குறை பாடுகள் இந்த மானியத்தின் மூலமாக நீக்கப்பட வேண்டுமென்கிற கருத்தினை ஒட்டித்தான் இந்த வெட்டுப் பிரேரணை கொடுக்கப்பட்டிருக்கிறது. மாமன்றத்தின் மரபின்படி வெட்டுப் பிரேரணை என்று குறிப்பிட்டாலும் அளிக்கப் பட்டுள்ள 8,20,22,000 ரூபாயிலிருந்து தொகையைக் குறைக்க வேண்டுமென்பதல்ல பொருள். வெட்டுப் பிரேரணை என்பதை ஒட்டுப் பிரேரணை என்று திருத்திக்கொண்டால்கூடப் பொருத்தமாக இருக்கும். மேலும் மானியத்தொகையை அதிகரித்து போலீஸ் அதிகாரிகள், போலீஸ் கான்ஸ்டபிள்கள் ஆகியோருக்கு வசதிகளைப் பெருக்க வேண்டும்; வாய்ப்புகளை அதிகமாக ஆக்க வேண்டும் என்பதற்காகத்தான், இந்தக் கருத்துரைகளை நாங்கள் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம்.

தமிழகத்திலே இருக்கின்ற போலீஸ் இலாகா மற்ற மாநிலங்களில் இருக்கின்ற இலாகாக்களை விடச் செவ்வனே பணிபுரிந்துவருகின்ற இலாகா என்பதை யாரும் மறுப் பதற்கில்லை. அந்தச் சிறப்புப் பெயருக்குத் தமிழக போலீஸ் இலாக்கா தன்னை உரிய இலாகாவாக ஆக்கிக்கொண்டிருக்கிறது. கடந்த முறை உயர்திருவாளர் முன்னாள் முதலமைச்சர் காமராஜர் அவர்கள் கையில் இருந்த அந்த இலாகா இப்போது கனம் திரு. கக்கன் அவர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இரண்டுக்கும் அதிக வித்தியாசம் இருப்பதாக நான் உணரவில்லை. அந்த இலாகாவை ஒரே சக்திதான் இன்றைய தினமும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் உணருகிறேன். இந்த இலாகாவிலே இருக்கிற குறைபாடு களையும், இந்த இலாகாவிலே பணிபுரிகின்ற போலீஸ் அதிகாரிகள், போலீஸ் நண்பர்களுக்கு இருக்கின்ற உளைச்சல்களையும் அவர்களுக்குத் தேவையான வீட்டு வசதி குடும்ப வசதி அவைகளுக்குத் தேவையானவை பற்றியும் இந்த மாமன்றத்தின் மூலமாக எடுத்துச் சொல்லுவது முறை என்ற காரணத்தால்தான் அந்தக் குறைபாடுகளை எல்லாம் இந்த மானியக் கோரிக்கை வருகின்ற காலத்திலே எல்லாம் எதிர்க் கட்சிக்காரர்களால் எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் போலீஸ் இலாகாவைப் பாராட்டினார்கள். எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களும் போலீஸ் இலாகாவைப் பாராட்டினார்கள். இந்தப் பாராட்டுகளினால் தம்முடைய வாழ்வு குளிர்ந்துவிட்டது, வறுமை நீங்கிவிட்டது என்று எண்ணி போலீஸ் நண்பர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை.

ஒரு போலீஸ்காரருக்குத் தரப்படுகின்ற மாதச் சம்பளம், அவர்களுக்குத் தரப்படுகின்ற யூனிபாரம் அலவன்ஸ், வைத்திய வசதிகள், கல்வி வசதிகள் இவ்வளவும் சேர்ந்து ஒரு போலீஸ்காரருக்கு மாதத்திலே கிடைக்கின்ற பெரும் தொகை ஏறத்தாழ 102 ரூபாய்தான். அந்த 102 ரூபாயில் அவர்கள் இந்தக்

காலத்திலே தங்களுடைய வாழ்க்கையைச் செவ்வனே நடத்திச் செல்ல முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கிற வீட்டை நான் வீடு என்று கூற மாட்டேன். உண்மையில் சொல்ல வேண்டுமானால், போலீஸ்காரர்களுடைய கூடு என்றுதான் குறிப்பிட வேண்டும். அப்படிப்பட்ட சிறிய இடங்களில் அவர்கள் இன்றையதினம் தள்ளி அடைக்கப்பட்டிருக்கிறார்கள். குடியிருப்பு வசதிகள் பெருக்கப்பட வேண்டும், கட்டிக் கொடுக்கப்படுகிற வீடுகளில் மேலும் வசதிகளை அதிகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை இந்த மாமன்றத்திலே பல தடவை எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

நான் அமைச்சர் அவர்களை ஒன்று கேட்டுக்கொள்வேன். பொறியியல் கல்லூரிகளிலும் மருத்துவக் கல்லூரிகளிலும் போலீசார் வீட்டுப் பிள்ளைகள், சலுகைகளைப் பெற்று அந்தக் கல்லூரிகளில் அவர்கள் பயில்வதற்கான வசதிகளை அமைச்சரவை செய்து தரவேண்டுமென்று என் கோரிக்கையை நான் இந்த நேரத்தில் இங்கு எடுத்து வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். தொழிலாளர்களைப் போன்று ஏழு அல்லது எட்டு மணி நேரம் வேலை செய்யக்கூடியவர்கள் அல்ல இவர்கள். போலீஸ்காரர்கள் அதிக நேரம் வேலை செய்கிறார்கள். அவர்கள் செய்யும் அதிக நேர வேலைக்காக ஓவர் டைம் அலவன்ஸ் எதுவும் அவர்களுக்கு கொடுப்பதாக தெரியவில்லை. அவைகளை போலீஸ் நண்பர்களுக்கு அளிப்பதற்கு இந்த அமைச்சரவை அக்கறை காட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த சபையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற போலீஸ் நண்பர்களுக்கு ஒரு நாளைக்குத் தரப்படுகிற 10 அணா படி, நான்கு மாதங்களுக்குப் பிறகு பில் அனுப்பப்பட்டு, பில் அனுப்பப்பட்ட பிறகு 3 மாதங்கள் கழித்துத்தான் அவர்களுக்குத் தரப்படுகிற இந்த அவலநிலையைப் போக்குவதற்கும் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விலைவாசி ஏற்றத்தால் போலீஸ்காரர்கள் எந்தளவிற்கு திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். போலீஸ்காரர்கள், நல்ல திடகாத்திரர்களாக இருக்கவேண்டும், அவர்கள் நல்ல தேக வலிவு படைத்தவர்களாக இருக்கவேண்டும் என்றால் அவர்களுக்கு நல்ல உணவு தேவை.

ஆனால் அவர்களுக்குக் கிடைக்கிற ஏறத்தாழ 100 ரூபாய் வருமானத்தில் எப்படி அவர்கள் திடகாத்திரர்களாக இருக்க முடியும்? அமைச்சர்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன். மாதர் மாநாட்டில் மந்திரிமார்களின் வீட்டில் உள்ள மரியாதைக்குரிய அம்மையார்கள் எல்லாம் கலந்து கொண்ட அந்த மாநாட்டில், ஒரு போலீஸ் அதிகாரியின் துணைவியார் பேசும்போது 1,500 ரூபாய் சம்பளம் வாங்கும் மந்திரிமார் களுக்கே இந்தக் காலத்தில் வாழ்க்கைச் செலவு கட்டி வரவில்லை என்று கூறினால், 65 ரூபாய், 70 ரூபாய் சம்பளம் வாங்கும் எங்கள் வீடுகளில் எப்படி செலவிற்குக் கட்டி வரும்? என்ற வினாவை போலீஸ் அதிகாரியின் துணைவியார் ஒருவர் அந்த மாதர் மாநாட்டில் எழுப்பியதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். போலீஸ்காரர்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்ல ஒரு அஸோஸியேஷன் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறப்பட்டது. 1962-ல் பதில் அளித்த இன்றைய நம் முதல் அமைச்சர் அவர்கள், அஸோஸியேஷன் என்று ஆரம்பமாகும், பிறகு அது ட்ரேட் யூனியனாகி விடும் என்ற கேள்விக் குறிகளோடு அதற்கான பதிலை அளித்து விட்டு அமர்ந்தார்கள். ''Britain Official Hand-Book'' என்ற புத்தகத்தில், 1963-ல் வெளியிட்டிருக்கிற இந்தப் புத்தகத்தில் பிரிட்டனில் போலீஸ்காரர்கள் தங்கள் குறைகளை எப்படி அரசியலாருக்கு எடுத்துச் சொல்கிறார்கள் என்பது விளக்கப்பட்டிருக்கிறது. அங்கு யாரும் தொழிற்சங்கத்தில் அங்கம் வகிப்பதில்லை, அமைச்சர் அவர்களின் கூற்றுப்படி, அரசியலில் இருந்து அப்பாற்பட்டு பணியாற்றவேண்டும் என்ற முறை இருக்கிறது என்று அந்த நூலில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் போலீசில் எல்லாத் தரப்பினருக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கும் தனி சங்கங்கள் உண்டு. அது அமைச்சர்களிடமும் உயர்தர அதிகாரிகளிடமும் கோரிக்கைகளை எடுத்துக் கூறும். அது தவிர ''Police Council for Great Britain '' என்ற கமிட்டி இருக்கிறது. அந்தக் குழு எல்லாப் போலீஸ் தரப்பிற்கும் பிரதிநிதித்துவம் வகிக்கிறது. உள்துறை இலாகாவினரும் அதில் இடம் பெறுகிறார்கள். அந்தக் குழு போலீசாரின் சம்பளம், பென்ஷன் ஆகியவை பற்றி சட்ட மன்றத்திற்கு சிபாரிசு செய்யும்

உரிமையைப் பெற்றிருக்கிறது. தமிழகத்தில் போலீஸ்காரர்கள் இருந்த சங்கம் கலைக்கப்பட்டது. அஸோஸியேஷன் ஒன்று வைத்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை அமைச்சர் அவர்களால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் பிரிட்டனில் போலீஸ்காரர்களின் குறைகளை எடுத்துச் சொல்ல அமைக்கப்பட்டிருக்கிற இந்த குழுவை, அமைச்சரவைக்கு ஞாபகப்படுத்தி அந்த வகையில் இங்கும் போலீஸ்காரர்கள் தங்கள் உரிமையை எடுத்துச் சொல்லவும் தங்கள் தேவைகளை, குறைகளை அறிந்து கொள்ளவும் இப்படிப்பட்ட குழுக்களை எந்த முறையில் அமைக்கலாம் என்பதற்கான திட்டவட்டமான யோசனைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்களை மிக்க பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். போலீசார் தங்கள் கடமைகளை செவ்வனே ஆற்ற வேண்டும் என்பதில் ஆளும் கட்சியினருக்கும், எதிர்கட்சியினருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்து தீரவேண்டும். ஆனால் போலீசார் அவர்கள் கடமையை ஆற்றவொட்டாமல் ஒழுங்குமுறைகளை மீறி, சட்டத்தை மீறி ஏதோ எதிர்கட்சியில் இருக்கிற சிறப்பாக, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான் போலீஸாரை தங்கள் பணிகளைச் செய்யவிடாமல் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு ஆளும் கட்சி உறுப்பினர்களால் பரவலாக எடுத்துக் சொல்லப்பட்டது. ஆனால் அவர்களுக்கு நான் ஒன்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். போலீஸ் இலாகா தனது நூற்றாண்டு விழா மலரை வெளியிட்டது. போலீஸ் மீதிருந்த பயம் எந்தளவிற்கு மக்கள் மத்தியில் யாரால் நீக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் அறிந்தோ, அறியாமலோ இந்தப் புத்தகத்தின் மூலம் வெளியிட்டிருக் கிறார்கள், அப்படியானால் போலீஸார் என்றால் ஒரு பயங்கரமான உணர்ச்சி ஏற்பட வேண்டுமா என்று கேட்டால் நாங்கள் இப்படிக் கூறவில்லை, அப்படிப்பட்ட உணர்ச்சி ஏற்படத் தேவை இல்லை. முதல் அமைச்சர் அவர்கள் இங்கு ஒரு நாள் குறிப்பிட்டார்கள், தாயிடம் பிள்ளைக்கு இருக்கும் பயத்தைப் போன்று போலீஸாரிடம் மக்களுக்கு இருக்க வேண்டுமென்று. ஆனால் அது நீண்ட நெடு நாட்களாகவே போக்கப்பட்டு விட்டது. அதற்கு இந்த நாட்டில் இருக்கிற காங்கிரஸ் தலைவர்களும், காங்கிரஸ்காரர்களும்தான் காரணம்

என்று நான் குற்றம் சாட்டுவேன். இந்த நூற்றாண்டு விழா மலரில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், ''வெள்ளையனே வெளியேறு'' என்ற போராட்டத்தில், சுதந்திரப் போராட்டத்தில் பல வெறிச் செயல்களைத் தூண்டிவிட்டு போலீஸ்காரர்கள் எங்கெங்கே தாக்கப்பட்டார்கள் என்ற இந்த விவரங்கள் அத்தனையும் இந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குமாரபாளையத்தில் கள்ளுக்கடை மறியல் காங்கிரஸ் தலைவர்களால் நடத்தப்பட்டது. நாங்களும் இந்தி எதிர்ப்புப் போராட்டம், மறியல் நடத்துகிறோம். இந்த மறியல்கள் எந்தளவிற்கு அமைதியாக கடந்த 4,5 மாதங்களாக சென்னையிலும் சரி, மதுரையிலும் சரி, நெல்லையில் ஆகட்டும், எந்தளவு திராவிட முன்னேற்றக் கழகத்தின் மறியல் போலீஸாருக்கு குந்தகம் விளைவிக்காத அளவில் அமைதியாக நடைபெறுகிறது என்பதை நன்றாக அறிவீர்கள். அப்படி அறிகிற காரணத்தினால்தான், அமைச்சர் அவர்கள் தம் அறிக்கையின் இறுதியில் ''இந்த ஆண்டு முழுவதும் அமைதி நிலவியிருந்தது என்றுதான் சொல்லவேண்டும்'' என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் நடத்திய கள்ளுக்கடை மறியலில் ஒரு சப் இன்ஸ்பெக்டரையும் ஐந்து போலீசாரையும் இவர்கள் 3,000 பேர்கள் தடுத்து வளைத்துக் கொண்டு படும் காயத்திற்கு ஆளாக்கினார்கள் என்பது இந்த ''ஹிஸ்டரி ஆப் தி மதறாஸ் போலீஸ்'' என்ற புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட காரியங்களில் திராவிட முன்னேற்ற கழகத்தினர் இறங்கியது கிடையாது. திண்டிவனத்தில் இன்ஸ்பெக்டரையும், போலீஸ் படையையும் கருணையற்ற முறையில் மறியல் கும்பல் அடித்து நொறுக்கியது. அதுவும் இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மதுரையிலும், போடியிலும் மறியலில் போலீசார் தாக்கப்பட்டனர். '''வெள்ளையனே வெளியேறு'' என்ற முழக்கத்தையொட்டி தலைவர்கள் கைது செய்யப்பட்டவுடன் சென்னையில் சூளையில் உள்ள கடைத் தெருக்களெல்லாம் தீ வைக்கப்பட்டது. உயர்நீதிமன்ற கட்டடத்திற்குத் தீ இட முயற்சி நடைபெற்றது. தபால் பெட்டிகள் எல்லாம் தகனம் செய்யப்பட்டன. வட ஆற்காடு மாவட்டத்தில் தந்திக்கம்பிகள் தொலைபேசிக் கம்பிகள் அறுக்கப்பட்டன. பணப்பாக்கத்தில் பி. டப்ள்யூ.டி இன்ஸ்பெக்ஷன் பங்களா,

வேலூரில் போலீஸ் குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டன. சூலூர் விமான நிலையம் தீக்கிரையாக்கப்பட்டது. 22 மோட்டார் லாரிகள் சாம்பலாயின. தண்டரை - ஆதிச்சனூர் ரயில் பாதையில் குட்ஸ் ட்ரெயின் கவிழ்க்கப்பட்டது. மதுரையில் நகர சபை ''பையர் என்ஜின்'', போலீஸ் பஸ்கள், தபால் ஆபீஸ்கள், சானிட்டரி இன்ஸ்பெக்டர்ஸ் ஆபீஸ், திருவாடானையில் சப் ட்ரஷரி, சப் மாஜிஸ்ட்ரேட் ஆபீஸ், டிப்டி தாசில்தார் ஆபீஸ் இவை தீக்கிரையாக்கப்பட்டன. நாட்டரசன் கோட்டையில் பள்ளிக்கூடம், ரெயில்வே ஸ்டேஷன் தீக்கிரையாக்கப்பட்டன. திருவையாற்றில் சாலைகள் கெடுக்கப்பட்டு, பஸ்கள் தடுக்கப்பட்டன. தந்திக் கம்பிகள் வெட்டப்பட்டன. தண்டரை, ஆதிச்சனூர், வேலூர், பணப் பாக்கம், அண்ணாமலை பல்கலைக் கழகம், காலத்தி, திருச்சி, சிங்க நல்லூர், போத்தனூர், மதுரை, சேலம், மன்னார்குடி, திருவையாறு, குலசேகதப்பட்டினம், தூத்துக்குடி இங்கு போலீஸ் ஸ்டேஷன்கள் தாக்கப்பட்டன, போலீஸார் தாக்கப்பட்டார்கள். இப்படிச் செய்தவர்கள்தான் போலீஸாரிடம் மக்களுக்கு ஏற்படவேண்டிய மரியாதையைப் பற்றி கூறுகிறார்கள். தாயிடம் பிள்ளைக்கு ஏற்பட வேண்டிய பயம் போல் இருக்கவேண்டுமென்கிறார்கள். அந்தப் பயத்தைப் போக்கக் காரணமாக அவர்களே இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சாட்ட கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒழுங்கை மீறி போலீஸாரை, அவர்கள் கடமையிலிருந்து நழுவச் செய்யும் எந்தக் காரியத்திலும் எந்த நேரத்திலும் ஈடுபட்டது கிடையாது. போலீஸாரைப் பாராட்டி இங்கு, 1962 ஜூலை என்று கருதுகிறேன், பேசிய நேரத்தில் அப்போதிருந்த முதல் அமைச்சர் உயர்திருவாளர் காமராஜ் அவர்கள் குறுக்கிட்டு ''போலீஸாரை மிரட்டாதீர்கள், நீங்கள் போலீஸாரை மிரட்டுகிறீர்கள், அப்படி மிரட்டிவிட்டு பத்திரிகைகளில் எழுதுகிறீர்கள், கூட்டங்களில் மிரட்டிப் பேசுகிறீர்கள்'' என்று சொன்னார்கள். உடனே நான் பதில் சொன்னேன், மிரட்டக்கூடிய அதிகாரம் எங்களுக்கு இல்லை, எங்களுக்கு மிரட்ட வேண்டிய அவசியமும் இல்லை. அப்படி நாங்கள் ஏதாவது மிரட்டியிருக்கிறோம் என்றால் ஏதாவது ஆதாரம் தர முடியுமா? என்று நான் கேட்டேன். உண்மையிலேயே மிரட்டிக்கொண்டிருப்பவர்கள்; யார் என்பதை

நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பிப்ரவரி 25-ம் தேதி சென்னை கடற்கரையில் நடத்தப்பட்ட கூட்டத்திற்கு சர்க்கார் சுருக்கெழுத்தாளர் சென்றிருக்கமாட்டார் என்று கருதுகிறேன். இதிலிருந்து யார் போலீஸை மிரட்டுகிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். காங்கிரஸ், கம்யூனிஸம், தமிழ் தேசீயக் கட்சி இம்மூன்றும் சேர்ந்து தேசீய அணி என்று ஒரு அணி பிரகடனப் படுத்தப்பட்டது. அந்த தேசீய அணியின் சார்பாக நடத்தப்பட்டக் கூட்டத்தில், ஒரு நண்பர் என்ன பேசுகிறார் என்றால் - மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்கள், திரு. நஞ்சுண்டராவ் அவர்கள் பேசும்போது போலீஸ்காரன் என்று சொல்வது சரியல்ல என்று சொன்னார்கள். அதை நான் மரியாதையோடு, ஏற்றுக்கொள்கிறேன். - இந்த நிலைமையில், அந்த நண்பர் பேசுகிறார்... ''ஏ போலீஸ்கார - அடுத்த மூன்று எழுத்துக்களை நான் சொல்லவில்லை, அப்படியே விட்டுவிடுகிறேன் - உனக்கு ஏன் காக்கிச் சட்டை, உனக்கு ஏன் சிவப்பு தொப்பி, உனக்கு ஏன் பூட்ஸ், உனக்கு ஏன் கால் சட்டை, இத்தனையும் கழற்றி கொடுத்துவிட்டு, கருப்புச் சட்டை போட்டுக் கொண்டு போடா'' என்று கடற்கரைக் கூட்டத்தில் பேசப்பட்டது என்றால், யார் போலீஸாரை மிரட்டுகிறார், எந்த அளவுக்கு அவர்கள் மிரட்டப்படுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி மிரட்டப்படுகின்ற காரணத் தினால்தான், என்னுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள், தேர்தல் நேரத்தில் சென்னை நகரில் நடந்த அல்லோலங்களைப்பற்றி, தேர்தலுக்கு முதல் நாள் என்னென்ன நடந்தது, யார் யார் எந்தெந்த வகையில் கைது செய்யப்பட்டார்கள் என்பதை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். கைது செய்யப்பட்டவர்கள் ஏதோ ரௌடி பட்டியலில் சேர்ந்தவர்கள் என்று சொல்லி பூசி மழுப்பி விடுவதால் உண்மைக்கு மதிப்பும் கண்ணியமும் கொடுத்ததாகி விடாது. துளசிங்கம் என்ற கௌன்சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அவரும் ரௌடி லிஸ்டில் இருப்பவர்கள் என்று சொல்லி பூசி மழுப்பி விடுவது எந்த அளவிற்கு நியாயம் என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தேர்தல்

காலத்தில் நடைபெற்ற சொற்பொழிவின் காரணமாக என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். இதைப்பற்றி நான் இந்த மன்றத்திலேயே குறிப்பிட்டு சொன்னேன், வெளியில் கூட்டங்களில் ஆளும் கட்சியின் சார்பாக பேசிய பேச்செல்லாம் எங்கே கொண்டுபோய் விடுகின்றன என்பதைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னேன். ஆனால் அடுத்த ஒரு வாரத்திற்குள்ளாக வெளியில் நடந்த பேச்சுக்களின் நிலைமை எங்கே போய் முடிந்தது என்பதை நாம் நன்றாக அறிவோம். ராஜாஜி வீட்டில் கொலை வெறியன் நுழைந்தான் என்ற நிலை அப்படிப்பட்ட வெறியுணர்ச்சியை தூண்டிவிடுகின்ற அளவுக்கு பொதுக்கூட்டங்களில் 'கொல்லுங்கள், குத்துங்கள்' என்று பேசக்கூடிய அளவுக்குப் பேச்சுக்கள் எல்லாம் அன்றைய தினம் அனுமதிக்கப்பட்டது. ஏதோ இன்றைக்கு அந்த கொலை வெறியன் பைத்தியக்காரன் என்று கூறிவிடலாம். உண்மை யிலேயே பைத்தியக்காரன்தான் வெறியுணர்ச்சிக்கு ஆளாகக் கூடும். பைத்தியக்காரன் இல்லாமல் புத்திசாலியா வெறியுணர்ச்சிக்கு ஆளாவான்? வெறியுணர்ச்சிக்கு ஆளாகின்றவன் பைத்தியக்காரன்தான். அப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனம் இன்றைய தினம் நாட்டில் பரவலாக அதிலும் வேகமாக ஏற்படுவதற்கு இந்தப் பேச்சுக்கள் காரணமாக இருக்கின்றன. அவைகள் எல்லாம் தடுக்கப்பட வேண்டும் என்று இதே மாமன்றத்தில் என்னால் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதற்காக நான் மிக மிக வருந்துகிறேன்.

இன்னொரு நிகழ்ச்சியையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 16-ம் தேதி காலையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி. அதைச் சொல்வதின் மூலமாக போலீஸ் எந்த விதமாக பட்சபாதமாக நடக்கவேண்டும் என்று ஆளாக்கப்பட்டிருக்கிறது - பட்சபாதமாக நடக்கிறார்கள் என்று நான் சொல்ல மாட்டேன், பட்சபாதமாக எந்த அளவுக்கு நடக்கவேண்டும் என்று தூண்டி விடப்படுகிறது என்பதைக் காட்டுவதற்காக இதை நான் சொல்லுகின்றேன். 16-ம் தேதி காலை 10 1/2 மணிக்கு, மயிலாப்பூரில் திரு. கபாலி என்பவரின் கடைக்கு அருகாமையில், மந்தவெளியில், ஒரு நண்பர் காரில் வந்து கொண்டிருந்தார். அவர் வந்து கொண்டிருந்த கார், அதன் முன்னால் சென்று கொண்டிருந்த ரிக்ஷாவின் மீது மோதி ரிக்ஷா அடிபட்டது. கார்; ரிக்ஷாவில் மோதியதும் ரிக்ஷாக்காரன்

அடிபட்ட வேகத்தில் பொறுமையிழந்து காரில் வந்தவரைப் பார்த்து ஏதோ சொல்ல, காரில் வந்தவர் கீழே இறங்கி அந்த ரிக்ஷாக்காரரை செருப்பால் அடிக்க கையை ஓங்கியிருக்கிறார், இதற்குள் அங்கு கூட்டம் கூடியது. கூட்டம் கூடியதும், காரில் வந்தவர் 'நீங்கள் எல்லோரும் போய்விடுங்கள், இல்லையென்றால் நான் இங்கேயே மறியல் செய்வேன்' என்று சொல்லி சாலையின் குறுக்கே படுத்து ஒரு மணி நேரம் மறியல் செய்து போக்குவரத்துக்குத் தடை ஏற்படுத்தியிருக்கிறார். இத்தனையும் நடந்த பிறகு இந்த சம்பவத்திற்காக கைது செய்யப்பட்டது யார் தெரியுமா? பரிதாபத்திற்குறிய அந்த ரிக்ஷாக்காரன், ஒரு பாவமும் அறியாது காயமடைந்த அந்த ரிக்ஷாக்காரன். இதைப்பற்றி மேலும் விசாரித்ததில், அந்தக் காரில் வந்தவர், அங்கிருந்தவர்களிடம் ''நான் யார் தெரியுமா? நான் 'தூக்குமேடை' யாக்கும், என்னை ஒருவரும் ஒன்றும் செய்துவிட முடியாது'' என்று சொல்லி அங்கிருந்து தப்பித்துக் கொண்டிருக்கிறார். (எதிர்க்கட்சி தரப்பிலிருந்து - ஷேம், ஷேம்...) இந்த விதமாக பட்சபாதமான நிலைமை சென்னை மாநகரத்தில் நடைபெறுகிறது என்பதைத்தான், காந்தியடிகளின் வழியில் நடந்து வந்ததாகக் கூறுகின்ற இந்த அமைச்சரவைக்குச் சொல்ல விரும்புகிறேன். இதைத்தான் முரண்பாடு என்று எங்கள் கட்சி உறுப்பினர்கள் எடுத்து சொன்னார்களே தவிர, எங்களிடம் முரண்பாடு இருப்பதாக தயவு செய்து யாரும் எண்ணவேண்டிய தேவையில்லை.

இன்னும் நீதி நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் எல்லா மாவட்டங்களிலும் நீதி நிர்வாக அதிகாரம் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சென்னையைப் பொறுத்தவரையில் பிரிக்கப்பட்டிருக்கிற நிலைமை இல்லை. எங்கள் கட்சி உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் எடுத்துச் சொன்னது மாதிரி, நகரில் 151-வது பிரிவின் கீழ் திடீர் திடீர் என்று பலர் கைது செய்யப்படுகிறார்கள். இதனால் ஏற்படுகின்ற தவறுகளைப்பற்றிச் சுட்டிக்காட்டி உயர்நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பை வழங்கியிருப்பதையும் நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், ரிமாண்டில் வைப்பதற்கு இருக்கின்ற அதிகாரம் நீதிபதிகளிடம் இருப்பது இல்லை. போலீஸ் கமிஷனரிடத்தில் இந்த அதிகாரம் வைக்கப்பட்டிருக்கிறது. அரசியல் காரணங்களால் இது துர்வினியோகப்படுத்தப்பட ஏது இருக்கிறது. இப்போது துர்வினியோகப் படுத்தப்படுகிறது

என்று சொல்லவரவில்லை, அப்படிச் சொல்ல நான் தயாராக இல்லை. ஆனால் துர்வினியோகப்படுத்துவதற்கு ஏது ஏற்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகைய நிலைமையில் இருக்கின்ற கஷ்டங்களைப்பற்றி நீதிபதிகளும் அடிக்கடி அங்கங்கே கூறியிருக்கிறார்கள். அதைப் பற்றி அமைச்சரவை சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற மாவட்டங்களில் எல்லாம் எவ்வாறு இந்த அதிகாரம் பிரிக்கப்பட்டு இருக்கிறதோ அந்த அளவுக்கு சென்னை நகரத்தைப் பொறுத்தவரையிலும், பிரிக்கப்பட்டு, ரிமாண்ட் வழங்குவது, காவலில் வைப்பது இவைகள் எல்லாம் நீதிபதியின் பொறுப்பாக இருக்கும்படியான அளவில் மாற்ற வேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போலீஸ் எப்படிப் பட்சபாதமாக நடந்து கொள்கிறது என்பதைக் காட்டுவதற்காக இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கோவை மாநகரத்திற்கு அருகே ஏறத்தாழ 5,000 ரூபாய்க்கு பிராந்திப் புட்டிகள் பிடிக்கப்பட்டன என்ற செய்தி இரண்டு, மூன்று நாட்களாக ஏடுகளில் வந்தது. அந்தக் காரில் வந்தவரிடம் இருந்த கடிதத்தில் சென்னையிலுள்ள சினிமா அதிபர் - அரசியல் கட்சித் தலைவராக இருப்பவர் - அவருடைய விலாசமும் இருந்ததாகவும் கூறப்பட்டது. பின்னால் இதுபற்றி எந்தவிதமான செய்தியும் வரவில்லை? அவர் காங்கிரசை ஆதரிக்கும் அரசியல் தலைவர் என்ற காரணத்தினாலா? ஒரு வேளை ''மனிதன் மாறிவிட்டான்,'' என்று மன்னித்துவிட்டீர்களா? அல்லது ''போனால் போகட்டும் போடா'' என்று விட்டு விட்டீர்களா? ஏன் அந்த பெயர் வெளியே வரவில்லை? அந்த பெயர் மட்டும் இன்றைக்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்ததாக இருந்தால், போலீஸ் இலாகாவினர் மூலமாக இதற்கு முன்னால் கொட்டை எழுத்துக்களில், பத்திரிகைகளில் பிரசுரித்து விட மாட்டார்களா? ஏன் இது மூடி மறைக்கப்பட்டிருக்கிறது? இதற்கான காரணங்களை தயவு செய்து அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு எம். பக்தவத்சலம்** : இதற்கு கனம் எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டும். பத்திரிகையில் இந்தச் செய்தி போடப்படவில்லை என்றால் அதற்கு அரசாங்கம் உடனே என்ன காரணம் என்பதைக் கூற முடியாது. இதில் நிலைமை என்னவென்றால், திடீரென்று

இதைப்பற்றிக் குறிப்பிடுகின்றபொழுது இதற்கான தகவல்கள் அமைச்சர்களிடத்தில் இருக்காது. தனியாக இதைப்பற்றி கேள்வி கேட்டால் விவரங்களைச் சொல்லமுடியும். ஆகவே அரசாங்கம் இதை மூடி மறைக்கிறது என்று சொல்வதை மட்டும் எடுத்துக்கொண்டு, உண்மையிலேயே அரசாங்கம் மூடி மறைக்கப்பார்க்கிறது என்கின்ற தப்பான அபிப்பிராயம் ஏற்படுவதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் தலையிட்டு இதைக் குறிப்பிடுகிறேன்.

**கலைஞர் மு. கருணாநிதி** : இதற்குப் பிறகாவது அரசாங்கம் உடனடியாக கவனிக்கும் என்று மனதார நம்புகிறேன். கள்ளக் கடத்தல் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில், சில இடங்களில் போலீஸ் துறையினர், கள்ளக்கடத்தல் பேர்வழிகளுக்குத் துணையாக இருக்கின்றார்கள் என்கின்ற குற்றச்சாட்டை கூறுவதற்கு காரணம், 10 லாரிகளில் கள்ளத்தனமாக சரக்குகள் கொண்டு போகப்பட்டால், அவைகளை எல்லாம் விட்டுவிட்டு, ஒரு லாரியின் மீது வழக்குப் போடுவதும், இதைமட்டும் வைத்துக்கொண்டு, அந்தப் பகுதியிலுள்ள போலீஸ் இலாகாவினர் திறமையாக பணியாற்றுகின்றனர் என்று சொல்லக் கூடிய நிலைமையும் ஏற்படுகிறது. போலீஸ் இலாகாவினர் அடிக்கடி கள்ளக்கடத்தலில் உடந்தையாக ஈடுபடுகிறார்கள் என்ற செய்தி அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையைச் சீர்படுத்துகின்ற வகையில், போலீஸ் இலாகாவில் இருக்கின்ற திறமையான ஒற்றர்கள் மூலமாக தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், கருப்புப்பணம் பற்றி, அண்மை காலமாக, அடிக்கடி பேசப்பட்டு வருகிறது. கருப்புப்பணத்தைப்பற்றி முன்னாள் முதலமைச்சரும் இந்நாள் அகில இந்திய காங்கிரஸ் தலைவரும், நமது சட்டமன்ற உறுப்பினருமான திரு. காமராஜ் அவர்கள் ஒரு யோசனையை வழங்கியிருக்கிறார்கள். தஞ்சை பொதுக் கூட்டம் என்று கருதுகிறேன் - கருப்புப்பணம் யார் யார் வீட்டிலே இருக்கிறதோ, அங்கெல்லாம் தொண்டர்கள் வேலைக் காரர்களாகச் சேர்ந்து கருப்புப்பணம் இருக்கிற இடத்தைக் கண்டுபிடித்துக் கொடுங்கள், நாங்கள் அவர்களை சட்டப்படி வழக்கு மன்றத்தில் நிறுத்துகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். வேடிக்கையாக அந்தக் காலத்தில் கூறுவார்கள், போலீஸ்காரர்களைக் கிண்டல் செய்யக்கூடிய முறையில் ‘‘திருடனை பிடித்துக் கொடு நாங்கள்

கையில் விலங்கு மாட்டுகிறோம்'' என்று. நமது மாநிலத்தில் முதல் அமைச்சராக இருந்து இன்றைய தினம் காங்கிரஸ் அக்கிராசனராக இருக்கிற திரு. காமராஜர் வெளியிட்டிருக்கிற திட்டம் ஆபத்தானது என்று கருதுகிறேன். ஏனென்றால் போலீஸ் இலாகாவிலே துப்பறியும் நிபுணர்கள் இருக்கிறார்கள். போலீஸ் இலாகாவிலே திறமையான துப்பறியும் நிபுணர்கள் இருக்கிறார்கள். போலீஸ் இலாகாவிலே திறமையான ஸி.ஐ.டி.க்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு திறமை இல்லை என்று திரு. காமராஜர் ஏற்றுக்கொண்டாரா? அதைத்தான் சுட்டிக் காட்டுகிறாரா? கருப்புப்பணம் இருக்கிற முதலாளிகளிடத்தில் வேலை ஆட்களாகச் சேர்ந்து பணியாற்றுங்கள் என்று சொல்லும்போது, அவரது கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு, கருப்புப்பணம் வைத்திருக்கிறவர்கள் கொஞ்சம் பத்திரமாக இருங்கள், வேலைக்காரர்கள் போல யாராவது வந்தால் நம்பாதீர்கள் என்று அவர்களுக்கு எச்சரிக்கை விடுகிறாரா என்று எனக்குப் புரியவில்லை.

நான் கடைசியாகக் குறிப்பிடுகிற நேரத்தில் நண்பர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும் அரங்கண்ணல் அவர்களும் எடுத்துத் தெரிவித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், மற்றும் வேறு எதிர்கட்சிக் கூட்டங்களுக்கு சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பப்படுகிறார்கள், காங்கிரஸ் கட்சிக் கூட்டங்களுக்கு சுருக்கெழுத்தாளர்கள் வருவதில்லை. இதை அமைச்சரே ஒத்துக்கொண்டிருக்கிறார், வழக்கு மன்றங்களிலும் இது ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. நான் இரு தரப்புக் கூட்டங்களுக்கும் சுருக்கெழுத்தாளர்கள் வருவது நல்லது என்று கருதுகிறேன். ஆளும் கட்சியின் நன்மைக்காகக்கூட அது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எந்த அளவுக்கு மற்ற கட்சிக்காரர்களைத் தாக்கி, மட்டமாகப் பேசுகிறார்கள் என்பதை அறிவதற்கு அவர்கள் இருந்தால் நல்லது என்பது ஒரு காரணம். அப்படி எங்கள் கட்சியின் நன்மைக்காகக்கூட அது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி எங்கள் கட்சியில் உள்ளவர்கள் பேசினால் அவைகளை எடுத்துக் கூறவும், ஆளும் கட்சியில் உள்ளவர்கள் பேசினால் அவைகளை எடுத்து கூறவும், காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ளவர்களும் இணைந்த முறையில் ஒரு குழுவை அமைத்தாவது தவறுகளைக் கண்டித்து நாகரீக அரசியலை

வளர்ப்பதிலே எங்கள் கழகம் இந்த அமைச்சர் அவையில் இருக்கும் நல்லவர்களோடு ஒத்துழைக்க என்றும் தயாராக இருக்கும் என்று கூறி அந்த வகையில் முயற்சி கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் ஆளும் கட்சிக்கே அது தீமையாக முடியலாம். சுருக்கெழுத்தாளர்கள் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்திற்கு வந்து அண்ணாவினுடைய பேச்சை, நாவலருடைய பேச்சை, எங்கள் பேச்சை எழுதி எழுதி பழக்கப்படுகிற காரணத்தினால், எங்களுடைய பேச்சுக்களை கேட்பது மாத்திரமல்ல, எழுதி எழுதி, எழுதியதைத் திரும்பப் படித்து, படித்ததை இன்னொரு தாளில் எழுதி, எழுதியதை நகல் எடுத்து, அவர்களையும் கொஞ்ச நாளில் திராவிட முன்னேற்றக் கழகத்தினராக நீங்களே செய்கிறீர்கள் என்று அமைச்சர் அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன். (சிரிப்பு) அடிக்கடி எங்கள் பேச்சை...

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : எங்கள் போலீஸ் சுருக் கெழுத்தாளர்கள் பலதரப்பட்ட பேச்சுக்களை எழுதுகிறார்கள். அவர்கள் எதற்கும் கட்டுப்பட மாட்டார்கள்.

**கலைஞர் மு. கருணாநிதி** : அவர்கள் கட்டுப்படாமல் இருக்கவேண்டுமென்றுதான் விரும்புகிறேன். ஆனால் கால வெள்ளம் யார் யாரையோ அடித்துக்கொண்டு போகிறது. கடைசியாக அமைச்சருக்கும் இந்தத் துறையினருக்கும் நல்லெண்ணத்தையும் பாராட்டுதலையும் தெரிவித்தாலும் முதல் அமைச்சருக்கு இப்போதெல்லாம் பயமாக இருக்கிறது, அத்தகைய பாராட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பக்கத்திலிருந்து வந்தால் தனக்கு ஏதாவது ஆபத்து வந்து விடுமோ என்று அஞ்சுகிறார், அப்படி அஞ்சத் தேவையில்லை என்று கூறி, சென்னை மாநகரத்தில் போக்குவரத்தில் 1350 வாடகை டாக்ஸிகளும், 251 ஆட்டோ ரிக்ஷாக்களும், 3,700 கை ரிக்ஷாக்களும், 1,004 சைக்கிள் ரிக்ஷாக்களும், 258 மாட்டு வண்டிகளும், 479 ஜட்கா வண்டிகளும், 1 லட்சம் சைக்கிள்களும் சென்னை நகரத்தில் சுற்றிக்கொண்டிருக்கின்றன என்ற புள்ளி விவரத்தை அறிகிறோம். இந்தப் போக்குவரத்தை சீர் செய்ய எல்லா வகையிலும் முறையான முயற்சிகளை போலீஸ் இலாகா எடுத்துக்கொண்டாலும் ஒரு விஷயத்தில் ஒரு யோசனை கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையைச் சுற்றி இருக்கக்கூடிய ஆலைகளுக்கு, வேண்டிய நிலக்கரி வடக்கேயிருந்து வருகிறது.

அந்த ஆலைகளுக்கு வருகிற நிலக்கரியை ராயபுரத்திற்குக் கொண்டு வந்து குவிக்கிறார்கள். அங்கிருந்து 150 லாரிகள் மூலமாக எடுத்துச் செல்லும்போது பூந்தமல்லி, வால்டாக்ஸ் ரோடு வழியாக அந்த 150 லாரிகள் செல்லுகின்றன. வடக்கே இருந்து வரும் நிலக்கரி ராயபுரத்தில் சேமிக்கப்பட்டு அங்கிருந்து 150 லாரிகள் பூந்தமல்லி வழியாக, வால்டாக்ஸ் ரோடு வழியாகக் கொண்டு செல்லுவது போக்குவரத்துக்கு, அதுவும் நாமே வேண்டுமென்று தேடிக்கொள்ளும் இடைஞ்சலாக இருக்கிறது. இந்தப் போக்குவரத்து இடைஞ்சலைப் போக்கிக்கொள்ள வடக்கே கொருக்குப்பேட்டை, கொரட்டூர் ஆகிய இடங்களில் அங்கேயே அதை சேமித்து வைத்து சுற்றியிருக்கிற ஆலைகளுக்குக் கொண்டு சென்றால் 150 லாரிகளால் ஏற்படுகிற போக்குவரத்து இடைஞ்சல் பூந்தமல்லி, வால்டாக்ஸ் சாலைகளில் தவிர்க்கப்படும் என்று எடுத்துக் கூறி, போலீஸ் இலாகா, போலீஸ் அதிகாரிகள், போலீஸ் நண்பர்கள், அம்பு போன்றவர்கள், அந்த அம்பு ஆட்சி பீடத்தில் இருக்கிற வில்லிலிருந்து யாரை நோக்கி எய்தப்படுகிறதோ அவர்களை நோக்கிப் பாய்கிறது; திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிக்கவில்லை. போலீஸ் அமைச்சர் என்ற வில்லிலிருந்து அம்பு புறப்படுகிறது என்றாலும், போலீஸ் அமைச்சர் என்ற வில்லுக்கு காங்கிரஸ் கட்சி என்ற நாண் ஏற்றப்பட்டிருக்கிறது. அம்பு புறப்படுகிற இடம் அமைச்சர் என்ற வில்லாக இருந்தாலும் காங்கிரஸ் கட்சி என்ற நாணிலிருந்து புறப்படுகிற அந்த அம்புகளை நோவதற்குத் தயாராயில்லை. வில்லை வளைத்து நாண் ஏற்றும்போது நாண் அறுந்துவிடாமல் காத்துக்கொள்வது அமைச்சருடைய கடமை என்று கூறி உரையை முடித்துக்கொள்கிறேன்.

## சிறைச்சாலை மானியம்

உரை : 13 நாள் : 25.03.1964

**கலைஞர் மு. கருணாநிதி** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, சிறைச்சாலை மானியத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தரப்பட்டுள்ள வெட்டு பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கழக உறுப்பினர்கள் இங்கு எடுத்துக் கூறியது பலவும், கனம் அமைச்சர் அவர்கள் நம்புவது பலவும் சிறைச்சாலை என்பது குற்றவாளிகளைத் தண்டிப்பதற்காகவோ, கொடுமைப்படுத்துவதற்காகவோ, குரூரமான செயல்களால் அவர்களை அடக்குமுறைகளுக்கு ஆளாக்குவதற்கோ இடமாக இருக்கக் கூடாது என்பதனையும், குற்றவாளிகளைத் திருத்தி, புடம் போட்ட தங்கங்களாக மாற்றி சமுதாயத்தில் மீண்டும் அவர்கள் நல்லவர்களாக, நல்வினை செய்து வாழும்படி உலாவவிடும் அறச்சாலையாக இருக்க வேண்டுமென்ப தனையும் நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். அந்த வகையில்தான் சிறைச்சாலைகள் அமையவேண்டுமென்ற கருத்துப்பட எங்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இங்கே எடுத்துப் பேசியிருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் பேசும்போது சிறைச்சாலை என்பது மாமியார் வீடு அல்ல என்று குறிப்பிட்டார்கள். ஆனால் நல்ல மருமகளை படாதபாடுபடுத்தும் கொடிய மாமியார் வீடாக சிறைச்சாலை இருக்கக் கூடாது என்பதே எங்களுடைய எண்ணமாகும். சிறைச்சாலைக்குப் போனவர்கள், அதுவும் முன்பு தேசிய போராட்டங்களில் ஈடுபட்டு சிறைச்சாலைக்குச் சென்று கஷ்டப்பட்டார்கள், அதிலும் குறிப்பாக இந்த மன்றத்தில்

அமர்ந்திருக்கிற ஆளும் கட்சி உறுப்பினர்களில் சிலர் - பலர் என்று நான் கூறமாட்டேன், அவர்களே ஒப்புக் கொள்ளமாட்டார்கள் என்ற காரணத்தினால். பலவிதமான கொடுமைகளை அனுபவித்திருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள் இன்றைய தினம் அந்தக் கொடுமைகள் எல்லாம் சிறைச்சாலையில் இல்லை என்ற வாதங்களை இந்த மன்றத்தில் எடுத்து வைத்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் இங்கே ஒப்புக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன். வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த கொடுமைகள் ஓரளவுக்கு குறைந்து இருக்கின்றன என்பதை நான் நிச்சயமாக ஒப்புக்கொள்கிறேன். அதே நேரத்தில் பழிவாங்குகின்ற உணர்ச்சியோடு அரசியல் கைதிகள் சிறைச்சாலையில் பலவிதமான கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. சிறைச்சாலைகளில் இருக்கின்ற குவாரண்டைன் என்ற இடங்களில் அழகான பொன்மொழிகள் தீட்டப்பட்டு இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் 1953-ம் ஆண்டு நான் திருச்சி சிறைச்சாலையில் இருந்தபோது எனக்குத் தரப்பட்ட வேலைகளில் ஒன்று - அந்தப் பொன்மொழிகளை எல்லாம் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுக்க வேண்டும் என்பது. அப்படி என் கையினாலே, என்னால் மொழிபெயர்த்துக் கொடுக்கப்பட்ட பொன் மொழிகள்தான் இன்றையதினம் திருச்சி, மதுரை போன்ற சிறைச்சாலைகளில் காணப்படுகின்றன. ''ஓகோ, நீங்கள் எழுதிக் கொடுத்த வாசகங்கள்தானா அவை'' என்று வேண்டுமானால் நாளையே நீங்கள் அதை மாற்றலாம். அந்த வாசகங்கள் என்ன எடுத்துச் சொல்கின்றன? ''நாடு விரும்புகிறது வளமான உள்ளங்களை பலமான உடல்களை'' என்று ஒரு பொன்மொழியும் காணப்படுகிறது. ஆனால் அந்தவகையில் சிறைச்சாலையில் செயல்முறைகள் இருக்கின்றனவா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

சுகாதார வசதி சிறைச்சாலையில் எந்த அளவில் இருக்க வேண்டுமென்பதைப் பற்றி இரு தரப்பு உறுப்பினர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சுகாதார வசதியைப் பொறுத்த அளவில் மிகக் குறைபாடான நிலைமை இருக்கிறது என்பதை

யாரும் மறுக்க முடியாது. திரு. மாதவன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் இயற்கை உபாதைகளைக் கழித்துக் கொள்வதற்கு வல்லபாய் படேல் காலத்தில் க்யூ வரிசையில் நிற்க வேண்டிய நிலை இருந்ததாகச் சொன்னார்கள். ஆனால் மரியாதைக்குரிய முதல் அமைச்சர் அவர்கள் ''இப்போது அந்த நிலைமை இல்லை, அதற்கும் இதற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது'' என்று குறிப்பிட்டார்கள். அந்த வித்தியாசத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். வல்லபாய் படேல் காலத்தில் இயற்கை உபாதைகளைக் கழிப்பதற்கு க்யூ வரிசையிலாவது நின்றார்கள். கனம் திரு. பக்தவத்சலம் அவர்கள் காலத்தில் க்யூ வரிசையில் நின்று பார்த்துப் பயன் இல்லை என்பதனாலே சிறைச்சாலையில் ஆங்காங்கே உட்கார்ந்து விடுகிறார்கள். திருச்சி சிறைச்சாலைக்கு திடீரென்று ஒருநாள் காலை 6 மணிக்கு முதல் அமைச்சர் அவர்களும், சிறைச்சாலை அமைச்சர் அவர்களும், சென்று பார்த்தார்களானால் சிறைச்சாலை சுவர் ஓரங்களில் இருக்கும் அவலநிலையைப் பார்ப்பார்கள். அப்படிப்பட்ட ஆபாசங்களினால் அங்கிருந்து வீசுகின்ற காற்று சிறைக்கூடங்களைப் பாதிப்பதனால் சிறைக்கூடங்களில் உள்ளவர்களது சுகாதார நிலை எவ்வாறு கெடுகிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

மருத்துவ வசதியைப் பொறுத்தவரையில் சிறைச்சாலையில் உள்ளவர்களுக்கு ஒரு ஆபத்து, ஒரு அவசரம் என்றால் உடனடியாக அந்தக் கைதிகள் கவனிக்கப்படுவதில்லை. அரசியல் கைதியாக சிறைச்சாலைக்கு தோழர் கோ. சி. மணி அவர்களையும், மதுரை பொற்செழியன் அவர்களையும் கொழுகொழுவென்று கட்டிளம் காளையாக அனுப்பினோம்; சுகாதார வசதிக்குறைவினால் நோயுற்று சரியான மருத்துவ கவனிப்பு இல்லாமையினாலே அவதியுற்று சவங்களாகத் திருப்பித் தரப்பட்டார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. நண்பர் எம். எஸ். மணி சொன்னபோது எல்லாவற்றுக்கும் ஒரே மருந்து என்கின்ற முறையில் இரண்டு மூன்று வண்ண மருந்துகளைக் கரைத்து வைத்துக்கொண்டு மிக அலட்சியமாக மருத்துவ மனையில் இருக்கிற ஒன்றிரண்டு டாக்டர்கள் சிகிச்சை செய்து வருகிறார்கள். மருத்துவ சிகிச்சையில் நல்ல கவனம்

செலுத்தப்படவில்லை. சாதாரணமாக மிக அலட்சியமான முறையில் சிலர் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து சிறைச்சாலையில் கல்வி போதிக்கப்படுவதைப்பற்றி கூறப்பட்டிருக்கிறது. சிறைச்சாலை அறச்சாலையாக இருக்க வேண்டுமென்ற கருத்தில் நல்ல மனோதத்துவ நிபுணர்களைக் கொண்டு கல்வி போதிக்க வழி செய்யப்படவேண்டும் என்கிறோம். கைதிகளை பரிசீலித்துப் பார்த்து அவர்கள் எந்த எந்த வேலைகளுக்கு லாயக்கானவர்கள், எந்த எந்த தொழில்களைச் செய்வதற்கு இயல்பாகவே அவர்களுக்கு நோக்கம் இருக்கிறது என்பதைக் கண்டு அறிந்து அப்படிப்பட்ட தொழில்களிலேயே அவர்களுக்குப் பயிற்சி அளித்து, சீர்திருந்தி வெளியே வர வழி செய்தால் நிச்சயமாக அவர்களிடத்தில் ஓர் நல்வாழ்வைக் காண முடியும்.

ஆனால் கல்விவசதி என்ற பெயரால் சிறைச்சாலையில் பள்ளிக்கூடங்கள் ஒழுங்காக இயங்குகின்றனவா என்று பார்த்தால் இல்லை. சென்ற 1963-ம் ஆண்டு விலைவாசிப் போராட்டத்தில் திருச்சி சிறைச்சாலையில் நாங்கள் அடைக்கப்பட்டு இருந்தோம். அங்கே ஆசிரியர்கள் என்ன வேலை செய்கிறார்கள் என்று கேட்டால் 'பி' வகுப்பு 'ஏ' வகுப்பு கைதிகளுக்கு வேண்டிய சாமான்களை வெளியில் போய் வாங்கிக் கொண்டு வந்து தருகிறார். இந்த வேலைதான் சிறைப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தரப்பட்டு இருக்கிறது. பள்ளி மூடப்பட்ட காரணத்தால் ஆசிரியர்களுக்கு இப்படி வேலை மாற்றிக் கொடுக்கப்படுகிறது. இந்த நிலையில்தான் சிறைச்சாலை பள்ளிக்கூடம் செயலாற்றுகிறது. பள்ளிக்கூடம் மாத்திரம் அல்ல. அங்குள்ள நூல் நிலையங்களிலும் புதிய புத்தகங்கள் இடம் பெறவில்லை. பழைய புத்தகங்களும் ஒவ்வொன்றாக நூல் நிலையங்களைவிட்டு அகன்று கொண்டிருக்கிறது. புத்தகத்தை எடுத்து அளிப்பதற்கு சிறைச்சாலைகளில் யாரும் இல்லை. இந்த முறையில் கல்வி போதனையும், நூல் நிலையமும் இருக்கின்றனவே தவிர இவை மூலமாகக் கைதிகளுக்குப் பாடபோதனை நடத்துவதாகச் சொல்வது எல்லாம் ஏட்டளவில்தான் இருக்கின்றன. நிச்சயமாக செயலில் நிறைவேற்றப்படவில்லை.

கைதிகளிலே தொடர்ந்து குற்றம் புரிகிறவர்கள் ஒரு வகை. சூழ்நிலைக்கு ஏற்றவாறு, சந்தர்ப்பவசத்தால் குற்றம் புரிந்துவிடுகின்றவர்கள் ஒரு வகை. இந்த இரண்டு வகையினரும் சிறைச் சாலையில் ஒருவகையினராகத்தான் நடத்தப்படுகிறார்கள். திடீரென்று சந்தர்ப்பத்தினால் குற்றம் செய்துவிட்டவர்களை, தொடர்ந்து குற்றம் புரிந்து கொண்டே வருகிறவர்களோடு சேர்ந்து பழகவைத்து இவர்களும் கூட நிரந்தரமாகக் குற்றம் புரிகின்றவர்களாக மாற்றப்படுகிற சூழ்நிலைதான் இருக்கின்றது.

அவர்கள் சிறைச்சாலைகளிலே தனித் தனியாக வைக்கப்பட்டு, சூழ்நிலை, சந்தர்ப்பவசம் இவைகளின் காரணமாகக் குற்றவாளிகளாக ஆனவர்களுக்கு நல்ல தொழில் கற்றுக் கொடுத்து, அவர்கள் வெளியே வருகின்ற நேரத்திலே அந்தத் தொழில் மூலம் தங்களுடைய வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளும் அளவுக்கு வழிவகைகளைச் செய்யவேண்டும். பத்தாண்டுகள், பதினைந்து ஆண்டுகள் சிறைச்சாலையிலே இருக்கும் நேரத்தில் அவர்கள் ஊக்கம் கொள்ளும் அளவு மாதந்தோறும் ஊதியம் அளித்து - இப்போது தரப்படுவது போல் சிறிய அளவு ஊதியம் அளிக்காமல் தக்க ஊதியத்தைக் கொடுத்து, அவர்களுடைய குடும்ப வசதியை ஒட்டிய அளவு வெளியே வந்து அந்தத் தொழிலிலே மீண்டும் ஈடுபட்டுத் தொழிலை நடத்துகின்ற அளவுக்கு ஊதிய உயர்வு சிறைச்சாலையிலே தரப்பட வேண்டுமென்ற கொள்கையையும் நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

சிறைச்சாலைக் கைதிகளின் பாதுகாப்புக்காக வெல்பேர் ஆபீசர் என்று நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் இங்கே ஒருவரைச் சுட்டிக்காட்டுவது மிகவும் அவசியமாகிறது. இரண்டாண்டு காலத்திற்கு முன்பு திருச்சியில் ஒரு வெல்பேர் ஆபீசர் இருந்தார். அவர் எந்த அளவுக்குக் கைதிகளிடத்திலே நடந்து கொண்டார் என்பதற்கு ஒரே ஒரு நிகழ்ச்சியை மாத்திரம் ஆதாரபூர்வமாகக் கேள்விப்பட்டதை இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன். தூக்குத்தண்டனை பெற்ற ஒரு இளைஞன் கொட்டடியில் அடைக்கப்பட்டிருந்தான். அவனுடைய இளம் மனைவி தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முதல் நாள் பகலில் அந்தக் கைதியைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார்.

அவள் அங்கு முட்டி மோதி தலையிலிருந்து ரத்தம் குபு குபு வென்று கொட்டும் நேரத்திலே அவள் அழுது கொண்டே கூறிய வார்த்தைகளை மாத்திரம் இந்த மன்றத்திலே எடுத்துக்கூறி, இனிமேலாவது சிறைச்சாலையில் இருக்கக் கூடிய வெல்பேர் ஆபீசர்கள் ஒழுங்காக நடப்பதற்குத் துணைபுரியும் வகையில் நிலை அமையும் என்று நம்புகிறேன். ''உன்னை எப்படியாவது விடுதலை பண்ண வேண்டும் என்பதற்காக பலரிடம் மன்றாடிய நான் வெளியிலே இருக்கின்ற சில கழுகுகளால் ஏமாற்றப்பட்டேன்'' என்று கூறி கணவனிடம் அழுதாள். இன்னும் அதை விளக்கிக் கூற விரும்பவில்லை. ''உன்னை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்ற முயற்சியிலே என்னுடைய மானத்தைக்கூட இழந்தேன். அதற்குப் பிறகு உனக்குத் தூக்குத் தண்டனை என்று செய்திகேட்டு நேற்றைய தினம் உன்னைப் பார்க்க சிறைச்சாலை வாசலுக்கு வந்தேன். இங்கு இருக்கிற வெல்பேர் ஆபீசர் என்னை அழைத்துச் சென்று வேறு மனுப்போட்டு உன்னுடைய கணவனைக் காப்பாற்றுகிறேன்' என்று சொல்லி ஆசையைத் தூண்டிவிட்டு நேற்று இரவு என்னுடைய மானத்தைப் பறித்துக்கொண்டு, இன்றைய தினம் இங்கே நுழைய விட்டிருக்கிறான்'' என்று அழுது கொண்டே சொல்லி இவ்வளவுக்கும் பிறகு முட்டி மோதி அந்தத் தாழ்வாரத்திலேயே மண்டையை உடைத்துக் கொண்டாள் என்ற சேதியை சிறைச்சாலையிலே அன்றைய தினம் பார்த்தவர்கள் எடுத்துக் கூறினார்கள். இப்போது அந்த வெல்பேர் ஆபீசர் திருச்சி சிறைச்சாலையிலே இல்லை; வேறு ஒரு ஊருக்கு மாற்றப்பட்டிருக்கிறார் என்று கேள்விப்படுகிறேன். நான் இதை ஏன் எடுத்துச் சொல்கிறேன் என்றால், அமைச்சரவை இப்படிப்பட்ட கைதிகளுக்குப் பாதுகாப்பு என்ற பெயரால் மிக மோசமான மிருகங்களை வெல்பேர் ஆபீசர் என்று போடாமல் அபாக்கியவதிகளை, அபலைகளை இப்பேர்ப்பட்ட நிலைமைகள் வராமல் பாதுகாத்தால்தான் உண்மையிலேயே கைதிகளுக்கு நல்லது ஏற்படும்; அதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிறைச்சாலையிலே தண்டனை காலம் குறைய வேண்டுமென்றால் ஒரு சில வேலைகளைச் செய்தால் தண்டனை

காலம் குறையும் என்று சொல்கிறார்கள். அதிலே மிகவும் மோசமானது மலம் அள்ளினால் தண்டனை காலம் மிகவும் குறையும் என்று வகுக்கப்பட்டிருப்பதாகும். அதன்படி வெளியிலே மலம் அள்ளும் தொழில் செய்யாதவர்கள் கூட சிறைச்சாலையிலே மலம் அள்ளும் வேலையிலே ஈடுபடுத்தப் படுகிறார்கள். இந்தக் கொடுமை நீக்கப்பட்டாக வேண்டும். அந்தக் கொடுமை நீக்கப்பட வேண்டுமென்று எங்கள் கட்சித் தரப்பிலிருந்து எடுத்துச் சொன்னார்கள். மலம் அள்ளும் நிலைமையை அகற்றுவதற்காக 'ஃப்ளஷ்அவுட்' கக்கூஸ்களை சிறைச்சாலையில் அமைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆயுள் தண்டனை அடைந்த கைதிகள் தண்டனை காலம் முடிவதற்கு முன்பே அவர்களை வெளியே விட வேண்டுமென்றால் ஒரு குழு 'அவர்கள் நல்லவர்கள்' என்று சிபாரிசு செய்தால் வெளியே விடலாம் என்ற நியதி இருக்கிறது. அந்த நியதி எந்த அளவுக்கு ஒழுங்காக இருக்கிறது என்றால் போலீஸ் அதிகாரிகளிடத்தில் தொடர்பு வைத்துக் கொண்டிருப்பவர்கள், வெளியிலே செல்வாக்குடன் இருப்பவர்கள், அவர்கள் வெளியிலே வரக்கூடாது என்று நினைத்தால் வெளியே வராமல் செய்து விடுகிறார்கள். அந்தக் குழு வெளியிலே இருக்கிற போலீஸ் அதிகாரிகளிடத்தில் அபிப் பிராயம் கேட்டு தண்டனையைக் குறைப்பது என்ற நிலைமையை மாற்றி, சிறைச்சாலையிலே இருக்கிற சிறை அதிகாரிகளை அபிப் பிராயம் கேட்டு அவர்கள் கொடுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களை மையமாகக் கொண்டு அந்த அடிப்படையில் அவர்களை விடுதலை செய்வதற்கும், தண்டனை காலத்தைக் குறைப் பதற்கும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

சிறைச்சாலையிலே இருக்கும் கைதிகளைத் திருத்துவதற்காக இப்போது மதத்துறையிலே வாரத்திற்கு ஒரு முறை பாதிரிகளோ அல்லது முல்லாக்களோ உள்ளே வந்து அவர்களுக்கு மத சம்பந்தமாகச் சில பாடங்களைச் சொல்லித் தருகிறார்கள். அவர்கள் குற்றத்தை உணர்ந்து திருந்துவதற்கு மேலும் நல்ல போதனைகள் இருக்கவேண்டும். நம்முடைய சிறைத்துறை அமைச்சர் அவர்கள் சினிமாவிலே விருப்பம் உள்ளவர்கள்;

சினிமா பிடிக்காதவர்கள் அல்ல. இரண்டாயிரம், மூவாயிரம் அடிகளில் புதிய திரைப்படங்களை எடுத்து சிறைச்சாலையிலே அவர்களுக்குப் போட்டுக் காட்டி அவர்கள் திருந்துவதற்கான முறைகளையும் ஏற்படுத்த வேண்டுமென்று அமைச்சர் அவர்களை இந்த மன்றத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

'சிறைச்சாலையிலே ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தார் அனுபவிக்கின்ற கொடுமைகளை விளம்பரப்படுத்திக் கொண்டார்கள்' என்ற முறையிலே இங்கே பேசப்பட்டது. 'செக்கிழுத்த சிதம்பரனார்' என்று பேசவில்லையா? 'செக்கிழுத்த சிதம்பரனார்' என்று பேசுவது அவருடைய தியாகத்தைப் பெருமைப் படுத்துவதற்காகப் பேசுகிறோமே தவிர, விளம்பரப் படுத்துவதற்காக அல்ல. தியாக குணங்கள், சுபாவங்கள் நாட்டிலே ஏற்பட வேண்டுமென்பதற்காகச் சொல்கிறோம்.

''என்பில் அதனை வெயில்போலக் காயுமே
அன்பில் அதனை அறம்''

என்று வள்ளுவர் கூறினார். 'அன்பில் அதனை அறம் காயும்' என்று குறிப்பிட்டார். ஈரோடு உறுப்பினர் கூறியது போல குற்றவாளிகளைக் காயும் என்று வள்ளுவர் கூறவில்லை. அன்பில்லாதவர்களைக் காயும் என்றுதான் வள்ளுவர் கூறியிருக்கிறார். குற்றவாளிகள் மட்டுமல்ல; தண்டிக்கின்றவர்கள் கூட அன்பில்லாதவர்களாக மாறக்கூடாது. குறள் இரண்டு புறத்திலும் இருமுனைக் கத்தியாகப் பயன்படும் என்பதை ஈரோட்டுப் புலவர் உறுப்பினர் அவர்கள் மறக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அன்பு இல்லாமல் குற்றம் செய்கிறவர்களை நாமும் அதே அன்பு இல்லாமல் நடத்த வேண்டும் என்பதை ஈரோட்டுப் புலவர் அவர்கள் ஒத்துக் கொள்ளமாட்டார்கள் என்று உரிமையின் காரணமாகக் கூறுகிறேன். உரிமை என்பதைத் தவறாகக் கருதிக்கொள்ள வேண்டாம். மற்றவர்கள் தவறாகக் கருதிக்கொள்வார்களோ என்ற பயத்தால் இத்தனை நாளை விட இன்று கொஞ்சம் காரசாரமாகவே அவர் பேசியிருக்கிறார்.

அரசியல் கைதிகளைப் பொறுத்தவரையில் அவர்களை எப்படி நடத்த வேண்டுமென்பதைப் பற்றி ராஜாஜி அவர்கள் சிறைச்சாலையிலே இருந்த நேரத்திலே 'சிறையில் தவம்' என்ற நூலில் எழுதியிருக்கிறார். எழுதியவர் இன்றைய ராஜாஜி அல்ல;

தேசீயப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ற அன்றைய ராஜாஜி எழுதியிருக்கிறார்.

''அரசியல் கைதிகளுக்கும், அறநெறி வழுவிய கைதிகளுக்கும் உள்ள வித்தியாசத்தை அதிகார வர்க்கம் அறிந்து கொள்ளவில்லை. சிறை அதிகாரிகளுக்கு அதைப்பற்றிக் கொஞ்சம்கூடத் தெரியாது. சிறை விதிப் புத்தகத்தில் அந்த வித்தியாசத்தைப் பற்றி பிரஸ்தாபமே கிடையாது. அதில் கூறப்படும் விதிகள் எல்லாம் பல பொருள் கூறக்கூடியவை. அதெல்லாம் அவற்றை ஏற்படுத்தும் அதிகாரிகளுடைய குணத்தையும், அதை நிர்வகிக்கும் அதிகாரிகளின் குணத்தையுமே பொறுத்ததாகும். வெறுங்காவல் கைதிகள் விஷயத்தில் மட்டும் ஓரளவு வித்தியாசம் காணப்படும். ஆனால் நம்மில் பலரும் கடுங்காவல் தண்டனைகளே விதிக்கப் பட்டிருக்கிறோம். வெறுங்காவல் தண்டனை விதிப்பதா கடுங்காவல் தண்டனை விதிப்பதா என்னும் விஷயம் தண்டனை தரும் மாஜிஸ்திரேட்டின் மனோ நிலையைப் பொறுத்திருக்கிறது.

சிறை அதிகாரிகள் கடுங்காவல் தண்டனை பெற்று வந்துள்ளவர்களை அரசியல் கைதிகளாகவே எண்ணுவதில்லை. அரசியல் கைதி என்பவர்களை அறநெறி தவறாதவர்கள் என்று மதிக்க வேண்டியதற்குப் பதிலாக ஒரு பெரிய பாவ காரியம் செய்து வந்தவர்களாகவே மதிக்கிறார்கள்''என்று ராஜாஜி அவர்கள் 'சிறையில் தவம்' என்ற நூலில் அந்தக் காலத்திலேயே எழுதியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கும் சிறைச்சாலையிலே அரசியல் கைதிகள் அவ்வாறே மதிக்கப்படுகிறார்கள். சிறை என்ன சொர்க்கலோகமாக இருக்க முடியுமா என்று கேட்கிறார்கள். வேலூர் காங்கிரஸ் நண்பர் அவர்கள் பேசும்போது கூட சிறை என்று கூறி ஆஸ்பத்திரியில் சிலர் இருக்கிறார்கள் என்றுகூட தி.மு. கழகத்தினரைப்பற்றி சூசகமாக குறிப்பிட்டார்கள். தேசீய இயக்கத்தில் ஈடுபட்டவர்களுடைய நிலைமையை, அவர்களுடைய தியாகத்தைக் காங்கிரஸ்காரர்கள் மட்டுமல்ல கழகத்தவர்களும் ஒருசேரப் பாராட்டுகிறார்கள். ஜவஹர்லால் நேரு அவர்களுடைய தந்தை மோதிலால் நேரு பற்றி சையது முகமது அவர்கள் ஒரு புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார் -

''மோதிலாலும் நானும் சிறைக்கு வந்த பிறகு ஆனந்த பவனத்திலிருந்து ('ஆனந்த பவன்' என்பது நேருவினுடைய வீட்டிற்குப் பெயர்) தினசரி உணவு சிறைக்கு வந்தது.

பட்டாளம் போல கைதிகள் எங்களுக்கான உணவை சிறை வாயிலிலிருந்து எங்கள் அறைக்கு கொண்டு வருவார்கள். வெளியிலிருந்து இவ்வளவு உணவு சிறைக்குள்ளே கொண்டு வரப்படுவதை ஜவஹர்லால் விரும்பவில்லை !

ஆனால் அப்பாவிடம் அவர் எதையும் சொல்ல மாட்டார். ஆனால் கோபமாக இது ஓட்டல் அல்ல, சிறைச்சாலை என்று என்னிடத்தில் கூறுவார். இருந்தாலும் உணவு வந்து கொண்டே இருந்தது.

உடல் நலக் குறைவு காரணமாக மோதிலால் விடுதலை செய்யப்பட்டார். உடனே ஜவஹர்லால் (சிறைக்குள் கொண்டு வரப்பட்டிருந்த) மின்சார விசிறி, ஐஸ் பெட்டி முதலிய ஆடம்பரப் பொருள்களை 'ஆனந்த பவன' த்திற்குத் திருப்பி அனுப்பிவிட்டார். கோடைக்காலத்தில் குளிர்ந்த நீரை உபயோகிக்க உனக்கு விருப்பமில்லாவிட்டால் மகமதுவுக்குக் கொடு என்று கோபமாக ஜவஹருக்குக் கடிதம் எழுதி மோதிலால் அவற்றை (அந்த ஆடம்பரப் பொருள்களை) சிறைக்குத் திருப்பி அனுப்பிவிட்டார்.

ஆகவே சிறைச்சாலையில் அரசியல் கைதிகள் எப்படி நடத்தப் படவேண்டும், கொடுமையான குற்றங்களை இழைத்த கைதிகள் எப்படி நடத்தப்பட வேண்டும் என்ற முறையை இன்றைய சிறைச்சாலை அதிகாரிகள் அனுஷ்டிக்கவில்லை என்ற குற்றச் சாட்டை கூறும்போது நேற்றைய தினம் போலீஸ் அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் அளித்தார்கள். அதெல்லாம் அந்தந்த அதிகாரிகளைப் பொறுத்தது என்று குறிப்பிட்டார்கள். அப்படிச் சொல்லிவிடுவதினால் அரசியல் கைதிகளை மேலும் கொடுமைப்படுத்துவதற்கு ஒரு தூண்டுதலாக அந்தப் பேச்சுக்கள் அமைந்து விடுகிறது என்ற அச்சம்தான் எங்களுக்கு ஏற்படுகிறது. அந்த நிலையில்தான் நாங்கள் இவற்றையெல்லாம் எடுத்து விளக்க வேண்டியவர்களாக இருக்கிறோமே அல்லாது

வேறு அல்ல. ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, பரோலில் யார் யார் விடுதலையானார்கள் என்று கேட்கப்பட்ட நேரத்தில் அவர்கள் கீழே குறிப்பிட்டபடி சொல்லியிருக்கிறார்கள்.

''சாண்டியாகோ, 6044, 14-3-1961ல் 2 மாதம், 6-10-1962ல் 1 மாதம், 19-12-1962ல் 1 மாதம். 6045, பொன்னுசாமித் தேவர் 14-3-1961ல் 2 மாதம், 6-10-1962ல் 1 மாதம், 19-12-1962ல் 1 மாதம். 5179, சகன்னாதன் 6-3-1959ல் 4 வாரம், 16-4-1960ல் 2 மாதம், 4-4-1961ல் 2 மாதம், 3-1-1962ல் 2 மாதம், 23-10-1962ல் 2 மாதம்''. தூத்துக்குடி கே.வி.கே சாமி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை அனுபவிக்கிறவர்கள் இந்தக் கைதிகள். இவர்களுக்கு இந்த அளவு சலுகைகள் அளிக்கப்பட்டு பரோலில் வந்திருக்கிறார்கள். ஆனால் இந்த சட்டமன்றத்தின், திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றச் செயலாளரான திரு. மதியழகன் அவர்களும், திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்களும் நாளைய தினம் தேர்தலுக்கு வோட்டு போட பரோலில் வர அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. எங்கள் கட்சித் தலைவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தந்த மனு முதல் அமைச்சர் அவர்களால் நிராகரிக்கப்பட்டது. சட்டப்படி அவர்களை பரோலில் விட வழியில்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் எழுதிவிட்டார்கள். நான் சட்டம் பயின்றவன் அல்ல. ஆனால் முதல் அமைச்சர் அவர்கள் சட்டம் பயின்றவர். சட்டம் என்ன சொல்கிறது? அவர்கள் பரோலில் வந்து வோட்டு போட உரிமையற்றவர்கள் என்று கூறுகிறதா? அல்ல. 1951ம் ஆண்டு ஆக்ட், ரெப்ரசென்டேஷன் ஆப் ப்யூப்பிள் ஆக்ட் என்ற ஆக்ட் இருக்கிறது. அதிலுள்ள 141வது செக்ஷன் 142, 143, 144, 145 செக்ஷன்களில் 142வது செக்ஷன், 143ம் செக்ஷன் இந்த இரு செக்ஷன்கள் மட்டும் 1956ம் ஆண்டில் செய்யப்பட்ட அமன்ட்மெண்ட்படி நீக்கப்பட்டு 141(எ) செக்ஷன்படி இ.பீ.கோ 171(இ), 171(எஃப்) செக்ஷன்ஸ்படி தண்டிக்கப்பட்டவர்கள் வோட்டு உரிமையை இழக்கிறார்கள். இ.பி.கோ 171 (இ), அண்ட் (எஃப்) தேர்தல் நேரத்தில் வோட்டுக்கு லஞ்சம் வாங்கிய குற்றம் அல்லது கட்டாயப்படுத்தி வோட்டு போடச் செய்த குற்றம். இந்தக்

குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்களுக்கு வோட் உரிமை இல்லை. 1951ம் ஆண்டு ஆக்ட் செக்ஷன் 7 (பி) என்ன சொல்கிறது? இந்த வழக்குகளில் இரண்டு ஆண்டு காலம் தண்டிக்கப்பட்டால் அவர்களுக்கு வோட்டு உரிமை இல்லை என்று கூறப்படுகிறது. திரு. மதியழகன் அவர்களும், திரு. ராமசாமி அவர்களும் இரண்டு ஆண்டுகள் தண்டிக்கப் பட்டவர்களா? ஏன் முதல் அமைச்சர் அவர்கள் பெருந்தன்மையைக் காட்டி அவர்களை பரோலில் விடுதலை செய்திருக்கக்கூடாது. கள்ள நோட்டு அடித்தவனுக்கு கணக்கு வழக்கு பார்க்க பரோலில் விடப்பட்டிருக்கிறது. (ஆரவாரம்). ஆனால் வோட் அளிக்க எங்கள் தோழர்களுக்கு பரோலில் விடுதலை அளிக்கப்படவில்லை. இதைவிட வெட்கக்கேடான அரசியல் நிர்வாகம் எந்த நாட்டில் இருக்க முடியும் என்று கேட்கிறேன். (எதிர்க்கட்சி பக்கத்திலிருந்து 'ஷேம்', 'ஷேம்'). மதியழகன் அவர்களும், ராமசாமி அவர்களும் கொலைக் குற்றம் செய்து இன்றையதினம் சிறைச்சாலைக்கு சென்றிருப்பவர்களா? அவர்கள் கொள்ளை அடித்தார்களா? அவர்கள் கள்ள நோட்டு வழக்கில் சம்பந்தப்பட்டவர்களா? இன்றையதினம் இந்தியத் துணைக் கண்டத்தில் எங்கேயோ ஒரு சிறைச்சாலையில் ஒரு பெரும் முதலாளி, லஞ்சக் குற்றத்தில் ஈடுபட்டவருக்கு, இந்த சட்டமன்றத்தில் அவர் பெயரை நான் கூற விரும்பவில்லை - அவர்கள் ஆஸ்பத்திரி செல்ல அனுமதி வழங்கப்பட்டு பக்கத்தில் நான்கு பெண்டிர், குளிர்ப்பதன அறை இந்த நிலையில் அவர் இந்திரபோகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார். அதே நேரத்தில் லட்சியத்திற்காக, அதுவும் சாதாரண லட்சியம் அல்ல, மொழியைக் காக்கிற போராட்டத்தில், நம்மை வளர்த்து, நம் ஊனை வளர்த்து, நம் உயிரை வளர்த்து நம் ஒவ்வொரு துளி இரத்தத்திலும் ஊடுருவிப் பாய்ந்து கொண்டிருக்கிற தமிழ் மொழியைக் காப்பதற்காக சிறைச்சாலை சென்றிருக்கும் இந்த இரண்டு வீரமிகு அங்கத்தினர்களை பரோலில் விடுதலை செய்ய மாட்டார்கள் என்றால் அத்தகைய ஆட்சி, அழிவுக் காலத்தை நோக்கி வெகு அவசரமாகப் போய்க்கொண்டிருக்கிறது என்றுதான் பொருள் எனக் கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

## மாவட்ட ஆட்சி நிர்வாகத் துறை

உரை : 14 நாள் : 08.03.1966

**கலைஞர். மு. கருணாநிதி** : கனம் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சி நிர்வாகம், ஓய்வு ஊதியங்கள், கடன்களும், முன்பணங்களும் ஆகிய தலைப்புகளில் இங்கு விவாதிக்கப்படுகிற இந்த மானியக் கோரிக்கைகளின் மீது எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அளித்துள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரிக்கும் அடிப்படையில் என்னுடைய கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

எதிர்க்கட்சியினுடைய சார்பிலே உறுப்பினர்கள் தந்துள்ள வெட்டுப் பிரேரணைகளில் மிக முக்கியமாக கிராம அதிகாரி களினுடைய ஊதியத்தையும் மதிப்பையும் உயர்த்தவேண்டும் என்றும், அவர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்றும், கிராம அதிகாரிகளுக்குச் சம்பள உயர்வு தரப்பட வேண்டும் என்றும், கிராமக் கடைநிலை ஊழியர்களான வெட்டி, தலையாரி போன்றவர்களுக்குச் சம்பள உயர்வு தரப்பட வேண்டும் என்றும், அவர்களுக்குப் பயணப்படி போன்றவை கொடுக்கப்பட வேண்டும் என்றும், அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியவர்களின் ஓய்வு ஊதியத்தை நிர்ணயிப்பதில் ஏற்படும் கால தாமதம் தவிர்க்கப்பட வேண்டும் என்றும், விவசாயிகளுக்கு அரசாங்கம் தருகிற கடனில், அது தரப்படுகிற நேரத்தில் ஏற்படுகிற காலதாமதமும், இடையிலே ஏற்படுகிற குறைபாடுகளும் அறவே களையப்பட வேண்டும் என்றும், ஐந்து ஏக்கருக்குக் குறைந்த விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதில் முதல் சலுகை பிரத்தியேகமாகக் கவனிக்கப் பட்டுத் தரப்படவேண்டும் என்றும், பொதுவாக மாவட்டங்களின்

நிர்வாக வசதியை முன்னிட்டு மாவட்டங்கள் பிரிக்கப்படுவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்றும் வெட்டுப் பிரேரணைகளில் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றைப்பற்றியெல்லாம் இங்கு பேசிய கனம் உறுப்பினர்கள் தங்கள் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் இங்கே எடுத்துத் தெரிவித் திருக்கிறார்கள்.

இன்றையதினம் மாவட்ட நிர்வாகம் ஒழுங்காக, சீராக அமையவும், அதற்காகச் செலவழிக்கப்படுகிற பணம் சேர வேண்டியவர்களைச் சேரவும், எந்த நல்ல நோக்கத்தோடு அவை செலவழிக்கப்படுகிறதோ, எதற்காக இந்த மானியம் ஒதுக்கப்படுகிறதோ அவை நேரான வகையில் பயன்படவும் இன்றைக்கு மாவட்டம் அளவிலே பெரியதாக இருப்பது ஒரு இடையூறாக இருக்கிறது என்று பல முறை இந்த மன்றத்திலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அவற்றிற்கெல்லாம் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அவ்வப்போது பதில்கள் அளித்திருக்கிறார்கள். ஆனாலும் அந்தப் பதில்கள் திருப்திகரமான பதில்களாக நமக்குத் தோன்றவில்லை. ஏனென்றால் அவர்களே கூட கடந்த 1964-65ஆம் ஆண்டு இந்த மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதில் அளிக்கும் நேரத்தில் ''மாவட்டங்கள் சிறிதாகிவிட்டால் நிர்வாக ஒழுங்கும், நிர்வாகச் செழிப்பும் ஏற்படும் என்பதில் எனக்கும் நம்பிக்கை உண்டு'' என்று கூறிவிட்டு ஆனால் அவைகளைச் செயல்படுத்த முடியாமல் இருப்பதற்கு இரண்டு காரணங்களைச் சொன்னார்கள்.

இன்றுள்ள நிலையில் சில மாவட்டங்களின் அமைப்பைப் பார்த்தால் ஒன்றுக்கொன்று எவ்வளவு முரண்பாடாக இருக்கிறது என்பது தெளிவாகத் தெரியும். பத்து லட்சம் மக்களைக் கொண்டதும், நான்கு வட்டாரங்களைக் கொண்டதுமான கன்னியாகுமரி ஒரு மாவட்டமாக இருக்கிறது. அதே நேரத்தில் 33½ லட்சம் ஜனத்தொகையும், 12 வட்டங்களைக் கொண்டதுமான தஞ்சை மாவட்டம் தனி மாவட்டமாக இருக்கிறது. 35½ லட்சம் ஜனத்தொகையையும், 9 வட்டாரங்களைக் கொண்டதுமான கோவை தனி மாவட்டமாக இருக்கிறது. 31½ லட்சம் ஜனத்தொகையையும்

11 வட்டாரங்களைக் கொண்டதுமான வடாற்காடு ஒரு தனி மாவட்டமாக இருக்கிறது. இப்படி பத்து லட்சம் ஜனத் தொகையையும், நான்கு வட்டாரங்களைக் கொண்டதுமான கன்னியாகுமரி ஒரு மாவட்டமாகவும், 32½ லட்சம் ஜனத்தொகையும் பத்துப் பன்னிரண்டு வட்டரங்களைக் கொண்டதுமான சில மாவட்டங்களும் இருக்குமானால் இவற்றிலே நிர்வாகம் எப்படிச் செம்மையாக நடைபெற முடியும் என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். இதைச் சொல்கிற நேரத்தில் முதல் அமைச்சர் அவர்கள் பெரியதாக இருக்கிற, மாவட்டங்களைப் பிரிக்க முடியாது என்பதற்கு எடுத்துச் சொன்ன இரண்டு காரணங்களையும் பரிசீலிப்பது நம் கடமையாகும்.

முதல் அமைச்சர் அவர்கள் இவற்றைப் பிரிப்பதற்கு இயலாது என்பதற்குக் கூறிய இரண்டு காரணங்களில் முதலாவதாக அவை பிரிக்கப்படுகிற காரணத்தினால் பெயர்கள் மாற்றப்படும்படியாக இருக்கும், ''டிரடிஷன்'' கெட்டுவிடும். அத்தகைய பெயர் மாற்றத்தைப் பொதுவாக அந்த அந்த மாவட்டங்களில் உள்ள மக்கள் விரும்பவில்லை என்பதாகக் குறிப்பிட்டார்கள். அவர் அப்போதே இன்னொன்றையும் சொன்னார்கள். தாம் தஞ்சை மாவட்டத்திற்குச் சென்றிருந்த போது, தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கலாமா என்பதைப் பற்றிப் பலருடன் கலந்தாலோசித்ததாகவும் ''அவ்வாறு பிரிக்கலாம், ஆனால் தஞ்சை மாவட்டம் என்ற பெயரைத் தாங்கள் இழக்க விரும்பவில்லை'' என்று கூறினார்கள் என்பதாக எடுத்துச் சொன்னார்கள். அடுத்து அவர் கூறிய காரணம் மாவட்டங்கள் பிரிக்கப்படுகிற காரணத்தினால் நிர்வாகச் செலவு அதிகமாகக் கூடும் என்பதாகும். இது எப்படி இருக்கிறது என்றால் கல்யாணம் செய்து கொள்ளாத ஒருவரிடம் சென்று ''நீ கல்யாணம் செய்து கொள்கிறாயா?'' என்று கேட்டால், ''கல்யாணம் செய்து கொண்டால் பிரம்மசரியம் கெட்டுவிடுமே'' என்றால் அவன் பிரம்மசரியத்தைக் காத்துக்கொள்வதில் உறுதியாக இருக்கிறான் என்று பொருள். அடுத்து ''குடும்பச் செலவு அதிகமாகிவிடுமே'' என்று பதில் சொல்வான் என்றால் அவன் பிரம்மசரிய விரதத்தில் இருந்து இறங்கிவிட்டான். குடும்பம் என்று

நடத்தத்தான் அஞ்சுகிறான் என்று பொருள். இங்கே கவனிக்க வேண்டியது - பிரம்மசாரியாக இருந்து செலவழிக்கின்ற ஊதாரிச் செலவுகளை எல்லாம் குடும்பம் என்று அமைத்துவிட்டால் தவிர்க்க முடியும், குடும்பம் நடத்துவதில் சிரமம் இருக்காது என்பதுதான். அப்படி இன்று ஒரே ஒரு மாவட்டமாக பெரிய நிலப்பரப்பை வைத்துக்கொண்டிருப்பதனால் அங்கும் இங்கும் போவதற்கு ஆகும் வீண் பயணச்செலவுகளை எல்லாம் சீரான அளவில் மாவட்டம் பிரிக்கப்படுமானால் தவிர்க்கக் கூடும். இன்றைக்கு ஆகும் வீண், ஊதாரிச் செலவுகளே, பயனுள்ள வகையில் நிர்வாகம் ஒழுங்காக, சீராக நடைபெறுவதற்கு ஆகும் செலவை ஈடுகட்டிக்கொள்ளும் என்பதுதான். ஆகவே மாவட்டங்களைப் பிரிப்பதனால் ஏற்படக்கூடும் செலவைப் பற்றிக்கூட முதல் அமைச்சர் அவர்கள் பயப்படத் தேவை யில்லை என்ற நிலையை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

''பெயரை மாற்றுவதில் என்ன இருக்கிறது? இந்தப் பெயர் தான் இருக்கவேண்டும், அந்தப் பெயர்தான் இருக்கவேண்டும் என்று சண்டையிட்டுக்கொள்வது எனக்குப் பிடிக்காது,'' என்கிற வாதத்தையே நமது முதல் அமைச்சர் அவர்கள் வேறு சந்தர்ப்பத்தில் இந்த மன்றத்திலும் சரி, வெளியிலும் சரி அடிக்கடி எடுத்துச் சொல்வார்கள். அவர்களே இப்போது மாவட்டங் களைப் பிரிக்கவேண்டும் என்கிறபோது ''மாவட்டங்களைப் பிரிப்பதனால் வேறு பெயர் வைக்க வேண்டியிருக்கும். டிரெடிஷனாக வருகிற பெயரை மாற்றுவதை மக்கள் விரும்பவில்லை'' என்கிற வாதத்தை எடுத்து வைக்கிறார்கள். அவர்கள் வாதத்திலே மிக்க திறமை படைத்தவர்கள். சூழ்நிலைக்கு ஏற்ப தம் வாதங்களை எடுத்து வைக்கும் அவரது திறனை நாம் பாராட்டலாமே தவிர அவர் கூறுகின்ற இரண்டு வாதங்களுமே - மக்களுடைய கோரிக்கையை, எதிர்க் கட்சிக்காரர்கள் எடுத்து வைக்கின்ற கோரிக்கையை நிறைவேற்றி வைக்கவேண்டுமென்ற பரிவு உணர்ச்சியோடுகூடிய ஆலோசனையின் பேரில் எழுந்ததாகத் தெரியவில்லை. அவரது பிடிவாதத்தின் பேரில் எழுந்தனவாகும். அவர் தம்முடைய வாதத்தில்கூட அழுத்தந்திருத்தமாக இருந்திருக்கிறார் என்று சொல்ல முடியாது. இன்றைக்கு சேலம் இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு பிரிவுக்குச்

சேலம் என்று பெயர் ; இன்னொரு பிரிவுக்குத் தர்மபுரி என்று பெயர். தர்மபுரி பகுதியில் உள்ள மக்கள் ட்ரெடிஷனாக வந்த பெயரை மாற்றிக்கொள்ளத் தயாராக இருந்தார்களா? அவர்களது அபிப்பிராயம் வாக்கெடுப்பின் மூலம் நிர்ணயிக்கப்பட்டதா? அல்லது முதல் அமைச்சர் அவர் களிடத்தில் வந்து தாங்கள் தர்மபுரி என்கிற பெயர்மாற்றத்திற்கு இசைகிறோம் என்று சம்மதம் அளித்தார்களா? என்பது எனக்குத் தெரியாது. நான் தர்மபுரி என்று பெயர் வைத்திருப்பதை குறைகூற விரும்பவில்லை. எப்படி சேலம் மாவட்டம் நிர்வாகச் சீரமைப்பை உத்தேசித்து சேலம் என்றும், தர்மபுரி என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதோ அதுபோல தஞ்சை, கோவை, வடாற்காடு போன்ற மாவட்டங்களும் பிரிக்கப்படவேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குத் தடையாக ட்ரெடிஷனலாக வந்த பெயரை மாற்ற விரும்பவில்லை என்கிற வாதம் பொருந்தாது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இரவல் தலைநகரம். அதுபோல முதல் அமைச்சர் அவர்களுடைய மாவட்டமாகிய செங்கல்பட்டுக்கும் இரவல் தலைநகரம். இந்த இரவல் தலைநகரம் இரண்டுக்கும் இருப்பதை மாற்றவேண்டும் என்று பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியும், இவ்வாறு அந்த அந்த மாவட்டங்களின் தலைநகர் வேறு இடத்தில் இருப்பதன் சங்கடங்களை நன்கு உணர்ந்தும் அவற்றை மாற்றாமல் இருப்பதற்குக் காரணமாக நிர்வாகச் செலவு அதிகரிக்கும் என்பதை எடுத்துச் சொல்லி வருகிறார்கள். ஏறத்தாழ இத்தகைய மானியங்களுக்கு 52½ கோடி ரூபாய் வழங்கப்படுகிறது. அதில் இப்படி தலைநகரங்களை அந்த அந்த மாவட்டத்திலேயே ஏற்படுத்துவதன் மூலம் அதிகமாக எவ்வளவு செலவாகிவிடக்கூடும்? செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைநகரை காஞ்சீபுரத்திற்கு மாற்றவேண்டும் என்றால் காஞ்சீ புரத்தின் பெருமையை முதல் அமைச்சர் அவர்களே எடுத்து விளக்கியிருக்கிறார்கள். சரித்திரப் பெருமை வாய்ந்த இடம் என்று கூறியிருக்கிறார்கள். இருந்தாலும் அவரது மாவட்டத்தின் தலைநகரையே அவரால் பாராட்டப்படுகிற சொந்த இடத்திற்கு

மாற்ற முடியவில்லை என்று அவர் கைவிரிப்பார் என்றால் மதுரையில் இருந்து இராமநாதபுரம் மாவட்டத் தலைநகரை அந்த மாவட்ட சொந்த நகருக்கு எடுத்துப்போங்கள் என்றால் எங்கே இரக்கம் பிறக்கப்போகிறது? மாவட்டங்களைப் பிரிப்பதனாலும், அந்த அந்த மாவட்டங்களின் தலைநகரை அந்த அந்த மாவட்டத்தின் சொந்த நகரத்தில் ஏற்படுத்து வதனாலும் எவ்வளவு செலவாகக் கூடும்? அது ஏன் இப்போது சாத்தியமில்லை என்பதையாவது முதல் அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரங்களோடு எடுத்துக்கூறி, நாங்கள் சொல்வதற்கு முற்றுப்புள்ளி வைத்தால் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்ட ஆட்சி நிர்வாகங்களில் ஏறத்தாழ எல்லா மாவட்டங்களிலும் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் களுடைய யோசனைகள் வழங்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் மாவட்ட வளர்ச்சிக் குழுக்கள் ஆங்காங்கே இயங்குகின்றன. அப்படிப்பட்ட மாவட்ட வளர்ச்சிக் குழுக்களில் இடம் பெறுகிற சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள்கூட மாவட்ட வளர்ச்சிக் குழுக்களில் தங்கள் அபிப்பிராயங்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கின்றதே தவிர அந்த அந்த மாவட்ட நகர சபை மன்றங்களில் - திருச்சி, கோவை, மதுரை, சேலம் போன்ற இடங்களில் நடைபெறும் நகராட்சி மன்றங்களின் நிர்வாகக் குழுக்களில் இடம் பெற்று, நகர வளர்ச்சியில் அவர்கள் யோசனைகள் தெரிவிப்பதற்கான வாய்ப்பு, வசதி இல்லாமல் இருக்கின்றன. குறிப்பாகவும், சிறப்பாகவும் சென்னை மாநகராட்சி மன்றத்தில் பல குழுக்கள் இருக்கின்றன. வட்டாரக் குழுக்கள் வேறு நல்ல பணிபுரிந்து வருகின்றன. ஆனால் சென்னை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் - சென்னை மாநகராட்சி மன்ற அபிவிருத்திக் குழுக்களில் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை எடுத்துச்சொல்ல வாய்ப்பில்லை. அத்தகைய வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும். மாவட்ட நிர்வாகப் பொறுப்பு நான் ஏற்கெனவே எடுத்துக்காட்டியது போல் தொலை தூரத்திலே இருக்கின்ற எல்லைகளிலே யெல்லாம் பரவி நடைபெறுகின்ற காரணத்தால், சிவப்பு

நாடா முறை பலமாக இருப்பதைக் குறைக்கவேண்டும். முதலமைச்சர் அவர்கள் சிவப்பு நாடா முறையைப்பற்றிச் சொல்லுகின்ற நேரத்தில் கூறினார்கள். 'இது என்ன பழைய காலத்து ராஜ தர்பாரா, ஒரு குறையை எடுத்து வைத்தவுடனே உண்டு அல்லது இல்லை என்று உடனே முடிவு எடுத்துப் பதில் சொல்ல? ஒரு பெரிய நிர்வாகத்தில் அது யோசிக்கப்பட்டு, ஆலோசனைகள் வழங்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்படுவதற்கு முன்னால் ஒரு தடவைக்கு இரண்டு தடவைகளாகச் சிந்தித்துப்பார்த்த பிறகுதான் எந்த ஒரு காரியத்தையும் நிறைவேற்றவேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். ஆகவே சிவப்பு நாடா முறையை நீக்குவது இயலாது என்று குறிப்பிட்டார்கள். பலமான சிவப்பு நாடாவைக் கூட, முரட்டு சிவப்பு நாடாவைக்கூட, சில கருவிகள் அறுத்து விடுகின்றன. அந்தக் கருவிகள் இரும்பு ஆயுதங்கள் அல்ல, வெறும் கரன்சி நோட்டுகள்தான். இந்தக் கருவிகளால் சிவப்பு நாடா பல இடங்களில் அறுக்கப்பட்டிருக்கிறது. சில சமயங்களில் சிபாரிசுகளால்கூட அந்த சிவப்பு நாடா முறை அறுக்கப் பட்டிருக்கிறது. இப்படிச் சுலபமாக அறுக்கப்படுகிற இந்தச் சிவப்பு நாடா முறையை ஒழுங்காகவோ அல்லது நிரந்தர மாகவோ தாமதமில்லாத வகையில் தவிர்ப்பதற்கு ஏன் இந்த சர்க்கார், நல்வழி காணக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். அதற்காக நான் சிவப்பு நாடா முறையே வேண்டாமென்று கேட்கவில்லை. முரட்டுச் சிவப்பாக இருப்பதை ரோஸ் கலராக மாற்றுங்கள், முரட்டுச் சிவப்பாக இருக்கிற காரணத்தினால் ஏழை எளியவர்கள் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கோ அல்லது தங்களுடைய கோரிக்கைகளைப் பெறுவதற்கோ இயலாமல் உதவிகளை நாடிச் செல்லுகின்ற உழவன் தேவைகளைப் பெற முடியாமல், உரிமைகளைப் பெற முடியாமல் அலுவலகங்களிலே இழுத்தடிக்கப்படுகிறான் என்பதை எண்ணிப்பார்த்தால் இந்தச் சிவப்பு நாடா முறையினால் ஏற்படக்கூடிய தவறுகள் தெற்றென விளங்கும். கிராமங்களின் இதயநாடிகளாகப் பணிபுரிகின்றவர்கள், கிராம அதிகாரிகள், தலையாரிகள், வெட்டியான்கள் போன்றவர்கள். அவர்களுடைய சம்பளம் உயர்த்தப்பட வேண்டுமென்று பல முறை இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

தமிழகத்திலே கிராம அதிகாரிகளின் எண்ணிக்கை 11,559; கர்ணங்களின் எண்ணிக்கை 11,503; தலையாரிகளின் எண்ணிக்கை 15,378; வெட்டியான்களுடைய எண்ணிக்கை 15,675. கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் 34 ரூபாய்; கிராமக் கர்ணங்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் 36 ரூபாய்; அதையும் பார்க்கிறேன். அதே நேரத்திலே அலுவலகங் களிலே ப்யூனாக இருக்கிறார்களே அவர்களுடைய சம்பளம் என்ன என்பதையும் பார்க்கிறேன். ப்யூனாக இருக்கிறவர் களுடைய சம்பளம் குறைந்த பட்சம் 50 ரூபாய். ப்யூன் சம்பளம் 50 ரூபாய் - அது தவறு என்று நான் கூறவில்லை; அதைக் குறையுங்கள் என்று கேட்கவில்லை. ப்யூன் சம்பளமே 50 ரூபாயாக இருக்கிற நேரத்திலே கிராம அதிகாரிகள், அதாவது வில்லேஜ் ஹெட்ஸ், இவர்களுடைய சம்பளம் 34 ரூபாய்தான். அதுதான் கொடுக்க முடியும் என்றால் தயவுசெய்து அந்தப் பெயரை மாற்றி 34 ரூபாய் சம்பளத்திற்கு ஏற்றவகையிலே பெயர் சூட்டுங்கள். ப்யூனுக்குச் சம்பளம் 50 ரூபாய், ஆனால் கிராம அதிகாரிகளுக்குச் சம்பளம் 34 ரூபாய்தான், கிராமக் கர்ணங்களுக்குச் சம்பளம் 36 ரூபாய்தான் என்றால் என்ன நியாயம் என்று கேட்க விரும்புகிறேன். தலையாரிக்குச் சம்பளம் 28 ரூபாய்; வெட்டியானுடைய சம்பளம் 28 ரூபாய். ஓய்வு ஊதியம் கூட அடிப்படையாக குறைந்தபட்சம் 20 ரூபாய் அளிக்கப்படுகிறது. ஆனால் ஒரு தலையாரியும், வெட்டியும், கிராமத்திலே பெறுகின்ற சம்பளம் 28 ரூபாய் என்றால் இது நியாயமானதல்ல. இவர்கள் மனச்சோர்வில்லாமல் இருந்தால் தான், பட்டினியில்லாமல் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தால் தான், நம்முடைய மாநில வளர்ச்சித் திட்டங்கள் எப்படி முன்னேறிக்கொண்டு வருகின்றன என்பதற்கான புள்ளி விவரங்களை ஒழுங்காக நாம் பெற முடியும். சட்ட மன்றத்திலே எவ்வளவோ புள்ளிவிவரங்கள், தகவல்கள் தரப்படுகின்றன. பயிர்களைப்பற்றியும், இன்னும் வேறு பல காரியங்களைப் பற்றியும் புள்ளிவிவரங்கள் தரப்படுகின்றன. இந்தப் புள்ளி விவரங்களுடைய அடிப்படைக் கர்த்தாக்கள் கிராமத்திலே இருக்கின்ற இவர்கள்தான். உதாரணமாக நண்பர் மதியழகன் அவர்கள் இங்கே ஒரு கேள்வியை எழுப்புகிறார் என்றால், 10 நாட்களுக்குள்ளே அந்தக் கேள்விக்கு விடையளிக்க வேண்டு

மென்றால், அந்த மூலக்கேள்வி மாவட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு, மாவட்ட அதிகாரிகள் மூலமாக கிராம அதிகாரிகள்வரை சென்று அவர்கள் தருகின்ற புள்ளிவிவரங்களைத்தான் இங்கே சட்டமன்றத்திலே மொத்தமாகச் சேர்த்துக் கொடுக்கிறார்கள். களைப்புற்ற நிலையில், சோர்வுற்ற நிலையில், வாடிக்கொண்டிருக்கின்ற நிலையில் ஊதியம் போதாது என்று ஒவ்வொரு நாளும் பெருமூச்சுவிட்டுக் கொண்டு வாழ்க்கையை நடத்துகின்ற நிலையில் புள்ளிவிவரங்கள் தரப்பட்டால் அவை எப்படி இருக்கும்? சில சமயங்களிலே இலாகாவினரால் கொடுக்கப் படுகின்ற புள்ளிவிவரங்களே தவறாக இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நண்பர் ப.உ. சண்முகம் அவர்கள் ஒரு கருத்தை எடுத்துத் தெரிவித்தார்கள். கிராமங்களிலே பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் எல்லாம் மூடப்பட்டு விட்டன என்று சொன்னார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப் பினர்கள் யாரும் தீர்ப்பு வழங்குமாறு செய்வது குறிக்கோளாக இருக்கக்கூடாது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் வாதம் செய்ய விரும்பவில்லை. அவர்கள் கூறியது சரியா இல்லையா என்ற விவாதத்திற்குக்கூட நான் வர விரும்ப வில்லை. சரி என்று வைத்துக்கொண்டே பேசுகிறேன். கிராமங் களில் பஞ்சாயத்துக்கோர்ட்டுகள் மூடப்பட்டது; அரசாங்கம் வைத்துக்கொண்டிருக்கின்ற கொள்கையின் விளைவு என்று முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். கிராமங்களிலே பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் இல்லை என்று வாதிட்ட முதல மைச்சர் அவர்களால், அது சில கிராமங்களிலா அல்லது பல கிராமங்களிலா என்ற புள்ளி விவரத்தைத் தரமுடியுமா என்றால் சந்தேகம்தான். நகரங்களிலே அவை இருக்கின்றன. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்தான். நகரங்களிலே உள்ள உறுப்பினர்கள் தங்களுக்குள் தாங்களாகவே ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வர். அவர் நீதிமன்ற வழிகளை அனுசரித்து வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவார். திருவண்ணாமலையிலே உள்ள கோர்ட்டில் திரு. கே. எம். கிருஷ்ணசாமி என்பவர்தான் கோர்ட்டின் தலைவராக இருக்கிறார். இரண்டு மாத காலத்திற்கு முன்புதான் அந்தத் தேர்தல் பூரணத்துவம் பெற்ற கெஜட் நோட்டிஃபிகேஷன்

வந்திருக்கிறது. இவ்வளவுக்கும் பிறகு முதலமைச்சர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குத் தீர்ப்புச் சொல்லும் அதிகாரத்தைக் கொடுப்பதல்ல எங்கள் கொள்கை என்று வாதிட்டிருக்கிறார்கள். நண்பர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் குறிப்பிட்டபொழுது, முதலமைச்சர் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்களுக்குத் தீர்ப்புச் சொல்லும் அதிகாரத்தைத் தருவது எங்கள் கொள்கையல்ல என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது திருவண்ணா மலை போன்ற இடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் தீர்ப்பு வழங்கப்படுகிறது. அப்படிப்பட்ட கோர்ட்டுகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட தவறான தகவல்களைக் கூடுமானவரை ஓரளவு சம்பளம் பெறுகின்றவர்கள் இருக்கக்கூடிய இலாகாவிடமிருந்து முதலமைச்சர் வாங்கியது துர்ப்பாக்கியமான நிலைதான்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : நான் பெற்றிருக்கிற தகவல்களில் தவறு இல்லை. எனக்கு எல்லாத் தகவல்களும் தெரியும். நான் அரசாங்கத்தினுடைய போக்கைத்தான் சொன்னேன். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்கக் கூடாது என்று சொன்னால் நடைமுறையில் மாற்றியாகிவிட்டது என்று அர்த்தம் அல்ல. ஆகவே இதைப்பற்றிக் குறை கூறுவதற்கு அவசியமில்லை.

**கலைஞர். மு. கருணாநிதி** : நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணமே - முதலில் சொல்லவேண்டாமென்று கருதினேன் - நான் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களிடம் இதைப்பற்றிக் கேட்டபொழுது அவர்கள், அவர்களுக்கு வந்த தகவலின்படி திருவண்ணாமலையில் பஞ்சாயத்துக் கோர்ட்டே இல்லை என்றுதான் தகவல் இருப்பதாகச் சொன்னார்கள். அதற்குப் பிறகு நான் நண்பர்கள் திரு. ப. உ. சண்முகம் அவர் களையும் திரு. எஸ். முருகையன் அவர்களையும் விசாரித்து அறிந்த பிறகுதான் முழுத்தகவலையும் தருகிறேன். முதலமைச்சர் அவர்களுடைய சிந்தனைக்கு இதை வைக்கிறேன். மாவட்டங்களில் மாவட்ட அதிகாரிகளால் அதிகாரங்கள் துர்விநி யோகப்படுத்தப்படுகின்றன என்பதற்குப் பல சான்றுகள் இங்கே கனம் உறுப்பினர்கள் எடுத்து வைத்தார்கள். குறிப்பாக நான்

முதலிலேயே சொன்னேன், சிவப்பு நாடாமுறை எந்த அளவுக்குத் தகர்க்கப்படுகிறது, யார் யாரால், எந்த வகையில் என்பதை எடுத்துச்சொன்னேன். குறிப்பாக ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திருவாரூரில் தஞ்சை கூட்டுறவு மார்கெட்டிங் ஃபெடரேஷனுக்கு ஒரு இடம் தேவை என்று கருதி அதற்குப் பக்கத்திலே உள்ள இடத்தைச் சேர்த்துக்கொள்ளலாம் என்று ஒப்புதல் பெற்றிருக்கிறார்கள். அந்த இடத்தில் ஒரு நெல் வயல் இருக்கிறது. அந்த வயலுக்கு நடுவில் ஒரு தீவுபோன்ற மேடு இருக்கிறது. அந்த மேட்டில் பத்துக் குடிசைகள் இருக்கின்றன. அந்தக் குடிசைகளில் ஏழை மக்கள் வாழ்கிறார்கள். அந்தப் பத்துக் குடிசைகளுக்கு நடுவே ஒரு கிறிஸ்தவ ஆலயம் இருக்கிறது. இந்த ஏழைகள் வாழுகின்ற பத்து குடிசைகளும் பிரிக்கப்பட வேண்டும். ஃபெடரேஷனுக்காக இடம் தேவை என்று சம்பிரதாயமாக நோட்டீஸ் தரப்பட்டது. அவர்கள் கொஞ்சம் காலக்கெடு கேட்டார்கள், அவ்வளவுதான். காலக்கெடு கேட்டவர்களுடைய மனு அதிகாரிகளைச் சேருவதற்கு முன்பாகவே அந்த இடம் இடித்துத் தகர்க்கப்பட்டது. அந்தக் கோயிலையாவது விட்டு விடுங்கள் என்று கேட்டார்கள். சிலுவையோடு அந்தக் கோயில் தகர்த்து எறியப்பட்டது; இடித்து நொறுக்கப்பட்டது. இருக்க இடம் இல்லாமல் அந்த ஏழை மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். பிரசவ நேரத்தை எட்டிக் கொண்டிருந்த கர்ப்பவதி அந்த வீடு இடிக்கப்பட்டதன் காரணமாகத் தெருவில் இழுத்து எறியப்பட்ட கொடுமை திருவாரூரிலே நடைபெற்றது. அதிகாரிகளைக் கேட்டால், 'நாங்கள் என்ன செய்வது, உள்ளூரில் இருக்கும் பெரிய காங்கிரஸ் தலைவர்கள் வற்புறுத்துகிறார்கள்; நாங்கள் அதைச் செய்யாவிட்டால் எங்களைக் கண்டிக்கிறார்கள்' என்று அந்த அதிகாரிகள் குறைபட்டுக் கொள்கிறார்கள். அவ்வளவு அவசரமாக அது இடித்து எறியப்பட வேண்டுமா? இடித்து விட்ட மறுநாளே அந்த இடத்தைத் தூர்த்து விட்டு கட்டடம் எழுப்பினார்களா? ஆறு மாத காலத்திற்கு அதிலே கட்டடம் எழுப்ப முடியாது. இப்பொழுதுதான் வயலிலே நாற்றுகள் கொஞ்சம் தலை காட்டுகின்றன. உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கை. அந்த வயலைத் தூர்க்கப் போகிறார்களா என்றால் இல்லை. வயல்களின்

நடுவிலே திட்டாக மேடு இருக்கிறது. அந்த மேட்டில் ஒரு பத்து குடிசைகள். அந்தக் குடிசைகளை அழித்தார்கள்; இடித்துத் தகர்த்தார்கள். மேடு அப்படியே இருக்கிறது. வயல் பள்ளம் தூர்க்கப்படவில்லை. காரணம் அங்கே பயிர் இருக்கிறது. அந்தப் பயிர் வளர்ந்து அறுவடையான பிறகு அந்த இடம் மேடாக்கப்பட்டு அங்கே கட்டடம் எழுப்பப் போகிறார்கள். அதற்குள்ளாக அந்தப் பத்துக் குடிசைகளும் அகற்றப்பட வேண்டிய காரணம் என்ன? ஏன் அகற்றப்பட்டிருக்கவேண்டும்? இதைத்தான், தங்களுடைய கட்சி நலத்திற்காக அதிகாரிகள் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறார்கள் என்பதற்கு உதாரணமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஜனநாயகத்திலே, சோஷலி சத்திலே நம்பிக்கையுள்ள சர்க்கார் என்று கூறப்படுகிறது. ஜனநாயகத்திலே இந்தச் சர்க்காருடைய கட்சிக்கு மாத்திரமல்ல, சர்க்காருக்கே நம்பிக்கை இருக்க வேண்டும், இந்தச் சர்க்கார் அந்த அடிப்படையில் இயங்கினால் அந்தக் கட்சி எடுத்துச் சொல்கிற ஜனநாயகக் கொள்கை இன்றைய தினம் ஒளிவிடுகிறது என்று அர்த்தம். ஆனால் இது இருக்கிறதா? சர்க்காருடைய சிப்பந்திகள், மாவட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் அந்த ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்கிறார்களா? கிடையாது. எங்களைப் பொருத்தவரையில், ஆளும் கட்சிக்கு எதிர்க்கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் ஜனநாயகப்பண்பு காப்பாற்றப்பட வேண்டுமென்பதற்காக எத்தகைய செயல்களில் ஈடுபட்டிருக்கிறது என்பதற்கு உதாரணமாக, சென்னை மாநகராட்சியின் பெயரால் காமராஜர் அவர்களுடைய சிலையைத் திறந்து வைத்தோம்; உத்தமர் சத்தியமூர்த்தி அவர்களுடைய சிலையைத் திறந்து வைத்தோம்; மறைந்த மாவீரர் பண்டித ஜவஹர்லால் அவர்களை அழைத்து திறந்து வைக்கச் செய்தோம். இதை இந்த மாமன்றத்திலுள்ள அனைவரும் அறிவார்கள். அதே நேரத்தில் அந்த ஜனநாயகத்தைக் காங்கிரஸ் கட்சி காப்பாற்ற வேண்டும்; அந்தக் கட்சியை இயக்குகிறவர்கள் காப்பாற்ற வேண்டும்; அந்தக் கட்சியை இயக்குகிறவர்கள் காப்பாற்ற வேண்டுமென்பதோடு கூட அதிகாரிகள் அதற்கு ஒத்துழைக்கிறார்களா என்றும் பார்க்கவேண்டும். துறையூரில் உள்ள ஒரு பேருந்து நிலையத்திற்கு - பஸ் ஸ்டாண்டுக்கு - பஞ்சாயத்திலுள்ளவர்கள் 'அண்ணா பேருந்து நிலையம்' என்று பெயர் வைக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டார்கள். இதற்கு ஒரு திறப்பு

விழாவுக்காக நாள் குறித்தார்கள். அந்தத் தீர்மானத்தை ரத்து செய்யவேண்டுமென்று உடனடியாக ஆர்.டி.ஓ. என்ற அதிகாரி உத்தரவிடுகிறார். அந்த உத்தரவை எதிர்த்து நீதிமன்றத்தில் ஸ்டே வாங்கப்படுகிறது. ஸ்டே வாங்கப்பட்ட காரணத்தால், எங்கே விழாவை நடத்தி விடுவார்களோ என்று அஞ்சி ஆர்.டி.ஓ. ஊரிலே 144 சட்டத்தைப் பிறப்பிக்கிறார். 144 சட்டத்தை எப்போது பிறப்பிக்கவேண்டும்? அந்தப் பகுதியில் இருக்கிற காவல் துறையினர் 'கலவரம் ஏற்படலாம், அமைதிக் குறைவு ஏற்படலாம் ; ஆகவே, 144 தடை உத்தரவு பிறப்பியுங்கள்' என்று காவல் துறையினர் சுட்டிக்காட்டினால்தான் ஆர்.டி.ஓ. 144 பிறப்பிக்கலாம். அவருடைய உத்தரவு நீதிமன்றத்தில் தடுக்கப்பட்டிருக்கிறது. தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது என்ற காரணத்திற்காக, அந்த விழா நடந்து விடக்கூடாது என்பதற்காக, 144 தடை உத்தரவு போடப்பட்டது. அது தடுக்கப்பட்டது. இது தான் ஜனநாயக மரபா? ஜனநாயகத்திற்கு அழகா? கட்டிக்காத்து வரப்படுவதாகக் கூறப்படும் ஜனநாயகத்திற்கு எடுத்துக்காட்டா? என்று அமைச்சரவையைக் கேட்க விரும்புகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்களைப்பற்றிக் காங்கிரசிலே இருக்கின்ற மற்றவர்கள் என்ன கருதினாலும், பொறுப்புள்ள அமைச்சர்கள் எந்த அளவுக்கு அவர்களிடம் மரியாதை வைத்திருக்கிறார்கள், மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். நான் பொறுப்புள்ளவர்களைக் கேட்கிறேன், நடைபெற்ற காரியம் பொறுப்பான செயலா?

அடுத்து, மாவட்டங்களில் இருக்கிற மாவட்ட ஆட்சி நூலகங்களைப் பற்றி ஒருசில வார்த்தைகள் இங்கே கூறுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். மாவட்ட ஆட்சி நூலகங்களுக்கு ஒவ்வொரு வட்டத்தில் இருந்து ஒரு உறுப்பினரும் நகரத்தில் இருந்து இரு உறுப்பினர்களும், டி.பி.ஐ. நியமிக்கிற 10 நியமன உறுப்பினர்களும், கூட்டுறவு நூலகங்களில் இருந்து ஒருவரும் நியமிக்கப்பட்டு, நியமிக்கப்பட்ட உறுப்பினர்களால் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட, செயலாளராக டி.இ.ஓ. இருக்க, மாவட்ட ஆட்சி நூலகங்கள் நடைபெறுவது அடிப்படை. இந்த மாவட்ட நூலகங்களுக்காக இன்றைய தினம் மாவட்டத்திலே ஒரு கணிசமான தொகை செலவழிக்கப்

படுகிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு லட்ச ரூபாயை இதற்காகத் திரட்டுகிறார்கள் என்றால் அதற்கான ஈட்டுத் தொகையாக ஒரு லட்சம் ரூபாயைச் சர்க்கார் தருகிறது. இந்த இரண்டு லட்சம் ரூபாயில் அந்த நூலகங்கள் செவ்வனே நடைபெறுகிறதா? நிர்வாகச் செலவுகளுக்காகச் செலவழிக்கப் படுகிற பணம் போக மிச்சமுள்ள தொகை நல்ல நூல்களை வாங்கப் பயன்படுத்தப்படுகிறதா என்றால் இல்லை. அமைச்சர் அவர்கள் இதை ஏதோ எதிர்க்கட்சி வாதம் என்று கருதாமல் தயவு செய்து அந்த நூலகங்களிலே திடீர் சோதனை நடத்துவார் களேயானால் - சில மந்திரிகள் முன்பு மாறுவேடங்கள் போட்டுச் சென்றார்கள் என்று பத்திரிகையில் பார்த்திருக்கிறேன் - நிச்சயமாக அந்தப் புத்தகங்கள் எப்படிப்பட்டவை என்பதை நன்றாக உணர்ந்துகொள்ள முடியும். குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால், ஒரு புத்தகக் கம்பெனிக்காரர் 100 புத்தகங்களை அச்சடிக்கிறார் என்றால், 100 புத்தகங்களும், எல்லா மாவட்டத்திலும் 100 நூலகங்கள் இருந்தால் ஒவ்வொரு நூலகத்திற்கும் ஒன்று வீதம் வாங்கப்படுகிறது. ஒரே கம்பெனியில் 100 வகை புத்தகங்கள் இருந்தால் ஒரு மாவட்டத்திற்கு மட்டும் 10,000 புத்தகங்கள் வாங்கப் படுகின்றன. அந்தப் புத்தகங்கள் கடைத்தெருவில் விற்கப்படும்போது அதன் விலை 2 ரூபாய், ஆனால் நூலகத்திற்குக் கொடுக்கிறோம் என்று சொல்லி அதன் விலை 4 ரூபாய் என்று போடப்படுகிறது. நூல்நிலையப்பதிப்பு என்ற வார்த்தைகளைப் போட்டு, அழகான அட்டையைப் போட்டு 2 ரூபாய்க்கு வெளியே விற்கப்படுவது, 4 ரூபாய்க்கு நூல் நிலையத்திற்குத் தரப்படுகிறது. ஒரு கம்பெனி 100 விதமான புத்தகங்களை அச்சடித்து நூலகங்களுக்குக் கொடுப்பதன் மூலம் கம்பெனி வருமானத்தைப் பெறுகிறது. அதிலே 25 சதவிகிதம் என்ன 35 சதவிகிதம் வேண்டுமென்றாலும் கமிஷன் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுகிற புத்தகத்தை 4 ரூபாய் என்று போட்டுக் கொடுக்கும்போது 25 சதவிகிதமானால் என்ன, 35 சத விகிதமானால் கூடக் கொடுப்பார்கள். அதுமாத்திரமல்ல; சில நேரங்களில் அட்டையை மாத்திரம் மாற்றி விடுகிறார்கள். உள்ளே அப்படியே இருக்கும். உதாரணமாக, 'ஓவியப்பாவை'

என்ற புத்தகம் இருந்தால் அதிலே 50 புத்தகத்தைக் கொடுத்து விட்டு, அட்டையை மாற்றி 'சித்திரப்பாவை' என்று போட்டு அதே புத்தகத்தை விற்கிறார்கள். இவை வேடிக்கையாகச் சொல்லப்படுவதில்லை. அமைச்சர்கள், அல்லது திறன் படைத்த, நேர்மை படைத்த அதிகாரிகள் இந்த நூல் நிலையங்களில் திடீர் சோதனை இடுவார்களேயானால், ஏற்பட்டிருக்கிற இந்தத் தவறுகளை ஒழுங்காகக் கண்டுபிடிக்க முடியும். இந்த நூல் நிலையங்களில் நடைபெறுகிற தவறான செயல்களைக் கட்டுப் படுத்துவதன் மூலம் பொதுமக்கள் வரிப்பணம் பாழாகாமல் இருக்க மாவட்ட ஆட்சி நூலகத்திற்கு என்று சட்டம் செய்ய வேண்டுமென்று முன்பு அமைச்சர் அவர்கள் கூறியிருக் கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை விரைவாகக் கொண்டு வரவேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, மாவட்ட நிர்வாகத்தில் மற்ற அரசியல் கட்சியினுடைய தலைவர்களும், சட்டமன்ற, பாராளுமன்ற, உறுப்பினர்களும் கலந்து கொள்ளுவதற்கான வழிவகைகள் வகுக்கப்பட வேண்டும். பாதுகாப்பு நேரங்களில் எப்படி எல்லாக் கட்சித் தலைவர்களும் அரசியலிலே இணைந்து நிற்கிறார்களோ; அதே போன்று முக்கியமான பிரச்சினைகள் வரும்போது, குறிப்பாக உணவுப் பிரச்சினை என்று எடுத்துக்கொண்டால் மாவட்ட நிர்வாகத்தைப் பொருத்து சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் ஆகியோருடைய யோசனைகளையும் கேட்டு, நடக்க வேண்டிய விதத்தில் அமைப்புகளை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



## சட்டமன்றம், தேர்தல்

உரை : 15 நாள் : 10.03.1966

**கலைஞர் மு. கருணாநிதி :** கனம் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சட்ட மன்றம், தேர்தல், மாநிலத் தலைமை அலுவலகம், அமைச்சர்கள் என்ற தலைப்புகளின்கீழ் தரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கைகள் மீது, எங்கள் கட்சிச் சார்பாக வந்துள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்துக்கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். (கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய கட்சியின் சார்பாக மட்டுந்தானா?) ''எங்களுடைய கட்சியின் சார்பாக'' என்று கூறும்போது, ''எதிர்க்கட்சிகள் அனைத்தின் சார்பாக'' என்றுதான் பொருள், ஆரம்பத்திலேயே கனம் முதல் அமைச்சர் அவர்கள் கலகமூட்டத் தொடங்குகிறார்.

இந்த நாள் சட்ட மன்றத்தைப்பற்றி விவாதிக்கின்ற நாள், ஆனால், இன்றுதான் மிகப் புதுமைகளெல்லாம் நடைபெற்றன. ஏறத்தாழ இந்த ஒன்பதாண்டுக் காலத்தில், கனம் சபாநாயகர் அவர்கள், 'கோரம்' இல்லாத காரணத்தால் தாமதமாக வந்தது இன்றுதான் என்று நான் கருதுகிறேன். அது மாத்திரமல்ல. அமைச்சர்களைப்பற்றிப் பேசுகிற இந்த மானியத்தில், அனைத்துக்கும் பதில் சொல்ல முதல் அமைச்சர் அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்றாலும், எல்லா அமைச்சர்களுமே இன்றையதினம் இந்த மன்றத்தில் இருப்பார்களானால், இந்த மானியங்களைப் பற்றி விவாதிக்கின்ற நேரத்தில் வெகு பொருத்தமாக இருக்கும் என்கின்ற என்னுடைய எண்ணத்தையும் நான் இங்கே சுட்டிக் காட்டுவதில் தவறு இல்லை என்று கருதுகிறேன்.

சட்ட மன்றம் அடிக்கடி கூட வேண்டும் என்ற கொள்கையை உடையது எங்களுடைய கட்சி. காரணம், இன்றைய தினம் நடைபெறுகின்ற இந்தச் சட்ட மன்றக் கூட்டம் இந்தத் திங்களோடு முடிவுற்று, பிறகு இன்னும் எத்தனை திங்களுக்குப் பிறகு, கூடப் போகிறது, இடையிலே எத்தனை திங்கள் இருக்கும் என்பதெல்லாம் நாம் அறிந்த ஒன்றுதான். இதற்கு முதல் அமைச்சர் அவர்கள் பதிலளிக்கக்கூடும், பதிலளித்திருக் கிறார்கள். ''விஷயங்கள் இல்லாமல் சட்டசபையை அடிக்கடி கூட்டுவதால் செலவுதான் அதிகமாகும், பயன் ஏதும் இல்லை'' என்றெல்லாம் அவர்கள் கூறக்கூடும். மன்றம் நான்கு திங்களுக்குப் பிறகு கூடுகிற நேரத்தில் நாட்டிலே உடனடியாக எழுகிற சில முக்கியத்துவம் வாய்ந்த அவசரப் பிரச்சினைகளைக் குறித்து சட்டசபையிலே பேசலாம் என்று எண்ணுகிற நேரத்தில், சட்ட மன்றம் கூடாத காரணத்தால் அவை விடுபட்டு, பிறகு மூன்று நான்கு திங்களுக்குப் பிறகு சட்ட மன்றம் கூடும் நேரத்தில், அவற்றைப்பற்றி விவாதிக்கத் தொடங்கினால், ''எப்போதோ நடந்த விஷயம், அது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் அல்ல'' என்ற காரணத்தினால் அதனுடைய மதிப்பு மங்கிவிடுகிறது. ஆகவே, நீண்ட தொடர் கூட்டத்திற்கு அவசியம் இல்லை என்றாலும் ஒரு கிழமை, ஐந்து நாட்கள் அல்லது பத்து நாட்கள் என்ற அளவில் கூட்டங்களை நடத்துகின்ற வகையில் அடிக்கடி சட்டமன்றக் கூட்டங்கள் நடைபெறவேண்டுமென்ற கருத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகச் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவு நேர்மையுடனும், பண்பாட்டு உணர்ச்சியுடனும் நமது மரபு கெடாத வண்ணமும் நடைபெற்று வருகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். நமது முதல் அமைச்சர் அவர்களே கூட, வரவுசெலவுத் திட்டத்தின் மீது நடைபெற்ற பொது விவாதத்திற்குப் பதில் கூறுகிற நேரத்தில் இந்தக் கருத்தை எடுத்துவைத்துப் பாராட்டியதோடு எதிர்க் கட்சியினர் நடந்துகொண்டு வரும் முறையை வெகுவாகப் புகழ்ந்திருக்கிறார்கள். அதற்கு நாங்கள் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் வேறு மேடையில்

பேசுகின்ற நேரத்தில் எதிர்க்கட்சியைப் பற்றித் தாம் கொண்டிருக்கிற கருத்தை வெளியிடுகின்ற முறை வேறாக இருந்தாலும், சட்டமன்றத்திற்குள்ளே அவர் அன்றைய தினம் கூறிய கருத்து வரவேற்கத்தக்கதாகும்.

தமிழகச் சட்டமன்றத்தைப் பற்றி நாம் எண்ணுகின்ற நேரத்தில் இதர மாநில சட்டமன்றங்களிலே நடைபெறுகின்ற செய்திகளை நாம் பார்க்காமல் இல்லை. இன்றைய தினம் வங்காளத்தில் உணவுப் பிரச்சினையை ஒட்டி எழுந்த அமளி காரணமாகச் சிலர் கைது செய்யப்பட்டிருப்பதும், துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப் பட்டிருப்பதும், கைது செய்யப்பட்டவர்களிலேயே சட்டமன்ற உறுப்பினர்கள் இருப்பதும் - அதன் காரணமாக ஒவ்வொரு நாளும் சட்டமன்றத்தில் கூச்சலும், குழப்பமும், அமளியும் ரகளையும் தொடர்ந்து நடந்துகொண்டிருப்பதையும், மூக்கை உடைத்தார் என்பதாகவும், மூக்கை அறுத்தார் என்பதாகவும், சபாநாயகரை நோக்கி ஓடினார்கள் என்பதாகவும் பயங்கரமான தகவல்கள் எல்லாம் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

அதேபோல் ராஜஸ்தான் சட்டமன்றத்தை எடுத்துக் கொண்டால் கவர்னர் அவர்கள் உரை நிகழ்த்த வந்தபோது, அவர் உரையைப் படிப்பதற்கு முன்பாகவே பலர் ஒழுங்குப் பிரச்சினைகளைக் கிளப்பினார்கள், அதன் காரணமாகக் குழப்பமும், அமளியும் ஏற்பட்டன, கவர்னர் தம் உரையை ஆற்ற முடியாத அளவுக்கு நெருக்கடி ஏற்பட்டது என்பதான செய்தியை நாம் அறிகிறோம். ஆனால் இங்கே சுட்டிக்காட்டுகின்ற அளவுக்கு - நமது தமிழகச் சட்டமன்றத்தில் நம்முடைய மரபு காக்கப்படுகின்ற வகையில், பண்புகள் காக்கப்படுகின்ற வகையில் இந்த மன்ற உறுப்பினர்கள் வெகு நேர்த்தியான முறையில் நடந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் தமிழகத்திலே சென்ற ஆண்டு நடை பெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் நாட்டில் அமளியும் ரகளையும் நடந்து கொண்டிருந்தபோதும், அதன் காரணமாக துப்பாக்கிப் பிரயோகம் நடந்துகொண்டிருந்தபோதும் போராட்டம் உச்சகட்டத்தில் இருந்தபோதும் சட்டமன்றம் நடைபெற்றபோதும்கூட மரபு கெடாத வகையில் அங்கத்தினர்கள் நடந்து கொண்டுள்ள முறையைப் பார்த்தால்

உள்ளபடியே மற்ற மாநில சட்ட மன்றங்களின் நிகழ்ச்சியோடு ஒப்பிட முடியாதவை என்பது தெரியும். அவ்வளவு நேர்மையுடன் இங்கே சபை நடவடிக்கைகள் நடைபெற்று வந்திருக்கின்றன.

வேறு மாநில சட்டமன்றங்களில் நடைபெறும் முறையற்ற செயல்களை நம் மாநில சட்டமன்ற நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுப் பெருமைகொள்ளும் நேரத்திலேயே நாம் பார்த்துப் பின்பற்ற வேண்டிய நிகழ்ச்சியும் வேறு ஒரு மாநில சட்டமன்றத்தில் நடைபெற்றிருப்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக மகாராஷ்டிர மாநில கவர்னர் செரியன் அவர்கள் அந்த மாநில சட்டமன்றத்திலே உரை நிகழ்த்துவதற்குத் தொடங்கியவுடனே சில நிமிட நேரங்கள் மகாராஷ்டிரத்திலேயே உரை நிகழ்த்திவிட்டு, அப்புறம் தொடர்ந்து ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தியிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. திரு. செரியன் அவர்கள் மலையாளத்தைச் சேர்ந்தவர். தமிழகத்திலேயே வாழ்ந்தவர். தென்னகத்துப் பண்பாடுகளை உணர்ந்தவர் என்ற காரணத்தினால் மகாராஷ்டிர மக்களுக்கு இருக்கிற மொழி ஆர்வத்தை மதிக்கத்தக்க வகையில் அவர் நடந்து கொண்டிருப்பது பாராட்டுவதற்குரிய ஒன்றாகும். நமது சட்டமன்றத்திலும் அத்தகைய முறை பின்பற்றத்தகுந்தது. கவர்னர் உரை இப்படி இருக்கவேண்டுமென்று கூறுகிற காரணத்தினாலேயே கவர்னர் பதவி இருக்கவேண்டுமென்பதை ஆதரித்து விடுகிறேன் என்ற ஐயப்பாடு யாருக்கும் தேவையில்லை. கவர்னர் பதவி இருந்தால் அவர் ஆற்றுகின்ற உரை இப்படி இருக்கட்டும் என்ற யோசனையே தவிர இது வேறு அல்ல.

**கனம். திரு. எம். பக்தவத்சலம்** : பத்திரிகையில் வந்த செய்தியை நானும் பார்த்தேன். மகாராஷ்டிர கவர்னர் அவர்கள் சிறிது நேரம் மராத்தியில் உரை நிகழ்த்தினார்கள், அப்புறம் ஆங்கிலத்தில் பேசினார்கள் என்பதாக. மராத்தி மொழியை ஆங்கிலத்தில் எழுதி வைத்துக்கொண்டு சிறிது நேரம் படித்தார்களாம். அதுபோல இங்கே வருகிற கவர்னர் அவர்களும் செய்ய வேண்டுமென்றால் செய்வார்கள். அது கனம் அங்கத்தினருக்குத் திருப்தி அளிக்குமானால் செய்யலாம்.

**கலைஞர் மு. கருணாநிதி** : நான் மகாராஷ்டிர கவர்னர் அவர்களுக்கு மராத்தி மொழியில் உள்ள திறனைப் பாராட்ட முன்வரவில்லை. மராத்தி மக்களுக்குள்ள மொழி ஆர்வத்தைப் பாராட்டி, அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் நடந்து கொள்ள முயன்ற உணர்ச்சியைத்தான் பாராட்டினேன். அதைக் கூடப் பாராட்டக் கூடாது என்றால் பாராட்டவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : மகாராஷ்டிர கவர்னர் எனக்குச் சிறந்த நண்பர். எனக்கு அவரிடத்தில் மதிப்பு உண்டு. அவரது மொழித்திறனைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அங்கு நடந்த முறையைப் பற்றிச் சொன்னேன். அதுபோல இங்கும் நடக்கவேண்டுமா என்று கேட்டேன். அந்த கவர்னருடைய திறனைக் குறைவாகப் பேசவில்லை.

**கலைஞர் மு. கருணாநிதி** : கவர்னர் பதவி என்பது தேவையில்லாத ஒன்று. அந்தப் பதவியின் காரணமாகச் செலவழிக்கப்படுகின்ற பணம் உள்ளபடியே வீண் விரயம் ஆகிறது என்ற கருத்தை நான் பலமுறை எடுத்துச் சொல்லி வருகிறேன். அந்தப் பதவியில் இருப்பவர்களுக்கே கூட அந்தப் பதவி பிடிக்கவில்லை என்பதை அவர்களது வாய்மொழி மூலமாகவே கேள்விப்பட்டிருக்கிறோம். அவை செய்திப் பத்திரிகைகளிலும் வந்திருக்கின்றன. அண்மையில் டெல்லியில் நடந்த கவர்னர்கள் மகாநாட்டிலேயே கூட ஒரு கவர்னர் பேசும்போது, ''நாங்கள் ராஜபவனக் கைதிகளாக இருக்கிறோம்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மகாராஷ்டிர கவர்னராக இருந்து அந்தப் பதவியைத் துறந்த அம்மையார் விஜயலட்சுமி பண்டிட் அவர்கள் ''கவர்னர் பதவி என்பது ஆடம்பரமான, அலங்காரமான பொம்மைப் பதவியே தவிர அதனால் எந்தப் பயனும் கிடையாது'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கவர்னராகப் பதவியில் இருந்திருக்கிற ஸ்ரீ பிரகாசா அவர்களும் ''இது சோர்வுள்ள, வேலை இல்லாத பதவி'' என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். கேரளத்தில் இடைக்காலத் தேர்தலை நடத்தாது இருந்தால்தான் தாம் கவர்னராகப் பதவி ஏற்க முடியும் என்று முன்கூட்டியே உறுதிமொழி வாங்கிக்கொண்டு கேரள கவர்னராகப் பதவியேற்ற திரு. ஜெயின் அவர்களும் கூட அந்தப்

பதவி பிடிக்காத காரணத்தினால் அதை ராஜிநாமாச் செய்துவிட்டு ஓடிவந்துவிட்டார்கள். நமது மாநில கவர்னர் அவர்களுக்கு அந்தப் பதவி பிடிக்கிறதா இல்லையா என்பதை எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். மாநிலங்களில் கவர்னர் ஆட்சி என்று வருவதாக இருந்தால் அந்த நேரத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு மாநிலத்தைக் கண்காணிக்கவேண்டும் என்பதற்காக இந்த முறை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பது ஆளும்கட்சித் தரப்பில் இருந்து எடுத்துச்சொல்லப்படுகிற வாதமாகும். எல்லா மாநிலங்களிலும் ஏககாலத்தில் இப்படிப்பட்ட ஒரு அசாதாரண நிலை வந்துவிடவில்லை. வந்துவிடப்போவதும் இல்லை. எல்லா இடத்திலும் ஒரே சமயத்தில் 6 மாதத்திற்கு ஒருமுறை எங்கே ஆட்சி சாய்கிறது? ஆகவே டெல்லிப் பட்டணத்தில் இரண்டு மூன்று கவர்னர்களை வைத்துக்கொண்டுவிட்டால் போதும், எங்கெங்கே ஆட்சி சாய்கிறதோ அங்கங்கே அடுத்த தேர்தல் வரை அவர்களை அனுப்பி வைத்துவிடலாம். அப்படிச் செய்தால் இன்றைய தினம் மாநில கவர்னர்களுக்காக என்று செலவழிக்கப்படுகிற பணம் வெகுவாக மிச்சப்படும்.

அடுத்து, இன்னொரு வாதத்தை நமது முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துவைக்கக் கூடும். கவர்னர் பதவி என்பது ஒரு ட்ரெடிஷன். எப்படி பிரிட்டானிய நாட்டில் அரசியார் சபைக்கு வந்து உரை நிகழ்த்திப்போவது சம்பிரதாயமாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறதோ, அதுபோல இங்கே சபைக்கு கவர்னர் வருவதும் உரை நிகழ்த்திப் போவதும் ஒரு சம்பிரதாயம் என்று கூட குறிப்பிட்டிருக்கிறார். எத்தனையோ சம்பிரதாயங்கள், வழிவழி வந்த பழக்கங்கள், ட்ரெடிஷன் என்று சொல்லப்பட்டு வந்தவை எல்லாம் மாற்றப்பட்டிருக்கின்றன. ட்ரெடிஷன் என்ற மதிப்புக் காரணமாக அவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. வழிவழியாக வந்த தேவபானம் என்று சொல்லப்பட்டு வந்தது, இன்றைக்கு மதுவிலக்குச் சட்டத்தின் மூலம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. வழிவழியாக முப்பத்து முக்கோடி தேவர்களுக்குப் பயன்பட்டு வந்தாயிற்றே; அது அப்படியே இருக்கவேண்டுமென்று சட்டம் பயந்து ஒதுங்கி விடவில்லை. வருணாசிரம தர்மம் இன்றைக்குத் தீண்டாமை ஒழிப்புச்

சட்டத்தின் மூலம் நிர்மூலம் ஆக்கப்பட்டிருக்கிறது. ட்ரெடிஷன் என்பதற்காக அல்லது வழிவழியாக வந்தது என்பதற்காக ஒன்றை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தக் காலத்து மந்திரிகள் இப்படித்தான் இருந்தார்களா? பொன்னும் மணியும், மின்னும் வைரமும் பூண்டு தலையிலே முடியும், கையிலே தடியுங் கொண்டு, ''அமைச்சரே, மாதம் மும்மாரி மழை பொழிகிறதா?'' என்று கேட்கும் அரசனுக்கு ''ஆம் அரசே ! '' எனப் பதில் அளித்தார்கள் என்பார்களே, அதுபோலத்தான் இன்றைக்கு அமைச்சர்கள் வருகிறார்களா? அந்தச் சம்பிரதாயம் என்பது மாற்றப்படவில்லையா? அதுபோல மக்கள் ஆட்சியில், கவர்னர் சர்க்காருக்குத் தேவையற்றவர் என்றால் கவர்னர் பதவியை எடுத்துவிட முன்வரவேண்டுமே தவிர அது ட்ரெடிஷனாக இருக்கவேண்டுமென்பது சரியல்ல. ட்ரெடிஷன் என்ற காரணத்தினால் இன்றைக்கு கவர்னர் பதவியை வைத்துக் கொண்டிருப்பது ஏராள பணவிரயத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது என்பதோடுகூட ஆடம்பரங்களும், அலங்காரங்களும்- வெறும் கேலிக்காட்சிகளாகவும் தான் இருக்கிறதே தவிர மக்கள் சர்க்காருக்கு உகந்ததாக இல்லை. ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. இந்த மன்றத்திலே ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற வகையிலே செயல்படுகின்ற உறுப்பினர்களைப்பற்றி, பொதுவாக எதிர்க்கட்சி உறுப்பினர் களைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் என்ன எண்ணம் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தொடக்கத்திலேயே நான் சொன்னேன். இதிலே விபரீதமான வேடிக்கை என்னவென்றால் எதிர்க்கட்சியைப்பற்றி அவர் சட்டமன்றத்திலே கொண்டிருக்கின்ற எண்ணம் ஒன்று, வெளியிலே பேசுகின்ற கருத்துக்கள் வேறு. ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்ற ஆட்சியில் எதிர்க்கட்சி மிக மிக முக்கியமாகத் தேவை என்பதைக் கூறவந்த வள்ளுவர்,

''இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்''

என்று கூறியிருக்கின்றார். கடிந்து அறிவுரை சொல்லுகின்ற பெரியவர்கள் இல்லாமல் ஒரு மன்னன்- அந்தக் காலத்திலே வள்ளுவர் எழுதியதால் மன்னன் என்று எழுதினார், இந்தக்

காலத்திலே எழுதியிருந்தால் மன்னன் என்று எழுதாமல் ஆட்சி என்று எழுதியிருப்பார்- இருப்பானேயானால் அப்படிப் பட்டவர்களைக் கொண்டிராத ஒரு மன்னன் பகைவர்கள் கெடுக்காமல், தானே கெட்டுவிடுவான் என்று குறிப்பிடுகிறார். இடித்துச் சொல்லுகின்ற, எடுத்துச் சொல்லுகின்ற, வாதிடுகிற, போராடுகிற, சட்டமன்றத்திலே ஜனநாயகரீதியிலே கருத்துக்களை எடுத்துவைக்கிற தன்மையில் எதிர்க்கட்சி செயலாற்றினால்தான் அது ஜனநாயகத்திற்கு வலிமையளிக்க முடியும். முதலமைச்சர் அவர்கள் என்ன காரணத்தாலோ சில இடங்களிலே பேசுகின்றபொழுது குறிப்பிட்டார்கள், வெளிநாடுகளிலிருந்து வருகின்ற தலைவர்கள் எல்லாம் ஆளுங்கட்சித் தலைவர்களைச் சந்திப்பதில்தான் பெருமை யடைகிறார்கள். எதிர்க்கட்சித்தலைவர்களைச் சந்தித்தாலோ அவர்கள், அய்யோ, போச்சே, எதிர்க்கட்சித் தலைவர்கள் இவ்வளவுதானா கேவலம்- என்று சொல்வார்கள் என்று பேசியிருக்கிறார்கள். நான் திடுக்கிட்டுப்போனேன்.

> ‘‘யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
> சோகாப்பர் சொல்லிழுக்கப்பட்டு’’

என்ற குறளை உணர்ந்த நம்முடைய முதலமைச்சர் அவர்களா இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கொட்டினார்கள் என்று எண்ணித் திடுக்கிட்டேன். எதிர்க்கட்சி கேவலமான கட்சியாக இருக்கட்டும், இதை நான் வாதத்திற்காக ஒத்துக்கொள்கிறேன். ஒரு கேவலமான எதிர்க்கட்சியை ஆளுங்கட்சி பெற்றிருப்பதால் ஆளுங்கட்சிக்கு என்ன பெருமை வந்துவிடப்போகிறது. இப்படிப்பட்ட எதிர்க்கட்சியையா வெற்றிகண்டீர்கள் என்று கேட்கமாட்டார்களா? போரஸ் மன்னனை வெற்றிகண்டதால் அலெக்ஸாண்டருக்குப் பெருமை வந்தது ; கலிங்கத்தை வென்றதால் கருணாகரனைப்பற்றி ஜெயங்கொண்டார் பரணி பாடினார். ஆனால் முதலமைச்சர் அவர்கள் கேவலமான எதிர்க்கட்சி என்று கூறுவது அவருக்குப் பெருமையை அளிக்கக்கூடிய சங்கதியா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கோட்டையை இடித்தேன் ; கொடியை உயர்த்தினேன் ; அகழிகளைத் தூர்த்தேன்; அரசனைக் கைது

செய்தேன் என்றால் வீரா, வீரா, மாவீரா; வருக; வருக; என்று வாழ்த்துவார்கள். ஆனால் குப்பைமேட்டை முற்றுகை யிட்டேன்; கோழிகளைப் பிடித்தேன்; கொடிமரத்தை நாட்டிவிட்டேன் என்று சொன்னால் வீராதி வீரர், சூராதி சூரர், தீராதி தீரர் என்றா விருதுகள் வழங்குவார்கள். வலிவுள்ள எதிர்க்கட்சி, மதிக்கக்கூடிய எதிர்க்கட்சி இருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டுவதுதான் அவருக்குப் பெருமை, நாட்டுக்குப் பெருமை. கேவலமான எதிர்க்கட்சி என்று சொல்லி அதனுடைய தலைவர்களை யார் வந்து சந்திப்பார்கள், அவர்களுடைய வீட்டுக்கா வந்து சந்திப்பார்கள் என்று கோபத்துடன் பேசிய வார்த்தைகள் பொறுப்புவாய்ந்த, மதிப்பு வாய்ந்த முதலமைச்சர் அவர்களுடைய வார்த்தைகளா என்று எண்ணி, எண்ணி நான் ஏங்கியது உண்டு. எதிர்க்கட்சி இல்லாமல் ஜனநாயகம் நிலைபெறமுடியாது. சீவிச் சிங்காரித்து, பூச்சூடி, பொட்டிட்டு, பட்டுடுத்தி, புருவ மை தீட்டிக்கொண்டாலும் எவ்வளவுதான் பேரழகியாக இருந்தாலும், தான் ஒரு முறையாவது நிலைக்கண்ணாடிக்கு முன் நின்று சரிபார்க்கத்தான் தோன்றும். அதைப்போல ஆளுங்கட்சி என்னதான் அமோகமாக வாழ்ந்தாலும் எதிர்க்கட்சி என்ற நிலைக்கண்ணாடி தேவைதான். நிலைக்கண்ணாடியில் ரசம் இல்லை என்று கூறுவார்கள். முகம் இல்லாதவர்கள்தான் அப்படிக் கூறுவார்கள். ஆனால், அகமும், முகமும் உள்ள நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அப்படிக் கூறமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அம்மியும் குழவியும் சேர்ந்துதான் மிளகாயை அரைக்கமுடியும். அம்மிதான் ஆளுங்கட்சி, குழவிதான் எதிர்க்கட்சி, இந்த இரண்டும் சேர்ந்துதான் செயலாற்றமுடியும். குழவி சிறியது என்று அம்மியை மட்டும் வைத்துக் கொண்டால் மிளகாய் அரைக்க முடியாது; சமையல் நடக்காது. ஆகவே, ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும், அம்மியும் குழவியுமாக இருந்து செயலாற்றினால்தான் ஜனநாயகம் உருவாகும் என்பதை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு கஷ்டம். எதிர்க்கட்சியைப் பாராட்டுகிறார் என்ற காரணத்திற்காகக்கூட பல கண்டனங்கள் வரலாம். ஏன் இதைக் கூறுகிறேன் என்றால், இந்தத் தள்ளாத

வயதில் - தள்ளாத வயது என்று சொன்னால் முதலமைச்சர் அவர்களுக்குக் கோபம் வரும், எனக்கா தள்ளாத வயது என்று சொல்வார்கள், அவர்கள் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்- நோய் நொடிகளில் விழுகின்ற காலத்திலேகூட ஆற்றுகின்ற பணி, எடுத்துக்கொள்ளுகின்ற சிரமம் இவற்றை கட்சிமாச்சரியத்தை விட்டு பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன். அதற்காக நான் அவரை வாழ்த்துகிறேன். அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துவிட்டாரோ, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சலுகைகள் அளிக்கிறாரோ என்றெல்லாம்கூட இந்தச் சென்னை மாநகரில் சாந்தோம் பக்கத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் கட்சிப் பேச்சாளர்கள் பேசியிருக்கிறார்கள். பக்தவத்சலம் அவர்களே, ஏன் சலுகை காட்டுகிறீர்கள், ஒழுங்காக நடந்து கொள்ளா விட்டால் ஓட ஓட விரட்டுவோம் என்றும் அதைவிடப் பயங்கரமாகவும் பேசினார்கள் என்று நான் இங்கே குறிப்பிட்டபொழுது, முதலமைச்சர் அவர்கள் அதை ஒத்துக்கொண்டதை இந்த மன்றம் அறியும், இப்படிப்பட்ட நெருக்கடி காலங்களிலும்கூட முதலமைச்சர் அவர்கள், அவர்களைப் பொருட்படுத்தாமல் எதிர்க்கட்சிக்குப் பாதுகாப் பளிப்பதன் மூலம் ஜனநாயகத்தைக் காப்பதில் போதிய கவனம் செலுத்தவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். கேரள இலக்கியத்தில் ஒரு கதை உண்டு. ஒரு யானை, அந்த யானை அதனுடைய பாகனுடைய கட்டளைப்படிதான் நடக்கும். அந்த யானை பெரிய பெரிய மலைபோன்ற மரங்களையும் கூட பாகன் கட்டளையிட்டவுடன் சுமக்கும். ஒரு திருவிழாவின்போது ஒரு குழி தோண்டப்பட்டு, அந்தக் குழியில் ஒரு கம்பத்தை நட வேண்டும் என்பதற்காக அந்த யானையிடம் கொடுத்து அந்தக் கம்பத்தை அந்தக் குழியில் நடச் சொன்னார்கள். ஆனால் யானை குழியில் கம்பத்தை நடாமல் நின்றது. பக்கத்திலே இருந்தவர்கள் எல்லாம் அதை விரட்டினார்கள். அப்படியும் அது நடவில்லை. பக்கத்திலே நின்ற பாகன் அங்குசத்தாலே குத்து குத்தென்று குத்தினான் ; எல்லோரும் அந்த யானையை அடித்தார்கள். அப்படியும் அந்த யானை கம்பத்தை நடாமல் நின்றுகொண்டே இருந்தது. பெரிய பெரிய மரங்களைக்கூட கட்டளையிட்டவுடன்

தூக்குகின்ற யானை, அன்று அந்தக் கம்பத்தை நடாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். கடைசியாக அந்த யானை துதிக்கையை குழியிலே விட்டு, ஒரு சிறிய பூனைக்குட்டியை வெளியே எடுத்துவிட்டது. யானை எவ்வளவு பெரியது என்பதையும், பூனை எவ்வளவு சிறியது என்பதையும் உணர்ந்திருக்கிறோம். அவ்வளவு பெரிய யானை சிறிய பூனைக்குட்டியைக் காப்பாற்றியிருக்கிறது. யானைதான் காங்கிரஸ் கட்சி, பூனைதான் எதிர்க்கட்சி. யானை, சிறிய பூனைக்குட்டியைக் காப்பாற்றுவதற்காக அவ்வளவு கஷ்டங்களையும் எப்படிப் பொருட்படுத்தவில்லையோ அதைப்போல பொறுமையாக ஜனநாயகத்தைக் காப்பாற்றுங்கள். நான் இப்படிச்சொன்னேன் என்பதால், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கருணாநிதி எதிர்க்கட்சி பூனைக்குட்டி என்பதை ஒத்துக்கொண்டார் என்று முதலமைச்சர் அவர்கள் கூறலாம். அப்படிச்சொன்னால், யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வரும், அதுவும் 1967-ல் வரும் என்று கருதுகிறேன்.

இந்த மன்றத்தில் சிக்கனம், நிர்வாகச்செம்மை இவைகளுக்காக மந்திரிகள் கடைப்பிடிக்கவேண்டிய பல முறைகள் பற்றி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. மந்திரிகள் சுற்றுப்பயணத்தைக் குறைத்துக்கொள்ளவேண்டுமென்ற கருத்தும் தெரிவிக்கப் பட்டது. மந்திரிகள் நாடு சுற்ற வேண்டாமா, அவர்கள் மக்களை அறிய வேண்டாமா, சீர்கேடுகளை உணர்ந்து கொள்ள வேண்டாமா என்றெல்லாம் அம்மையார் அவர்கள் கேட்டார்கள். அவர்கள் அப்படிச் சொன்னதை மட்டும்தான் வரவேற்கிறேன். ஆனால் இந்த மன்றத்திலே செய்தித்துறை அமைச்சராகப் பணியாற்றுகின்ற திரு. பூவராகன் அவர்கள் ஜூலை மாதத்திலிருந்து ஜனவரி மாதம் வரையில் சர்க்காருடைய பணத்தை; மக்களுடைய வரிப்பணத்தைப் பயன்படுத்தி அமைத்த அவரது பயணங்கள் முழுமையும் அவருடைய சொந்தத் தொகுதியாகிய விருத்தாசலம் தொகுதியையே சுற்றிச் சுற்றி வருகிறது. 1965-ம் ஆண்டு ஜூலை 19ம் தேதி விருத்தாசலம் செல்கிறார். 20-ம் தேதி விருத்தாசலம் தொகுதி உயர்நிலைப்பள்ளி விழாவிலே கலந்து கொள்கிறார். அடுத்து

அங்கே 20-ம் தேதி பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களையும், பஞ்சாயத்து போர்டு பிரசிடென்டுகளையும் ஒரு கூட்டத்தில் கூட்டிவைத்துப் பேசுகிறார். பிறகு மாதர்சங்க அமைப்பாளர்களையும், உறுப்பினர்களையும் கொண்ட ஒரு கூட்டத்தில் பேசுகிறார். பிறகு 7 மணிக்கு காங்கிரஸ் கட்சியின் பொதுக் கூட்டத்திலே பேசுகிறார். யாருடைய செலவிலே? சர்க்கார் செலவிலே, மக்கள் தருகிற வரிப்பணம். அந்த வரிப்பணத்தைக் கொண்டு அந்த சுற்றுப்பயணம், அந்தச் சுற்றுப் பயணத்திலே காங்கிரஸ் கட்சிப் பொதுக்கூட்டத்திலே அமைச்சர் பேசுகிறார். ஆகஸ்டு 19-ம் தேதி விருத்தாசலம், 27-ம் தேதி விருத்தாசலம், 28-ம் தேதி விருத்தாசலம் தொகுதி, 29-ம் தேதி விருத்தாசலம் தொகுதி, 30-ம் தேதி பகல் வரை அங்கு இருக்கிறார். செப்டம்பர் மாதம் 7-ம் தேதி விருத்தாசலம், 8-ம் தேதி விருத்தாசலம், 19ம் தேதி விருத்தாசலம், 20-ம் தேதி விருத்தாசலம், 21-ம் தேதி விருத்தாசலம், பஞ்சாயத்து போர்டு பிரசிடென்டுகளையும், அங்கத்தினர்களையும் சந்தித்துப் பேசுகிறார். பஞ்சாயத்து சேர்மன், பஞ்சாயத்து போர்டு பிரசிடென்ட் ஆகியவர்களை அடிக்கடி சந்தித்து என்னதான் பேசுகிறாரோ தெரியவில்லை. அக்டோபர் மாதம் 19-ம் தேதி விருத்தாசலம், 20-ம் தேதி விருத்தாசலம். நல்ல வேளையாக நவம்பர் மாதம் தப்பிற்று. டிசம்பர் மாதம் 15-ம் தேதி விருத்தாசலம், 16-ம் தேதி விருத்தாசலம், ஜனவரி 8-ம் தேதி விருத்தாசலம், 9-ம் தேதி விருத்தாசலம். இப்படி ஒரு சுற்றுப்பயணத்திட்டம் சர்க்கார் செலவில் மக்கள் தருகிற வரிப்பணத்தில் தொகுதியைச் சுற்றிச் சுற்றி வருகிறார் நாடாளுகின்ற அமைச்சர். நடுநிசியில் மாறுவேடத்தில் சென்று நாட்டு நிலையை அறியவேண்டிய அமைச்சர் பெருமக்களிலே ஒருவர் இப்படிப்பட்ட சுற்றுப் பயணத்தை மேற்கொள்கிறார்.

மந்திரிகள் சம்பளம் குறைக்கப்பட வேண்டுமென்று வரவு செலவுத் திட்ட விவாதத்திலேயே எடுத்துக்கூறினேன். முதலமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். பதில் அளிக்கவில்லை. பதில் அளிக்க விட்டுப்போயிருக்குமே தவிர, பதில் அளிக்க மறுப்பார்கள் என்று எண்ணவில்லை. இப்போதாவது அதைப்பற்றிப்

பதிலளிப்பார்கள் என்று கருதுகிறேன். ஏறத்தாழ மந்திரிகள் 1,500 ரூபாய் பெறுகிறார்கள். ஆனால் அவர்களுடைய டிரைவருடைய அடிப்படைச் சம்பளத்தைப் பார்த்தால், 70 ரூபாய் அடிப்படைச் சம்பளம் ; கிராக்கிப்படி 33 ரூபாய் ; வீட்டு வாடகை 10 ரூபாய் ; ஸ்பெஷல் பே 10 ரூபாய் ; ஆக மொத்தம் 123 ரூபாய் தருகிறார்கள். நானே என்னுடைய டிரைவருக்கு 120 ரூபாய் கொடுக்கிறேன் ; வீடு வேறு கொடுத்திருக்கிறேன். ஆனால் மந்திரிகளுடைய டிரைவர்கள் 123 ரூபாய்தான் பெற முடிகிறது. சட்டசபையில் நாள் எல்லாம் கால்கடுக்கப் பணி புரிந்து கொண்டிருக்கும் காவலர்களுக்கு ஒரு நாளைக்குப் பத்தரையணாதான் படி கொடுக்கப்படுகிறது. அது அவர்களுக்குப் போதுமானதா? அதிலே கொஞ்சம் இரக்கம் காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டசபையில் கேட்கப்படுகிற கேள்விகள் மிக முக்கிய மானவை. அந்தக் கேள்வி நேரம் சட்டசபையில் ஒரு இன்றியமையாத கட்டம். கேள்விகளுக்குச் சரியான தகவல்களை நாங்கள் பெற முடியவில்லை என்ற குற்றச்சாட்டைப் பல முறை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால் அது கவனிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதிலே மிகச் சாமர்த்தியம் வாய்ந்தவர்கள். தொழிலமைச்சர் அவர்கள் முற்றும் பதில் அளிக்க வேண்டுமென்பதிலே ஆர்வமுடை யவர்கள். நான், ஏற்றத்தாழ்வு இருப்பதாகச் சொல்லவில்லை. அவர்கள் சாமர்த்தியத்தின் காரணமாக, யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் நினைத்துக்கொண்டு போகட்டும் என்ற முறையிலே பதில் கூறுவார்கள். இரண்டு நாளைக்கு முன்பு 'பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பத்திரிகைகளின் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்போது சில பத்திரிகை ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டார்கள் ; சிலர் கைது செய்யப்படுவோம் என்று சந்தேகப்பட்டு அவர்களாகவே போய் சரணடைந்து விட்டார்கள்' என்று குறிப்பிட்டார்கள். இது எவ்வளவு உண்மைக்கு மாறான விஷயம் என்பதை ஒரு உதாரணத்தின் மூலம் சொல்ல விரும்புகிறேன். நான் நடத்துகிற முரசொலி பத்திரிகையின் மீது பாதுகாப்புச் சட்டம் பாய்ந்தது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அந்த மாதிரி ஒரு பத்திரிகை ஆசிரியர் நடந்து கொண்டதைத் தெரிந்துதான் சொன்னேன். ஒரு கட்டத்திலே யாரையும் கைது செய்ய வேண்டாமென்று சொல்லியிருந்தேன். அவ்வாறு ஒருவர் கைது செய்யப்படு வோமோ என்று நினைத்து தானாகவே சரணடைந்து விட்டார் என்று சொன்னது தெரிந்துதான் சொன்னேன். நான் சொன்னதில் உண்மைக்கு மாறானது ஒன்றுமில்லை.

**கலைஞர் மு. கருணாநிதி** : இதைத்தான் சாமர்த்தியம் என்று சொல்கிறேன். அப்போதே ஒரு பத்திரிகை ஆசிரியரைப் பற்றி என்று விளக்கமாகச் சொல்லவில்லை. முரசொலி தினசரிக்குப் பொறுப்பாக இருக்கும் மாறன் அவர்கள் தொழில் அலுவலகத்தில் கைது செய்யப்பட்டுச் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். தானாகப்போய் போலீசாரிடத்தில் சரணடைந்து விடவில்லை. இது சம்பந்தப்பட்ட காரணம் தெளிவாகச் சொல்லப்படவில்லை என்பதால்தான் இதைச் சொன்னேன்.

பொதுவாக, இந்தச் சட்டமன்றத்தைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் நம்முடைய அமைச்சர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைப் பெற வேண்டுமென்பதற்காக மத்திய சர்க்காரிடத்திலே போராட வேண்டும் ; வாதாட வேண்டும் என்று வரவு செலவுத் திட்ட விவாதத்திலேயே குறிப்பிட்டு இருக்கிறேன். அவற்றைப் பற்றி நீண்ட நேரம் எடுத்துச்சொல்ல வேண்டுமென்று குறிப்புகள் வைத்திருந்தாலும், அவற்றைப் பற்றிப் பேச நேரம் இல்லாத காரணத்தால் அவற்றை விட்டு விட்டு ஒன்றே ஒன்றைப் பற்றி மட்டும் குறிப்பிட்டுப் பேசி முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, மத்திய சர்க்காரிடத்திலே, மொழிப் பிரச்சினையிலே இந்த நாட்டு மக்களுடைய உணர்ச்சிகளை எடுத்துச் சொல்லி வழிவகை காணத் தவறியதைப் பற்றி விவாதிக்கவேண்டுமென்பதுதான் நான் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையின் சாராம்சமாகும். அதைப்பற்றிக் குறிப்பிடுவது என்னுடைய பேச்சுக்கு முடிவுரையாக அமையும் என்று கருதுகிறேன். மொழிப்பிரச்சினை பற்றி

பேசும்போதெல்லாம், இந்த மொழி பற்றி இவர்களுக்கு ஒன்றும் இல்லை; பெரியவருடைய உபதேசத்தின்படி நடந்து கொண்டிருக்கிறார்கள்' என்று கூறுவார்கள். பெரியவர், பெரியவர் என்று குறிப்பிடுவது யாரை என்று இந்த மன்றம் நன்கு தெரிந்து கொண்டுதான் இருக்கிறது. மக்களும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர் ஒரு காலத்திலே அமைச்சருக்கு பெரியவராக இருந்தாரே ; அப்படி பெரியவர் என்று கூறுகிறார் என்று கருதுகிறேன். திரு. ராஜாஜி அவர்களைப் பெரியவர் என்று குறிப்பிடுவதிலே எந்த விதமான அபிப்பிராய பேதமும் இல்லை. அவருடைய உபதேசப்படிதான் நடக்கிறோம் என்று கூறுகிறார்களே ; அதில் இருக்கிற அபிப்பிராயபேதத்தைத்தான் அழுத்தந்திருத்தமாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1938-ம் ஆண்டு ராஜாஜி அவர்கள் அமைச்சராக இருந்த காலத்தில் இந்தியை இங்கே நுழைத்தார். நுழைப்பதற்கு, கட்டாயமாக ஆக்குவதற்குக் காரணமாக இருந்த ராஜாஜி அவர்கள்தான் இன்றைய தினம் இந்தியை எதிர்க்கிறார். அவர் எங்கள் பக்கம் வந்திருக்கிறாரா அல்லது நாங்கள் அவர் பக்கம் போயிருக்கிறோமா என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பெரியவராவது எங்களை 'வாழ்க' என்று வாழ்த்துகிறார் ; 'நீங்கள் ஆள வருக' என்று எங்களை வாழ்த்தி வரவேற்கிறார். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆதரிக்கிற ஒரு பெரியவர் 'பக்தவத்சலம் ஆட்சியை ஒழித்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன்' என்று கூறுகிறார். இதற்குப் பிறகும், எப்படித்தான் மனம் துணிகிறதோ, எப்படித்தான் அவர்களுடைய ஆதரவைக் கோருகிறார்களோ எனக்குப் புரியவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்கிற விஷயம் தெரிகிறது. என்னைப்பற்றிப் பேசுவது புரியாமல் இல்லை. அதற்கு நான் என்ன செய்கிறேன். ஏன் குத்தலாகப் பேசுகிறார் என்றுதான் புரியவில்லை. நான் எந்த வகையிலே அதற்கு இணங்குகிறேன் என்பதுதான் புரியவில்லை.

**கலைஞர் மு. கருணாநிதி** : அவருடைய ஆதரவைத் தேர்தல் நேரத்திலே விரும்புகிறார்கள். அவருடைய ஆதரவால் வாக்குப் பெறுகிறார்கள் என்பதுதான் என்னுடைய வாதம். அதைத்தான் இங்கே விளக்க விரும்புகிறேன். அவருடைய ஆதரவு எல்லாத் தேர்தல்களின் போதும் தேவை ; பொதுத்தேர்தல் வர இருக்கிறது; அவருடைய ஆதரவு தேவை இல்லை என்று அமைச்சர் கூறுகிறாரா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : என்னைப் பற்றிக் குறிப்பாகச் சொல்வதுதான் புரியவில்லை. வேறு ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசுவது வேறு விஷயம்.

**கலைஞர் மு. கருணாநிதி** : ''பக்தவத்சலம்'' என்றால் காங்கிரஸ், ''காங்கிரஸ்'' என்றால் ''முதலமைச்சர் பக்தவத்சலம்'' என்று கருதிக் கொண்டிருந்தேன். அவர்கள் அது தனித் தனி என்று சொல்கிறார்கள். அதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.

இந்தி மொழி பற்றி இங்கு ஏற்பட்டிருக்கிற நிலைமைகளை, தமிழகத்து மக்களுடைய உணர்ச்சிகளை மத்திய சர்க்காரில் எடுத்துச் சொல்கிற பொறுப்பை அமைச்சர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் எடுத்துச்சொல்கிற நேரத்தில், சென்ற ஆண்டு நடைபெற்ற சம்பவங்களை - கனம் சபாநாயகர் அவர்களே, உங்கள் வாயிலாக-அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சென்ற ஆண்டு இந்தியை எதிர்த்து, தமிழ் வாழவேண்டுமென்பதற்காக இந்தி பேசாத மாநிலத்து மக்கள், உத்திரப்பிரதேச மக்கள் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிபவர்களாக, பீகாருக்கு, பின்னோடுபவர்களாக, ஓரிஸாகாரர்களுக்கு மண்டி இடுபவர்களாக, இந்தி பேசுகிற மக்களுடைய ஆதிக்கத்திற்கும், வெறிக்கும் அடிமையாக இருக்கமாட்டோம், தாய் மொழிக்கு ஏற்பட்ட ஆபத்தை, தமிழ் மொழிக்கு ஏற்பட்ட ஆபத்தைத் தடுக்கத் தயார், தயார் என்று ஆயிரக்கணக்கான தமிழர்கள் போர்க்கொடி உயர்த்தவும், அதன் காரணமாக நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொலை செய்யப்பட்டதும், பிஞ்சுக் குழந்தைகள் உயிர் பறிக்கப்பட்டதும், வயதானவர்கள், வாலிபர்கள் நடுத்தெருவில் துப்பாக்கிப் பிரயோகத்தால்

ரத்தமழை பொழியப் பொழியச் சுடப்பட்டுக் கிடந்ததுமான அலங்கோலமான காட்சிகளை யாரும் மறந்து விடுவதற்கில்லை.

**கனம் திரு. பூ. கக்கன்** : அதற்கெல்லாம் காரணம் தி.மு.க.தான்.

**கலைஞர் மு. கருணாநிதி** : அதுமாத்திரமல்ல. உலகச் சரித்திரத்திலே எந்தப் போராட்டத்திலும் அது சுதந்திரப் போராட்டமானாலும் சரி, மொழிப்போராட்டமானாலும் சரி, எந்தப் போராட்டத்திலும் நடைபெறாத அளவிற்கு வீரத் தமிழ் சிங்கங்கள் சின்னசாமி, சிவலிங்கம், அரங்கநாதன் போன்றவர்கள் தங்கள் அரிய துணைவியரை, அருமைப் பெற்றோர்களை, தாங்கள் பெற்றெடுத்த குழந்தைகளை நினைத்துப்பார்க்கக்கூட நேரமில்லாமல் ''எங்கள் மனைவிகளின் தாலி பறி போனாலும் பரவாயில்லை எங்களைப் பெற்றெடுத்த தமிழ் தாயின் தாலி பறி போக விட சம்மதிக்க மாட்டோம், சம்மதிக்கமாட்டோம்'' என்று கூறி தங்கள் இன்னுயிரை நீத்தார்கள். தீயில் கருகிச் செத்த அவர்களின் பிணங்கள் மீது ஆணையிட்டுக் கேட்டுக்கொள்கிறேன், இந்த மன்றத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்,தமிழ்த் தாயின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். இந்தி பேசாத மக்களின் உணர்வுகளை மதித்து; தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து அவற்றை மத்திய அரசாங்கத்தினிடம் எடுத்துச்சொல்ல வேண்டும். அப்படி எடுத்துச் சொல்வீர்களேயானால், இந்த நாட்டு மக்களுக்கு நீதி வழங்குவீர்களானால், இந்தி என்றென்றைக்கும் வரவே வராது என்ற சொல்வீர்களானால், அந்த வெற்றிப் புன்னகையோடு திரும்பி வருவீர்களானால் நான் உறுதி அளிக்கிறேன், என் வலது கை எலும்பை உடைத்து அந்த எலும்பினால் முதல் அமைச்சர் அவர்களின் சிலையை செய்து வைக்க நான் தயாராயிருக்கிறேன். வெற்றிப்புன்னகையோடு திரும்புங்கள், தமிழ் தாயின் தன்மானத்தைக் காப்பாற்றுங்கள் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

## காவல்துறை மானியம்

உரை : 16 நாள் : 11.03.1966

**கலைஞர் மு. கருணாநிதி** : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த போலீஸ் மானியத்தின் மீது, நண்பர் மதியழகன் தந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள், போலீஸ் மானிய வெட்டுப் பிரேரணையின் மீது பேசுகிற காரணத்தினால், ஏதோ அந்த இலாகாவையே கண்டித்துப் பேசுவதாகவோ, அந்த இலாகா இருத்தல் ஆகாது என்ற எண்ணத்தில் பேசுவதாகவோ, ஆளும் கட்சி உறுப்பினர்கள் கருதிக்கொள்ளுவது நல்லதல்ல, பொறுப்புள்ளதல்ல என்பதைத் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த இலாகாவில் ஒரு சில அதிகாரிகள், அல்லது இலாகாவிலே இருக்கிற தனிப்பட்ட சிலர் அல்லது, இலாகாவிலே இருக்கிற அதிகாரிகள் வேறு சிலருடைய தலையீட்டால், தவறுகள் விளைவிக்கத் தூண்டப்படும் நிலையில் இருக்கிறவர்கள் பற்றி எடுத்துச்சொல்வது அவசியம். அதற்காகவும்தான் போலீஸ் மானியம் இந்த சட்ட மன்றத்திலே விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்தப் போலீஸ் மானியத்தை இந்த மன்றத்தின் முன் வைத்த உள்துறை அமைச்சரவர்கள், போலீசார் இந்த மாநிலத்தில் செய்து வருகிற நல்ல பல பணிகளைப் பாராட்டி, நன்றியினைத் தெரிவித்தார்கள். அந்த நன்றி அறிவிப்போடு, எதிர்க் கட்சியினரும், அந்த இலாகாவைப் பொறுத்தவரையில், நன்றி அறிவிக்கத் தயங்கார் என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

போலீஸ் இலாகாவின் மீது எதிர்க்கட்சிக்கு நிச்சயமாக வெறுப்பு இல்லை. அதிகாரிகளானாலும், காவல் துறை வீரர்களானாலும், அவர்கள் பல வகையிலும் , இந்த மான்யத்தின் மூலம், நன்மை வாய்க்கப் பெற சீரிய நற்கருத்துக்களை, வெட்டுப் பிரேரணைகள் அறிவிக்கின்றன. உதாரணமாக, ''காவல் துறையினர் திறமையாகவும், தூய்மையாகவும், பணியாற்ற அவர்களின் கல்வித்தரம், படி ஆகியவைகள் உயர்த்தப்பட வேண்டும்'' என்றும், ''போலீசாருடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும்'' என்றும், ''குடியிருப்பு வசதிகளைத் துரிதப்படுத்துதல் வேண்டும்'' என்றும், ''கடமையாற்றும் வசதிக்காக, ஒவ்வொரு சர்க்கில் இன்ஸ்பெக்டருக்கும் ஒரு ஜீப் கார் வழங்க வேண்டும்'' என்றும், ''போலீஸ் சப்- இன்ஸ்பெக்டர்களுக்கு உடுப்பு 'அலவன்ஸ்'ஸை அதிகப்படுத்த வேண்டும்'' என்றும், உடை, சலவைக்கூலி, சவரக்கூலி, முதலிய படிகளை உயர்த்த வேண்டும்'' என்றும், ''விலைவாசி உயர்வுக்கேற்ப சாப்பாடு படிகளை உயர்த்திட வேண்டும்'' என்றும், 'கடமையைச் செய்யும்பொழுது, இழப்புக்கு ஆளாகும் காவலர்க்கு தக்க நிவாரணம் அளிக்க வேண்டும்'' என்றும், கட்சி உறுப்பினர்களால் தரப்பட்டு இருக்கின்றன. இதிலிருந்தே, போலீஸ் இலாகாவில் பணி புரிகின்ற நண்பர்கள் மீது எதிர்க் கட்சியில் இருக்கின்றவர்களுக்குப் பகை உணர்ச்சி கிடையாது என்பது விளங்கும். இலாகாவில் ஒரு சிலர் தவறுக்கு ஆளாகின்றார்கள், அல்லது தவறு செய்யத் தூண்டப்படு கின்றார்கள். அதிலே தவிர்க்க முடியாத அளவில் சிக்கிக் கொள்ளுகிறார்கள். குற்றம் குறைகள் இருப்பதைச் சொல்லுகிறோம் என்றால், அது எங்களுக்கு மேல், ஆளும் பொறுப்பில் உள்ளவர்களுக்கும் அதிகமாகப் பயன்படும் என்றுதான் எடுத்துச் சொல்லுகிறோம்.

உள்துறை அமைச்சர் கொடுத்திருக்கும் அறிக்கையில், 1964-ம் ஆண்டு வழக்குகளின் எண்ணிக்கை 48,947. அதுவே 1965-ல் 49,151 என்றும், 117 தான் கூடுதலாக இருப்பதால், அது குறைந்த கூடுதலே என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். மற்ற மானியங்களைப் போல அல்ல இது. விவசாயம் போன்ற வேறு மானியங்களில் 1964-ல் விளைச்சல் இவ்வளவு. 1965-ல்

இவ்வளவு அதிகம் என்று சொல்வது சரியாக இருக்கும். அதேபோல இந்த மானியத்தில் கருதமாட்டார்கள், எதிர் பார்க்கவும் கூடாது. இந்த குற்றங்களின் எண்ணிக்கையைவிட 1965-ம் ஆண்டு குற்றங்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கவேண்டும். 1966-ம் ஆண்டு இன்னும் குறைவாக இருக்கவேண்டும். குற்றங்கள் குறையக் குறையத்தான் போலீஸ் இலாகாவின் திறமை அதிகரித்திருக்கிறது என்று வெளிப்படையான அர்த்தம். அந்த வகையில் உலகத்திலே சிறந்த போலீஸ் படை என்று அழைக்கத் தகுந்தது, பிரிட்டிஷ் போலீஸ் படை என்று குறிப்பிடப்படுகிறது. அந்தப் பெருமையை அந்த போலீஸ் படைக்கு அளித்த பெருமைக்குரியவர்கள், அதைத் திட்டமிட்ட, நிறுவிய, இங்கிலாந்து நாட்டில் போலீஸ் கமிஷனர்களாக இருந்த ரோவன், மேயின் ஆகிய இரண்டு பேர்களும் ஆவர். அவர்கள் போலீஸ்காரர்கள் கடமைகளைப்பற்றி எழுதிய நூல் ஸ்காட்லண்டு யார்டு நூலகத்தில் இருக்கிறது. அந்த நூலில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்; ''உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டு, நிதானமிழக்காமல், செயலாற்றுவதே ஒரு போலீஸ் அதிகாரிக்குத் தேவையான சிறந்த தகுதி என்பதை ஒரு போலீஸ் வீரன் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். நிதானமாகவும், உறுதியுடனும், ஒரு போலீஸ் வீரன் கடமை யாற்றினால், அவசியமேற்பட்டால், அருகில் இருப்பவர்களும் அவனுக்கு உதவி செய்வார்கள்'' என்று கூறிவிட்டு, போலீஸ் படையின் நோக்கம் பற்றிக் கூறும்போது, ''குற்றங்களைத் தடுப்பதே முக்கிய நோக்கம் என்பதை ஒவ்வொரு போலீஸ் வீரரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். போலீஸ் படையைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தனக்குத்தானே காவல் என்ற நினைவுடன் ஒழுக்கம் பேணவேண்டும். குற்றங்கள் இல்லாது ஒழிந்தால் அதுவே போலீஸ் படையின் திறமைக்குச் சிறந்த சான்று ஆகும்'' எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள், அந்த நூலிலே.

பிரிட்டனிலே போலீஸ்காரர்கள் வெறும் காவல்துறைப் பணிகளை மட்டுமே கவனிப்பது என்பது இல்லை. கிராமப் பகுதிகளுக்கும், விவசாயம், சுகாதாரம் போகுன்ற துறைகளின்

தேவைகளையும் கவனிக்கும் பணிகளையும் ஏற்றுச் செய்கிறார்கள். பிரிட்டன் நாட்டில் போலீஸ்காரர்களுடைய வரலாற்றினைப் படிக்கும்போது, பிரிட்டானிய நாட்டிலே அபாயகரமான குற்றவாளிகளை, தப்பி ஓடுவார்களோ என்று, ஓர் இடத்திலிருந்து வேறு இடத்திற்கோ, நீதிமன்றத்திற்கோ அழைத்துச் செல்லும்போதே விலங்கிடுகிறார்கள். ஆனால் இங்கே விலைவாசிப்போராட்டத்தின் போது, நண்பர் பாலகிருஷ்ணன் அவர்களை நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றது எவ்வாறு? எவ்வளவு பொறுப்பான இடத்தில் இருக்கிறவர்? எத்தனை மக்களுடைய வாக்குகளைப் பெற்று, இந்த மன்றத்திலே வீற்றிருக்கிறார்? அப்படிப்பட்டவரை, கொஞ்சம் அலட்சியமாக இருந்து விட்டால் தப்பி ஓடிவிடுவார், பயங்கரமானவர் என்று, கைகளில் விலங்கிட்டு போலீசார் அழைத்துச்சென்ற காட்சியும் ஞாபகத்திற்கு வருகிறது.

பிரிட்டானிய நாட்டில், ஒரு கான்ஸ்டபிளுடைய சம்பளம், என்ன? அண்மையில் ஒரு புத்தகத்தில் பார்க்க நேர்ந்தது. ஆண்டு ஒன்றுக்கு, ஒரு பிரிட்டிஷ் போலீஸ்காரருடைய சம்பளம், 700 பவுன், மாதம் சுமார் 58 பவுன், அதாவது ரூபாய்க்கணக்கில் சொன்னால், ரூ. 758. இது ஒரு போலீஸ் கான்ஸ்டபிளுடைய சம்பளம். மாதம் ஒன்றுக்கு ரூ. 758 ; அதாவது இங்கே இருக்கும் அசிஸ்டென்ட் இன்ஸ்பெக்டர் ஜெனரலுடைய சம்பளத்திற்கு ஒப்பானது, அவர்களுடைய சம்பளம் கூட ரூ. 740தான். பிரிட்டன் நாட்டில் இருக்கிற போலீஸ் கான்ஸ்டபிளுக்கு ரூ. 758 என்றால், ஓய்வு பெற்ற போலீசார், ஊதியத்தில் பாதியைப் பென்ஷனாகப் பெறுகிறார்கள். முப்பது ஆண்டு காலம் வேலைசெய்து விட்டு, ஓய்வு பெற்றால், மூன்றில் இரண்டு பங்கு ஊதியத்திலிருந்து கணக்கிட்டுத் தரப்படுகிறது.

இங்கே ஏறத்தாழ 27,006 போலீஸ் கான்ஸ்டபிள்கள் இருக்கிறார்கள். இந்த மாநிலத்திலே அடிப்படைச் சம்பளம் ரூ. 65 முதல் ரூ. 90 வரை. ஒரு ஹெட் கான்ஸ்டபிளுக்கு ரூ. 85 முதல் ரூ. 105 வரை. அவர்கள் மாத்திரம் ஏறத்தாழ 3,089 பேர்கள் இருக்கிறார்கள். சப்-இன்ஸ்பெக்டர்கள் 1,314 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தரப்படும் சம்பளம் ரூ. 140.

போலீஸ் இலாக்கா ஸ்டாஃப் நர்சுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் ரூ. 140. நான் அதைக் குறைக்க வேண்டும் என்று சொல்ல வில்லை. ஒரு நர்சுக்கும் ரூ. 140, ஒரு சப்-இன்ஸ்பெக்டருக்கும் ரூ. 140தான். அதாவது அடிப்படைச் சம்பளம். அதே நேரத்திலே, ஃபையர் சர்வீசிலே இருக்கிறவர்கள் சம்பந்தப் பட்டவரை அவர்களுக்கு உடை, சலவை இவற்றிற்காகத் தரப்படும் படி ரூ. 1 முதல் ரூ. 3 வரை இருக்கிறது. ஃபையர் சர்வீசில் இருக்கிறவர்களுடைய உடை அடிக்கடி அழுக்கடையக் கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், அவர்களுக்குக் கொடுக்கப்படும் அலவன்ஸ் ரூ. 1 முதல் ரூ. 3 வரை என்பது எப்படிப் போதுமானதாகும்? வசதிகள் இல்லாமையும், ஊதியம் குறைவாகத் தரப்படுவதும் நேர்மையையும், நீதியையும், நியாயத்தையும் சில சமயங்களிலே தவற விடுவதற்கான காரணங்களாக அமைகின்றன என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

மதுவிலக்குச் சட்டத்தின் காரணமாகக் கைது செய்யப்படுகிறவர்களில் சாராயம் குடித்தவர்கள் அதிகமாகக் கைது செய்யப்படுகிறார்கள். அதே நேரத்தில், சாராயம் காய்ச்சிய வழக்குகள் அந்த அளவிற்கு இல்லை. இதைத்தான் கனம் உறுப்பினர்கள் பலர் இங்கே சுட்டிக்காட்டினர்கள். எதிர்க் கட்சிகளிலே உள்ளவர்கள் கொஞ்சம் வெளிப்படையாகச் சொன்னார்கள். ஆளும் கட்சியிலே உள்ளவர்கள், அவர்களால் சொல்ல முடிந்த அளவுக்குச் சூசகமாகத் தெரிவித்தார்கள். 'மாமூல்' என்ற முறை, இந்தச் சாராயம் காய்ச்சும் இடங்களுக்குச் செல்லுகிற போலீஸ்காரர்களை, நடுவிலே நந்தி போல் இருந்து, தடுத்து நிறுத்திவிடுகிறது என்ற நிலை இங்கே எடுத்து விளக்கப்பட்டது. மாமூல் அங்கு மட்டுமா?

பள்ளிக்கொண்டா என்கிற பகுதியினுடைய போலீஸ் ஸ்டேஷன். பருகூர் என்கிற பகுதியினுடைய போலீஸ் ஸ்டேஷன். இந்த இடங்களில் எல்லாம் போகிற வருகிற லாரிகளின் மொத்த எண்ணிக்கை ஒரு நாளுக்கு சுமார் 600 இருக்கும். இந்த 600 லாரிக்காரர்களும் எந்தப் போலீஸ்

ஸ்டேஷனுக்குச் சென்றாலும், ஏதோ ஆண்டவனுக்குக் கும்பிடு போடுவது போல, போலீஸ் ஸ்டேஷனில் லாரி ஒன்றுக்குப் பத்து பைசா கொடுத்துவிட்டுச் செல்லவேண்டும் என்ற ஒரு நியதி இன்றைய தினம் இருக்கிறது. இதை நான் இங்கே வெளிப்படையாக எடுத்துச் சொல்லுகிறேன். அந்தப் பகுதியிலே இருக்கும் பல சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இந்த உண்மை நிச்சயமாகத் தெரியும். ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் ஒரு நாளைக்குச் சுமார் ரூ. 50, ரூ. 60 வசூலிக்கப்படுகிறது. காஞ்சீபுரம் போகும் வழியில் - முதல் அமைச்சர் அவர்களும் பார்த்திருக்கக்கூடும் - ஒரு கோயில் வாசலில் கார் போகும் நேரத்தில் ஒரு சிறுவன் ஓடி வந்து உண்டியைக் குலுக்குவான். இஷ்டப்பட்டவர்கள் காசு போட்டுவிட்டுப் போவார்கள். ஆனால், இது அப்படி அல்ல. கண்டிப்பாக நிற்க வேண்டும். போலீஸ் ஸ்டேஷனுக்கு முன் வண்டி நிற்க வேண்டும். பத்து பைசா கொடுத்துவிட்டுச் செல்ல வேண்டும். கொள்ளிடம் பாலத்தில் சுங்க வரி செலுத்துவதைப் போல இப்படிப் பங்கு தர வேண்டிய நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படவில்லை, இருக்கின்ற ஊதியம் போதாது என்கிற இந்த நிலைமைகளால் ஏற்படுகிற தவறுகள் இவை என்பதை நான் இங்கே எடுத்துச்சொல்லாமல் இருக்க முடியாது.

**கனம் திரு. பூ. கக்கன்** : ஊதியம் போதாது என்றால் இப்படி வாங்கவேண்டும் அல்லது வாங்குவது நல்லது என்று கனம் எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் சொல்லுகிறார்களா?

**கலைஞர் மு. கருணாநிதி** : நான் சொல்லாவிட்டாலும் அப்படிச் சொல்லும்படியாக அமைச்சர் விரும்புகிறார் என்று கருதுகிறேன். நான் அப்படி நிச்சயமாகச் சொல்லமாட்டேன்.

பிரிட்டானிய நாட்டில் போலீசாருக்கு எப்படி அறிவுரை தரப்படுகிறது என்று சொன்னேன். இங்கே கூட, ஊட்டியில் அடிக்கடி போலீஸ் சூபரின்டெண்டுகள் மாநாடு நடைபெறுகிறது. அந்த மாநாட்டிலே கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் அவர்கள் இவைகளையெல்லாம் எடுத்து விளக்கியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க ஒன்றுதான். சில பகுதிகளை நான் உள்ளபடியே வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

கைதிகள் துன்புறுத்தப்படுவதை அந்த மாநாட்டில் அமைச்சர் ஒருவர் வெகுவாகக் கண்டித்துப் பேசியிருக்கிறார். 'லாக் அப்' மாணவர்களைச் சுட்டிக்காட்டி, இவை தவிர்க்கப்பட வேண்டும், இவை அதிகமாகின்றன என்று கனல் கக்க அந்த மாநாட்டில் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். ஒரு எம்.எல்.ஏ. வீட்டில் திருட்டு நடைபெற்ற வேடிக்கையையும் அமைச்சர் அவர்கள் அந்த ஊட்டி மாநாட்டில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு எம்.எல்.ஏ வீட்டில் திருட்டு நடைபெற்றது, அந்தத் திருட்டு நடைபெற்ற பிறகு எம்.எல்.ஏ போலீசில் புகார் செய்கிறார். உண்மையிலேயே திருடியவனைப் போலீசார் பிடிக்கவில்லை. மாறாக, ஒரு புதிய திருடனைப் பிடிக்கிறார்கள். புதிய திருடனைப் பிடித்தாலும் பழைய சாமான் அவனிடம் இருக்காது. ஆகவே, புதிய சாமானை அவன் கையில் கொடுத்து, இவன்தான் இந்த சாமானைத் திருடியவன்; இவன்தான் எம்.எல்.ஏ. வீட்டுச் சாமானைத் திருடியவன் என்று அவன் மீது வழக்கு போடுகிறார்கள். எம்.எல்.ஏ பறிகொடுத்த பொருள் அதுவா? என்று பார்க்கிறார். ''இது நான் பறிகொடுத்த பொருள் அல்ல'' என்று அந்த எம்.எல்.ஏ கூறிவிடுகிறார். இதைக் கூட அமைச்சர் அவர்கள் ஊட்டி மாநாட்டில் எடுத்து விளக்கியிருக்கிறார்கள்.

ஒரு போலீஸ் அதிகாரி தனக்கு வேண்டாத ஒருவரைக் கைது செய்கிறார். அப்படிக் கைது செய்துவிட்ட பிறகு அவன் மீது என்ன வழக்கு போடுவது என்று யோசிக்கிறார். சுலபமான வழக்கு சாராய வழக்கு. அந்த வழக்கைத் தலையிலே சுமத்தி அவனைச் சிறையிலே போடுகிறார். இதையும் அந்த அமைச்சர் ஊட்டியில் நடைபெற்ற போலீஸ் அதிகாரிகள் மாநாட்டில் எடுத்துக் கூறியிருக்கிறார்.

இன்னொரு விபரீதம். அமைச்சர் அவர்களே அந்த மாநாட்டில் கூறியது. திருநெல்வேலியில் ஒரு கொலை நடைபெற்றது. அந்தக் கொலைக்கு முதல் நாளே, கொலை செய்யப்பட்டவர் போலீஸ்காரர்களுக்குத் தகவல் கொடுக்கிறார். ''நான் இந்த நேரத்தில் கொலை செய்யப்படலாம். ஆகவே எனக்குப் பாதுகாப்பு கொடுங்கள்'' என்று அபயம் கோரி, போலீஸ் இலாக்காவிற்கு அவர், தன்னைப் பாதுகாக்கவேண்டும்

என்று வேண்டுகோள் விடுக்கிறார். ஆனால், போலீஸ் இலாகா அதைக் கவனிக்கத் தவறி விடுகிறது. திட்டமிட்டபடி கொலை நடந்து விடுகிறது. கொலை முடிந்த பிறகு, சிலரை சிறைக்குப் பிடித்துப் போனார்கள். அந்த எதிரிகளும் வழக்கிலே விடுதலை பெற்று விடுகிறார்கள். இப்படி ஒரு அக்கிரமம் நடைபெற்றிருப்பதை அந்த அமைச்சர் ஊட்டி மாநாட்டில் எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார். நான் 'அமைச்சர்', 'அமைச்சர்' என்று சொல்ல அவரை யாரோ எவரோ என்று ஆராயத் தேவையில்லை. மதிப்பிற்குரிய நம்முடைய முதல் அமைச்சர் அவர்களேதான் இவைகளையெல்லாம் அந்த ஊட்டி போலீஸ் அதிகாரிகள் மாநாட்டிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இவைகளை நாங்களா சொல்லுகிறோம்? இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் போலீஸ் அதிகாரிகள் மாநாட்டில் சொல்லப்பட்டிருக்கின்றன. போலீஸ் அதிகாரிகள் தங்களுடைய அதிகாரத்தை நேர்மையான முறையில் பயன்படுத்தாமல், ''நான் கொலை செய்யப்படுவேன், வந்து என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று அபயக் குரலைக் கொடுக்கும்போது ஓடோடி வந்து காப்பாற்றுவதற்குப் போலீஸ் இலாக்காவிலே உள்ள முக்கியமானவர்கள் தயங்குகிறார்கள் என்றால், பிறகு யாருக்கு இந்த நாட்டில் பாதுகாப்பு இருக்க முடியும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதே அமைச்சர், பிறகு 1965-ம் ஆண்டில் நடைபெற்ற ஊட்டி மாநாட்டில், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி பற்றிப் பேசப்பட்ட நேரத்தில், ''இந்தி எதிர்ப்பின்போது எங்கள் மீது மாணவர்கள் கற்களை வீசினார்கள்'' என்று ஒரு அதிகாரி சொன்ன நேரத்தில், ''அவர்களையெல்லாம் இரக்கமின்றி கையை ஒடியுங்கள், காலை ஒடியுங்கள்'' என்று கூறியதாக நான் கேள்விப்பட்டேன். (ஷேம், ஷேம்).

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : ''கையை ஒடி, காலை ஒடி'' என்று நான் சொன்னதாக ஆதாரபூர்வமாகச் சொல்ல வேண்டுமே யொழிய 'ஷேம்,ஷேம்' என்று சொல்லுவதில் பிரயோஜனம் இல்லை. ''கையை ஒடி, காலை ஒடி'' என்ற வார்த்தைகள் என் வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தைகள் அல்ல.

**கலைஞர் மு. கருணாநிதி** : 1961-க்கான நடவடிக்கைகள் பற்றிச் சொன்னேன். அதற்கான நடவடிக்கைக் குறிப்பு இருக்கும். அதே போல் 1965-க்கான நடவடிக்கைக் குறிப்பை முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் வைத்தால்...

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : நான் சொன்னது எனக்குத் தெரியும். ''கையை ஒடி, காலை ஒடி'' என்று ஒருக்காலும் நான் சொல்லவில்லை. அம்மாதிரி சொல் என் வாயிலிருந்து வரவே வராது.

**கலைஞர் மு. கருணாநிதி** : நான் ஏதாவது ஒன்றைச் சொல்லவில்லை. இப்போது உறுதியாகச் சொல்லுகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் அப்படிக் கூறியிருக்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அப்படி ஒருக்காலும் கூறவில்லை என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.

**கலைஞர் மு. கருணாநிதி** : அவர்கள் கூறுவது உண்மை என்றால், நடவடிக்கைக் குறிப்பை இந்த மன்றத்தில் வைக்க அவர்கள் தயாராய் இருக்கிறார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : போலீஸ் மாநாட்டு நடவடிக்கைகளையெல்லாம் இங்கே வைப்பதில்லை.

**கலைஞர் மு. கருணாநிதி** : போலீஸ் அதிகாரி கொலையைத் தடுக்க முடியாமல் ஒரு கொலை ஏற்படுகிற அளவுக்கு நிலைமையை வளர்த்தார் என்று சொன்னேன். நடந்துவிட்ட கொலையைக் கண்டுபிடிக்கவில்லை என்றால் அது மிகப் பரிதாபம்.

1965-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் செங்கற்பட்டுக்குப் பக்கத்தில் ஒரு வாலிபனுடைய பிணம் - 27 அல்லது 28 வயது நிரம்பாத ஒரு வாலிபனுடைய பிணம் - கிடக்கிறது. தொடைக்குக் கீழே கால்கள் கிடையாது, கை விரல்கள் இல்லை, ரத்தமும் இல்லை என்றால் வேறு இடத்தில் கொலை செய்யப் பட்டிருக்கிறார். நான் இதைச் சொன்னால்கூட ஏதோ தெரியாமல் 'ரத்தம்' 'எலும்பு' என்று பேச ஆரம்பிக்கிறானே என்று காங்கிரஸ் கட்சி நண்பர்கள் சொல்வார்கள். ரத்தம் இருக்கும் காரணத்தால், அவைகளைப் பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. அங்கே அந்தப்

பிணம் கிடக்கிறது. அதனுடைய அடையாளங்கள் தெரியாத அளவுக்கு அங்கஹீனப்படுத்தப்பட்டு, அறுக்கப்பட்டு, காது அறுக்கப்பட்டு அந்தப் பிணம் செங்கற்பட்டிலே கிடக்கிறது. அந்த வாலிபனுடைய பையில் ஒரு பிரயாணச் சீட்டு இருக்கிறது. சென்னை எழும்பூரிலிருந்து திண்டிவனம் வரையில் செல்வதற்குப் பிரயாணச் சீட்டு இருக்கிறது. அந்தப் பிரயாணச் சீட்டோடு ஒரு மூன்று ரூபாய்க்குச் சில்லரைத்தொகை இருக்கிறது. அவன் டிக்கட் எடுத்த மூன்றாவது நாள்தான் அந்தப் பிணம் அந்த இடத்தில் கண்டுபிடிக்கப்படுகிறது. அதற்குப் பிறகு போலீசார் சென்றார்கள். துப்பறியும் நாய் பயன்படுத்தப்பட்டது, இரயில்வே கேட் வரையில் போயிற்று என்ற அளவுக்குத்தான் வந்ததே தவிர, கொலை நடந்தது உண்மை, பிணம் கிடந்தது உண்மை, கால் இல்லாத முண்டமாகக் கிடந்தது உண்மை, மூக்கு அறுபட்டுக் கிடந்தது உண்மை. ஆனால் இதுவரையிலும் அந்தக் கொலை கண்டுபிடிக்கப்பட முடியவில்லை. இது இன்றைய தினம் இருக்கிற நிலைமை.

போலீஸ் அதிகாரிகள் இன்னும் பயங்கரமான தவறுகள் சில செய்கிறார்கள் என்பதற்குச் சில ஆதாரங்களை இந்த மாமன்றத்தில் எடுத்து வைப்பது என்னுடைய தலையாய கடமையாகும். பருகூரிலிருந்து பங்களூருக்குக் கிருஷ்ணகிரி வழியாக ஒரு லாரி போகிறது. லாரியினுடைய எண் 4281, உமாசங்கர் டிரான்ஸ்போர்ட்டைச் சேர்ந்த லாரி. அதை ஓட்டிச் சென்ற டிரைவரின் பெயர் அப்பு. அந்த லாரி போயிருக்கிறது. போகிற நேரத்தில் பருகூர் போலீஸ் ஸ்டேஷன் ஸப்-இன்ஸ்பெக்டர் லாரியை நிறுத்துகிறார். பங்களூரை நோக்கிப் போகிற லாரியை நிறுத்துகிறார். டிரைவருக்கும் அவருக்கும் வாக்குவாதம் நடைபெறுகிறது. அந்த வாக்குவாதத்தைத் தொடர்ந்து டிரைவர் லாரியை ஓட்டிக்கொண்டு போய்விடுகிறார். உடனேயே இவர் இன்னொரு லாரியில் ஏறித் தொடர்ந்து பின்னால் போய் இருக்கிறார். அந்த லாரி டிரைவர் கிருஷ்ணகிரியில் லாரியை நிறுத்திவிட்டு டீ சாப்பிடப் போயிருந்த சமயம் இன்ஸ்பெக்டர் லாரியைப் பிடித்து அதில் ஏறிக்கொண்டு, அதை திரும்பவும் பருகூருக்குக் கொண்டு வருகிறார். இது அந்த லாரி டிரைவருக்குத் தெரியாமல்

நடக்கிறது. வருகிற வழியில் எட்டு மைல் தொலைவில் இந்த லாரி விபத்துக்கு உள்ளாகிறது. இந்த விபத்து ஏற்பட்ட பிறகு, அந்த இன்ஸ்பெக்டர் அந்த லாரியின் முதலாளி சுப்பாராவ் என்பவருக்குத் தெரியப்படுத்தி, அவருடன் சமாதான முயற்சி செய்துக் கொண்டு 500 ரூபாய் ரொக்கமாகவும், மோகன் ராம் என்பவருக்கு 1,500 ரூபாய்க்குப் பாண்டு எழுதிக்கொடுத்து, அது சுப்பாராவ் பெயரில் மேடோவரும் செய்யப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டு சர்வென்ட் தனிப்பட்டவர்களிடம் கடன் வாங்கக் கூடாது. அப்படி வாங்குவதாக இருந்தாலும் முன் கூட்டியே அனுமதிப்பெற்று வாங்க வேண்டும். இந்த வழக்கிலே குறிப்பிட்ட சப்-இன்ஸ்பெக்டர் அவர்கள் மோகன்ராமிடம் கடன் வாங்கியிருப்பதாகப் பாண்டு தயாரிப்பதற்கு முன் அனுமதி வாங்கியிருக்கிறாரா? அல்லது அதற்குப் பிறகு அனுமதி வாங்கியிருக்கிறாரா? இதை உள்துறை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று - பொறுப்பான சட்டமன்ற உறுப்பினர்கள், எங்காவது தவறு நடந்தால் அதை எடுத்துக்காட்டுகிறபோது எவ்வளவு அலட்சியப்படுத்தப்படுகிறது என்பதற்கு மேலும் ஒரு ஆதாரம் கூற முடியும். திண்டிவனப் பகுதியில் கொடிமா என்கிற கிராமம் இருக்கிறது. அங்கே இருந்த நடராச ஆச்சாரி, பெரிய தம்பி கவுண்டர் ஆகிய இரண்டு பேர்களும் சேர்ந்து ஒரு வாரச் சீட்டு நடத்தினார்கள். அந்தச் சீட்டுக்குப் பெயரே அண்டாச் சீட்டு. அதை நம்பி ஏராளமான பெண்கள் சீட்டுக்கு ரூபாய் 36.80 காசு வீதம் கொடுத்தார்கள். சீட்டு விழுபவர்களுக்கு அண்டா வாங்கிக் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் சீட்டுக்குச் சேர்ந்த பணத்தை எடுத்துக்கொண்டு அந்த ஆசாமிகள் ஊரை விட்டே ஓடிவிட்டார்கள். இவர்கள் ஓடிய விஷயத்தை 13-10-1965 லேயே மயிலம் போலீஸ் ஸ்டேஷனுக்கு ரிப்போர்ட் செய்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து 19-10-1965 இல் திரு. தங்கவேலு எம்.எல்.ஏ அவர்கள் விக்கிரவாண்டி போலீஸ் ஸ்டேஷனுக்கு ரிஜிஸ்ட்டர் தபாலில் ஒரு மனு அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் தபாலையே 22ஆம் தேதி கையெழுத்திட்டுத்தான் அந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வாங்கியிருக்கிறார். இதுவரை அதன்மீது எந்த விதமான

நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மனுவைக்கூட இன்று நான் அமைச்சர் திருமுன் வைக்கிறேன்.

அடுத்து, மையூர் கிராமம் செங்கல்பட்டு மாவட்டத்தில் இருக்கிறது. அந்த மையூரில் ஊராட்சிமன்றத் தேர்தல் நடைபெற்றது. அந்த ஊராட்சிமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. திருவேங்கடம் அவர்கள் வெற்றி அடைந்தார்கள். அவருக்கு எதிராக தேர்தலில் வேலை செய்து தோற்றவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் அவர்கள். அவர் மத்திய அமைச்சர் திரு. அழகேசனின் மைத்துனர். அவர் திரு. திருவேங்கடம் அவர்களது வெற்றிக்கு எப்படிப் பாராட்டு நடத்தினார் தெரியுமா? திரு. திருவேங்கடம் மாமண்டூர் ஹோட்டலை விட்டு வெளியே வருகிறார். இவர்கள் பத்துப்பேர்களாக அவரை இழுத்துப்போட்டு அடித்துவிட்டு ஓடியிருக்கிறார்கள். அடிபட்ட ஊராட்சிமன்றத் தலைவர் திரு. திருவேங்கடம் அவர்கள் மதுராந்தகம் போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் செய்தார்கள். அதற்குள் அவர்களுக்கு என்ன செய்தி கொடுக்கப்பட்டதோ, ரிப்போர்ட் செய்த திரு. திருவேங்கடத்தையே கைது செய்து உள்ளே தள்ளிவிட்டார்கள். பத்துப்பேர்களாகச் சேர்ந்து தம்மை அடித்தார்கள் என்று ரிப்போர்ட் செய்யப்போனவரே கைதுசெய்யப்பட்ட விந்தையைப் பார்க்கிறோம். அதற்குப் பிறகு வழக்கு நடை பெற்றது. கீழ்க்கோர்ட்டிலே 50 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அப்பீலில் விடுதலை பெற்றுவிட்டார். அவர் வழக்கிலும் வெற்றிபெற்றுவிட்டார் என்ற ஆத்திரத்தில், ''நீ விடுதலை பெற்று விட்டாயா? உன் தலையை வெட்டுவோம்'' என்று அவருக்குத் தபாலில் எழுதினார்கள். திரு. விஸ்வநாதன் எம்.எல்.ஏ. அவர்களும், திரு. திருவேங்கடம் அவர்களும் போலீஸ் ஐ.ஜி. அவர்களைச் சென்று நேரில் பார்த்து அந்தக் கடிதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். மறுநாள் வேறு ஒரு வழக்கைக் காட்டி அதே திரு. திருவேங்கடம் கைது செய்யப்பட்டிருக்கிறார். இந்த வகையில்தான் இன்றைய தினம் போலீஸ் ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது திருவண்ணா மலையில் பெரிய கலவரம் நடந்தது. அந்தக் கலவரத்தைத் தூண்டிவிட்டவர்களைப் பிடித்து அவர்கள் மீது எப்.ஐ.ஆர். போடப்பட்டது. அந்த வழக்கில் இருந்தவர்கள் காங்கிரஸ் காரர்கள். அதன் காரணமாக என்ன ஆயிற்று? எப்.ஐ.ஆர். தயாரிக்கப்பட்டதோடு சரி, வழக்கு எதுவும் தொடராது அப்படியே விட்டுவிட்டார்கள். இப்படி சார்ஜ் ஷீட் போடாமல் விட்டதற்குக் காரணம் யாருடைய தலையீடு?

அடுத்து, தென்னார்க்காடு மாவட்டத்தில் திருவதி கிராமத்தில் ஒரு சம்பவம் நடைபெற்றது. சில எதிரிகளைத் தேடிக்கொண்டு சப் இன்ஸ்பெக்டர் சின்னப்பா என்பவர் போலீஸ்காரர்களுடன் கூட திருவதி கிராமத்திற்குச் சென்றார்கள். காடாம்புலியூர் நிலையகுற்ற எண் 110/65, செக்ஷன் 147,148, 341, 332, 307 ஐ.பி.ஸி. சம்பந்தப்பட்ட எதிரிகளை அவர்கள் தேடி வந்தனர். அவர்களைக் கைதும் செய்துவிட்டனர். அந்த நேரத்தில் 6 பேர்கள் அவர்களைச் சுற்றி வளைத்துக்கொண்டு அடித்தனர். அவர்களையே கொலை செய்ய முயன்றனர். எதிரிகளையும் விடுவித்துவிட்டனர். அந்த சப்-இன்ஸ்-பெக்டரும், போலீஸ்காரர்களும் உயிருக்குப் பயந்து அடிபட்டு ஓடி வந்தார்கள். வந்து ஒரு படையுடன் கூடச் சென்று சம்பந்தப்பட்ட எதிரிகளைப் பிடித்து கைது செய்து அவர்கள் மீது பண்ருட்டி நிலையத்தில் எப்.ஐ.ஆர். தயாரித்தார்கள். ''எங்களைக் கொலை செய்ய முயன்றார்கள்'' என்றே எழுதி கையொப்ப மிட்டிருக்கிறார் அந்த சப்-இன்ஸ்பெக்டர் சின்னப்பா அவர்கள். ஆனால் அந்த 6 பேர்களும் காங்கிரஸ்காரர்கள் என்று கேள்வி. நடந்தது என்ன? யார் தலையிட்டார்கள்? எங்கே வழக்குத் தொடரப்பட்டது? வழக்கே தொடரப்படவில்லை ; அவர்கள் விடப்பட்டுவிட்டார்கள். போலீஸ்காரர்களுடைய கதியே இது என்றால் நீதி எங்கே இருக்கிறது? நியாயத்தை எப்படிப் பெறுவது? அந்த எப்.ஐ.ஆர். குறிப்பையும் அமைச்சர் திருமுன்பு வைக்க விரும்புகிறேன்.

இறுதியாக ஒன்று, நண்பர் திரு. மதியழகன் அவர்கள் பாதுகாப்புச் சட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். பத்திரிகைகள் மீது பாதுகாப்புச் சட்டம் - எழுதினால் பேசினால் - முரசொலி,

மாலை மணி ஆகியவற்றின் மீது பாதுகாப்புச் சட்டம் பாய்ந்தது. நான் ஒரு பத்திரிகையில் வந்த வாசகத்தை அப்படியே படித்துக் காட்டுகிறேன். அதைப் படித்த பிறகு கனம் அமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு கோபம் வருமோ தெரியாது. தலைப்பு ''கம்யூனிஸ்டுகளும் நானும்'' என்பதாகும்.

''நாளைக்கு ரஷ்யாக்காரன் இந்த நாட்டின்மீது படையெடுத்தால் நான் ரஷ்யாக்காரனை ஆதரித்து சுட்டுக்கொல்லப்படவோ அல்லது இந்நாட்டுச் சிறையில் இருக்கவோதான் தயாராய் இருப்பேனேயொழிய காங்கிரஸ் கட்சிக்கு இந்திய தேசாபிமானத்துக்கு அடிமையாக ஒரு நிமிஷமும் இருக்கச் சம்மதிக்க மாட்டேன். இத்தனைக்கும் நான் ஒன்பதுமாற்றுக் கம்யூனிசக்காரனுமல்ல''. இத்தனையும் நான் எழுதியிருந்தால் கருணாநிதியைப் பாளையங்கோட்டைக்கு அல்ல, பாலைவனக்கோட்டைக்கே அனுப்பியிருப்பார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அத்தனை பேர்களையும் கண்காணாத் தேசத்திற்கே அனுப்பியிருப்பார்கள். எழுதியது யார்? ''நாளைக்கு ரஷ்யாக்காரன் படையெடுத்தால் நான் ரஷ்யாக்காரனை ஆதரித்து சுட்டுக்கொல்லப்படவோ அல்லது இந்நாட்டுச் சிறையில் இருக்கவோ விரும்புவேனே தவிர இந்திய தேசாபிமானத்துக்கு அடிமையாக ஒரு நிமிஷமும் இருக்கச் சம்மதிக்க மாட்டேன்'' என்று எழுதியவர் - எனக்குச் சொல்ல வெட்கமாக இருக்கிறது. இன்றைய தினம் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கின்ற பெரியார் திரு. ஈ.வே.இராமசாமி அவர்கள், 5-2-1966 ''விடுதலை'' பத்திரிகையில் இந்தத் தலையங்கத்தை எழுதியிருக்கிறார். பாதுகாப்புச் சட்டம் எங்கே போயிற்று? பாதுகாப்புச் சட்டம் பெரியார் என்ற பெயரைக் கண்டவுடனே மழுங்கிவிட்டதா? அவர் காலடியில் மண்டியிட்டுவிட்டதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எதிர்க்கட்சி உபதலைவர் அவர்கள் மிக உருக்கமாக, ஆத்திரமாகப் பேசுகின்றார்கள். அவர் சொன்ன கருத்துக்கும் இதற்கும் உள்ள அடிப்படையான வித்தியாசத்தை உணர வேண்டும். பாதுகாப்புச் சட்டத்தை உபயோகப்படுத்துவது என்றால் எந்தச் சூழ்நிலையில், எந்தச் சந்தர்ப்பத்தில், எந்த மாதிரியாக கருத்து வெளிப்படுத்தப்

படுகிறது என்பதை எல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்துதான் உபயோகப்படுத்தவேண்டும். ''ருஷ்யா படையெடுத்தால்'' என்றால் ருஷ்யா நம் மீது படையெடுத்திருக்கும் காலத்தில் எழுதப்பட்டிருந்தால் அது வேறு விஷயம். ருஷ்யா படையெடுக்கவும் இல்லை.

**கலைஞர் மு. கருணாநிதி :** ருஷ்யா படையெடுக்கவில்லை. ஆகவே, ருஷ்யா படையெடுத்திருந்தால் என்று எழுதப்பட்ட தலையங்கத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் விடப்பட்டது என்கிற வாதத்தைவிட, தேர்தலில் அவரைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற நப்பாசை காரணமாகத்தான் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் விடப்பட்டிருக்கிறதே தவிர வேறில்லை என்று பதில் கூறியிருக்கலாம் - நாளைக்கு வேறு ஒரு பத்திரிகை ''அமெரிக்கா படையெடுத்தால் அதை ஆதரித்துச் சுட்டுக் கொல்லப்பட்டாலும் சரி, தேசாபிமானத்தின் பேரால் இந்த நாட்டில் அடிமையாக இருக்கமாட்டோம்'' என்று எழுதுவதற்கு மற்ற மற்ற பத்திரிகைகளுக்கு உரிமை கொடுக்கிறாரா என்று கேட்கிறேன். தேசாபிமானம் தேவை இல்லை என்று ஒருவர் எழுதுகிறார். காங்கிரஸ் கட்சிக்கு, இந்திய தேசாபிமானத்துக்கு அடிமையாக ஒரு நிமிஷமும் இருக்க சம்மதிக்கமாட்டேன் என்று ஒருவர் எழுதுகிறார்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சிலர் அதை மறைமுகமாகத் தெரிவிக்கிறார்கள். சிலர் நேர்முகமாகத் தெரிவிக்கிறார்கள். அது தான் வித்தியாசம்.

**கலைஞர் மு. கருணாநிதி :** இந்தப் பதில் முதல் அமைச்சர் அவர்களுக்கே திருப்தி அளிக்கக் கூடியதாக இருந்தால், அவரது மனச்சாட்சிக்கு சரியானதாகப் பட்டால் - கேவலம் சில பல வோட்டுக்களுக்காக இந்த நிலைக்குப் போய்விட்டார்களே என்று கவலை தெரிவித்து இதற்கு மேல் பேச விரும்பாமல் என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

# வருவாய்த் துறை மானியம்

உரை : 17 நாள் : 15.03.1966

**கலைஞர் மு. கருணாநிதி :** கனம் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் வருவாய்த்துறை முதலிய மான்யங்கள் மீது தரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன். நேற்றைய தினம் பேசிய கனம் உறுப்பினர்கள் ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். அதையேதான் நான் மீண்டும் இந்த மன்றத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். விவசாயத் துறையைக் கவனிப்பதற்கு ஒரு அமைச்சர், உணவுத் துறை என்று உருப்பெற்ற பிறகு அதைக் கவனிப்பதற்கும், அதைப்பற்றிய கோரிக்கைகளுக்குப் பதில் அளிப்பதற்கும் இன்னொரு அமைச்சர் என்ற வகையிலே இந்த இலாகாக்கள் பிரிக்கப்பட்டிருப்பதும் உள்ளபடியே பெரிய சங்கடத்தை விளைவிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. பாசனத்திற்கான அமைச்சர், அவர்களுடைய இலாகா வேறு. பாசனத்திற்குரிய அமைச்சர் அந்தப் பாசனத்தின் காரணமாக பயிர் எப்படி இருக்கிறது என்று ஆராய்வதற்கு அந்த அமைச்சருக்கு உரிமை கிடையாது அல்லது அதைப்பற்றி எடுத்துச்சொல்வதற்கும், பதில் அளிப்பதற்குமான வாய்ப்பும் அவருக்குக் கிடையாது. அடுத்து பயிர் நெல்லாக மாறி, அது அரிசியாக மாறுகிற நேரத்தில், மறுபடியும் பாசன இலாகா அமைச்சருக்கு அங்கே உரிமை வருகிறது. இதைக் காணுகின்ற நேரத்தில் இந்த ஏற்பாடு ஒருவேளை பிரச்னைகளிலிருந்து நழுவிக்கொள்வதற்காகத் திட்டமிட்டு செய்யப்பட்ட ஏற்பாடா, தப்பித்துக்கொள்வதற்கு அமைச்சர்கள் இப்படி இலாகாக்களை பிரித்துக்

கொண்டார்களோ என்ற சந்தேகம் கூட வராமல் இல்லை. அப்படிப்பட்ட சந்தேகத்திற்கு இடமில்லை என்று நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் எடுத்து விளக்குவார்களா? இப்படிப்பட்ட சூழ்நிலை இனியும் இருக்காத அளவுக்கு இந்தத் துறைகளைப் பொறுத்தவரையிலே விவசாயத் துறைக்கும், உணவுத் துறைக்கும் ஒரே அமைச்சர் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை இந்த மன்றத்தின் முன்னே வைக்க விரும்புகிறேன்.

ஆளும் கட்சித் தரப்பிலும், எதிர்க்கட்சித் தரப்பிலும் எடுத்துச் சொல்லப்பட்ட பல்வேறு விஷயங்கள் ஏறத்தாழ முரண்பாடான வகையில் அமையாமல், ஒருமித்த கருத்துக்களை எடுத்து வைக்கிற வகையிலே அமைந்திருக்கின்றன. நான் சென்ற ஆண்டு நடைபெற்ற இந்த மான்ய விவாதத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த பல நண்பர்களும் பேசியிருக்கிற பல்வேறு விதமான உரைகளையெல்லாம் படித்து வைத்திருக்கிறேன். அவைகளிலே ஒரு சிலவற்றை இந்த மன்றத்திலே நினைவு படுத்துவது நல்லது என்றுகூட நான் கருதுகிறேன். ஏனென்றால், தமிழகத்திலே முதுகெலும்பு என்று சொல்லத்தக்க விவசாயிகளுடைய பிரச்சனை, அவர்கள் நீர், நிலவரித் தீர்வைகளினால் பாதிக்கப்பட்டிருப்பது, அவர்களுக்கு வாழ்வு அளிக்காமல் மேலும் மேலும் ஆதிக்கமுறையில் இருப்பவர் களுக்கு, பணக்காரர்களுக்கு நிலச்சுவாந்தார்களுக்கு ஆதரவு அளிக்கின்ற வகையில் திருப்பி விடப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றியெல்லாம் ஆளும் கட்சி உறுப்பினர்கள் எடுத்துச்சொன்ன கருத்துக்கள் எதிர்க்கட்சி தரப்பிலிருந்து சொல்லப்பட்ட கருத்துக்களிலிருந்து மாறுபட்டவையாக இல்லை. ஆகவே, அவைகளில் சிலவற்றை நான் இங்கே எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற ஆண்டு 23-ம் தேதி மார்ச்சு திங்கள் இந்த அவையிலே நடைபெற்ற விவாதத்தில் கனம் ஆர். சுப்பிரமணியம் அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச்சொன்னார்கள். ''பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம். நியாயவாரச்சட்டம், உச்சவரம்புச் சட்டம், இப்படியெல்லாம் கொண்டு வந்திருக்கிறோம். நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டங்கள் கொண்டு வரப்

பட்டிருந்தாலும், அதை முறியடிப்பதற்காக வசதியுள்ளவர்கள், நிலச்சுவாந்தார்கள் இப்படிப்பட்ட கும்பல்களெல்லாம் சதி செய்து விடுகிறார்கள்'' என்று நண்பர் சுப்பிரமணியன் அவர்கள் இந்த மன்றத்தில் ஆளும் கட்சியின் தரப்பில் ஒரு வாதத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள். வாதம் என்று சொல்வதைவிட, உண்மையை எடுத்துக்கூறினார்கள் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் அவர்கள் ''புறம்போக்கு நிலங்களை ஏழைகளுக்கு ஜாரி செய்து கொடுக்கிற பொறுப்பு சர்க்காருக்கு இருக்கிறது. ஆயினும் புறம்போக்கு நிலங்கள் சீக்கிரமாக ஜாரி செய்து கொடுக்கப்படுவது இல்லை. வெள்ளைக்காரன் காலத்தில் தாமதமானால் அர்த்தமுண்டு. இப்போது தாமதம் செய்வதிலே அர்த்தமில்லை'' என்று கூறிவிட்டு, சில பல கிராமங்களை அவர் சுட்டிக்காட்டி, அங்கெல்லாம் ஏழைகளுக்குப் புறம்போக்கு நிலங்கள் 'ஜாரி' செய்துதரப்படவில்லை என்பதையும் எடுத்துக்கூறினார்கள். திரு. ஐயராஜ் என்கிற உறுப்பினர், ''60-40 சட்ட பிரகாரம் விவசாயிகள் பெறுகிறார்களா? அப்படிப் பெற்று அந்நிலம் அவர்கள் கையில் இருக்கிறதா? இல்லை. பெரும்பகுதி விவசாயிகள் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருக் கிறார்கள்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். அதேபோல, திரு. தண்டாயுதபாணி என்கிற உறுப்பினர் பேசுகின்ற நேரத்திலே, ''ஆண்டுதோறும் கிஸ்தி கட்டுவதில் மாறுபட்ட நிலை ஏற்படுகிறது. கடந்த ஆண்டு ஒரு ஏக்கர் நிலத்திற்கு ஒரு விவசாயி, ரூ 22. கிஸ்தி செலுத்தினால், மறு ஆண்டு ரூ. 30 என்று நிர்ணயம் செய்கிறார்கள். அது பற்றி கர்ணிகரிடத்தில் கேட்கக் கூட விவசாயிகட்குச் சக்தியில்லை'' என்று விவசாயிகளின் சக்தியற்ற தன்மையை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். திரு. கே. பி. பழனிசாமி என்கிற உறுப்பினர், ஆளும் கட்சி உறுப்பினரேதான், ''இன்றைக்கு ஒரு விவசாயி, கூலி வேலை செய்துவிட்டு இரண்டு ரூபாய் சம்பளம் பெற்று வருகிறபோது அரிசி வாங்கிச் சாப்பிடக்கூடிய நிலையில் இல்லை. சோளம், கம்புதான் வாங்கிச் சாப்பிடுகிறார்கள்'' என்ற அளவிலே ஆளும் கட்சித் தரப்பிலிருந்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எடுத்து

வைக்கும் உண்மைகளைப்போலவே, எடுத்துவைத் திருக்கிறார்கள், வேண்டுமானால், வோட்டு அளிக்கும் நேரத்தில், ஆளும் கட்சிக்காரர்கள், சிலபல கட்டுப்பாடுகளுக்கு அடங்கி, அவர்கள் எடுத்துச்சொன்ன உண்மைகளுக்கு மாறாக வோட்டு அளிக்க வேண்டிய நிலைமை இருக்கலாம், ஆனால், அவர்களுடைய உள்ளம் எதிர்க்கட்சிக்காரர்களுடையது போலவே விவசாயிகளுடைய குறைகளை எடுத்துக் காட்டுவதில் ஈடுபட்டிருக்கிறது என்பதைக் காட்டவே இந்த எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிட்டேன்.

பொதுவாக நிலவரி, நீர்வரி குறைக்கப்படவேண்டும், தீர்வைகள் குறைக்கப்படவேண்டும் என்கிற பொதுவான கருத்து இங்கே எடுத்துக்காட்டப்பட்டது. இந்தக் கருத்து காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக வருவதற்கு முன்பே, 1938ம் ஆண்டு என்று நினைக்கிறேன் - அந்த ஆண்டில் பம்பாய் நகரத்தில் காங்கிரஸ் கட்சி மாநாட்டில் ஒரு தீவிரமான தீர்மானமாகக் கொண்டுவரப்பட்டது. நிலவரியானாலும் நீர்வரியானாலும், மக்கள், உழுவர் பெருங்குடி மக்கள் பலுவை கணிசமான அளவுக்குக் குறைக்கவேண்டும் என்ற தீர்மானம் 1938-ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. அமைச்சர் வேண்டுமானால் பதிலளிக்கலாம், 1938-ம் ஆண்டில் காங்கிரஸ் கட்சி கொண்டு வந்த தீர்மானத்திற்கு இப்பொழுது இருக்கும் காங்கிரஸ் சர்க்கார் பொறுப்பாளி அல்ல என்று. அப்படியென்றால், அது காங்கிரஸ் கட்சியின் தீர்மானங்கள் எப்படிக் காற்றிலே பறக்க விடப்படுகின்றன என்பதற்கு அதுவும் ஒரு சான்றாக இருக்கும், அமைச்சர்கள் ரூ. 500க்கு மேல் சம்பளம் வாங்குகிறவர்கள் யாரும் இருக்கக் கூடாது என்று ஒரு தீர்மானம் கராச்சி மாநாட்டில் கொண்டுவரப்பட்டது. ஆனால், இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் அந்தச் சம்பளத்தில் யார் இருக்கிறார்கள்- அந்தத் தீர்மானம் எங்கே போய்விட்டது என்று தெரியாத அளவுக்குப் போய்விட்டது. இந்தத் தீர்மானம் காங்கிரஸ் பம்பாய் மாநாட்டில், நிலவரி, நீர்வரி முதலிய தீர்வைப்பளுவை விவசாயிகளால் சுமக்க முடியவில்லை. ஆகவே, அவை தளர்த்தப்பட வேண்டும், குறைக்கப்படவேண்டும் என்று கொண்டுவரப்பட்டது. ஆனால், இன்றையதினம், அது காங்கிரஸ் கட்சியினால் அலட்சியப் படுத்தப்பட்டிருக்கிறது.

நிலங்கள் மறு அளவை செய்யப்படவேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஜமீன்கள் ஒழிப்புக்குப் பிறகு, கொடுக்கப்பட்டுள்ள குறிப்பின்படி, 9.8 சதுர மைல் தவிர, சுமார் 11,000 சதுர மைல் அளவிற்கு ஜமீன் ஒழிப்பிற்குப் பிறகு, கைப்பற்றிய நிலங்கள் சர்வே செய்யப்பட்டு, ரயத்துவாரி நிலங்கள் மீண்டும் சர்வே செய்யப்படவேண்டும். ஏனென்றால், முன்பு தீர்வைகள் விதிக்கப்பட்டபோது, தரம்வாரி பட்டா வழங்கப்பட்டது. பழைய ரயத்துவாரி நிலங்களை மறுபடியும் தரங்களை நிர்ணயிக்க மறு பரிசீலனை, மறுநில அளவையை மேற்கொள்ள வேண்டும் என்று பல கனம் உறுப்பினர்களும் எடுத்துச்சொன்னார்கள். நானும் அதையே வலியுறுத்த விரும்புகிறேன்.

பொதுவாக, விவசாயத்திலே நாம் எதிர்பார்க்கின்ற முன்னேற்றம் இருக்கிறதா என்றால், இல்லை. நேற்றைய தினம் கூட அமைச்சர், எதிர்பார்த்த உற்பத்தி கிடைக்கவில்லை என்றார்கள். இப்படி எதிர்பார்ப்பது, கிடைக்காதது இவைகளில் மாற்றம் அற்ற நிலைகளுக்கு, நாட்டில் செய்யப்படுகின்ற நிலச் சட்டங்கள் ஒழுங்கான முறையில், திட்டமிட்டபடி அவைகள் நடத்தப்படவில்லை என்பதுதான் தலையாய காரணம் ஆகும். அதைத்தான் திரு.லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் பலமுறை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் கூறும்போது, மன்ற அங்கத்தினர்கள் எடுத்துக்காட்டியதற்கேற்ப, ''கடுமையான பொருளாதார நிர்ப்பந்தங்களில் கூட நிலவரியை உயர்த்துவது, விரும்பத்தக்கதல்ல. அதிக உற்பத்தி மூலமாக விவசாயிகளுக்கு அதிக வருமானம் தரச்செய்யும் விவசாயக்கொள்கை இதனால் பாதிக்கப்படும்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், மறைந்த லால் பகதூர் சாஸ்திரி. இப்படிப்பட்ட தெளிவான கருத்தை எடுத்துச் சொன்ன பிறகும், அந்த அடிப்படையில் இந்த மாமன்றத்தில் உறுப்பினர்கள், இந்த வரியைத் தளர்த்தி, பாதிக்கப்பட்ட பகுதிகளில் ரத்து செய்யப்படவேண்டும் என்று சுட்டிக்காட்டிய பிறகும், விவசாயிகளிடம் ஊக்கமும், உற்சாகமும், உழைப்பிற்குத் தரவேண்டிய மதிப்பும் கொடுக்கப்படவேண்டும் என்பனவற்றில் அக்கறை இல்லாமல், கோரிக்கைகள் கேட்பாரற்றுப் போகும் நிலையில் இருப்பது வருந்தத்தக்க ஒன்றாகும்.

1963-ம் ஆண்டில் ஃபோர்டு பௌண்டேஷனைச் சேர்ந்த ஒருவர், வுல்ப் லாடோஜின்ஸ்கி என்பவர், இந்தியாவிற்கு வருகிறார். வந்தவர் ஒவ்வொரு மாநிலத்திலேயும், குறிப்பிட்ட மாவட்டங்களை, அங்கே போய் விவசாய ஆராய்ச்சி நடத்துகிறார். அப்படி நடத்திய பிறகு, ஒரு அறிக்கை விடுகிறார். அந்த அறிக்கையில், ''வாய்ச்சொல் அளவிலேயே குத்தகைகள் நடைபெறுகின்றன. ரிக்கார்டுகள் இல்லாததால் குத்தகை வாரச் சட்டங்களின்படி உரிமை பெறமுடிவதில்லை ; கூட்டுறவு இயக்கத்திலிருந்து உதவி பெறமுடியவில்லை.

''குறிப்பாக தஞ்சை, மேற்கு கோதாவரி பகுதிகளில் 50 சதவிகிதம் அல்லது அதற்கு மேலும் கூடி விவசாயிகள் முழுமையாக அல்லது ஒரு பகுதியையாவது வாய்ச்சொல் மூலமே குத்தகைக்கு உழுகிறார்கள். குத்தகைக்காரர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். அவர்களது நிலையைப் பற்றி அவர்களுக்கே உறுதியில்லை.

''தமிழகத்தில் நிலச்சீர்திருத்தச் சட்டம் தாற்காலிகத் தன்மையில்தான் இருக்கிறது''. இப்படி அவர் அறிக்கையில் கூறியிருக்கிறார். இந்த அறிக்கைக்குத் திட்டக்குழுவிடம் நம்முடைய தமிழக அரசாங்கம் அளித்த பதில் என்ன ? ''அந்த நிபுணரது முடிவுகள், விவசாயிகள் அளித்த பதிலை அடிப் படையாகக் கொண்டது. அதிகாரிகளுடன் கலந்து ஒப்பிட்டுப் பார்க்கவில்லை'' என்பதாகும். விவசாயிகளுடைய பதிலை அடிப்படையாகக் கொள்ளாமல் யாருடைய பதிலை அடிப்படையாக கொள்ள வேண்டும்? ஆசிரியர்களுடைய பதிலையா? ஆலைத் தொழிலாளர்களுடைய பதிலையா? எதை அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்கிறார்கள். ''அதிகாரிகளைக் கலந்தாலோசிக்காமல், இந்த அறிக்கை வெளியிடப்பட்டது'' என்று கூறுகிறார்கள். ஆனால், இதற்கு நேர் முரணாக அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர், திரு. காமராஜர், நேற்று முன் தினம் தஞ்சையில், காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத்தில், ''விவசாயிகளைக் கலந்தாலோசிக்க வேண்டும்'' என்று சொல்லியிருக்கிறார். அந்த அடிப்படையில்தான் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. வெளிநாட்டு நிபுணர் விவசாயி களைக் கலந்தாலோசிக்கிறார்கள். ஆனால் ''அதிகாரிகளைக்

கலந்தாலோசிக்கவில்லை'' என்று தமிழக அரசு சொல்லுகிறது. அதே நேரத்திலே அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் என்ன சொல்லுகிறார்? ''மேலேயிருந்து திட்டங்களைப் போடுகிறார்கள்; விவசாயிகளை யாரும் எதுவும் கேட்பதில்லை. கிராமங்களுக்குச் சென்று விவசாயிகளைக் கூட்டிப் பேசி திட்டங்களை வகுக்க வேண்டும். இல்லாவிடில் எந்தத் திட்டமும் தோல்வி யடையத்தான் செய்யும்'' என்று கூறியிருக்கிறார்கள். ''முரண்பாடே, உனக்குப் பெயர்தான் காங்கிரஸ் ஆட்சியா?'' என்று, கனம் உதவி சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலம் கேட்க விரும்புகிறேன்.

''விவசாயத் தொழிலாளிக்குரிய ஒரு நாள் ஊதியம் ஒரு ரூபாய் என்ற அளவை இன்னும் எட்டிப்பிடிக்காத மாநிலங்களில் ஒன்று தமிழகம்,'' என்று டில்லியில் நடைபெற்ற விவசாயத் தொழிலாளர் மாநாட்டுக்குத் தயாரிக்கப்பட்ட குறிப்பில் கண்டிருக்கிறது. ''நிலச் சீர்திருத்தங்களுக்குப் பிறகும், நாட்டிலே நிலத்தில் ஆதிக்கம் இருந்துவருகிறது. மாநில அரசுகள் நிலச் சீர் திருத்தச்சட்டத்தை அமல்படுத்திய பிறகும் இந்த நிலைமை இருக்கத் தேவையில்லை'' என்று பதவியிலிருந்து விலகியிருக்கும், முன்னாள் நிதி அமைச்சர்திரு. டி.டி கிருஷ்ணமாச்சாரி அவர்கள் அழகாகச் சொல்லியிருக் கிறார்கள்.

விவசாயிகளுக்காக என்ன செய்திருக்கிறார்கள் என்று கேட்டால், அவர்களிடம் வரி வாங்குகிறார்கள், 10,15 ஆண்டுகளுக்கு முன்னே எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், ''உழுபவனுக்கு நிலம்'' என்று குரல் எழுப்பிய காலத்தில், இவர்கள் என்ன சொன்னார்கள்? உழுபவனுக்கு நிலம் என்பதுபோல, கட்டியவனுக்கு வீடு சொந்தமா என்று கேட்டார்கள். அதற்குப் பிறகு, வீசி அடித்த புயல், ஏற்பட்ட அரசியல் விபத்தின் காரணமாக, விவசாயிகளுக்கு நிலச் சீர்திருத்தச் சட்டம், உச்ச வரம்புச் சட்டம் போன்ற கண்துடைப்புச் சட்டங்கள்தான் இந்த நாட்டில் இன்றையதினம் காட்டப்படுகின்றனவே தவிர, அவைகளால் விவசாயிகள் ஒருக்காலும் மேன்மை அடைந்துவிட முடியாது. நான் சில கணக்குகளை மாத்திரம் இங்கே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

1962-ம் ஆண்டின் கணக்கின்படி, தமிழ்நாட்டிலுள்ள நஞ்சை, புஞ்சை மொத்த நிலங்கள் 1,62,43,502 ஏக்கர். இந்த மன்றத்திலே தரப்பட்ட பதிலின் அடிப்படையிலே சொல்லுகிறேன். அதில் நஞ்சை 34 லட்சத்து 20 ஆயிரம் சொச்சம் ஏக்கர். புஞ்சை ஒரு கோடியே 28 லட்சம் சொச்சம் ஏக்கர். உச்ச வரம்புச் சட்டம் என்ற மகா பயங்கரமான சட்டம், புரட்சிகரமான சட்டம், புதுமையான சட்டம், உலகத்திலே எங்கும் காணாமல் இந்தச் சர்க்கார் கொண்டு வந்ததாகச் சொல்லப்படுகிற இந்த தீவிர உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் இந்த ஒரு கோடியே 62 லட்சம் சொச்சம் ஏக்கர் நிலத்திலிருந்து பெற்றிருக்கின்ற ஏக்கர் எவ்வளவு? தொகையைக் கேட்பதற்கே நாணமாக இருக்கிறது. சொல்வதற்கே கூச்சமாக இருக்கிறது. ஆனால், அவர்கள் சொன்னார்கள் துணிந்து, ''நாலாயிரம் சொச்சம் ஸ்டாண்டர்டு ஏக்கர்தான் என்று குறிப்பிட்டார்கள். கேட்டால், ''அவரவர்கள் பிரித்துக் கொண்டார்கள்'' என்று சொல்வார்கள்.

நேற்றைய தினம் அமைச்சர் கனம் திரு. கக்கன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ''சட்டம் போட்டோம். சட்டத்திற்குள்ளேயே நுழைந்து கொண்டார்களே, என்ன செய்வது?'' என்று சொன்னார்கள். ''சட்டப்படி பிரித்துக் கொண்டார்கள்'' என்ற பதிலைத் தந்தார்கள்.

இதற்கு முன்பு, இதே மன்றத்தில் இருந்த கனம் திரு. மாணிக்க வேலு அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ''பிரிக்க வேண்டும் என்பதுதானே நம்முடைய கொள்கை; அவரவர்கள் பிரித்துக் கொண்டார்கள்; நம்முடைய கொள்கை நிறைவேறிவிட்டது'' என்று சொன்னார்கள்.

இப்படிப்பட்ட வேடிக்கையான வாதங்கள்தான் தரப்படுகின்றனவே தவிர,''உண்மை நிழலாடி வருகிறதா?'' என்பதுதான் எங்களுடைய கேள்வியாகும். பிரித்திருக்கிறார்கள். இல்லை என்று சொல்லவில்லை. பாட்டனார் பெயருக்கு; பாட்டியார் பெயருக்கு; அத்தை பெயருக்கு; அக்காள் பெயருக்கு; தந்தை பெயருக்கு; தங்கை பெயருக்கு; அடுத்த வீட்டில் நம்பிக்கையானவன் பெயருக்கு; வேலைக்காரன் பெயருக்கு; நம்பிக்கையான வேலைக்காரி பெயருக்கு;

இப்படிப் பலபேருக்குப் பிரித்திருக்கிறார்கள். ஆனால் அறுவடையாகிற நெல் அவரவர்கள் வீட்டிற்குச் செல்கிறதா? என்றால் இல்லை. அறுவடையாகும் நெல் ஆண்டுதோறும் பழைய பத்தாயத்துக்கேதான் போய்கொண்டிருக்கிறது. நெல்லாகப் போகிறதா? என்று கேட்டால், நெல்லாக இல்லாவிட்டால் 'செக்' ஆகப் போகும், ஆகவே, பழைய இடங்களுக்குத்தான் அந்த அறுவடையின் பயன் போய்க்கொண்டிருக்கிறது. எங்கே பிரிக்கப்பட்டிருக்கிறது? இவர்கள் தான், ''வரப் போகிறது'', ''வரப்போகிறது'' என்று முன் கூட்டியே பத்து ஆண்டுகளாகவே சொல்லிவிட்டார்களே.'' உச்ச வரம்புச் சட்டம் வரப்போகிறது. பெரு நிலச்சுவாந்தார்களே பெருவாரியாகக் காங்கிரசை ஆதரித்துக் கொண்டிருக்கிற நிலப் பிரபுக்களே, பிரிக்க வேண்டியதையெல்லாம் பிரித்துவைத்துக் கொள்ளுங்கள். சட்டம் வருகிற நேரத்தில் பிறகு திண்டாடாதீர்கள். பிறகு எங்களைக் குறை சொல்லிப் பயன் இல்லை'' என்று அவர்கள் முன்கூட்டியே எச்சரிக்கை செய்து, இந்த 1,62,43,502 ஏக்கரும் ஏறத்தாழ மிகத்தந்திரமாகப் பிரிக்கப்பட்டுவிட்டது.

தஞ்சை மாவட்டத்திலே உள்ள கணக்கை மாத்திரம் சொல்லுகிறேன். பரிதாபகரமாக இருக்கும். அங்கே நஞ்சை, புஞ்சை பட்டாக்களில் 1960-ம் ஆண்டிற்கு முன்பிருந்த பட்டாக்கள் 4,89,732. 1961-ம் ஆண்டில் இந்த மகா புரட்சிகரமான சட்டம் வந்தது. 1962-ம் ஆண்டில் உள்ள பட்டாக்களின் எண்ணிக்கை 6,41,958 ஆக மாறுகிறது. எப்படி? உச்சவரம்பு காரணமாக, நான் முதலிலேயே கூறிய வகையிலே, பிரிக்கப்பட்டு, பட்டாதார்கள் அதிகமாக ஆகிறார்கள்.

தஞ்சை மாவட்டத்திலே, 1952-ம் ஆண்டுக் கணக்கின்படி, ஒரு ரூபாயும் அதற்குக் குறைந்தும் நிலவரி செலுத்திய பட்டாதாரர்கள் 1,48,491 பேர்கள். ஆயிரம் ரூபாயும் அதற்கு மேலும் வரி செலுத்திய பட்டாதாரர்களின் எண்ணிக்கை 481 பேர்கள். இந்த 1,48,491 பட்டாதாரர்களுக்குச் சொந்தமான நிலம் 43,570 ஏக்கர். 481 பட்டாதாரர்களுக்குச் சொந்தமான நிலம் எவ்வளவு தெரியுமா? 1,30,305 ஏக்கர். இந்தப் பட்டாதாரர்கள் தான் இந்த உச்சவரம்புச் சட்டத்திற்குப் பிறகு நிலங்களைப்

பிரித்து, பட்டாதாரர்களுடைய எண்ணிக்கையைப் பெருக்கி யவர்களே தவிர, உரிமையை வஞ்சகமாக, தந்திரமாக இன்றையதினம் தாங்களே வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

1957-ம் ஆண்டுக் கணக்கின்படி தமிழ்நாட்டில் அரசாங்க ஏற்பாடுகளில் இயங்கும் ஸ்தாபனங்கள் என்ற வகையில் பெரிய கோயில்கள் 12,925, பெரிய மடங்கள் 218. சிறு தரும நிலையங்கள் 16,295. பெரிய தரும நிலையங்கள் 668. மொத்த ஸ்தாபனங்கள் 30,106. இந்த மொத்த ஸ்தாபனங்களுக்கும் சொந்தமான நிலம் எட்டு லட்சம் ஏக்கர். இதற்கு உச்சவரம்பு கிடையாது.

அது மாத்திரமல்ல. திருப்பனந்தாள், தருமபுரம், திருவாடுதுறை ஆதீனங்களுக்குச் சொந்தமான, அனைத்தும் துறந்த துறவிகள் வாழ்கிற இந்தப் பண்டார சந்நிதானங்களுக்குச் சொந்தமான நிலம் இரண்டு லட்சம் ஏக்கர். அதற்கு உச்ச வரம்பு கிடையாது.

1955-ம் ஆண்டுக் கணக்கின்படி தஞ்சை மாவட்டத்திலே உள்ள பெருநிலச்சுவாந்தார்கட்குச் சொந்தமான நிலம் 40,500 ஏக்கர் ஒரு மாவட்டத்திலே மாத்திரம் இருக்கிற பெருநிலச்சுவாந்தார்கள் - குறிப்பாகக் காங்கிரஸ் கட்சியை ஆதரிப்பவர்கள் - ஆளும் கட்சியிலே அங்கம் வகிப்பவர்கள். அவர்களுக்குச் சொந்தமான நிலம் 40,500 ஏக்கர். ஆனால், இந்த மாநிலம் முழுவதும் நமக்குக் கிடைத்திருக்கும் நிலம் நாலாயிரம் சொச்சம் ஸ்டாண்டர்டு ஏக்கர் தான்.

ஒரு மாவட்டத்தில் உள்ள பெருநிலச்சுவாந்தார்களுக்குச் சொந்தமான நிலம் 40,500 ஏக்கர் என்று சொன்னேன். வடபாதி மங்கலம் திரு. வி. எஸ். தியாகராஜ முதலியாருக்கு ஒன்றிரண்டு ஏக்கர் அல்ல ; 12,000 ஏக்கர், கரும்பு போட்டுவிட்ட காரணத்தால் இந்த உச்சவரம்புச் சட்டத்திலிருந்து அவர் தப்பித்துக் கொள்ளுகிறார். அதைத்தான் ஆளும்கட்சியின் சார்பிலே பேசிய கனம் உறுப்பினர் பாண்டியன் அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். இப்படித் தப்பித்துக்கொள்ள பல வழிகள் அவர்களுக்குச் சொல்லித்தரப்பட்டுவிட்டன என்று காங்கிரஸ் தரப்பிலிருந்து எடுத்துக்காட்டப்பட்டது. 12,000

ஏக்கரில் பெரும்பகுதி, கரும்பு போடப்பட்ட காரணத்தால், உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து காப்பாற்றப்படுகிறது. அடுத்து, பூண்டி வாண்டையார். காங்கிரஸ் கட்சிக்குத் தஞ்சை மாவட்டத்திலே பெரும் தூண், ஏழாயிரம் ஏக்கர், புஷ்பம் கல்லூரிக்கு அவைகளிலே பெரும் பகுதி தொடர்புபடுத்தப்பட்டு, உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து அவர் தப்பித்துக் கொள்ளுகிறார். குன்னியூர் சாம்பசிவ அய்யர் 5,000 ஏக்கர். குத்தகைதாரர் கூட்டுறவு சங்கம் என்ற அந்தச் சங்கத்திலே தொடர்பு ஏற்படுவது காரணமாக அவர் பல ஆயிரம் ஏக்கர்களுக்கு உச்சவரம்புச் சட்டத்திலிருந்து விலக்கு பெறுகிறார். சீர்காழி முதலியார் 6,000 ஏக்கர். திரு. சீனிவாச முதலியார் 4,500 ஏக்கர். திரு. என். எஸ். ராமலிங்க முதலியார் 2,000 ஏக்கர். குன்னம் அய்யர் 6,000 ஏக்கர். இவர்கள் எல்லாம் மிகத்தீவிரமாக ஜனநாயக சோஷலிசத்தை உலகத்திற்கே போதிக்கின்ற அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. காமராஜ் அவர்களுடைய தலைமையிலே பணியாற்றுகின்ற சீரிய பெரும் தொண்டர்கள். அவர்கள் இருக்கின்ற காங்கிரஸ் கட்சியிலேதான் இந்த நிலைமை, இதைத்தான் குடியரசுத் தலைவர் டாக்டர். ராதாகிருஷ்ணன் அவர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். அதை மாத்திரம் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

''மிக விரிந்து பரந்த வளங்கள் கொண்ட நாடு ஏன் உணவுப் பிரச்சினையில் சிக்கிக்கொண்டிருக்கிறது? நிலச் சீர்த்திருத்தங்களை ஏன் நமது சட்டசபையினர் செய்ய முடிவதில்லை? பொருளாதார நலன்களைத்தான் சட்டசபையினர் பெரிதாகக் கருதிக் கொள்கிறார்கள். நம்மால் நிலச் சீர்திருத்தங்களைக் கொண்டுவர முடியவில்லை. நாம் ஜமீன்தாரிகளை, மிராசுதார்களை ஒழித்துவிட்டோம். நிலப் பிரபுக்கள் இன்னும் இருக்கிறார்கள். நமது சட்டசபையினர் இதைத் தடுக்க தேவையான சட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. காரணம், அவர்கள் மீதும் ஆதிக்கம் இருக்கிறது.'' இதைப் பேசியவர் குடியரசுத் தலைவர் டாக்டர். ராதாகிருஷ்ணன் அவர்கள். மார்வாரி சங்கத்தில் பேசியிருக்கிறார். பேசிய இடம் வார்தா. காந்தியார் உலவிய இடம். ஆகவே, உண்மைக்குப் பெயர்போன இடம்.

புனிதத்திற்குப் பெயர் பெற்ற இடம். அந்த இடத்தில் குடியரசுத் தலைவர் உண்மையைச் சொல்லுகிறார். ''நமது சட்டசபையினர் நிலச் சீர்த்தித்தத்திற்குத் தேவையான சட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. காரணம், அவர்கள் மீதும் ஆதிக்கம் இருக்கிறது''. நான் படித்துக்காட்டிய பட்டியலுக்கு உரிய பெருநிலச்சுவாந்தார்களுடைய ஆதிக்கம் இருக்கிற காரணத்தால் நிலச் சீர்திருத்தம் ஒழுங்காக உருவெடுக்கவில்லை, விவசாயிகள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கண்ணீர் துடைக்கப்படவில்லை என்ற நிலைமையில் அவர்களை மேலும் மேலும் புண்படுத்துகின்ற வகையிலே விதிக்கின்ற வரிகளைத் தளர்த்தவேண்டும், ரத்து செய்யவேண்டும் என்பதைக் குறித்து எங்களுடைய கட்சி சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையை நான் ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.



# ஆதிதிராவிடர் நலத்துறை மானியம்

உரை : 18 நாள் : 22.03.1966

**கலைஞர் மு. கருணாநிதி :** கனம் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டுள்ள மான்யத்தின் மீது எங்கள் கட்சியின் சார்பில் கனம் உறுப்பினர் இராசாங்கம் அவர்கள் தந்துள்ள வெட்டுப்பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கு நான் கூற விரும்புகிறேன். இந்த மான்யத்திலே குறிப்பிடுகிற இந்தப் பிரச்சினை ஒரு கட்சிக்கு மாத்திரம் உரிய பிரச்சினை அல்ல என்பதை இருதரப்பாருமே உணர்ந்திருக்கவேண்டும். இது ஒரு தேசீயப் பிரச்சினை, வெளி நாட்டுக்காரன் படையெடுக்கிற நேரத்தில் எப்படி எல்லாக் கட்சிக் காரர்களும் ஒரு அணியில் நின்று தேசீய எழுச்சியோடு வெளிநாட்டு படையெடுப்பை தகர்த்திட முனைகிறார்களோ அதேபோல் சமுதாயத்திலே நீண்ட நெடுங்காலமாக புறை ஓடி விட்டிருக்கிற ஒரு புண்ணை அகற்றுவதற்கு இதை ஒரு தேசீயப் பிரச்சனையாகக் கொண்டு இரு தரப்பாரும் தங்களுடைய யோசனைகளை வழங்கவேண்டும் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆளும் கட்சியிலுள்ளவர்கள் பாராட்டு கிறார்கள், பிறகு குறை கூறுகிறார்கள், எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் குறை மாத்திரமே கூறுகிறார்கள், என்றெல்லாம் இங்கு பல நண்பர்கள் குறிப்பிட்டார்கள். நண்பர் ஏழுமலை அவர்கள் பேசுகிற நேரத்தில் நாங்கள் பாராட்டுவதெல்லாம் மேலும், மேலும் இந்த முயற்சியில் அரசினர் ஊக்கப் படுத்தப்படவேண்டும் என்பதற்காகத்தான் என்று குறிப்பிட்டார்கள். வேலைவாங்குவதற்கு தடவிக்கொடுப்பது ஒரு முறை, தட்டிக் கொடுப்பது ஒரு முறை, தார் குச்சி போடுவது

இன்னொரு முறை, அதில் எதிர்கட்சியிலுள்ளவர்கள் இந்த இரண்டு முறையில் எந்த முறையை எடுத்துக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறார்கள், என்பதை ஜனநாயகம் உணர்ந்தவர்களுக்கு நான் அறிவிக்க வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறேன். தேசீயப் பிரச்சினையாகக் கருதவேண்டிய இந்த தீண்டாமை ஒழிப்பு பன்னெடு நாட்களாக நம்முடைய நாட்டில் பல பெரியவர்களால் நடத்தப்பட்டு வருகிற ஒரு மிகப்பெரும் காரியமாகும். அதில் நாம் முழுவதும் வெற்றி பெறவில்லை. அதற்காக வருத்தம் தெரிவித்துக்கொள்வதில் நாம் ஒருவருக்கொருவர் குறை கூறிக்கொள்ள வேண்டிய அவசியம் கூட கிடையாது. மொத்தத்தில் இந்த நாட்டில் இருக்கிற உயர் ஜாதிக்காரர்கள் என்று கருதிக்கொண்டிருக்கிற அத்தனை பேர்களுமே இந்தப் பாவத்திற்கு பிராயச்சித்தம் தேட வேண்டியவர்களே தவிர வேறு இல்லை. அந்த வகையில்தான் இந்தப் பிரச்சினையை நாம் அணுகவேண்டும். எனக்கு முன் பேசியவர்கள் எல்லாம் தீண்டாமையை ஒழிக்கவேண்டு மென்பதற்கான திட்டங்களையும், எப்படி எப்படி அது ஒழிக்கப்பட இயலும் என்ற வழிவகைகளையும் வெகு விளக்கமாக எடுத்துக்கூறியிருக்கிறார்கள். நம் இதழ் ஆசிரியர்களையும், ஏடு நடத்துகிறவர்களையும் இந்த மன்றத்தின் மூலம், கனம் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன், இங்கு நடைபெற்ற வேறு பல விவாதங்களை வெகுவாக தங்களுடைய ஏடுகளில் அவர்கள் பிரசுரிக்கத் தவறியிருந்தாலும் இந்த விவாதத்திலே பொதுப் படையாக தீண்டாமை ஒழிக்கப்படவேண்டும் என்ற அளவில் சொல்லப்பட்ட கருத்துகளை நாட்டிலே நடைபெறுகிற ஏடுகள் ஒழுங்காக, விரிவாக வெளியிடுவார்களேயானால் அது மெத்த பயன்தரத்தக்க ஒரு அம்சமாக இருக்கும் என்பதை இந்த மன்றத்தில் ஒரு வேண்டுகோளாக அவர்களுக்கு விடுக்க விரும்புகிறேன். தீண்டாமை என்பது ஏதோ ஒருவருக்கொருவர் தொட்டுக் கொள்வது அல்லது அதைத் தடுப்பது என்ற முறையில் அமைந்தது மட்டுமல்ல. உரிமைகள் வழங்காமை, சலுகைகள் தரப்படாமை, ஒற்றுமை இல்லாமை இவைகள் அத்தனையும் தீண்டாமை என்கிற பட்டியலில்தான் அடங்கும். ஆகவே,

தீண்டாமை என்பது ஏதோ ஒருவரை ஒருவர் தொடுவதைத் தடுக்கிற ஒன்றுதான் என்ற வகையில் நாம் பொருள் கொள்ளலாகாது. ஒருவரை ஒருவர் தொடுவது என்பது மிகச் சுலபமாகச் செய்து விடக்கூடிய காரியமாகக் கூட இருக்கும். ஆனால் மனதிலே இருக்கிற அழுக்கை அகற்றியாக வேண்டும். மனதிலே இருக்கிற புகைச்சல், நமைச்சல் இவற்றைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்ற அளவில்தான் தீண்டாமை ஒழிப்பு செயல்படுத்தப்பட வேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நண்பர் ஏழுமலை அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். துரியோதனாதியருக்கு சகுனி பரிந்துரை கூறி உசுப்பி விட்டு கலைத்ததைப் போன்று எதிர்க்கட்சிக்காரர்கள் ஹரிஜன மக்களை உசுப்பி விட்டார்கள் என்று சொன்னார்கள். சகுனி என்ற குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஹரிஜன மக்களை துரியோதனாதியரோடு சேர்த்தாரே அதற்காக உள்ளபடி வருந்துகிறேன். இது பரிந்துரைத்து, யாரையும் உசுப்பி விடுவதற்காக நடைபெறுகிறதல்ல என்ற மனப்பக்குவத்தோடு இந்தப் பிரச்சினையை நாம் வெகு உன்னிப்பாக முனைந்து அணுகிடவேண்டும். இதில் ஒரு பரிதாபம் என்னவென்றால் நாம் எல்லா இலாகாக்களையும், எல்லா நிர்வாகங்களையும் ஆராய்கிற நேரத்தில் ஒன்று என் கண்ணை உறுத்திற்று. எந்த ஒரு இலாகாவிலும், ஹரிஜன நல இலாகாவில் உள்ள கீழ்நிலையில் உள்ள ஒரு சிப்பந்தி பெறுகிற சம்பளம் வேறு எந்த இலாகாவிலும் யாரும் பெறவில்லை. பத்து ரூபாய் பெறுகிற லைப்ரேரியன்ஸ், பத்து ரூபாய் சம்பளம் பெறுகிற இரவுப் பள்ளி ஆசிரியர்கள், 25 ரூபாய் பெறுகிற இரவுப் பள்ளி ஆசிரியர்கள் இந்த பரிதாபத்திற்குரிய ஹரிஜன நல இலாகாவில்தான் இருக்கிறார்கள். அப்படி பத்து ரூபாய் பெறுகிற லைப்ரேரியன்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்தால்; அவர்கள் 24 பேர்கள், 25 ரூபாய் சம்பளம் பெறக்கூடிய இரவுப் பள்ளி ஆசிரியர்கள் 25 பேர்கள், பத்து ரூபாய் சம்பளம் பெறக்கூடிய இரவுப் பள்ளி ஆசிரியர்கள் மூன்று பேர்கள். எண்ணிக்கையில் குறைவாகத்தானே இருக்கிறது, இவர்களுக்கு கொஞ்சம் சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுக்கக்கூடாதா என்ற என்னுடைய வேண்டுகோளை ஆவலோடு கலந்து நம்முடைய அமைச்சர்

அவர்கள் முன் வைக்க நான் விரும்புகிறேன். 188 கோடி ரூபாய் ஏறத்தாழ 3½ கோடி மக்களுக்கு செலவு செய்வதற்காக பல மான்யங்கள் மூலமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 188 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்ற இந்த மான்யங்களில் ஹரிஜன நல மான்யத்திற்காக ஒதுக்கப்பட்டிருப்பது 5 கோடி சொச்சம்தான். இந்த 188 கோடி ரூபாயை 3½ கோடி மக்களுக்கு பிரிக்கும்போது தலைக்கு 50 ரூபாய் அளவுக்கு வருகின்றது. அதேமுறையில், கிட்டத்தட்ட 60 லட்சம் அளவுக்கு இருக்கக்கூடிய ஆதி திராவிட மக்களுக்கு கிடைக்கின்ற தொகையைக் கணக்கிட்டால் தலைக்கு 7 ரூபாய் என்கின்ற அளவுக்கு வருகிறது. அப்படிச் சொல்லும்போது, ஐம்பதும் ஏழும் சேர்த்து 57 ரூபாய் கிடைக்கவில்லையா என்று நமது மதிப்பிற்குரிய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கேட்கக்கூடும். ஆனால், 50 ரூபாய் அளவுக்கு கிடைக்கின்ற வசதிகள், வாய்ப்புகள் இவைகளை எல்லாம் ஆதி திராவிட மக்கள் அனுபவிக்க இயலாதவர்களாக, இதை பெற முடியாதவர்களாக இருக்கிறார்கள். இந்த அளவில் ஆதி திராவிட மக்களுக்கு, பின்தங்கிய மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற இந்த ஐந்து கோடி ரூபாய் போதாது என்பதை பல ஆண்டுகளாக, எதிர்க்கட்சியின் தரப்பிலிருந்து மட்டுமல்ல, ஆளும் கட்சியிலிருந்தும் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது. போன ஆண்டு நான்கு கோடி சொச்சம்தான் தரப்பட்டிருந்தது. இப்போது என்ன கருணை வந்ததோ தெரியவில்லை, சில பல லட்சங்களை சேர்த்து, பார், பார் ஐந்து கோடி அளவுக்கு ஆக்கியிருக்கிறோம் என்று சொல்வதற்கு தகுந்த முறையில் உயர்த்தியிருக்கிறார்கள். ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் போதாது என்று சொல்லும்போது, ஒரு கோடி, இரண்டு கோடி உயர்த்துவது அல்ல, குறைந்தது 25 கோடி அல்லது 30 கோடி அளவுக்கு மான்யத்தில் ஒதுக்கப்பட்டால்தான் இந்தக் கொள்கையில் வெற்றி பெற்றவர்களாக ஆக முடியும். ஏறத்தாழ 66 லட்சம் மக்களை கொண்டிருக்கின்ற ஒரு பெரிய சமுதாயப் பிரச்சினையாக இதை நாம் ஆராய வேண்டும். இவர்கள் அன்னியில், பின்னிலை வகுப்பினர் என்றும், பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் இவர்களுடைய பிரச்சினை எல்லாம் மிக முக்கியமான

பிரச்சினையாக கருதவேண்டிய காரணத்தால் இதில் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை மிக மிக குறைவு என்பதைக் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் வைத்துள்ள நூலில் முன்னுரையாக கூறியிருப்பது, ''ஹரிஜனங்கள், ஆதிவாசிகள், ஏனைய பின்னிலை வகுப்பினர்களின் நலனுக்கான 1966-67 மானியக் கோரிக்கையை நான் சமர்ப்பிக்கின்றேன்.'' என்கிற வாசகங்கள் இருக்கின்றன. ஆனால் இந்த நூலின் தலைப்பில் ''ஹரிஜன நலத் துறை'' என்று அமைந்திருக்கிறது. இந்தத் துறைக்கு அரிஜன நலத்துறை என்ற பெயர் இருக்கவேண்டுமா என்கின்ற வாதம் பல நேரங்களில் பல பெரியோர்களால் எழுப்பப்பட்டிருக்கின்றது. இந்த மன்றத்தில் கூட ஆளும் கட்சி தரப்பிலிருந்தும், எதிர்கட்சி தரப்பிலிருந்தும் இதே கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டத்தில் கூட, ஷெட்யூல்ட் காஸ்ட் என்றுதான் இருக்கிறது. மத்திய சர்க்காரில் இருக்கக்கூடிய அமைச்சருக்குக்கூட ''சமூக பாதுகாப்பு அமைச்சர்'' என்றுதான் பெயர் வைத்திருக்கிறார்கள். அரிஜன நல இலாகா என்று இருப்பதை எல்லா பின்னடைந்த மக்களையும் இணைக்கின்ற வகையில், எல்லோருக்கும் இதில் நியாயம் வழங்கப்படுகிறது என்பதை காட்டுகின்ற வகையில், இதை ''சமூக பாதுகாப்பு இலாகா'' என்கின்ற தலைப்பில் அழைக்கலாம். இப்படி சொல்லுகின்ற காரணத்தால், அரிஜனங்களுக்கு ஏதோ அதிகமாக செலவு செய்கிறது என்று எண்ணி, அவர்கள் மீது மற்ற வகுப்பினர்கள் கோபப் படுகிறார்களே, எரிச்சல் படுகிறார்களே, அவர்கள் திருப்தி அடைவதற்கும் இது ஓரளவுக்கு ஏதுவாக இருக்கும். அரிஜன மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். அரிஜன இலாகாவை, சமூக பாதுகாப்பு இலாகா என்று வைத்துக் கொள்வதின் மூலம், அரிஜனங்களுக்கு மட்டும்தான் காரியங்கள் செய்து கொள்ளுகின்ற இலாகா என்றில்லாமல், பொதுவாக, பின் தங்கியவர்கள், பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்கள் சார்பிலும் இந்த மான்யம் வழங்கப்படுகிறது என்கிற அளவில் சமூக பாதுகாப்பு இலாகா என்று பெயர் மாற்றுவது மிக பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள்,

தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்லும்போது, உண்மையில் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் அல்ல. இவர்களை தாழ்த்தப்பட்டவர்கள் என்று கருதி வந்தாலும், இவர்கள் தாழ்ந்தவர்களாக ஆகிவிட மாட்டார்கள். அரிஜனம் என்று அவர்களுக்கு பெயர் வழங்கப்படுவதற்கு காரணம், உத்தமர் காந்தியார், இவர்கள் கடவுளின் பிள்ளைகள், இவர்கள் கடவுளின் மக்கள் என்று சொல்லப்படுகின்ற முறையில்தான் ஹரிஜன என்று பெயர் வழங்கப்படுவதற்கு காரணமாக இருந்து வந்திருக்கிறது. இந்தப் பெயரை வைத்துக்கொள்கின்ற முறையில், கடவுளின் பிள்ளைகள் என்று நினைத்துக் கொள்ளலாமே தவிர- இவர்களுடைய நிலை எவ்வாறு இருக்கிறது என்றால், ஒரு குழந்தைக்கு ராஜா என்று பெயரிட்டு, அந்தக் குழந்தையின் கையில் திருவோட்டை கொடுத்து, நாலு தெருவையும் சுற்றி வா என்று சொல்லுவது போலத்தான்- நீ கடவுளுடைய பிள்ளை என்று சொல்லிவிட்டு, அதே நேரத்தில் சமுதாயத்தில், தீண்டப்படாதவர்களாக, ஊரில் கிணறு இருந்தால், அதிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று ஒதுக்கப்படுகின்ற நிலை, கொடுமைகள் இவற்றை எண்ணிப்பார்க்கவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக யார் யார் உழைத்தார்கள், யார் யார் போரிட்டார்கள் என்கின்ற போட்டிப் பிரச்சினைகளைப்பற்றி நாம் ஆராய வேண்டிய அவசியமில்லை. உழைத்தவர்கள், போரிட்டவர்கள் அத்தனை பேர்களுக்கும் நாம் வணக்கம் செலுத்துகின்றோம். பெரியார் உழைத்தார், உத்தமர் காந்தியார் பாடுபட்டார், அம்பேத்கார் பாடுபட்டார், அவர் இல்லாவிட்டால் இந்த அளவுக்கு தனித்தொகுதி முறை கூட வந்திருக்க முடியாது. ஆதி திராவிட மக்களுக்கு இந்த அளவுக்கு பாடுபட்ட பல பெரியவர்களை நாம் பார்க்கின்றோம். இப்படிப்பட்டவர்களில் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரும்பாடுப்பட்டார் என்பதற்காக, மராட்டிய மாநிலத்தில் அவர்களுடைய காரியாலயங்களிலும், கல்வி நிலையங்களிலும் டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய திருஉருவப்படத்தை வைப்பது என்று மராட்டிய மாநில அரசு தீர்மானம் நிறை வேற்றியிருக்கிறது. அந்த வழியில் நம்முடைய மாநில அரசு இந்த பழங்குடி மக்களின் மாபெரும் தலைவராக

விளங்கிய டாக்டர் அம்பேத்காரின் திருஉருவப்படத்தை காரியாலயங்களிலும், கல்வி நிலையங்களிலும் வைப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

உபகாரச் சம்பளங்கள் கொடுக்கப்படுகின்ற விஷயத்தில், தாழ்த்தப்பட்டவர்களானாலும், பின்தங்கிய வகுப்பினரானாலும், கொடுக்கப்படுகின்ற தொகை போதுமானதாக இல்லை என்பதை பல உறுப்பினர்களும் எடுத்துக்காட்டினார்கள். மதிப்பிற்குரிய அனந்தநாயகி அம்மையார் அவர்களும் இப்போது வரம்பாக வைத்திருக்கின்ற 1,500 ரூபாய் என்றிருப்பதை 3,000 ரூபாய் அளவுக்கு ஆக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். இதைக்குறித்து பல ஆண்டுகள் இங்கே பேசப்பட்டிருக்கின்றது என்றிருந்தும், அரசியலார் கவனித்ததாக தெரியவில்லை. வழங்கப்படுகின்ற உபகாரச் சம்பளங்கள் போதுமானதாக இல்லை, வர வர குறைந்து கொண்டேயிருக்கிறது என்பதற்கும், நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள், இங்கே தரப்பட்டிருக்கின்ற நூலின் மூலமாக சில விவரங்களை எடுத்துச்சொன்னார்கள். அவர்கள் அவ்வாறு எடுத்துச்சொன்ன நேரத்தில் முழுவதையும் படித்துப்பாருங்கள் என்று அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு சொன்னார்கள். நான் முழுவதையும் படித்தபிறகுதான் இதைக் குறிப்பிடுகிறேன். அதில் குறிப்பிட்டிருப்பது, பின்னிலை வகுப்பினருக்கு, 1965-66ல் 72.80 லட்சமாக இருந்தது. 1966-67ல் 51.52 லட்சம் மதிப்பீடு என்ற அளவில் சொல்லியிருக்கிறார்கள். பின்னிலை வகுப்பினருக்கு மட்டுமல்ல, தகுதியுள்ள வகுப்பினருக்கு 1964-65ல் 52.75 லட்சம் என்றிருந்தது, 1965-66ல் 58.57 லட்சம் என்று உயர்ந்து, திரும்பவும் 1966-67ல் 53.82 லட்சமாக குறைந்திருக்கிறது. அதைப்போலவே, பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினருக்கு 1965-66ல் 11.13 என்பதிலிருந்து 1966-67ல் 9.69 லட்சம் என்கின்ற அளவுக்கு குறைந்திருக்கிறது. இதே போன்று தான் பின்னிலை வகுப்பினருக்கு 1965-66ல் 72.80 லட்சத்திலிருந்து 1966-67ல் 51.52 லட்சம் என்கின்ற அளவுக்கு குறைந்திருக்கிறது. இவ்விதம் ஏன் குறைக்கப்பட்டிருக்கிறது

என்பதும் தெரியவில்லை. கனம் அமைச்சர் அவர்கள் இந்தக் குறிப்பை சரியாக படிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஒரு முறை அல்ல, பல முறை படித்தாலும் கூட, இதே குறைவுதான் தெரிகிறது, அப்படி மதிப்பீடுதானே என்று சொன்னாலும் கூட. ஓரளவுக்கு உயர்ந்தாலும் நிச்சயமாக 70 லட்சத்தை எட்டிப் பிடிக்க முடியாது என்று நினைக்கிறேன். ஆகவே, இந்த நிலையை மாற்றவேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே கடலூரிலிருந்து, அண்ணாமலை பல்கலை கழகத்தில் படிக்கின்ற மாணவர்களில் 258 பேர்களுக்கு - அவர்கள் பின்னிலை வகுப்பினர் என்று கருதுகிறேன் - அவர்கள் தற்போது, அங்குள்ள விடுதியில் இருந்தாலும், உபகாரச் சம்பளங்கள் பெறுவதற்கு தகுதியுள்ளவர் என்றிருந்தும், உபகாரச் சம்பளம் இதுவரையிலும் கொடுக்கப்படாமல் இருந்து வருகிறது. இதைப்பற்றி நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இதே சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். இந்த 258 பேர்களுக்கும் உபகாரச் சம்பளம் கொடுப்பதாக இருந்தால் அதற்கு ஏறத்தாழ 80 ஆயிரம் ரூபாய் ஆகும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், இதுவரையில் கவனிக்கப்பட்டதாக தெரியவில்லை. அவர்கள் விடுதியில் இருந்தாலும், அவர்கள் இந்த உபகாரச் சம்பளம் பெறுவதற்கு தகுதி பெற்றிருக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு இந்த தொகை வரும் என்று நினைத்துக்கொண்டு, அவர்கள் இப்போது மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்களுடைய மேல் படிப்பையும் தொடர முடியாத அளவுக்கு இந்த மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

வீடுகள் கட்டிக்கொள்வதற்காக ஆயிரம் ரூபாய் தருகிறேன் என்று சொல்லுகிறார்கள். மேடையில் இதைப்பற்றி சொல்லும் போது, கேட்பதற்கு மிக குளிர்ச்சியாகத்தான் இருக்கிறது. ஆனால், இந்த ஆயிரம் ரூபாய் எப்படி தருகிறார்கள் என்பதைப் பார்த்தால், யார் வேண்டுமென்று விரும்புகிறாரோ அவர் 250 ரூபாய் தரவேண்டும். 250 ரூபாய் ரொக்கமாக தரமுடியவில்லை என்றால், 250 ரூபாய் அளவுக்கு பொருட்களாக தரவேண்டும்,

இல்லையென்றால், 250 ரூபாய் அளவுக்கு உழைப்பாக தரவேண்டும். அப்படி தருவதாக இருந்தால், சர்க்கார் 750 ரூபாய் போட்டு, இந்த இலாகா வீடுகட்டித்தரும். இந்த 250 ரூபாயை தருவதற்கு, ஏழை நிலையிலிருக்கின்ற ஆதி திராவிட சகோதரன் எங்கே போவான் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். பொருளாகக் கொடு என்றாலும் இயலாது. உழைப்பாகக் கொடு என்றால், அவன் உழைப்பைப் பெற்று, 250 ரூபாய் உழைப்பு அல்ல உன்னுடையது என்று கூறிவிடுவார்கள். ஒரு ஆண்டு காலம் உழைத்தாலும் ஒரு ஏழை உழவனுக்கு 250 ரூபாய் வருமானம் கிடைப்பதாக நான் அறியவில்லை. ஆகவே, வீடு கட்ட 250 ரூபாய் உழைப்பு தேவைப்படாது என்று கூறி, 50 ரூபாய்க்கு உழைத்திருக்கிறாய், மிச்சம் 200 ரூபாய் கொடு என்பார்கள், இலாகாவிலிருந்து அனுப்பப்படுகிற அதிகாரிகள் அல்லது கிளை அமைப்பு அதிகாரிகள். 250 ரூபாய் உழைப்பையும் வாங்கிக்கொண்டு வீட்டை 750 ரூபாய் பெறுமானமுள்ள வீடாகக் கட்டித்தருவார்கள். ஆகவே, வீடு கட்டும் திட்டத்திலே இந்த நிலை உருவாகியிருப்பது சரியல்ல. கொடுப்பது கொடுக்கிறோம். 1,000 ரூபாயாகக் கொடுத்து விடுவோம் என்ற நிலைமையில் அமைச்சர் அவர்கள் மனமிரங்கி அந்த முயற்சியில் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மனைகள் வழங்கப்படுகின்றன. சென்ற ஆண்டு இதே மன்றத்தில் கனம் அங்கத்தினர் திருமதி குழந்தை அம்மாள் கூட மனைகள் வழங்குகிறீர்களே, வீடுகள் எப்படிக் கட்டிக் கொள்ளுவது, பணம் வேண்டாமா என்று கேட்டார்கள். அப்போது உடனே அமைச்சர் அவர்கள் எழுந்து கோபமாகச் சொன்னார்கள் 'மனைகள் தான் வழங்க முடியும். வீடுகள் எப்படி கட்டிக்கொடுக்க முடியும்? என்றார் அமைச்சர் அவர்கள், இல்லை என்று மறுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். என்னிடத்தில் நிகழ்ச்சிக் குறிப்பு இருக்கிறது. 'வீடுகள் கட்டிக் கொடுக்க முடியுமா?' என்று அமைச்சர் அவர்கள் ஆதங்கப்படுகிறார். நான் அமைச்சர் அவர்களைத் திருப்பிக் கேட்க விரும்புகிறேன். தரப்படுகிற மனைகளில் வீடு கட்டிக்கொள்ள வசதி பெற்ற ஆதி

திராவிட மக்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று அமைச்சருக்குத் தெரியாதா? அல்லது அந்த இலாகாவிற்குத் தெரியாதா? அவர்கள் வீடு கட்டிக்கொள்ளும் வசதி பெற்றவர்களாகவா இருக்கிறார்கள்? அது இருக்கட்டும். மனைகள் வழங்கப்படுவதாவது ஒழுங்காக வழங்கப்படுகிறதா? நான் கேள்விப்பட்டேன். செங்கற்பட்டு மாவட்டத்தில், ஸ்ரீ பெரும்புதூர் பகுதியில் வெள்ளக் கோட்டை என்ற இடம். அங்கே ஹரிஜனங்களுக்கு மனைகள் ஜாரி செய்து கொடுத்தார்கள். எப்படித் தெரியுமா? ஹரிஜனங்களிடம் இருந்த மனைகளை வாங்கி ஹரிஜனங்களுக்குக் கொடுத்தார்கள். நிலத்தை வைத்திருந்த ஹரிஜன் செய்த பாவம் சென்ற தேர்தலில் முதல் அமைச்சரை எதிர்த்து நின்ற திரு. அண்ணாமலை அவர்களை ஆதரித்ததுதான். அந்தப் பாவத்திற்காக, ஹரிஜனத் தோழர்களுடைய நிலம் பிடுங்கப்பட்டு வேறு ஹரிஜனங்களுக்கு வழங்கப்பட்டது. அவர்கள் இப்போது வழக்குப் போட்டிருக்கிறார்கள், ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். ஆகவே, இதைப்பற்றி அதிகமாகக் கூற விரும்பவில்லை, ஹரிஜனங்களின் நிலத்தை எடுத்து ஹரிஜனங்களுக்குக் கொடுப்பதில் என்ன லாபம்? வெல்லத்திலே பிள்ளையாரைச் செய்து, அதைக் கொஞ்சம் கிள்ளி, அதற்கே படைத்தானாம். அந்த மாதிரி ஹரிஜனங்களுடைய நிலத்தைப் பிடுங்கி, ஹரிஜனங்களுக்குத் தருவதில் என்ன லாபம் இருக்கிறது என்று எண்ணிப்பார்க்கவேண்டும்.

இன்னொன்று, சேலம் மாவட்டத்தில், மாவட்ட வளர்ச்சிக் குழுவில் எங்கள் நண்பர் திரு. ஆறுமுகம் அவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர் என்ற முறையில் ஒரு வினாவை எழுப்பி இருக்கிறார்கள். ''1958-ம் ஆண்டு பஞ்சாயத்து சட்டப்படி தீர்வை ஏற்படாத புறம்போக்கு நிலங்களை பஞ்சாயத்திற்கு ஒப்படைத்து உள்ளது. தீர்வை ஏற்படாத புறம்போக்கு நிலங்களை நீண்ட காலமாக அனுபவம் செய்து வந்தவர்களுக்கு மேற்படி பஞ்சாயத்து பட்டா வழங்கலாமென்று தீர்மானம் கொடுத்தாலும், 1958-ம் ஆண்டு பஞ்சாயத்து சட்டப்படி பட்டா வழங்க முடியாத நிலைமை உள்ளது என்று நில வருவாய்த் துறை அதிகாரிகள் தெரிவிப்பது உண்மையா?'' என்று கேட்டிருக்கிறார்.

அதற்கு என்ன பதில் வந்திருக்கிறது தெரியுமா? ''பஞ்சாயத்துச் சட்டத்தின், பிரிவு 72 (1) (ஏ)க்குத் திருத்தம் கொண்டுவரும் வரையில், பஞ்சாயத்து தீர்மானம் கொடுத்தாலும் அடமானம் செய்ய இயலாது'' என்று பதில் வந்திருக்கிறது. இப்போது அனுபவஸ்தர்களாக இருக்கிறவர்கள் ஆயிரத்துக்கு உட்பட்ட ஹரிஜனப் பெருங்குடி மக்கள். அவர்களுக்கு நிலத்தைப் பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று பஞ்சாயத்து தீர்மானமே போட்டிருக்கிறது. பஞ்சாயத்து தீர்மானம் போட்டும் கூட, அதைப் பட்டா செய்து தர முடியாத நிலைமையில் பஞ்சாயத்துச் சட்டத்தின் 72(1) (ஏ) பிரிவு தடுக்கிறது, அது திருத்தப்பட்டால் தான் நாங்கள் அதை அனுமதிக்க முடியும் என்று மாவட்ட ரீதியிலே மாவட்ட ஆட்சி ஆணையாளர் பதில் அளித்து விட்டார். நான் அவருடைய நிலைமையை இங்கே எடுத்துச் சொன்னேன். அந்த நிலைமையிலிருந்து அவரை விடுவித்து ஆயிரக்கணக்கான ஹரிஜனங்கள் தாங்கள் அனுபவித்து வந்த நிலங்களை பஞ்சாயத்து பட்டா போட்டு தருவதற்கு முன் வந்தால், அந்த நிலங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு ஏற்ற முறையில் பஞ்சாயத்துச் சட்டத்தின் 72(1) (ஏ)பிரிவுக்கு அரசாங்கம் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உழவுக்காக ஹரிஜனங்களுக்கு ஒரு ஜோடி மாடுகள் தரப்படுவதாக இருக்கிறது. 400 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரையில் உழவு மாடுகளுக்கு, உழவுக்கருவிகளுக்கு, விவசாயிகளுக்கான பொருட்களுக்கு தரப்படுவதாக இருக்கிறது. 400 ரூபாய் என்பதை 500 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம் என்றெல்லாம் இங்கே ஏட்டிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பெரும்பாலான ஹரிஜன மக்கள் இந்த மாடுகளைத் தேர்தல் நேரத்திலே தேர்தல் சின்னத்திலே பார்க்கிறார்களே தவிர, வேறு விதத்தில் பெரும்பாலான ஹரிஜன மக்கள் பார்ப்பதாகத் தெரியவில்லை. தையல் தொழில், கருமார் தொழில், தச்சுத் தொழில் - இப்படிப் பட்ட தொழில்களில் ஈடுபட்டவர்களுக்கு, அதிக தகுதி பெற்றவர்களுக்கு, அதற்கான கருவிகளும், வசதி வாய்ப்புகளும், வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

இவைகள் எல்லாம் கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, எடுத்துச்சொன்ன உதாரணத்தைப் போல, கடலிலே பெருங்காயத்தைக் கரைத்த மாதிரி இருக்கிறதே தவிர வேறு இல்லை. அவர்கள் தந்திருக்கிற பட்டியல் ஒரு ஆயிரம் பேருக்கு வீடுகள் ; ஆயிரம் பேர்களுக்கு உழவு மாடுகள், 5,000 பேர்களுக்கு தொழிற்சாதனங்கள், கருவிகள் ; 2 லட்சம் பேர்களுக்கு உபகாரச் சம்பளம். 60 லட்சத்துக்கு மேற்பட்ட ஆதிதிராவிடர்கள் இருக்கிற சமுதாயத்தில், 2 லட்சம் பேர்களுக்கு, 3 லட்சம் பேர்களுக்கு இந்த வசதிகள் வழங்கப்பட்டுவிடுகிற காரணத்தினால், அந்த சமுதாயத்தின் குறைகள் முழுமையாக நீங்கி விட்டதா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். இந்த உதவிகளெல்லாம் ஏட்டுத் திட்டங்களாக இனித்துக்கொண்டிருக்கின்றன. இந்த உதவிகள் உரிய நேரத்தில் போய்ச் சேருவதில்லை; சேரவேண்டியவர் களுக்குச் சேருவதில்லை. ஒழுங்காகப் போய்ச் சேருவதில்லை; இடையிலே இவைகள் என்ன என்னவோ ஆகிவிடுகின்றன. தரப்படுகிற உதவிகள், இடையிலே லஞ்ச லாவாண்ணியங் களால் கரைக்கப்பட்டு அவர்கள் கையில் போய்ச்சேருகிற நேரத்தில் அவர்கள் நல்ல பயனை அனுபவிக்க முடியாதவர் களாக இருக்கிறார்கள்.

இந்த ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படுகிற உபகாரச் சம்பளம், சலுகைகள் ஆகியவைகளை, இவர்களைப் போல் மதம் மாறிய கிருஸ்தவ ஹரிஜனங்களுக்கும் தரவேண்டுமென்று எதிர்க் கட்சியின் சார்பில் நண்பர் ராஜாங்கம் வெட்டுப் பிரேரணை தந்திருக்கிறார். இந்தச்சலுகைகள் மத அடிப்படையில் வழங்கப்படுகிற சலுகைகள் அல்ல. இதை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம். தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப் பட்டவர்கள், பின்னிலையில் இருக்கிறவர்கள், பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் என்ற அடிப்படையில் தான் சலுகைகள் வழங்குகிறோமே தவிர, இந்த ஹரிஜன், கிரிஸ்தவ ஹரிஜன் என்றெல்லாம் பார்த்து சலுகை வழங்குவதில்லை. இதுதான் நம் கொள்கை. ஆனால் கொள்கைக்கு முரணாக இந்து ஹரிஜன் என்று நற்சாட்சிப் பத்திரம் தந்தால்தான், இந்து ஹரிஜன் என்று மெய்ப்பிக்கப்

பட்டால்தான் வழங்கப்படும் என்று இருக்கிறதே அது மாற்றி அமைக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திட்டங்களின் பலன்கள் உரியவர்களிடத்தில் ஒழுங்காகப் போய்ச் சேரவில்லை என்று நான் மாத்திரமல்ல, சமூகப் பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த நிபுணர் குழு - எக்ஸ்பெர்ட் க்ரூப் ஆஃப் தி ஸோஷல் செக்யூரிட்டி டிப்பார்ட்மென்ட் - என்ற குழு திட்டக்குழுவினிடத்தில் ஒரு அறிக்கை சமர்ப்பித்தது, அதிலே விளக்கியிருக்கிறார்கள். ''திட்டத்தினால் உருவாக்கப்பட்ட அபிவிருத்தி வேலைகளின் பயன் மிகச்சிறிய அளவிலேயே பிற்பட்ட வகுப்பாருக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது. விவசாயம், கூட்டுறவு, சிறிய பாசனங்கள், சிறு கைத்தொழில்கள், கால்நடைப் பராமரிப்பு ஆகிய துறைகளுக்காகத் தீட்டப்பட்ட திட்டங்களின் பயன், வெகுவாகப் பிற்பட்ட இனத்தவருக்குப் போய்ச் சேரும் என்று தான் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் நிகழ்ச்சிகள் ஏமாற்றம் தருவதாகவே இருக்கின்றன'' என்று திட்டக் குழுவுக்கு அந்த நிபுணர் குழு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது. இதைத்தான் என்னுடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்தில் இருக்கும்போது குறிப்பிட்டு ஒன்றைச் சொன்னார்கள். 'நாம் பணம் செலவழிக்கிறோம் ; இன்னும் தாராளமாகத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் மனமுவந்து முன் வருகிறார்கள் ; ஆனால் செலவழிக்கப்படும் பணம் போய்ச் சேரவேண்டிய இடத்தில் போய்ச் சேரவில்லை ; அது எப்படி இருக்கிறது என்றால், ஒரு அரசன் அமைச்சரைப் பார்த்து நாம் இவ்வளவு பணம் செலவழிக்கிறோமே, ஏன் அது மக்களிடத்தில் சேரவில்லை என்று வினவ, உடனே அமைச்சர் அங்கே இருந்து ஐஸ் கட்டியை எடுத்து மன்னர் கையில் கொடுத்து, 10 பேர்களைச் சுற்றி உட்கார வைத்து வைத்துக் கொண்டு, மன்னர் கையிலிருந்து அமைச்சர் ஐஸ் கட்டியை வாங்கி அதைப் பக்கத்தில் இருந்த தளபதியிடம் கொடுக்க, தளபதி உதவி தளபதியிடம் கொடுக்க, உதவி தளபதி பக்கத்தில் இருந்த பிரதானியரிடம் கொடுக்க, இந்த மாதிரி 10 பிரதானியர்களிடம் கொடுத்துக் கொடுத்து, கடைசியில் அதை மன்னர் கையில் கொடுக்கச் சொன்னார், மன்னர் கையில் கிடைத்தது சொட்டு தண்ணீர்தான்'' என்று

விளக்கினார். இப்படித்தான் பலபேர் கைக்கு மாறுகிற காரணத்தினால், ஏழை வீட்டுக்கு ஒரு சொட்டு தண்ணீர்தான் போய்ச் சேருகிறது என்று அமைச்சர் சொன்னதாக அறிஞர் அண்ணா அவர்கள் விளக்கினார்கள். ஆனால் இப்போது அவர்களுக்கு ஒரு சொட்டு கண்ணீர்தான் போய்ச் சேருகிறது. செலவழிக்கிற பணம் ஒழுங்காக அவர்களுக்குத் தரப்படாத காரணத்தினால் கண்ணீருக்குத்தான் ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், பின்னிலையில் இருக்கிறவர்கள் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள் என்பதை மறந்து விடக்கூடாது.

சமுதாய சீர்திருத்தத்தைப்பற்றி பேசுகின்ற அதே நேரத்தில் பொருளாதார முன்னேற்றமும் அரிசனங்களுக்கும், மற்றவர்களுக்கும் தேவை என்பதை நாம் மறந்து விடக்கூடாது. சமுதாயச் சீர்திருத்தம் என்பது வயலைப் பண்படுத்துவது போல, பொருளாதார முன்னேற்றம் என்பது அதிலே பயிரிடுவது போல. பண்படுத்தாத வயலில் பயிரிட முடியாது. அதுபோலவே பயிர் செய்வதற்கு பண்படுத்தாமலும் இருக்க முடியாது. இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. சமுதாய சீர்திருத்தமும், பொருளாதார முன்னேற்றமும் ஒன்றுக்கொன்று தொடர்பு உடையது. அந்த வகையில் இரண்டும் அமைவதற்கு இந்த அரசாங்கத்தார் ஏற்ற வழிகளையெல்லாம் காணவேண்டும்.

சமுதாய சீர்திருத்தம் என்று சொல்லும்பொழுது, தீண்டாமை முழுவதும் ஒளிந்துவிட்டதா? இல்லை என்று நான் மாத்திரம் அல்ல, எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் அல்ல, ஆளும் கட்சி தரப்பிலிருந்தே பலபேர் திட்டவட்டமாகச் சொல்லுகிறார்கள். கிராமத்திற்குப் போய்ப் பார்த்தால் கிணறுகளில் கூட இன்றையதினம் தீண்டாமை அனுஷ்டிக்கப் படுகிறது. அதற்கு பல உதாரணங்களை நான் சொல்ல முடியும். திருச்சி மாவட்டத்தில் மகிழம்பாடி என்று ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்திலுள்ள மக்கள் ஆதிதிராவிட மக்கள். 10,15 ஆண்டுகளுக்கு முன்பு அந்த வழியாகச் சென்ற கலைவாணர் திரு.என்.எஸ்.கிருஷ்ணன்

அவர்களை அந்த மக்கள் சந்தித்து 'நாங்கள் தண்ணீர் கிடைக்காமல் தவிக்கிறோம்' என்று சொன்னார்கள். மனம் இளகி கலைவாணர் திரு. என். எஸ். கே. அவர்கள் தண்ணீர்த்தொட்டி கட்டிக்கொள்ளுவதற்காக பணம் கொடுத்தார்கள். கட்டப்பட்ட தண்ணீர் தொட்டிக்கு நல்ல தண்ணீர் கிடைக்கவில்லை. கிடைத்த தண்ணீர் உப்புத் தண்ணீர். அதுமாத்திரமல்ல, அவர்களுக்குப் போதுமான அளவுக்கு அந்தத் தொட்டியிலே தண்ணீர் நிரப்பப் படுவதற்கு வழி இல்லாமல் போய்விட்டது. இப்பொழுது அந்தக் கிராமத்தில் இருக்கிற அரிசனங்களுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று பஞ்சாயத்து யூனியன் ஒரு தீர்மானம் போட்டு, அதற்காக குழாய்கள் தருவிக்கப்பட்டு, குழாய்கள் போடுவதற்கு பள்ளங்கள் கூட வெட்டப்பட்டன. அந்தத் தண்ணீர் உயர் ஜாதிக்காரர்கள் இருக்கிற இடத்திலிருந்து - அங்கே ஒரு பெரிய தண்ணீர் தொட்டி இருக்கிறது. அந்தத் தண்ணீர் தொட்டியிலிருந்து குழாய்கள் அமைத்து, அந்தத் தண்ணீரை அரிசனங்கள் இருக்கிற இடத்திற்குக் கொண்டு வரவேண்டும். இதை உயர் சாதி இந்துக்கள் எதிர்க்கிறார்கள்; கொண்டுவரக்கூடாது என்று. அங்கே வந்துகூட இவர்கள் தொடப்போவது இல்லை. அவர்கள் தொட்ட தண்ணீரை இவர்கள் தொடக்கூடாது. எவ்வளவு அக்கிரமம்? பயங்கரமான நிலைமை ! அதற்காக அவர்கள் ஒரு 'ஸ்டே' வாங்கினார்கள். அந்த 'ஸ்டே' முறியடிக்கப்பட்டது. அதற்குப் பிறகு உயர் சாதி இந்துக்கள் அமைச்சரை நாடினார்கள். அமைச்சரவையாலே மறுபடியும் 'ஸ்டே' போடப்பட்டது. எதற்கு? உயர்சாதி இந்துக்கள் பயன்படுத்துகிற தண்ணீரை குழாய் வழியாக...

**கனம் திரு. பூ. கக்கன்** : அமைச்சர்அவை இந்த மாதிரி உத்தரவு போடவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(எதிர்க்கட்சித் தரப்பில் ஒரு அங்கத்தினர் : உண்மைக்கு மாறான ஒன்றை அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள்).

**திரு. செ. மாதவன்** : 'ஐாயிண்டு ரெஸ்பான்சிபிலிடி ஆஃப் தி காபினட்' தானே?

**கலைஞர் மு. கருணாநிதி** : அமைச்சர் என்றாலே திரு. கக்கன் என்பது அல்ல. இப்போது நான் குறிப்பிட்டது அமைச்சர் அவையிலே உள்ள மதிப்பிற்குரிய திரு. மஜீத் அவர்களைக் குறிக்கும்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : இதிலே எந்த உத்தரவும் போடவில்லை. 'ஸ்டே' கொடுக்கவேண்டும் என்று பாதிக்கப்பட்ட இரு தரப்பினர்களும் சர்க்காரை அணுகலாம். 'ஸ்டே' கொடுப்பது என்பது சாதாரணமாக நல்லவிதத்தில் தீர்க்கமாக ஆலோசித்து ஒரு முடிவு எடுப்பதற்காகக் கொடுப்பது. அதிலே உத்தரவாக ஒன்றும் போடவில்லை.

**கலைஞர் மு. கருணாநிதி** : நல்லவிதத்தில் யோசித்துக் கொடுத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். யோசிக்காமலா கொடுப்பார்கள்? உயர்சாதி இந்துக்களின் ஓட்டுகள் கிடைக்காமல் போய்விடுமா, கிடைக்குமா என்று தீர யோசித்துத்தான் 'ஸ்டே' கொடுத்திருக்கிறார்கள். இந்தத் தண்ணீர் அரிசனங்கள் இருக்கும் இடத்திலுள்ள தொட்டிக்குக் கொண்டுவரப்பட்டால் ஒரு வேளை அங்கு தண்ணீர் போதாமல் போய்விடுமோ என்ற ஒரு பயத்தின் காரணமாக இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டதா என்றால் இல்லை. இதை ஆராய்ந்த என்ஜீனியர் அழுத்தந்திருத்தமாக சர்டிபிகேட் கொடுத் திருக்கிறார்கள். அரிசனச் சேரிக்குப்போனது போக மேலும் தண்ணீர் கிடைக்கும் என்ற அளவுக்கு 'கபாசிடி' இருக்கிறது என்றுகூட என்ஜீனியர் ஒரு நற்சாட்சிப்பத்திரம் தந்திருக்கிறார். அரிசனங்கள் தொட்ட தண்ணீரை தொட முடியாது என்று சொன்னால் கூட, ஏதோ பழங்காலத்தில் இருந்த பத்தாம்பசலி கொள்கை என்று சொல்லிவிடலாம். உயர்சாதி இந்துக்கள் தொட்டதை இவர்கள் தொடுவது கூட பாவம் என்ற அளவுக்கு குழாய் வைப்பதை அவர்கள் ஆட்சேபிக்கிறார்கள். இந்த நிலைமையிலே எப்படி தீண்டாமையை நாம் ஒழிக்க முடியும்? அரசாங்கம் எப்படி அவர்களுக்கு செவி சாய்த்தார்கள் என்பதைத் தான் நான் இந்த நேரத்தில் மிகவும் வருத்தத்தோடு கேட்கிறேன். கிராமங்களில் உள்ள ஓட்டல்களில் அரிசனங்களுக்கென்று ஒரு தகர குவளை வெளியில் மாட்டப்பட்டிருக்கிறது, அதிலே

அவர்கள் காபி வாங்கிக் கொள்ளலாம், டீ வாங்கிக்கொள்ளலாம் என்ற அளவுக்கு அவர்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இது தீண்டாமையை ஒழிப்பதற்கு எப்படி அடையாளமாகும்? சுடுகாட்டில் கூட தனித்தனி இருப்பது ஏன்? இந்த சுடுகாட்டில் அரிசன பிணங்கள்தான் வேகும் என்ற அளவுக்கு தனித்தனி சுடுகாடுகள் ஏன்? என்றைக்கு ஆண்டவன் சன்னிதானத்தில் அர்ச்சகராக ஒரு ஆதித்திராவிட தோழர் செல்லுகிறாரோ, அன்றைக்குத்தான் இந்த நாட்டில் தீண்டாமை ஒழிந்துவிட்டது என்று பொருள் கொள்ள முடியும். அது மாத்திரமல்ல, தீண்டாமையை ஒழிப்பதற்கு வாரங்கள் நடத்தினால் போதாது, தீண்டாமையை ஒழிப்பதற்கு நாட்களை நடத்தினால் போதாது. நான் ஒன்று சொல்லுகிறேன். அரசாங்கமே ஒரு சட்டம் போடவேண்டும். எந்த ஓட்டலானாலும் சரி - பார்ப்பனர்கள் நடத்துகிற ஓட்டலானாலும் சரி, அல்லது சைவர்கள் நடத்துகிற ஓட்டலானாலும் சரி, அங்கே சர்வராக வேலை செய்வதற்கு 50 சதவிகிதம் அரிசனங்களுக்கு இடம் தந்தால்தான் லைசென்சு கொடுக்கமுடியும் என்று நகர சபை சட்டத்தைத் திருத்துங்கள். அப்படிப்பட்ட நிலைமையில்தான் மனமாற்றம் ஏற்படும். ஏதோ வாரங்கள் கொண்டாடுகின்ற காரணத்தினால், நாட்கள் கொண்டாடுகின்ற காரணத்தினால் இவைகளையெல்லாம் மாற்றிவிட முடியாது. மனமாற்றம் ஏற்படவேண்டும் என்று நான் குறிப்பிட்டேன். அரிசனங்களுக்கு உள்ளே இருக்கிற சாதிப் பிரிவுகளை அவர்கள் அகற்றிக்கொள்ளவேண்டும் என்று திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் எடுத்து உரைத்தார்கள். அரிசனங்களில் சற்று முன்னேறியவர்கள் தாங்கள் அரிசனங்கள் என்று சொல்லக்கூட சில பேர் பயப்படுகிறார்கள். அவர்கள் அந்த நிலைமையிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள வேண்டும். திட்டை ஆர். சுப்பிரமணியம் அவர்களைப் பற்றி குறிப்பிடுகிறேன். உள்ளபடியே சமுதாயத்தில் எந்த அளவுக்கு உயர்ந்திருந்தாலும், எந்த அளவுக்கு சமுதாயத்தில் முன்னேறியிருந்தாலும், அரிசனங்கள் இருக்கிற அந்தச் சேரிக்குள்ளேயே தன்னுடைய வீட்டை அமைத்துக்கொண்டு, அவர்களோடு வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள் அவர்கள். அவர்களுடைய வீடு அந்தக் குடிசைகளை விட பெரியதாக இருந்தாலும் அது வேறு விஷயம். அவர்களின் மத்தியில்

இருக்கிறார்கள் என்ற அளவில், அவர்களில் அவரும் ஒருவர் என்று சொல்லக்கூடிய அளவில் அவர் வாழ்ந்து வருகிறார் என்பதற்காக அவர்களை நான் பாராட்டக்கூட கடமைப் பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலை சமுதாயத்தில் உருவாகவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒன்றே ஒன்று சொல்லுகிறேன். நண்பர் பழனி அவர்கள் பேசுகிற நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார். பொருளாதாரத் துறையில் அரிசனங்கள் உயரவேண்டுமானால், லைசென்சு, பெர்மிட் இவைகளையெல்லாம் வழங்குவதில் அரிசனங்களுக்கு தனிச்சலுகை அளிக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். தனிப்பட்ட சிலரை உயர்த்தத்தான் இது பயன்படும் என்றாலும், தனிப்பட்ட சிலர் வளர்ச்சி சமூக வளர்ச்சியாகாது என்றாலும், பொதுவாக அரிசன சமுதாயத்திற்கு நன்மை பயக்கக்கூடியது அல்ல என்றாலும், இதையாவது இந்த அரசாங்கம் ஒழுங்காக செய்திருக்கிறதா என்பதற்கு ஒரு உதாரணம் அளிக்க விரும்புகிறேன். திருவண்ணாமலையில் முத்து என்ற ஒரு நபர் நெல் அவிக்கிற கூலியாக இருந்தவர் தன்னுடைய உழைப்பால் முயற்சியால் முன்னேறி, அந்த முயற்சியின் வெற்றியில் விளைவாக ரூ. 30,000 செலவில் ஒரு அரிசி ஆலையைக் கட்டினார். ஆலையைக் கட்டினதும் அவர் குடும்பமே காங்கிரசில் சேர்ந்துவிட்டது. அது வேறு விஷயம். ஆலை கட்டியவுடனே லைசென்சு கிடைக்காதோ என்பதற்காகக்கூட சேர்ந்திருக்கலாம். இப்பொழுது ஆறு ஆண்டு காலமாகிறது. இந்த ஆறு ஆண்டு காலத்தில் முத்து அந்த ஆலைக்காக லைசென்சு பெறமுடியவில்லை. ஏனென்றால் அவர் அரிசனத் தோழர். மந்திரியே முயன்றும் கூட கிடைக்கவில்லை என்று கேள்விப்பட்டேன். மந்திரியின் முயற்சிக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதைத்தவிர வேறு வழி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. காங்கிரசுகாரராக இருந்தால் லைசென்சு பெறுவதில் வெற்றி கிட்டியிருக்கும். பாவம், அவர் அரிசனனாகப் பிறந்த காரணத்தினால் அந்த லைசென்சு, ஆறு ஆண்டு காலம் ஆகியும் பெற முடியவில்லை போலும்.

மத்திய சர்க்காரில் கிராமப் போஸ்டு ஆபீசு தொடங்குவதாக இருந்தால், அந்த போஸ்டு ஆபீசு சம்பந்தமாக முதல் சலுகையாகச் செய்வது, அப்ளிகேஷன் போட்டிருக் கிறவர்களைப் பார்த்து, அதில் ஒரு அரிசனர் அப்ளிகேஷன் போட்டிருந்தால் அவரைத்தான் அந்த அஞ்சல்துறை அலுவலராக தேர்ந்தெடுக்கிறார்கள். அதைப்போல மாநில சர்க்காரும் அந்த முறையை வளர்க்க வேண்டும். ஏறத்தாழ இந்த நாட்டிலே இருக்கிற ஆயிரக்கணக்கான கிராமங்களுக்கு கிராம முனிசிபுகள் இருக்கிறார்கள். அந்த இடத்தில் காலி வருகின்ற நேரத்தில், முதல் சலுகை ஆதித்திராவிடருக்குத்தான் தருவது, அரிசன மக்களுக்குத்தான் தருவது என்ற முறை இருக்கவேண்டும். உயர் சாதி இந்துக்களாக இருந்தால்தான் மதிக்கப்படுவார்கள், அடங்குவார்கள் என்ற எண்ணம் இருக்கக் கூடாது. பொது மக்களோடு எங்கெங்கு தொடர்பு கொள்ளவேண்டுமோ அப்படிப்பட்ட எல்லா சட்டங்களிலும் தீண்டாமை ஒழிக்கப்படவேண்டும், சமுதாயம் நல்ல வகையில் வளரவேண்டும், அதற்குப் பாடு படவேண்டும் என்று கருதி இந்த அமைச்சரவை காரியங்களைச் செய்வதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இறுதியாக, அகில இந்திய அரிசன் லீக் மாநாட்டில், திரு. வி.கே. கிருஷ்ண மேனன், ''உலகத்தில் 10 பேருக்கு 4 பேர் பசியால் வாடுகிறார்கள் ; அந்த நான்கு பேரில் ஒருவர் இந்தியர்; அதுபோன்று பத்து இந்தியர்களில் ஒரு 'ஹரிஜன்' பசியால், வறுமையால், வாடுகிறார்'' என்றார்கள். அதே போல, அரிசன நலம் பற்றி ஆராய்ந்த பாராளுமன்றக் குழுத் தலைவர் காங்கிரஸ் உறுப்பினர் திரு. இளையபெருமாள், எம்.பி., ''தங்களுடைய பிள்ளைகளைப் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைக்க முடியாதபடி அரிசனங்களின் பொருளாதார நிலை இருக்கிறது. அதனால் தங்களைப்போலவே தோட்டி வேலை செய்ய பயிற்சி அளிப்பதில் அவர்கள் நம்பிக்கை கொள்கிறார்கள்'' என்று திரு. இளைய பெருமாள் ஒரு அறிக்கையின் மூலம் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இவர் கூற்றுப்படி பார்த்தால், 18 ஆண்டுகள் காங்கிரஸ் ஆண்ட பிறகு, இதற்கென்று ஒரு இலாகாவை தோற்றுவித்து, அரிசன நல இலாகா என்று குறித்து,

பலபேர்கள் எம்.எல்.ஏ.களாக வந்து, பத்தாண்டு காலமாக திரு. கக்கன் அமைச்சராகப் பதவியில் அமர்ந்தும், ஒரு அரிசனச் சிறுவன் மனித மலத்தை, வாளியிலே சுமக்க வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதைப் பார்த்தால், நாகரிகம் உள்ள சமுதாயத்திலே, அறிவுடைய வருங்காலத்திற்கு நாம் என்ன பதில் சொல்லப் போகிறோம். ஆக, ஏட்டில் புள்ளி விவரங்களைப் போடுவதோடு மட்டும் நிற்காமல், அனுபவ ரீதியாக, நடைமுறையில் அரிசனங்களுக்கு, பிற்பட்ட மக்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன், வணக்கம்.



# நிதி ஒதுக்கீடு

**உரை : 19** **நாள் : 29.03.1966**

**கலைஞர் மு. கருணாநிதி** : கனம் துணைத் தலைவர் அவர்களே ஏறத்தாழ ரூ.190 கோடிக்கு, மானியங்கள் பிரிக்கப்பட்டு அந்த மானியத் தொகையை நிதி ஒதுக்கீடு செய்வதற்கு இந்த மன்றத்தின் சம்மதத்தைப் பெற இருக்கிற இந்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துவைக்க விரும்புகிறேன்.

கவர்னர் அவர்கள் உரையாற்றிய நேரத்தில் இந்த மன்றத்தினுடைய இந்தத் தொடர்பு கூட்ட காலத்தில் சில மசோதாக்கள், முக்கியமான மசோதாக்கள் வர இருக்கின்றன என்று அறிவித்தார்கள்.

கவர்னர் அவர்கள் அறிவித்தது வீண் போகாது, நிச்சயம் நிறைவேற்றப்படும் என்ற எண்ணத்தோடு, மதிப்புமிகுந்த ஒரு இடத்திலிருந்து வந்துள்ள அந்த உறுதி நிச்சயம் நிறைவேற்றப்படும் என்ற எண்ணத்தோடு மன்ற உறுப்பினர்கள் அத்தகைய மசோதாக்கள் இந்த மன்றத்தில் வருமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். கூட்டத்தினுடைய தொடர் இன்னும் முடியவில்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் சமாதானம் சொல்லக்கூடும். கூட்டத்தின் தொடர் அடுத்த ஜூலை, ஆகஸ்டு வரை மறுபடியும் நீடிக்கப்படலாம் என்று கூறக்கூடும். கவர்னர் அவர்களுடைய பேருரையில், "தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தை ரத்து செய்து அதற்குப் பதிலாக புதிய சட்டம் ஒன்றை இயற்றுவதற்குரிய விரிவான மசோதா ஒன்று இந்தக் கூட்டத் தொடரில் மன்றத்தின் ஆலோசனைக்கு வரவிருக்கிறது" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அந்த மசோதா இந்த

மன்றத்தினுடைய விவாதத்திற்கு வரவில்லை. ஜூலையில் நடக்கின்ற கூட்டத்தில் வரும் என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களோ என்ற ஐயப்பாடு கூட எனக்கு இருக்கிறது. எனென்றால் இந்த மசோதா வராமலேயே செய்துவிடுவதற்குப் பல்வேறு முயற்சிகள் நகராட்சித் தலைவர்களிடமிருந்து, ஆளுகின்ற தரப்பின் தலைவர்களிடமிருந்து அத்தகைய முயற்சிகள் மெத்த சிரமத்தோடு செய்யப்படுகின்றன என்று எனக்குக் கிடைத்த தகவல்படி தெரியவருகிறது. நான் உள்ளபடியே அஞ்சுகிறேன். முதல் அமைச்சர் அவர்களுடைய புன்னகையிலிருந்து அந்தச் சந்தேகத்திற்கு இடமில்லை என்று, அவர்களுடைய புன்னகை எனக்குத் தெரிவிக்கிறது. அப்படி இருக்குமானால் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மசோதா இந்தத் தொடர் கூட்டத்தில் வருவதற்கான வழிகளை நிச்சயம் இந்த அமைச்சர் அவை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனக்கு முன்பு பேசிய பல நண்பர்கள் எடுத்துக் காட்டியதுபோல, இன்று காலையிலேயே எல்லாரும் வெகு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். இந்த பஞ்சப்படி உயர்வைப் பற்றி அமைச்சர் தெரிவிப்பார் என்று எல்லோரும் சொன்னார்கள். நான் எதிர்பார்க்காத காரணத்தினால் கொஞ்சம் தாமதமாகவே வந்தேன். ஏனென்றால், அதை முதல் அமைச்சர் அவர்கள் காலையிலேயே சொல்லி அதை விவாதத்திற்குரிய ஒரு விஷயமாக ஆக்கிவிடக்கூடிய அளவுக்கு அமைச்சர் அவர்கள் அவ்வளவு கெட்டிக்காரத்தனத்தை விட்டுவிடுபவர் இல்லை. அதைக்கூட பேச்சு ஆரம்பத்தில் சொல்லுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. கடைசியிலே சொல்லலாம். நாடகத்திலே கிளைமாக்ஸ் வருவதுபோல், கையிலே என்னிடம் இருக்கிறது என்ன தெரியுமா? என்று கையை மூடிக்கொண்டு சொல்லுவது போல, பேச்சின் இறுதியிலேதான் குறிப்பிடுவார் என்று கருதுகிறேன். அது எப்படி இருந்தாலும், மனநிறைவு அளிக்கத் தக்க விதத்தில் அமையவேண்டும் என்பதுதான் எங்களுடைய வேண்டுகோளாகும். இப்படிச் சர்க்கார் சிப்பந்திகளுக்குப் பஞ்சப்படியை உயர்த்துவது மாத்திரம் போதுமானாதுதானா என்பதையும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஆராயவேண்டும். அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தை

உயர்த்த வேண்டும். அவர்களுடைய அடிப்படை சம்பளத்தை உயர்த்தினால்தான் சர்க்கார் சிப்பந்திகளுக்கும் நாம் ஒரு நல்ல நீதியை வழங்கியவர்களாவோம். சர்க்கார் சிப்பந்திகளுக்குப் பஞ்சப்படியை உயர்த்துகிற நேரத்தில் நான்காம்தர சிப்பந்திகளுக்கும், கடைநிலை ஊழியர்களாக இருப்பவர்களுக்கும் அது உயர்த்தப்படுமா என்ற சந்தேகம் தோன்றியிருக்கிறது. இப்படி உயர்த்துவதற்கான திட்டம் இல்லாவிட்டால், இடையிலே இருக்கிற சில நிமிஷ நேரத்திலாவது முதல் அமைச்சர் அவர்கள் யோசித்து, சிந்தித்து கடைநிலை ஊழியர்களுக்கும், அரசாங்க சிப்பந்திகளின் வரிசையில் இருக்கிற நான்காம்தர உத்தியோகஸ்தர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்தை அல்லது பஞ்சப்படியை உயர்த்தி அவர்களுக்கு நல்ல நீதியை வழங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நேரம் மிகக் குறைவு விவாதத்திற்கு என்றும், அமைக்கப்பட்ட நாட்களும் மிகக் குறைவு என்றும் குறிப்பிட்டு மன்ற உறுப்பினர்கள் பலராலும் ஆண்டுதோறும் குறிப்பாக எதிர்கட்சியைச் சார்ந்தவர்களால் எடுத்துச்சொல்லப்படுகிறது. அதற்கு அவ்வப்போது முதல் அமைச்சர் அவர்களும் பதிலையும் தருகிறார்கள். பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் அப்படித்தான் தீர்மானித்திருக்கிறோம் என்று கூறுகிறார்கள். பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியிலாகட்டும், இந்த மன்றத்திலாகட்டும் இனிமேலாவது இப்படிப்பட்ட விவாதங்களுக்கு அதிக நேரத்தை ஒதுக்கவேண்டிய ஒரு சூழ்நிலையை இந்த நாட்டை ஆளும் சர்க்கார் உருவாக்க வேண்டும். நான் இந்தச் சர்க்காரை அப்படிச் செய்யவேண்டும் என்று கூறவில்லை, காரணம், அடுத்த வரவு-செலவு விவாதத்தின் போது இந்தச் சர்க்கார்தான் இருக்குமோ என்கிற சந்தேகம் இருக்கிற காரணத்தினால் இந்தச் சர்க்காரை வற்புறுத்த விரும்ப வில்லை. கூட்டுறவுத் துறை பற்றியும் மிக முக்கியமானப் போலீஸ் துறை பற்றியும் அரிசன இலாகா பற்றியும், மருத்துவத் துறை பற்றியும், வருவாய்த் துறைப் பற்றியும் விவசாயத்துறை, உணவுத் துறை இவை பற்றியும், இந்த மன்றத்திலே பல முக்கியமான கருத்துகள் எடுத்துச்சொல்லப்பட்டன. அத்தனைக்கும் அமைச்சர்கள் கூறிய பதில்களில் இழையோடியது எல்லாம் தேர்தல் பிரசாரம், தேர்தல் பிரசாரம் என்ற அளவிலே பதில் இறுத்து

அமர்ந்திருக்கிறார்கள். பிரச்சனைகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் உறுதிமொழியும் கொடுக்கவில்லை சரியான பதிலும் அளிக்கவில்லை. ஆனால் இன்றைக்கு ஆளும் கட்சி அங்கத்தினர் திரு. கோசல்ராம் அவர்கள் ஒரு உண்மையைத் தெரிவித்தார்கள். எங்கள் தரப்பிலிருந்து நண்பர்கள் அழகுமுத்துவும், கிருஷ்ணமூர்த்தியும் ரூ. 25 ஆயிரத்தை செய்தித் துறை, ஜனநாயக சோஷலிஸம் என்கிற பெயராலே, திருவிழா நடத்தி, காங்கிரஸ் தலைவர் காமராஜர் படத்தை வெளியிட்டதைக் குறித்து, ஒரு அரசியல் தலைவர் படத்தை பிரசுரிப்பதில் செய்தித் துறை இலாகா சர்க்கார் பணத்தைச் செலவழிக்கலாமா என்று கேட்டபோது, செய்தித்துறை அமைச்சரோ அல்லது மற்ற அமைச்சர்களோ, அப்பொழுது அதற்குப் பதில் சொல்லவில்லை. ஆனால் இன்றையதினம் நண்பர் கோசல்ராம் அதற்கான பதிலைக் கொடுத்தார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தான் அந்தப் போஸ்டர்களைப் பிரசுரித்தது என்று. அது சரியா, இல்லையா என்ற விவாதத்தில் நாம் இறங்க வில்லை. ஒன்றை மட்டும் சொல்லுவேன். கோசல்ராம் இருக்க வேண்டிய இடத்தில் பூவராகன் இருக்கிறார்கள் (சிரிப்பு) அவர்கள் கொடுத்த பதில் சரியோ தவறோ, அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் அப்படிப்பட்ட விளக்கத்தைக் கொடுக்க அமைச்சர் தவறிவிட்டார்கள். இந்த வகையில் அமைச்சர் நடந்துகொண்டால், நாங்கள் இந்த மன்றத்திலே நல்ல தகவல்களை எப்படிப் பெறமுடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். கூட்டுறவுத் துறையில் எவ்வளவு அநியாயங்கள் நடைபெறுகின்றன என்பதைப் பற்றி எங்கள் கட்சி சார்பில் அத்தனை பேர்களும் எடுத்துச்சொன்னார்கள். நண்பர் அரங்கண்ணல் பேசும்போது, இந்த மாநிலத்தில் இருக்கிற பெரிய பெரிய நிறுவனங்களெல்லாம் காங்கிரஸ் கட்சிக்காரர்களைச் சேர்ந்தது என்றும், அப்படிப்பட்ட நிறுவனங்களிலெல்லாம் காங்கிரஸைச் சேர்ந்த பெரும் புள்ளிகளே இடம்பெற்று இருக்கிறார்கள் என்றும் எடுத்துக்கூறியபோது அமைச்சர் மன்றாடியார், அவர்களெல்லாம் அந்த அளவுக்கு யோக்கியர்கள், தகுதி உள்ளவர்கள், அவற்றில் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஆளும் கட்சி தேர்தலை மனதில் கொண்டு, இப்படிப்பட்டவர்கள் கூட்டுறவுத் துறையில் இருந்தால், இந்த பெரிய மனிதர்கள் தயவால், இவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும்

சுட்டுறவு நிறுவனங்களில் இருந்தால், இந்தப் பெரும் புள்ளிகள் இருப்பதால், இவர்கள் இவர்களுடைய ஏஜெண்டுகள் வழியாகக் கிராமங்களில் கடன் வசதி போன்ற பணத்தைக் கொடுத்தால், தேர்தல் நேரத்தில் இவற்றைச் சலுகைகளாக்கி, பெறுபொருள் ஆக்கி, ஒட்டு மொத்தமாக 300, 400 என்று வாக்குகளை, ஒட்டு மொத்தமாக 500, 1,000 என்று வாக்குகளை ஆளுகின்ற காங்கிரஸ் கட்சிக்குப் பெறுவதற்குப் பயன்படுகிறது அல்லாமல், இதில் யோக்கியதாம்சம் இருக்கிறதா, இல்லையா என்கிற விவாதம் தேவையில்லை என்று கருதுகிறேன்.

பின்தங்கிய பகுதிகளைப் பற்றி இந்த மன்றத்திலே 4, 5 தடவைகளுக்கு மேல் எடுத்துச்செல்லப்பட்டிருக்கிறது. நிதி நிலை அறிக்கை மீது நடந்த பொது விவாதத்தின்போதே புதுக்கோட்டை, கிழக்கு ராமநாதபுரம், அறந்தாங்கி போன்ற பகுதிகளை பின்தங்கிய பகுதிகளாக்க வேண்டும் என்ற கோரிக்கை பாராளுமன்றத்திலே, கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் திரு. உமாநாத் அவர்களால் கேட்கப்பட்டு, திட்ட மந்திரி திரு. பகத் அவர்கள், எல்லா மாநிலங்களிலிருந்தும் அதைப்பற்றித் தகவல்கள் வந்திருக்கின்றன. உத்திரபிரதேசத்திலிருந்து வந்திருக்கிறது. ரூ. 10 கோடி அளவில் அந்தப் பிரதேசத்தில் செலவழிக்க நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம் என்று குறிப்பிட்டுவிட்டு, தமிழக அரசு அப்படிப்பட்ட தகவல்களைத் தரவில்லை என்கிற பதிலை அளித்திருக்கிறார்கள். அதைவைத்து நான் நம்முடைய முதல் அமைச்சரைக் கேட்டேன். ஆனால் அவர்கள் தன்னுடைய உரையிலேயே அதைப் பற்றி விளக்கம் சொல்லவில்லை. நண்பர் கலியாணசுந்தரம் அவர்களும் அவசரப் பிரேரணைமீது பேசும்போது அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். உள்ளபடியே என்ன நிலைமை? வேதனையாக இருக்கிறது. 1962-ம் ஆண்டு திட்டக் கமிஷன் எந்த அடிப்படையில் இதைப் பின்தங்கிய பகுதி அல்லது பின்தங்காத பகுதி என்று நிர்ணயிக்கிறார்கள் என்றபோது, பிளாக்கு அடிப்படையில் அதை முடிவு செய்யலாம் என்று பதில் அளிக்கப்பட்டது. பிளாக்கள் ஏ., பி., ஸி., டி., என்று தரம் வாரியாக பிரிக்கப்பட்டது. அந்த முறையில் ஆராய்ச்சி நடைபெற்றது. 375 பிளாக்குகளில் நடைபெற்ற ஆராய்ச்சியில் முடிவு எடுத்ததில் வித்தியாசங்கள் இருந்தன. ஒரே அளவை வைத்துப் பின் தங்கிய

பகுதி அல்ல என்று குறிப்பிட்ட பல வித்தியாசங்கள் இருக்கின்றன என்று புள்ளி விவர டைரக்டர் சுட்டிக்காட்டினார். சுட்டிக்காட்டி, தாலுகா வாரியாக விவரம் சேகரிக்க வேண்டும் என்றார். தாலுகா வாரியாக விவரம் சேகரிக்கும்போது திட்டக் கமிஷனிடமிருந்து அவசரச்செய்தி ஒன்று வந்தது. நான்காவது திட்டம் தயாரிப்பதற்குள்ளாக, இந்தத் தகவல்கள் தரவேண்டுமென்று. ஆகவே ஜில்லா அளவிலே, பொது விவரங்கள், மருத்துவ மனைகள் எவ்வளவு, சாகுபடியாகும் நிலங்கள் எவ்வளவு, இப்படிப்பட்ட விவரங்களை ஜில்லா மட்டத்தில் எங்களுக்கு வழங்குங்கள் என்று கேட்டார்கள். அதையும் நான்காவது திட்டம் தயாரிப்பதற்கு முன் கொடுத்தாக வேண்டும் என்று குறிப்பிட் டார்கள். உடனே பழைய முயற்சிகளெல்லாம் கைவிடப்பட்டன. மறுபடியும் அந்த வேலை தொடங்கப்பட்டது. அப்பொழுது புள்ளி விவர டைரக்டர் குறுக்கிட்டு, அது சரியில்லை என்று ஒரு வாதத்தை எழுப்பினார்கள். கோவை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், பின்தங்கிய மாவட்டம் என்று குறிப்பிட முடியாது. ஆனால் கோவையிலேயே பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன. ஆகவே தாலுகா வாரியாக எடுக்கப்படவேண்டும் என்று தன்னை குழப்பிக்கொள்ள ஆரம்பித்தது. நீங்கள் தாலுகா வாரியாக விவரம் அளிக்கும்வரை எங்களால் காத்திருக்க முடியாது என்று திட்டக் கமிஷன் அறிவித்த பிறகு. அவர்களுடைய நிலைக்கும் நம்முடைய முடிவுக்கும் ஒவ்வாமல் குழப்பங்களுக்கு இந்தச் சர்க்கார் ஆளாகிவிட்டது என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. சர்க்கார் ஏன் தைரியமாக ஒரு முடிவு எடுக்கக் கூடாது? மாநிலத்தின் நிலையை எடுத்துக் கூறியிருக்கக் கூடாது? மாநிலத்திற்கும் மாநிலத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. உத்திரபிரதேசத்திற்கும், தமிழகத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. எவ்வளவு ஒருமைப்பாடு என்று பேசினாலும், தனிக் கலாச்சாரம், தனிப் பண்பு, தனியாக நில அமைப்புகள், தனியாக கல்வி முறை என்று இவற்றிலெல்லாம் வேறுபாடுகள் இருக்கின்றன. அந்த நிலையில், தமிழகத்தின் கோரிக்கையை நீங்கள் ஏற்றுகொள்ள வேண்டும் என்று திட்டக் கமிஷனுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய தைரியத்தையும் துணிவையும் இந்த அமைச்சரவை பெறவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரிசன நல இலாகா பற்றிப் பேசும்போது, முக்கியமாக அரிசனங்களுக்கு உதவிகள் கொடுப்பது பற்றி, கடன் வசதிகள், நில ஆர்ஜிதம் செய்வது, வீட்டு மனை கொடுப்பது போன்ற பிரச்சனைகளைப் பற்றிக் குறிப்பிடும் போது, மிக முக்கியமான தான தீண்டாமையை எப்படியும் ஒழித்தாக வேண்டும் என்று எதிர்க் கட்சி தரப்பிலிருந்தும். ஆளும் கட்சியிலிருந்தும் அதிகமாக எடுத்துச் சொல்லப்பட்டது. பல உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியதை நானும் சுட்டிக்காட்டினேன். திருச்சி மாவட்டத்தில் இருக்கின்ற ஒரு கிராமத்தில் லால்குடி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த மகிழம்பாடி என்ற கிராமத்தில் ஜாதி இந்துக்கள், அரிசனங்களுக்குத் தண்ணீர் தர மறுக்கிறார்கள். அரிசனங்கள் தண்ணீர் எடுக்கும் குழாய்களுக்குத் தண்ணீர் போவதை ஜாதி இந்துக்கள் தடுக்கிறார்கள் என்றும் அந்த அளவில் ஸ்டே வாங்கி, இன்றைக்கு ஸ்டேயும் கான்ஸல் செய்யப்பட்ட பிறகு, இன்றைக்கு இந்த அமைச்சரவை ஜாதி இந்துக்களுக்கு உடந்தையாக இருந்து, தடுத்து நிறுத்தியிருக்கிறது என்றால் அது ஸ்டேயா அல்லது உத்தரவா என்று புரியவில்லை என்ற அளவுக்குச் சமாளிப்புகள் சொல்லப் பட்டிருக்கின்றன. உள்ளபடியே நிலைமை என்ன? ஜாதி இந்துக்கள் ஆதிதிராவிட சகோதரர்களுக்குத் தண்ணீரைத் தடுக்கும் அளவுக்கு தீண்டாமை உச்ச கட்டத்தை, பயங்கரமான நிலையை அடைந்து, அதற்கு இந்தச் சர்க்கார் ஆதரவு தருகிறது என்றால் தீண்டாமை ஒழிப்பில் இந்தச் சர்க்காருக்கு எவ்வளவு நிறைந்த நம்பிக்கை இருக்கிறது என்று நான் சந்தேகப்படுகிறேன்.

மருத்துவம், சுகாதாரம் பற்றியும், அதற்காக ஒதுக்கப்படுகிற பணம் ஒழுங்காகச் செலவழிக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். வேறு மற்றக் காரியங்களுக்காகச் செலவழிக்கப்படுகிற பணம் ஒழுங்காகப் போய்ச் சேருகிறதா என்று பார்ப்பது எவ்வளவு அவசியமோ அதைவிட ஆயிரம் மடங்கு அவசியம் இந்த மருத்துவ, சுகாதாரத் துறைக்காக ஒதுக்கப்படுகிற பணம் ஒழுங்காகப் போய்ச் சேருகிறதா என்பதைக் கவனிக்க வேண்டியது. அதிலும் நான் தொடக்கத்திலே ஒன்று கூற விரும்புகிறேன். வெள்ளைக்காரர்களுடைய காலத்திலே இருக்கிற பழையமுறைகள் இரண்டு இன்னும் நம்முடைய சர்க்காரை விட்டுப் போகவில்லை. அதாவது

இருபது ரூபாய்க்கு மேல் என்றால் எப்படியும் ஸ்டாம்ப் ஒட்டியாக வேண்டும் என்று இருப்பதும். நூறு ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறுகிறவர்கள் ஆஸ்பத்திரியிலே இலவச அனுமதி பெற முடியாது என்பதும் வெள்ளைக்காரன் காலத்திலிருந்து இந்தச் சர்க்காருடைய காலம் வரையிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிற காரியமாக இருக்கிறது. 100 ரூபாய்க்கு மேல் பெறுகிறவர் யாராயிருந்தாலும், ரூ. 101, ரூ.110 சம்பளம் பெற்றாலும் மருத்துவ மனைகளுக்குச் செல்லுகிற நேரத்தில் இலவசமாக அனுமதிக்கப்படமாட்டார்கள். நான் சொல்வதைக் குறித்து மற்ற உறுப்பினர்கள் வருத்தப்படமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ரூ. 250 சம்பளம் பெறுகிற சட்டமன்ற உறுப்பினருக்குக் கூட மருத்துவமனைகளில் இலவச அனுமதி இருக்கிறது. அரசாங்க ஊழியர்களுக்கு மருத்துவமனைகளில் இலவச அனுமதி இருக்கிறது. இவர்களுக்கெல்லாம் மருத்துவ மனைகளில் இலவச அனுமதி இருக்கிறது. இவர்களுக்கெல்லாம் வேண்டாம் என்று நான் சொல்லவில்லை, இவற்றைச் சுட்டிக்காட்டுகிறேன். ரூ. 250 சம்பளமாகப் பெறுகிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வேறு அரசாங்க ஊழியர்களுக்கும் இலவச அனுமதி மருத்துவ மனையில் இருக்கிற நேரத்தில், ரூ. 100-க்கு மேல் சம்பளம் பெறும் யாராயிருந்தாலும் அவர்களுக்கு இலவச அனுமதி கிடையாது என்று இருக்கும் முறை வெள்ளைக்காரன் காலத்திலிருந்து தொடர்ந்து வருகிற முறை, அந்தக் காலத்திலேயே 100 ரூபாய் என்று வைத்திருந்தார்கள். அந்தக் காலத்தில் பத்து ரூபாய் என்றால், இந்தக் காலத்தில் அப்படி அல்ல. ஆகவே, இந்த காலத்திலே 100 ரூபாய் என்று இருப்பதை ரூ. 200 அல்லது ரூ. 250 என்ற அளவிலே ஆக்கவேண்டும் என்று நான் இந்த மானியம் நிறைவேறுகிற நேரத்தில் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

ஒழுங்காக இந்தப் பணம் செலவழிக்கப்படவில்லை என்பதற்கு மருத்துவமனைகளில் காண்கிற நிலைமை மிகக் கண்கூடு. மருத்துவமனைக்கு சென்றால் எத்தனை நோயாளிகள் படுக்கவேண்டிய கட்டிலில் படுத்திருக்கிறார்கள்? ஏதோ திருவிழாவிற்கு வந்திருப்பவர்கள் படுத்திருப்பதுபோல, சத்திரத்தில் படுத்திருப்பவர்கள்போல, நடந்துபோகிற நேரத்தில் கவனக்

குறைவாகச் சென்றால் நோயாளிகள் மீது தடுக்கி, இன்னொரு நோயாளி மீது விழுந்து செல்லக்கூடிய அளவிற்கு, வழியிலேயே படுக்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். கட்டிலுக்குக் கீழே படுக்க வைக்கப்பட்டிருக்கிறார்கள், இவ்வளவு பணம் ஒதுக்கியும் இந்தப் பணம் எல்லாம் ஏன் ஒழுங்காகச் செலவழிக்கப்படவில்லை?

சென்னையில் இருக்கிற ஜெனரல் ஆஸ்பத்திரி பெரியவர்கள், மந்திரிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள் இவர்களுக்கு நோய் வந்து அடிக்கடி அங்கே போகிற காரணத்தால் ஓரளவு நம்முடைய பார்வையில் படுகிற மருத்துவமனையாக இருக்கிறது. அதைப்போன்ற ஒரு பெரிய மருத்துவமனை ஸ்டான்லி ஆஸ்பத்திரியாகும். அது சென்னை நகரின், வேறொரு பகுதியில் இருக்கிறது. அந்த மருத்துவமனையில் குழந்தைகளுக்காக "வெலிங்டன் வார்டு" என்று ஒரு வார்டு இருக்கிறது. அந்த வார்டுக்குள்ளே குழந்தையைத் தூக்கிக்கொண்டு போகும்போது, கையோடு ஒரு துடைப்பத்தையும் எடுத்துக் கொண்டு போகவேண்டும். ஒட்டடை அடித்துவிட்டுச் சென்றால்தான் உள்ளே நுழையலாம். அத்தகைய பழங்கால இருட்டுக்குகை, அந்த வெலிங்டன் வார்டில், சென்ற வியாழக்கிழமையன்று எட்டுக் குழந்தைகள் செத்திருக்கின்றன. இந்த எட்டுக் குழந்தைகள் செத்த அவ்வளவு மிக முக்கியமான நாள் அன்று எந்த டாக்டரும் அன்றையதினம் அந்த வார்டுக்கு வரவே கிடையாது. எவ்வளவு பெரிய கொடுமை! எட்டுக் குழந்தைகள் செத்த கணக்கை எப்படி ஆக்கியிருக்கிறார்கள்? செத்துப்போன பிறகு அந்தத் தாய்மார்களை அழைத்து, அங்கே உள்ள சிப்பந்திகள், "இங்கே செத்ததாக நீ சொன்னால், குழந்தைகளைப் பிரேதக் கிடங்குக்கு அனுப்பி, அதனுடைய தலை, கை, கால் வேறாக எடுத்துப் பிரேத பரிசோதனைக்குப் பிறகுதான் தரவேண்டியிருக்கும். ஆகவே , செத்துப் போய்விடும் என்று தெரிந்து நாங்களே வலிய, பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டு போய்விட்டோம் என்று எழுதிக் கொடுத்துவிட்டுப் போங்கள்" என்று அந்தத் தாய்மார்கள் மிரட்டப்பட்டு, அந்தக் குழந்தைகள் வெளியே எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இவ்வளவும் ஸ்டான்லி ஆஸ்பத் திரியிலே, அமைச்சர்கள் வாழ்கிற சென்னை மாநகரத்தின் ஒரு பகுதியிலே இருக்கிற ஒரு மருத்துவமனையிலே நடைப்பெற்றி ருக்கிற காரியமாகும்.

செலவழிக்கப்படுகிற பணம் பெரும்பாலும் கட்சி ஆதரவுக்காகத் தான் செலவழிக்கப்படுகிறது என்பதற்குப் பல மேற்கோள்கள் இங்கே எடுத்துக்காட்டப்பட்டன. எங்கள் கட்சியின் சார்பில் புலவர் கோவிந்தன் அவர்கள் பேசுகிற நேரத்தில் ஒன்று சொன்னார்கள். லைப்ரரி புத்தகங்களை ஒதுக்குவதிலேகூட கட்சி நிலைமை தாண்டவம் ஆடுகிறது. அதை நிச்சயமாக யாரும் மறுக்க முடியாது. ஒரு புத்தகத்தைச் சொன்னார், மூன்று ரூபாய் என்று விலை போடப்பட்ட புத்தகம் லைப்ரரி பதிப்பு என்றால் ஐந்து ரூபாய் ஆகிறது என்று முதல் அமைச்சர் பதிலளிப்பார். லைப்ரரி பதிப்பு, நூல் நிலையப் பதிப்பு, அழகான பதிப்பு, அதற்குப் போடப்பட்ட தாள் விலையுயர்ந்த தாள் என்றெல்லாம் சொல்லுவார். நான் அந்த இரண்டு புத்தகங்களையும் இங்கே காட்சிக்குக் கொண்டு வந்திருக்கிறேன். "விடுபட்ட கிளிகள்" என்பது புத்தகத்தின் பெயர். ஆசிரியர் பற்றிக் கவலை இல்லை. ''வின்ஸெண்ட்'' என்று போட்டிருக்கிறது. 'விடுபட்ட கிளிகள்'' என்ற புத்தகத்தை ''வின்ஸெண்ட்'' என்பவர் எழுதியிருக்கிறார். அவரே தான்-வின்ஸெண்ட் அவர்களே தான்-வேறு வின்ஸெண்ட் அல்ல-ஏனென்றால், அவருடைய போட்டோ இருக்கிறது.-அவரேதான் இந்தப் புத்தகத்தையும் எழுதியிருக்கிறார். இந்தப் புத்தகத்திலும் 227 பக்கங்கள். இந்த இன்னொரு புத்தகத்திலும் 227 பக்கங்கள் (இரண்டு புத்தகங்களையும் கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் காண்பித்தார்கள்) இந்தப் புத்தகத்தின் விலை மூன்று ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. தமிழ் பண்ணை வெளியிட்ட இந்தப் புத்தகத்தின் விலை ஐந்து ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. வெளியிட்டவர் "கருணாநிதி"-நான் அல்ல. சின்ன அண்ணாமலையினுடைய பையன். சின்ன அண்ணாமலை அவர்களின் நூல் பதிப்புக் கழகம்தான் என்பதற்கு அடையாளம் இருக்கிறது. "என்னுடைய பதிப்பகத்தின் சார்பில் வெளியிடுகிற நூல்" என்று சொல்லி வேறொரு நூலுக்கு சின்ன அண்ணாமலை அவர்கள் முன்னுரை எழுதியிருக்கிறார்கள். நம்முடைய கனம் அமைச்சர் திரு. கக்கன் அவர்களுடைய திருவுருவம் ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட புத்தகங்கள் மாணவர்களை நல்ல பாதைக்கு அழைத்துச் செல்லுகிற புத்தகங்களாக இருக்க வேண்டுமா? புலவர் கோவிந்தன் அவர்கள் இப்படிப் பேசினாரே என்று மதிப்புமிக்க செல்வராஜன் அவர்கள்

மிக்க ஆதங்கப்பட்டுக் கொண்டார்கள். இந்தப் புத்தகங்களில் என்ன கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன? இந்தச் சர்க்கார் ஐம்பதாயிரம் ரூபாய்க்குச் சின்ன அண்ணமலைப் பதிப்பு பூராவையும் வாங்கத் திட்டமிட்டு, அநேகமாக இன்றோ நாளையோ அதற்கான சாங்ஷன் கையெழுத்து போடப்படக்கூடிய நிலை இருக்கிறது. அந்தப் பதிப்பகத்திலிருந்து வருகிற மாணவர்கள் படிக்கின்ற அல்லது லைப்ரரியில் இருக்கும் புத்தகம் ஒன்றிலுள்ள வாசகங்களை இங்கே படிக்கக்கூட அச்சப்படுகிறேன். ஆனால் படிப்பது முக்கியம் என்ற காரணத்தால் படிக்கிறேன்.

> "என் மனைவி என்னைக் காதலிக்கிறாள் என்று எந்த முட்டாள் எண்ணுகிறானோ அவன் கூண்டுப்பறவைபோல் என்றென்றும் தன் மனைவிக்கு அடிமையாவான்.

இது ஒரு பொன்மொழி!

சமதர்மம், தீண்டாமை ஒழிப்பு இவைகளுக்காக லட்சக்கணக்காகச் செலவழிக்கிற இந்தச் சர்க்கார் எந்தப் பதிப்பகத்தை, எப்படிப்பட்டவர்களை ஆதரிக்கிறது என்பதற்கு அடையாளமாக இதோ இன்னொரு பொன்மொழி!

> "பிராமணனும், குழந்தையும், பெண்ணும்' சந்நியாசியும், நோயாளியும் கொல்லத் தகாதவர்கள். அவர்கள் பெரிய குற்றம் புரிந்தால் அதற்குத் தண்டனை அங்கஹீனம்தான்!"

இது தீண்டாமை ஒழிக்கிற, சமதர்மத்தை நிலைநிறுத்துகிற இந்த சர்க்கார், 50 ஆயிரம் ரூபாய் செலவழித்து வாங்க இருக்கிற புத்தகத்தில் இருக்கிறது. இந்தப் புத்தகங்களுக்கு லைப்ரரிக்கென்று ஒரு விலை வெளியே இதற்கென்று ஒரு விலை மூன்று ரூபாய் , ஐந்து ரூபாய் என்று இப்படிப்பட்ட மோசடியை இந்தச் சர்க்கார் அனுமதிக்கிறது என்றால் இதிலே மக்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? ஜனநாயகத்திற்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? நேர்மைக்கு, நாணயத்திற்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? என்றுதான் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றும் குறிப்பிட விரும்புகிறேன். கால்நடை மருத்துவக் கல்லூரி என்று ஒரு கல்லூரி இருக்கிறது. அந்தக்

கல்லூரியில் பாஸ் செய்த பையனை "நீ தேர்வில் தோல்வி அடைந்துவிட்டாய்' என்று சொல்லி விட்டார்கள். 53 மார்க் வாங்கிய மாணவரைப் பார்த்து, "நீ 43 மார்க்தான் வாங்கியிருக்கிறாய்" என்று சொல்லி "ஆகவே, தோல்வி அடைந்து விட்டாய்" என்று அவனை அனுப்பிவிட்டார்கள். அந்த மாணவர் யுனிவர்ஸிட்டிக்கு எழுதி மார்க் எல்லாம் வந்தது. அந்த மாணவன் பெயர் புருஷோத்தமன். அவர் வாங்கியிருக்கிற மார்க் 53 என்று இருக்கிறது. அவர் அதை போட்டோ எடுத்து வைத்துக்கொண்டு, உடனே கால்நடை மருத்துவக்கல்லூரிக்குச் சென்றார். "இதோ பாருங்கள் 53 மார்க் வாங்கியிருக்கிறேன். ஆனால் நான் தோல்வி அடைந்ததாகச் சொல்லிவிட்டீர்கள்? இது என்ன அக்கிரமம்?" என்று கேட்டார். மூன்று மாதம் கழித்து "ஆமாம் நீ பாஸ் செய்துவிட்டாய்" என்று அறிவிக்கப்பட்டு அவருக்கு இன்றைய தினம் அனிமல் ஹஸ்பண்டிரி டிபார்ட்மெண்டில் வேலை கிடைத் திருக்கிறது. அவர் பாஸ் செய்ததாக முன்பே அறிவிக்கப்படாததால் மூன்று மாத காலத்தில் அவர் பெற வேண்டிய சம்பளம் அவருக்கு நஷ்டமாகி இருக்கிறது. வேறு பல முன்னேற்றத் துறைகளில் சென்றிருக்க வேண்டிய இந்த மூன்று மாத காலம் பின்னுக்கு இழுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் நாம் ஒதுக்குகிற பணம் அக்கறையற்ற தன்மையில், கவனிப்பாரற்ற தன்மையில் போய்க்கொண்டிருக்கிறது என்பதற்காகத்தான் இதை எடுத்துச் சொல்ல விரும்பினேன்.

மாநகராட்சி மன்றத்தைப்பற்றி இந்தச் சபையில் வெகுவாகப் பேசப்பட்டது. நான் வேறு பல பிரச்சனைகளையெல்லாம் தள்ளி வைத்துவிட்டு அதை மாத்திரம் இங்கு பேசி என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். மநகராட்சி மன்றத்தில் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை அவர்கள் சரிவர செலவு செய்கிறார்களா? என்று அனந்த நாயகி அம்மையார் அவர்கள் கேட்டார்கள். காங்கிரசுக்காரர்கள் மநகராட்சி நிர்வாகத்தில் இருந்தபோது இருந்த உயர்நிலைப் பள்ளிகள் இரண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நிர்வாகத்திற்கு வந்த பிறகு 16 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. 1962-63-ல் ஐந்து உயர்நிலைப் பள்ளிகளுக்கு சர்க்கார் சாங்க்ஷன் கொடுத்தார்கள். மூன்று ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கவேண்டும் என்று 11 லட்ச ரூபாய்

அதற்காகக் கொடுத்தார்கள். 11 லட்ச ரூபாய் வழக்கப்பட்டு, மூன்று ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்ட அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு டி.பி.ஐ ஆலோசனையோடு சீஃப் இன்ஜினீயருடைய அங்கீகாரம் வரவேண்டும். ஆனால், அந்த அங்கீகாரம்-சீஃப் இன்ஜினீயருடைய அங்கீகாரம்-எப்பொழுது வந்தது? சீஃப் இன்ஜினீயர் என்பவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எந்தக் கிளையிலோ உறுப்பினர் அல்ல. அவர் அதிகாரவர்க்கத்தைச் சேர்ந்தவர். அந்த சீஃப் இன்ஜீனியர் 1965 நவம்பர் மாதத்தில் ஒரு பள்ளிக்கூடத்திற்கு அங்கீகாரம் அளித்திருக்கிறார். 1965 டிசம்பரில் ஒரு பள்ளிக்கூடத்திற்கு அங்கீகாரம் அளித்திருக்கிறார். நிலைமை இப்படியிருக்கும்பொழுது 1966-க்குள் எப்படி கட்டி முடிக்கமுடியும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். 11 லட்ச ரூபாய் ஒதுக்கியது. உண்மை, ஐந்து பள்ளிகளுக்கு என்று ஒதுக்கப்பட்டது உண்மைதான். ஆனால் இரண்டு பள்ளிகளுக்குத்தான் டி.பி.ஐ உடைய ஆலோசனையுடன் சீஃப் இன்ஜினீயரின் அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. கார்ப்பரேஷனுக்கு ரோடு பராமரிப்புக்கு 3,64,843 ரூபாய் கொடுத்திருக்கிறோமே என்று சொன்னார்கள். கொடுக்கிற தொகை பெரும் தொகைதான். ஆனால் கார்ப்பரேஷன்தான் வைத்திருக்கின்ற வாகனங்களுக்காகச் செலுத்தப்படுகிற வரி 4,28,977 ரூபாய் என்பதையும் மறந்துவிடக்கூடாது. ஒதுக்கப்பட்ட பணம் திருப்பிவிடப்பட்டது. காரணம், செலவழிக்க முடியவில்லை என்பதல்ல என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1965-ஆம் ஆண்டில் ஜூன் மாதத்தில் 4.50 லட்ச ரூபாய் திருப்பித் தரப்பட்டது. ஒரு தொத்துநோய் ஆஸ்பத்திரி தென் சென்னையில் அமைக்க வேண்டுமென்பதற்காக 4.50 லட்ச ரூபாய் தரப்பட்டது. உண்மைதான். ஆனால், அந்த தொத்துநோய் ஆஸ்பத்திரியை அமைப்பதற்கான இடம் தென் சென்னையிலேயே கிடைக்கவில்லை. ஹவுஸிங் போர்டு வேண்டுமானால் இடத்தை அதற்காகத் தந்திருக்கலாம். ஆனால் மநகராட்சி எங்கே இடவசதியைத் தோற்றுவிக்க முடியும்? ஆகவே இடம் கிடைக்காத தால்தான் திருப்பித் தந்தார்கள். திருப்பித்தந்தது குற்றமெனக் கருதுகிறார்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை., 1965-ஆம்

ஆண்டிலே 1.40 லட்சம் திருப்பித் தரப்பட்டது. கம்போஸ்டு உரம் தயாரிப்பதற்காக அந்தப் பணம் ஒதுக்கப்பட்டது. ஆனால் அதற்கும் நிலம் கிடைக்காத காரணத்தால் அதுவும் திருப்பித் தரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதேபோல் 1964-ஆம் ஆண்டில் ஆகஸ்டு மாதத்தில் ஏறத்தாழ 4 லட்ச ரூபாய் திருப்பித் தரப்பட்டது. அந்தத் தொகை சென்ட்ரல் ஸ்டேஷன் அருகே சப்வே கட்டவேண்டுமென்பதற்காகத் தரப்பட்டது. அது கட்டப்படாததற்குக் காரணம், பூந்தமல்லி ஹைரோடைச் சர்க்காரே எடுத்துக்கொண்ட காரணத்தாலே அதிலே மாநகராட்சி தலையிட்டுக் கட்ட முடியாது என்பதற்காகத்தான் திருப்பித் தரப்பட்டது. அதேபோல் மவுண்ட்ரோடில் ஒரு சப்வே கட்டுவதற்காக 5 லட்ச ரூபாய் பெறப்பட்டது. மவுண்ட் ரோடையும் சர்க்காரே எடுத்துக்கொண்ட காரணத்தால் அதற்காக ஒதுக்கப்பட்ட பணமும் திருப்பித்தரப்பட்டது. இதேதான் நிலைமையே தவிர வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப்பற்றிய ஒரு குறிப்பையும் படித்துக்காட்டுவது நல்லது என்று நினைக்கிறேன்.

"சென்னை நகரத்திற்கு இன்னொரு சாபம், இங்கே ஓடுகிற பஸ்களை அரசாங்கம் நடத்துகிறது. மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்சேஷன் இருப்பதால் இந்த பஸ்களைத் தனியார் நடத்திவந்தால் அவர்களிடம் வரிப்பணத்தை வாங்குவோம். பஸ்களை தேசிய மயமாக ஆக்கியிருப்பதால், இதிலே வரிப்பணத்தை நகராண்மைக் கழகத்திற்குக் கொடுக்காமல் வீதிகளை மட்டும் நன்றாக வைத்துக்கொள்ள வேண்டுமென்றால் எப்படி முடியும்? இப்படி மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸேஷனில் எங்களுக்குக் கிடைக்கவேண்டியது 67 லட்சம். ஆனால் கிடைப்பது 5 லட்சம் ரூபாய். நல்ல சாம்பாருக்கு வாசனைக்காக ஒரு பெருங்காயத் துண்டைப்போடுவதுபோலக் கொடுக்கிறார்கள். அவர்கள் கொடுக்கக்கூடிய பணத்தைக்கொண்டு நகரிலுள்ள எல்லாச் சாலைகளையும் எப்படிப் பராமரிக்க முடியும்? அப்படி பராமரிக்க முடியவில்லையென்றால் கெட்ட பெயர் வாங்கிக்கொள்ளட்டும்., வாங்குவது நகரசபைதானே, நமக்கு என்ன என்ற முறையில் இருக்கிறார்கள். இதைப்பற்றி பல ஆண்டுகளாக நகராட்சி அங்கத்தினர்கள் எடுத்துச்சொல்லியும், அங்கத்தினர்கள்

தூதுக்குழு அமைத்து அமைச்சரைக் கண்டு அதிகமாக ஒதுக்குங்கள் என்று கேட்டபோதிலும், அதைப்பற்றி காதிலேயே வாங்கிக்கொள்ளாமல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் மாற்றாந்தாய் குணத்தை ஏன் எங்களுக்குக் காட்டுகிறீர்கள் என்று நான் கேட்கிறேன்." இப்படி பேசியது 1959-ஆம் ஆண்டு மார்ச்சு 25-ம் தேதி மதிப்பிற்குரிய அனந்தநாயகி அம்மையார். காங்கிரஸ்காரர்கள் மநாகராட்சி மன்றத்தில் இருந்த நேரத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் பேசியதைப் போலவே நான் இப்பொழுது பேசுகிறேன். இன்னொரு முறை நண்பர் திரு. மதியழகன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், அமைச்சர் மஜீத் அவர்கள் பதிலளிக்கும்பொழுது எந்த எந்த வருமானங்களுக்கு நாங்கள் மாநகராட்சி மன்றத்திற்குக் குறுக்கீடாக இருக்கிறோம் என்று கேட்டார்கள். பஸ் துறையிலே வருகின்ற வருமானம் மாநகராட்சிக்குச் சொந்தமாக வேண்டுமென்று கேட்கப்பட்டது. யாத்ரிகர்களுக்கு வரி வசூலிக்கப்படுவதை மாநகராட்சிக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்கப்பட்டது. வருமானத்தைப் பெருக்கிக்கொள்கிற காரியத்தை சர்க்கார் அங்கீகரிக்கவில்லை. தடுத்துவிட்டது. சினிமாக்களில் சர்சார்ஜ் மாநகராட்சிக்காக வசூலிக்கப்பட்டு அதிலே 10 சதவிகிதம் கமிஷன் சர்க்காருக்குக் கொடுக்கிறது. அதைபோல் லைப்ரரி செஸ் வசூலிப்பதில் 10 சதவிகிதம் மாநகராட்சிக்குக் கொடுக்க வேண்டுமென்று வருமானத்துறை அளவிலே கேட்டார்கள். அதைப் போலவே, ப்ரொஃபெஷன் டாக்ஸிலிருந்து சாதாரண மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு, சாதாரணத் தொழில் செய்பவர்களுக்கு விலக்களித்துவிட்டு அதிகமான வருமானம் உள்ளவர்களுக்கு வரிப்போடப்பட வேண்டுமென்று கேட்ட திட்டத்தையும் சர்க்கார் அங்கீகரிக்க மறுத்துவிட்டது என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கடைசியாக இந்த மன்றத்திலே நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு கருத்தை எடுத்துவைக்க விரும்புகிறேன். ஒன்றல்ல, மன்னிக்கவும் இரண்டு கருத்துகளை எடுத்துவைக்க விரும்புகிறேன். தனியார் துறை, பொதுத்துறை இரண்டும் இருக்கவேண்டுமென்றும், அதுதான் சர்க்காரின் கொள்கை யென்றும், அதுதான் சோஷலிஸம் என்றும் தொழில் அமைச்சர்

அவர்கள் சொல்லுகிறார்கள். சோஷலிஸம் ஒரு குத்துவிளக்கு பொதுத்துறை என்பது அதில் உள்ள திரி, அதிலே தனியார் துறை என்ற தண்ணீரை விட்டால் சோஷலிஸக் குத்துவிளக்கு எப்படி ஒளிவீசும்? ஆகவே தனியார் துறை என்ற தண்ணீரை ஊற்றாமல் சோஷலிஸக் குத்துவிளக்கை ஏற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள். இந்த நேரத்திரல் ராஜ்ய சபா தேர்தலைப்பற்றிச் சொன்னால் முதலமைச்சர் அவர்கள் கோபித்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஒரிஸ்ஸா மாநிலத்திலே பொது எதிரியை வீழ்த்தவேண்டுமென்பதற்காக கனதந்திர பரிஷத் என்ற பிற்போக்கு கட்சியோடு கூட்டுச் சேர்ந்து அதேபோல் கேரள மாநிலத்தில் முஸ்லீம் லீக்குடன், வகுப்புவாதத்தைக் கிளப்பும் சக்தி என்று இவர்கள் சொல்லுகிறார்களே அந்த முஸ்லீம் லீக்குடன் காங்கிரஸ்காரர்கள் கூட்டுச் சேர்ந்துகொண்டார்கள். 1952-ஆம் ஆண்டில் விருதுநகர், சாத்தூர் தொகுதிகளில் காங்கிரஸை வீழ்த்த வேண்டுமென்பதற்காக கம்யூனிஸ்டுகள் திரு ஜி. டி. நாயுடு அவர்களை ஆதரித்தார்கள். திரு. ஜி. டி. நாயுடு அவர்களை தேசிய முதலாளி என்றுக்கூட சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸை வீழ்த்தவேண்டுமென்பதால். ஆகவே பொது எதிரியை வீழ்த்துவதற்கு ஒன்று சேருவதில் தவறில்லை என்பது நடைபெற்று வரக்கூடிய ஒன்று. ஆகவே தனியார் துறை, பொதுத் துறை என்று குழப்பிக்கொண்டிருக்காமல் தனியார் துறைகளையும் பொதுத் துறைகளாக ஆக்குங்கள். உங்களால் ஆக்க இயலாவிட்டால் எங்கள் அறிஞர் அண்ணு அவர்கள் ஆக்குவார்கள். என்பதைச் சொல்லிக்கொண்டு, தேர்தலில் சுமுகம் ஏற்பட்டு, தேர்தல் ஒழுங்காக நடைபெற பாதுகாப்புச் சட்டங்களைத் திரும்பப் பெற வேண்டுமென்று பலமுறை எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் முடியாது, முடியாது என்று கோபம் காட்டுகிறார், கோபம் காட்டுகிறார். என்று சொல்வதைக் காட்டிலும் அவர் அன்புக்குப்பாத்திரமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அன்புக்கு கட்டுப்படவில்லை என்று அன்றைக்கே அவர்கள் சொல்லிவிட்டார்கள். அன்பு காட்டவேண்டியது எங்கள் கடமை. அதைத் தடுப்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அது வேறு விஷயம். ஆளும்கட்சியும், எதிர்க்கட்சியும் ரூபாயின் இரண்டு பக்கங்களைப்போன்றவை ராஜா ஒரு பக்கம் இருக்கிறது

ஒரு பக்கம் பூ இருக்கிறது. ஒரு பக்கம் பூவும் மற்றொரு பக்கம் தலையும் இருப்பதுதான் நாணயத்திற்கு அழகு. அந்தப் பூவில்லாமல் தலை இருந்தால் அது பொலிவாக இருக்காது. அதேபோல் எதிர்க்கட்சியில்லாது ஆளுங்கட்சிக்குப் பொலிவு வராது. நாங்கள் ஆளுங்கட்சியாக வந்தாலும் நீங்கள்தான் எதிர்க்கட்சியாக இருக்கவேண்டுமென்பதை நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் ஆளுகின்ற உரிமையைத் தருகின்ற வாய்ப்பை அடைக்காதீர்கள் பாதுகாப்புச் சட்டத்தை உள்ளபடியே ஒழுங்காக பயன்படுத்து கிறார்களா? திரு. அழகமுத்துவை நோக்கிப் பாய்கின்ற பாதுகாப்புச் சட்டம், திரு. கிருஷ்ணமூர்த்தியைத் தேடி அலைகின்ற பதுகாப்புச் சட்டம், கருணநிதியைப் பிடிக்கின்ற பாதுகாப்புச் சட்டம், கம்யூனிஸ்டுகள் மீது பாய்கின்ற பாதுகாப்புச் சட்டம், ஏன் பெரியாரைக் கண்டு அஞ்சுகிறது?-ஏன் பாயவில்லை என்றுகூடச் சொல்லமாட்டேன்-ஏன் அஞ்சுகிறது என்று கேட்க விரும்புகிறேன். அதற்குக் காரணம் அச்சம்தான், அவருடைய தயவில்லாமல் காங்கிரஸ்காரர்கள் வாழமுடியாது. அவர்கள் இல்லாமல் காங்கிரஸ் எம். எல். ஏ.-க்கள் வெற்றிப் பெறமுடியாது. இங்கே 138 காங்கிரஸ் எம். எல். ஏ-க்கள் வந்து இருக்கிறார்கள் என்றால் இதில் மிகப் பெரும்பாலோர் பெரியாருடைய தயவினால்தான் இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறார்கள்.

**திரு கே. டி. கோசல்ராம்** : இல்லை, இல்லை, க்வெஸ்டின்.

**கலைஞர் மு. கருணநிதி** : இல்லையென்று சொன்னால் அது பெரியாருக்கே அவமானம்

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தாங்கள் அனுமதித்தால் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த ஆத்திரம், காரம், சாரம் இவற்றிற்கெல்லாம் அவசியமே இல்லை. கனம் உறுப்பினர் திரு. கோசல்ராம் ஆத்திரப்படவேண்டியதில்லை.

தி. மு. க துணைத்தலைவர் அவர்கள் பெரியார் அவர்களிடம் வளர்ந்தவர், அவரிடம் அவருக்கு மரியாதை இருக்கிறது. அவருக்கு மரியாதை செலுத்துகின்றபொழுது மற்றவர்கள் அதற்காகக் கவலைப்படவேண்டாம்.

**கலைஞர் மு. கருணாநிதி:** நான் பெரும்பாலான காங்கிரஸ் உறுப்பினர்கள் பெரியார் அவர்கள் தயவால் வந்தவர்கள் என்றுதான் சொன்னேன். இப்பொழுது சொல்லுகிறேன். திரு. கோசல்ராம் அவர்களும், திரு. சங்கரன் அவர்களும் மாறுப்பட்டவர்கள் என்றால் மகிழ்ச்சியடைகிறேன். அப்படிப்பட்ட வீர உள்ளம் காங்கிரசிலே பல பேருக்கு இல்லை என்பதைத்தான் எடுத்துச் சொல்லுகிறேன். பல பேர் பெரியார் அவர்களை வருந்தி வருந்தி அழைத்தார்கள். 'முதலமைச்சர் பக்தவத்சலம் ஆட்சி ஒழிய வேண்டுமென்று வேண்டுமானாலும் சொல்லுங்கள் எங்களுக்கு ஓட்டுக் கேட்க வாருங்கள் என்று பல பேர் பெரியார் அவர்களை அழைத்துக் கூட்டம் நடத்தினார்கள்,. இன்றைக்குத்தான் என்ன நிலைமை?

நாத்திகம் என்ற பத்திரிக்கை காமராஜர் அவர்களால் தொடங்கி வைக்கப்படுகிறது. எம். ஆர். ராதா நாடகம் போட்டு நிதி திரட்டப்பட்டு காமராஜர் மூலம் கொடுக்கப்படுகிறது. அந்தப் பத்திரிக்கையிலேயே கனம் தொழில் அமைச்சர் வெங்கட்ராமனைப் பற்றிய பல குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன. 'சாக்கடை வார்த்தை' என்று கனம் அமைச்சர் அவர்களே அன்று சொல்லிவிட்டார்கள். அது சாக்கடையா, பூக்கடையா என்ற ஆராய்ச்சி வேறு. ஆனால் அந்தக் குற்றஞ்சாட்டுகிற பத்திரிக்கையைக் கண்டிக்க இன்றையதினம் காங்கிரசின் சார்பிலே திராணி இல்லாமல் இருக்கிறது. என்ன காரணம்? அவர்களுடைய தயவால் இரண்டு மூன்று எம். எல். ஏ.-க்கள் அதிகமாக கிடைக்காதா என்ற ஆசையைத் தவிர வேறு என்ன? இதற்குப் பிறகு வெளியிலே, சென்னை நகரிலே, சுவரொட்டிகளிலே, மாதா கவுடரும், நாத்திகம் ராமசாமியும் பேசுகிறார்கள் என்று பெரிய பெரிய விளம்பரங்கள், அப்படியானால் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே தொழிலமைச்சர் அவர்களுக்கு எதிராக ஒரு சதி உருவாகிறது என்பதை நீங்கள்-மந்திரிமார்கள் ஒப்புக்கொண்டாக வேண்டும், அதற்கு அமைச்சர்களே துணை போகிறார்கள். ஆளும் கட்சியின் பெருந் தலைவர் காமராஜர் அவர்களே துணையாக இருக்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்படுகிறது. இதைச் சொல்லக் காரணம், பாதுகாப்புச் சட்டத்தைப் பல வகையிலே பயன்படுத்துகிறார்கள். சில இடத்திலே அதைப் பயன்படுத்தப் பயப்படுகிறார்கள். அவர்கள் தயவு

இல்லாமல் வர முடியாது. தேர்தலைத் தாண்ட முடியாது என்ற காரணத்தால் பாதுகாப்புச் சட்டம் அங்கே பயன்படுத்த வில்லையே தவிர வேறு அல்ல.

அதிலே நான் பெரியாரைப் பாராட்டுகிறேன். காஞ்சிபுரம் மாநாட்டிலே காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறிய அவர் கலியாணச்சுந்தர முதலியார் தலைவராக மேடையிலே அமர்ந்திருந்த போது துண்டை உதறித் தோளிலே போட்டு ஒரு சபதம் எடுத்தார்கள். "காங்கிரஸ் கட்சியை ஒழித்துக்கட்டி விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பேன் என்று சபதமெடுத்துவிட்டு வெளியே வந்தார்கள். அந்தக் காரியத்தைப் பெரியார் அவர்கள் திறம்படச் செய்து கொண்டிருக்கிறார்கள். தன்னுடைய அடிமையாகக் காங்கிரஸ் கட்சியை ஆக்கிவிட்டார் பெரியார் ஈரோட்டு மாளிகையின் வாசலிலே காங்கிரஸ் கட்சி காத்துக் கொண்டிருக்கும் நிலைமையை ஏற்படுத்திவிட்டார் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

## போக்குவரத்துத் துறை

உரை : 20 நாள் : 04.07.1967

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் போக்குவரத்துத் துறை செயல்படும் முறை குறித்து ஆய்வுரை ஒன்று உறுப்பினர்களுக்குத் தனியே வழங்கப்பட்டுள்ளது. போக்குவரத்துத்துறை 1966-67-ம் ஆண்டுக் காலத்தில் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்து அந்த ஆய்வுரை விரிவாக விளக்கிக் கூறுகிறது.

தற்போது சென்னை மாநகரின் எல்லைக்குள் அடங்கிய பேருந்து வழித்தடங்கள் அனைத்தும் நாட்டுடைமை யாக்கப்பட்டு இவ்வழித்தடங்களில் தமிழக அரசுப் போக்குவரத்துத் துறையினால் பேருந்து வண்டிகள் விடப்படுகின்றன. நெடுந்தொலை விரைவு வண்டிகளைப் பொறுத்தவரை, 120 மைலுக்கு மேற்பட்ட நீளமுடைய வழித்தடங்களை நாட்டுடமையாக்குவதே அரசின் கொள்கையாக இருந்தது. இருந்தபோதிலும், அரசுப் போக்கு வரத்துத் துறையில் பேருந்து வண்டிகள் செல்லுகின்ற வழித்தடங்களைச் சேர்ந்த பகுதிகளில் தனியார்களும் பேருந்துகள் ஓட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இத்துறையைச் சேர்ந்ததாக இயங்கிவரும் கன்னியாகுமரிக் கிளை முன்னாள் திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து 1-11-1956ல் நமது அரசினால் மேற்கொள்ளப்பட்டது. அதனை அரசு எடுத்துக்கொண்ட பின்னர், கன்னியாகுமரி மாவட்டத்தில் மேலும் பல வழித்தடங்கள் தேசீயமயமாக்கப்பட்டன. இப்போது

இம்மாவட்டத்தில் ஒருசில வழித்தடங்களில் மட்டுமே தனியார்களால் பேருந்துகள் விடப்படுகின்றன.

நியாயமான கட்டணங்களில் சிறந்த முறையில் மக்களுக்குப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டும் தமிழக அரசு போக்குவரத்துத்துறையின் வருமானத்தைப் பெருக்கும் பொருட்டும் மக்கள் பயணம் செய்கிற பேருந்துப் போக்குவரத்தினை நாட்டுடைமையாக்கும் கொள்கையை மேலும் விரிவுபடுத்துவது குறித்து அக்கறையுடன் ஆராய்ந்துள்ளது. கீழ்க்காணும் வகைகளைச் சேர்ந்த வழித்தடங்களில் பேருந்துகள் ஓட்டுவதற்குத் தனியாருக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிகள் இறுதியடையும்போது அவ்வழித்தடங்களை அரசு மேற்கொள்வதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது :-

(1) சாதாரண வண்டிகளும் துரித வண்டிகளும் ஓடுகின்ற 75 மைல் நீளமும் அதற்கு மேற்பட்ட நீளமும் உடைய வழித்தடங்கள் அனைத்தும் ;

(2) சென்னை மாநகரிலிருந்து செல்லுகின்ற அல்லது சென்னை மாநகருக்கு வந்து சேருகின்ற வழித்தடங்கள் எவ்வளவு நீளமிருப்பினும் அவை அனைத்தும் ;

(3) கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து செல்லுகின்ற அல்லது அம்மாவட்டத்தில் வந்து சேருகின்ற வழித்தடங்கள் உட்பட அம்மாவட்டத்தின் வழித்தடங்கள் அனைத்தும்.

மேலே கூறப்பட்ட வழித்தடங்கள் அனைத்திலும் வருங்காலத்தில் செய்யப்படும் மேம்பாடுகள் யாவும் தமிழக அரசுப் போக்குவரத்துத் துறையினால் மட்டுமே செய்யப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது. சென்னை மாநகருக்கு உள்ளேயும் அதன் சுற்றுப்புறங்களிலும் மற்றும் இம்மாநிலத்தின் ஏனைய இடங்களிலும் இத்துறையின் பணிமனைகள் இருக்கின்றன. எனவே, அரசின் கொள்கையைப் பெரிதும் இடர்ப்பாடின்றியே செயல்படுத்த இயலும், மேற்கூறிய வகையைச் சேர்ந்த வழித்தடங்களை தனியார் களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிகள் இறுதியடையும் போதெல்லாம் தேசீயமயமாக்க திட்டமிட்டிருப்பதனால், வழித்தட உரிமை இழக்கும் பேருந்து முதலாளிகளுக்கு அதற்காக இழப்பீடு ஏதும் வழங்கப்பட மாட்டாது. அரசு

மேற்கொள்ளும் வழித் தடங்களில் தமிழக அரசு போக்குவரத்து தனக்குச் சொந்தமான புதிய பேருந்துகளையே ஓட்டும், அவைகள் சீரிய முறையில் செயல்பட்டு வருவதற்குரிய வகையில் தக்க ஏற்பாடுகளை இத்துறை மேற்கொள்ளும். இவ்வகையில் வழித்தட அனுமதி இழந்த தனியார்களிடம் வேலையிலிருந்தவர்கள் இத்துறையில் வேலை வாய்ப்பு வேண்டி விண்ணப்பித்துக் கொண்டால், அவர்களில் வேலைக்கு அமர்த்திக்கொள்ளத் தகுதியுடையவர்களை இத்துறை வேலைக்கு எடுத்துக் கொள்ளும்.

நடப்பு ஆண்டில் தனியார்களால் 255 பேருந்துகள் ஓட்டப்படுகின்ற 189 வழித்தடங்களை அரசு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மேலே கூறிய மூவகையான இவ்வழித்தடங்களின் தனித்தனி விவரம் வருமாறு :-

| | வழித்தடங்கள் | பேருந்துகள் |
|---|---|---|
| (1) 75 மைல் நீளமும் அதற்கு மேற்பட்ட நீளமுடைய வழித்தடங்கள். | 96 | 124 |
| (2) சென்னை மாநகரிலிருந்து செல்லுகிற அல்லது சென்னை மாநகருக்கு வந் தடைகிற வழித்தடங்கள் | 70 | 83 |
| (3) கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து செல்லுகிற அல்லது அம்மாவட்டத்திற்கு வந்து சேருகிற வழித்தடங்கள் உட்பட இம்மாவட்டத்தில் உள்ள வழித்தடங்கள். | 23 | 48 |
| மொத்தம் | 189 | 255 |

பேருந்துகளை ஓட்டுவதற்குச் செலவு மிகுதியானதை ஈடுகட்டும் பொருட்டு 1-1-1966ம் தேதி முதற்கொண்டு இத்துறையில் நீண்டதூரப் பேருந்துகளின் பயணக்கட்டணம் மைலுக்கு 5 காசிலிருந்து 6 காசாக உயர்த்தப்பட்டது. இவ்வாறு கட்டணம் உயர்த்தப்பட்ட பின்னர், ரயில்வே துறையின் போட்டியினாலும் தனியார் பேருந்துகளில் கட்டணங்கள் குறைவாக இருந்த காரணத்தினாலும் இத்துறையின்

வண்டிகளில் மக்கள் பயணம் செய்வது குறைந்து விட்டது. எனவே, 1-4-1967-ம் தேதி முதற்கொண்டு நெடுந்தூரப் பேருந்துகளின் கட்டணம் மைலுக்கு 5 காசாகக் குறைக்கப் பட்டது. கட்டணம் குறைக்கப்பட்ட பின்னர், நெடுந்தூர வண்டிகளின் மூலம் கிடைக்கும் வருமானம் உயர்ந்துள்ளது. 1967 ஏப்ரலில் ஒரு வண்டிக்கு 11,033 ரூபாய் வருமானம் கிடைத்தது. ஆனால் 1967 மார்ச்சில் ரூ. 10,706-ம், 1966 ஏப்ரலில் ரூ. 10,833-ம் வருமானம் கிடைத்தது. இவ்வண்டிகளின் மூலமாகக் கிடைக்கும் வருவாயைப் பெருக்கக் கருதி இவ்வண்டிகளின் எண்ணிக்கை மிகுதியாக்கப்பட்டு வருகிறது. இத்துறையினால் ஓட்டப்படும் மற்ற வண்டிகளின் கட்டணவீதங்களைச் சீரமைக்கவும், 12 வயதிற்குக் குறைந்த சிறுவர்களுக்குச் சலுகைக் கட்டணங்கள் வசூலிக்கவும், பொது விடுமுறை நாட்களில் ''சித்தம்போல பயணம் செய்'' என்னும் புதுமுறை பயணச் சீட்டுகளை வழங்கவும் செயற்குறிப்புகள் ஆராயப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட வரம்பிற்கு மேல் வசூல் காட்டுகின்ற கண்டக்டர்களுக்குத் தூண்டுகோல் பூரிப்பூதியம் வழங்குவதற்கான ஒரு செயற்குறிப்பும் ஆராயப்பட்டு வருகின்றது.

மதுராந்தகம் போன்ற இடங்களைச் சென்னை மாநகருடன் இணைக்கின்ற வகையில் புதிய வழித்தடங்களில் இத்துறையின் பேருந்துகளை ஓட்ட வேண்டுமென்று பொதுமக்களிடமிருந்து வேண்டுகோள்கள் பல வரப்பெற்றன. பயணம் செய்கின்ற பொதுமக்களின் தேவைகளை விரைவில் நிறைவேற்றும் பொருட்டு தற்காலிக அனுமதியுடன் 1-4-1967 தேதிக்குப் பிறகு, இத்துறை புதிய வழித்தடங்கள் பலவற்றில் பேருந்துகளை ஓட்டுகின்றது.

சென்னை மாநகர மக்களின் போக்குவரத்துத் தேவைகள் குறித்தும் தனிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 6-ம் தேதிக்குப் பிறகு மாநகரில் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் ஓட்டப்பட்டு வருகின்றன.

இத்துறை தனது பேருந்துகளைச் சீரான முறையில் இயக்கி வரவும், அவசியமான இடங்களில் எல்லாம் தங்கும் அறைகள்,

குளியல் அறைகள், ஓய்வு அறைகள், குளிர்நீர்ச் சாதனங்கள் முதலியவை போன்ற எல்லா வசதிகளுடனும் பேருந்து நிலையங்களை நன்னிலையில் பேணிவரவும் இத்துறை பணிமனைகளை நிறுவி வந்துள்ளது. இத்தகைய பணி மனைகளுள் ஒன்றாக அண்மையில் அம்பத்தூரில் ஒரு பணிமனை நிறுவப்பட்டுள்ளது. இது 14-4-1967ல் செயல்படத் தொடங்கியது. விரைவு வண்டிகளுக்காக உதகமண்டலத்தில் அனைத்துவசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் ஒன்று 27-5-1967ல் திறக்கப்பட்டது. சென்னை மாநகரின் விரைவு வண்டிகளுக்கான பேருந்து நிலையம் பாரிமுனையில் ''டோர் ஹௌஸ்'' கட்டிடத்திற்கு எதிரேயுள்ள கிளைப் பணிமனையில் செயல்பட்டு வந்தது. இது மிகவும் குறுகலானது. பேருந்துகளின் எண்ணிக்கையும், பயணிகளின் எண்ணிக்கையும் பெருகிக் கொண்டே வருவதற்கேற்ப இடவசதியை ஏற்பாடு செய்ய இயலாது போனதால் இந்தப் பேருந்து நிலையத்தை இங்கிருந்து பெரிதும் தகுதியுடையதோர் இடத்திற்கு மாற்ற வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. அதற்கேற்ப, உயர்நீதிமன்ற வளவுக்குள் எஸ்பிளனேடு சாலைக்குப் பக்கத்தில் 180 ஏக்கர் பரப்புடைய நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு இவ்விடத்தில் ஏறத்தாழ ரூபாய் 1 லட்சம் செலவில் பேருந்து நிலையம் ஒன்று இப்போது கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பேருந்து நிலையம் 5-6-1967லிருந்து செயல்படத் தொடங்கியது. குரோம் பேட்டையிலும், நாகர்கோவிலிலும் உள்ள இத்துறையின் தொழிற் பட்டறைகள் இப்போது தினங்களுக்கு 50 பேருந்து வண்டிகளைக் கட்டும் திறனோடு உள்ளன. பயணப் பேருந்துப் போக்குவரத்தினை மேன்மேலும் நாட்டுடைமையாக்கி வருவதையொட்டி, இத்துறைக்கு வேண்டிய பேருந்துகளின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே வருவதைச் சமாளிக்கும் பொருட்டும், ஏனைய அரசுத் துறைகளுக்காக மேலும் பல மோட்டார் வண்டிகளைக் கட்டும் பொருட்டும் மேற்படி தொழிற்பட்டறைகள் தினங்களுக்கு 65 மோட்டார் வண்டிகள் கட்டும் அளவிற்கு அவற்றின் திறனை உயர்த்துவதற்கான செயற்குறிப்புகள் ஆராயப்பட்டு வருகின்றன. பொதுமக்களுக்கு மேலும் திறம்படப் பணியாற்ற இந்தத் துறைக்கு ஆக்கபூர்வமான யோசனைகளை அளிக்குமாறு உறுப்பினர்களை வேண்டுகிறேன்.

இத்துடன் மோட்டார் போக்குவரத்து ஆய்வுரையும், நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துப் போக்குவரத்து ஆய்வுரையும் மன்றத்தின்முன் வைக்கின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டு மன்ற உறுப்பினர்களுடைய நல்ல அறிவுரை களையெல்லாம் பெறத்தக்க அளவுக்கு மூன்று மானியக் கோரிக்கைகள்-அந்தத் துறையினுடைய பொறுப்பேற்று இருக்கிறவன் என்ற முறையில்- என்னுடைய இறுதி உரைக்காகக் காத்திருக்கின்றன. மன்றத்திலே பல்வேறு உறுப்பினர்களும் இன்றைய தினம் போருந்துகளை நாட்டுடமையாக்குவதற்காகத் தங்களுடைய நல்ல ஆதரவையெல்லாம் தெரிவித் திருக்கிறார்கள். கட்சி சார்பற்ற முறையில் அநேகமாக எல்லா உறுப்பினர்களுமே நாட்டுடமையாக்குகின்ற கொள்கையை வரவேற்றிருக்கிறார்கள் என்றே நான் கருதுகிறேன். சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட, 'தேசீய மயமாக்கும் கொள்கைக்குச் சுதந்திராக் கட்சி விரோதமானது என்று பலராலும் கூறப்பட்டாலும்கூட, இப்போதுள்ள அரசு நாட்டுடமை ஆக்குகின்ற கொள்கைத் திட்டம் நல்ல நிர்வாக மேம்பாட்டுடன் பொதுமக்களுக்கு எந்த அளவுக்கு நன்மை அளிக்கிறதோ அந்த அளவுக்கு வெற்றிகரமாக இருக்கும் ; அந்த அளவுக்குக் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்' என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நன்றி.

இந்தத் தொழிலில் அதிக அனுபவம் உள்ள காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள் நல்ல பல கருத்துக்களையெல்லாம், தேவையான பல கருத்துக்களை யெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் துறைக்கும், மற்றும் தனியார் துறையில் இருக்கின்ற பஸ்களுக்கும், வண்டிகளுக்கும் தேவையான சட்டங்களை எப்படி இயற்ற வேண்டுமென்பதைக் குறித்து அவர்கள் அனுபவ ரீதியான பல கருத்துக்களை எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பஸ் தொழிலில் என்னைப் போலவே அனுபவம் இல்லாத சிலர், நண்பர் வினாயகம் போன்றவர்கள், பஸ் முதலாளி களுக்காகப் போர்க்கொடி உயர்த்தும் அளவுக்குப் பேசினார்கள். ஆனால், அது ஏன் என்றே புரியவில்லை. ஒரு வேளை இன்று அவர்கள் எடுத்திருக்கின்ற புதிய நிலைபோலும் என்ற அளவிலேதான் அதை விடுத்திட விரும்புகிறேன்.

பொதுவாக, தேசீயமயமாக்கப்பட வேண்டுமென்ற கொள்கை பல ஆண்டுக் காலமாக நாட்டிலே பேசப்பட்டு வந்து காங்கிரஸ் கட்சியின் அரசாலே கூட ஏற்றுக்கொள்ளத்தக்க அளவுக்குப் பல முறை பல கட்டங்களில் அதற்கான வழி வகைகள் எல்லாம் யோசிக்கப்பட்டு, திரு. வினாயகம் அவர்கள் குறிப்பிட்டதுபோல் என்ன காரணத்தாலோ அவை விடப்பட்டன. என்ன காரணத்தாலோ என்ற அந்த வாசகத்தைத்தான் இந்தப் புதிய அரசு கோடிட்டு வைத்து, சிந்தித்துப் பார்த்து, அந்தக் காரணத்தை உணர்ந்த பிறகு, இந்தக் காரணத்திற்காகவெல்லாம் ஒரு நல்ல கொள்கையை முடக்கிவைத்துவிடக்கூடாது என்ற சீரிய தன்மையின் அடிப்படையில், நாட்டுடமையாக்குகின்ற அந்தக் கொள்கையைப் படிப்படியாகக் நிறைவேற்றுகின்ற கட்டத்தில் புதிய அரசு முதற்படியாக 75 மைல், அதற்குமேல் உள்ள பேருந்து வண்டிகளை எல்லாம் அந்த உரிமையாளர்களுடைய வழித்தட உரிமைகள் முடிவுற்றதும் புதுப்பிக்காமல் அவற்றை அரசாங்கமே ஏற்று நடத்துவது என்ற கொள்கையை வகுத்திருக்கிறது. அந்தக் கொள்கையின்படி இந்த ஆண்டு எவ்வளவு பேருந்து வண்டிகளை இந்த அரசு ஏற்க இருக்கிறது என்ற கணக்கையும் நான் என்னுடைய முன்னுரையில் உங்களிடத்தில் தெரிவித்திருக்கிறேன்.

பஸ் முதலாளிகளாக இருக்கக்கூடிய திரு. காசிராமன் அவர்களைப்போன்றவர்களேகூட 75 மைலுக்கு மேல் உள்ளவற்றைத் தேசீயமயமாக்கியிருப்பதை வரவேற்றிருக் கிறார்கள். வரவேற்றதோடு மாத்திரமல்லாமல் வரவேற்ற நேரத்திலே அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 'ஏற்றுக் கொள்வதைப்பற்றி மறுப்பு இல்லை ; ஆனால் தகுந்த இழப்பீடுகள் முதலாளிகளுக்குத் தரப்பட வேண்டும்' என்று சொல்லி, தராவிட்டால் நீதிமன்றத்திற்குப் போவோம்

என்றெல்லாம் சொல்லாமல், அவர்கள் மிகுந்த அக்கறை யோடும், பொறுப்போடும், இதிலே பஸ் முதலாளிகள் எப்படிப்பட்ட லாபத்தை ஆண்டாண்டுக் காலமாக அனுபவித்து வந்திருக்கிறோம் ; நாட்டுக்காக ஒரு கொள்ளைக்காக தியாகத்தைக் செய்து தீரவேண்டுமென்ற நல்ல உள்ளத்தோடு, 'நீதிமன்றம் இருக்கிறது ; அதன் நெடிய படிக்கட்டுகள் இருக்கின்றன ; இங்கே மாத்திரமல்ல ; சுப்ரீம் கோர்ட் இருக்கிறது', என்றெல்லாம் எடுத்துச்சொல்லாமல், 'வேறு ஏதாவது மாற்று வழியாவது காணுங்கள்' என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தப் புதிய அரசு இப்போது வகுத்துக் கொண்டிருக்கிற தேசீயமயக் கொள்கைளுக்கு ஊறு தேடாமல், அந்தக் கொள்கைகளின் வட்டத்திற்கு உள்ளாக நின்று 75 மைல்களுக்கு மேலே இருக்கக்கூடிய பஸ்களை எடுத்துக் கொள்வதன் காரணமாகப் பாதகம் அடைகின்ற பஸ் முதலாளிகளக்கு வேறு ஏதாவது உதவிகள் செய்ய முடியுமா என்பதை நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே திரு. காசிராமன் அவர்களுக்கும், அவர் மூலம் 'இந்த பஸ் முதலாளிகளெல்லாம் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள், மெள்ள மெள்ள கொல்லப்படுகிறார்கள்' என்றெல்லாம் சொல்லப்படுகின்ற வாதங்களுக்கும் என்னுடைய பதிலை இந்த வகையிலே எடுத்துகு கூறப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேசீயமயமாக்குகிற கொள்கையை நாடு வரவேற்கிறது என்று எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், குறிப்பாகத் தமிழரசு கழகத் தலைவர் அவர்களும், இடது சாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்களும், பி.எஸ்.பி., எஸ்.எஸ். பி., கட்சித் தலைவர்களும் இங்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நாடு வரவேற்கிறது இந்த நல்லத் திட்டத்தை. நாட்டிலுள்ள பொதுமக்கள் எவ்வளவு ஆர்வத்தோடு இதைத் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சில அங்கத்தினர்கள் சுட்டிக் காட்டியதுபோல பஸ் எல்லாம் இன்றைய தினம் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்த ஒன்றாக மாறி அதில் கூட்டம் எந்த அளவிற்குப் போகிறது என்பதைக்கூட கவலையோடு பொதுமக்கள் பார்க்கும் அளவிற்கு அவ்வளவு அக்கறை இந்த போக்குவரத்துத் துறையில் தமிழக மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

அப்படி ஏற்பட்டதற்கு அடையாளமாகத் திருச்சியில் இன்றையதினம் நிர்வகிக்கப்பட்டு வருகிற எக்ஸ்-சர்வீஸ்மென் நடத்திக்கொண்டிருக்கிற அந்தத் துறையை அப்படியே சர்க்கார் எடுத்துக்கொள்ளட்டும், நாங்கள் அதை அப்படியே வழங்கிவிடுகிறோம் எங்கள் செலவு இரண்டு மூன்று மாலைகள்தான் அதை மட்டும் அனுமதியுங்கள் இதை எடுத்துக் கொள்ளுங்கள் என்று அரசுக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். அதைப்பற்றி அரசு ஆராய்ந்து முடிவு எடுக்க இன்னும் இரண்டு நாட்களில் அவர்கள் சென்னைக்கு வர இருக்கிறார்கள். ஆகவே தமிழகத்தில் உள்ள முற்போக்கு எண்ணம் படைத்தவர்கள் அனைவரும், இந்த அரசின்பால் நல்ல எண்ணம் வைத்திருக்கிற அனைவரும், இந்த அரசு செய்யும் காரியங்கள் தமிழ் நாட்டு மக்களின் நன்மைக்காகச் செய்யப்படுகிற காரியங்கள் என்று கணக்கெடுத்துக்கொண்டிருக்கிறவர்கள் அனைவரும் இந்த முயற்சியை இன்றைய தினம் இனிது பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

''தமிழக அரசு போக்குவரத்து'' என்று தமிழில் பொறித்ததும், திருக்குறளை அதில் எழுதுவதும், திருவள்ளுவர் படத்தை வண்டிகளில் வைப்பதும் பெரிய சாதனையா? என்று வெளியே பேசப்பட்டால் அது மாலை நேர மேடை விவகாரங்கள் என்று விட்டுவிடலாம். என்றாலும் சட்டமன்றத்தில்கூட அருமை நண்பர் திரு. ஜார்ஜ் அவர்கள் இது ஒரு பெரிய சாதனையா என்று கேட்டார்கள். அவர்கள் கேட்டது, நாங்கள் கட்டி வைத்த பஸ்கள் அதில் நீங்கள் எழுதுவது பெரிய சாதனையா என்று கேட்டார்கள். இவர்கள் கட்டிய வண்டிகள்தான் என்பதை மறுக்கவில்லை. அந்த பஸ்களோடு நாம் நிறுத்திவிடவில்லை. மேலும் அதிகமான பஸ்களையும் கட்டிக் கொண்டிருக்கிறோம். நான் பெற்ற பெண், நீ தாலி கட்டுவது பெரிய சாதனையா என்று சாதாரணமாகக் கேட்டு விடலாம். ஆனால் அந்தத் தாலிபெற்ற பெண்ணின் கழுத்தில் எந்த சுபக்குறியை உலகத்திற்கு உணர்த்திக் கொண்டிருக்கிறதோ, மங்கல மகிமையை நாட்டுக்கு உணர்த்திக் கொண்டு வருகிறதோ, அந்த மங்கல மகிமையை, அந்த எழில் அழகை ''தமிழக அரசு'' என்ற தமிழ் எழுத்துக்கள் பெண்ணின்

கழுத்தில் கட்டப்படுகிற தாலியைப் போன்று இன்றையதினம் ஒளிவிட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கு எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (ஆரவாரம்) ஆகவே, சிறிய சாதனைதான் என்றாலும் பெரிய உள்ளத்திலிருந்து எழுந்த சாதனை. இந்தச் சிறிய சாதனை இருபது ஆண்டுகளாகச் செய்யப்படாமல் இருந்தது ஏன் என்பதற்கான கேள்விக்கு இந்த நாட்டுமக்கள் தங்களை ஆள்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் மறந்து விடக்கூடாது.

அவினாசி தொகுதி உறுப்பினர், சுதந்திராக் கட்சி உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் தேசீயமயமாக்கும் கொள்கையை நாம் அதி தீவிரமாக நடத்த வேண்டுமென்று மனதில் கொண்டிருக்கிறேன் என்ற கூறிவிட்டு, ஆனால் சாத்தியமா என்ற கேள்வியைக் கேட்டார்கள். அனுபவம் வாய்ந்த பெரியவர் அவர்கள். நஷ்டம், நஷ்டம் என்று எல்லாத் துறைகளையும் அதிலும் குறிப்பாக, நகர பஸ் போக்குவரத்து துறையைக் காட்டிவிட்டு, நகர பஸ்களை, எல்லாம் மேலும் நடத்திக்கொண்டிருப்பது ஏன்? என்ற வினாவை விடுத்தார்கள். சென்னை நகர பஸ்களைப் பொறுத்தவரையில் ஆண்டொன்றுக்கு ரூபாய் 20. 30 லட்சம், என்று நஷ்டம் ஏற்படுகிறது என்பது உண்மை என்றாலும் அதில் ஒரு உண்மையை மறந்துவிடக்கூடாது. என்ன கரணத்தினால் முன்பிருந்த அமைச்சர் அவர்கள் அந்த உண்மையை உலகத்திற்கு எடுத்துச்சொல்ல மறந்து விட்டார்கள் அல்லது மறுத்துவிட்டார்கள் என்று தெரியவில்லை. சென்னை நகர பஸ்களின் மூலம், பஸ் முதலாளிகள் கட்டுகிற வரியைப்போல சென்னை நகரத்து பஸ் துறையும் கட்டிக்கொண்டிருக்கிறது. மோட்டார் வெகிக்கிள்ஸ் ஆக்ட் வரியிலும் 50 லட்சம் ரூபாய் ஆண்டொன்றுக்கு சென்னை நகர பஸ் மூலம் வரி கட்டப்படுகிறது. சர்சார்ஜ் மூலம் 35 லட்சம் ரூபாய் வரி கட்டப்படுகிறது. ஆகவே, 85 லட்சம் ரூபாய் இந்தச் சர்க்காருக்கு, சென்னை நகரில் ஓடிக்கொண்டிருக்கிற பஸ்களின் வசூலிலிருந்து சர்க்கார் பஸ்ஸே வரியாக கட்டுகிறது. இதை ஏதோ புக் அட்ஜெஸ்ட்மெண்ட் என்று கருத வேண்டாம் செக்காகத்

தரப்படுகிறது, பணமாகத் தரப்படுகிறது. வருகிற வருவாயிலி ருந்துதானே தருகிறீர்கள் என்று கேட்கலாம். ஆனால் சென்னையில் ஓடிக்கொண்டிருக்கிற பல பஸ் வழிகளில் இன்றைய தினம் மிகவும் குறைவான பிரயாணிகளை ஏற்றுக் கொண்டுதான் செல்கிறது. சென்னை நகரபஸ்கள் தேசீய உடைமையாகயில்லாமல் தனி முதலாளிகளிடம் இருந்திருக்கு மானால் அவர்கள் இவ்வளவு பஸ் வழித் தடங்களை சென்னையில் விட்டுக் கொண்டிருக்கமாட்டார்கள் இவ்வளவு பஸ்களை இந்த நஷ்டத்தில் விட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். சர்க்கார் ஏற்று நடத்துவதினால்தான் இந்த நஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் அதே நேரத்தில் 85 லட்சம் ரூபாயையும் சர்க்காரின் கருவூலத்திற்கு வரி மூலம் அளிக்கிறது என்ற அளவில் பல பஸ் வழித்தடங்களில் பிரயாணிகள் குறைவாகயிருந்தாலும் சிலவிடங்களில் 24 சதவீதத்திற்குக் குறைவாகக் கூட பிரயாணிகள் சில வழிகளில் ஏறினாலும், அதைப் பொருட்படுத்தாமல் பொது மக்களின் நன்மைக்காக எல்லாவிடங்களிலும் இந்நிறுவனம் அரசின் சார்பாக பேருந்து வண்டிகளை இன்றைய தினம் விட்டுக்கொண்டிருக்கிறது.

ஆனால், டாக்டர் ஹாண்டே அவர்களும், மற்றச் சில உறப்பினர்களும் எடுத்துச் சொல்லியவாறு இன்னும் நிர்வாகத்தில் சீர்திருத்தம் தேவை என்பதை ஒப்புக்கொள்கிறேன். இன்னும் அறவே அவை களையப்படவில்லை என்பதை மனமார ஒப்புக்கொள்கிறேன். அதற்கான வழிவகைகளைக் காண ஒரு விஜிலன்ஸ் கமிட்டி என்ற அளவில் கூட இப்போது செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் இருந்தாலும், அப்படிப்பட்ட குழு ஒன்று தேவை என்று இந்த அரசு கருதுகிறது. அந்தக்கருத்து ஆலோசனையில் இருக்கிறது. நண்பர் வினாயகம் அவர்கள் எடுத்துக்காட்டியது போல் அது ஒரு படையல்ல, அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்காக, கட்சி அங்கத்தினர்களுக்காக ஏற்படுத்தப்படுகிற படையாக இருக்குமோ என்ற வினாவை எழுப்பினார்கள். எப்படி இன்றையதினம் நகரத்தில் ஆலோசனைக் கமிட்டி இருக்கிறதோ அதே போன்று மாநில அளவிலும் மோட்டார் போக்கு வரத்திற்கான ஆலோசனைக் குழு இருக்கிறது. அதில்

சற்று வேறுபடுகிற அளவில்-முரண்படுகிற அளவில் அல்ல-வேறுபடுகிற அளவில் இந்தக் கமிட்டியை அமைக்க வேண்டுமென்று கருத்து நிலவுகிறது. அதுபற்றி ஆய்வுக் கட்டத்தில் இருக்கிற காரணத்தினால் முழுமையாக இப்போது வெளியிடமுடியாமல் இருக்கிறேன்.

தொழிலாளர்களுக்காக சிலர் இங்கு பரிந்து கேவினார்கள். தொழிலாளர்களின் அரசு என்ற வகையில் நான் இத்துறைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும் சென்னையிலே இருக்கிற எல்லா பணிமனைகளிலும் ஒவ்வொரு நாளும் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கூட்டுவித்து அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டு அவர்கள் அத்தனை பேர்களும் அவர்களது கோரிக்கைகளை எடுத்துச் சொல்ல அவற்றை ஆராய்ந்து சென்ற 1964-ம் ஆண்டு நடைபெற்ற வேலை நிறுத்தத்தின்போது பழிவாங்கப்பட்ட 11 தொழிலாளிகளையும் வேலைக்கு மறுபடியும் சேர்த்துக்கொள்கிற உத்தரவையும் நிறைவேற்றி, அதை அமல்படுத்தி அவர்கள் மீண்டும் மறுவாழ்வு பெறுகிற சூழ்நிலையை உருவாக்கி, அதுமட்டுமல்லாமல் 22 கோரிக்கைகளை குரோம்பேட்டையில் இருக்கிற தொழிலாளர்கள் சென்னை நகரில் உள்ள தொழிலாளர்கள் சார்பாகவும், அவர்கள் பணிமனைகள் சார்பாகவும் அளித்த நேரத்தில், அவற்றில் 12 கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்படும் என்று உறுதி அளித்து அவைகள் நிறைவேற்றப்படுகிற கட்டத்தில் இன்றைதினம் இருக்கின்றன. திருச்சியில் உள்ள தொழிலாளர்களின் கோரிக்கைகளைக்கேட்டு அவர்களின் 20க்கு மேற்பட்ட கோரிக்கைகளில் 14 கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படும் என்று உறுதி அளித்து அவையும் நிறைவேற்றப்படுகிற கட்டத்திலே உத்தரவுகளுக்காக இன்றையதினம் காத்து நிற்கின்றன.

திரு. பாலன் அவர்கள் குறிப்பிட்டதுபோல் கன்னியாகுமரியில் உள்ள பணிமனைகளில் உள்ள தொழிலாளர்களின் கோரிக்கைகள் எல்லாம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அங்கும் உடனடியாகத் தீர்க்கக்கூடிய கோரிக்கைகள் பலவற்றை ஏறத்தாழ 12-க்கு மேற்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு

உத்தரவுகள் போடப்பட்டு அவையும் அமல்படுத்துகிற கட்டத்தில் இருக்கின்றன. திரு. வினாயகம் அவர்கள் ஒன்று சொன்னார்கள், கண்டக்டர்களுக்கு போனஸ்தரவேண்டும், இப்போது இருப்பதைவிட அதிகப்படுத்தப்படவேண்டும், ஐந்து ரூபாயாக ஆக்கப்படவேண்டுமென்று சொன்னார்கள். அப்படி ஐந்து ரூபாய் ஆக ஆக்குவதைவிட வசூலைப் பொறுத்து கலெக்ஷன் அடிப்படையில் ஒரு கண்டக்டர் எவ்வளவு ஒரு ரூட்டில் ட்ரிப்பில், பணத்தில் எவ்வளவு வசூல் செய்து தருகிறார் என்ற முறையை ஏற்படுத்தி வசூல் அடிப்படையில் போனஸ் தந்தால், பூரிப்பு ஊதியம் தரப்பட்டால் அவர்களை ஊக்கப்படுத்தி போட்டி மனப்பான்மையை கண்டக்டர்களிடம் வளர்க்கவும், அதன் மூலம் நல்ல வருமானத்தைப் பேருந்து வண்டிகள் இலாகா பெறுவதற்கும் முடியும் என்ற அளவில் அதைப்பற்றி யோசிக்கப்படுகிறது. அது மிக விரைவிலே நிறைவேற்றப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) காரோட்டி களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிடு கிறார்கள். அதுவும் யோசிக்கப்பட இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கட்டணங்களைப் பொறுத்தவரையில் விரைவு வண்டிகளில் மைலுக்கு 6 காசுகள் என்று இருந்ததை 5 காசுகளாகக் குறைத்தோம், எனது நண்பர் ஜார்ஜ் அவர்களுக்கு ஏற்பட்ட கவலையெல்லாம் இதற்காக எப்படிப் பாராட்டுவது என்பது. அவர் ஒரு கேள்வியையே கேட்டார். 6 காசுகள் என்று இருந்ததை 5 காசுகளாகக் குறைத்ததை எப்படிப் பாராட்டுவது, மறுபடியும் அதைக் கூட்டி விடக்கூடுமே, எப்படிப் பாராட்டுவது என்று பாராட்டுதலைக் கொஞ்சம் ஒத்திப்போட்டி ருக்கிறார். அவரிடத்திலே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன், இப்போது குறைக்கப்பட்டிருக்கிற இந்த 5 காசுகள் இந்த அரசு நீடிக்கிற வரையில் மாறாது என்பதை நான் அவருக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன். (ஆரவாரம்) அவருடைய பாராட்டுதலை ஒத்தி வைத்திருந்தாலும் அட்வான்ஸாகத் தந்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்பப் பட்டிருக்கிறேன்.

சென்னையில் கட்டண மாற்றங்கள் தேவை என்று சொல்லப் பட்டிருக்கிறது. 14 காசுகள் என்று இருக்கிற காரணத்தினால் கண்டக்டர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே ஏற்படுகிற தகராறுகள் சில இடங்களில் 22 காசுகள் என்று இருக்கிற காரணத்தினால் ஏற்படுகிற தகராறுகள் பலமுறை சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. கடந்த ஐந்து, பத்து ஆண்டுக்காலமாக நாங்களும் சுட்டிக்காட்டியிருக்கிறோம். அவை யெல்லாம் ஏற்றுக்கொள்ளப்படமுடியாது. என்ற பதில்தான் இந்த மன்றத்திலே அப்போது இருந்த ஆளும் கட்சியினால் தரப்பட்டிருக்கிறது. 14 காசுகள் என்பதை 15 காசுகளாக ஆக்கி, 22 காசுகள் என்பதை 20 காசுகளாக ஆக்கி, இப்படிப்பட்ட மாறுதலைச் செய்யலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கான விவர அறிக்கைகளெல்லாம் வந்து சேர்ந்துவிட்டன. வருகிற செப்டம்பர் மாதம் 15-ம் தேதி முதல்-நமது முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளிலிருந்து-சென்னை நகரத்தில் அமல்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்)

அடுத்தபடியாக ஒன்றைப் பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ‘‘40 மைல்கள், 50 மைல்கள் என்ற அளவில் ஓடிக்கொண்டிருக்கிற சாதாரண வண்டிகளுக்கு-தனியார் வண்டிகளுக்கு- கிலோ மீட்டருக்கு மூன்று காசுகள் என்று இருக்கிறது ; அது தனிப்பட்ட முதலாளிகளைப் பெரிதும் பாதிக்கிறது ; 75 மைல்கள் என்ற அளவை ஏற்படுத்தி, அதற்கு மேல் உள்ளவற்றையெல்லாம் நாட்டுடமையாக்கிவிட்ட காரணத்தினால், ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கிற முதலாளிகளுக்குப் பெரும் பாதகத்தை உண்டாக்கக் கூடும்’’ என்றெல்லாம் எடுத்துச்சொல்லப்பட்டது. இந்த இரண்டு காசுகள் என்று போட்டிருப்பதற்குக் காரணமே, இவர்கள் மூன்று காசுகளிலிருந்து எப்போது இறங்கப் போகிறார்கள் என்று எதிர்பார்த்துத்தான். இரண்டு பைசா என்று போட்டிருப்பது, அவர்களைச் சிக்கவைக்க வேண்டும் என்பதற்காகத்தான் ; அவர்களை இம்சிக்க வேண்டும், கொடுமைப்படுத்தவேண்டும் என்று அல்ல. திருநெல்வேலியைச் சேர்ந்த ஐம்பதுக்கும்

மேற்பட்ட பேருந்து வண்டி உரிமையாளர்களும், மதுரை, இராமநாதபுரத்தைச் சேர்ந்த ஐம்பதுக்கு மேற்பட்ட பேருந்து வண்டி உரிமையாளர்களும் என்னிடம் வந்தார்கள். ஒரு வேளை அவர்கள் திரு. வினாயகம் அவர்களிடமெல்லாம் சென்றுவிட்டு, கோர்ட்டுக்குப் போய்ப் பார்க்க வேண்டியவர்களையெல்லாம் பார்த்துவிட்டு என்னிடம் வந்தார்களோ, அல்லது இதற்குப் பிறகு பார்க்கப் போவார்களோ என்று எனக்குத் தெரியாது. ஆனாலும் வந்தார்கள். அவர்களில் திருநெல்வேலியைச் சேர்ந்தவர்கள் 75 மைல்கள் அளவுக்குத் தேசீயமயமாக்கப்பட்டிருப்பதை அவர்களுடைய மகஜரில் முதல் பக்கத்தில் வரவேற்று எழுதியிருக்கிறார்கள். அடுத்தாற்போல வந்தவர்கள், நாமும் சர்க்காரும் கிலோமீட்டருக்கு இரண்டு காசுகள் என்று இருப்பதை மூன்று காசுகளாக ஆக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நான் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன், மாவட்ட ரீதியில் இருக்கிற எல்லா பஸ் முதலாளிகளும், அமைப்புகளும் இதுபற்றிச் சர்க்காருக்கு எழுதினால், இருக்கக்கூடிய பாதகங்களைப் பற்றி எழுதினால், அவர்கள் மூன்று காசுகளிலிருந்து 2½ காசுகள் என்று குறைத்துக்கொண்டால் நாமும் 2 காசுகளிலிருந்து 2½ காசுகளுக்குப் போய் உதவலாமா என்ற யோசனை இருக்கிறது. இது முடிவல்ல, அதுபற்றி மாவட்ட ரீதியில், எல்லா மாவட்டங்களிலும் இருக்கிற சங்கங்களின் மூலமாக எழுதுவார்களானால் அதுபற்றி யோசிக்கப்படும் என்று இந்த நேரத்தில் குறிப்பிடுகிறேன்.

விபத்துகளைப்பற்றி, பஸ்களால் மாத்திரமல்லாமல் லாரிகளாலும், ஏனைய மோட்டார் வண்டிகளாலும் ஏற்படுகிற விபத்துக்கள் பற்றி இங்கு எடுத்துச்சொல்லப்பட்டது. நான் உள்ளபடியே பொது மக்கள் நன்மைக்காக, எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த பொது நல வாதிகள் இதிலே அக்கறை செலுத்தவேண்டுமென்று ஒரு பட்டியலைப் படித்துக்காட்டுவது தேவை என்று கருதுகிறேன். 1966-ம் ஆண்டு மாத்திரம்- சென்ற ஆண்டு மாத்திரம் -ஏற்பட்டிருக்கிற விபத்துகளின், அந்த விபத்துக்களிலே ஆளாக்கப்பட்ட பேருந்து வண்டிகள் எவ்வளவு என்று பார்த்தால், சென்னையில் 863. மொத்தத்தில் ஒவ்வொரு மாவட்டத்தையும் எடுத்துக்கொண்டால் செங்கற்பட்டு, வட

ஆற்காடு என்று இப்படி மாவட்டங்களில் மொத்தம் 1,950 பஸ்கள் விபத்துகளில் ஆட்பட்டிருக்கிறன்றன, அதிலே லாரிகள் 2,317 விபத்துகளில் ஆட்பட்டிருக்கின்றன. டாக்ஸிகள், ஆட்டோரிக்ஷாக்கள் 719 விபத்துக்களில் ஆட்பட்டிருக்கின்றன. ஆக மொத்தம் 4,986 போக்குவரத்துச் சாதனங்கள் இந்த ஓராண்டுக் காலத்தில் விபத்துகளில் ஆட்பட்டிருக்கின்றன. இதன் மூலம் கொல்லப்பட்டவர்கள் 707 பேர்கள். ஓராண்டுக் காலத்தில் 707 பேர்கள் போக்குவரத்துச் சாலைகளில் வாகனங்கள் தீலம் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 1960-ம் ஆண்டிலிருந்து 1967-ம் ஆண்டு வரையில் எவ்வளவு பேர்கள் கொல்லப்பட்டிருக் கிறார்கள் என்று பார்த்தால், 1959-60ல் 537 பேர்களும் 1960-61ல் 615 பேர்களும், 1961-62ல் 670 பேர்களும். 1962-63ல் 679 பேர்களும், 1963-64ல் 661 பேர்களும், 1964-65ல் 702 பேர்களும், 1965-66ல் நான் ஏற்கெனவே குறிப்பிட்ட 707 பேர்களும் விபத்துகளிலே கொல்லப்பட்டிருக் கிறார்கள். இது சாதாரணமான விஷயமல்ல. மனித உயிர்கள் நசுக்கி எறியப்படுகிற காய்கறித் துணுக்குகள் அல்ல ; மனித உயிர்கள் காலால் மிதிக்கப்படுகிற பூச்சி, புழுக்கள் அல்ல. வாகனங்களை ஓட்டுகிற காரோட்டிகளானாலும், கண்டக்டர் களானாலும், மனித உயிர்களை அலட்சியப்படுத்தும் அளவுக்கு மிக அக்கறையற்ற தன்மையில் இந்த வாகனங்களைச் செலுத்தி வருகிறார்கள் என்பதை மறுக்க முடியாது. இதிலே ஈடுபடுகிறவர்களை, இன்னும் தீவிரமாக அவர்கள் மீது கடும் நடவடிக்கைகளை எடுப்பதற்கான முறைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். லாரி விபத்துக்களைப் பொறுத்த வரையில் லாரிகளை இரவு நேரத்தில் செலுத்துவதால்தான் ஏற்படுகின்றன என்று காரணம் சொல்லப்படுகிறது. அப்படியானால் பஸ்களெல்லாம் இரவில் ஓடுவது இல்லை. அதிலும் விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதிலே நல்ல அக்கறை, பயிற்சி பெற்ற கார் ஓட்டுனர்களை நியமிப்பது என்று ஒத்துழைப்புத் தரவேண்டும். நல்ல யோசனைகளை மாநில அளவில் அமைந்திருக்கும் பஸ் போக்குவரத்து ஆய்வுக்குழு-ஆலோசனைக் குழு-அரசுக்கு எடுத்துச் சொல்லும் என்று எதிர்பார்க்கிறேன். அவர்களுடைய நல்ல ஆலோசனைகள்

தமிழ்நாட்டு மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும். பயன்படுத்தப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

டாக்ஸிகளில் ஆட்களை அதிகமாக ஏற்றுவது குறித்து உறுப்பினர் திரு. ஆசைத்தம்பி எடுத்துச் சொன்னார்கள். கோர்ட்டுக்குப் போகிறார்கள் டாக்ஸி சொந்தக்காரார்கள் என்பதற்காக அந்த உத்தரவு நிறுத்தப்பட்டிருக்கிறதோ என்ற ஐய வினாவினை எழுப்பினார்கள். அது இல்லை காரணம். எத்தனை பேர்கள் இந்த வண்டிகளில் ஏறலாம் என்ற கணக்கினை நாம் நிர்ணயிப்பதன் காரணமாக, இந்த வண்டிகளைத் தயாரித்த நிறுவனங்கள் அதுபற்றிய தகவல்களை அனுப்பவேண்டு மென்றுத் தமிழக அரசின் சார்பாகக் கேட்கப்பட்டது. அவர்கள் தகவல்களை அனுப்பச் சற்றுத் தாமதமாகிவிட்டது. அவர்கள் அனுப்பிய விதத்தில் ஃபியட் கார்களில் டிரைவர் அல்லாமல் நான்கு பேர்களும், அம்பாஸடர் கார்கள் டாக்ஸிகளாகப் பயன்படுத்தப்பட்டால் டிரைவர் அல்லாமல் ஐந்து பேர்களும் அதைவிடப் பெரிய வண்டிகளில் - 300க்கு மேற்பட்ட வண்டிகள் இருக்கின்றன- டிரைவர் அல்லாமல் ஆறுபேர்களும் ஏறலாம் என்ற அளவுக்கு இந்த வண்டிகளைத் தயாரித்த நிறுவனங்களே எங்களுக்கு அறிக்கை சமர்ப்பித்திருக்கின்றன. ஆகவே, இது சட்டத்திற்கோ, நியாயத்திற்கோ நீதிக்கோ புறம்பானது அல்ல. தயாரிக்கும் இடத்திலிருந்து அந்த வண்டிகளின் இட வசதி, தாங்கக்கூடிய சக்தி ஆகியவற்றைக் கொண்டு எத்தனை பேர்கள் ஏறலாம் என்று அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையின்பேரில் அந்த உத்தரவைப் பிறப்பிக்க இருக்கிறது. இதனால் டாக்ஸி சொந்தக்காரர்களின் மனது புண்படுவதாக ஆகாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர் திரு. ஆசைத்தம்பி அவர்கள் இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். ஹெரால்ட், ஸ்டாண்டர்டு போன்ற வண்டிகளில் அவர்கள் அனுமதிக்கிற அளவுக்கு ஏதோ நான்கு பேர்களை, ஐந்து பேர்களை ஏற்றிக் கொள்ளச் சற்றுத் தாராள மனம் காட்டலாம் என்று குறிப்பிட்டார்கள். தாராள மனம் காட்டலாம். ஏற்றினால் ஆட்சேபணை இல்லை என்று கூடச் சொல்லாம். ஏற்றாவிட்டால் அவர்கள்மீது பிராயாணிகள் வழக்குப் போட

முடியாது என்று கூடச் சொல்லிவிடலாம். அதனுடைய அளவு, கபாஸிடி, வலிவு இவற்றைப் பொறுத்துதான் அதில் பிராயாணிகள் ஏறவேண்டும் என்ற அளவிலும், பொது மக்களுடைய நன்மையை உத்தேசித்தும், இந்த டாக்ஸிகளில் ஆட்களை அதிகப்படுத்துவதற்கான உத்தரவை இந்த அரசு வழங்க இருக்கிறது. அதே வகையில்தான் திருச்சி, மதுரை, கோவை ஆகிய இடங்களில் டாக்ஸிகள் மீட்டர் பொருத்திக் கொள்ள வேண்டும் என்றும் இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதுவும் பொது மக்களுடைய நன்மைக்காகத்தான் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மூன்று மானியக் கோரிக்கைகளின் மீதும் நல்ல கருத்துக்களையெல்லாம் வழங்கிய மாண்புமிகு உறப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் பாராட்டுதலையும் தெவித்துக்கொண்டு, இந்த மானியங்களின் பேரில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளை உறுப்பினர்கள் திரும்பப் பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நஷ்டஈடு கொடுக்கவேண்டுமென்று திரு. வினாயகம் அவர்கள் சொன்னார்கள். நஷ்டஈடு கொடுக்கவேண்டுமென்று அதற்குத் தகுந்தபடி நாங்கள் ஒரு வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்திருந்தால், அதற்காக இந்த மானியத்தில் ரூ. 3 கோடி வழங்கவேண்டும் என்று கோரியிருந்தால்; அவர்கள் வழக்கறிஞர் அல்லவா, இவ்வளவு நஷ்டஈடு கொடுத்தா நாட்டு டைமையாக்க வேண்டும், ஆகவே தேவையில்லை என்று வாதாடுவார்கள். ஆகவே அப்படிப்பட்ட வாதங்களெல்லாம் வேண்டாம் என்ற காரணத்தினால்தான் இருக்கின்ற நிலைகளை உத்தேசித்து, முதலாளிகளுக்கும் வேண்டுமென்றே பாதகம் செய்யாமல் நாம் அனுசரித்து வருகிற கொள்கைமையத்தில் இருந்து கொண்டு, நாம் இந்தக் காரியத்தைச் செய்கிறோம், ஆகவே இந்த வெட்டுப் பிரேரேணைகளை திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மான்யக் கோரிக்கைகளை ஒருமனதாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

## நீர்ப்பாசனத் துறை

உரை : 21 நாள் : 10.07.1967

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே தற்போதுள்ள பாசனத் திட்டங்களைப் பேணல், செப்பனிடல், விரிவாக்கல், சீரமைத்தல் ஆகியவற்றிக்கான செலவும், வெள்ளம், புயல் தணிப்பு வேலைகளுக்கான செலவும் கோரிக்கை XXVI பாசனம் என்ற மானியத்திலிருந்து செலவிடப்படும் நிறைவேறிவருகிற அல்லது நடப்பு ஆண்டில் மெற்கொள்ள இருக்கிற புதிய பாசன வேலைத் திட்டங்களுக்குச் செலவிடும் பெரும் பகுதியை கோரிக்கை XLI பாசனத்திற்கான மூலதன முதலீடு என்ற மானியத்திலிருந்து செலவிட வேண்டும். கோரிக்கை XXVI-ல் ஒதுக்கப்பட்ட தொகையில் வருவாய்த் துறையினரால் கண்காணிக்கப்பெறும் சிறுபாசன வேலைகளுக்கான 74,52,200 ரூபாயும் இதில் அடங்கியுள்ளது. ''பாசனப் பணிகளின் இயல்பான அமைப்பிற்கும், ஆக்கத்திற்கும் அவற்றிற்கு இன்றியமையாது வேண்டப்படும் பணியாட்கள், கருவிகள், பொறிகள் இவற்றின் மொத்த செலவுத்தொகை கோரிக்கை XXVIII-ன் கீழ்வருகிறது. பாசனச் செலவின் ஒரு பகுதியான 40,17,600 ரூபாய் கோரிக்கை XXVI பாசனம் என்ற தலைப்பின்கீழ் வருகிறது. எனவே 1967-68-ல் பாசனத்திற்காகச் செலவிடப்படவிருக்கும் மொத்த மானியத் தொகை 15,43,05,200 ரூபாய் ஆகும்.

இவ்வமைச்சரவை இவ்வாண்டு மார்ச் திங்கள் 6-ம் நாள் அரசின் பொறுப்பை எற்றுக்கொண்டது. அப்பொழுது நிலவிய சிக்கல்கள் பலவற்றிற்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டி யிருந்தது. அவற்றுள் காவிரிக் கால்வாய் பகுதிகளில் கோடைப்

பயிருக்கும், திருநெல்வேலி மாவட்டத்தில் முன் கார்ப் பயிருக்கும் வேண்டிய பாசன வசதியை அளிக்க வேண்டியது முதன்மையான தேவை. இப் பாசன தேவைகள் உடனடியாக கண்டறியப்பட்டு, மேட்டூர், பாபநாசம் நீர்த்தேக்கங்களிலிருந்து பாசன வசதி அளிக்கப்பட்டது. இதன் பலனாக இக்கோடைப் பயிர்கள் மூலம் நல்ல விளைச்சல் கிடைத்தது. அறுவடைக்குப் பின் கூடுதலாக 110,000 டன் நெல் கிடைத்தது. தாமிரவருணி ஆயக்கட்டில் நடப்பு ஆண்டில் எவ்வளவு பரப்பளவிற்கு பாசன வசதி வழங்க முடியுமோ, அந்த அளவு நிலப்பரப்பில் மட்டுமே முன் கார் பயிரிட அனுமதிக்கப்பட்டது. இவ்வாறு விழிப்புடன் இருந்து பாசன வசதியை முறைப்படுத்தியதனால் தாமிரவருணி கழிமுகப் பகுதியில் பயிரிடப்படும் முறையான கார்ப்பயிருக்கு உரிய காலத்தில் ஆற்றுக்கால்கள் திறந்து விடப்பட்டன. கோதையாற்றிலிருந்து உரிய காலத்தில் நீர்விடப்பட்டது.

இம் மாதக் தொடக்கம் வரை தென்மேற்குப் பருவ மழை தொடங்கவில்லை. மேட்டூர் தேக்கத்தை ஜூன் 12-ம் தேதி திறப்பதற்குத் தேவையான அளவுக்கு நீர் மட்டம் உயரவில்லை. பருவ மழை வலுத்து, புதுப்புனல் வெள்ளம் பயிர்த் தொடக்க காலத்தில் போதிய அளவிற்குப் பெருகினாலன்றி பெருகிவரும் பாசனத் தேவைக்கேற்ப நீர் வழங்க இயலாது. ஜூன் 28-ம் தேதியிலிருந்து ஜூலை 1-ம் தேதி வரை காவிரிநீர்வரவுப் பகுதிகளில் மழை வலுத்தது. போதுமான அளவுக்குப் புது வெள்ளம் வரும் என்றும், நீர் வரவுப் பகுதிகளில் பொதுவாக ஜூலைத் திங்களில் பெய்யக்கூடிய மழை தொடர்ந்து பெய்யுமென்றும் எதிர்பார்த்து, மேட்டூர் நீர்த்தேக்கம் ஜூலை 3-ம் தேதி திறந்துவிடப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைப் பணிகளைத் தொடங்க இது பெரிதும் பயன்படும் என்று நான் நம்புகிறேன். முனைப்பு விளைச்சல் திட்டத்திற்கு உதவும் வகையில் நீர் வழங்க இயன்ற வழிகளையெல்லாம் இவ்வரசு மேற்கொள்ளத் தயங்காது என்பதையும் நான் இப்பேரவையில் இத்தருணத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

பெரியாறு இருபோக நிலங்களுக்கு வழக்கத்திற்கு 15 நாட்கள் முன்னதாகவே தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது. சிறப்புக் கோடைப் பயிர் செய்யப்படுவதனால் திருமங்கலம் கால்வாய் இத்திங்கள் இறுதியில்தான் திறக்கப்படும். கீழ்ப்பவானி

ஆயக்கட்டிற்கு வழக்கமான காலத்திற்கு முன்பே தண்ணீர் திறந்து விட முடியுமென நம்புகிறோம். அதைப்பற்றிய அறிவிப்பு தகுந்த காலத்தில் முன்கூட்டியே வெளியிடப்படும்.

சாத்தனூர், கிருஷ்ணகிரி நீர்தேக்கங்களில் போதுமான நீர் உள்ளது. இப்பொழுது இதனைப் பயன்படுத்தி சாத்தனூர் ஆயக்கட்டில் 12,000 ஏக்கர் பரப்பளவிலும், கிருஷ்ணகிரி ஆயக்கட்டில் 12,000 ஏக்கர் நிலத்திலும் குறைந்தகால நெல் பயிர் விளைவிக்கத் தண்ணீர் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. இத் தேக்கங்கள் மீண்டும் வடமேற்குப் பருவமழைக் காலத்தில் பெரும்பாலும் நிரப்பும். எங்கெல்லாம் நீரைச் சேமித்துப் பாசன வசதியை ஒழுங்குப்படுத்தி அதிக விளைச்சலைக் காண வாய்ப்புகள் உள்ளனவோ அங்கெல்லாம் இவ்வரசு கூர்ந்து ஆய்ந்து ஆவன செய்துள்ளனர் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்து அகம் மகிழ்வர் என்று எண்ணுகிறேன். இவ்வாண்டின் பற்றாக்குறைக் காலத்தில் இவ்வதிக உற்பத்தி நமக்குப் பெரிதும் உதவும்.

வடகிழக்குப் பருவகால நீர் வரத்தைத் தேக்கி பாசனத் தேவைக்கு வழங்க மற்றொரு முக்கியமான நடவடிக்கையையும் இவ்வரசு மேற்கொண்டுள்ளது. சென்ற ஆண்டு நவம்பர் 3, 10, 28, ஆகிய மூன்று நாட்களில் கடும் புயல் வீசியதையும், பெரு மழை பெய்ததையும் உறுப்பினர்கள் இன்னும் மறந்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இயற்கையின் இத்தகைய சீற்றத்தால் செங்கற்பட்டு, வடார்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் உள்ள பல ஏரிகள் உடைந்தன. கரைகள் தகர்ந்தன. கலிங்குகள் அழிக்கப்பட்டன. எனினும் உடனடியாகச் சுற்றுக்கரைகள் அமைத்து எஞ்சிய நீரையேனும் கட்டிக்காக்கும் முயற்சிகள் நிறைவேறின. செப்பனிடும் வேலையின் இரண்டாம் நிலைப்பணி இப்பொழுது நிறைவேறி வருகிறது. இதற்கென ஒரு தனி வட்டம், தேவையான பணியாளர்களுடன் செயலாற்றி வருகின்றது. இவ்வாண்டு இப்பணிகளுக்காக ரூ.125 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வீடூர் அணை உடைந்து மூன்று பகுதிகளில் கரை அழிந்து போயின. அவையும் திறம்படச் செப்பனிடப்பட்டு வருகிறது. வரும் பாசனக் காலத்தில் நீரைத் தேக்கி பயிருக்கு வழங்கும் நிலையில் அது அமையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

அடுத்து, பெரும்பாசன, நடுத்தரத் திட்டங்கள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளன என்று குறிப்பிட நான் விரும்புகிறேன். இது நான்காவது திட்டத்தின் முதல் ஆண்டாகும். பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம், சிற்றாறு-பட்டணம்கால், கோமுகி, மணிமுத்தாறு நதி ஆகிய தொடர்ந்து நிறைவேற்றப்படும் திட்டங்கள் மேலும் விரைந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன, பரம்பிக்குளம் - ஆளியாறு திட்டத்தின் இரண்டாவது வேலை நிலை இப்பொழுது நிறைவேறியுள்ளது. பரம்பிக்குளம் அணை, தூணக் கடவு அணை, சர்க்கார்பதி மின் நிலையம், திருமூர்த்தி அணை ஆகியவை 1966 அக்டோபரிலிருந்து ஆளியாறு தேக்கத்திலிருந்து 27,000 ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது. இவ்ாண்டு பிப்பிரவரி 15-த் தேதியிலிருந்து பரம்பிக்குளம் தலைக்கால்வாய் உடுமலைப்பேட்டை கால்வாய் இவற்றின் கீழ் 34,000 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் வழங்கும் ஏற்பாடு அறிவிக்கப்பட்டது. 1967-68-ம் ஆண்டில் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் இதுவரை 68,500 ஏக்கர் நிலத்திற்கு பாசனத்திற்கு தண்ணீர் விடப்பட்டது.

கோமுகி திட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. 1966-ம் ஆண்டு செப்டம்பர் 10-ம் தேதி முதல் 1,250 ஏக்கர் நிலங்களுக்கும், 1966 நவம்பர் 20-ம் தேதி முதல் 750 ஏக்கர் நிலங்களுக்கும் பாசன வசதி அளிக்கப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் இராம நதித் திட்டம். கடானா நதித் திட்டம், ஆகிய இரு திட்டங்களுக்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. வரும் ஆண்டுகளிலேயே இவற்றிற்கான வேலைகள் தொடங்கப்பெறும். ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை நிறைவேற்றி அவற்றினின்றும் பலன் காணும் முறையில் அவற்றை முடித்த பின்னரே புதுத்திட்டங்களை மேற்கொள்ளவேண்டுமென்பது நமது கொள்கை. ஒரே காலத்தில் பல்வேறு திட்டங்களுக்கு ஒதுக்கிய நிதியைப் பகிர்ந்து விடுவதால் உரிய காலத்திற்குள் அத் திட்டங்கள் அனைத்தும் நிறைவேறி நாட்டிற்கு உறுபயன் கிடைப்பது அரிதாகிறது. பாசன வசதியை மேலும் விரிவடையச் செய்யவேண்டுமாயின் நம் பழம்பெரும் பாசன முறைகளைச் சீரமைத்து பாசன வசதிகளையும் முறைப்படுத்த வேண்டும். இத்துடன் அமையாது, நீரைச் சிக்கனமாக பயன்படுத்தி இயன்ற

அளவுக்குச் சேமிக்கவும் வேண்டும். இக்குறிக்கோளுடன் அமராவதி, தாமிரவருணி, காவிரி முதலிய ஆறுகளின் பாசனக் கால்வாய்களைச் சீரமைக்கும் திட்டத்தை நாம் மேற் கொண்டுள்ளோம். அவை விரைவாக முன்னேறி வருகின்றன, வைகைச் சீரமைப்புத் திட்டமும் பெரியாறு கால்வாய்களுக்கான திட்டமும் ஆய்வில் உள்ளன. பெரியாறு குறித்த திட்டங்கள் உருவாகிவருகின்றன. திட்டக்குழு வைகை ஆற்றுக்கான திட்டத்திற்கு ஒப்பளிப்பு அண்மையில் வழங்கியுள்ளது. நீரைப் பயன்படுத்துவதில் சிக்கனம் பெரிதும் தேவை என்பதை நான் மீண்டும் வலியுறுத்திக் கூறவேண்டியுள்ளது. இந்தச் சேமிப்பினாலும் , குறுகிய கால மிகு பயன்தரும் விதைகளை நாம் பயிரிடுவதாலும், வேளாண்மை உற்பத்தியில் நாம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காண முடியும், இம்முயற்சி, தஞ்சை மாவட்டத்தில் இப்பொழுது விறுவிறுப்புடன் நடைபெறு கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் ஈண்டுக் குறிப்பிட விரும்புகிறேன்.

இதற்கு அடுத்தாற்போல் நாம் நாட வேண்டியது நில நீர் ஆராய்ச்சி, இதை அறிவியல் முறையில் ஆராய்ந்து எவ்வளவு மிகுதியாக இந்நீரை வேளாண்மைக்குப் பயன்படுத்த முடியும் என்று காணவேண்டும். அது நம் வளர்ச்சிக்கு ஒரு முக்கியத் தேவை. இப்பணி இப்பொழுது ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் ஆரணி யாறு, கொற்றலையாறு பகுதிகளில் துவக்கப்பட்டு, பாலாறு, நெய்வேலிப்பகுதி, காவிரி ஆகிய மூன்று பகுதிகளிலும் படிப்படியாக நிறைவேற்றப்படும், இது தவிர, மத்திய அரசு ஊக்கமளிக்கும் திட்டத்தின்கீழ், மாநிலம் முழுவதும் எங்கெங்கு எவ்வளவு நில நீர் வாய்ப்புகள், இருக்கின்றன என்பதை ஆராய ஒரு திட்டம் ஒப்புதல் அளிக்கப்பெற்று உள்ளது. இந்த ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மூலனூர் பகுதியிலும், திருச்சி மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளிலும் இவ்வேலை தொடங்கும். படிப்படியாக இப் பிரிவின் ஆராய்ச்சி ஏனைய பகுதிகளுக்கும் விரிந்து பெருகும்.

உணவு உற்பத்தியில் பெரும் அக்கறை காட்டி உழவர் மக்கள் அயராது உழைத்து வரும் இந்நாளில் ஆங்காங்கே உள்ளூர் தேவைகளையும், பற்றாக்குறைகளையும் கண்டு,

அவற்றினை உடனடியாகப் போக்கி அவர்களுடைய பெரும் பணியில் அவர்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்க வேண்டுமென்பதே இவ்வரசின் தலையாய கொள்கை. இக் குறிக்கோளுடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட மாநாடுகள் கூட்ட நாம் முடிவு செய்துள்ளோம். அதற்கேற்ப இந்த அமைச்சரவை பொறுப்பேற்ற ஒருசில நாட்களுக்குள்ளேயே மே திங்களில் தஞ்சை மாவட்டத்திலும் ஜூன் திங்களில் தென்னார்காடு மாவட்டத்திலும் முறையே இரண்டு மாநாடுகள் நடைபெற்றன. இம் முயற்சியால் பெரிதும் ஆக்கம் விளைந் துள்ளது. உழவர் குடிமக்களின் தலைவர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியப் புதுத் தலைவர்கள் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர். உள்ளூர் உழு குடிமக்களின் தேவைகளைத் தெள்ளிதின் அறிந்து அவைபற்றி உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள இம் மாநாடுகள் பயன்பட்டன. எடுத்துக்காட்டாக, காவிரிப் பகுதியில் பாசனத் தேவைகள் குறித்து 375 வேண்டுகோள்கள் கிட்டின. இவற்றுள் 67 முறையீடுகள் ஏற்கனவே ஆராயப்பட்டு நிறைவேற்றப்படும் நிலையில் உள்ளன. 171 முறையீடுகள் உடனடியாக ஆராயப்பட வேண்டும் எனப் பணிக்கப்படுள்ளன,. 122 கோரிக்கைகள் பரிசீலனையில் உள்ளன. வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் பகுதிகள் பற்றிய வேண்டுகோள்கள் 507 அவற்றுள் ஆராய்ந்து செயலுற வேண்டிய நிலையில் உள்ளவை 89 பரிசீலனையில் உள்ளவை 126 பரிசீலனை மேற்கொள்ள வேண்டியவை 173. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கிடைத்த மொத்த வேண்டுகோள்கள் 463. பரிசீலித்து செயல்படும் நிலையில் உள்ளவை 135. பரிசீலனையில் உள்ளவை91. பரிசீலனை மேற்கொள்ள வேண்டியவை 35. எஞ்சியவை தேவையில்லா தவை அல்லது இயலாதவை எனத் தள்ளப்பட்டன. இம்மாவட்ட மாநாடுகள் பல நாட்களாக நிறைவேற்றப்படாது உள்ள பொதுத் தேவைகளையும் பாசனத் துறையில் உணரப்பட்ட அன்றாடத் தேவைகளையும் அலுவலர்கள் கருத்திற்கொண்டு அவற்றை உடனடியாக நிறைவேற்ற உதவியுள்ளன. எடுத்துக்காட்டாக

காவிரியாற்றுப் பகுதியில் மன்னியாற்றறு தலைமதகை மாற்றவேண்டியது ஓர் உடனடித் தேவை, ஆனால் நீண்ட நாட்களாக நிறைவேற்றப்படவில்லை. இதை உடனடியாக ஆய்ந்து மேற்கொள்ள வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. பழவாற்றின் கரையைச் சீரமைப்பதும் இப்பொழுது விரைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. உழவர் குடிமக்களின் தேவைகள் உடனடியாக நிறைவேற்றப்படவேண்டுமாயின் அரசின் பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இவ்வகையில் இம்மாநாடுகள் உதவியுள்ளன. பொதுப்பணி, வேளாண்மைத் துறை, வருவாய்த் துறை ஆகியவை ஒருகிணைந்து தத்தம் செயல்முறைகளை இசைந்து செய்து மக்களின் மொத்தத் தேவையை நன்கு தீர்க்க வேண்டிய முறையில் செயலாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்திக்கூற விழைகிறேன்.

இவ்வழியில் பயன்காண இவ்வரசு இரண்டு முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இப்பொழுது செயலாகிவரும் திட்டங்களையும் , இனி மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளையும் ஆராய்ந்து எவ்வாறு உணவு உற்பத்தியைப் பெருக்கலாம் என்பது பற்றிப் பரிசீலனை செய்யுமாறு உணவு உற்பத்தி ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டார். அவரது அறிக்கையை ஆராயந்த பின்னர் வேளாண்மைத்துறை, பொதுப் பணித்துறை ஆகிய இருதுறைகளிலும் தேவையான ஆணைகள் பிறப்பிக்கபடுகின்றன. மிகு பயன் தரும் குறுகிய காலப்பயிர் வகைகளை மேற்கொள்ளுவதன் மூலம் நமக்குக் கிடைக்கும் நீர் வசதியை அதிகப் பயன்தரும் வகையில் பயன்படுத்தி நீரைச் சேமிக்கவும், அதனால் கிட்டும் பயனைப் பெருக்கவும், பாசன முறை பாசன வழிவகைகள் ஆகியவற்றை மாற்ற வேண்டியது மிக அவசியம். இதில் பங்கு கொண்டுள்ள பல்வேறு நிர்வாக அமைப்புகள் இணக்கமாகச் செயலாற்றும் வகையில் உணவு உற்பத்தி ஆணையர் பணியாற்றுவார்.

இரண்டாவதாக பொதுப்பணித்துறையையும் அதனுடன் சேர்ந்த பல பொறியியல் பிரிவுகளையும் சீரமைத்து முறைப் படுத்துவது அரசின் இரண்டாவது நடவடிக்கை. இவ்வமைப்பு தற்பொழுது இரண்டு, மூன்று பிரிவுகளாக தனித்தனியே இயங்கி வருகிறது. உணவு உற்பத்தி வட்டம் வருவாய்த்துறை வாரியத்தின்

கீழ் இயங்கி வருகிறது. சிறப்புச் சிறுபாசனத் திட்ட வேலைப் பணியாளர் குறிப்பிட்ட சிறப்புச் சிறுப்பாசனத் திட்டங்களை ஆராய்ந்து, நிறைவேற்றி வருகின்றனர். பாசன முறைகள் பாசன நிலைகளைப் பேணுதல் மற்றும் கட்டிட வேலைகள் இவற்றைப் பொதுப்பிரிவுகள் நிறைவேற்றுகின்றன. சிறுபாசன நிலைகள் பஞ்சாயத்து ஒன்றிப்புகள் வட்டாரப் பொறியாளர் ஆகியோரின் அதிகாரத்தின் கீழ் இருக்கின்றன. ஒரே வட்டாரத்தில் பல்வேறு அமைப்புகள் பணி புரிவதால் அவர்களுடைய பொறுப்பும் பிரிந்து சிதறிவிடுகிறது. சிறப்புப் பிரிவுகளின் பணிப் பொறுப்பும் விரிந்து கிடக்கிறது. ஒரே பகுதியில் பல்வேறு வகைப் பணிகளை வெவ்வேறு பிரிவுகள் நிறைவேற்றி வருகின்றன. குறிப்பிட்ட ஒரு வேலையை எத்துறை நிறைவேற்றுகின்றது என்பதைக் கண்டறிவது எளிதில் இயலாத காரியமாக உள்ளது. இக்குறைபாடு, மாவட்ட மாநாட்டில் சுட்டிக் காட்டப்பட்டது. புதிய அமைச்சரவை இக்குறையை களைய முடிவு செய்துள்ளது. பல்வேறு பிரிவுகளை ஒருங்கிணைத்து அவற்றிற்கான அதிகார வரம்பை சீரமைத்து வெவ்வேறான பணிகளை, அவை, பெரிய பாசன வேலையாயினும் சிறு பாசன வேலையாயினும் அல்லது அவற்றின் ஒரு பகுதி முழுவதற்கும் ஓர் அதிகாரியின் பொறுப்பின்கீழ் கொண்டு வருவது சாலச்சிறந்தது. என்று கொள்கையளவில் விரைவில் முடிவு எடுக்கப்படும்,. பொதுப்பணித்துறையின் வேலைத்திறனை மேம்படுத்தவும் பணிகளை விரைந்து செய்யவும் ஏற்ற இம்முறைமாறுதலை இப்பேரவை வரவேற்க்கும் என நம்புகிறேன்,

தமிழகத்தின் தலைநகரமாகிய சென்னை மிக விரைவில் வளர்ச்சி அடைந்துள்ளது, அதன் நகர்ப்புற எல்லையும் விரிவடைந்துள்ளது, மக்களின் எண்ணிக்கையும் பெருகியவாறே உள்ளது. அதற்கேற்ப சுகாதார நீர் வழங்கு ஏற்பாடுகள் சீரமைக்கப்பட வேண்டும். ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்ட இக்குறுகிய காலத்திலேயே இவ்வரசு இதனைக் கவனித்துத் திட்டங்கள் வகுத்துள்ளது. கூவம் ஆற்றிற்குக் கரை அமைத்து, கடல் நீரை அதில் நிலையாக ஓடச் செய்யவும் அதன் கழிவாயில் ஒரு கலங்கல் கட்டி, மண்ணைத் தூர் எடுக்கவும் சுமார் 120 லட்சம் ரூபாய் செலவில் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பணியின் முதல் நிலை இவ்வாண்டிலேயே தொடங்கி ஓரிரு ஆண்டுகளில் முடிவுறும்.

குடிநீர் பற்றாக்குறையைப் போக்க சென்னை நகருக்கு காவிரி யிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டத்தை இப்பொழுது கூர்ந்து ஆராய்ந்து அதை மேற்கொள்ளும் வகையில் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது குறித்து இப்பொழுது இரண்டு கருத்துக்கள் நிலவி வருகின்றன. ஜேடாபாளையத்திலிருந்து குறைந்த அளவு தண்ணீர் பெறுவதா அல்லது வீராணத்திலிருந்து குறைந்த அளவு நீர் பெறுவதா என்பது இவற்றின் நன்மை தீமைகளை ஆராய்ந்ததில் குறுகிய காலத்தில் குறைந்த செலவில் உடனடித் தேவையை ஈடுகட்டி, இடைக்காலத் திட்டமாக நிறைவேற்ற வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதே நல்லது என இவ்வரசு கருதுகிறது. இந்த ஏற்பாட்டால் வீராணம் ஏரிப் பாசனத்திற்கு இடையூறு ஏதும் ஏற்படுமோ என்ற அச்சத்திற்கு இடமில்லை. சென்னை நகருக்கு நாள்தோறும் வீராணம் ஏரியிலிருந்து 75 கியூசெக்ஸ் மட்டுமே தேவையாகும். பாசன காலத்தில் அதாவது ஜூன் முதல் பிப்ரவரி வரை உள்ள பாசன நீர் அளவில் இது மிகவும் குறைந்த ஒரு பகுதி, கோடைக் காலத்தில் குள்ளக் கார்ப்பயிருக்கு ஊறு நேராவண்ணம் சென்னை நகரின் தேவைக்கேற்ப மேட்டூரிலிருந்து அதிக நீரை வீராணத்தில் பாயுமாறு செய்து, அங்கிருந்து சென்னை நகருக்கு வழங்குவதால் வீராணம் ஏரியிலுள்ள நீர் இருப்பு குறைந்துவிடாது. மேட்டு மதகுகளின் நீர்மட்டத்திற்கு ஏரியில் நீர் கட்டிய பின்னர், அதற்கு அதிகமான நீர் தேக்க அளவிலிருந்தே சென்னை குடிநீர் திட்டம் வீராண பாசனத்திற்கு இடையூறாக இருக்கும் என்ற அச்சத்திற்கு இடமே இல்லை.

பாசனம் மட்டுமின்றி நெடுஞ்சாலைகளும், சிறு துறைமுகங்களும் என் பொறுப்பில் இயங்குகின்றன. இவற்றைக் குறித்து ஒரு சில கருத்துக்களை கூற விழைகின்றேன். மத்திய அரசு மோட்டார் எரி எண்ணெய் வரி விதித்து வசூலிக்கிறது. இதில் மாநிலங்களுக்கு ஒரு பங்கு உண்டு, இப்பங்கை மத்திய நெடுஞ்சாலை நிதி எனத் திரட்டி, மத்திய அரசு ஒப்புதல் அளித்த சாலை, பாலம், கலங்கல் முதலிய திட்டங்களுக்குச் செலவிடப் படுகிறது. மூன்றாவது திட்டக் காலத்தில் மத்திய சாலை

நிதியிலிருந்து மொத்தம் ரூ. 111 லட்சமே கிடைத்தது. மக்களுடைய தேவைகள் முழுவதையும் ஈடுசெய்ய இந்நிதியில் இம்மாநிலத்திற்கான முழுத் தொகையையும் மத்திய அரசு நமக்கு அளிக்க வேண்டியது மிக அவசியம். திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தால் மட்டும் போதாது. அவற்றிற்கேற்ப ஆண்டுத் தேவைகளுக்கு வேண்டிய மானியத் தொகையை வழங்காவிடில் பணிகள் நிறைவேறா. ஒரு சில திங்கள்களுக்கு முன்வரை இவ்வவசியத்தை மத்திய அரசு அவ்வளவாக உணரவில்லை என நான் எண்ணுகிறேன். மார்ச் திங்கள் இறுதியில் நம் அரசின் விடாமுயற்சியால் ரூ.85 லட்சம் நமக்குக் கூடுதலாக நிதி வசதி கிடைத்தது. இவ்வாண்டும் இவ்வாறே நிறைவேறும் திட்டங்களுக்கு வேண்டிய முழு நிதியையும் மத்திய அரசு வழங்கி உதவும் என்று நான் நம்புகிறேன். இது போன்று பொருளாதாரச் சிறப்பு வாய்ந்த அல்லது பிற மாநிலங்களை இணைக்கும் சாலைகள் இவற்றிற்கான மானியத் தொகையும், நிதி வசதியும் தேவைக்கேற்ப உயரவேண்டுமென நான் விரும்புகிறேன்.

சிறு துறைமுகங்கள் குறித்தும் ஓரிரண்டு கருத்துக்கள் கூற என் உள்ளம் விழைகின்றது. கடலூர் துறைமுகத்தை அதிகமாகப் பயன்படுத்த, பரவனாற்றிற்குக் கரை வகுத்து அதை ஆழப்படுத்தி அதன் கழிவாயில் உள்ள மண்ணைத் தூரெடுத்து போக்கு வரத்தை அதிகப்படுத்தும் திட்டத்தை 120 லட்சம் ரூபாய் செலவில் மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டமாக நாம் மேற்கொண்டோம். மூன்றாவது திட்டக் காலத்தில் மத்திய அரசு ரூ. 50 லட்சம் மானியமாக வழங்க ஒப்புதல் அளித்தார்கள். மத்திய அரசு நான்காவது திட்டத்தில் எஞ்சிய ரூ. 70 லட்சமும் வழங்குவார்கள் என நம்பி அவர்களிடமும் அதைப் பன்முறை எடுத்துக் கூறியுள்ளோம். ஆனால், மத்திய அரசு நான்காவது திட்டத்தில் மாநிலங்களுக்கு எந்த முறையில் மத்திய நிதி உதவி வழங்குவது என்ற அடிப்படை இன்னும் உறுதியாகவில்லை யென இதுவரை முடிவை ஒத்திப்போட்டு வந்தார்கள். இப்பொழுது மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டங்கள்கீழ் சிறு துறைமுக வளர்ச்சி திட்டங்கள் சேரா எனவும் எஞ்சிய தொகைக்கு தமிழக அரசுப் பொறுப்பேற்க வேண்டுமெனவும்


கூறுகின்றது. இது பொருந்தாது. வெளி வாணிப வளர்ச்சி, அந்நியச் செலவாணி ஈட்டல் இவற்றிற்கு சிறு துறைமுக வளர்ச்சி ஒரு இன்றியமையாத தேவை. குறிப்பாக ஜப்பானுக்கு இரும்புக் கனிமப் பொருள்கள் ஏற்றுமதி செய்ய கடலூர் ஒரு நல்ல துறைமுகமென அவர்களே கருதுகிறார்கள். அரசின் வாணிபச் சாத்தும் இத்துறைமுக வளர்ச்சியை விரைவில் நிறைவேற்ற வேண்டுமென மாநில அரசை அடிக்கடி வற்புறுத்தி வந்துள்ளது. மத்திய போக்குவரத்துத் துறையின் வளர்ச்சி ஆலோசகரின் கருத்திற்கேற்ப, இத்திட்டம் இப்பொழுது மாற்றி வகுக்கப் பட்டுள்ளது. வெளிநாட்டு வாணிபம் சிறக்க அதிக அந்நிய செலவாணி நமக்கு ஈர்க்க இத்திட்டம் பெரும் உதவி. சென்ற திட்ட காலத்திற்கு போலவே எஞ்சிய 70 லட்சம் ரூபாயும் மத்திய அரசு நமக்கு மானியமாக வழங்க வேண்டும் என இந்த அரசு அழுத்தமாக வற்புறுத்தும் நிலையில் இருக்கிறது.

இறுதியாக இப்பேரவை உறுப்பினர் அனைவரும் கருத்தில் கொண்டுள்ள ஒரு முக்கியத் திட்டத்தைக் குறித்து நான் கூற வேண்டிய கடமை உண்டு. இது தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தைப் பற்றியது. இதை ஒரு பெரும் துறைமுகமாக ஓங்கச் செய்ய, இந்திய அரசியல் சட்டம் 258-ஏ பிரிவின் கீழ் இவ்வரசு இவ்வேலையை மத்திய அரசினிடம் ஒப்படைத்துள்ளது. நடுத்தரத் துறைமுகக் குழுவின் பரிவுரைக்கேற்ப தூத்துக்குடி பெரும் துறைமுக திட்டத்திற்கு செலவு மதிப்பீடுகள், எற்றுமதி-இறக்குமதி வாய்ப்புகள், எதிர்பார்க்கப்படும் வருவாய் விகிதம், இவை எல்லாம் கணக்கிட்டு விரிவான ஒரு திட்ட அறிக்கை ஏற்கெனவே மத்திய அரசிற்கும் திட்டக் குழுவிற்கும் அனுப்பப் பட்டுள்ளது. திட்டக் குழுவின் உறுப்பினரும், இதனை விவாதித்து ஏற்றுக்கொண்டுள்ளார். இதற்கு வேண்டிய முன்னோடி வேலைகளும், சாலை வசதிகள், குடிநீர் வசதி, இருப்புப்பாதை வசதி முதலிய அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளன. வடக்கு, தெற்கு ஆகிய இரு அலைத் தடுப்புக் கரைகளும் ஒரு பகுதி அமைக்கப்பட்டுவிட்டன. தமிழக அரசு, குடி தண்ணீர், சாலை வசதி இவைகளுக்காக 1 கோடி ரூபாய் வரை செலவினை மேற்கொண்டுள்ளது. துறைமுகத் திட்டத்தின் கீழ் மத்திய அரசும் 522 லட்சம் ரூபாய் செலவிட்டுள்ளது. இவ்வேலையை

நிறைவேற்றுவதில் எத்தனையோ இடையூறுகள், வேண்டிய இயந்திரக் கருவி, தளவாடங்கள் இன்மை, வேண்டிய அளவு நிதி ஒதுக்கப்படாமை போன்ற இடர்கள் இருப்பினும் வேலை கணிசமான அளவு முன்னேறியுள்ளது. வளர்ச்சித் திட்ட மதிப்பீடுகள் முழுவதையுமே அனுமதித்து, குறுகிய காலத்தில் துறைமுகத் திட்டத்தை முடிக்க, வேண்டிய தொகையை ஆண்டு தோறும் ஒதுக்க வேண்டுமென நாம் வற்புறுத்தியுள்ளோம். ஆனால் இப்பொழுது இத்துறைமுகத்தின் ஏற்றுமதி-இறக்குமதி வாய்ப்பு விவரங்கள் மறு பரிசீலனையில் உள்ளன எனக் கூறப்படுகிறது. இது விந்தையாக உள்ளது. வியப்பாகவும் இருக்கிறது. இவ்வாய்ப்புகளைக் குறைத்துக் காட்ட இது ஒரு முயற்சி போலும் இவ்வாறு திரிக்கப்பட்ட அடிப்படையில் இத் திட்டமே உருக்குலைந்து ஒரு மீன்பிடித் துறைமுகமாக மாறிவிடுமோ என்ற அச்சம் எழுகிறது.

இது உண்மையாயின், இது நமக்குப் பெரிதும் உதவியற்ற செயல் என நான் கூறுவேன். இப்பேரவையும் அதனை தயங்காமல் ஏற்கும். மத்திய அரசின் இரு தலைமை அமைச்சர்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்கிற்கு இது நேர்முரணாக உள்ளது. இத்திட்டத்தின் அடிப்படையைக் கூர்ந்து ஆராய்ந்தால், இதன் ஏற்றுமதி- இறக்குமதி வாய்ப்புகள் திட்டத்தைக் கைவிடும்படியான அளவு என்றும் குறைந்து விடாது என்பது தெளிவு. எப்படியும் இத்துறைமுகத்திற்கு வியாபார மிகுதி-விகித போக்கின் அடிப்படையில் 1970-71-க்குள் ஆண்டு ஒன்றுக்கு 1.7மில்லியன் டன்கள் ஏற்றுமதி-இறக்குமதி வாய்ப்பு ஐயமின்றிக் கிட்டும். ஏற்கனவே செல்விடப்பட்ட தொகையையும் கருதி, இன்னும் மீன்பிடி துறைமுகத்திற்கும் பெரும் துறைமுகத்திற்கும் செலவிட வேண்டிய தொகையையும் அவற்றின் பலாபலன்களையும் ஒப்பிட்டு நோக்கின் நீண்ட கால அளவில், பெருந்துறைமுகத் திட்டமே அதிகப் பயன்தரும். பொருளதார வளர்ச்சிக்கும் அதுவே வழி செய்யும். விருப்பு வெறுப்பற்று ஆராய்ந்தால் இம் முடிவு தெளிவாகும். இது குறித்து இம்மாநில அரசு ஏற்கனவே மத்தியப் போக்குவரத்து அமைச்சர், தலைமையமைச்சர், இவர்களிடம் எடுத்துக்கூறி, தொடர்பு கொண்டுள்ளது. மத்திய அரசு

நாம் காட்டிய விவரங்களின் வாய்மையையும், வலிமையையும் உணர்ந்து இந்தத் திட்ட மதிப்பீடுகளை அனுமதித்து இதை விரைந்து முடிக்க வேண்டிய ஆண்டு மானியத் தொகையை வழங்குவார்கள் என நான் நம்புகிறேன். மத்திய அரசு இதனை ஏற்காவிடில் இம்மாநில மக்கள் பெரும் ஏமாற்றத்திற்கு ஆளாவார்கள் என்பதையும் நான் குறிப்பிட விழைகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வரசின் பாசனக் கொள்கையையும் ஏனைய கூறுகளைப்பற்றிய கருத்துக்களையும் நான் எடுத்துக்கூறுவதற்குக் கிடைத்த இந்நல்வாய்ப்பிற்காக உங்களுக்கு என் நன்றி. பொதுப்பணி, பாசன நிர்வாக அமைப்புகள், அவை செயல்படும் முறைகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய முழு விவரங்கள் அடங்கிய ஓர் ஆய்வுரை பேரவையின் முன் ஏற்கனவே வைக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் அதனை உன்னிப் பார்க்குமாறு வேண்டிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.



## நீர்ப்பாசனத் துறை

உரை : 22 நாள் : 10.07.1967

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள நீர்ப்பாசனம், நெடுஞ்சாலை பொதுப்பணி, துறைமுகங்கள் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது இந்த மன்றத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர்களும், நம் எதிர்க்கட்சித் தலைவரும் நல்ல பல அறிவுரைகளையெல்லாம் எடுத்துக்கூறி, இந்தத் துறைகள் மேலும் வலிவு பெற்று தமிழகம் வளம் உள்ள சீமையாக ஆகவேண்டும் என்பதற்கான கருத்துரைகளை யெல்லாம் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். இறுதியாகப் பேசிய நம்முடைய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் விவசாயயத் துறையிலே நீண்ட நெடுங்காலமாகப் பெற்றுள்ள அனுபவத்தின் அடிப்படையில் நல்ல பல கருத்துக்களை யெல்லாம் எடுத்துச்சொல்லி, இறுதிக் கட்டத்திலே தெரிவிக்க வேண்டுமென்ற கடமையின் காரணமாக எதிர்ப்பைத் தெரிவித்து ஏனைய எல்லாப் பகுதிகளையும் வரவேற்றிருப்பது பாராட்டுதற்கும் போற்றுதற்கும் உரிய ஒன்றாகும். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தங்கள் தொகுதிகளிலே உள்ள குறைபாடுகளையும், நீர்வளம் பெருக்கி நிலவளம் பெருக்குவதற்கு இருக்கின்ற பல்வேறு சிறிய திட்டங்களையும் அவற்றை நிறைவேற்றவேண்டிய முறைகளையும் இங்கே ஒழுங்குபட எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக் கெல்லாம் தனித்தனியே அவையெல்லாம் எப்படி எப்படி நிறை வேற்றப்படக்கூடும் அல்லது இந்த வகையிலே அவையெல்லாம் அணுகப்பட இருக்கிறது என்பதற்கான விளக்கங்களையெல்லாம்

விரிவாக எடுத்துச்சொல்ல நேரம் இல்லாத காரணத்தால், தொகுதிகளைப்பற்றியக் கருத்துக்களை எடுத்துச்சொன்னால் அந்தக் கருத்துகள் எல்லாம் கைவிடப்பட்டுவிட்டன. அல்லது புறக்கணிக்கப்பட்டுவிட்டன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தவறாகக் கருதமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு பேசுகிறேன். எதிர்கட்சித்தலைவர் அவர்கள் பேசும்பொழுது நீர்ப்பாசன மாநாடுகள் நடத்தி விவசாயப்பெருங்குடி மக்களுடைய எண்ணங்களை ஆராய்ந்தறிந்து ஆவன செய்யவேண்டுமென்று , இடையிலே இரண்டு மூன்று ஆண்டுகளாக அந்த முயற்சி பட்டுப்போய் விட்டது என்றும் எடுத்துச்சொன்னார்கள்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு வேளாண்மைத் துறை மாநாடுகள், நீர்பாசனம், நெடுஞ்சாலைத் துறை மாநாடுகளும் பலப் பல மாவட்டங்களிலே நடைப்பெற்றிருக்கின்றன. நீர்ப்பாசனத் துறை, நெடுஞ்சாலைத்துறை என்ற துறைகளைப் பொறுத்த வரையில் தஞ்சை மாவட்டத்திலே, தென்னாற்காடு மாவட்டத்திலே இந்த மாநாடுகள் நடைபெற்று, ஆங்காங்கு தரப்பட்ட முறையீடுகள் எல்லாம் ஆராயப்பட்டு அந்த இடத்திலேயே வந்த முறையீடுகள் கணக்கெடுக்கப்பட்டு அவைகளிலே எத்தனை முறையீடுகள் உடனடியாக வேலை தொடங்கத்தக்கன எத்தனை பரிசீலிக்கத் தக்கன, எத்தனை எடுத்துக் கொள்ளத் தகுதியற்றவை என்பது எல்லாம் அந்த மாநாடுகளிலே சொல்லப்பட்டது. வேலை தொடங்கத்தக்கன. என்பவைகளுக் கெல்லாம் இன்றையதினம் வேலை தொடங்குவதற்கு நல்ல நிலையில் முயற்சிகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. ஒருவேளை கோயம்புத்தூரில் நடந்தால்தான் நீர்ப்பாசன மாநாடு நடந்ததாக அர்த்தம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கருதுவார்களானால் அந்த மாநாடு விரைவில் கோயம்புதூரில் நடைபெறும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையின் மீது வெட்டுப் பிரேரணையைத் தந்தவர்களும், மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேசியவர் களும் தங்களுடைய, தொகுதிகளுக்குத் தேவையான பல நல்ல திட்டங்களையெல்லாம் எடுத்துச்சொல்லியிருக் கிறார்கள். தொடக்கத்திலே இந்த மானியக் கோரிக்கையின் மீது வெட்டுப் பிரேரணையைத் தந்து விவாதத்தை ஆரம்பித்து வைத்த

மாண்புமிகு உறுப்பினர் நல்லசாமி அவர்கள் கரூர் வட்டாரப் பகுதியில் அமராவதி கால்வாய்களுக்கான சீரமைப்பு வேலைகள் தொடங்கப்படவில்லை, என்பதை மெத்த உருக்கத்தோடு எடுத்துச் சொன்னார்கள். அமராவதியின் ஒன்பது கால்வாய்கள் கரூர் பகுதியில் செம்மைப்படுத்தப்பட வேண்டிய கால்வாய்கள் ஆகும். அந்த 9 கால்வாய்களையும் சீரமைப்பதற்கான வேலைகள் இன்றையதினம் பரிசீலனையில் இருக்கின்றன. 'பார்ட்-2' ஸ்கீமில் இரண்டாவது திட்டத்திலே வரக்கூடிய அளவுக்கு ஒரு கால்வாய் அரசினர் கவனத்தில் வெகு தீவிரமாக இருந்து வருகிறது. அந்த வேலைகள் விரைவில் தொடங்கப்படும். இரண்டாவது கால்வாய் பொறியாளருடைய அறிக்கையை அனுப்புவதாக இருக்கிறார். மற்றும் ஐந்து கால்வாய்கள் தலைமைப் பொறியாளரால் மாத்திரம் நிர்ணயித்து அனுமதி வழங்ககூடியதாகும். இன்னும் இரண்டு கால்வாய்க ளுக்கு தலைமைப் பொறியாளர் அனுமதி வழங்கி மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரைக்காக அனுப்பப்பட்டு காத்துக் கொண்டிருக்கிறது. ஆக திரு. நல்லசாமி அவர்கள் தெரிவித்த அமராவதி கால்வாய்கள் ஒன்பதிலும் விரைவாய் வேலைத் தொடங்கப் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமை பட்டிருக்கிறேன். இவைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும். இவை மாத்திரமல்லாமல் வேறு பல பணிகளும் விரைவுப் படுத்தப்பட வேண்டுமென்பதை வலியுறுத்திச் சொன்னார்கள். இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு இந்த அரசிலே இப்படிப்பட்ட காரியங்கள் மிக விரைவாக நடைபெறவேண்டும், வேகமாக நடைபெறவேண்டும். ஆனால் உறுதியாக நடைபெற வேண்டும் என்பதிலே அழுத்தந் திருத்தமாக நம்பிக்கையோடு இந்த அரசு பணிகளைப் புரிந்து வந்திருக்கிறது. அதற்கான எடுத்துக்காட்டாகக் காலையில் நான் தந்துள்ள முன்னுரையிலே பல திட்டங்கள் எந்த வகையிலே நிறைவேற்றப்பட்டி ருக்கின்றன என்பதை எல்லாம் குறித்திருக்கிறேன்.

திரு. நல்லசாமி அவர்கள், கொல்லிமலை, குடகனாறு மருதையாறு, நொய்யல் திட்டங்கள் எல்லாம் நிறைவேறாமல் இருப்பதற்குக் காரணம் மைசூர் மாநிலத்திற்கும் சென்னை

மாநிலத்திற்கும் உள்ள தண்ணீர் ஒப்பந்தத் தகராறு என்று குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே, அது பொருந்தாத காரணங்கள் ஆகும். அப்படிப்பட்ட காரணங்களுக்காக இப்போது அந்தத் திட்டங்கள் ஒதுக்கி வைக்கப்படவில்லை அல்லது காலம் தாழ்ந்த நிலைமையில் இல்லை. அதனால் ஏற்படக்கூடிய வருவாய் செலவு பயன் விகிதம் இவற்றை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்து இரண்டுக்கும் பெருத்த முரண்பாடு இருக்கிற காரணத்தால் அவைகள் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன என்று சென்ற அரசில் அதை ஆராய்ந்தவர்கள் அறிக்கை தந்திருக் கிறார்கள். அதையொட்டித்தான் இந்தத் திட்டங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே எனக்கு மிக மிகப் பிடித்தமான குடகனாறுத் திட்டமும் ஒன்று என்பதை நல்லசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றிப் பொறியாளரால் ஆராயப்பட்டு அந்தத் திட்டத்திற்கு இந்த அரசு வழிவகுக்கும் என்பதை நான் எடுத்துச்சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் பேசும்போது நீர்நிலைப் பரிசோதனைகளை இராமநாதபுரம் மாவட்டத்திலும் மேற்கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். இப்போது ஆராயப்படுகிற இடங்கள் முழுமையடைந்த பிறகு, அவைகளில் பயன்கிட்டிய பிறகு. பயன் கிட்டுவதற்குத் தொடங்கிய பிறகு, இராமநாதபுரம் மாவட்டத்திலே குறிப்பாக கிழக்கு இராமநாதபுரம் பகுதியிலே இந்த நில நீர் ஆராய்ச்சி தொடங்கும். ஒரு சிரமம் என்னவென்றால் நில நீர் ஆராய்ச்சிக்கு பொதுவாக நிலத்தினுடைய வளம், வண்டல் மண் நிறைந்ததாக, கரிசல் மண் உள்ளதாக இருந்தால்தான் அந்த நில நீர் ஆராய்ச்சி வெற்றிகரமாக அமையமுடியும். கிழக்கு இராமநாதபுரம் பகுதி செவ்வல் மேட்டுப் பிரதேசமாக இருக்கிறபடியால் அந்த மண்வளம் இந்த ஆராய்ச்சிக்கு ஏற்றதாக இல்லையென்றால் சிரமப்பட்டு அந்த ஆரய்ச்சியைத் தொடங்குவதற்கான திட்டமும் இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேரளத்தில் வீணாகின்ற தண்ணீரை ஏன் தமிழகத்திற்குப் பயன்படுத்தக் கூடாது என்று சில உறுப்பினர்கள் பேசினார்கள். நண்பர் திரு. மலைச்சாமி போன்றவர்கள் அழுந்தந்திருத்தமாகக் குறிப்பிட்டார்கள், அண்டை மாநிலங்களோடு பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டிய பரம்பிக்குளம் ஆளியாறு பிரச்சனையை பற்றிப் பேசித் தீர்த்துக் கொள்வது ஏன் தள்ளிப் போடப்படுகிறது என்று கேட்டார்கள். ஊட்டியில் நடைபெற்ற மாநாட்டின்போது முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் மத்திய அரசின் அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்களோடும், கேரள முதல்வர் அவர்களோடும் கலந்து பேசியிருக்கிறார்கள். விரைவில் வருகிற ஆகஸ்டு திங்களில் பேச்சு வார்த்தை இரண்டு மாநிலங்களுக்கும் இடையில் நடைபெற இருக்கிறது. பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தில் நமக்கும் கேரள மாநிலத்திற்கும் இடையே பெரிய தகராறு ஒன்றும் இல்லை. அவர்கள் குரியாக் குட்டியாறு அணைக் கட்டைக் கட்ட வேண்டுமென்று விரும்புகிறார்கள். அந்த அணைக்கட்டின் மூலம் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட மில்லியன் கன அடி தண்ணீர் பெற்று கேரளப்பகுதியிலுள்ள சித்தூர் பிரதேசத்திற்குப் பாசன வசதி பெற முடியும் என்று கருதுகிறார்கள். குரியாக் குட்டியாற்றின் மேல்பகுதியிலுள்ள தேக்கடியில்-நம்முடைய மதுரை அருகில் உள்ள தேக்கடி அல்ல இது கேரளப் பகுதியில் உள்ள தேக்கடி- ஒரு அணையைக் கட்டி 2,800 கன அடி தண்ணீரைப் பெறவேண்டுமென்ற திட்டத்தோடு தேக்கடியில் ஒரு அணையைக் கட்ட தமிழக அரசு ஏற்பாடுகளை மேற்கொண்டது. கேரள அரசு 'உங்களுக்குத் தேவையான 2,280 கன அடி தண்ணீரைத் தந்து விடுகிறோம். குரியாக் குட்டியாறு பகுதியில் அணைக்கட்டைக் கட்டித் தடுக்காமல் அந்தத் தண்ணீரைக் கேரளத்திற்கு தந்துவிட்டால் நீராறு அணைக்கட்டுப் பகுதியில் தண்ணீரை பெற்றுக்கொள்ளலாம் என்று குறிப்பிட்டார்கள். நீராறு பகுதியில் 9,000 மிலியன் கன அடி தண்ணீர் பெற்று வருகிறோம். கேரள அரசு 2,080 மிலியன் கன அடி பெறுகிறது. 11,000 கன அடிக்கு மேற்பட்டு நீராறு மூலம் பெறவேண்டும். அதற்கு இப்போது அங்கிருக்கக்கூடிய

ஏற்பாடு போதாது. பெரிய அணைக்கட்டு கட்டவேண்டுமென்ற அளவில் தமிழக அரசு திட்டத்தை மேற்கொண்டபோது ஒரு நிபந்தனையை கேரள சர்க்கார் போட்டது. அந்த நிபந்தனைதான் 'தாரளமாகத் தங்குதடையின்றி ஆனைமலையாற்றுத் தண்ணீர் முழுவதையும் கேரள மாநிலம் பெற்றுக் கொள்ளும்; தமிழக மாநிலம் கிஞ்சிற்றும் எடுத்துக்கொள்ளக்கூடாது' என்பது அதிலேதான் சற்று அவர்களுக்கும் நமக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர வேண்டிய சிக்கல் இருக்கிறது. இந்தச் சிக்கல் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் கேரள மாநில அமைச்சர்களோடு கலந்து பேசிய பிறகு தீரும் என்று எதிர்பார்க்கிறோம்.

(குறுக்கீடு)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிக்கல் நிரம்பிய கட்டத்தில் நாங்கள் வந்திருக்கிறோம் என்று கூறுகிறார்கள். சிக்கல் நிரம்பிய கட்டத்தில் சிக்கலைத் தீர்த்துவைப்பதில் வல்லவரான முதலமைச்சர் அவர்கள் இந்தச் சிக்கலை தீர்த்து வைப்பார்கள் என்று நம்பலாம். அந்த வகையில் பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தை நிறைவேற்றுவதில் அண்டை மாநிலமான கேரள அரசோடு நல்ல உடன்பாட்டுக்கு வரமுடியும் என்ற பெருத்த நம்பிக்கையை இந்த அரசு பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேரளாவில் தண்ணீர் அவ்வளவும் கடலில் போய் வீணாகி விடுகிறது. அதை நாம் ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. என்று கேட்பது இந்த மாமன்றத்தைப் பொறுத்தவரையில் அவ்வளவு நல்லதல்ல. ஏனென்றால் அப்படி கேரளாவில் உள்ள வர்கள் அந்தத் தண்ணீரை வீணாக்கிவிடக்கூடிய சூழ்நிலையில் உள்ளவர்களும் அல்ல. கடலில் போய்க் கலக்கிற தண்ணீரைக் கூட, கடல் நீர் கேரளப் பகுதிக்குள் புகுந்து அங்குள்ள வயல்களை வீணாக்கிவிடாமல் இருக்க, உப்புத் தண்ணீரைத் தடுக்க இந்த நீரை அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அடுத்து, இங்கு பேசிய உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் கங்கையிலிருந்து காவிரியை இணைக்கும் திட்டத்தை சர். சி. பி. அவர்கள் ஏறத்தாழ பதினைந்து ஆண்டு களுக்கு முன் தீட்டியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றவேண்டுமென்று சொன்னார்கள். இப்படிப்பட்ட

அருமையான திட்டங்களை எல்லாம் நிறைவேற்றவேண்டு மென்று எந்த அரசும் விரும்பும். ஆனால் எனக்குள்ள விருப்பம் எல்லாம் சர், சி. பி. அவர்கள் அதைச் சொல்லி 15 ஆண்டுகளுக்கு மேலாகின்றன. இந்த பதினைந்து ஆண்டு காலத்தில் அதை ஒரு திட்டமாகச் சொன்னாரா என்றால் இல்லை. ஒரு கருத்தாகச் சொன்னார்கள். அந்தக் கருத்தை இதற்கு முன்பிருந்த அரசு ஆராய்ந்து அதைப்பற்றி ஏதாவது அறிக்கையோ அல்லது செயற் குறிப்போ வைத்திருக்கிறதா என்று தேடித் தேடிப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அது கிடைத்தால், அதற்கான திட்டம் ஏதாவது தீட்டப்பட்டிருந்தால், அதை மேற்கொள்ள முடியுமா என்பதை இந்த அரசு பரிசீலிக்கும். கங்கையைக் காவிரியோடு இணைப்பதற்கு மத்திய அரசு தமிழ்நாட்டு எல்லைக்குக் கங்கையைக் கொண்டு விட்டுவிடுமானால், காவிரி அதோடு போய் இணைவதற்கு தமிழக அரசு நிச்சயமாக தன் பணியை நிறைவேற்றும் என்று எடுத்துக்கூற விரும்புகிறேன்.

திருமங்கலம் கால்வாய் வைகை திட்டத்திலிருந்து அதிகமான பாசன வசதி பெறவேண்டுமென்று திரு. சித்தன் அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். இப்போது புதிதாக திருமங்கலம் தாலூகாவிற்கு அந்த திருமங்கலம் கால்வாய் மூலம் 1,100 ஏக்கர் பாசனமும் நிலக்கோட்டை தாலூகாவிற்கு 9,000 சொச்சம் ஏக்கராவுக்கு புதுப்பாசனம் பெறுகிற அளவிற்கு இப்போது நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் திரு. சுப்பையா முதலியார் அவர்கள் பேசும்போது நிலநீர் ஆராய்ச்சி தாமதப்படுவதாக எடுத்துக்காட்டினார்கள். 1965-ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலை இன்னும் முடியவில்லை. என்றும் குறிப்பிட்டார்கள். புதிய அரசு இந்த வேலையை விரைவு படுத்தும். நல்ல முடிவுகளை காணும். அவர்கள் விளக்கிச் சொன்னார்கள். இந்த நில நீர் ஆராய்ச்சியையும் இப்போது இணைக்கப்படுகிற இத்துறைகளோடு சேர்த்து இணைத்து விட வேண்டும் என்று சொன்னார்கள். இது ஐக்கிய நாடுகளில் திட்டம் ஆகவே அது தனித்த முறையில்தான் ஆராயப்படும். தனித்த முறையில் அது பணியாற்றி வருகிறது. ஆகவே அதை இந்தப் பொதுப்பணித்துறையோடு இணைத்து விடுவது என்பது சிரமமான காரியம் என்பதையும் அந்த யோசனையைத்

தாற்காலிகமாக இப்போது ஏற்றுக்கொள்ளுவதற்கில்லை என்றும் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அவர்கள் சர்க்கார் அனுப்பிய உத்தரவை நெல்லை மாவட்டத்திலுள்ள ஒரு கலெக்டர் ரத்து செய்து தடைபோட்டுவிட்டார் என்று குறிப்பிட்டார்கள். அது சம்பந்தமாக அந்த கலெக்டரை இப்போது விசாரித்து அதற்கான பதிலை அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. வந்தவுடன் அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவம் அவர்கள் பேசும் போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கு எடுத்துச் சொன்னதை விளக்கமாக அந்தப் பிரச்சனைபற்றிப் பேசினார்கள். தண்ணீரைக் கீழ்ப்பவானி திட்டத்தின் கீழ் எப்படி வகுத்துக் கொள்வது என்பது பற்றிய பிரச்சினை 1959-ம் ஆண்டைய அரசின் ஒரு உத்தரவுப்படி கீழ்ப்பவானி திட்டத்திலிருந்து வருகிற தண்ணீரை யார் பயன்படுத்திக் கொள்வது என்ற பிரச்சனை மேலோங்கியபோது நம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டவாறு ஒரு சமாதான உடன்பாட்டிற்கு வந்து அந்த உடன்பாட்டுப்படி ஒற்றைப்படை, இரட்டைப்படை என்று மதகுகளைப் பிரித்து ஒற்றைப்படை மதகுகளுக்கு எல்லாம் ஒற்றைப்படை ஆண்டில் தண்ணீர் பாய்வது 1963, 1965, 1967 என்று ஒற்றைப்படையில் முடிகிற அந்த ஆண்டில் ஒன்றாவது மதகு, மூன்றாவது மதகு, ஐந்தாவது மதகு என்ற இந்த எண்ணிக்கையிலும் 1964, 66, 68 என்று இரட்டைப்படையில் உள்ள ஆண்டுகளில் 2, 4, 6 என்று வரிசைப்படுத்துகிற முறையில் இரட்டைப்படை மதகுகளுக்குத் தண்ணீர் பாய்வது என்று திட்டமிட்டபடி அந்தத் திட்டம் 1963-ல் 64-ல் 65-ல் ஒழுங்காக நிறைவேறி 1966-ல் பருவக்கோளாறு காரணமாக, இயற்கைக் கோளாறு காரணமாக அந்தத் தண்ணீரை வகுக்கப்பட்ட அத்திட்டத்தின் வாயிலாக ஒழுங்காகத் தர முடியாமல் அது ஒற்றைப்படைக்குத் தருவது என்று உறுதி செய்யப்பட்டு ஆனால் ஒற்றைப்படைக்கு தரும்போது இரட்டைப் படைக்கு பாய விடுவது என்று சொல்லப்பட்டு அப்போது பாய விடப்பட்டு இப்போது இரட்டைப் படைக்காரர்கள் சொல்கிறார்கள் அது ஒற்றைப்படை வரைதான் போனது. இரட்டைப்படைக்கு வரவில்லை, ஆகவே இந்த ஆண்டு இரட்டைப்படையிலிருந்து தொடங்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்த நிலைபற்றி இந்த

மன்றத்தில், இப்பொழுதே ஒரு முடிவாக சொல்லி விட முடியாமல் நாளைய தினம் தொடர்புடைய சட்டமன்ற உறுப்பினர்களோடும், பொறியாளர்களோடும், நம் பொதுப் பணித் துறைச்செயலாளரோடும் அதுபற்றி கலந்து ஆலோசித்து ஒரு முடிவு எடுக்கலாம் என்றிருக்கிறேன். அந்த முடிவை தொடர்புடைய சட்டமன்ற அங்கத்தினர்கள் அனைவரும் ஏற்றுகொள்வார்கள் என்று நம்புகிறேன். கொளத்தூர் கோதண்டம் அவர்கள் பேசும்போது செங்கல்பட்டு, வடஆற்காடு மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட குளங்கள் சீர் செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். மிகக்குறைந்த அளவிற்குத்தான் சீர் செய்யப்பட்டிருக்கின்றன என்றும் குறிப்பிட்டார்கள். மதுராந்தகம் பகுதியில் உடைப்பு எடுத்த ஏரிகள் 196, வேலை முடிந்தவை 71, வேலை நடந்து கொண்டிருப்பவை 117, வேலை ஆரம்பிக்க வேண்டியவை 8, பாதிக்கப்பட்ட ஏரிகள் 379, வேலை தொடங்கி இருப்பவை 44, திண்டிவனம் பகுதியில் உடைப்பு எடுத்த ஏரிகள் 137, வேலை முடிந்தவை48, வேலை நடப்பது71, வேலை ஆரம்பிக்க வேண்டியவை 18, பாதிக்கப்பட்ட ஏரிகள் 226, வேலை தொடங்கியிருப்பவை 13, செஞ்சியில் உடைப்பு எடுத்த ஏரிகள் 136, வேலை முடிந்தவை 42, வேலை நடப்பவை 89, வேலை ஆரம்பிக்க வேண்டியவை 4, பாதிக்கப்பட்ட ஏரிகள் 327, வேலை தொடங்கியிருப்பவை 29, வந்தவாசியில் உடைப்பு எடுத்த ஏரிகள் 40, வேலை முடிந்தவை 9, வேலை நடப்பவை 31, பாதிக்கப்பட்ட ஏரிகள் 328, வேலை தொடங்கியிருப்பவை 100, செய்யாறில் உடைப்பு எடுத்த ஏரிகள் 14, வேலை முடிந்தவை 8, வேலை நடப்பது 6, பாதிக்கப்பட்ட ஏரிகள் 300 வேலை தொடங்கியிருப்பவை 74, செங்கற்பட்டில் உடைப்பு எடுத்த ஏரிகள் 23, வேலை முடிந்தவை 12, வேலை நடப்பவை 10, வேலை ஆரம்பிக்க வேண்டியவை 1, பாதிக்கப்பட்ட ஏரிகள் 42, வேலை தொடங்கியிருப்பவை 17, இந்த அளவில் சில பகுதிகளில் குறைந்த அளவுதான் தொடங்கியிருக்கிறது. என்றாலும் இந்த ஆண்டில் ஏனைய வேலைகளும் மேற் கொள்ளப்படும். அவை விரைவுபடுத்தப்படும் என்ற உறுதியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

''யூனிட் விகிதங்கள் ஒரு மாவட்டத்திற்கு இன்னொரு மாவட்டம் வித்தியாசமாக இருக்கிற காரணத்தினால் பணியாளர்கள் வர மறுக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தில் தரப்படுகிற அளவிற்கு எங்கள் தென்ஆற்காடு மாவட்டத்தில் தரப்படுவதில்லை. ஆகவே அங்கு பணியாளர்கள் யூனிட் விகிதங்கள் போதாது என்று வேலைசெய்ய மறுக்கிறார்கள். ஆகவே வேலைகள் குந்தகப்படுகின்றன என்றெல்லாம் கூறினார்கள். அது பற்றிய குறிப்பை நான் இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். தென் ஆற்காடு மாவட்டத்தில் தஞ்சை மாவட்டத்தைவிட அதிகமான யூனிட் விகிதங்களை அங்கே பணியாற்றுகிறவர்கள் பெறுகிறார்கள். மண் கலந்த கரிசல்களில் வேலைக்கு தென் ஆற்காடு மாவட்டத்தில் ரூ. 20.62 பெறுகிறார்கள்,. தஞ்சையில் ரூ. 20.35 தான். கரிசல் களிமண்ணை அகற்றிப்போட தென் ஆற்காடு மாவட்டத்தில் ரூ. 19 பெறுகிறார்கள். தஞ்சையில் ரூ. 17. 85 பெறுகிறார்கள். கல்லும் சரளையும் கலந்த மண்ணை அகற்றி, உடைத்துப்போட தென் ஆற்காடு மாவட்டத்தில் ரூ. 23.10 பெறுகிறார்கள் தஞ்சையில் ரூ. 22 பெறுகிறார்கள். உடைக்காமல் அகற்றிப்போட தென் ஆற்காடு மாவட்டத்தில் ரூ. 21.45 பெறுகிறார்கள். தஞ்சையில் ரூ. 20.35 பெறுகிறார்கள். கடுஞ்சரளை மண் வேலைக்கு தென் ஆற்காடு மாவட்டத்தில் ரூ. 27. 50 பெறுகிறார்கள். தஞ்சையில் ரூ. 25.85 பெறுகிறார்கள். ஆகவே ''தம்மின் மெலியாரை நோக்கி தமதுடமை அம்மா பெரியதென்று அகமகிழ்க'' என்ற மூதுரைக் கிணங்க தென் ஆற்காடு மாவட்டதில் உள்ள இந்தப் பணியாளர்கள் எல்லாம் தஞ்சையை நோக்கி இந்த வேலையை - பொது நிவாரண வேலையைப் பொது நிவாரண வேலையாகக் கருதி, புயல் நிவாரண வேலையாகக் கருதி அந்தப் புனிதமான நோக்கத்தோடு அவர்கள் தங்கள் வேலையில் ஈடுபடச் செய்ய அத்தொகுதி உறுப்பினர்கள் பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிழக்குக் கடற்கரைச் சாலை வேலை இன்னும் தொடங்க வில்லையே என்று மெத்த வருத்தத்தோடு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். கிழக்குக்கடற்கரைச்சாலை வேலை சம்பந்தமாக நேற்றைய தினம் கேள்வி நேரத்தில் குறிப் பிட்டிருக்கிறேன். 14. கோடி ரூபாய் தேவைப்படுகிறது.

என்றும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்தெந்த சாலைகளை எடுத்துக்கொள்கிறோம் என்றும் நிர்ணயித்த பிறகு, மத்திய அரசு வகுத்த பிறகுதான் , நாம் அதை எடுத்துக் கொள்கிறோமா இல்லையா என்ற முடிவிற்கு வரவேண்டிய வர்களாக இருக்கிறோம் என்பதுபற்றியும் எடுத்துச்சொன்னேன். இந்தச் சாலை சென்னை முதல் கன்னியாக்குமரி வரையில் நீண்ட ஒரு சாலை. இது கடலூர், புதுச்சேரி, நாகை, தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களை இணைப்பது மாத்திரமல்ல, மீன்பிடி தொழில் உப்பளத் தொழில், கயிற்றுத் தொழில், எரிமரம் வெட்டுகிற தொழில் முத்துக்குளிக்கும் தொழில், இன்னும் ஆங்காங்கு இருக்கிற வேளாண்மைத்தொழில் மூலம் உற்பத்தி ஆகும் பொருள்களின் போக்குவரத்துக்கு மேலும் வாய்ப்பைப் பெருக்கி, இவற்றின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4.51 கோடி வருவாய் பெறக்கூடிய அளவில் இந்தச் சாலை அமையுமானால், தமிழகம் வளம் பெறக்கூடும். ஆகவே மத்திய அரசிடம் இந்த மாநில அரசு கிழக்குக் கடற்கரைச் சாலையை விரைவுப்படுத்த வேண்டுமென்று அதற்கான காரியங்களில் ஈடுபட வேண்டுமென்று, அதற்கான தொகையினை ஒதுக்க வேண்டுமென்று, கேட்டுக்கொள்ளத் தவறாது என்ற உறுதியினை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. கே. சுப்பையா பேசுகிற நேரத்தில் மண்வாறும் இயந்திரக் கருவிகள் அதிகமாகத் தருவிக்கப்படவேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். அந்த இயந்திரக்கருவிகள் அவசரமாகத் தருவிக்கப்பட்டு, கல்லணையிலிருந்து அங்கு தூர்ந்து போயிருந்த மண்ணெல்லாம் அகற்றப்பட்டு, அந்தக் கால்வாய் சீர்திருத்தப்பட்டிருக்கிறது. தஞ்சையில் நடைபெற்ற நீர்பாசன மாநாட்டையொட்டி அந்த வேலைகள் துரிதப்படுத்தப்பட்டன என்று அவர்கள் அறிய வேண்டும்.

வடி முனைக் குழாய்கள் இப்போது தஞ்சை மாவட்டத்தில் மூன்று இருக்கின்றன. மேலும் இரண்டு வடிமுனைக் குழாய்கள் விவசாயத் துறையிலிருந்து தருவதாக விவசாய இலாகா இயக்குனர் அறிவித்திருக்கிறார்கள். வேளாண்மைத் துறை

அமைச்சர் அவர்கள் அதை விரைவுப்படுத்தித் தஞ்சை மாவட்டத்திற்கு அனுப்பி வைக்க இருக்கிறார்.

பெரும்பாலும் மதுரை, குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் வைகைக்கால்வாயை நவீனப்படுத்துவதில் இது உடனடியாக செய்து தரவேண்டிய ஒன்று என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இந்த வைகைக் கால்வாயை நவீனப்படுத்துவது என்றால் இப்போது வைகையிலிருந்து தனித்தனியாக 100 கால்வாய்கள் பிரிந்து, 416 குளங்களை நிரப்பிக்கொண்டிருக்கின்றன. 1, 32, 000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தப் பாசன வசதி நிலையான பாசன வசதி அல்ல-உறுதிப்படுத்தப் பட்டது அல்ல. 100 கால்வாய்கள் மூலம் 416 குளங்கள் நிரப்பப்பட்டு, பாசன வசதி பெறுகிற ஒரு லட்சம் ஏக்கரும் நிலையாக ஒவ்வொரு ஆண்டும் இந்த வசதியை பெற முடியும் என்ற நம்பிக்கையோடு இருக்கக்கூடியவை அல்ல. ஆகவே இந்தத் திட்டம் மிக மிகத் தேவை என்று உணரப்பட்டு அதற்கான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அந்தத் திட்டத்திற்கான அனுமதிக்காக இதுவரையில் காத்திருந்தோம். புதிய அரசு தொடங்கிய பிறகு அந்த அனுமதிக்காகப் பலமுறை கடிதங்கள் எழுதி, அந்த அனுமதி நேற்றைய தினம் கிடைத்துவிட்டது என்பதையும் நான் மிக்க மகிழ்ச்சியோடு இந்த மன்றத்தில் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இற்த அனுமதியைப் பெற்றதன் மூலம் , இந்த வைகைக் கால்வாயை நவீனப் படுத்துவதன் காரணமாக, ஒரு லட்சம் ஏக்கர் பாசனத்திற்கு உறுதி செய்யப்படும். 13,900 ஏக்கர் பாசனத்தைப் புதிய ஏற்படாக மேலும் உறுதி செய்துகொள்ளலாம். 100 கால்வாய்களும் தனித்தனியாக இருப்பதை மாற்றி ஒரே தலைப்புக்குக் கொண்டுவரப்பட்டு தண்ணீர் வீணாவதை, சேதாரம் ஆவதைத் தடுத்து, சிக்கனப்படுத்தி, சேமித்து இந்தப் பாசனங்களை உறுதி செய்ய முடியும்.

பொதுவாக, இப்படிப்பட்ட நீர்ப்பாசனத் துறை, நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித்துறை இவைகளெல்லாம் நல்ல முறையிலே, பயன் தரத்தக்கவிதத்தில் பணியாற்றுவதில் இந்தத்

துறைகளுக்கு முதுகெலும்பாக இருக்கிற தொழிலாளர் பிரச்சனை பற்றி இங்கே பேசப்பட்டது. இந்த அரசு தொழிலாளர்களுடைய அரசு என்பதும், பாட்டாளி மக்களுக்காகப் பாடுபடுகிற அரசு என்பதும், அவர்களுடைய கண்ணீரைத் துடைக்கவல்ல அரசு என்பதும் அனைவரும் அறிவார்கள். அந்த முறையில் பொதுப் பணித்துறையில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுடைய பிரச்னை பல்லாண்டுக்காலமாகத் தீர்க்கப்படாத ஒன்றாக இருப்பதை எண்ணிப் பார்த்து, அதற்கான திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்று கருதி தலைமைப் பொறியாளர்களை அழைத்து, நெடுஞ்சாலைத் தலைமைப் பொறியாளரையும், நீர்பாசனத்துறை, பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளரையும், இந்தப் பிரச்சனைகளை எப்படித் தீர்ப்பது என்பதற்கான அறிக்கைகளைத் தயாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, நெடுஞ்சாலைத் தலைமைப் பொறியாளர் அதற்கான அறிக்கையை நேற்றைய தினம் தந்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. அதைப் போலவே பொதுப்பணித்துறையின் தலைமைப் பொறியாளர் அறிக்கை முடிவுறும் கட்டத்தில் இருக்கிறது என்றும், விரைவில் தந்துவிடுவதாகவும் வாக்களித்திருக்கிறார். இரண்டு அறிக்கை களும் ஆராயப்பட இருக்கின்றன. அவர்கள் நிரந்தரமாக ஆக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டதையும், வேலை வாய்ப்பு நிலைத்து இருக்க வேண்டும் என்று குறிப்பிடப் பட்டதையும் இதையெல்லாம் எப்படி அரசு சமாளிக்க முடியும் என்ற பரிசீலனைகளை, அறிக்கைகளுக்குப் பிறகு அவைகளைப் பார்த்த பிறகு, செய்து இந்த அரசு ஒரு முடிவு எடுக்கும் என்றும் அது வரையில் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை அவசரப்படுத்தவோ, அவைகள் நடக்கவில்லை என்று பரபரப்பு அடையவோ வேண்டாமென்று இந்த மன்றத்தின் சார்பாகச் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக துறைமுகங்களைப் பற்றிப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தூத்துக்குடித் துறைமுகம் எப்படியும் கிடைக்கும் அதற்கு எழுச்சிநாள் தேவையில்லை என்று குறிப்பிட்டார் ''எப்படியும் கிடைக்கும்'' என்ற வார்த்தையே ''எழுச்சி நாள்'' என்ற வார்த்தைக்குப் பிறகுதான் கிடைத்தது. தூத்துக் குடி துறைமுகத்தைப் பற்றி அவர்கள் ஒரு புள்ளிவிவரம் எடுத்துச்

சொன்னார்கள். அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு 2. 25 மில்லியன் டன் அல்லது 2. 75 மில்லியன் டன் என்று கூறுவார்களானால் அவர்களுடைய தாராள மனதை பெருந்தன்மையை, பரந்த மனப் பான்மையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 1.7 மில்லியன் டன்கள் என்ற அளவுக்கு இருந்தாலும்கூட போதுமான வருவாய் தான். இதற்கு முன் சர்க்கார் தரப்பில் தரப்பட்டுள்ள அறிக்கையில், கடிதப் போக்குவரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல 2.5 மில்லியன் டன்கள் என்று குறிப்பிட்டு அவர்களுக்கு எழுதப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே தூத்துக்குடி துறைமுகம் மீன்பிடி துறைமுகமாக ஆகவேண்டும் என்று யார் சொன்னது என்றால் மத்திய அரசு அமைச்சர் சொன்னதாகப் பத்திரிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அப்படி நேரடியாகச் சொல்லாவிட்டாலும், மறுபரிசீலனை செய்வதே நமக்கு ஐயத்தையும், அச்சத்தையும், உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை, ஏனென்றால் மத்திய அரசாங்கத்தினால் 5 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு, குடி தண்ணீர், சாலை வசதி மற்ற வசதிகளுக்காக மாநில அரசு ஒரு கோடி ரூபாய் செலவழித்து இப்படி 6 கோடி ரூபாய் போடப்பட்ட பிறகு, மறுபரிசீலனை என்றால் உள்ளபடியே மனக்குழப்பம் ஒரு மாநில அரசுக்கு வருவதில் வியப்பு இருக்க முடியாது. அந்தக் கலக்கத்தின் காரணமாகத்தான், வருமோ வராதோ என்ற ஐயப்பாடும் அச்சமும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல இந்தத் திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு 22 அல்லது 24 கோடி ரூபாய். அந்த மொத்த மதிப்பீட்டில், முதல் தவணையாக 1963-64-ம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசினால் ஒரு கோடி ரூபாய் தரப்பட்டது. 1964-65-ம் ஆண்டில் இரண்டு கோடி ரூபாயும், 1965-66-ம் ஆண்டில் இரண்டு கோடி ரூபாய் அளவுக்குத் தரப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 50 லட்சம் ரூபாய்த்தான் தர முடியும் என்ற அளவில் பேசப்படும்போது 24 கோடி ரூபாய் எங்கே ! இரண்டு கோடி அளவுக்குத் தரப்பட்ட நிலை எங்கே ! இப்போது அது சுருங்கி 50 லட்சம் ரூபாய் தான் தரமுடியும் என்று சொல்லும்போது அதுவும் 90 லட்சம் தருவதாகச் சொல்லி , 50 லட்சம் ரூபாய்தான் தரமுடியும்என்ற நிலை வந்தால்,

இதைப் பற்றி பயம் ஏற்படுவதில் வியப்பில்லை. அந்த அளவில் தான் தூத்துக்குடி கைவிட்டுவிடப் படக் கூடாது, தமிழகம் ஏமாற்றத்திற்கு ஆளாகக் கூடாது என்று இன்றைய தினம் வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். இன்னும் நம்பிக்கையோடு இருக்கிறோம் . இன்றைக்கும் மத்திய அரசு தூத்துக்குடி துறைமுகத்திற்கு அனுமதி வழங்கி, அதை ஆழ்கடல் துறைமுகமாக ஆக்கச் சம்மதம் இருக்கிறது என்பதன் அறிகுறி யாக சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் தொகையை வழங்கும் என்று எதிர்ப்பார்க்கிறோம்.

இந்த அளவில் இந்த மானியங்களின் மீது காலையிலிருந்து அருமையான கருத்துக்களை வழங்கிய எல்லாத் கட்சித் தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொண்டு தமிழகம், நீர்வளம், நிலவளம் பெறுவதற்கு 30 கோடி ரூபாய் அளவுக்கு இன்றைய தினம் உங்கள் முன் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளை, வெட்டுக்கள் இல்லாமல், தட்டு ஏதுமின்றி நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அனைவருக்கும் நன்றி கூறி, இந்தத்துறைச் செயலாளருக்கும், பொறியாளருக்கும் நன்றியைக் கூறி இந்தத்துறைத் தொழிலாளர்களுக்கும் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.

## முதல் துணை மதிப்பீடு

உரை : 23 நாள் : 17.02.1968

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகளைப் பற்றிய இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், ஏனைய மாண்புமிகு உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துக்கூறியிருக்கிறார்கள். இதில் மிக முக்கியமாக அநேகமாக துணை மதிப்பீடுகளைப்பற்றிப் பேசுகிற நேரத்தில் கவர்னர் அவர்கள் உரை மீதான விவாதம்தான் இதில் பிரதிபலித்ததைக் காண முடிந்தது. துணை மதிப்பீடுகள் என்ற ஒரு தலைப்பில்தான் வித்தியாசமே தவிர வேறு எந்தவித வித்தியாசமும் இல்லாமல் அநேகமாக அதே கருத்துகள்தான் தொடர்ந்து பேசப்படுவது போன்ற ஒரு சூழ்நிலை இருந்தது.

இப்பொழுது என்னுடைய இந்த உரைக்குப் பிறகுகூட, கவர்னர் உரை மீது விவாதம் நடைபெறுகிற நேரத்திலே கூட புதிதாக வருகிறவர்கள் துணை மதிப்பீடு மீது நடக்கின்றது என்று எண்ணுகிற வகையில் ஒரேவிதமான விவாதம் தொடர்ந்து நடைபெறுவதை நாம் மறுப்பதற்கில்லை. முக்கியமாக காங்கிரஸ் தரப்பிலே உள்ளவர்கள் படியரிசி தேவை, படியரிசி தேவை என்பதை வேகமாக, வன்மையாக வலியுறுத்தினார்கள். சுதந்திராக் கட்சியினுடைய சார்பிலே பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள் படி அரிசியே தேவையில்லை என்பதற்கு பத்துக் காரணங்களைச் சுட்டிக்காட்டினார்கள். எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள்கூட ஒருவேளை திராவிட முன்னேற்றக்கழக அரசிற்காக டாக்டர் ஹாண்டே அவர்களை பேசச்சொல்லி இப்படி ஒரு திட்டம் செய்யப்படுகிறதோ என்று எண்ணிக்கொள்ளலாம். தயவுசெய்து அவர்கள் அப்படி எண்ணிக்கொள்ள வேண்டா மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். படியரிசித் திட்டம் ஏழை

மக்களின் ஓரளவுத் தேவையைப் பூர்த்திச்செய்யும் என்னும் அளவிலேதான் இந்த அரசும், அதற்கேற்ப உணவு அமைச்சரவர்களின் ஒத்துழைப்புடன் இந்த ஓராண்டு காலத்திலேயே கோவையிலும், சென்னையிலும், சென்னை சுற்றுப்புறங்களிலும் இந்தத்திட்டத்தை நாம் வெற்றிகரமாக நடத்திக்கொண்டு வருகிறோம். இது மற்றப் பகுதிகளுக்குப் பரவவில்லை என்னும் காரணத்தினாலேயோ அல்லது கொடுக்கின்ற படியரிசியிலே சில இடர்ப்பாடுகள், ஆங்காங்கு நிர்வாகத்திலே இருக்கின்ற சிக்கல்கள், ஆங்காங்கு கடை நடத்துபவர்கள் சிலரிடம் காணப்படும் இடர்ப்பாடுகள் காரணமாக இந்தக் கொள்கையே சரியில்லை என்று விவாதிப்பது அவ்வளவு சரியான வாதமாக இருக்காது. டாக்டர் ஹாண்டே போன்றவர்கள் சுட்டிக்காட்டிய குறைகளைப் போலுள்ள இந்தக் குறைபாடுகளை இந்த மன்றத்திற்கோ அல்லது துறையாளர்களுக்கோ அல்லது அமைச்சர்களுக்கோ எடுத்துச்சொன்னால் அதுபற்றி உடனடியாகக் கவனித்துத், தடைக்கற்கள் எறியப்பட்டு இந்தத் திட்டம் தகுந்த முறையில் நிறைவேற வழிவகைகளை இந்த அரசு மேலும் நல்ல முறையிலே ஆராய பயனுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். நம்முடைய எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் விவசாயத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் இந்த அரசில் அளிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். இந்த அரசு பதவியேற்ற நேரத்திலே விவசாயத்திற்கு அளிக்கப்பட்ட ஆக்கம், ஊக்கம் இந்த அரசு பதவிப்பொறுப்பை ஏற்ற பிறகு அளிக்கப்பட்ட ஆக்கம், ஊக்கம், அதற்குச் செலவழித்த இந்தத் தொகைகளை எடுத்துச்சொல்வது என்பது சென்ற அரசு விவசாயிகள் பிரச்சினையிலே இப்படி கவனம் செலுத்தவில்லை என்று குற்றம்சாட்ட அல்ல, புதிய அரசு அந்தப் பிரச்சினைகளை விட்டுவிடல்லை, அதைவிட, நேர்த்தியான முறையில், அதைவிடத் தீவிரமாக, அதைவிட அக்கறையாக அந்தக் காரியங்களைச் செய்திருக்கிறது என்பதற்காக இந்தப் புள்ளி விவரங்களைக் கொடுப்பது முறையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

1966-67-இல் உணவு உற்பத்தித் திட்டத்திற்காக உரம், விதை, டிராக்டர்கள் கடன் என்ற இந்த வகையிலே 428 லட்சத்து 59 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. 1967-68-இல் உரம், விதை, டிராக்டர்கள் கடன் என்ற இந்த வகையிலே 482 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. கடந்த ஆண்டில் சிறு

பாசனத்தில் கிணறுகளுக்கும், புதிய கிணறுகள் சப்சிடி ஸ்கீமிற்கும் சேர்த்து 501 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. 1967-68-இல் 515 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. எஸ்.எம்.ஐ.பி. என்று சொல்லக்கூடிய திட்டத்திற்கு 1966-67-இல் 306 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. 1967-68-க்கு இன்னும் எஸ்டிமேட் "பைனலைஸ்" ஆகவில்லை. 273 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 'பைனலைஸ்' ஆகி வருகிற நேரத்தில் 306 லட்சத்திற்கு மேல் போகும். அந்த அளவிற்குச் செலவழிக்கப்படும் நிலை இருந்தது. சிறு பாசனத் திட்டங்களுக்கு இந்த அரசு செலவழித்தது விவசாய இலாக்கா மூலம் டியூப் வெல்ஸ், போர்வெல்ஸ் போன்ற இந்தத் திட்டங்களுக்கு 1966-67-இல் 5.47 லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. 1967-68-இல் "பைனல் எஸ்டிமேட்" வராத இந்த நிலையில் 5 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. பிரைவேட் வெல்ஸ்-க்கு 1966-67-இல் 51 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1967-68-இல் 87 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய், வடிமுனை குழாய் சம்பந்தமாக 1966-67-இல் 43 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1967-68-இல் அதற்குக் குறையாமலேயே, 43 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. டி.சி.,ஆர்-க்காக (டீசில்ட்டிங்-கம்-ரெக்ளமேஷன்) 1966-67-இல் 8 லட்சம் ரூபாய், 1967-68-இல் 7 லட்சம். பம்புசெட்டுகள் வழங்க 1966-67-இல் 175 லட்சம் ரூபாய், 1967-68-இல் லேண்ட் மார்ட்கேஜ் பேங்கின் மூலம் கடன் வழங்க 144 லட்சம் என்ற அளவில் ஒதுக்கப்பட்டு உருவாகியிருக்கிறது. மொத்தத்திலே விவசாயத்திற்கு மிக உதவிகரமாக இருக்கின்ற இந்தச் சிறு பாசனத் திட்டங்களுக்குச் சென்ற அரசு 1966-67-இல் 11 கோடி ரூபாய் செலவழித்தது. 1967-68-இல் இந்த அரசு அதற்குமேல் 2 கோடி போட்டு 13 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறது. ஆக, விவசாயத்துறையிலே இந்த அரசு காட்டுகின்ற அக்கறையினுடைய அடையாளத்திற்காகத்தான் இந்தப் புள்ளி விவரங்கள் கூறப்பட்டனவே தவிர வேறு எதற்காகவும் காட்டப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன். நீங்களும் அவ்வாறு கருதமாட்டீர்கள். மத்திய அரசு 1966-67-ஆம் ஆண்டிற்கு இந்த சிறு பாசனத் திட்டங்களுக்கு 3 கோடி ரூபாய் தந்தது. இந்த 3 கோடி ரூபாயையும் சேர்த்து 11 கோடி ரூபாய் அளவில் 1966-67-இல் சிறு பாசனத் திட்டங்களுக்காகச் செலவழிக்கப்பட்டது. ஆனால் 1967-68-இல் மத்திய அரசு இந்த 3 கோடி

ரூபாயை நமக்குத் தரவில்லை. அப்படியிருந்தும் 13 கோடி ரூபாய் சிறு பாசனத் திட்டங்களுக்காகச் செலவழிக்கப் பட்டிருக்கிறது. விவசாயத்தின் மேன்மையைக் கருதி, விவசாயத்தின் வளர்ச்சியைக் கருதி அவ்வாறு செலவழிக்கப் பட்டிருக்கிறது என்னும் நிலையில் விவசாயத்திற்கு இந்த அரசு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயத்திற்கு இந்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவில்லை என்று கூறும் எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள்கூட இங்கு நிற்கிற வரையில் அவ்வாறு சொல்லலாம். ஆனால் உட்கார்ந்து தனியாக இருக்கும்பொழுது பேசினால் அவரேகூட அதை ஒப்புக்கொள்ளமாட்டார். நின்று பேசுகிற வாதத்தை உட்கார்ந்துவிட்டால் அவரே ஒப்புக்கொள்ள மாட்டார். அவர் நிலைக்கண்ணாடியின் முன் நின்று பேசினால் நிலைக்கண்ணாடியேகூட மனச்சாட்சியறிய இப்படி உண்மைக்கு மாறான விஷயங்களைச் சொல்லலாமா என்று அவரையே திருப்பிக்கேட்கும். ஏனென்றால் நண்பர் கருத்திருமன் அவர்களுடைய உள்ளம் தூய உள்ளம், வெள்ளை உள்ளம். அந்த உள்ளத்திற்கு அவர் பதில் சொல்லியாக வேண்டும். ஆக, மத்திய அரசு கொடுத்த 3 கோடி ரூபாய் கிடைக்காத நேரத்திலும் 2 கோடி ரூபாய் அதிகமாகச் சேர்த்து விவசாயத்திற்கு, இந்தத் திட்டங்களுக்கு நாம் செலவழித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

பொதுப்பணித்துறையைப் பொறுத்து நீர்ப்பாசனத்திற்கு 1966-67-இல் 461 லட்சம் ரூபாய் செலவழித்தோம். இதிலே 1967-68-இல் கொஞ்சம் குறைவாக, 422 இலட்சம் செலவழிக்கப் பட்டது. அதற்குக் காரணம் நீரார் திட்டம்பற்றி பேச்சு நடந்து கொண்டிருப்பதுதான். அந்தப் பிரச்சினை தீர்ந்தால் அதிலும் முன்பு செலவழித்த தொகையைச் செலவழிக்கும் அளவுக்கு நாம் இருக்கிறோம். இந்த பம்புசெட்டுகளைப்பற்றி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ளதைப்பற்றி எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் எடுத்துச்சொன்ன பிரச்சினை கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை. அங்கு அப்படிப்பட்ட தவறு நடந்திருக்குமேயானால், அங்கு அவ்வாறு அலட்சியப்படுத்தப் பட்டிருக்குமானால் அதை உடனடியாக இந்த அமைச்சரவை கவனித்து தக்க வகையிலே யோசித்து அதைப்பற்றி ஆராய்ந்து நல்லவகையிலே கவனிக்கும் என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்களுக்கு எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களைப்பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எடுத்துச் சொன்னார்கள். சேலத்திலே இருக்கிற கொள்முதலைவிட கோயம்புத்தூரிலே அதிகமாகச் செய்திருக்கிறார்கள் என்று கூறினார்கள். சேலம் மாவட்டத்தில் டார்ஜெட் 5,000. கோவை மாவட்டத்தில் 8,000 அல்லது 10,000 என்ற அளவிலேதான் என்று கருதுகிறேன். இதிலே பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை. சேலம் மாவட்டத்தையும், கோவை மாவட்டத்தையும் ஒரு ஆகாய விமானத்திலே சென்று பார்த்தால் எது வளமான மாவட்டம் என்று நன்றாகத் தெரியும். சேலத்திலிருந்து வந்திருப்பவர்களையும், நமது எதிர்க்கட்சித் தலைவரவர்களையும் பார்த்தாலும் நன்றாகத் தெரியும். ஆகவே, சேலம் மாவட்டத்தில் 400 டன் தேர்தல் காலத்திலே கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். சங்கரியில் திரு. கருத்திருமன் அவர்களும், காங்கிரஸ் தலைவரும் சென்றபொழுது, ஏழை மக்களுடைய பயனையெல்லாம் உறிஞ்சி உங்களுடைய உழைப்பையெல்லாம் கொட்டி விளைவித்த அரிசியை இங்கிருந்து எடுத்துக்கொண்டுபோய் சிங்காரபுரி சென்னையிலும், கோலாகல நகரமான கோயம்புத்தூரிலும் அரிசியைப் போடுகிறார்களே, இது நியாயமா? சினிமாக்காரர் களுக்குப் படியளக்கிறார்களே, இது நியாயமா? என்று கேட்டார்கள். சங்கரியில் இதுவரையிலும் எவ்வளவு செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால் சேலத்தில் மொத்தம் 400 டன் என்றால் சங்கரியில் 75 டன்தான் கொள்முதல் செய்யப் பட்டிருக்கிறது. அவ்வளவுதான் நாம் செய்துவிட முடியும். இந்த அளவுக்கு மாவட்ட ரீதியாக, தஞ்சை, திருச்சி, தென்னார்க்காடு போன்ற மாவட்டங்களுக்கு இருக்கிற கணக்கையும், சேலம், கோவை போன்ற மாவட்டங்களுக்கு இருக்கிற கணக்கையும் பார்த்து, இந்தக் கொள்முதலை நாங்கள் ஏதோ புதிதாக - இந்த அரசு உருவாகிய பிறகு - கொண்டுவந்ததைப் போலவும் அவர்களுடைய ஆட்சியிலே கொள்முதலே இல்லாதது போலவும் இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான பூதத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் கொண்டுவந்துள்ளது போலவும் பேசுவது முறையாகாது.

கொள்முதல் இப்பொழுதைக்குத் தேவைப்படுகிற ஒரு கொள்கையாகும். அந்தக் கொள்கையை நாம் இப்பொழுது

எடுப்பதற்கு இல்லை. கொள்முதலில் நெல் வாங்குகிறோம் என்றால், அரிசி வாங்குகிறோம் என்றால், விவசாயிகளுக்கு அந்தக் கொள்முதல் பணத்தை அதிகமாகத் தரவேண்டுமென்று பேசுகிற அதே நேரத்தில் அப்படி விவசாயிகளிடத்திலே வாங்குகிற அந்த நெல்லும், அரிசியும் வேறு மாநிலங்களுக்கு விற்கப்படுகிறதா? கொள்முதல் விலையைக் கூட்ட வேண்டுமென்று கூறிய நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் நல்ல முறையிலே இதற்கான பதிலைத் தந்திருக்கிறார்கள். ஏழை எளியவர்களுக்கு, பாடுபடுகிறவர்களுக்கு, தமிழ் நாட்டிலே இருக்கிற ஏழை மக்களுக்கு விநியோகிப்பதற்குத்தான் நாம் நெல்லை வாங்குகிறோம். அப்படியில்லாமல் இவைகளை வாங்கி விற்கிற - அந்த வியாபாரத்திலே ஈடுபடுகிற - சர்க்காராக இது இருக்குமானால் விவசாயிகளிடத்திலே அதிக விலை கொடுத்து வாங்குவதற்கு நியாயம் இருக்கமுடியும். இது ஏழை எளிய மக்களுக்கு இப்பொழுது இருக்கிற விலையைவிடக் கொஞ்சம் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்ற அந்தக் கருத்தோடு ஆலோசிக்கப்படுகின்ற காரணத்தாலேதான் இப்பொழுது கொள் முதலுக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்ற கருத்தினை இந்த அரசு ஏற்றுக்கொள்ளுவதாக இல்லை. மத்திய அரசினுடைய உணவு அமைச்சர் அவர்களும் இதற்கு ஒப்புதல் வழங்கி யிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கருத்திருமன் அவர்கள், 'என்னிடம் தனியாக ஏதோ சொன்னார்கள்' என்று குறிப்பிட்டார். அவர் அவரிடம் ஏதோ தனியாக சொல்லி யிருப்பதாகக் குறிப்பிட்டால் நமது உணவு அமைச்சர் அவர்களும் 'என்னிடம், தனியாக இப்படி சொன்னாரே' என்று சொல்லலாம். பொதுவாக பத்திரிகை நிருபர்களிடத்திலே அறிவித்தது இன்றைய தமிழக அரசினுடைய இந்த முறை ஏற்கத்தக்கது; இதை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்பதுதான். இது சரியானதுதான், இது தவறானது அல்ல என்ற முறையிலேதான் மத்திய அரசினுடைய உணவு அமைச்சர் அவர்கள் இதனை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் துணை மதிப்பீடுகள் விவாதத்திலே பேசிய நேரத்திலே எதிர்க்கட்சி துணைத்தலைவர், தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதி அனைத்தும் கெட்டுவிட்டது, எங்களுக்கே பாதுகாப்பு இல்லை என்ற ஒரு பாதுகாப்பற்ற பயங்கரமான சூழ்நிலையில் தமிழ் நாட்டு மக்கள் வாழ்வது போன்ற ஓர்

உருவகத்தை இங்கே சித்தரித்துக் காட்டினார்கள். அது வெறும் உருவகமே தவிர, உள்ளபடியே உண்மைநிலை அல்ல. தமிழ்நாட்டில் என்ன பாதுகாப்பு யாருக்கு குறைந்து விட்டது? இது ஒரு சாதாரண விஷயம். புராணிகர்களுக்கு இது பெரிய விஷயம். மகாமகம் தமிழ்நாட்டில் நடைபெற்றது; பாட்னாவில் நடைபெற்றது. பாட்னாவில் நடைபெற்ற மகாமகத்தில் ரயிலே கவிழ்ந்தது. ரயில்வே ஸ்டேஷன் சூறையாடப்படக்கூடிய அளவிற்கு பெரிய அமளி நடைபெற்றது. தமிழ்நாட்டில் 20 லட்சம் பேர் கும்பகோணம் மகாமகத்தில் கலந்து கொண்டார்கள் என்ற செய்தி வந்தது. மிக அமைதியான முறையில் நடைபெற்றது. போலீஸ் பாதுகாப்பு, பந்தோபஸ்து ஏற்பாடுகள் சாலைவசதிகள் அத்தனையும் செய்யப்பட்டது என்கின்ற செய்திகளையும் படிக்கிறோம். மகாமகத் திருவிழாவையும்கூட பாதுகாப்பாக நடத்த வேண்டும். அதிலே யாருக்கும் ஒரு தீங்கும் ஏற்படக்கூடாது என்பதிலே தமிழக அரசு கண்ணும் கருத்துமாக இருந்திருக்கிறது. இவைகளை எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் சட்டம், அமைதி, ஒழுங்கு இவைகள் எல்லாம் கெட்டுவிட்டது என்று எதை வைத்துக்கொண்டு சொல்கிறார்கள்? அண்மையில் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் கல்லெறியப்பட்டதை வைத்துக்கொண்டா சொல்கிறீர்கள்? கோவையிலே நடைபெற்ற சம்பவம் என்ன? மாணவர்கள் கறுப்புக்கொடி காட்டினார்கள். அன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள், மாணவர்களைப்பற்றி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சொல்லவில்லை, வந்த கூட்டத்தைப் பற்றித்தான் சொன்னார் என்று சொன்னார். நான் அப்பொழுதே மறுத்துச்சொன்னேன். வன்முறையில் ஈடுபட்ட மாணவர்களைத் தாக்கச் சென்ற மக்களைத் தாக்கினார்கள் போலீஸ்காரர்கள் என்று தமிழ்நாடு காங்கிரஸ்கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார். ஆகவே, மாணவர்கள்தான் வன்முறையில் ஈடுபட்டிருப்பதாக அவருடைய அறிக்கை சொல்லுகிறது என்று அவர்களுக்கு எடுத்துக் காட்டினேன். மாணவர்களுடைய மனம் புண்படும்படியான ஒன்றை தமிழக காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள் கூறி விட்டார்கள். அதற்காக கொதித்தெழுந்த உணர்ச்சியின் காரணமாக சிலபல இடங்களிலே இத்தகைய கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்கள் நடந்ததில் வன்முறைக் காரியங்கள்

நடைபெற்றன. அதை உடனடியாகக் கண்டித்து முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கை விடுத்தார்கள். நான் எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்களை மிகுந்த கனிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த 20 ஆண்டுக் காலத்தில் எத்தனையோ முறை எதிர்க்கட்சியிலே இருந்த நாங்கள் தாக்கப்பட்டிருக்கிறோம். எத்தனையோ கூட்டங்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகம் மாத்திரமல்ல; சுதந்திரா கட்சி மாத்திரம் அல்ல; கம்யூனிஸ்டு கட்சி மாத்திரம் அல்ல; எல்லாக்கட்சியைச் சேர்ந்த கூட்டங்களும் கலைக்கப்பட்டன. இந்தி மீது எங்களுக்குள்ள வெறுப்பைக் காட்டுவதற்கு 1965-ஆம் ஆண்டு எங்களுடைய சொந்த வீடுகளில் எங்களுடைய சொந்தப் பொறுப்பிலே கறுப்புக் கொடி கட்டிக்கொள்ளக்கூட உரிமை தரப்படவில்லை. கறுப்புக்கொடி காட்டக்கூட எங்களுக்கு உரிமை கிடையாது. இன்றைக்கு ஆயிரம் பேர் இரண்டாயிரம் பேர் அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டுகிறதைப் பார்த்து, அவர்களுக்கு உரிமை உண்டா இல்லையா என்ற விவகாரம் எழுகிறது. அன்றைய தினம் முதலில் எல்லா இடங்களிலும் கறுப்புக் கொடி காட்டத் திட்டமிட்டோம். இதனால் குழப்பம் ஏற்படக்கூடும் என்று அறிந்த அறிஞர் அண்ணா அவர்கள் அவரவர்களுடைய தனிப்பட்ட இல்லங்களிலே கட்டிக் கொண்டால் போதும். அவர்களுடைய உடைகளிலே கறுப்புக் கொடி அணிந்தால் போதும் என்று விடுத்த அறிக்கைக்கு இணங்க எங்களுடைய சொந்த பொறுப்பில் எங்களுடைய வீடுகளில் கறுப்புக் கொடி கட்டிய நேரத்தில், போலீஸ் படை சூழ குண்டர்கள், சமூக விரோதிகள் - நான் எந்தக் கட்சிக்காரர் என்று குறிப்பிட்டுச் சொல்லி யாருடைய மனதையும் புண்படுத்த வில்லை - எங்களுடைய வீடுகளில் ஏறி கொடிகளையே நாசப்படுத்தவில்லையா? என்னுடைய தாயார், சகோதரிகளை, பெண்டு பிள்ளைகளை வீட்டிலிருந்தவர்களைப்பற்றி எல்லாம் வீட்டு வாயிற்புறத்திலே நின்றுகொண்டு கேவலமான மொழிகளை உதிர்க்கவில்லையா? ஓர் அனுதாபச் சொல் - ஓர் ஆழ்ந்த இரங்கல் - ஒரு வருத்தம் தெரிவிக்கின்ற அறிக்கை - எந்த நேரத்திலாவது அன்றையதின முதலமைச்சரவர்களால் விடப்பட்டது உண்டா? இன்றையதினம் சட்டம், ஒழுங்கு, அமைதி எல்லாம் கெட்டு விட்டது, கெட்டு விட்டது என்று பேசுகிறார்கள். பக்கத்து மாநிலம் - மைசூர் மாநிலம் - காங்கிரஸ்காரர்களால்

ஆளப்படுகின்ற மாநிலம்தான். அங்கே நமது மதிப்புமிக்க துணைப்பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் வந்தபோது ஏற்பட்டக் குழப்பத்தின் காரணமாக 6 பேர், 8 பேர் சுடப்பட்டுச் சாகக்கூடிய அளவு அமளி நடைபெற்றதாகச் செய்திகள் வருகின்றன. ஆனால் இங்கே ஒரு கூச்சல்; இங்கே சட்டம், ஒழுங்கு, அமைதி கெட்டுவிட்டது, கெட்டு விட்டது என்று. டெல்லியினுடைய அமைச்சர் வந்தார்கள். கூட்டத்திலே இருந்து கல் வீசப்பட்டது. அதை யாரும் ஆதரிக்க மாட்டார்கள். கறுப்புக் கொடி காட்டினார்கள். மாணவர்களில் யாரோ கல் வீசி இருக்கலாம், அல்லது மாணவர்களுடைய சொல்லுக்குக் கட்டுப்படாத ஓர் ஆளாகக்கூட இருக்கலாம். அந்த விவாதத்தைத் துவக்குவதற்கு இப்பொழுது வழி இல்லை. யாரோ ஒருவர் கல்லை வீசி விட்டார். அது டில்லியிலே இருந்து வந்த துணை அமைச்சருடைய தலையிலே பட்டது. அதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். உடனடியாக, 'போலீஸார் வேண்டுமென்றே திட்டமிட்டுத்தான் இதைச் செய்திருக்கிறார்கள், ஆகவே, எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை' என்றா கூறுவது? நேற்றைய தினம் கூட நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 'நாங்கள் எடுக்க வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளை எல்லாம் எடுக்கிறோம். ஆனால் அதையும் மீறி சில சமயங்களில் வன்முறைகள் நடைபெறுகின்றன' என்று குறிப்பிட்டார். இன்றையதினம் நம்மை எல்லாம் இங்கே உட்கார வைத்திருக்கிற, ஜனநாயகப் போஷகர் என்று பெருமை பேசக்கூடிய அளவுக்கு இந்தியாவினுடைய பிதா என்று போற்றப்பட்ட மகாத்மா காந்தி அவர்கள் கல்லடிப்படுவார் என்று பலமுறை எச்சரிக்கப்பட்டு, இரண்டொருமுறை அவருடைய பிரார்த்தனைக் கூட்டத்தில் குண்டுகள் வீசப்பட்டு, இரண்டொருமுறை பிரார்த்தனைக் கூட்டத்திற்குப் போனபோது கத்தியால் குறிபார்க்கப்பட்டார் என்றெல்லாம் செய்திகள் வெளியான பிறகும் அவர் குண்டடிபட்டு மடிந்தார் என்றால் அது என்ன திட்டமிட்டா போலீஸார் குண்டடிபடுவார் என்று தெரிந்தா விட்டு வைத்தார்கள்? கூட்டத்திலே கூடியுள்ள யாரும் அறியாத நேரத்தில் திட்டமிட்டிருந்த ஒரு காரியத்தை செய்துவிட முடிகிறது. ஆகவே, அதை தடுக்க இயலாத காரணத்தால் போலீஸ் அதற்கு உடந்தை என்றா கூறுவது? இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு வேண்டுமென்றே காங்கிரஸ்காரர்களுக்கு பாதுகாப்பு அளிக்க

மறுக்கிறது என்று கூறுவது தவறான விவாதமாகும். நமது மதிப்பிற்குரிய முன்னாள் காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் டில்லிப் பட்டணத்தில் இருந்தபொழுது அவருடைய வீட்டிற்குள்ளேயே குண்டர்கள் நுழைந்தார்கள். டெல்லி தெருக்களிலே ரத்த மழை பொழிந்தது. அங்கு கூடியிருந்தவர்கள் பலவந்தமாகப் போலீஸாரைத் தாக்கினார்கள். அதற்காக, சட்டம், ஒழுங்கு, அமைதி குலைந்து விட்டது. உடனே ராஜினாமா செய் என்றா சொல்லிக்கொண்டிருந்தார்கள்? காமராஜருடைய உயிரையே பாதிக்கக்கூடிய அளவுக்கு நிலைமைகள் இருந்தன. சூலாயுதத்தையும் வேலாயுதத்தையும் கொண்டுவந்து அவரைத் தாக்க முற்பட்டனர். உடனே சட்டம், ஒழுங்கு, அமைதி குலைந்து விட்டது, போலீஸாரால் இம்மூன்றையும் நிலைநாட்ட முடியவில்லை, ஆகவே போலீஸாரே தேவையில்லை என்று அங்கே கூறி விட்டார்களா?

கடந்த ஜனவரி 1-ஆம் தேதி அன்று டெல்லிப் பட்டணத்தில் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிற தெருவில் 10, 20 இளைஞர்கள் குடித்துவிட்டு இந்தியா வந்திருக்கிற வெளிநாட்டுத் தூதுவர் ஒருவருடைய மனைவியை மானபங்கப்படுத்தியிருக் கிறார்கள். ஒரு டாக்டர் அதே தெருவிலே போயிருக்கிறார், அவருடைய மனைவியுடன் அவர் போன காரை நொறுக்கி, டாக்டருடைய மனைவியை வெளியே இழுத்து அவர்களையும் மானபங்கம் செய்திருக்கிறார்கள். ஒரு நகரமன்ற உறுப்பினரையும் அவருடைய மனைவியையும் - இருவரையும் துன்புறுத்தி யிருக்கிறார்கள். அவருடைய மனைவியையும் மானபங்கப் படுத்தியிருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகாமையிலே தான் இவ்வளவும் நடைபெற்றிருக்கின்றன. அந்தத் தெருவிலேயே இருந்தும் அந்தப் போலீஸாரால் திடீரென்று ஏற்பட்ட தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை. அங்கே நீதி விசாரணை செய்யப்படவேண்டுமென்று கோரப்பட்ட நிலையிலும் மாஜிஸ்ட்ரேட் விசாரிக்கக்கூடிய அளவுக்குத் தான் நீதி விசாரணை நடைபெறுகிறது - இவ்வாறு பெரிய காரியங்கள் நடைபெற்ற பிறகும்கூட. ஆகவே, சட்டம், ஒழுங்கு, அமைதி மிக கெட்டுவிட்டன என்று கூறுவது பொருந்தாத வாதமாகும் என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்களுக்கும்,

தொடர்ந்து பேசி வருகிற காங்கிரஸ் கட்சி நண்பர்களுக்கும் பதிலாக அளிக்க விரும்புகிறேன்.

வேலைவாய்ப்பு குறைந்துவிட்டது இந்தப் புதிய அரசில் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். படித்த என்ஜினியர்களெல்லாம் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், அமைப்பில், படித்திருக்கிற என்ஜினியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று அவர்களைக் கொண்டுவந்து, இலாகாக்களில் வேலைக்கு அமர்த்தினால், உடனே முன்பு அந்த வேலையில் இருந்த சில 'அன்குவாலிபைட்' என்று சொல்லத்தக்க அளவிலே, சூபர்வைசர்ஸ் என்ற அளவிலே பதவியில் உள்ளவர்கள் வேலை இழக்க நேரிடுகிறது. ஆகவே, அவர்கள் வேலைக்கு வந்தால், இவர்கள் வேலை இழக்க நேரிடுகிறது. ஆகவே, பார், பார், வேலை வாய்ப்பை இழந்தார்கள் என்று கூறப்படுகிற கூற்றுக்கும் இந்த அரசு சமாதானம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். அதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உணராதவர்கள் அல்ல. இந்த வேலை இல்லாத நிலைமை ஏன் எற்பட்டது? நம்முடைய திட்டங்களெல்லாம் மத்திய அரசாங்கத்தினால் ஆரம்ப காலத்திலிருந்தே ஒழுங்காக போடப்படாத காரணத்தினால், ஒழுங்காக உருவாக்கப்படாத காரணத்தினால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஏழை எளியோர்களுடைய இல்லங்களைத் தொடாத காரணத்தினால், இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது. இன்றைக்குப் போடப் பட்டிருக்கிற நான்காவது ஐந்தாண்டுத் திட்டமும் சரிசமமாக நடைபோட ஆரம்பித்திருக்க வேண்டும். ஆண்டுக்கு ஒரு அடி எடுத்து வைப்பது என்று சொல்லாமல் சரிசமமாக நடை போட்டிருக்குமானால், ஓரளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைத்திருக்க முடியும். படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கக்கூடிய என்ஜினியர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பரிந்துபேசினார்கள். நன்றி செலுத்திக் கொள்கிறேன். நிலைமைகளை நாம் உணரவேண்டும். மத்திய அரசு அந்த அளவுக்கு நம்மோடு ஒத்துழைக்கவில்லை. விவசாயத்தைப்பற்றிச் சொன்னார்கள். நம்முடைய திட்டங்களைப்பற்றிச் சொன்னார்கள். ரூ. 20 கோடி கேட்டோம். எதற்காக? உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக ரூ. 20 கோடி

மத்திய அரசாங்கத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு கேட்டது.

(ரூபாய் லட்சத்தில்)

| | |
|---|---|
| எஸ். எம். ஐ. பி-க்காக | 425 |
| புதிய கிணறுகளுக்கு சப்ஸிடி ஸ்கீமுக்காக | 306 |
| பம்பு செட் ஸ்கீமுக்காக | 409 |
| கம்யூனிட்டி வெல்ஸ் ஸ்கீமுக்காக | 27 |
| பிரைவேட் டியூப் வெல்ஸ்-க்காக | 112 |
| பில்டர் பாயிண்டு டியூப் வெல்ஸ்-க்காக | 61 |
| ஸ்டேட் டியூப் வெல்ஸ்-க்காக | 13 |
| டிராக்டர் ஹயரிங் ஸ்கீமுக்காக | 185 |
| ரூரல் எலக்டிரிபிகேஷனுக்காக | 400 |

என்ற அளவிலே ரூ. 20 கோடி தமிழக அரசு மத்திய அரசைச் கேட்டது. அந்த ரூ. 20 கோடி தமிழக அரசுக்குத் தரப்பட்டிருக் குமானால், நிச்சயம் நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அறிவித்தது போல, இன்னும் பல பகுதிகளுக்கு நாம் படிஅரிசி திட்டத்தை விரிவுபடுத்தியிருக்க முடியும். ஆனால்,. இதை அளிக்காதது மாத்திரம் அல்ல. 1966-67-ல் தந்த ரூ. 3 கோடி கூட 1967-68-ல் தருவதற்கு தயக்கம் காட்டிவிட்டார்கள். இந்த நிலையிலே நாம் நமக்குள்ளே இருக்கிற பண்டத்தை வைத்துக்கொண்டுதான் நாம் நம்முடைய காரியங்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது. மத்திய அரசினுடைய ஒத்துழைப்பு நமக்கு நிரம்பத் தேவை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நிறைந்த நம்பிக்கையோடு சொன்னார்கள். 'இன்னும் இரண்டு மாதங்களில் ஒரு படி அரிசித் திட்டம் எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்று நம்புவோம், இன்னும் மூன்று ஆண்டுகளுக்குள் மூன்று படி அரிசித் திட்டம் அமலுக்கு வந்துவிடும் என்று நம்புவோம்' என்று சொன்னார்கள். அதே பாணியில் நானும் பேசினால் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய ஒத்துழைப்போடு ரூ. 20 கோடி மத்திய அரசு சாங்சன் செய்யும் என்று நம்புவோமாக என்று நானும் பேசலாம். ஆகவே, அவர்கள் இப்படிப்பட்ட நல்ல ஒத்துழைப்பை நமக்கு தருவார்களேயானால் நாம் இந்த விஷயங்களில் வெற்றிகரமான சூழ்நிலைகளைக் காணமுடியும் என்று கூறி, இந்தத் துணை மதிப்பீட்டுக் கோரிக்கையை உறுப்பினர்கள் ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடை பெறுகின்றேன்.

## போக்குவரத்துத் துறை

**உரை : 24** நாள் : 16.03.1968

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் பற்றி ஆய்வுரைகளும் இதைப்பற்றி நான் ஆற்றுகின்ற உரையும் அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் படித்து அதுபற்றிப் பேசுவதற்கு ஆயத்தமாக இருப்பார்கள் என்று எண்ணுகிறேன். முன்னுரை எட்டு பக்கங்களைத்தான் கொண்டிருக்கிறது. யாராவது ஒரு உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில் மற்றவைகளைப் படிக்காமல் போனாலும் கூட இந்த எட்டு பக்கங்களையாவது படித்து அறிந்து கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்று எண்ணுகிறேன். ஆகவே மற்றவர்களுக்கு நேரத்தை வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு நான் முன்னுரையாக ஆற்றாமல் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லும் கருத்துக்களைக் கேட்டு என்னுடைய முடிவுரையிலே பதிலளிக்கிறேன் என்று கூறிக்கொண்டு உறுப்பினர்களின் கருத்துக்களை அறிய விழைகின்றேன்.

தமிழக அரசு போக்குவரத்துத்துறையின் 1967-68 ஆண்டு செயல்கள் குறித்து விரிவான ஆய்வுரை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தனியாக வழங்கப்பட்டுள்ளது. அதில் கடந்த ஆண்டில் இத்துறையில் பல்வேறு பிரிவுகளில் எய்திய முன்னேற்றங்களை விரிவாக விளக்கியிருப்பத்தோடு சிறப்பான பல சாதனைகளையும் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

இந்த அரசு, பயணிகள் பேருந்து போக்குவரத்தை படிப்படியாக நாட்டுடமையாக்குவது என்று எடுத்துள்ள முடிவை

மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர் . கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் விளக்கமும் தரப்பட்டது. அக்கொள்கைக்கு இணங்க கீழ்கண்ட வழித்தடங்களை நாட்டுடமையாக்கும் பணியில் அரசு முனைந்துள்ளது-

(அ) சாதாரணப் பேருந்துகளும், கடுவிசைப் பேருந்துகளும் செல்கின்ற 75 மைலும் அதற்கு மேற்பட்டத் தொலைவுமுள்ள வழித்தடங்கள் அனைத்தும்.

(ஆ) வழித்தடம் என்ன தொலைவுள்ளதாய் இருப்பினும், சென்னை நகரிலிருந்து கிளம்பி, சென்னை நகரில் வந்து அடைகின்ற வழித்தடங்கள் அனைத்தும்.

(இ) கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து புறப்படுகிற அல்லது அங்கே முடிவடைகிற வழித்தடங்கள் உட்பட, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வழித்தடங்கள் அனைத்தும்.

இதன்படி 1-8-1967 முதல் 12-3-1968 வரை மேற்கொள்ளப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை வருமாறு-

| | மாவட்டம் | பேருந்துகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | செங்கல்பட்டு .. .. .. .. | 111 |
| 2 | தென்ஆற்காடு .. .. .. .. | 3 |
| 3 | வடஆற்காடு .. .. .. .. | 2 |
| 4 | தர்மபுரி .. .. .. .. | 18 |
| 5 | சேலம் .. .. .. .. | 9 |
| 6 | கோயம்புத்தூர் .. .. .. .. | 13 |
| 7 | நீலகிரி .. .. .. .. | 4 |
| 8 | திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 12 |
| 9 | இராமநாதபுரம் .. .. .. .. | 6 |
| 10 | மதுரை .. .. .. .. | 10 |
| 11 | கன்னியாகுமரி .. .. .. .. | 34 |
| 12 | மாநிலப் போக்குவரத்து அதிகாரியின் அனுமதியின் பேரில் ஓட்டப்படுபவை. | 14 |
| | மொத்தம் | 239 |

1968-69ல் நாட்டுடமையாக்கும் கொள்கையின்படி 146 பேருந்துகள் தமிழக அரசு போக்குவரத்துத் துறையின் கீழ் ஓடத் தொடங்கும்.

பேருந்து வழித்தடங்களை நாட்டுடமையாக்கும் கொள்கை யினால் தனிப்பட்ட பேருந்து உரிமையாளர்களிடம் பணியாற்றி யவர்கள் பலர் வேலையிழக்க நேர்ந்தது. அங்ஙனம் வேலையிழந்தவர்கள் இன்றியமையாத தகுதிகளைப் பெற்றியிருந்து அவர்கள் போதிய ஆதாரங்களுடன் போக்கு வரத்து துறைக்கு விண்ணப்பித்துக் கொள்வார்களேயானால் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளுமாறு இவ்வரசு ஆணையிட்டுள்ளது. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் இத்தொழிலாளர்கள் பதிவு செய்யவேண்டிய தேவையில்லை, அவர்கள் நேரிடையாகவே விண்ணப்பித்துகொள்ளலாம் என்ற சலுகையும் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு போக்குவரத்துத் துறையில் வேலையிலமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 253 ஆகும்.

பல்வேறு வழித்தடங்களை நாட்டுடமையாக்கும் நோக்குடன் போக்குவரத்து துறை இயக்குநர் அவர்கள் 1963-ம் ஆண்டு மோட்டார் வண்டி சட்டத்தின் 68-சி பிரிவின் கீழ் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். அந்த நடவடிக்கை அவர் வெளியிட்ட திட்டங்களுக்கு செல்லத்தக்கன அல்ல என்று கூறி தனிப்பட்ட சில பேருந்து அதிபர்கள் நீதிமன்றம் சென்றனர். அந்த வழக்கில் உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் விளைவாக இம்மாநில ஆளுநர் தமிழ்நாடு அரசாங்க அலுவல்களின் விதிகளில் (பிஸினஸ் ரூல்ஸ்) சில திருத்தங்களை செய்தார். அதன்படி மோட்டார் வண்டி சட்டத்தின் 68-சி பிரிவின் கீழ் மாநில போக்குவரத்து நிறுவனத்துக்குள்ள அதிகாரங்களையும் அலுவலகங்களையும் செயல்படுத்துவதற்கு வேண்டிய அதிகாரங்களை தொழில்-தொழிலாளர் -வீட்டு வசதித் துறை செயலாளருக்கு அளித்தார். மோட்டார் வண்டிகளின் சட்டத்தின் 68-டி பிரிவின்கீழ் உள்ள அதிகாரங்களை செலுத்தவும் அலுவல்களை செய்யவும் வேண்டிய உரிமையை இந்த அரசின் உள்துறை செயலாளருக்கு வழங்கினார். இப்போது அதன்படி சம்பந்தப்பட்ட செயலாளர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

புதிதாக நாட்டுடமையாக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் அதிகரிப் பதினால், அவைகளை பல்வேறு இடங்களில் பேணி பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே மதுரை, தஞ்சாவூர், தர்மபுரி, நாகர்கோவில், திருநெல்வேலி, விருதுநகர், பழனி, கும்பகோணம், புதுக்கோட்டை, வேலூர், திருவண்ணா மலை ஆகிய இடங்களில் பணிமனைகளை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

விரைவு பேருந்துகளில் மைலுக்கு 6 காசாக இருந்ததை இவ்வரசு பொறுப்பெற்ற பின்னர் 5 காசாக குறைத்ததனால் வருமானம் குறையவில்லை என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 1966-67ல் பயணக்கட்டணம் 6 காசாக இருந்த போது ரூ. 46,000 மட்டுமே நாள் வருமானமாக இருந்தது. அந்த நிலை மாறி 1967-68 இறுதியில் சராசரி நாள் வருமானம் ரூ. 52,000 ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பயணக் கட்டணத்தை குறைத்ததன் பயனாக பயணிகளின் எண்ணிக்கை பெருகியுள்ளது. பயணக்கட்டணத்தை குறைக்கும் பொழுதே விரைவு வண்டிகளில் இருக்கைகளின் எண்ணிக்கையை 35-லிருந்து 39-ஆக பெருக்க வேண்டும் என இந்த அரசு முடிவு செய்தது. அதன்படிபுதிய விரைவு வண்டிகள் அனைத்திலும் இருக்கைகளின் எண்ணிக்கை 39-ஆக உயர்த்தபட்டுள்ளது. சுமார் 55 சதவீத பழைய விரைவு வண்டிகளின் இருக்கைகளின் எண்ணிக்கை 39-ஆக உயர்த்தப்படுள்ளது.

புதிதாக நாட்டுடமையாக்கப்பட்ட மாவட்ட வழித்தடங் களிலும், புறநகர் வழித்தடங்களிலும் கட்டண அமைப்பை தக்கவாறு மாற்றியமைத்தல் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. புறநகர் வழித்தடங்களில் ஓடும் சாதாரண பேருந்துகளுக்கு கிலோ மீட்டருக்கு 2 காசு வீதப்படி கட்டணம் வசூலிக்கப்பட்டது. தனிப்பட்ட பேருந்து அதிபர்கள் சாதாரண பேருந்து வண்டிகளுக்கு கிலோ மீட்டருக்கு 3 காசு வீதம் கட்டணம் வசூலித்து வருகின்றனர். அரசினர் துறைக்கும் தனியார் துறைக்கும் இருந்த இந்த போட்டியை தவிர்ப்பதற்காக, நாட்டுடைமையாக்கப்பட்ட மாவட்ட வழித்தடங்களில் அரசினர் பேருந்துகளில் கிலோ மீட்டருக்கு 2.5 காசு வாங்குவது என இந்த அரசு முடிவு எடுத்துள்ளது. சென்னை மாநகரிலிருந்து புறப்பட்டு செல்கின்ற மாவட்ட பேருந்துகளிலும்,

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து இயங்கும் மாவட்டப் பேருந்துகளிலும், மற்ற மாவட்டங்களில் உள்ள 75 மைலும் அதற்கு மேலும் தொலைவுள்ள வழித் தடங்களில் செல்லும் பேருந்துகளிலும் இந்த விகிதப்படி கட்டணம் வசூலிக்கப்படும். சென்னை மாநகரிலிருந்து புறப்பட்டுச் செல்கின்றபுறநகர் பேருந்துகளிலும், குமரி மாவட்டத்தின் உள்ளும் புறமும் இயங்கும் புறநகர் பேருந்துகளிலும், நகரக்கட்டணம் நகரிலும், புறத்தில் கிலோ மீட்டருக்கு 2.5 காசும் வசூலிக்கப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் நகர பேருந்துகளிலும் , நாகர்கோவிலிலிருந்து 10 மைலுக்கு செல்லக்கூடிய வண்டிகளிலும் சென்னை மாநகரப் பயணக் கட்டணம் வசூலிப்பது என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது சென்னை நகரில் அமுலாக்கப்பட்ட கட்டண சீரமைப்பு பயணிகளுக்கும், நடத்துனருக்கும் இடையே இதுவரை இருந்துவந்த சிக்கல்களை தவிர்ப்பதற்கு பெரிதும் பயன் பட்டுள்ளது. மூன்று கட்டங்களைத் தவிர 20-க்கு மேற்பட்ட கட்டங்களில் கட்டண சீரமைப்பால் கட்டணக்குறைவு ஏற்பட்டுள்ளது.

பேருந்து பயணிகளுக்கு மேலும் வசதியும் வாய்ப்பும் அளிக்கும் நோக்கத்துடன் ஞாயிற்றுக்கிழமைகளிலும், ஏனைய விடுமுறை நாட்களிலும் அவரவர் விருப்பம் போல் பயணம் செய்யும் பயணச் சீட்டு முறை (டிராவல்ஸ் ஆஸ் பிளீஸ் டிக்கட்) அமுலாக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒருவர் ரூ.1-50-க்கு பயணச்சீட்டு வாங்குவதன் மூலம் அவர் மாநகர் பேருந்துகளில் எங்குவேண்டுமானாலும் எத்தனை முறை வேண்டுமானாலும் அந்த நாள் முழுவதும் பயணம் செய்யலாம்.

பார்வையிழந்தோர்களுக்கு, உடல் ஊனமுற்றோர்களுக்கும் சலுகை அளிக்க இந்த அரசு உத்திரவு பிறப்பித்துள்ளது. இது மனிதாபிமானத்தின் அடிப்படையில் எடுத்த முடிவு. அதன்படி அவர்கள் சிகிச்சை பெற்று வரும் காலம் முழுவதும் அரசாங்கப் பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்யலாம்.

பாராளுமன்ற- சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்க விரைவு வண்டி 5-வது, 6-வது எண்களுள்ள இருக்கைகள், வண்டி

புறப்படும் ஒரு மணி நேரம் வரை ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் குறிப்பிட்ட நேரத்திற்குள் அந்த சலுகையைப் பயன்படுத்திக் கொள்ளவில்லையென்றால் அந்த இருக்கைகள் மற்ற பயணிகளுக்கு அளிக்கப்படும் என்று உத்திரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

சென்னை நகரிலும் நீண்டதூர வழித்தடங்களிலும் பயணம் செய்யும் மக்களுக்கு போதிய வசதிகள் செய்துதரவேண்டும் என்ற நோக்குடன் 494 வண்டிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசு போக்குவரத்துத்துறை போன்ற வளர்ந்து வரும் நிறுவனங்களில் பல்வேறுபட்ட தொழிலாளர்கள் பணிபுரிவதால் பல வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவர்களின் ஆர்வம் நிறைந்த கூட்டுறவு இன்றியமையாததாகும். அதைக் கருத்தில் கொண்டு தொழிலாளர்கள் நன்மைக்கு ஒத்த நடவடிக்கைகள் பலவற்றை இந்த அரசு எடுத்துள்ளது. அவைகளில் சிறப்பான நடவடிக்கைகள் சிலவற்றை இங்கே குறிப்பிடுவது என் கடமையாகும்.

(1) 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதி முதல் பேணுதல் பணியாளர்களின் செயலூக்க பூரிப்பு ஊதியம் (இன்சென்டிவ் போனஸ்) அவர்களுடைய மாத அடிப்படை ஊதியத்தின் 10-சதவீதத்திலிருந்து 15-சதவீதமாக உயர்த்தப் பட்டுள்ளது.

(2) குரோம்பேட்டையிலுள்ள அரசாங்கப் போக்குவரத்து மத்திய பணிக்களரியிலும், நாகர்கோயில் ராணி தோட்டம் பேருந்து வண்டி கட்டும் பணிக்களரியிலும் செயலூக்க மாத பூரிப்பு ஊதியத்தின் உயர் வரம்பு அடிப்படை ஊதியத்தில் 20-சதவீதமாக இருந்தது 40-சதவீதமாக உயர்த்தப்படுள்ளது.

(3) நாளும் ஒழுங்காகப் பணிக்கு வருவதற்குரிய பூரிப்பு ஊதியத்திட்டம் (அட்டெண்டன்ஸ் போனஸ் ஸ்கீம்) 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதி முதல் குரோம்பேட்டை அரசாங்கப் போக்குவரத்து மத்தியப் பணிக்களரிக்கும் நீட்டிக்கப்படுள்ளது. இப்பணிக்களரியிலுள்ள பணியாளர்கள் ஒவ்வொருவரும் இத்திட்டத்தின் கீழ் பூரிப்பு ஊதியமாக ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 90 பெறுவர்.

(4) வலவர், நடத்துனர், பயணச்சீட்டு சோதிக்கும் மேற்பார்வையாளர், நேரக்கண்காணிப்பாளர் ஆகிய போக்குவரத்துப் பணியாளரின் படி 10 காசு உயர்த்தப்பட்டுள்ளது.

(5) தொழில்நுட்பப் பணியாளருக்கான இரவு அலுவல் படி, ஒவ்வொரு தொழிலாளருக்கும் இரவு ஒன்றுக்கு 10 காசு உயர்த்தப்பட்டுள்ளது.

(6) உடைகளுக்காகத் தொழிலாளர் விரும்பிய வண்ணமே கதர்த் துணிக்குப் பதிலாக கைத்தறித் துணி வழங்கப்பட்டு வருகிறது.

(7) தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் தையல் செலவு, ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ. 10 லிருந்து ரூ. 12 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(8) இத்துறையில் அன்றாடம் ஊதியம் பெறும் பணியாளர் அனைவருக்கும் நகர ஈட்டுப்படி வழங்கப்பட்டுள்ளது.

(9) தொழிலாளர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூட்ஸ்கள் வழங்கியதற்குப் பதிலாக அவர்கள் விரும்பியவாறே, ஓரளவு மேல்புறம் மூடப்பட்டுள்ள ''பட்டான்'' காலணி ஆண்டிற்கொரு முறை வழங்கப்படுகின்றன.

(10) சிறு தண்டனை பெற்றவர்களும் ஒழுங்கு வருகை பூரிப்பு ஊதியம் (அட்டெண்டன்ஸ் போனஸ்) பெறும் வண்ணம் அவர்களின் சிறு தண்டனைகளை வருகை பூரிப்பு ஊதியத்திட்ட விதிகளிலிருந்து அரசாங்கம் நீக்கிவிட்டது.

(11) போக்குவரத்துத் துறை நியாயவிலைக் கடைகளை நகரப் பணிமனைகளின் தொழிலாளர்களின் நலனுக்காக நடத்தி வருகிறது. அந்தக் கடைகளில் பொருள்கள் தொழிலாளர்களுக்கு கடன் அடிப்படையில் விற்கப்படுகின்றன. அண்மையில், அரசினர் திருச்சிராப்பள்ளியிலும் அங்குள்ள தொழிலாளர்களின் நலனுக்காக ஒரு நியாயவிலைக் கடை திறக்க உத்திர விட்டிருக்கிறது.

பேருந்து இயக்கச் செலவினங்களை இயன்றவரை குறைக்கும் பொருட்டு அரசு பல முயற்சிகளை மேற் கொண்டுள்ளது. தேவைக்கு வேண்டிய அளவுக்கு மட்டும்

பொருள்களை வாங்குவது, அவற்றைக் கணக்கெடுப்பது, நல்லவகையில் பயன்படுத்துவது, இவைகளின் மூலம் செலவை கணிசமாக குறைக்க முடியும். இதை நன்கு ஆராய்ந்து அரசாங்கத்திற்கு ஆலேசனை கூற வல்லுநர் குழு ஒன்றை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இக்குழு விரைவில் செயல்படும்.

நிர்ணயிக்கப்பட்ட தூரத்தையும் நிர்ணயிக்கப்பட்ட கால அளவையும் எட்டிய பேருந்துகள் பயனற்றவை என தீர்மானிக்கப்பட்டால் அவ்வப்போது ஏலத்தில் விற்கப் படுகின்றன. அம்மாதிரி விற்கப்படும் வண்டிகளை மதிப்பீடு செய்வதற்கும், அவை நல்ல முறையில் நல்ல விலைக்கு ஏலம் விடப்படுகின்றனவா என்பதை கண்காணிப்பதற்கும் 'ஏலக் கண்காணிப்பு குழு' ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுவும் விரைவில் செயல்படத்துவங்கும் .

மாநகர் போக்குவரத்தில் ஏன் நஷ்டம் ஏற்படுகிறது, அதை எப்படி சீர்ப்படுத்தலாம் என்பதைப் பற்றியும் இந்த அரசு கவனம் செலுத்தி வருகிறது. மாநகர் போக்குவரத்து ஆலோசனைக் குழு இதைக் குறித்து தனது சிறப்பான கருத்துகளை தெரிவிக்குமென நம்புகிறேன். நாட்டுடமையாக்கப்பட்ட மற்ற பேருந்துகளையும் எங்ஙனம் செவ்வனே நடத்துவது, வருவாயை எப்படிப் பெருக்குவது என்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இந்த அரசின் தேசீயமயமாக்கும் திட்டம் செம்மையாக செயல்படவும், நகர் பேருந்துகளில் தொடர்ந்தாற்போல் ஏற்பட்டுவரும் இழப்பை குறைத்து லாபம் காண்பதற்கான வழிவகைகளையும் அரசாங்கப் போக்குவரத்துத் துறை செவ்வனே பணியாற்றவேண்டிய செயல்முறை குறித்தும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களை தெரிவிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த மாமன்றத்திலே வைக்கப் பட்டுள்ள மானியக்கோரிக்கைகளின் மீது எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களும் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய அரிய கருத்துகளையெல்லாம்

எடுத்துக் கூறி இருக்கிறார்கள். கூடுமானவரையில் இந்த மானியம் தகராறுகளுக்கு ஏதுவான வாக்குவாதங்கள் எதுவும் இல்லாமல் ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் உட்பட அனைவரும் பல வேண்டுகோள்களை விடுக்கின்ற வகையிலே இன்றைய தினம் இந்த விவாதம் நடைபெற்றதற்காக நான் என்னுடைய மகிழ்ச்சியையும், உறுப்பினர்களுக்கு நன்றியையும் கூறிக்கொள்ள பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

போக்குவரத்து வசதிகள், தேவைகள் மேலும் மேலும் நிறைவு செய்யப்படவேண்டும், விரைவுபடுத்தப்படவேண்டும் என்பதில் யாருக்கும் எந்தவிதமான இருதன்மை கருத்துக்களும் இருக்கமுடியாது. அந்த வகையில் இன்றையதினம் பேசிய உறுப்பினர்கள் எல்லாம் இந்த போக்குவரத்துத்துறை பற்றிப் பேசிய நேரத்தில், நாம் உன்னிப்பாக கவனித்தால் அநேகமாக தேசியமாயமக்கப்பட்ட தமிழக அரசு போக்குவரத்தைப் பற்றியேதான் பெரிதும் பேசி இருக்கிறார்கள். தேசியமய மாக்கப்பட்ட பேருந்துகளை இந்த அளவோடு நிறுத்திக் கொள்ளுங்கள் என்று கூறிய சுதந்திராக் கட்சியினுடைய தலைவர் உட்பட அனைவருமே நாட்டுடமை ஆக்கப்பட்ட பேருந்துகளைப் பற்றி பேசியதிலிருந்து அவர்களுடைய நாட்டம் அவர்களையும் அறியாமல்தான் இதன்பால் அதிகமாக இருக்கிறது என்பதை உணரமுடிகிறது.

''இதை நாட்டம் இல்லாமல் செய்யுங்கள்; இருக்கிற இழப்புகளை மேலும் குறைப்பதற்கு நிலையை சீர்படுத்துங்கள் என்ற அளவில்-தேசியமயக் கொள்கைக்கு எதிராக இருக்கிறோம்'' என்று மாத்திரம் இடையிலே கூறிவிட்டு-இன்றைய தினம் அரசு ஏற்றியிருக்கிற தேசியமயமாக்குகிற கொள்கை வெற்றி பெறுவதற்கு ஆக்கபூர்வமான கருத்துக்களை சுதந்திராக்கட்சி உறுப்பினர்களும் இங்கே எடுத்துக்கூறியிருக் கிறார்கள்.

தமிழகத்தில் போக்குவரத்துத் துறை எவ்வளவு வேகமாக வளர்ந்துகொண்டிருக்கிறது என்பதற்கு நான் என்னுடைய ஆய்வு உரையிலே எடுத்துக்கூறி இருக்கிற புள்ளி விவரத்தை மறுபடியும் உங்களுக்கு ஞாபகப்படுத்துவது நலம் என்று கருதுகிறேன்.

1966-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் தேதிக்கும் 1967ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் தேதிக்கும் இடையில் எந்த அளவு வேகமாகப் போக்குவரத்து வண்டிகள் பெருகியிருக்கின்றன என்றால் தனியார் பேருந்துகளைப் பொருத்த வரையில் 1966-ல் 5,395, 1967-ல் 5,681 அரசுப் பேருந்துகளைப் பொருத்தவரையில் புத்தகத்திலே தவறுதலாக 1,423 என்று அச்சடிக்கப்பட்டிருக்கிறது. அது 1966-ல் 1,234-ம் 1967-ல் 1638-ம் வாடகை லாரிகளைப் பொறுத்த வரையில் 1966-ல் 10,623-ம் 1967-ல் 10,738-ம் தனியார் லாரிகளைப் பொறுத்த வரையிலே மாத்திரம் 3,134-3,095 என்கின்ற அளவிலும் ஒப்பந்த வண்டிகள் 5,788 என்பது 7,087 என்கிற அளவிலும் உயர்ந்திருக்கிறது. பிற மோட்டார் வண்டிகள் 742-லிருந்து 1,016-ஆக உயர்ந்தும் ஆக 1966-ல் 27,105 வண்டிகளும் 1967-ல் 29,255 வண்டிகளும் ஆக இன்றைய தினம் இந்த அளவிற்கு உயர்ந்திருக்கிற நிலைமையைக் காண்கிறோம். இதிலே அரசாங்கத்தினுடைய பஸ்களை நான் டிசம்பர் மாதம் 31-ஆம் தேதி வரையிலே குறிப்பிட்டேன். இன்றைய அளவிலே 1,728 என்கின்ற அளவுக்கு அரசாங்க பஸ்கள் உயர்ந்திருக்கிறது. இதன் மூலமாக நமக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் அதிகப்பட்டிருக்கிறது என்பதை சொல்லத் தேவையில்லை. இந்த உயர் வரி வருமானம், நாம் சென்ற ஆண்டு ரூ. 35, ரூ. 40, ரூ. 45 என்ற மூன்று கட்டங்களிலிருந்த வரிகளை இரண்டு கட்டங்களுக்கு 200 மைல் வரையிலும் ரூ. 50 என்றும் 200-க்கு மேற்பட்ட மைல்களுக்கு ரூ. 55 என்றும் ஆக்கியதால் மாத்திரம் அல்ல. வண்டிகள் போக்குவரத்துத் துறையிலே அதிகமாக ஆகியிருப்பதும். ஒரு காரணம். 1966-67-ல் நமக்கு இந்த வரிகள் மூலம் கிடைத்த மொத்தத் தொகை 14.96 கோடி ரூபாய் 1967-68-ல் 16.31 கோடி ரூபாய். ஏறத்தாழ இரண்டு கோடியை நெருங்குகிற அளவுக்குப் போக்குவரத்துத் துறையிலே ஒரு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே இந்த வரிகள் கொடுப்பதற்கு அதிகக் கஷ்டம் இல்லாத நிலைமையை தனியார் துறையினரும் பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் மறுப்பதற்கில்லை.

தனியார் துறையினர் இந்த வரியினால் மெத்தவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சுதந்திராக்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் இங்கே எடுத்துச்சொன்னார்கள். ஆனால்

அவர்கள் உள்ளபடியே இந்த வரியினால் பாதிக்கப்பட்டிருப்பார்களே யானால், அதனால் தாங்கள் நொடிந்து போய்விடக்கூடும் என்று கருதியிருப்பார்களேயானால், வழித்தடங்களுக்கு விண்ணப்பங்கள் அதிகமாக வராது. ஆனால் ஒவ்வொரு முறையும் ஒரு வழித்தடம் துவங்கப்படுகிற நேரத்தில் அதற்காக வருகிற விண்ணப்பங்களைப் பார்த்தால், அது நூற்றுக்கணக்கில் இருக்கிறது. 'அந்த வழித்தடம் எனக்கு வேண்டும், எனக்கு வேண்டும்' என்று கேட்கிற விண்ணப்பங்கள் ஏராளமாக வருகின்றன. ஆகவே, இந்த வரி அதிகமாகிவிட்ட காரணத்தினால் யாரும் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. 'இந்த வரியையும் கொடுத்து, ஏன், இனிமேல் கேட்டாலும் கொடுத்து நாங்கள் இப்படிப்பட்ட ரூட்களைப் பெறுவதற்குத் தயாராக இருக்கிறோம்' என்கின்ற அளவில் இன்றையதினம் வழித் தடங்களுக்கான விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன.

இந்த ரூட்கள் வழங்கப்படுவது பற்றி இங்கு பேசப்பட்டது. புதிய ரூட்களை பழைய பஸ் சொந்தக்காரர்களுக்கு யாருக்கும் கொடுக்கக்கூடாது. புதியவர்களுக்குத்தான் தரவேண்டும் என்றும் 5 பஸ்கள் என்று உச்சவரம்பு காட்டி வழித்தடங்கள் தரவேண்டுமென்றும், அதற்கு மேல் யாருக்கும் வழித்தடங்கள் தரக்கூடாது, என்றும் இப்பேர்ப்பட்ட கருத்துக்களெல்லாம் இங்கே பேசப்பட்டன. இப்பொழுது வழித்தடங்கள், புதிய வழித்தடங்கள் வழங்குவது இன்றுள்ள சூழ்நிலையில் 15 மைல், அதாவது 24 கிலோ மீட்டர் என்ற அளவுக்கு நிர்ணயிக்கப்பட்டு, புதிய வழித்தடங்கள் புதியவர்களுக்குத் தான்தருகிறோம். பழைய பஸ் முதலாளிகள் யார் வந்தாலும் அவர்களை ஒதுக்கிவிட்டு, புதியவர்கள்தான் இந்த வழித்தடங்களைப் பெறலாம் என்ற அளவுக்கு இன்றைய சூழ்நிலை இருக்கிறது. 15 மைல் புதிய வழித்தடங்கள் என்று இருப்பதை, 25, 30 மைல் ஆக்கலாமா, ஆந்திராவிலும், கேரளத்திலும் உள்ளதுபோல் 25 மைல், 30 மைல் என்று ஆக்கலாமா என்ற யோசனையும் இப்பொழுது இருக்கிறது.

அதேபோல், நடுத்தர வழித்தடங்கள் ஒன்று முதல் நான்கு வரையில் பஸ்களை வைத்திருப்பவர்களுக்கு மாத்திரம் ஐந்தாவது பஸ் வழித்தடம் தரப்படும். ஒன்று முதல் நான்கு பஸ்

வைத்திருப்பவர்கள் யாரும் அந்த பஸ் ரூட்டைப் பெறுவதற்கு எந்தவிதமான தகுதியும் பெறாதிருக்கும் பட்சத்தில், அப்பொழுது தான் ஐந்துக்கு மேற்பட்ட பஸ்கள் வைத்திருப்பவர்களுக்கு இன்றைய தினம் ஆர்.டி.ஏ., மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்த வழித்தடங்களை வழங்கிவிடுகிறார். 5 ரூட்களுக்கு மேல் தரக்கூடாது என்ற கொள்கையை ஓரளவுக்கு சாத்தியக்கூறாக ஆக்குகின்ற வகையில் இன்றைய தினம் ரூல்ஸ் பரிசீலனையில் இருந்து வருகின்ற அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள் தொடக்கப் பேச்சில் எடுத்துக் கூறினார்கள். அந்த விதிமுறைகள் வந்துவிட்ட பிறகு, ஐந்துக்கு மேல் பஸ்களை யாரும் வைத்திருக்ககூடாது. பஸ்கள், வழித்தடங்களைப் புதியதாகப் பெறக்கூடாது என்ற அளவில் அந்த ரூல்ஸ் அமுல்படுத்தப்படுமானால், அது ஓரளவுக்கு சாத்தியக்கூறாகலாம். ஆனார் ஐந்து பஸ்கள் வைத்திருப் பவர்களுக்கு மேலும் பஸ் ரூட் கொடுக்கக்கூடாது என்பது நாம் இங்கே விதிமுறைகளில் செய்வது அல்ல, சட்டத்தைத் திருத்தி, அதற்கு மத்திய அரசின் ஒப்புதலையும் பெற வேண்டியவர்களா கிறோம் என்பதை இங்கே கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்தப் போக்குவரத்தில் பொதுவாக விபத்துக்கள் மலிந்து விட்டதாகவும், ஆயிரக்கணக்கில் கடந்த சிலபல ஆண்டுகளில் உயிர் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர்கள் மிகவும் உருக்கத்தோடு எடுத்துத் தெரிவித்தார்கள். இந்த விபத்துக்களை தவிர்ப்பதில், நாம் சட்டம், அதிகாரம்,விபத்து ஏற்பட்ட பிறகு வழங்கப்படுகிற தண்டனை, அதன் பேரில் வலவர்கள் அல்லது நடத்துனர்கள் இவர்கள் மீது எடுக்கிற நடவடிக்கைகள் இவைகள் மாத்திரம் அல்லாமல் மனிதாபிமான உணர்ச்சியின் அடிப்படையிலும், பொறுப்புணர்ச்சியின் அடிப்டையிலும், கடமை உணர்ச்சியின் அடிப்படையிலும் அவர்கள் இயங்குவார்களேயானால், இந்த விபத்துகளைத் தடுப்பதில் அவர்கள் அரசாங்கத்தோடு மாத்திரம் அல்ல, பொதுவாக போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டிருக்கிற தனிப்பட்ட அதிபர்களாக இருந்தாலும், அவர்களோடும், பொதுமக்களோடும் ஒத்துழைத்தவர்களாவார்கள்.

இன்றைக்கு விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு மாநில ரீதியிலே அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவுக்கு மூன்று யோசனைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆலோசனைக் குழு அடுத்த திங்களில் கூட இருக்கிறது. அதில் போக்குவரத்து வண்டிகளில் மீட்டர் விசைமானிகள், எவ்வளவு வேகத்தில் இந்தப் போக்குவரத்து சென்றிருக்கிறது என்பதைக் காட்டுகின்ற அந்தக் கருவிகளை அமைப்பது பற்றி ஒரு ஆணையிடலாமா என்று இந்த அரசு கருதிக்கொண்டிருக்கிறது. அதுவும் இந்த ஆலோசனைக் குழுவில் யோசிக்கப்பட இருக்கிறது. ஒரு லாரி 200 கிலோ மீட்டர் பயணம் செய்தால், அதிலே இரண்டு வலவர்கள் டிரைவர்கள் இருக்கவேண்டும் என்ற யோசனையையும், நடைபெற இருக்கிற இந்த மாநில ஆலோசனைக் குழுவில் ஆய்வு செய்யப்பட்டு, அதனை ஆணையாகப் பிறப்பிக்கலாமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

அதைப்போலவே இரவு நேரங்களில் ஓடுகிற சரக்கு பேருந்துகளுக்கு மஞ்சள் வண்ணம் தீட்டலாமா, அப்படி மஞ்சள் வண்ணம் தீட்டுகின்ற காரணத்தினால் இப்பொழுது பச்சை நிறம், நீல நிறம் இருளோடு கலந்துவிடுகிற காரணத்தினால் விபத்துக்கள் அதிகமாவதற்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கிறது. அதுவே காரணம் அல்ல என்றாலும் விபத்துக்களைத் தவிர்க்கலாமா என்று, அந்த அளவில் மஞ்சள் வண்ணம் அவர்கள் பூசவேண்டும் லாரிகளில் என்ற யோசனையும் ஆலோசனைக்கு வைக்கப்பட இருக்கிறது. இவைகளைப் பற்றியெல்லாம் அடுத்த ஏப்ரல் திங்களில் ஒரு முடிவு செய்யப்பட்டு விபத்துக்களைத் தடுப்பதற்குக் கூடுமான வரையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

போக்குவரத்தில், டாக்ஸிகளைப் பற்றியும், ஒப்பந்த வண்டிகளைப் பற்றியும் நான் இந்த அரசாங்கத்தினுடைய கருத்துகளை, இந்த அரசு இப்பொழுது யோசித்துவைத்திருக்கிற கருத்துக்களை, அமுலாக்க இருக்கிற திட்டங்களை இங்கே கூறுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். சென்னையிலே மாத்திரம் அல்லாமல் திருச்சி, மதுரை, கோவை ஆகிய நகரங்களில் மீட்டர்கள் டாக்ஸிகளில் பொருத்தப்பட

வேண்டும் என்ற ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டு. ஆங்காங்கு இருக்கிற டாக்ஸி சொந்தக்காரர்களும், தொழிலாளர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க இரண்டு முறை தவணை கொடுக்கப்பட்டு 30-4-1968 இறுதித் தவணையாக வழங்கப் பட்டிருக்கிறது. 30-4-1968-க்குள்ளாக திருச்சி, மதுரை, கோவை ஆகிய நகரங்களில் இருக்கிற டாக்ஸிகளில் மீட்டர்கள் பொருத்தப்பட்டுவிடவேண்டும். திருச்சியிலிருந்தோ, கோவையிலிருந்தோ, மதுரையிலிருந்தோ வெளியூர் செல்கிற வண்டிகளுக்கு மீட்டர்கள் தேவையில்லை, மீட்டர் கணக்கு தேவையில்லை, நகரத்திற்குள்ளே மாத்திரம் பயணிகளை ஏற்றிச் செல்கின்ற அளவுக்கு இந்த மீட்டர்கள் இருந்தால் பொது மக்களுக்கு மெத்தவும் பயனுள்ளதாகவும், அவர்களுக்கு சிக்கனமாகவும், முறையாகவும் இருக்கும் என்ற காரணத்தினால் இதனை அரசு அமுலாக்க விழைந்து 30-4-1968 என்ற அளவுக்கு காலக்கெடுவை நிர்ணயித்திருக்கிறது.

அதுபோலவே, சென்னையிலே டாக்ஸிகளில் எவ்வளவு பேர்கள் ஏறலாம் என்பதைப்பற்றி யோசிக்கப்பட்டு வந்தது. ஸ்டாண்டர்டு வண்டிகளில் இப்பொழுது இருப்பதுபோலலே மூன்று பயணிகள், டிரைவர் ஒருவர், அதாவது 3 ப்ளஸ் 1 என்ற அளவில் ஏறலாம். ஃபியட் வண்டிகளில் இப்பொழுது 3 ப்ளஸ் 1 அதாவது 4 பயணிகள் டிரைவரைத் தவிர என்று இருக்கிறது. இனிமேல் அது 4 ப்ளஸ் 1 என்று ஆகின்ற அளவுக்கு ஃபியட் வண்டிகளில் உயர்த்தப்படும். அம்பாசிடர் வண்டிகளில் 4 ப்ளஸ் 1 என்ற அளவில் இப்பொழுது இருக்கிறது. மான்யுபாக்சரிங் கம்பெனிக்கு எழுதிக்கேட்ட நேரத்தில் அவர்கள் மான்யு பாக்சரிங்கில் 4 ப்ளஸ் 1 என்று தான் இருக்கிறது, என்று அறிவித்துவிட்ட காரணத்தினால் அம்பாசிடர் வண்டிகளில் எந்த மாற்றமும் இல்லை. இப்பொழுது இருப்பது போல் 4 ப்ளஸ் 1 என்ற அளவிலேதான் இருக்கும்.

வெளியூர்களில் உள்ளவர்கள் சென்னையிலே இருப்பது போலவே எங்களுக்கு நிலைமைகள் வேண்டாம் என்று கேட்கிறார்கள். சென்னையில் உள்ள டாக்ஸி சொந்தக்காரர்கள் ஃபியட் வண்டிகளில் நான்குபேர்கூட ஏற்றக் கூடாது என்று மறுத்துக்கொண்டிருக்கிற நேரத்தில், வெளியூரில் இருப்பவர்கள்

அதிகம்பேர் ஏற்றுவதற்கு அனுமதி கொடுங்கள் என்று கேட்கிறார்கள். ஆகவே ஸ்டாண்டர்டு வண்டிகளில் வெளியூர்களில் 4 ப்ளஸ் 1 என்று இருக்கலாம் என்றும், பியட் வண்டிகளில் சென்னையில் இருப்பது போலவே 4 ப்ளஸ் 1 என்று இருக்கலாம், என்றும் அம்பாசிடர் வண்டிகளைப் பொறுத்த வரையில் சென்னையில் இருப்பதுபோல் அல்லாமல், வெளியூர்களில் 5 ப்ளஸ் 1 என்று வைக்கலாம், என்றும் இருக்கிறோம். இம்மாதிரி அரசு தீர்மானித்து அது அநேகமாக 1-4-1968 முதல் அமுலுக்கு வரக்கூடிய நிலைமையில் இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

1966 டிசம்பரில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, நம்முடைய தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகள், வண்டிகள் 1,234-லிருந்து இந்த ஓராண்டுக் காலத்தில் 1,728-ஆக உயர்ந்ததன் மூலம், 494 பேருந்துகளை நாம் இந்த ஓராண்டு காலத்தில் அதிகமாக ஆக்கியிருக்கிறோம். அதிலே தேசீயமயமாக்கும் கொள்கைப் படி 236 வண்டிகள், 155 வழித்தடங்களில், புதிதாக விடப்பட்டிருக்கின்றன. 30-3-69 -க்குள்ளாக இன்னும் 146 வண்டிகள் சேர்ந்து, தேசீயமயக் கொள்கைப்படி 382 வண்டிகள் தமிழக அரசின் சார்பில் ஓடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுதந்திராக் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் 'இதோடு நிறுத்திக்கொள்ளுங்கள்' என்று கேட்டுக்கொண்டார்கள். நிறுத்துவதாக இல்லை என்று சொல்லி, 1969-க்குள்ளாக 382 வண்டிகள் ஓடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் அதிகமாகக்கூட ஓட்டப்படும். ஆனால் ரிட் மனுக்கள் பல இடையே குறுக்கிட்ட காரணத்தால், அதிகமான முன்னேற்றம் சற்று தடைப்படுத்தப்பட்டது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் உணருவர்கள். இப்பொழுது ரிட் மனுக்கள் நீதி மன்றத்திலே சென்றதன் காரணமாக, இன்றையதினம், வழித் தடங்களை நிர்ணயிப்பவர்கள் என்று அறிவிக்கப்பட்டவர்கள் யாராக இருக்க வேண்டும் என்ற கருத்து அறிவித்த பிறகு, அதன் விளைவாக, அந்தத் தீர்ப்பிற்கு ஏற்ற வகையில் அவ்வாறு, மாற்றத்தைச் செய்து வழித்தடங்களை தேசீயமயமாக்குவதற்கு, காலந்தாழ்ந்துவிட்டது என்பதைத் தெரிவிக்கிறேன். மற்ற

வழித்தடங்கள் தனியார் பஸ் அதிபர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். அப்பொழுதே சொன்னேன். 100-க்கு 90 இடங்களில் அநேகமாக மாற்றுத் தடங்கள் தரப்பட்டிருக்கின்றன. இதனால் தேசீயக் கொள்கையை ஒரு பக்கத்தில் வைத்துக்கொண்டு, மறு பக்கத்தில் முதலாளிகளை வளர்க்கிறோமோ என்ற எண்ணம் ஏற்படலாம். 75 மைல் அளவிற்கு தேசீயமயமாக்கும் சூழ்நிலையை உருவாக்கிய பிறகு, அப்படிப்பட்ட பஸ் வழித்தடங்களை ஏற்றுக்கொண்டபிறகு கொள்கையின் அடுத்தகட்டமாக எத்தனை மைல் என்பதை தமிழக அரசு அறிவிக்க வேண்டும். அந்த அடிப்படையில், அது 60 மைலாக இருக்கலாம், அல்து, 50 மைலாக இருக்கலாம். அது அப்பொழுது நிர்ணயிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை இங்கே தெரிவிக்கிறேன்.

1966-67-ம் ஆண்டு அறிக்கையில் குறிக்கப்பட்டிருப்பது போல ஏறத்தாழ 60 லட்ச ரூபாய் அளவில் பெருத்த நஷ்டம் வந்த நிலையிலும் இந்த அரசு அந்தப்பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. ரூ. 61 லட்சம் இழப்பு, என்பதை 1967-63-ல் 37 லட்சமாகக் குறைத்திருக்கிறோம். நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் 60 லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதற்குக் காரணங்களைச் சொன்னார்கள். காரணங்கள் சரியா அல்லவா என்பதல்ல கேள்வி.

திரு. பாலன் நகர்கோயிலில் நடைபெற்ற ஊர்வலத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 60 லட்சம் நஷ்டம், 60 லட்சம் நஷ்டம் என்று முழங்குவானேன், என்பதைத்தான் கேட்டார்கள். புதிய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, இன்றைய தினம் அன்றிருந்த 61 லட்ச ரூபாய் என்பதை ரூ. 37.35 லட்சமாகக் குறைக்கின்ற அளவிற்கு நாம் மெத்த சிரமப்பட்டிருக்கிறோம். 1963-69-ல் இந்த இழப்பும் தவிர்க்கப்பட்டு சில, லட்சங்கள் லாபம் வரலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்ப்பார்க்கப் படுவதுதான். லாபத்தை நோக்கிப் போகிறோம். அது இந்தத் தமிழக அரசுப் போக்குவரத்தில் தொழிலாளிகள், நிர்வாகிகள், மற்றவர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிற ஒன்று. நஷ்டம் ஏற்படுகிறது என்கிற ஒரே காரணத்திற்காக தேசீயமயமாக்கும் கொள்கை தவறானது என்று சொல்வதற்கில்லை. வேறு

மாநிலங்களில் லாபம் வருகிறதே, இங்கே ஏன் லாபம் வரவில்லை, எங்கே போயிற்று என்று இங்கே மன்றத்திலே கேட்கிறார்கள். வெளியிலே கேட்கிறார்கள். கோரிக்கை வைக்கிற தொழிலாளிகள் கூட கடுவேகமாகக் கேட்கிறார்கள். ஆனால் வேறு மாநிலங்களில் நகர பஸ்கள் குறைவு. வெளியிலே ஓடும் பஸ்கள் அதிகம் . நான் இங்கே அந்தக் கணக்கைக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். சென்னையிலே ஓடும் பஸ்கள் 1,206, நான்முதலிலே குறிப்பிட்ட 1,234 பஸ்களிலே, சென்னை மாநகரத்திலே ஓடும் பஸ்கள் மாத்திரம் 1,206 அதிலே ஒரு ஆண்டுக்கு ஒரு பஸ்ஸுக்கு ஏற்படுகிற நஷ்டம் ரூ. 6,000 மொத்த நஷ்டம் 61 லட்ச ரூபாய். மைசூர் மாநிலத்தை எடுத்துக் கொண்டால், பங்களூர் நகரத்தில் மாத்திரம் ஓடுகிற பஸ் 366 அதிலே ஒரு ஆண்டுக்கு ஒரு பஸ்ஸுக்கு ஏற்படுகிற நஷ்டம் ரூ. 7,500 மொத்தம். பங்களூர் நகரத்தில் நஷ்டம் ரூ. 27 லட்சம். கேரளத்தில், திருவனந்தபுரத்தில் ஓடுகின்ற பஸ்கள், நகரத்தில் மாத்திரம் ஓடுகின்றவை 146 அங்கே ஒரு பஸ்ஸுக்கு ஒரு ஆண்டுக்கு ஏற்படும் நஷ்டம் ரூ. 21,000. மொத்தமாக நகரத்தில் ஏற்படுகின்ற நஷ்டம் ரூ. 30 லட்சம். ஆந்திர மாநிலத்தில், ஹைதராபாத் நகரத்தில் ஓடுகின்ற பஸ்கள் 312, அதிலே ஒரு ஆண்டுக்கு ஒரு பஸ்ஸுக்கு ஏற்படும் நஷ்டம் ரூ. 10,000 மொத்த நஷ்டம், ஹைதராபாத் நகரத்தில் மாத்திரம் ரூ. 31 லட்சம் பம்பாயை எடுத்துக்கொண்டால், B.E.S.T. இருக்கிறது. அதிலே பம்பாய் நகரத்திலே ஓடும் பஸ்கள் 1,043 அதிலே ஒரு பஸ்ஸுக்கு ஒரு ஆண்டுக்கு ஏற்படுகிற நஷ்டம் ரூ. 9000; மொத்த நஷ்டம் 125 லட்சம் ஆண்டு ஒன்றுக்கு. டெல்லி நகரத்திலே ஓடுகிற பஸ்கள் 1,024; அதிலே ஒரு பஸ்ஸுக்கு ஒரு ஆண்டுக்கு நஷ்டம் ரூ. 9,900 மொத்தம் ஒரு ஆண்டுக்கு ரூ. 100 லட்சம் இழப்பு. கல்கத்தாவில் ஓடுகிற பஸ்கள் 1,104, ஒரு பஸ்ஸுக்கு ஒரு ஆண்டுக்கு எற்படுகிற நஷ்டம் ரூ. 12,000 மொத்தம் ஒரு ஆண்டுக்கு இழப்பு. ரூ. 131 லட்சம், ஆனாலும், இவ்வளவு இழப்புக்கும் இடையில், மைசூர், கேரளா, ஆந்திரா போன்ற இந்த இடங்களில் கடைசியாக மொத்தக் கணக்கு வரும்போது சற்று லாபம் காட்டப்படுகிறது. அது சில லட்சங்கள், 30, 40, 20, லட்சம் லாபம் என்று காட்டப்படுகிறது. இப்படி லாபத்திற்குக் காரணம்,

அங்கெல்லாம் நகர பஸ்கள் குறைவு, வெளியூரிலே ஓடும் பஸ்கள் அதிகம். இங்கே நேர் மாறான நிலை. வெளியூர், பஸ்கள் குறைவு நகர பஸ்கள் அதிகம் ஆகவேதான் புதிய பொறுப் பெற்ற பிறகு நகர பஸ்களை குறைப்பதற்கில்லை. இந்த இழப்பை ஈடுகட்டும் அளவிற்கு வெளியூர் பஸ்களை அதிகப்படுத்த வேண்டும் என்று முனைந்து எடுத்த முயற்சியின் பயனாக அதிகமாகிக்கொண்டு வருகிறது.

அது மாத்திரமல்ல பஸ்கள் உழைக்கும் காலம் 1966-ல் இருந்தது வேறு. புதிய அரசு வந்த பிறகு அதை மாற்றி யமைத்திருக்கிறது. 1966-ல் ஒரு லே-லண்ட் பஸ் உழைக்கும் காலம் 5 வருஷம் என்று இருந்தது. ஒன்றரை லட்சம் மைல்கள் ஓடிவிட்டால், அதைத் தூக்கி ஏலத்தில் போடுவது என்பதுதான் நிலை. அது இப்பொழுது 5 வருஷத்திலிருந்து 6 வருஷம் என்றும் 2½ லட்சம் மைல் ஓடிய பிறகுதான் ஏலத்திற்கு விடவேண்டும் என்றும் நிலைமைகளை உருவாக்கியிருக்கிறோம். அதேபோல், பென்ஸ் வண்டிகளை எடுத்துக்கொண்டால் உழைக்கும் காலம் 5 வருஷம் , ஒன்றரை லட்சம் மைல் ஓடவேண்டும் என்றிருந்ததை 6 வருஷம், இரண்டேகால் லட்சம் மைல்கள் என்றும் மாற்றியிருக்கிறோம். இந்த வகையில் அவற்றை மாற்றி அமைத்திருக்கிறோம்.

ஃபர்கோ வண்டிகளைப்பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த வண்டிகள் இந்த அரசால் வாங்கப்பட்டவை அல்ல. 1963-64-ல் 120 வண்டிகளும், 1964-65-ல் 60 வண்டிகளும் ஆக மொத்தம் 180 வண்டிகள் வாங்கப்பட்டன. இப்பொழுது ஃபர்கோ வண்டி என்றாலே, ட்ரைவர்களும், கண்டக்டர்களும் ஏதோ அதைக்கண்டு ஒரு பீதியடைகிறார்கள். ஃபர்கோ, பெட்ஃ போர்ட் வண்டிகளெல்லாம் இன்றையதினம் விலை குறைவாக இருக்கின்றன. என்றாலும் லே-லண்ட், பென்ஸ் போன்ற வண்டிகள் கிட்டத்தட்ட 6,000, 10,000 ரூபாய் அதிகமாக இருந்தாலும், நீடித்து உழைப்பவைகளாக, வலிவு உள்ள வைகளாக இருக்கும். இந்த இரண்டு வண்டிகளை மாத்திரம் இப்பொழுது வாங்கிக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவிக்கிறேன்.

கட்டணம்பற்றிப் பேசப்பட்டது. கட்டணத்தை ஆறு காசிலிருந்து ஐந்து காசாகக் குறைத்தபோது 1964-ல் என்ன நிலை என்பதைத் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள். பின்னால் 1966-ல் உயர்வைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். நாங்கள்வந்த பிறகு மேலும் உயர்த்தவில்லை. அப்பொழுது 6 காசு என்றிருந்ததை 5 காசு என்று குறைத்த காரணத்தால் வருவாய் அதிகமாயிற்று. பொதுமக்களுக்கு நல்ல பயனும் ஏற்பட்டது. அதே நேரத்திலே இன்னொரு பிரச்சனைப்பற்றியும் உறுப்பினர்கள் சொன்னார்கள். கிலோவிற்கு 2 காசு என்பதை 2½ காசு என்று மாற்றுகிறார்கள். அது ஏழை மக்களுக்கு கஷ்டத்தை தராதா என்றார்கள். ஆம், 2 காசை 2½ காசாக ஆக்குகிறோம். ஆனால் குறிபிட்ட ஒன்று இரண்டு மாவட்டங்களில்தான். அதே நேரத்தில் சர்க்கார் பஸ்களைப் பொறுத்த வரையில், 75 மைல் ஓடும் பஸ்களுக்கு, அல்லது வேறு மாவட்டங்களில் ஓடும் பஸ்களுக்கும் 3 பைசாவிலிருந்து 1/2 பைசா குறைகிறது. அதையும் 2½ பைசாவாக ஆக்குகிறோம். இப்படிக் குறைவதைப் பற்றி யாரும் சொல்லாமல் 2½ பைசாவாக ஆக்குவதைப்பற்றி மட்டும் குறிப்பிடுகிறார்கள். இங்கே 3 பைசா என்பது 2½ பைசா என்று ஆகிறது. இனிமேல் சர்க்கார் ஆண்டு காண்டு எடுக்கின்ற தேசீயமயமாக்கப்படுகிற பேருந்துகளிலும், ஏற்கெனவே 3 பைசா என்று இருந்தாலும் அதையும் 2½ பைசாவாக ஆக்கும் அளவிற்கு குறைக்கப்படுகிறது என்கின்ற மகிழ்ச்சிதரும் செய்தியையும் மற்ற செய்திகளோடு கலந்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சில இடங்களில் தனியார்த்துறைப் பேருந்துகளுக்கும் நம்முடைய அரசு பேருந்துகளுக்கும் இருக்கின்ற வேறுபாடுகளெல்லாம் விரைவிலே கவனிக்கப்பட்டு சமநிலைப்படுத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நிர்வாகத்திலே இருக்கின்ற சில குறைபாடுகளைக் கவனிப்பதற்காக இரண்டு மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. அதிலே ஏலம் போடுகின்ற, குழு இருக்கிறது. அதுபற்றி சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே கூட, கேள்விக் கணைகளெல்லாம் பொழியப்பட்டன. ஆனால் இந்த அரசு

பொறுப்பேற்பதற்கு முன்னாலேயே ஏலம் போடுவதற்காக ஒரு தனிப்பட்ட கம்பெனியாரிடத்திலேயே பழைய அரசினர் ஒப்பந்தம் பேசி அவர்கள் அந்த ஏலத்தை நடத்திக் கொண்டி ருந்தார்கள். அந்த ஏலத்தில் பஸ்களை எடுத்தவர்கள் குறைபாடாக நடந்துக்கொண்டார்கள், அல்லது நிர்வாகம் குறைபாடாக நடந்து கொண்டது என்று ஜாடை தெரியும் விதத்தில் பல உறுப்பினர்கள் அப்போதும் பேசினார்கள். ஆகவே அதையெல்லாம் மனத்திலே வைத்துக்கொண்டு அப்போதே நான் அளித்த வாக்குறுதிக்கேற்ப, 'ஏலக் கண்காணிப்புக் குழு' என்கிற குழுவின் அதிகாரிகளும், அதே நேரத்தில் சட்ட மன்ற உறுப்பினர்களும் நம்முடைய நண்பர் திரு. காசிராமன் அவர்கள்கூட இடம் பெற்றிருக்கிறார்கள் அவரும், இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில் திரு. அழகமுத்து அவர்களும், மேலவையைப் பொறுத்த வரையில் திரு. தாமோதரன் அவர்களும் இடம்பெற்றி ருக்கின்றார்கள் என்ற அளவில் ஏலக்கண்காணிப்புக் குழுவில் அதிகாரிகளும் இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற அளவில் ஒரு குழு நியமிக்கப்பட்டு, அவர்கள் அந்த ஏலத்தில் விடப்படுகின்ற பஸ்களுக்கு விலையை நிர்ணயிப்பதிலிருந்து, எந்த அளவுக்கு ஏலம் விடப்படலாம் என்று அஸெஸ்மென்ட் நிர்ணயிப்பதி லிருந்து ஏலம் வருகிற நேரத்தில் கூடஇருந்து கண்காணிக்கும் வரையிலும் பொறுப்பேற்றுக்கொள்கின்ற, கண்காணிக்கின்ற குழுவாக அவர்கள் இயங்குவார்கள்.

'வல்லுநர் குழு' என்ற பெயரால் ஒரு குழு அமைக்கப்பட்டு அந்த யோசனை இன்னும் இரண்டு மூன்று நாட்களில் அமலாக்கப்பட இருக்கிறது. அதே வல்லுநர் குழு ஆங்காங்கு இருக்கின்ற பணிமனைகளையும், ஆங்காங்கு இருக்கின்ற ஸ்டோர்கள் இவைகளிலே சென்று இருக்கின்ற நிலைமைகளை ஆராய்ந்து, நிர்வாகத்தில் இன்னும் எந்த எந்த நிலைமைகளைச் சீர்படுத்தலாம் என்பவைகளையெல்லாம் எடுத்துக்கூறும் அளவில் 'வல்லுநர் குழு' பணியாற்றும் , அதற்கான அறிவிப்பும் வெகு விரையில் வரும்.

நகரப் பேருந்துகளை நடத்துவதற்கு ஒரு அறிவுரைக் குழு (அட்வைசரி கமிட்டி) இருக்கிறது. இப்பொழுது நம்முடைய

தேசீயமயக் கொள்கை விஸ்தரிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் இந்த 'நகரப் பேருந்து அறிவுரை குழு' என்பதை பொதுவாக 'தமிழக அரசு பேருந்து அறிவுரைக் குழு' என்ற அளவுக்கு நீட்டி, அந்தக் குழுவிலே சில உறுப்பினர்களை மேலும் இணைத்து, அதை விரிவாக்கலாம் என்கிற அளவுக்கு ஒரு யோசனை இருக்கிறது. அதுவும் விரைவில் அமலாக்கப்படும்.

அதற்கிடையே, 'உயர்மட்டக் குழு' என்று தொழிலாளர் களுடைய பிரச்சனையைக் கவனிப்பதற்காக, அமைக்கப்பட வேண்டும் என்று எடுத்துக்கூறினர்கள். நான் தொழிலாளர் களுக்கு இந்த அரசு இந்த ஓராண்டு காலத்தில் என்னென்ன வகையிலே அவர்களுடைய பிரச்சனையை அணுகி அவர்களுக்குச் சாதகமான காரியங்களைச் செய்திருக்கிறது என்பதை மாத்திரம் இங்கே எடுத்துக்கூறக் கடமைப்பட்டி ருக்கிறேன்.

(1) 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதி முதல் பஞ்சப்படி (டியர்னஸ் அலவன்ஸ்) உயர்த்தியதன் காரணமாக அதிகப்படி செலவு மாத்திரம் இந்தத் துறைக்கு 19 லட்சம் ரூபாய்.

(2) நகர ஈட்டுப்படி ஒரு வருட மொத்தச் செலவு 9 லட்ச ரூபாய் இது புதிதாக வழங்கப்பட்டது.

(3) டெப்போக்களில் இருக்கும் தொழிலாளர்களுக்கு ஊக்க போனஸ் சம்பள அடிப்படையில் 10 சதவீதம் இருந்தது. அதை 15 சதவீதம் என்ற அளவுக்கு உயர்த்தியதன் காரணமாக அதிகச் செலவு 1.49 லட்ச ரூபாய்.

(4) பாடி பில்டிங் ஒர்க்ஷாப்பில்-குரோம்பேட்டையிலும், கன்னியாகுமரியில் உள்ள இராணித் தோட்டத்திலும்-இருக்கும் தொழிலாளர்களுக்கு ஊக்க போனஸ், சம்பள அடிப்படையில் 20 சதவீதம் என்று இருந்ததை 40 சதவீதம் என்கிற அளவுக்கு இந்த அரசு உயர்த்தியிருக்கிறது. அதன்மூலம் அதிகச் செலவு 1.9 லட்ச ரூபாய்.

(5) குரோம்பேட்டை பாடி பில்டிங் ஒர்க்ஷாப்பில் உள்ளவர்களுக்கு அட்டென்டன்ஸ் போனஸ் என்று புதுத் திட்டமாக, முழுச்செலவையும் ஏற்றுக்கொண்டிருக்கிற செலவு 1.15 லட்ச ரூபாய்.

(6) பயிற்சிபெறும் தொழிலாளர்களுக்கு 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதி முதல் பயிற்சித் தொகை அதிகரிப்பு தலைக்கு மாதம் பத்து ரூபாய் அதிகரிக்கப்படுகிறது. இதிலே ஏற்படும் அதிகச் செலவு 18 ஆயிரம் ரூபாய்.

(7) தையற்கூலி பத்து ரூபாய் என்பதைப் பன்னிரண்டு ரூபாய் என்று அதிகமாக்கியிருக்கிறோம். இதிலே அதிகச் செலவு 27,000 ரூபாய்.

(8) தொழிலாளர்கள் பிள்ளைகளைப் பயிற்சிக்கால கிளீனர்களாக எடுத்துக்கொள்வதில் தினக் கூலி 50 பைசாவாக இருந்ததை ஒரு ரூபாயாக ஆக்கி இருக்கிறோம். இதன் மூலம் அதிகச் செலவு 6,000 ரூபாய்.

(9) ஊட்டி, கொடைக்கானல் பகுதிகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு குளிர்காலப்படி உயர்வு தரும்படி புதிய அரசு உத்தரவிட்டிருக்கிறது.

(10)நாள்படி ரூ. 1.25 என்பதை ரூ. 1.35 ஆகவும் ரூ. 1.75 என்பதை ரூ. 1.85 ஆகவும் ரூ. 2.25 என்பதை ரூ. 2.35 ஆகவும் மாற்றப்பட்டுள்ளது. அதற்கு அதிகச் செலவு 2.3 லட்ச ரூபாய்.

(11)டெக்னிகல் ஒர்க்கர்ஸ்ஸுக்கு இரவுப்படி உயர்வு பத்து பைசா அளிக்கப்படுகிறது. அதற்கு அதிகச் செலவு 40,000 ரூபாய்.

(12)பதவி உயர்வு இருந்தும் ஊதிய உயர்வு அளிக்கப்படாமல் பல தொழிலாளர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதல் மெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்து, அவர்களுக்கு உடனடியாக ஊதிய உயர்வு அளிக்க உத்தரவிடப்பட்டது.

(13)தொழிலாளர் கல்வித் திட்டத்தில் ஆசிரியர்கட்கு ஒரு நாளைக்கு 50 பைசா வேண்டும் என்று கன்னியாகுமரியில் கேட்டார்கள். இதை ஏன் ஐம்பது பைசா என்று கேட்கிறீர்கள்? ஒரு ரூபாயாக வைத்துக்கொள்ளுங்கள் என்று தாராளமாகச் சொன்னேன். இன்றைக்குக் கணக்குப்பார்த்தால் அதன் மூலம் பத்தாயிரம் ரூபாய் அதிகச்செலவு ஆகிறது.

(14) ஜீப் டிரைவர்களுக்கும் கார் டிரைவர்களுக்கும் ஓவர்டைம், ஆஃப் ட்யூடி சம்பளம் இல்லாமல் இருந்தது. அதற்காக மூவாயிரம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது.

(15) கதருக்குப் பதிலாக தங்களுக்கு மில் துணி வேண்டும் என்று கேட்ட தொழிலாளர்களுடைய கோரிக்கை கவனத்தில் கொண்டுவரப்பட்டது. அவர்களை சமாதானப்படுத்தி, கதரிலிருந்து மில் துணிக்குச் செல்ல வேண்டாம் என்று கூறி, கைத்தறித்துணி அளவுக்கு அவர்களுக்கு அளிக்கப்பட்டு அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டது.

(16) மலைப் பகுதியில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வருடம் முழுவதும் சிறப்புப்படி (ஸ்பெஷல் படி) தர உத்தரவிடப்பட்டிருக்கிறது.

(17) வாட்ச்மென், ஸ்வீப்பர்ஸ், தோட்டக்காரர்கட்கு, இரண்டு 'செட்' உடைதான் இதுவரையில் அளிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக மூன்று செட் உடை, மற்ற தொழிலாளர்களைப் போல் அளிக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஏற்படும் அதிகச் செலவு ஏழாயிரம் ரூபாய்.

(18) வலவர் பயிற்சியாளர்கட்கு இரண்டு செட் உடைகட்குப் பதில் மூன்று செட் உடைகள், பூட்ஸ்கள், தையற்கூலி, சலவைப்படி இவைகள் தரப்படவேண்டும் என்று முதன் முறையாக உத்தரவிடப்பட்டது. இதன்மூலம் ஏற்படும் செலவு மூவாயிரம் ரூபாய்.

(19) இரண்டு வருடத்துக்கு ஒரு செட் பூட்ஸ் கொடுத்ததற்குப் பதிலாக ஓராண்டுக்கு ஒரு ஜதை பட்டான் காலணி வழங்கப்படுகிறது. இதற்கு அதிகச் செலவு ஒரு லட்ச ரூபாய்.

(20) சென்னையில் உள்ளது போல, திருச்சியிலும் நியாய விலைக் கடை திறக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது.

(21) துயர் தணிப்புக் கருணை நிதி-கருணாநிதி அல்ல-1,500 ரூபாய் என்பதை 2,000 ரூபாய் என்று உயர்த்தப்பட்டது. ஆக மொத்தம் இந்த ஓராண்டுக் காலத்தில் தொழிலாளர்களுடைய வசதிகளுக்காக 37 லட்ச ரூபாய் செலவழிப்பதற்கு இந்த இலாக்கா முன்வந்திருக்கிறது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக் கொள்ளுகிறேன். (ஆரவாரம்) ஆனால், இவைகளில் எப்படி தொழிலாளர்கள் இன்னும் திருப்தி அடையாமல் இருக்கிறார்களோ அதைப்போலவே நாங்களும் திருப்தி அடையாமல் இருக்கிறோம் என்பதை நான் தொழிலாளர் களுக்காக மெத்த அக்கறையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(22) நகர ஈட்டுப் படியை அம்பத்தூர், குரோம்பேட்டை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர்களுக்கும் விரிவாக்கப்பட வேண்டும் என்று அவர்கள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க, அம்பத்தூர், குரோம்பேட்டை, மதுரை ஆகிய இடங்களுக்கும் நகர ஈட்டுப்படி இப்பொழுது விரிவாக்கப்பட்டுள்ளது.

(23) தினக் கூலி தொழிலாளிகட்கு இதுவரையில் நகர ஈட்டுப் படி இல்லை என்ற நிலைமை இருந்தது. அவர்கள் வேண்டுகோளின்படி நகர ஈட்டுப் படியும் அவர்களுக்குத் தர உத்தரவிடப்பட்டிருக்கிறது.

(24) இதுவரையில் சிறிய தண்டனைகளுக்காக அடென் டென்ஸ் போனஸ் கொடுக்காமல் இருந்தார்கள். சிறிய தண்டனை பெற்றாலும்கூட, தொழிலாளர்களுக்கு அடென் டென்ஸ் போனஸ் கொடுக்காமல் இருந்தது. அதை மாற்றி, சிறிய தண்டனை பெற்றவர்களுக்கும் அடென்டென்ஸ் போனஸ் கொடுக்கலாம் என்று இப்பொழுது உத்தரவிடப்பட்டிருக்கிறது.

(25) வீட்டு வசதித் திட்டம்-திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துக்காட்டியபடி-1968-69-இல் குரோம்பேட்டை, தண்டையார்பேட்டை, ஆகிய இரு இடங்களில் துறையின் மூலம் வீடுகள் கட்டுவதற்காக முயற்சிகள் அதிகமாக மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

ஆக இப்படி 25 கோரிக்கைகளை-தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை-இந்த ஓராண்டுக் காலத்தில் நம்முடைய அரசு கவனித்து இருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளுகிற அதே நேரத்தில் தொழிலாளர்களுக்கு இருக்கும் சில குறைாடுகள் இன்னும் நிவர்த்திக்கப்பட வேண்டும் என்பதிலே நாம் அதிக அக்கறையாக இருக்கிறோம் என்று எடுத்துச்சொல்லத் தயங்கவில்லை.

இங்கே நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் செகண்டு கிரேடு டிரைவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் குறைவானது என்று எடுத்துச்சொல்லப்பட்டது. தமிழகத்தில் டிரைவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 80 ரூபாய். இரண்டு ரூபாய் இன்க்ரீமெண்ட் கொடுக்கப்பட்டு 100 ரூபாய் அளவிற்குப் போய் நிற்கிறது. கண்டக்டர்களுக்கு 70-2-90 என்ற அளவில் சம்பளம் கொடுக்கப்படுகிறது. மைசூரில் டிரைவர்களுக்கு 75-4-95-5-150-6-180 என்ற அளவில் போகிறது. கேரளாவில் அடிப்படைச் சம்பளம் 90 ரூபாய். இது 90-7½-135-8-175 வரையில் போகிறது. ஆந்திராவில் டிரைவர்களுக்கு 100-3-124-5½-132½ என்ற விகிதத்தில் சம்பளம் கொடுக்கப்படுகிறது. தமிழகத்தில் டி.வி.எஸ். பஸ்களில் அதிகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்று உறுப்பினர்கள் பேசினார்கள். டி.வி.எஸ் கம்பெனியில் வேலை செய்யும் டிரைவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 50 ரூபாய். இது 50-3-80 என்ற விகிதத்தில் கொடுக்கப்படுகிறது. நாம் அவர்களைவிட அதிகமான சம்பளத்தைத் தருகிறோம். டி.வி.எஸ்.ஸில் நல்ல திறமையான டிரைவர்களுக்கு 80-5-200 என்று சம்பள விகிதம் வைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் செகண்டு கிரேடு டிரைவர்களுக்கு 50-3-80 என்ற அடிப்படையில்தான் சம்பளம் தரப்படுகிறது. அதேபோல திரு. மகாலிங்கம் அவர்கள் நடத்தும் ஏ.பி.டி. பஸ்களில் டிரைவர்களுக்கு 45-2-55-2½-67½ -3-82½-3½-100-4-120-4½-142½ என்ற அளவில்தான் சம்பளம் தரப்படுகிறது.

டி.வி.எஸ். கம்பெனி மதுரை நகரத்தில் டிரைவர்களுக்குக் கொடுக்கும் படி 1 ரூபாய்தான். நான் இவைகளையெல்லாம் எடுத்துக்கூறுவதன் காரணம் தனியார் கொடுப்பதைப்போல் நாம் கொடுக்க முடியாது. கேரளாவில் கொடுப்பதைப்போல் கொடுக்க முடியாது என்று சிலர் பேசியதற்கு எடுத்துக் காட்டுவதற்காகத்தான். இந்த அரசு போக்குவரத்துத் தொழிலாளர் களுடைய குறைபாடுகளை, முறையீடுகளைக் கவனத்திலே கொண்டு அவற்றைக் களைந்தெறிவதில் பூரண கவனத்தைச் செலுத்தும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். இந்த அரசு முழுக்க முழுக்க தொழிலாளர்களுடைய அரசு, தொழிலாளருக்காகப்

பாடுபடுகிற அரசு, தொழிலாளர்களுடைய குறைகளை மனதிலே வைத்து அவ்வப்பொழுது களைந்தெறியும் என்று சபதம் எடுத்துக்கொண்டு பதவியில் அமர்ந்திருக்கிற அரசு, முதலாளித்துவ மனப்பான்மையோடு தொழிலாளர்களை அணுகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஓராண்டுக் காலத்தில் 25 கோரிக்கைகளை நல்ல முறையிலே ஏற்று செய்து முடித்திருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

கன்னியாகுமரி வேலை நிறுத்தம் பற்றியும், சென்னை நகர வேலை நிறுத்தம் பற்றியும் நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். சென்னையிலே இரண்டு மூன்று தொழிற்சங்க யூனியன்கள் இருக்கின்றன. அங்கீகரிக்கப்பட்ட யூனியன் நண்பர் திரு. ராகவானந்தம் அவர்களுடைய தலைமையில் இயங்கி வருகிறது. அது ஒரு பெரிய யூனியனாகும். அவரும் சென்ற மாதத்தில், ஓர் உயர்மட்டக் குழுவை நிறுவ வேண்டும். அதன் மூலமாக தொழிலாளர்களுடைய பிரச்சனைகள் எல்லாம் ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு சார்க்காருக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள்.

கன்னியாகுமரியில் இருக்கும் யூனியன் தலைவர்களும் என்னைச் சந்தித்து சுமார் 5 மணி நேரம் உரையாடினார்கள். பிறகு மறுநாள், காலையிலே பத்திரிக்கையிலே அமைச்சர் அவர்கள் கையை விரித்துவிட்டார்கள் என்ற செய்தியை கொடுத்துவிட்டுப் போனார்கள். ஒருவேளை நான் கையைவிரிக்க வேண்டுமென்று அவர்கள் ஆசைப்பட்டார்களோ என்னவோ, எனக்குத் தெரியாது. கன்னியாகுமரி தொழிற்சங்கத் தலைவர்கள், ஸ்டிரைக் நோட்டீஸ் என்ற அளவில் தங்களுடைய அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள். திரு. ராகவானந்தம் அவர்களுடைய தலைமையில் இருக்கும் பெரிய யூனியனும் உயர்மட்டக் குழுவை நிறுவி, சம்பளப் பிரச்சனை, படிப்பிரச்சனை போன்றவற்றைத் தீர்க்கலாம் என்று கூறியுள்ளது. உயர்மட்டக் குழுவை அமைப்பது பற்றி எல்லா யூனியன் தலைவர்களும் ஒருமுகமான எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள். அந்த எண்ணத்தின் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு ஓர் உறுதிமொழியை அளிக்கிறேன். இம் மன்றத்தின் வாயிலாக அந்த உறுதிமொழியை அளிக்கிறேன்.

''தொழிலாளர்களுடைய இன்றைய ஊதியம், வாய்ப்பு, வசதிகள் ஆகியவற்றை அவர்களை ஊக்கப்படுத்தும் அளவுக்குச் சீர்படுத்த அரசு போக்குவரத்துத் துறையில் இன்றுள்ள இழப்புகளைத் தவிர்த்து இத்துறையில் அரசினர் செய்துள்ள முதலீட்டுக்கு ஏற்றவகையில் முன்னேற்றம் காண்பதற்கான கூறுகளை ஆய்வுசெய்து கூறுவதற்கு ஓர் உயர்மட்டக் குழுவினை அரசு அமைக்கிறது.'' இந்த உறுதிமொழியை ஏற்று, இப்பொழுது உயர்த்தப்பட்ட பத்து காசுதான் நிரந்தரமானது, இதற்கு மேல் கிடையாது, என்று யாரும் கருதவேண்டாம். இல்லையென்று சொல்லப்படாமல் போகப் போக சம்பளம், படி போன்றவற்றை உயர்த்துவதற்கு வழிவகை இருக்கிறதா என்று பார்த்துச் செய்யலாம். லாபம்கூட வரத் தேவையில்லை, நஷ்டம் குறைந்தால் போதும், அந்த வகையில் தொழிலாளர் பிரச்சனையை பலமுறை இந்த மன்றத்தில் வலியுறுத்தி இந்த உறுதிமொழியை அளிக்கின்றேன். தொழிலாளர்கள் மனநிறைவு பெற்று தங்கள் வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெறுவார்கள் என்ற நம்பிக்கையோடு, இந்த மானியக் கோரிக்கைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளையெல்லாம் நீங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்த மன்றம் இந்த மானியக்கோரிக்கையை நிறைவேற்றித்தரும்படிக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

## பாசனத் திட்டங்கள்

**உரை : 25** நாள் : 23.03.1968

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதுள்ள பாசனத் திட்டங்களைத் தக்கமுறையில் பேணி வருவதற்காகவும், அவற்றிலிருந்து பெருமளவில் பயன்பெறும் பொருட்டு, அவற்றை விரிவுபடுத்துதல், மேனிலைப்படுத்துதல், பேணி வருதல் ஆகியவற்றிற்கான செலவும், வெள்ளத்தாலும், புயலாலும் சேதமடைந்த பகுதிகளைச் செப்பனிடும் பணி முதலியவற்றிற்கான செலவும், ''கோரிக்கை 26- பாசனம்'' என்ற மானியத்திலிருந்து பெறப்படும். நிறைவேறி வருகிற அல்லது நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும் புதிய பாசன வேலைத்திட்டங்களுக்காக ஆகும் செலவினங்களின் பெரும்பகுதி ''கோரிக்கை 41- பாசனத்திற்கான மூலதன முதலீடு'' என்ற மானியத்திலிருந்து ஏற்படும். வருவாய்த் துறையினரின் கண்காணிப்பில் உள்ள சிறு பாசன வேலைகளுக்கான ரூ. 75,21,500 மானியமும் கோரிக்கை 26-ல் அடங்கியுள்ளது. பாசனப் பணிகளின் இயல்பான கட்டமைப்பிற்கும், ஆக்கத் திற்கும் வேண்டப்படும் பணியாட்கள், கருவிகள், பொறிகள் இவற்றின் மொத்தச் செலவுத் தொகை 28-வது கோரிக்கையின்கீழ் வருகிறது. பாசனச் செலவில் ஒரு பகுதியான ரூ. 39,21,600 ''கோரிக்கை 26-பாசனம்'' என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த கடலோரப் பகுதிகளும், தஞ்சாவூர் மாவட்டமும் கடும் புயலினாலும் பெரு மழையினாலும் அவதியுற்றன. 1967,

அக்டோபர் திங்களில் ஒரு முறையும், 1967, டிசம்பர் திங்களில் மற்றொரு முறையும் இப்பகுதிகள் இயற்கையின் சீற்றத்திற் குள்ளாயின. பாசன ஏரிகள் பல உடைந்தன. இராமநாதபுரம் மாவட்டத்தில் உடைப்பெடுத்த ஏரிகளில் சுற்றுக் கரைகள் அமைக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் பாசனப் பருவ காலத்தில் எஞ்சிய பகுதிக்கு நீர் வழங்க இயன்றது. நிலையாக குளங்களைப் பழுதுபார்க்கும் பணிகள் நிறைவேறி வருகின்றன. தஞ்சாவூர், இராமநாதபுரம் மாவட்டங்களில் புயலால் பழுதடைந்த பாதைகளும் செப்பனிடப்படும் பழையநிலை எய்தும் பணிகளும் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன.

நமது மாநிலத்தில் நீரும் நிலமும் குறைந்த பரப்பளவிலேயே கிட்டியுள்ளது. இந்த உண்மையைக் கருத்திற் கொண்டு, மிகு பயன் தரும் குறுகிய காலப் பயிர் வகைகளைப் பயிரிடும் நிலப்பரப்பளவைப் பெருக்கியும் ,. அதனை அடுத்து இரண்டாம் போகப் பயிரை விளைவிப்பதிலும் நாம் முன்னேறிச் செல்ல வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். இதற்கு நாம் நிலத்திற்கடியிலுள்ள நீர் வளத்தை நாட வேண்டியுள்ளது. 17-3-1966 அன்று செயலுக்கு வந்த ஐக்கிய நாடுகள் நில-நீர்வளத் திட்டத்தினை காவிரி சங்கமுகப் பகுதியிலும் செயல்படுத்த வகை செய்யப்பட்டது. ஆனால் இத்திட்டம் இப்பகுதிக்குப் போதிய அளவினதாக இல்லை என்று உணரப்பட்டது. காவிரி நில-நீர் வள ஆராய்ச்சிப் பணியை விரிவு படுத்துவதற்காக வேளாண்மை, பொருளாதாரத் துறைகளிலும், துளையிடு பணியிலும் மேற்கொண்டும் வல்லுநர் உதவி வேண்டியும், கூடுதல் கருவிகளை வேண்டியும் இம்மாநில அரசு இந்திய அரசு மூலமாக ஐக்கிய நாடுகள் நிறுவனத்திற்கு திட்டம் ஒன்றை அண்மையில் வழங்கியுள்ளது. இந்த இரண்டாவது நிலைப்பணி முடிய 11 ஆண்டுகளாகும். இதற்கென ஐக்கிய நாடுகள் நிறுவனத்திற்கு 6.54 லட்சம் அமெரிக்க டாலர்களும், மாநில அரசாங்கத்திற்கு ரூ. 48.44 லட்சமும் செலவாகும்.

திட்டப்பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றிய விவரங்களை அவைமுன் வைக்கப்பட்டுள்ள விரிவான ஆய்வுரையில் காணலாம்.

## ஓராண்டு சாதனைகள்

கடந்த ஓராண்டில் இந்த அரசு செய்த குறிப்பிடத்தக்க மாறுதல்கள் பற்றியும் மேம்பாடுகள் பற்றியும் ஈண்டு கோடிட்டுக் காட்டும் வகையில் சில சொல்ல விழைகிறேன்.

இந்த அரசு உணவு உற்பத்தியைப் பெருக்க எடுத்துள்ள முக்கிமான நடவடிக்கைகளில் காவிரி சங்கமுகப் பகுதியில் இருபோகப் பயிர் விளைவிக்கப்படும் பரப்பளவைக் கூட்டி புதிய பயிர் முறையைச் செயலுக்குக் கொண்டுவந்தது தலையாயதாகும். வரும் ஆண்டுகளில் இத்திட்டம் திறம்படச் செயல்படுத்துவதற்காக கல்லணைக் கால்வாயிலும் காவிரிப்பாசன அமைப்பிலும் ரூ.66 லட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்றுவதற்கு வகை செய்யும் திட்டமொன்றுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. கல்லணைக் கால்வாயில் முழு அளவில் நீர் செல்லும் வகையில் கால்வாயின் தலைப்பகுதியில் வண்டல் அகற்றவும், கட்டுக்கரை பகுதியிலும் உடைப்பு ஏற்படக்கூடிய பிற பகுதிகளிலும் கரைகளை வலுப்படுத்தவும் தேவையான இடங்களிலெல்லாம் கால்வாய் அடித்தளத்திற்கு காரை பூசவும், இரு கரைகளையும் காப்புக்க சார்த்தி வலுப்படுத்தவும் இத்திட்டத்தின்கீழ் வகை செய்யப் பட்டுள்ளன. காவிரி பாசன அமைப்பில் பழவாறு, உப்பாறு, மன்னியாறு, வேலப்பாறு போன்ற ஆறுகளின் கரைகள் தரத்தளவிற்கு உயர்த்தப்படும். இந்த மேம்பாட்டுப் பணிகள் படிப்படியாக நிறைவேற்றப்படும். இதற்காக 1968-69-ல் ரூபாய் 26 லட்சம் செலவு செய்யப்படும்.

கீழ்பவானித் திட்டம், பரம்பிக்குளம் - ஆளியாறு திட்டம் இவை உள்ளிட்ட எல்லா திட்டப்பகுதிகளிலும் புதிய கிணறுகளை வெட்டுதல் அவற்றிற்கு மின் இணைப்பு வழங்குதல் குறித்த தடையை அரசு தளர்த்தியிருப்பதும் உணவு உற்பத்தியைப் பெருக்கும் துறையில் அரசு மேற்கொண்ட சிறப்புடையப் பணியாகும். இவ்வாணைகளின்படி தலைமைக் கால்வாய்கள், கிளைக்கால்வாய்கள் ஆகிவற்றின் முனையி லிருந்து 50 மீட்டர் தொலைவிற்கப்பாலும் புதிய கிணறுகளை வெட்டுவதும், தற்போதுள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதும் அனுமதிக்கப்பட்டுள்ளன. பரம்பிக்குளம் - ஆளியாறு திட்டப் பகுதியைத் தவிர, பிற பகுதிகளில் கால் - பாசனம் அல்லாத

காலத்தில் உழவர்கள் கிணற்று நீர் கொண்டு எப்பயிரை வேண்டுமானாலும் பயிரிடலாம். இவ்வாறு விதிகள் தளர்த்தப் பட்டுள்ளதை நம்புகின்றேன். பாசனத்திற்குத் தேவையான நீர் பற்றாக்குறை ஏற்பட்ட பகுதிகளில் இன்றையப் பாசனம் குறித்த விதிகளும் தளர்த்தப்பட்டுள்ளன.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் போன்ற சில பகுதியில் மட்டும் அரசின் செலவில் 25 ஏக்கர் வரையில் கண்ணி வாய்க்கால்கள் ஏற்படுத்தப்பட்டு வந்தன. மற்றப் பகுதிகளில் இதுவரை 50 ஏக்கர் தொகுதி வரையில் கண்ணி வாய்க்கால்கள் அரசின் செலவில் ஏற்படுத்தப்பட்டு வந்தன. உணவு உற்பத்தியில் ஏற்றங்காண வேண்டும் என்னும் குறிக்கோளினைக் கருதி, அரசின் செலவில் 25 ஏக்கர் தொகுதி வரைக்கும் கண்ணி வாய்க்கால்கள் அமைக்கும் இந்தச் சலுகையை எல்லாத் திட்டங்களுக்கும் விரிவுபடுத்த அரசு இப்போது கொள்கை யளவில் முடிவுசெய்துள்ளது.

வைகைக் கால்வாய்களை ரூ. 395 லட்ச செலவில் புதுப்பிக்கும் வேலைத் திட்டம் ஒன்றுக்கு அண்மையில் ஒப்புதல் வழங்கியுள்ளோம். சிறு பாசனத் திட்டத்தின்கீழ், நடப்பு ஆண்டில் 1967, டிசம்பர் இறுதிவரை ரூ. 223.10 லட்சம் செலவிட்டி ருக்கிறோம். இதன் மூலமாக, 12,714 ஏக்கர் நிலங்களுக்குப் புதிதாகப் பாசன வசதியளிக்கப்பட்டுள்ளது. 30,349 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் உறுதி செய்யப்பட்டுள்ளது. நீர்ப் பிடியிலிருந்து 595 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பாசனத் திட்டப் பகுதிகளைப் பேணி வருவதற்கு ஆகும் செலவில் ஒரு பகுதியை ஈடு செய்யும் பொருட்டு இப்பகுதியிலும் இப்பகுதிகளைச் சூழ்ந்த இடங்களிலும் திரைப்படம் பிடிப்பதற்காக ஒரு நாளைக்கு 1,000 ரூபாய் வீதம் அரசு இதுவரை வசூலித்து வந்தது. எழில்மிக்க இடங்களைத் திரைப்படமெடுக்க அனுமதிப்பது சீர்ப்பயண வளர்ச்சிக்குப் பயன் தருவதாக அமையுமென இவ்வரசு கருதியது. எனவே, கலையையும், எழிற்சுவைப் பண்பையும் வளர்க்கும் நோக்குடன் பாசனத் திட்டங்களில் திரைப்படம் பிடிப்பதற்கு ஒரு நாளைக்கு 1,000 ரூபாயாக இருந்த கட்டணத்தை நாளொன்றுக்கு 300 ரூபாயாகக் குறைத்துள்ளது.

பாசனத் திட்டப் பணிகளுக்குப் பொறுப்பேற்கும் பணியில் பல்வேறு நிர்வாக அமைப்புகள் நின்று நிலவுவதால் பொதுமக்கள் தங்கள் குறைகள் தீர, எந்த நிர்வாக அலுவலரை நாடுவது என, குழப்பமும், ஐயப்பாடும் அடைந்துள்ளனர், ஓரளவிற்கு உணவு உற்பத்திக்கும் தடங்கலாக அமையும் வகையில் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு இல்லாத நிலைகளையும் இந்த பல்வேறு கூறுகள் ஏற்படுத்தியுள்ளது. இவ்வித முரண் பாடுகளை கருத்திற்கொண்டு, வட்டார அதிகார வரம்புடன் கூடிய இணைந்த ஒன்றிய நிர்வாக அமைப்பு ஒன்றினை ஏற்படுத்த 1967, ஜூலையில் அரசு ஆணை பிறப்பித்தது.

இந்த ஆணைகளைக் கல்வி-நிதியாண்டின் இடைப் பகுதியில் செயலுக்கு கொண்டு வருவதனால் பணியாளர்களுக்கு இடர்ப்பாடு ஏற்படுவதுடன் கணக்குகளை முடிப்பதும் எளிதாகாது என முறையிடப்பட்ட காரணத்தினால், மாற்றியமைக்கப்பட்ட அமைப்பு முறை 1-4-1968 முதல் செயல்படும் வண்ணம் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மாற்றியமைக்கும் இத்திட்டத்தை வகுப்பதில் அரசு பின்வரும் கொள்கைகளைக் கருத்தில் கொண்டுள்ளது. (1) பாசனத் தேவைகளின் அடிப்படையில் தற்போதுள்ள ஆற்றுப் பாசன அமைப்புகளில் எல்லைகளை மாற்ற வேண்டியதில்லை. (2) இப்போது நிர்வாகப் பொறியாளரால் நிருவகிக்கப்படுகின்ற பொதுப்பணிக்களரியும், மற்றும், உள்ள கலன்-கருவி-கோட்டங்களையும் (அனைத்து நாடுகள் தொழிலாளர் நிறுவனத்தின் பரிவுரையின்படி) ஒரு மேற்பார்வைப் பொறியாளரின் பொறுப்பில் ஒப்படைத்தல். (3) உணவு உற்பத்தி பற்றிய வேலைகளைச் செய்வதற்காக வருவாய்த்துறை வாரியத்தில் பணியாற்றி வருகின்ற பணியாளர்களை அங்கிருந்து பிரித்து (பாசனத்) தலைமைப் பொறியாளருடன் இணைத்தல் (4) இவை அனைத்துக்கும் மேலாக, பாசனம், கட்டிடங்கள் ஆகியவை குறித்த பணிகளை நேர்முகமாய் மேற்பார்வையிடவும், அவற்றை ஒருங்கிணைக்கவும் இயன்ற மட்டும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு மேற்பார்வையாளர் பொறுப் பேற்றல். மாற்றியமைக்கப்பட்ட புது அமைப்பில் முறையாக 10 பெரு வட்டங்களும் 6 சிறப்பு பெரு வட்டங்களும்

இருக்கும். 80 கோட்டங்களும் 347 துணைக் கோட்டங்களும் இருக்கும். பெரு வட்டங்கள், கோட்டங்கள் ஆகிய ஒவ்வொன்றின் தலைமை இடங்களையும் அதிகார வரம்புகளையும் முடிவு செய்து அரசு கட்டளை பிறப்பித்துள்ளது. மேலும் துணைக் கோட்டங்களுக்கு அதிகார வரம்புகளைத் தகுந்தவாறு முடிவு செய்யுமாறு தலைமைப் பொறியாளருக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது.

அவிநாசி வட்டத்தைச் சேர்ந்த உழுகுடி பெரு மக்களிடமிருந்து அவ்வட்டம் வறண்ட நீர்ப்பற்றற்ற பகுதியாயிருப்பதாலும், அங்கு பெய்யும் மழையளவு மிகக் குறைந்திருப்பதாலும், நிலையான பாசன வசதி பெறுவதற்கு வேறு வழியில்லாததாலும் அவ்வட்டத்திற்குப் பாசன வசதிகள் செய்து தரும்படி பல முறையீடுகள் அரசாங்கத்துக்கு வந்துள்ளன. தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்கொண்டுள்ள நீர்ப் பாதுகாப்பு ஏற்பாடுகளால் மின்கலங்கள் வழி ஓடி வெளிவரும் கடைக்கோடி நீரினை மட்டுமே அவநாசிப் பகுதிக்கு ஓரளவு வழங்கலாமென அரசிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இம்முறையில் சுமார் 300 கோடி கன அடி நீர் கிடைக்குமென மதிப்பிடப்படுகிறது. இந்நீரைக் கொண்டு கூடிப்போனால் ஏறக்குறைய 12,000 ஏக்கர் நன்செய் சாகுபடிக்கோ அல்லது 21,000 ஏக்கர் புன்செய் சாகுபடிக்கோ பாசனம் வழங்க முடியும் எனவும் அறிய வருகிறது. இத்திட்டம் பற்றிய ஆய்வு இப்போது நடந்து வருகிறது.

என்னுடைய பொறுப்பின் கீழ் உள்ள சாலைகள், துறைமுகங்கள் பற்றியும் ஒரு சில குறிப்பிட விரும்புகிறேன்.

இந்திய அரசு, ஆண்டுதோறும் மத்தியச் சாலை நிதியிலிருந்து அளிக்கும் நிதி நமது தேவைகளுக்கு நனிமிக்க குறைவாய் உள்ளது. 1966-67-ல் ரூ. 25 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. ஆனால் நடப்பு ஆண்டில் 44.91 லட்ச ரூபாய் ஒதுக்குமாறு நாம் வேண்டியதற்கு எதிராக ரூ. 22.80 லட்சம் மட்டுமே ஒதுக்கும் வாய்ப்பிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முக்கிய வளர்ச்சித் துறையில் நமது தேவைகளை இந்திய அரசு பெரிதும் உணர வேண்டுமென்று ஈண்டு வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்த அரசு வன்மையுடனும் இடைவிடாமலும் முறையிட்டதற்குமேல் பொதுமக்களின் உரிமைக் குரலுக்கு இணங்கவும் இந்திய அரசு இறுதியாக தூத்துக்குடியில் ரூ. 24.40 கோடி செலவில் ஆழ்கடல் துறைமுகம் ஒன்றை மேம்படுத்த ஒப்பளிப்பு வழங்கியது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இறுதியாக முடிவு செய்துள்ள கால அட்டவணைப்படி தலைமைத் துறைமுகப் பணி 1970-ல் முடிவடையவிருக்கிறது. துறைமுக எல்லைவரை வெளிச் சாலைகள் அமைத்தல், துறைமுகத்திற்குப் புறப் பகுதிகளிலிருந்து நீர் வழங்குதல் போன்ற வசதிகளுக்காக மாநில அரசாங்கமும் இதுகாறும் ஏறக்குறைய ரூ. 110.00 லட்சம் செலவிட்டுள்ளது.

காண்ட்லா துறைமுகம் தங்குதடையற்ற வாணிகம் நடைபெற சுங்கந் தவிர்ந்த துறைமுகமாகச் செய்யப்பட்டிருப்பதைப் போல, தூத்துக்குடி துறைமுகத்தையும் சுங்கமற்ற துறைமுகமாக அறிவிக்க வேண்டுமென்று இந்திய அரசிற்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது. காண்ட்லாவிலுள்ள சுங்கமற்ற வாணிக மண்டலமே இன்னும் ஆய்வு நிலையில் உள்ளதென்றும் காண்ட்லா மண்டலம் முழுதும் செயல்படத் தொடங்கிய பின்னரே தூத்துக்குடித் துறைமுகத்தை சுங்கமற்ற வாணிக மண்டலமாக அறிவிப்பது குறித்து ஆலோசிக்க முடியுமென்றும் இந்தியத் துணைப் பிரதமரும் மத்திய வர்த்தக அமைச்சரும் எழுதியுள்ளனர்.

எனது உரையை முடிப்பதற்கு முன், பொறியியல் பணியிலுள்ள அதிகாரிகள் ஓய்வுபெறும் வயது பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன். தகுதி பெற்ற பொறியாளர்கள் பலர் வேலையின்றி மலிந்து மிகுந்த இன்றைய நிலையில், பலருக்குப் பணி உயர்வு பெற இயலாமல் தேக்க நிலை ஏற்பட்டுள்ள நிலையிலும் இது பற்றி அரசு மறு ஆய்வு செய்து ஓய்வு வயது வரம்பினை 55-ஆக மீண்டும் ஆணையிட ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் இது குறித்து அரசு முடிவு செய்யும்.

பாசனத்தைப் பெருக்குவதற்கும் இப்போதுள்ள பாசன வசதிகளை மேம்படுத்தவும் இயன்ற எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுப் பெருமளவிற்குப் பயன்படுத்தப்

பட்டுள்ளன என்பதை அறிந்து மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்வர் என நம்புகிறேன். மேம்பாடு அடைந்த உழவு முறைகளைப் பின்பற்றும்படியும், பாசன நீர் வசதியை நல்ல வழிகளில் கையாளும்படியும் நாம் பெரிதும் வலியுறுத்த வேண்டும். அதிக அளவிற்கு விளைச்சலைப் பெருக்க மிகச் சிறந்த சிக்கன முறைகளில் நீரைப் பயன்படுத்துவது குறித்து உழவர் பெருமக்களுக்கு வேளாண்மைத் துறையினரும் பரிவுரை வழங்கி வருகின்றனர்.

பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இந்த முன்னுரை உறுப்பினர்களுக்கு அச்சியேற்றி வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் பாசன வசதிகள் பற்றிய ஆய்வுரையும், தமிழகத்திலுள்ள சிறு துறைமுகங்கள் ஆற்றும் பணிகுறித்த 1967-68 ஆண்டுக்குரிய ஆய்வுரையும், தமிழகத்தின் சாலை வளர்ச்சி, கட்டட அமைப்புத் திட்டங்கள் பற்றிய ஆய்வுரையும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இதற்கிடையே நாம் புதிதாகச் செய்ய இருக்கிற பொதுப்பணித்துறை சீரமைப்புபற்றிய புத்தகம், 350 பக்கங்கள் அடங்கிய புத்தகம் ஒன்று விரைவில் அளிக்கப்பட இருக்கிறது. இவற்றையெல்லாம் கவனத்திற்கொண்டு உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களை வழங்குவார்கள் என்று எதிர்பார்த்து, இறுதியாக என் உரையை ஆற்றுவதற்கு உறுப்பினர்கள் வழி வகுக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நீர் வளத்துறை, நெடுஞ்சாலைத் துறை, துறைமுகங்கள் ஆகிய மானியங்களின் பேரில் இன்று காலையிலிருந்து எதிர்க்கட்சித் தலைவர் உட்பட 32 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் இதில் எதிர்ப்பதற்கு ஒன்றுமே இல்லையென்று சொல்லுகின்ற அளவுக்குப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் இந்த மானியக் கோரிக்கையை வெகுவாக ஆதரித்து, இந்த ஆண்டு இந்த மானியக் கோரிக்கைகளின் மீது எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்கள் பலவற்றையும், திட்டங்களையும் வரவேற்றுத் தங்களுடைய உரைகளை நிகழ்த்தி இருக்கிறார்கள். அந்த அளவில் நல்ல கருத்துக்களை எடுத்துச்சொன்ன மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் இந்தத்

துறையினுடைய பொறுப்பினை வகிக்கின்ற அமைச்சர் என்ற முறையில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிர்வாகத்தைப் பொறுத்து இன்று திரு. இராமச்சந்திரன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் தலைமை நிர்வாகம் ஒரு பொறியாளருடைய மேற்பார்வையிலேதான் இருக்க வேண்டும், அதற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இருக்கக் கூடாது என்பதனை மிகவும் வலியுறுத்துகின்ற அளவில் எடுத்துக்காட்டி, அதற்குச் சில ஆதாரங்களையும் எடுத்துச்சொன்னார்கள். இன்றையதினம் செயலாளர் என்கின்ற பெயரில் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இருந்தாலும், அவர்கள் தன்னிச்சையாக எந்த முடிவையும் எடுக்கவில்லை என்பதையும் நண்பர் இராமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் பொறியாளரைக் கலக்காமல், அவருடைய யோசனையைக் கேட்காமல் எந்த முடிவையும் அவர் எடுக்கவில்லை என்பதனையும் நான் உணர்த்துவதற்கு பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். செயலாளர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்தாலும், பொறியாளர்கள், நீர்ப்பாசனத் துறையிலாகட்டும், அல்லது நெடுஞ்சாலைத் துறையிலாகட்டும், எடுத்துச்சொல்கின்ற நல்ல கருத்துக்களை ஆராய்ந்து அவற்றை நல்ல முறையிலே சிந்தித்து ஒரு முடிவினை மேற்கொள்ளுகிறார்கள். அந்த முடிவையும் அரசு இறுதியாக ஏற்றுக்கொண்ட பிறகுதான் அது செயல்படுத்தப்படுகின்றது. அந்த நிலையில் பொறியாளர் ஒருவர்தான் இந்த இலாகாவினுடைய செயலாளராக இருக்க வேண்டுமென்ற கூற்று அவ்வளவு பொருத்தமுடையதாக எனக்குத் தெரியவில்லை. அவர் எப்படித் தாமதங்கள் ஏற்படுகின்றன என்பதற்கு உதாரணத்தைச் சொன்னார்கள். ''பூதலூரிலே ஏற்பட்ட உடைப்பு உடனடியாக அடைக்கப்பட வில்லையென்றும் அதற்குக் காரணம் அரசாங்கத்தினுடைய அனுமதி கிடைக்கவில்லை, ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி செயலாளராக இருக்கிற காரணத்தினால் அந்த அனுமதி பெறுவதற்குத் தாமதப்பட்டது'' என்றெல்லாம் சொன்னார்கள். அது முற்றிலும் பொருந்தாத கூற்றாகும். ஏனென்றால் பூதலூரில் உடைப்பு ஏற்பட்டதும் அதை அடைப்பதற்குரிய அனுமதியை அரசாங்கத்திடமிருந்து பெறவேண்டிய அவசியமே இல்லை.

அங்கு இருக்கின்ற எஸ்.இ. பதவி வகிக்கின்ற பொறியாளரே அதற்கான உத்தரவை வழங்கி, அந்த ஏற்பாடுகளைக் கவனிக்க கடமைப்பட்டிருக்கிறார். 70,000 ஏக்கர் நிலம் இதனால் பாழடிக்கப்பட்டது என்பதும் தவறான தகவல், 20,000 ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டது. 20,000 ஏக்கர் நிலம் பாதிக்கப் பட்டதற்கான காரணம் அந்த உடைப்பு மாத்திரம் அல்ல, பல காரணங்களிலே உடைப்பு ஒரு பக்கத்திலே இருந்தாலும், ஆகஸ்டு திங்களிலே பெய்திருக்க வேண்டிய பரவலான மழை அங்கு இல்லாத காரணத்தினாலும், அதோடு ஏரி நீர் பாய வேண்டிய கிளை வாய்க்கால்களிலே, பாயக்கூடிய சூழ்நிலை இல்லாத காரணத்தினாலேயும் அங்கே அந்த 20,000 ஏக்கர் பாதிக்கப்பட்டதே தவிர, முழுவதும் இந்த உடைப்பின் காரணமாக அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு பேசிய உறுப்பினர்கள் பலரும் தண்ணீரைச் சிக்கனப்படுத்தி நவீனமான முறையில், வேகமான முறையில், நீர்பாசன வசதியைச் செய்யவேண்டுமென்று எடுத்துக் கூறினார்கள். சிக்கனப்படுத்துவதை இந்த அரசும் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. அதற்காகப் பல நிலைகளில் ஆராய்ச்சிகள் நடத்தி, சில வேலைகளையும் அரசு மேற்கொண்டிருக்கிறது. பழைய ஆற்றுக்கால் பாசனங்களில் நீர்த் சேதம் அதிகப்படுகிறது. பரந்த வாய்க்கால்களும் திறந்த மடைகளும் அதற்குக் காரணமாக இருந்து வருகின்றன. அவ்வப்பொழுது தேவையாக அமைந்த பல ''கனைக்ஷன் பைப்ஸ்'' என்று சொல்லப்படுகிற இந்த சொருகுக் குழாய்களும் அதிகமான தண்ணீர் சேதத்திற்குக் காரணமாக இருந்து வருகின்றன. நீர் வீண் விரயம் தடுக்கப்படுவதற்கும் கடைப்பாசன வாய்க்கால்களிலே ஏற்படுகின்ற உடைப்புக்களை நீக்குவதற்கும் அந்த அரசு எல்லா விதமான நல்ல திட்டங்களையும் மேற்கொண்டிருக்கிறது. தண்ணீரைச் சிக்கனப்படுத்த வேண்டுமென்று தலைப்பிலே பேசிய நேரத்தில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், காலையிலே உரையாற்றிய நண்பர் திரு. நல்லசிவம் அவர்களும் ஒரு கியூசெக்ஸ் சில பகுதிகளிலே 60 ஏக்கருக்குப் பாசன வசதி தருகின்றது என்றும் சில இடங்களிலே 25 ஏக்கருக்குத்தான் தருகின்றது என்றும் இதை ஒருசமப்படுத்த வேண்டும்மென்றும் குறிப்பிட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய

பகுதியிலேகூட ஒரு க்யூசெக்ஸ் தண்ணீரைக்கொண்டு அதிகமான அளவு ஏக்கர் நிலங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறோம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், இதை ஒருசமநிலைப் படுத்துவதென்பது இயலாத காரியம். ஆங்காங்கு இருக்கிற மண் வளம், ஆங்காங்கு இருக்கிற பல்வேறு நிலைகள், ஆங்காங்கு இருக்கிற பாசன வசதிகள், களிப்பற்று, பயிர்முறை இவை அத்தனையையும் பொறுத்துத்தான் இவ்வளவு க்யூசெக்ஸ் இவ்வளவு ஏக்கருக்கு உபயோகப்படுத்தலாம் என்று நிர்ணயிக்க முடியுமே தவிர, அதிலே பொது உடைமைத் தத்துவம் பேசி, எல்லா இடங்களிலும் சமமாக, 60 ஏக்கர்தான் தஞ்சாவூரிலும் இருக்க வேண்டும், கோவையிலும் இருக்க வேண்டும், சேலத்திலும் இருக்க வேண்டும் என்று கூறுவது பொருத்த முடையதாக அமையாது என்ற கருத்தினை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிக்கனப்படுத்தவும், நவீன முறைகளை மேற்கொள் வதற்காகவும் இந்த அரசு இப்பொழுது ஏற்றுக்கொண்டிருக்கிற சில செயல்களைச் சுட்டிக்காட்டுவது நலம் என்று கருதுகிறேன். சிக்கனப்படுத்துகின்ற முறையில் கால்வாய்க்குக்கரை அமைத்துக் கெட்டிப்படுத்துகின்ற திட்டம்; உடைபட்டிருக்கக்கூடிய இடங்களில் காப்புக்கல் (ரிவெட்மெண்டு) இவற்றைச் செய்து, அந்த உடைப்புகளை, உடைபடக்கூடிய இடங்களைப் பாதுகாக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டிய ஒரு திட்டம் ; கால் வாய்களுடைய அகலத்தைக் குறைத்து, அதிக மட்ட நீரை வெகு விரைவாகச் செலுத்தி, கடைமடை வரையிலே சென்று பாயக்கூடிய அளவுக்குக் கால்வாய்களுடைய அகலத்தைக் குறைப்பதற்கான ஒரு திட்டம் ; எங்கே தண்ணீர் மதகுகளில் ஏறிப் பாயவேண்டிய நிலைமைகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் நாட்சஸ், நெருக்கக் கண் வழிகள் இவற்றை அமைத்து, தண்ணீரை ஏறிப் பாயச்செய்கின்ற அப்படி ஒரு திட்டம் ; பாசன மட்டத்திற்கேற்ப மதகுகளை மாற்றி, தேவையற்றவைகளை அகற்றி, அதன்மூலம் தண்ணீரைச் சிக்கன முறையிலும், நவீன முறையிலும் உபயோகப்படுத்துவதற்கான திட்டம் ; பெரிய கால்வாய், தலைக்கால்வாய்களில் தரைமட்ட அணைகள் (பெட் டாம்ஸ்) என்று சொல்லப்படுகின்ற தரைமட்டஅணை களைக் கட்டுவதற்கும், ரெகுலேட்டர்களை அமைப்பதற்கும்

சிக்கனப்படுத்துவதும், நவீனமுமான முறைகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம் என்கிற அளவுக்கு இத்தகைய திட்டங்கள் இருக்கின்றன.

இந்த அடிப்படையிலேதான் இந்த அரசு தாமிரபரணியில் மூன்று கால்வாய்களைச் சீர்படுத்தியிருக்கிறது. நான்கில் வேலை நடந்துகொண்டிருக்கிறது. எஞ்சிய இரண்டு கால்வாய்களில் வேலைகள் 1968-69-ல் மேற்கொள்ளப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் காவேரிப் பாசனத்தில் நூற்றுக் கணக்கான கால்வாய்கள் இருக்கின்றன. அவை அத்தனையையும் எடுத்துக்கொண்டு, சிக்கனப்படுத்துகிற நவீன முறைகளை அங்கே மேற்கொள்வது என்றால், தற்போதைக்கு இயலாது என்றாலும், இப்பொழுது முன்னோடித் திட்டமாக 16 கால்வாய்களை 1967-68-ம் ஆண்டில் இந்த அரசு மேற்கொண்டு அதற்காக மொத்தச் செலவு ரூ. 38 லட்சம் என்று மதிப்பீடு செய்யப்பட்டு, இதுவரையிலே ரூ. 3,08,000 அதற்காகச் செலவிட்டிருக்கிறது. இந்த 16 கால்வாய்களுடைய வேலை முன்னோடித் திட்டங்களாக இருக்கிற அளவில் தஞ்சை மாவட்டத்தில் இந்த வேலை இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் முடிவுறக்கூடிய நிலைமையில் இருக்கிறது. இந்த 16 கால்வாய்கள் சீர்திருத்தப்பட்டு, அதனுடைய சாதக பாதகங்களை ஆராய்ந்து, மேற்கொண்டு தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற மற்றக் கால்வாய்களை- அது மற்ற மாவட்டங்களைப்போல், அல்ல, பல சிக்கல் நிறைந்த பிரச்சினைகள் இருக்கின்றன- குறுக்கிடுகிற கால்வாய்கள், ஆங்காங்கிருக்கிற காரணத்தினால் பாசன வசதிகளை பாதிக்கக்கூடிய வகையில் இந்த சீரமைப்பு வந்துவிடக்கூடாது என்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், இந்த முன்னோடித் திட்டங்களுடைய சாதக பாதகங்களை ஆராய்ந்து, மேற்கொண்டு பல கால்வாய்களை எடுத்துக் கொள்கிற அளவில் இந்த அரசு இருக்கிறது.

ரூ. 2,23,000 செலவில், இந்த ஆண்டு கோவை மாவட்டத்தில் அமராவதியில் 13 கால்வாய்களுக்குத் திட்டம், சிக்கனப்படுத்தி நவீன முறைத் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டு, 13-ல், 12-ல் வேலை நடக்கிறது. ஒரு வேலைத் திட்டம் கோர்ட்டில்

இருக்கிறது. இந்த வேலைத் திட்டம் அங்கே வேண்டாம் என்று அங்கிருக்கிற சில விவசாயிகள் மறுக்கின்ற காரணத்தினால், அந்த ஒரு வேலைத் திட்டம் கோர்ட்டில் இப்பொழுது இருந்து கொண்டிருக்கிறது. 12 கால்வாய் திட்டங்களுடைய வேலைகள் இரண்டு ஆண்டுக் காலத்தில் முடிவடையும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

அதேபோல, திருச்சி அமராவதியில் 11 கால்வாய்கள், அவற்றில் இரண்டிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது ; இரண்டு அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கின்றன. 7 திட்டங்கள் தலைமைப் பொறியாளரின் அனுமதிக்காகக் காத்திருக்கின்றன. சென்ற ஆண்டு இந்த மாமன்றத்தில் நான் அதைப்பற்றிக் கூறியிருக்கிறேன். அதைத் தலைமைப் பொறியாளர் அவர்கள் மேலும் விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். ஆகவே, இந்த ஆண்டிலே இந்த 11 கால்வாய்களுக்கான வேலைகளும் விரைவுபடுத்தப் படும் என்று நான் நம்புகிறேன்.

கோவை அமராவதியில், ரூ. 72 இலட்சம் செலவில் கால்வாய்களுக்குக் காரை பூசி, கரைகளையும், தளத்தையும் மேம்படுத்த அனுமதி வழங்கப்பட்டபிறகு, வேலை தொடங்குகிற நிலைமையில் இன்று கோவை அமராவதித் திட்டம் இருக்கிறது. காரை பூசுகின்ற காரணத்தினால், நீர் உறிஞ்சப்படாமலும், நீர் ஆவியாக மாறுகிறது என்கின்ற நிலைமையிலிருந்து நீர் வீணாகாமலும் பாதுகாக்கப்படுகிறது என்பதையொட்டி, கோவை அமராவதியில், ரூ. 72 இலட்சம் செலவில், காரைபூசிக் கரைகளையும், தளத்தையும் மேம்படுத்துகிற திட்டத்தை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

பெரியாற்றிலும் இந்த விதமான திட்டங்களுக்கு செயற்குறிப்புகள் ஆய்வில் உள்ளன.

வைகை கால்வாய் சீரமைப்புத் திட்டத்தின்கீழ், வீரகனூர், பார்திபனூர் அணைகளைக் கட்டி, ஆங்காங்கு இருக்கின்ற கால்வாய்களை ஒரு சீராக அமைத்து, குளங்களுக்குப் பாயும் கிளைக் கால்வாய்களையும் வகுத்து, பாசன நீரைச் சேமித்து, நஞ்சை நிலங்களுக்குள்ள பற்றாக்குறையைப் போக்க, ஏறத்தாழ

ரூ. 400 இலட்சத்தில் ஒரு திட்டத்திற்கு அனுமதி பெறப்பட்டிருக்கிறது. 1968-69-ல் இந்த திட்ட வேலைகள் தொடங்க இருக்கின்றன. செய்த வேலைகளினுடைய பயனாக, தண்ணீர் விரைவாக கடைமடைப் பகுதிகளுக்குக் கிடைக்கவும், சிக்கனமாகப் பயனுறவும் இந்த நவீனமுறைத் திட்டம் நிச்சயம் பயன்படும் என்று நாம் நம்புகிறோம். இதனை மேலும் பரவலாக்க இருக்கிற வாய்ப்புக் கூறுகளையும் இந்த அரசு ஆராய இருக்கிறது.

சென்ற ஆண்டு பருவ மழை ஓரளவுக்கு தவறிவிட்ட போதிலும், 1966-67-ம் ஆண்டைவிட 1967-68-ல் பெருமளவுக்குப் பருவமழை குறைந்துவிட்டபோதிலும், வேளாண்மைத்துறை குறுகியகாலப் பயிர்களைப் பயிர் செய்யும் முறையினைக் கடைப்பிடித்ததை ஒட்டியும், இருந்த நீரை முறைப் படுத்தி, சிக்கனமாக வழங்கியதாலும், உணவு உற்பத்தி பாதிக்கப்படாத அளவுக்கும், குறிப்பாகத் தஞ்சையிலும் அதிக விளைச்சல் காண்கின்ற அளவுக்கும் நாம் வெற்றி காண முடிந்திருக்கிறது. பொறியாளர்களும், ஆங்காங்கு மாவட்ட ரீதியிலிருக்கிற அதிகாரிகளும் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாகவும், வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறையில் இருக்கிற ஏனைய அதிகாரிகளும் ஏற்றுக்கொண்டு தந்த நல்ல ஒத்துழைப்பின் காரணமாகவும் இந்தப் பயனை மழை குறைவாக இருந்தும், விளைச்சலை அதிகமாகப் பெற்றோம் என்கின்ற வெற்றியினை நாம் காண முடிந்தது.

ஆற்றுப்பாசனத்தை மாத்திரம் நம்பி இடையிலே இயற்கையால் ஏற்படும் இடர்ப்பாடுகளை நீக்க, ஆற்றுபாசனப் பகுதிகளில் கிணறுகள் வெட்ட, வடிமுனைக் குழாய்கள் அமைக்க, அவற்றிற்கு மின்சக்தி வழங்க இதற்கு முன்னிருந்த தடை விதிகளையெல்லாம் இந்த அரசு தளர்த்தியிருக்கிறது. அதைப் பாராட்டி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசியதை நாம் கேட்டோம்.

நண்பர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் பாலாறுப் பகுதியைப் பொறுத்தவரையிலே, இந்தப் பாலாறு விதிகள் தளர்த்தப்படவில்லை என்று குறைப்பட்டுக்கொண்டார்கள். பாலாறுப் பகுதியிலும் நாம் இன்றையதினம் இந்த

விதிகளையெல்லாம் ஓரளவுக்குத் தளர்த்தி, 2½ குதிரை வேகமுள்ள இயந்திரங்கள் இருந்த இடங்களில், 5 குதிரை வேகமுள்ள இயந்திரங்கள் பொருத்தலாம், 5 குதிரை வேகமுள்ள இயந்திரங்கள் இருந்த இடங்களில் 10 குதிரை வேகமுள்ள இயந்திரங்கள் பொருத்தலாம் என்றும், அதைப்போலவே, ஊற்றுக்கால்வாய், ஊற்று நீர்ப் பகுதியிலிருந்து 400 கிலோ மீட்டர் தொலைவில் பம்புசெட்டு வைப்பது என்று இருந்ததை, இப்பொழுது 200 என்று குறைத்தும், 200 என்ற இருந்ததை 100 என்று குறைத்தும் நாம் பாலாறு பேசின் பொறுத்தவரையில் இருக்கிற விதிகளை இன்றையதினம் தளர்த்துவதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, எப்பொழுதும் நீர் வசதிகளைப் பெற்று, நல்ல விளைச்சலைக் பெருக்குவதற்கு சாத்தியக்கூறான வழிகளில், இந்த அரசு விவசாயப் பெருங்குடி மக்கள் உதவிப்பெறவேண்டும் என்ற உணர்வுடன் இந்த விதிகளையெல்லாம் தளர்த்துவதுபற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

வடிகால் பிரச்சினையைப்பற்றி பல உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள். அதிலும் குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தைப்பற்றிப் எடுத்துச்சொன்னார்கள். தஞ்சையில் மழைமிகு பகுதிகளில் இந்த வடிகால் பிரச்சினை வெகுவாக பேசப்படுகிற, உணரப்படுகிற ஒன்றாக இருக்கிறது. இதனை ஆராய்ந்து வடிகால்கள் அமைக்க ஒரு தனிக் கோட்டமே இப்பொழுது பணி புரிந்துகொண்டு வருகிறது. இந்தத் தனிக்கோட்டம் திருவாரூரைத் தலைமை யகமாகக் கொண்டு அந்த வேலைகளை நடத்திக்கொண்டி ருக்கிறது. தனிக்கோட்டம் 1966-ல் தொடங்கியது. அடிநீர் ஆராய்கின்ற கோட்டத்தில் இணைந்து இதுவரையில் பணியாற்றிக் கொண்டிருந்தது. இந்த ஆண்டுதான் இந்தக் கோட்டம் வடிகால் வசதிகளை முழுவதுமாகக் கவனிக்க வேண்டும் என்று அரசு அவர்களுக்கு ஆணை பிறப்பித்து அவர்கள் அந்தக் காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அது மாத்திரமல்ல, தஞ்சை மேல் பகுதியில் கந்தர்வகோட்டை என்ற இடத்தில் ஓடிக்கொண்டிருக்கிற காட்டாற்று நீரைத் திருப்பி, ஆங்காங்கு விவசாயிகளுக்குப்பயன்படக்கூடிய வழிவகைகள் செய்யவேண்டும் என்றும், அதற்கான ஆராய்ச்சியை நடத்த

வேண்டும் என்றும், அதற்கான ஆராய்ச்சியை நடத்தவேண்டும் என்றும் அரசு காரியங்களை மேற்கொண்டிருக்கிறது.

புது நீர்ப்பாசனத் திட்டங்கள் மிகவும் குறைவான நிலையில், சிறிய பாசனத் திட்டங்களை எல்லாம் விரிவுபடுத்த வேண்டும் என்று வெகுவாக மாண்புமிகு உறுப்பினர்களால் பேசப்பட்டது.பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் ஏற்கெனவே தொடங்கப்பட்டது. என்றாலும், 1,48,000 ஏக்கர்களுக்குப் பாசனம் கொடுக்க நிறைவேற்றியிருக்கிறது என்றாலும், இதுவரையிலும் மொத்தச் செலவு, 1967-68 வரையில் ரூ. 36 கோடி செலவழிக்கப்பட்டிருக்கிறது என்றால், இன்னும் செலவழிக்கப்படவேண்டியது மாத்திரமல்ல பெறுகின்ற பாசன வசதிகளைப் பெற வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியதுபோல, அண்டை மாநிலத் தோடு நடத்தப்படும் பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக முடியும் என்ற எண்ண முடையவர்களாக இருக்கிறோம். நம்முடைய திரு. கோதண்டராமன், ''ஏன் அண்டை மாநிலத்தோடு பேச்சு வார்த்தைகளை விரைவாக முடிக்கவில்லை?'' என்று குறிப்பிட்டார்கள். திரு. நல்லசிவம் அவர்களும், மிகுந்த அவசரப் பட்டார்கள். ஏன் முடிக்கவில்லை என்று கேட்டார்கள். அவர்கள் இருவரும்கூடி, முயற்சி எடுக்கலாம். எப்படியென்றால், கேரளத்தில் நடைபெறுவது கோதண்டராமன் கட்சியைச் சார்ந்த அமைச்சரவை : அதிலும் குறிப்பாக நீர்ப்பாசன அமைச்சராக இருக்கிறவர் திரு. குருப் அவர்கள், சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். ஆகவே, கோதண்டராமன் அவர்களும், நல்லசிவன் அவர்களுமே கூடி, அமைச்சரவை அவர்கள் கட்சி என்று கோதண்டராமனும், குறிப்பிட்ட துறையில் தொடர்புள்ளவர் எஸ்.எஸ். பி. அமைச்சரென்று நல்லசிவனும்கூட இந்த காரியத்திற்கு உறுதுணையாக இருக்கலாம். பேச்சு வார்த்தைகள் முறிந்துவிடும் சூழ்நிலையில் இல்லை. நல்ல வெற்றிகரமாக நடக்கவேண்டும். திரு. இராமச்சந்திரன்கூட அதிகாரிகள் கூடாது, அமைச்சரே செல்லவேண்டும் என்றது போல, அமைச்சர் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடக்கிறது. அமைச்சர் மட்டத்தில் என்றால், முதல் அமைச்சர் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

கிருஷ்ணா, கோதாவரித் தண்ணீரை ஆந்திராவிலிருந்து பெறுவதற்கு அந்தக்காலத்தில் ஓ.பி-ஆர்.,-திரு. ராமசாமி ரெட்டியார் அமைச்சராக இருந்த அப்பொழுதே அந்தத் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதே, அதையும் நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். திரு. ஓ.பி.ஆர். மந்திரியாக இருந்த காலத்திற்கும் நாங்கள் மந்திரிகளாக இருக்கும் காலத்திற்கும் இடையே சென்ற ஆண்டுகள் எண்ணற்றவை. இடைக்காலத்தில், யார், யார், மந்திரிகளாக இருந்தார்கள் என்று எண்ணிப்பார்த்தபோது, இது வரையில், ஓ.பி. ஆர். காலத்திலிருந்து காங்கிரஸ் மந்திரிகள்தான் இருந்து வந்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எங்களைப் பார்த்து அவ்வளவு வேகமாகக் கேட்ட கேள்வியை அவர்களைப் பார்த்து ஒரு முறையாவது கேட்டாரா என்பது சந்தேகமே. அப்படிக் கேட்டு இருந்தால் மெத்த மகிழ்ச்சி அடைந்திருப்பேன் (குறுக்கீடு). ''கேட்டு இருந்தால் விட்டிருப் பார்களா'' என்று முதல்அமைச்சர் கேட்கிறார்கள் (சிரிப்பு).

தென்னாற்காடு மாவட்டத்தில் கோமுகி நதித் திட்டவேலை ரூ. 110 லட்சம் செலவில் நடைபெறும் வேலை, இந்த ஆண்டு முடிவு அடைகிறது. அது முடிந்தபிறகு 5,000 ஏக்கர்கள் பாசன வசதியை, கோமுகி நதித் திட்டத்தின்மூலம், தென்னாற்காடு பகுதியில் உள்ள விவசாயிகள் பெற முடியும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், சித்தாறு-பட்டனங்கால் திட்டம், 415 இலட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. வேலைகள் அடுத்த ஆண்டில் முடிவு அடையாது என்றாலும், வேலைகள் முடிந்ததும்தான் பாசன வசதி பெறவேண்டும் என்று இல்லை. பயனுறுகின்ற அளவு, எந்தக் கட்ட அளவிற்கு வேலைகள் சித்தாறு-பட்டனங்கால் திட்டத்தில் பூர்த்தியா கின்றனவோ, அதன் மூலம் 32,000 ஏக்கர்கள் பாசன வசதி பெறும், அடுத்த ஆண்டு 30,000 ஏக்கரா இல்லாவிட்டாலும், குறைந்த பட்சம், 10,000 அல்லது 12,000 ஏக்கர்கள் அளவிற்கு இன்னும் 20,000 ஏக்கர்கள் அளவிற்கு பாசன வசதி பெறக் கூடிய அளவிற்கு வேலைகள் அடுத்த ஆண்டில் முடிவடையும் என்று கருதுகிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில், மணிமுத்தா நதித் திட்டத்திற்கு ரூ. 45 இலட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டில் மொத்தம் ரூ. 60 இலட்சமும் முழுமையும் செலவழிக்கும் முன்னாலேயே பயனுறக்கூடிய அளவு, விவசாயிகள் மகிழத்தக்க அளவிற்கு பலகட்ட வேலைகள் முடிவுறும். 4,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறமுடியும்.

நெல்லை மாவட்டத்தில், இராமநதித் திட்டத்திற்கு 110 இலட்ச ரூபாய் மதிப்பிடப்பட்டு, 4,170 ஏக்கர்களுக்கு உறுதியளிப்பும், 500 ஏக்கர்களுக்கு புதிய பாசனமும் தரக்கூடியது அந்தத் திட்டம் 1968-69ம் ஆண்டில் அதனுடைய வேலைகள் முனைப்பாக ஆரம்பமாக இருக்கிறது. முடிவு அடையவில்லை. முனைப்பாக இராமநதித்திட்டம் தொடங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் கடனா நதி திட்டத்திற்கு 163 இலட்ச ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டு, உறுதிப்பாடு செய்யப்படுகின்ற நிலங்கள், ஏற்கனவே பாசனத்திற்கு வந்திருக்கிற நிலங்கள், 7,112 ஏக்கரும், புதிய பாசனத்திற்க 1,000 ஏக்கரும் பயனுறும் அளவுக்கு வேலைகள் தொடங்கியுள்ளன.

பரம்பிக்குளம் ஆளியாறு திட்டப்பகுதிகளில் கண்ணிவாய்க் கால்கள், ஃபீல்ட் போதிஸ், இருக்கின்றன. பரவலாக இந்தச் சலுகையை எல்லாத்திட்டங்களுக்கும் விரிவு படுத்த அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை மன்ற உறுப்பினர்களும், விவசாயிகளும் மிகவும் பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன்.

காவிரி சங்கமுகப் பகுதியில் இருபோகச் சாகுபடிக்கு உதவியாகக் கல்லணை கால்வாய், காவிரிக் கால்வாய் இவற்றை மேநிலைப்படுத்தும் திட்டத்திற்கென்று இந்த அரசு 66 இலட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. சங்கமுகப் பகுதியில் காவிரியில், கல்லணைக்கால்வாயை மேநிலைப்படுத்த 1968-69-ல் ரூ. 26 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. மிச்சம் ரூ. 40 இலட்சமும் செலவழிக்கப்பட்டபிறகு பயனை அந்தப்பகுதியிலேயே தரக்கூடிய அளவில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

சென்னை உரத்தொழிற்சாலைக்கு நிலைநீர் வழங்க ரூ.180 இலட்சம் அளவில் திட்டம் ஆய்வில் இருக்கிறது. காவிரி

சங்கமுகத்தில் ஐக்கிய நாட்டுச் சங்க விரிவாக்கும் திட்டம் ஒன்றும் ஆய்வில் இருக்கிறது.

வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவர என்ற திட்டத்திற்காக இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கும் தொகை ரூ. 25 இலட்சம். இவை அன்னியில் தங்கள், தங்களுடைய மாவட்டங்களுடைய குறைபாடுகளையும், தங்கள் தொகுதி களிலுள்ள திட்டங்களும் வரவேண்டும் என்ற கருத்தையும் பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். பல உறுப்பினர்கள் அடிக்கடி இந்த மாமன்றத்தில் வலியுறுத்தி அந்த வகையிலும், இன்றைய தினம் சுட்டிக்காட்டிப் பேசிய வகையிலும், பொது மக்களுடைய முறையீடுகள் அடிப்படையிலும், இந்த அரசு சுமார் 10 திட்டங்களைப் பற்றிய ஒரு அறிவிப்பினை இந்த மன்றத்திலே வழங்கக் கடமைப்பட்டிருக்கிறது. அந்த பத்துத் திட்டங்களும், கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படுகிற திட்டங்கள் இல்லை. முதல் அமைச்சர் ஒரு கருத்தைச் சொல்வார்கள். கோடிக் கணக்கான ரூபாய்கள் செலவிட்டு நிறைவேற்றப்படுகிற திட்டங்களைவிட, பரவலாக இலட்சக்கணக்கான ரூபாயில் பரவலான திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என்றும், ஆங்காங்கே விவசாயிகளுடைய குறைகளைத் தீர்க்கும் அளவிற்குத் திட்டங்கள் அமைந்திடும் என்ற கருத்தினை முதல் அமைச்சர் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்திற்கு ஏற்ப, பரவலாக பல மாவட்டங்களில், ஏறத்தாழ 10 திட்டங்களை அரசு முனைப்பாக ஆராய்ந்து வருகிறது.

வட ஆற்காடு மாவட்டத்தில், தண்டரை அணைக்கட்டு. திரு வி.டி. அண்ணாமலை மிகவும் குறைப்பட்டுக் கொண்டார்கள். ரூ. 47 இலட்ச மதிப்பீட்டில் தண்டரை அணைக்கட்டுத் திட்டம்.

தென்னாற்காடு மாவட்டத்தில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் எதிர்க்கட்சியில் இருந்த காலம் தொட்டு வலியுறுத்திக்கொண்டு வந்த நந்தன கால்வாய்த் திட்டம். ரூ. 22 இலட்சம் மதிப்பீட்டில் இந்தத் திட்டம்.

நம்முடைய ஆத்தூர் திரு. வி. எஸ். எஸ். மணி காலையில் எடுத்துச்சொன்னார்கள்,மருதா நதித்திட்டத்தை அமுல் படுத்தினால், ஒரு சிலையே பொதுப்பணித் துறை அமைச்சர்

அவர்களுக்கு வைக்கிறேன் என்று, சிலை வைக்க என்று இல்லை. அவர்கள் சொல்வதற்கு முன்பாகவே, ஆய்வு செய்யத் தீர்மானித்திருக்கிறது. திண்டுக்கல் தாலுக்காவில் ரூ. 62 இலட்சம் மதிப்பீட்டில் மருதா நதித் திட்டம்.

அதே போல கோவை மாவட்டத்தில், ஏற்கனவே குறிப்பிட்டதுபோல ரூ. 72 இலட்சம் செலவில் அமராவதி கால்வாய்களுக்கு சிமண்ட்காரை பூசும் திட்டம்.

முகவை மாவட்டத்தில், பிள்ளரு வாய்க்கால் திட்டம் ரூ. 75 இலட்சம் மதிப்பீட்டில்.

நெல்லை மாவட்டத்தில் கருப்பா நதி நீரைத் தடுக்க, திரு. சுப்பையா முதலியார் அவர்கள் குறிப்பிட்டார்கள்,அந்த கருப்பா நதி நீர்த்தேக்கத் திட்டம் ரூ. 80 இலட்ச மதிப்பீட்டில்.

நெல்லை மாவட்டத்தில் வைப்பார் அணைக்கட்டு திட்டம் ரூ. 23 இலட்ச மதிப்பீட்டில்.

தர்மபுரி மாவட்டத்தில் ரூ. 48 இலட்சம் மதிப்பீட்டில் தொட்ட ஹல்ல நீர்த்தேக்கத் திட்டம்.

திருச்சி மாவட்டத்தில் ரூ. 46 இலட்ச மதிப்பீட்டில், பொன்னியாறு நீர்த்தேக்கத் திட்டம்.

குளித்தலை தாலூகாவில் ரூ. 46 இலட்சம் மதிப்பில் பிரம்பலார் நீர்த்தேக்கத்திட்டம். இவை எல்லாம் பல கட்ட ஆய்வுகளை முடித்து, அரசினுடைய பரிசீலனைக்கு வந்து, ஒப்புதலுக்குப்பின் விரைவில் அமுலாகும்.

குடகனாறு திட்டம் கைவிடப்பட்டது என்று திரு. என். வரதராஜன் அவர்களும், குளித்தலை உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்களும் எடுத்துச்சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : எங்கள் செங்கற்பட்டுக்கு ஒன்றும் இல்லையா ? (சிரிப்பு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : செங்கற்பட்டுக்கு ஒன்றும் இல்லையா என்று அண்ணா அவர்கள் கேட்கிறார்கள். செங்கற்பட்டுக்கு அண்ணா அவர்களே இருக்கிறார்கள். (பலத்த சிரிப்பு)

குடகனாறு திட்டம் கைவிடப்பட்டதா என்று கேள்வி எழுப்பப்பட்ட நேரத்தில் முன்பிருந்த அரசு ஆராய்ந்து அது கைவிடப்பட்டது என்று அறிவித்தது. ஆனால் குடகனாறு திட்டத்தை எந்த அளவிலாவது அங்கிருக்கிற விவசாய மக்களுடைய மனம் மகிழத்தக்க விதத்தில் பரிசீலனை செய்யவேண்டுமென்று இப்போது மறுபரிசீலனைக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருவாய் நோக்கோடு சில திட்டங்கள் பார்ப்பதற்கு இயலாதவை. பின் தங்கிய பகுதிகள், உணவு உற்பத்தி அவசியம் தேவைப்படுகின்ற இடங்கள், எந்தவிதமான பாசன வசதியும் பெற முடியாத இடங்கள், இங்கெல்லாம் வருவாய் என்பதை அடிப்படையாக வைத்தே திட்டங்களை நோக்கக்கூடாது. அதிலும் நாம் ஒரு எல்லை வகுத்திருக்கிறோம். எந்த அளவிற்கு செலவு செய்யலாம் என்றால், திட்டத்தினால் ஒரு டன் அரிசி கிடைக்கும் என்றால், 3 ஆயிரம் என்ற கணக்கில், அல்லது பாசன வசதி ஒரு ஏக்கர் பெறும் என்றால் ஆயிரம் ரூபாய் என்ற கணக்கில் திட்டங்களுக்காகச் செலவு செய்யலாம் என்ற ஒரு முறையை வைத்திருக்கிறோம். கூடிய மட்டில் இந்த குறிக்கோளுக்கு உகந்த திட்டங்களை அரசு மேற்கொள்ளும். பின்தங்கிய பகுதி, உணவு தேவைப்படுகின்ற பாசன வசதியற்ற பகுதி இங்கெல்லாம் ஓரளவு சலுகை அளிப்பது என்றால், ஒரு டன்னுக்கு 3 ஆயிரம் என்பதை 4 ஆயிரம், 5 ஆயிரம் என்கின்ற அளவிற்குக் கொஞ்சம் உயர்த்தலாம். ஆனால் பழைய அரசு இந்தக் கொள்கையை உதட்டளவில் மட்டும் வைத்துக்கொண்டு செயலளவில் சில தவறுகளைச் செய்திருக்கிறது என்பதை ஒரு உதாரணம் காட்டிச் சொல்ல விரும்புகிறேன்.

மதுரை மாவட்டத்தில் மஞ்சளாறுத் திட்டம். மஞ்சளாறு திட்டத்திற்கு திட்டக்குழுவே ஒப்புதல் அளிக்காத நிலையில், ஆனால் எந்தக் கொள்கைக்கும் ஒவ்வாத நிலையில் பழைய அரசு 109 லட்சம் ரூபாய் செலவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றியது. அரசின் கணக்குப்படி ஒரு டன்னுக்கு 3 ஆயிரம் ரூபாய் செலவழிக்கலாம். ஆனால் இந்தத் திட்டத்தில் ஒரு டன்னுக்கு 10,850 ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஒரு டன்னுக்கு

10,850 ரூபாய் வீதம் செலவிட்டு, அந்த மஞ்சளாறு திட்டத்திற்கு அவர்கள் செலவிட்டிருக்கிற தொகை 109 இலட்ச ரூபாய். அதிலே ஏற்கெனவே பாசன வசதி உறுதியளிக்கப்பட்டவை 3,136 ஏக்கர் நிலம். இதனால் புதிதாகப் பாசன வசதி பெறுவது 2 ஆயிரம் ஏக்கர்தான். இந்த 2 ஆயிரம் ஏக்கர் பாசன வசதிக்காக 109 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு, 3 ஆயிரம் என்ற அளவில் மூன்று மடங்குக்கு மேலாகச் செலவழிக்கப்பட்டு இருக்கிறது. காலையில் பேசிய நண்பர்கள் சில திட்டங்கள் தனிப்பட்டவர்களுக்காக, தனிப்பட்ட அரசியல் நோக்கங் களுக்காக நிறைவேற்றப்படுகின்றன என்று தெரிவித்தார்கள். இந்த மஞ்சளாறு திட்டம் அதற்கோர் உதாரணம். இப்படிப்பட்ட திட்டங்களுக்கு இந்த அளவிற்குச் செலவழிக்காமல் இருந்திருப்பார்களேயானால், வருவாய் தரக்கூடிய வேறு பல திட்டங்களை நிறைவேற்றியிருக்க முடியும். இப்படிப்பட்ட திட்டங்களை எடுத்துக்கொள்ள முடியாது, எடுத்துக் கொள்ளக்கூடாது என்று அல்ல, வாய்ப்புக்கூறுகளும் அத்தியாவசியமான நிலைமைகளும் இருக்கின்ற இடங்களில், நம்மிடத்தில் இருக்கின்ற பொருளாதாரத்தை, நிதி நிலைகளை வைத்து இலாபகரமான, அவசியமான திட்டங்களை நிறைவேற்றிவிட்டு, எல்லாம் முடிந்துவிட்ட பிறகு, இனிமேல் வருவாயைப் பற்றிக் கவலை இல்லை என்ற சூழ்நிலை இருக்கும்போதுதான் அப்படிப்பட்ட திட்டங்களை ஆரம்பிக் கலாம். நியாயமான செலவில், நியாயமான பலன்களைப் பெற்ற பிறகு இதுபோன்ற திட்டங்களுக்குச் செல்லலாம். ஆரம்ப காலத்திலே இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுவது நல்லது அல்லவென்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு இந்த மஞ்சளாறு திட்டம் உதாரணமாக விளங்குகிறது.

பாசனத்திற்கு ஆறுகளை மட்டுமல்ல, ஏரி, குளங்களைக் காப்பாற்றுவதையும் அவைகளைப் பாதுகாப்பதையும், அவைகளைச் செம்மைப்படுத்துவதையும், அவைகளைத் தூர்வாருவதையும் முக்கியமாகக் கருதவேண்டுமென்று உறுப்பினர்கள் எடுத்துச்சொன்னார்கள்.

மழைநீர் வீணாகாமல் காக்கப்பட வேண்டுமென்ற முறையில் புதிய அரசு 52 புதிய குளங்களை இந்த ஓராண்டுக் காலத்திலே

எடுப்பதற்குத் திட்டமிட்டிருக்கின்றது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் 2 குளங்கள் ; திருச்சி மாவட்டத்தில் 6 குளங்கள் ; மதுரை மாவட்டத்தில் 7 குளங்கள் ; இராமநாதபுரம் மாவட்டத்தில் 7 குளங்கள் ; கோவை மாவட்டத்தில் 8 குளங்கள் ; தர்மபுரி மாவட்டத்தில் 1 குளம்; தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 1 குளம்; நெல்லை மாவட்டத்தில் 6 குளங்கள் ; சேலம் மாவட்டத்தில் 14 குளங்கள். ஆக, புதியதாகவே 52 குளங்களை உருவாக்கி வருகிறோம். இவற்றில் 4-ன் வேலைகள் முடிவடைந் திருக்கின்றன. 48-ன் வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. இவைகள் எல்லாம் நாமே உருவாக்குகின்ற குளங்கள். ஆங்காங்கு தேங்குகின்ற மழைநீர் வீணாகாமல் இப்படிப்பட்ட புதிய குளங்களை உருவாக்கி, அதன்மூலம் பாசன வசதி பெறுவதற்கான சூழ்நிலையை நாம் உருவாக்கியிருக்கிறோம்.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப்பற்றிக் குறிப் பிட்டார்கள். செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் சென்ற ஆண்டில் உடைப்பு எடுக்கப்பட்ட ஏரிகள் அத்தனையையும் நாம் பழுதுபார்த்து, அவைகளைச் செம்மைப்படுத்தியிருக்கிறோம். செங்கற்பட்டு மாவட்டத்தில் 261 ஏரிகளிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 329 ஏரிகளிலும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் 99 ஏரிகளிலும் உடைப்பு எடுத்தன. அப்போது அடித்த புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட இவையனைத்தும் ஓராண்டுக் காலத்திலே பழுதுபார்க்கப்பட்டு, உடைப்பைச் சீர்படுத்தும் வேலைகள் முடிவுற்றன. ஓராண்டுக் காலத்திலே என்றுகூடச் சொல்லமுடியாது. ஐந்தாறு மாதக் காலத்திற்குள் மராமத்து வேலைகள் முடிவுற்றன.

செங்கற்பட்டு மாவட்டத்தில்-

| | |
|---|---|
| முழுதும் பாதிக்கப்பட்ட ஏரிகள் .. .. .. | 443 |
| வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, வேலைகள் நடந்து கொண்டிருப்பவை. | 382 |
| வேலை முடிந்துவிட்ட ஏரிகள் .. .. .. | 130 |
| இன்னும் வேலை தொடங்கவேண்டிய ஏரிகள் .. | 61 |

அதேபோல் தென் ஆர்க்காடு மாவட்டத்தில்-

| | |
|---|---|
| முழுதும் பாதிக்கப்பட்ட ஏரிகள் .. .. .. | 548 |

| | |
|---|---|
| வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வேலைகள் நடந்து கொண்டிருப்பவை .. .. | 356 |
| வேலை முடிந்துவிட்ட ஏரிகள் .. .. .. | 101 |
| இன்னும் வேலை தொடங்கவேண்டிய ஏரிகள் .. | 192 |

அதேபோல் வட ஆர்க்காடு மாவட்டத்தில்-

| | |
|---|---|
| முழுதும் பாதிக்கப்பட்ட ஏரிகள் .. .. .. | 767 |
| வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வேலைகள் நடந்துகொண்டிருப்பவை .. .. | 671 |
| வேலை முடிந்துவிட்ட ஏரிகள் .. .. .. | 211 |
| இன்னும் வேலை தொடங்கவேண்டிய ஏரிகள் .. | 95 |

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்பட்ட ஏரி உடைப்பு உணவு உற்பத்தி இலாகா மூலமாக அநேகமாகச் செம்மைப் படுத்தப்பட்டு, முடிவடையும் தறுவாயில் இருக்கிறது. பாதிக்கப்பட்ட குளங்களுக்கு உணவு உற்பத்தி இலாகா மூலமாக மதிப்பீடுகள் செய்யப்பட்டு, நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஏரிகள், குளங்கள், ஆறுகள் இப்படி பல பகுதிகளிலே வருகின்றவை மைனர் இரிகேஷன், எஸ்.எம்.ஐ.பி., ஃபுட் புரொடக்ஷன் என்ற பல கூறுகளாக இருக்கின்ற காரணத்தால் வேலைகள் விரைவிலே முடியவில்லை என்ற கருத்தினைக் கொண்டும், ஆங்காங்கு இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் யாரை அணுகினால் இந்த வேலைபற்றிக் கேட்கலாம், விவரம்பற்றிப் புரிந்துகொள்ளலாம் என்ற சிக்கலிலே அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் ஆராய்ந்து ஒரு சீரிணைப்புத் திட்டத்தை இந்த அரசு மேற்கொண்டது.

இம்மானியத்தைப்பற்றி பேசிய 32 உறுப்பினர்களில் ஐந்தாறு பேர்தான் இந்தச் சீரிணைப்புத் திட்டத்தைப்பற்றிப் பேசியதாக எனக்கு நினைவிற்கு வருகிறது. திரு. ஏ. ஆர் சுப்பையா முதலியார் அவர்கள் இதை வரவேற்றாலும், ''இது பயன்தரக்கூடியதாக இருக்குமா'' என்ற ஐயப்பாட்டினை

எழுப்பினார்கள். ''இருந்தாலும் ஓர் ஆண்டுக் காலம் பார்ப்போம்'' என்று சமாதானம் சொன்னார்கள். இந்தச் சீரிணைப்பை, விவசாயப் பெருங்குடி மக்கள் யாரை அணுகி, தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது என்பதை முதல் கட்டமாக வைத்துத்தான் இந்த அரசு மேற்கொண்டுள்ளது. இது 1-4-1968-ம் தேதி முதல் அமலுக்கு வர இருக்கிறது.

இந்தச் சீரிணைப்பினுடைய திட்டத்தில் அடிப்படைகள் நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல், எஸ்.எம். ஐ.பி., ஃபுட் புரொடக்ஷன், நீர்ப்பாசன மராமத்து வேலைகள் - இப்படிப்பட்ட பல பிரிவுகளை ஓர் அமைப்பாக இணைப்பதுதான். இந்த அமைப்பினால் பாசனப் பகுதிகளினுடைய அடிப்படையில் கோளாறுகள் வரும், பல தகராறுகள் வரும், பல முரண்பாடுகள் வரும் என்ற கருத்தினை திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். பாசனப் பகுதிகளின் அடிப்படையில் இயங்கும் அமைப்புக்களின் எல்லைகளை மாற்ற இயலாது என்பதை இந்த அரசு நன்றாக உணர்ந்து, பொறியாளர்களை யெல்லாம் வைத்துக்கொண்டு, அவர்களையும் கலந்து ஆலோசித்தது மாத்திரமல்ல, மாவட்ட ரீதியில் இருக்கின்ற பல்வேறு பொறியாளர்களிடத்தில் கலந்துபேசி, விவசாய மக்களிடத்திலும் பெரும்பாலும் பேசி, ஆங்காங்கு நடைபெற்ற நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத் துறை மாநாடுகளில் தெரிவிக்கப் பட்ட கருத்துக்களையெல்லாம் அடிப்படையாக ஆராய்ந்துதான் இந்தச் சீரமைப்பு செய்யப்பட்டிருக்கிறது. பாசனப் பகுதிகளின் அடிப்படையில் இயங்கும் அமைப்புக்களின் எல்லைகளை மாற்ற இயலாது. நீர் வாய்க்கால்களைக் கட்டுப்படுத்தி நிறைவேற்ற முடியாது என்பதை திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் உணர்ந்ததைப்போலவே, நாங்களும் உணர்ந்து, ஒருவர் பொறுப்பிலே பாசன முறையும்- நீர் வழங்குதலும்-கட்டுப்பாடும் செவ்வனே நிறைவேற்ற முடியும் என்று கருதுகிறோம். முரண்பாடான நோக்குகளும் தேவைகளும் எழ வாய்ப்பிராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது காவிரிப் பாசனம் என்றால், அதற்கு தஞ்சை மாவட்டத்திலே ஒரு எஸ். இ. இருக்கிறார். காவிரி செல்லும் பகுதி வரையிலும் முரண்படாத சூழ்நிலை உருவாக திருச்சி மாவட்டத்திற்கு என்று

ஒரு எஸ். இ. இருப்பார். இதில் திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் கூறிய முரண்பாடு எழாது என்ற நம்பிக்கை இருக்கிறது. நல்ல முறையில் செயலாற்ற எல்லையை கூடியமட்டும் ஒரு வட்டத்திற்குள் அமைத்திருக்கிறோம். மற்றப் பகுதிகளை இயங்கும் திட்டத்தை பொறுத்தல்லாமல், செயலாற்று எல்லையை கூடிய மட்டும் ஒரு வட்டத்திற்குள் அமைத்திருக்கிறோம். பாசனம்-கட்டம் ஆகிய பணிகளை ஒரு நிர்வாகப் பொறியாளரிடத்தில் (இ.இ) விட்டுவிடுகிறார்கள். இப்பணிகளை நேர்முகமாக மேற்பார்வையிடவும், ஒருங்கிணைக்கவும் கூடியமட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும்-வேலைப் பளுவைப் பொறுத்து- ஓரிரு மாவட்டம் இணைந்தும்-ஒவ்வொரு பெரு வட்டத்திலும் மேற்பார்வைப் பொறியாளர் (எஸ்.இ.) இன் கீழ் இயங்கும்.

இப்போதுள்ள ரெகுலர் பெருவட்டங்கள் 5. சிறப்புப் பெருவட்டங்கள் 10. புது அமைப்பில் ரெகுலரி பெருவட்டங்கள் ஐந்தில் இருந்து பத்தாகிறது. சிறப்புப் பெருவட்டங்கள் பத்து என்பதில் இருந்து 6 ஆகக் குறைகிறது. பத்து ரெகுலர் பெருவட்டங்கள் அமைகிற காரணத்தினால் பொறுப்பு மிகுந்த பணிகள் மிக செவ்வையாக நடைபெறும் குறுகியகால அளவில் நடைபெறும், திறமையாக நடைபெறும் என்று கருதி இந்த புது அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் 80 கோட்டங்களும்-டிவிஷன்களும்- 347 துணைக்கோட்டங்களும்- சப் டிவிஷன்களும்- தொடர்ந்து செயல்படும். ஆகவே இந்தச் சீரிணைப்பினால் வேலையிழப்பு ஏற்படுமோ என்ற அச்சத்திற்கு யாரும் ஆளாகத் தேவையில்லை. ரெகுலர் டிவிஷன்களும், சர்க்கிள்களும் கூடுதலாகியிருக்கின்றன. சிறப்புக் கோட்டங்களின் எண்ணிக்கை குறைகின்றன. இதன்மூலம் யாரை அனுகுவது, யாரிடத்தில் எந்த விஷயத்திற்குச் சென்று பேசுவது என்பதை விளக்குகிற அளவில் ஒரு புத்தகம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது. புத்தகம் பெரும் அளவில் இருக்கிறது என்றாலும் ஆங்காங்கு இருக்கிற வட்டங்களைப் பொறுத்து பிரித்து அச்சிட்டுக் கொடுக்கின்ற ஏற்பாட்டினையும் நாங்கள் கவனிப்பதாக இருக்கிறோம்.

அதற்கடுத்து நெடுஞ்சாலைத்துறையைப் பொறுத்து பல மெம்பர்கள் பேசியிருக்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறையில் ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் தங்கள் தொகுதிக்கும் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய வேண்டுகோள் அனைத்தையும் நிறைவேற்றுகிற கட்டத்தில் இந்த அரசின் நிதி நிலைமை இல்லை. தஞ்சை மாவட்டத்தில் மாத்திரம் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், போக்கு வரத்துக்கான சாலைகளை சீரமைக்கவும், அதன்மூலம் வேளாண்மைத் துறையை வளப்படுத்த முடியும் என்ற திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டப் பொறியாளர் ஒருவர் ஒரு திட்டத்தைத் தயாரித்து அரசினருக்கு அளித்தார்கள். இந்தத் திட்டத்தின் படி 20 கோடி ரூபாய் செலவாகும். ஆனால் நான்காவது திட்டத்தில் மத்திய அரசு மாநில அரசுக்கு இந்தத் துறையில் மாநிலம் முழுவதற்கும் ஆக ஒதுக்கியுள்ள பணம் 18 கோடியாகும். தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் சாலைப் போக்குவரத்து சீரமைப்புத் திட்டத்திற்குக் கேட்டிருப்பது 20 கோடி, இந்த இரண்டையும் பொருத்திப் பார்த்து, எல்லா வேண்டுகோளும் நிறைவேற்றப்பட வேண்டியவையே என்றாலும், அவற்றை நிறைவேற்ற இயலாது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.

சாலைகள், பாலங்கள் இவைகளைப் பொறுத்த அளவில் 1967-68ல் இந்த அரசு மேற்கொண்ட திட்டங்களின் விவரங்களை இந்த அவையின் முன் வைக்க விரும்புகிறேன்.

சென்னை நகரில் எலியட்ஸ் பீச்சு சாலையிலிருந்து பக்கிங்காம் கால்வாய் ஓரமாக பாலிடெக்னிக்கை இணைக்கும் சாலை போட 3 இலட்சம் ரூபாயில் ஒரு திட்டம். தென் ஆற்காடு மாவட்டத்தில் சூணாம்பேட்டை சாலையில் மைல் 1/5 இல் ஒரு பாலம் கட்ட 2 லட்சத்து 12 ஆயிரம் ரூபாயில் ஒரு திட்டம். அதே சூணாம்பேட்டை சாலையில் மைல் 1/7 இல் ஒரு பாலம் கட்ட 3 இலட்சம் ரூபாயில் ஒரு திட்டம்.

கோவை மாவட்டத்தில் அந்தியூர்-அம்மாபேட்டை சாலையில் மைல் 5/6-7இல் ஒரு பாலம் கட்ட 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயிலும், கோவை மாவட்டத்திலேயே திருப்பூர்-உடுமலைபேட்டை சாலையில் மைல் 38/4 இல் நொய்யல்

ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்துவதற்காக 5 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாயிலும் இரு திட்டங்கள்.

தஞ்சை மாவட்டத்தில் ஆலங்குடி-தலைஞாயிறு சாலையில் மைல் 23/7-ல் வேதாரண்யம் கால்வாயின் குறுக்கே பாலம் கட்ட 3 இலட்சம் ரூபாயில் ஒரு திட்டமும், தஞ்சை மாவட்டத்தில் மாவூர் சத்தியகுடி சாலையில் கல் பரப்பி தார் போட 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயில் ஒரு திட்டமும்,அந்த மாவட்டத்திலேயே வேளாங்கண்ணி-வேதாரண்யம் சாலையில் கல் பரப்புவதற்காக 3 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாயில் ஒரு திட்டமும் ஆக 3 திட்டங்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர்-சிக்கல் சாலையில் கல் பரப்புவதற்காக 3 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயில் ஒரு திட்டம்.

சென்னை நகரில் கொக்கரான் பேசின் பாலச் சாலையை சீர்படுத்துவதற்காக 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயில் ஒரு திட்டம்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் எண்ணூர் கடற்கரைச் சாலையில் மைல் 3/1 இல் இருந்து திருவொற்றியூர்-பொன்னேரி சாலையை 2/2-3இல் இணைக்கும் மணலிச் சாலைக்கு 32 இலட்சம் ரூபாயில் ஒரு திட்டம்.

தஞ்சை மாவட்டத்தில் பாப்பநாடு-சோளங்கரை சாலை மைல் 1/2 இல் பாலம் அமைக்க ரூ. 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயில் ஒரு திட்டம்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் செங்கல்பட்டு - சதுரங்கப் பட்டணம் சாலையில் பலக்குறைவான பாலங்களைக் கெட்டிப்படுத்த 13 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாயில் ஒரு திட்டம்.

திருச்சி மாவட்டத்தில் திருச்சியில் காவேரி தென்கரை -வடகரை சாலையில் கப்பி பரப்ப 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயில் ஒரு திட்டம்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் சென்னை-திருச்சி தேசீய நெடுஞ்சாலையில் 17/4 இல் தாம்பரம் அருகே மேம்பாலம் கட்ட 13 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாயில் ஒரு திட்டம்.

திருச்சி-தஞ்சை மாவட்டங்களில் பெரம்பலூர்- மானாமதுரை சாலையில் திருமானூர் அருகே ஒரு மூழ்குபாலம் கட்டுவதற்காக ரூ. 44 இலட்சத்தில் ஒரு திட்டமும் ஆக 134 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் மொத்தச் செலவில் இந்த வேலைத்திட்டங்கள் எல்லாம் 1967-68ல் மேற்கொள்ளப்பட்டன.

அடுத்து 1967-68ல் முடிவடைந்த பாலங்கள், சாலை வேலைகளின் பட்டியலையும் நான் இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் திருக்கலிகுன்றம்-திருப்போரூர் சாலையில் மைல் 1/6ல் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயில் ஒரு தாம்போதி கட்டப்பட்டிருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் விளாத்திக்குளம்-வேம்பார் சாலை மைல் 0/0 - 13/7ல் கல் பரப்பி தரம் உயர்த்தும் வேலை 5 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாயில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதே மாவட்டத்தில் தருவைக்குளம்-சூரங்குடி சாலையில் மைல் 16/5 இல் ஒரு பாலம் 20 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாயில் கட்டப்பட்டிருக்கிறது.

தென்னாற்காடு மாவட்டத்தில் கள்ளகுறிச்சி-கச்சிராபாளையம் சாலையை சீர் செய்யும் திட்டம் 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயில் நிறைவேறியிருக்கிறது.

கோவை மாவட்டத்தில் மன்னார்காட்-சின்னதடாகம் சாலையில் மைல் 16/5 இல் 1 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாயில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அதற்கடுத்து அந்தச் சாலையிலேயே மைல் 17/5இல் 1 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அதற்கடுத்து அந்தச் சாலையிலேயே மைல் 18/5 இல் 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் திருமுக்கூடல் சாலையில் பாலாற்றின் குறுக்கே ரூ. 7 இலட்சம் செலவில் ஒரு தாம்போதி கட்டப்பட்டிருக்கிறது.

திருச்சி மாவட்டத்தில் திருவரம்பூர்-சூரையூர் சாலையில் உய்ய கொண்டான் குறுக்கே மைல் 2/2 இல் 2 இலட்சத்து 20 ஆயிரம்

ரூபாயில் அங்கிருந்த பாலத்தை புதுப்பிக்கும் வேலை நடந்திருக்கிறது.

உதகை மாவட்டத்தில் கூனூர்- கோத்தகிரி சாலையில் மைல் 0/1இல் 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது.

சென்னை நகரில் சென்ட்ரல் ரயில் நிலையத்தின் அருகில் சுரங்கப் பாதை 4 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் முடிந்திருக்கிறது. இது முன்பே துவங்கப்பட்டது என்றாலும் இந்த ஆண்டிலும் நம் அரசு வந்து இதற்காகப் பணம் ஒதுக்கி இதை முடித்திருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் நாச்சியார் கோவில்- திருநாகேஸ்வரம் சாலையில் அரசலாற்றின் குறுக்கே 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பட்டம்புதூர்-மாவிலைபட்டி சாலையில் 0/8 மைலில் 2 இலட்சத்து 25 ஆயிரம் செலவில் ஒரு தாம்போதி கட்டியிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திற்கு ஒரு சுற்று சாலையை 6 இலட்சத்து 3 ஆயிரம் ரூபாய் செலவில் அமைத்திருக்கிறது. வேளாங்கண்ணி-வேதாரண்யம் சாலையில் 19/5-6இல் எட்டு இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு அடப்பார் பாலத்தை அமைத்திருக்கிறது. நீடூர் நாரணமங்கலம் சாலையில் 0/5 மைலில் 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் பலவாறு பாலத்தை அமைத்திருக்கிறது. தென்னவக்குடி-வைத்தீஸ்வரன் கோவில் சாலையில் 0/6 இல் கூப்பிடுவனார் பாலம் 3 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆதீச்சபுரம்-கூத்தாநல்லூர் சாலையில் 1/6 அரிச்சந்திர நதியில் 1 லட்சம் ரூபாயில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது.

திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டை -ஏம்பல் சாலையில் 3/8 மைலில் 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு தாம்போதி கட்டப்பட்டிருக்கிறது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் மதராஸ்-திருச்சி தண்டுக்கல் சாலையில் 33/5 மைலில் 3 இலட்சத்து 42 ஆயிரம் செலவில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் காட்டு மாவடி மிமிசல் சாலையில் 32/7, 45/1இல் 3 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் செலவில் தாம்போதிகள் கட்டப்பட்டிருக்கின்றன.

தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூர்-விருத்தாசலம்-சேலம் சாலையில் அனேக சிறு பாலங்கள் அகலப்படுத்துதல் வேலையும், கெட்டிப் படுத்துதல் வேலையும் நடைபெற்றி ருக்கின்றன. ஆக இப்படி 93 இலட்சம் ரூபாயில் இந்தக் காரியங்கள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன.

இவை அன்னியில் கட்டடங்கள் பலவற்றை இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு கட்டி முடித்திருக்கிறது. அவற்றின் பட்டியலை எல்லாம் நேரம் இல்லாத காரணத்தினால் படிக்க இயலவில்லை. இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு ஒன்றுமே செய்யவில்லை என்பதாக கனம் உறுப்பினர் திரு. ஜார்ஜ் அவர்கள் கூறிய குற்றச்சாட்டுக்கு இவை நல்ல பதிலாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

நம்முடைய உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்களும் ; மற்றவர்களும் இந்தத் துறையில் இருக்கிற தொழிலாளர்களைப் பற்றிச் சொன்னார்கள். வேலை இழப்பு அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். வொர்க் சார்ஜ்ட் ஊழியர்களைப் பற்றியும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இன்றைக்கு வொர்க் சார்ஜ்ட் ஊழியர்களை எடுத்துக்கொண்டால் நம்முடைய நெடுஞ் சாலைத்துறையில் 15,701 பேர்கள் இருக்கிறார்கள். பரம்பிக்குளம் திட்டம் பகுதியில் 1,052 பேர்கள் இருக்கிறார்கள். பொதுப்பணித்துறைப் பிரிவில் 8,322 பேர்கள் இருக்கிறார்கள். ஆக மொத்தம் 25,075 பேர்கள் இருக்கிறார்கள். இவர்களில் கிட்டத்தட்ட நாலாயிரம் பேர்கள் மாநில ஊழியர்களாக மாற்றப் பட்டிருக்கிறார்கள். இவர்கள் மாநில ஊழியர்கள் என்ற அளவில் மாநில ஊழியர்களுக்குள்ள பென்ஷன் தவிர மற்ற சலுகைகள் எல்லாம் பெற்று வருகிறார்கள். இவர்கள் எங்களுக்கும் பென்ஷன் வேண்டும் என்று கேட்கிறார்கள்.

இவர்களுக்கு பென்ஷனுக்குப் பதில் க்ராஜூடி கொடுக்கப் படுகிறது. மாநில ஊழியர்களாக அல்லாதவர்கள் மாநில ஊழியர்களாக மாற்றப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக் கிறார்கள். இவர்களுடைய மொத்த எண்ணிக்கையை மனதில் வைத்து இந்தத் திட்டத்தை ஆராய்ந்தால் கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும் என்பதைக் கனம் உறுப்பினர்கள் கணக்கிட்டுக் கொள்ளலாம். ஆகவே, அதை அறவே கைவிட்டுவிட்டதாக இல்லை. அதைப்பற்றித் தலைமைப் பொறியாளரை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி இந்த அரசு கேட்டிருக்கிறது. ஆய்வினைத் தலைமைப் பொறியாளர் நடத்திக் கொண்டி ருக்கிறார்கள்.

வேலையிழப்புப் பற்றி பேசப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் பேசும்பொழுது நூற்றுக்கணக்கானவர்கள் வேலை இழந்து விட்டார்கள் என்று சொன்னார்கள். இருக்கின்ற போஸ்ட்கள் எவ்வளவு என்பதை முதலிலே பார்க்கவேண்டும். ஜே.ஈ.க்களை எடுத்துக்கொண்டால் அனுமதிக்கப்பட்ட மொத்த வேலைகள் நிரந்தரமான ஜே.ஈ.க்கள் 353 ; தற்காலிகம் 949 ; நிரந்தரமும் தற்காலிகமும் சேர்ந்து மொத்தம் 1,302 போஸ்ட்கள் இருக்கின்றன. சூப்பர்வைசர் போஸ்ட்களைப் பொறுத்தவரையில் நிரந்தரமான சூப்பர்வைசர்கள் 117 ; தற்காலிகம் 317 ; ஆக மொத்தம் 434 போஸ்ட்கள். இப்பொழுதுள்ள நிலை, சர்வீஸ் கமிஷன் தேர்வு செய்த அலுவலர்கள் 1967 உள்பட 836 ஜே.ஈ.க்கள் ; அவசர நிமித்தம் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஜே.ஈ.க்கள் 126 ; ஆக மொத்தம் 962 போஸ்ட்கள்தான். ஆனால் 1,302 பேர்கள் ஜே.ஈ.க்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏன் மிச்சம் 300 முதல் 400 பேர்கள் வரை நியமிக்கப்படவில்லை என்றால் இங்கே சூப்பர் வைசர்களுடைய நிலையைப் பற்றியும் ஆராயவேண்டும். சூப்பர்வைசர்கள் 117 பேர்கள் நியமிக்கப்படவேண்டிய இடத்திற்கு 524 பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ; அவசர நிமித்தப் பகுதிக்கு 317 பேர்கள் நியமிக்கப்பட வேண்டியதற்கு 338 பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 962 ஜே.ஈ.க்களும், 862 சூப்பர்வைசர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 1,302 ஜே.ஈ.க்களும் நியமிக்கப்படவேண்டியதற்கு 962 ஜே.ஈ.க்கள்தான் இருக்கிறார்கள் ; 434 சூப்பர்வைசர்கள் நியமிக்கப்பட

வேண்டியதற்கு 862 சூப்பர்வைசர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஜே.ஈ.க்களைப் பொறுத்தவரையில் 962-ஐ 1,302 ஆக ஆக்கவேண்டுமென்றால் கிட்டத்தட்ட 400 சூப்பர்வைசர்கள் வேலையிழப்பார்கள். ஆகவே, புதிதாக ஜே.ஈ.-க்களை வேலைக்கு எடுக்காமல், 400 சூப்பர்வைசர்களைப் பரிதாபகரமான நிலைக்கு வேலையிழக்கக் கூடிய சூழ்நிலையாக உண்டாக்காமல் பாதுகாப்புத் தரப்படுகிறது. 1966ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு ஆறாவது மாதம் முடிய 123 சூப்பர்வைசர்கள் வேலையிழந்திருக்கிறார்கள். இதைத்தான் ஒரு நாள் பட்ஜெட்டிலே பேசும்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டு ஆயிரக்கணக்கானவர்கள் வேலையிழந்து விட்டார்கள் என்று சொன்னார்கள். 123 பேர்கள்தான் வேலையிழந்து இருக்கிறார்கள். இந்த அரசு வந்ததற்குப் பிறகு அவர்கள் எல்லோரும் வேலையிழக்கவில்லை. 4-7-1966-ல் காங்கிரஸ் அரசு இருந்தபோது 46 பேர்கள் வேலையிழந்தார்கள்; 26-9-1966-ல் காங்கிரசு அரசு இருந்த பொழுதே 10 பேர்கள் வேலையிழந்திருக்கிறார்கள். 56 பேர்கள் அந்த அரசு இருந்த பொழுதே வேலையிழந்திருக்கிறார்கள். இந்த அரசு வந்த பிறகு 65 பேர்கள்தான் வேலையிழந்திருக்கிறார்கள். இந்த அரசு வந்த பிறகுதான் 123 பேர்களும் வேலையிழந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவருக்குச் சூடான பதிலைக் கொடுத்துவிட்டோம் என்பதற்காக நான் இந்த விளக்கத்தைத் தரவில்லை. பொதுப்பணித் துறையிலே ஆயிரக்கணக்கானவர்கள் வேலையிழந்துவிட்டார்கள். நெடுஞ்சாலைத் துறையிலே ஆயிரக்கணக்கானவர்கள் வேலையிழந்துவிட்டார்கள் என்று கருதுகிறார்கள், அது உண்மைக்குப் புறம்பானது என்பதை விளக்கத்தான் இதை நான் கூறுகிறேன். நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்த வரையில் இந்த அரசு வந்த பிறகு வேலையிழந்தவர்கள் 12 பேர்கள்தான். இந்த 12 பேர்களுக்கும் இப்பொழுது வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. 123 பேர்கள் அன்னியில் இன்னும் 36 பேர்கள் வேலையிழக்கக்கூடிய சங்கடமான நிலைமை இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்டிப்பாகக் கூறியிருக்கிறார்கள். அந்த 36 பேர்களும் வேலையிழக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று.

இதற்கு வேண்டிய வகையிலே இன்றைய தினம் நடந்த மந்திரி சபைக் கூட்டத்திலே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. காலையிலே பேசியவர்களும் திரு. சுந்தரபாரதி அவர்களும் இதற்குத்தான் முழு உருவம் கொடுத்துப் பேச்சைப் பேசினார்கள். பொதுப்பணித் துறையில் பொறியியல் வல்லுநர்களின் வயது நிர்ணயம் செய்யப்படுவதைப் பற்றித்தான் பேசப்பட்டது. ஓய்வு பெறும் வயது 58 என்று இருக்குமானால் புதிதாக பதவி உயர்வுகள் பெற முடியவில்லை ; அத்துடன் வேலைவாய்ப்புக்கள் உருவாகாமல் இருப்பதன் காரணமாக வேலைவாய்ப்புக்கள் இல்லாமல் படித்தவர்கள் வீட்டிலே இருக்கிறார்கள் அல்லது திரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இடம் இல்லாமல் இருக்கிறது. இதைப் போக்குவதற்கு, இதை நன்னிலைப் படுத்துவதற்கு வயது நிலையிலே மாறுதல் செய்யவேண்டு மென்று கேட்டார்கள். அதைப்பற்றித்தான் நான் என்னுடைய முன்னுரையிலே ஜாடையாகக் குறிப்பிட்டேன். ஆராய்வோம் ஆராய்வோம் என்று சொல்லி நாள் கடத்தக்கூடாது என்று சொல்லப்பட்டது. நாள் கணக்கு என்ற அளவிலேகூட இல்லாமல் நாழிகைக்குள்ளேயே முடிவு வருகிறது. இன்று மாலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலே பொதுப்பணித்துறையிலே பொறியாளர்களின் பதவிக்காலம் 58 வயதுவரை என்று இருந்தது ரத்து செய்யப்பட்டுவிட்டது. அவர்களுடைய பதவிக்காலம் 55 வயது வரைதான் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதன்மூலம் முடங்கிக்கிடந்த பதவி உயர்வுகள் இப்பொழுது ஏற்படவும், அடித்தளத்திலே உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய நிலைமையும் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

துறைமுகங்களைப் பொறுத்தவரையில் தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழ்கடல் துறைமுகமாக்க ஒப்புக்கொண்டதற்காக மத்திய அரசுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்றியை நிதிநிலை அறிக்கையைப்பற்றிப் பேசும்பொழுது தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அதைப்பற்றி மீண்டும் மீண்டும் பேசவில்லை. அதற்கான அதிகமாக பணத்தைப் ஒதுக்க வேண்டுமென்று மன்ற உறுப்பினர்கள் சார்பிலே வேண்டுகோள்

விடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன என்ன கருத்துத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்களோ, அவர்கள் தெரிவித்த பல்வேறு கருத்துக்கள், தேவைகள், விளக்கங்கள், யோசனைகள் அவற்றையெல்லாம் அதிகாரிகள் குறிப்பெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அக்குறிப்புக்களை அவர்கள் மீண்டும் ஒருமுறை படித்து ஆராய்ச்சி செய்து அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அவற்றை நிறைவேற்ற இயலுமா இயலாதா என்ற குறிப்புக்களை பொறியாளர்கள் அவர்களும் செயலாளர் அவர்களும் தருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த அளவிலே செயலாளர் அவர்களுக்கும் பொறியாளர்களுக்கும் நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு வெட்டுத் தீர்மானங் களையும் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவரின் சிரிப்பு எனக்குப் புரிகிறது. வாணிப் புத்தூர் பற்றிச் சொல்லாமலே முடிக்கிறாரே என்று கேட்கிறார். இந்தப் பிரச்சனைபற்றி பத்துக் கேள்விகளை எழுப்பி தலைமைப் பொறியாளரின் அறிக்கையைக் கேட்டிருக்கிறேன். சுமூகமான முடிவு வரும் என்று எதிர்பார்க்கிறேன். யாருக்கு என்று அவர் கேட்பார்? சுமூகமான முடிவு வரும் என்று சொல்லி அந்த அளவோடு பேச்சை முடிக்கிறேன்.

## மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சேர்க்கை

உரை : 26 நாள் : 21.03.1969

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** தலைவர் அவர்களே, நேரம் அதிகமாகிவிட்டது. என்றாலும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு எழுப்பிய ஒரு பிரச்சினைக்கு விளக்கம் அளிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கிற நேரத்தில் அவர்கள் வாங்கிய எண்களைப் பத்திரிகையில் பகிரங்கமாக வெளியிட வேண்டும், அதுபற்றி புகார்கள் வருகின்றன, தாம் அதை நம்பவில்லை என்றாலும் புகார்கள் வருகின்ற நேரத்தில் பதிலளிக்க முடியாது இருக்கிறது, ஆகவே அவர்கள் வாங்குகிற எண்களைப் பத்திரிகையில்வெளியிட்டு புகார்களுக்கு இடம் இல்லாத வகையில் செய்ய வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார்கள். உள்ளபடியே ஒவ்வொரு காரியத்திலும் இப்படிப் புகார்கள் வருகின்றன என்பதற்காக எல்லா விவரங்களையும் மக்கள் மன்றத்தில் வைக்க வேண்டும் என்று சொல்கிற வாதம் சரியான வாதமாகுமா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

உதாரணத்திற்கு, வேடிக்கையாகச் சொல்கிறேன். தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத் திருமன் முதுகில் திடீரென்று ஒரு கட்டி வந்திருக்கிறது என்று ஒருவர் சொன்னால் இல்லை இல்லை, அது தவறு, என்பதை எடுத்துக்காட்டுவதற்காக நாளைக்குச் சட்டமன்றத்திற்கு வரும் போது சட்டையைக் கழற்றிவிட்டு வரமுடியுமா?

யார் வேண்டுமானாலும் பொதுக்கூட்டத்தில் சொல்லி விடலாம். முதல் அமைச்சர் கருணாநிதியின் கால் வீங்கியிருக் கிறது என்பதாக, அதற்காக நானும் ஒரு பொதுக்கூட்டத்தைக்

கூட்டி, என் கால் வீங்கியிருக்கிறது என்று சொன்னது தவறு, இதோ பாருங்கள் என் காலை என்பதாக கூட்டத்தினருக்குக் காலைத் தூக்கிக் காண்பிக்க முடியுமா? அப்படிக் காட்டினாலும் உடனே அவர்கள் மறுநாளே கூட்டம் போட்டு 'பார்த்தீரா' முதல் அமைச்சர் செய்த தந்திரத்தை, அவர் தூக்கிக் காட்டிய கால் எது-வலது கால் அல்லவா? வீக்கம் இருப்பது இடது கால் தானே, அதைக் காட்டினாரா?' என்று சொல்லக்கூடும். அதற்காக மறுநாளே நானும் ஒரு பொதுக்கூட்டத்தைக் கூட்டி, ஒரு ஸ்டூலைப்போட்டு 'இதோ பாருங்கள் எனது இடது காலை, இதிலும் வீக்கம் இல்லை' என்று சொல்ல வேண்டும் என்றால் இது சரிதானா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இப்படித்தான் அரசாங்கம் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் புகார்கள் வருகின்றன என்பதற்காக மக்கள் மன்றத்திலே எல்லாவற்றையும் எடுத்துவைப்பது என்பது சரியாகாது.

குறிப்பாக, மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கு விண்ணப்பம் போட்ட மாணவர்கள் பெறுகிற மதிப்பு எண்களைப் பகிரங்கமாக வெளியிடுவதற்கு மாணவர்கள் தேர்வுக் குழுவினர் சம்மதிக்கவில்லை. அரசாங்கம் எல்லாப் பொறுப்புகளையும் அந்தக் குழுவினிடத்திலேயே ஒப்படைத்திருக்கிறது. யார், யார் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற லிஸ்டை அவர்கள் அரசாங்கத்தினிடம் கொடுக்க அந்தப் பெயர்களைத் தான் அரசாங்கம் வெளியிடுகிறதே தவிர, யார் யார் விண்ணப்பித்துக் கொண்டார்கள், யார் யார் எவ்வளவு மதிப்பு எண்கள் பெற்றார்கள். யார் யார் மறுக்கப்பட்டார்கள் என்கிற பட்டியல் அரசாங்கத்திற்கு வருவதில்லை.

கடந்த காலங்களில் காங்கிரஸ் கட்சி அரசாங்கம் இருந்த நேரத்தில்கூட மாணவர்கள் பெறுகிற மதிப்பெண் பட்டியலை வைப்பதில்லை. அதை ஒட்டித்தான் 1967-ல் நாமும் மார்க் லிஸ்டைப் பாதுகாத்து வைக்க முடியாமல் போய்விட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அதற்குப் பிறகுதான் மாணவர்களுடைய மார்க் லிஸ்டு ஒவ்வொரு

ஆண்டும்- அரசாங்கத்தினிடம்கூட இல்லை, ஸ்டேட் பாங்கில் பத்திரமாக டெபாசிட் பண்ணி வைக்கப்படுகிறது. யார் தனக்கு அநீதி வழங்கப்பட்டுவிட்டதாகக் கருதுகிறாரோ அவர் நீதிமன்றத்திற்குச் செல்கிற நேரத்தில், ஸ்டேட் பாங்கில் இருந்து நேரே நீதிமன்றத்திற்கு சாட்சிக்கு வர அந்த மார்க் லிஸ்டு தயாராய் இருக்கிறது. ஆக, இப்போது மார்க் லிஸ்டு பத்திரமாகக் காப்பாற்றப்படுகிற அளவில் இருக்கிறது என்பதை வெளிப்படையாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு.பி.ஜி.கருத்திருமன்:** முதல் அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது கருத்திருமன் முதுகிலே கட்டி என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு.ஏ.கோவிந்தசாமி:** அதற்காகச் சட்டையைக் கழற்ற வேண்டாம். (சிரிப்பு)

**திரு.பி.ஜி. கருத்திருமன்:** நீங்கள்தான் உங்கள் சட்டையைக் கழற்றி வைக்கிறீர்கள். மருத்துவக் கல்லூரி அட்மிஷன் பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். அதை யாரும் மறுக்க முடியாது. எவ்வளவுதூரம் உண்மை என்பதுதான் தெரிய வேண்டும். இன்னும் தனிப்பட்ட முறையில் முதல் அமைச்சர் அவர்களிடமும் அந்தப் புகார்கள் பற்றிச் சொல்லியிருக்கிறேன். இதற்கு என்றால் ஐயாயிரம், அதற்கு என்றால் பத்தாயிரம் என்பதாக வாங்கப்படுவது பொதுக்கூட்டத்தில் சொல்லப்பட்டு பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கிறது. என்ஜினியரிங் கல்லூரியைப் பற்றி இப்படிப் புகார் வருகின்றதா? கிடையாது. அங்கே அதிகமான போட்டி கிடையாது. உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களே வந்து என்னிடம் சொல்கிறார்கள். 3 டி வாங்கியவனுக்குக் கிடைக்கவில்லை, 2 டி, ஒரு டி, ஒரு ஏ வாங்கியவனுக்கு எல்லாம் 'சீட்' கிடைத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். என்னிடம் சொல்பவர்களிடம்கூடச் சொல்வேன், நான் நம்புவதற்கு இல்லை, நேரிடையாக நிரூபிக்க வேண்டும், என்று சொல்வேன். எதனால் இப்படிப்பட்ட நிலை வருகிறது? பரவலாகப் புகார்கள் வருகின்றன என்றால் அதை இந்த அரசு தவிர்க்க வேண்டும், தங்களுடைய நல்லபெயரைக் காப்பாற்றிக்

கொள்ள முற்பட வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். இப்படிப்பட்ட புகார்கள் வரவில்லை என்று சொல்ல முடியுமா? மனச்சாட்சி இருக்கிறது என்றால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர், புகார்கள் வருகின்றன என்று சொன்னார்கள். 'டி' வாங்கியவர்களுக்கு செலக்ஷன் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் எல்லாம் இன்டர்வ்யூ குழுவினரை வைத்துத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். மூன்று 'டி' வாங்கியவர்கள் வத்தலும் தொத்தலுமாகப் போய் நின்றால் அவர்கள் டாக்டர் வேலைக்கு லாயக்கானவர்களா என்று பார்க்கவேண்டிய பொறுப்பும் அந்த இன்டர்வ்யூ குழுவினருக்கு இருக்கிறது. எந்தக் கேள்விக்குப் பதில் அளித்து 'டி' வாங்கினார்களோ அவர்களிடம் அதே கேள்வியைக் கேட்டபொழுது அந்தக் கேள்விக்குக்கூட அவர்கள் பதில் சொல்லமுடியாமல் திணறியிருக்கிறார்கள் என்ற செய்தியையும் தெரிவித்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் கூறியதற்கு, நேரமாகிறது என்றாலும்கூட பதில் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இன்டர்வ்யூ நேரத்திலே அவர்களுக்குப் பொர்சனாலிடி, சமயோசிதமான பதில் அளிக்கும் திறன் இவற்றைப் பொறுத்தும் அவர்களுக்கு மார்க்குகள் வழங்கப்படுகின்றன. 'டி' வாங்கியவர்கள் பிற்போக்கு வகுப்பைச் சேராதவர்களாக இருந்து, முற்போக்கு வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணிக்கையிலே வருகின்றபொழுது அவர்கள் தள்ளப்படுகின்ற நிலைமையெல்லாம்கூட இருக்கிறது. இதுவும் பல காலமாக இருந்து வருகின்ற நிலைமைதான். ரேட்டு வைத்து வாங்குகிறார்கள், ஐயாயிரம், ஏழாயிரம், பத்தாயிரம் என்று வாங்குகிறார்கள் என்று பழைய காலத்துச் சம்பிரதாயத்தை எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்கள் என்று கருதுகிறேன்.

பத்திரிகையிலே எழுதுகிறார்கள், எழுதுகின்ற வீரத்தோடு அவர்கள் இன்னார் வாங்கினார்கள் இவரிடம் வாங்கினார்கள்

என்று அந்த வீரத்தோடும் எழுத வேண்டும். வழக்கு மன்றத் திற்குச் சென்றால், நீதான் செய்தாய் என்று பத்திரிகையிலே சுட்டிக் காட்டி எழுதுகிறவர்கள் வழக்குமன்றத்திலே அந்தப் பத்திரிகையையே என்னுடைய பத்திரிகை அல்ல என்று வழக்காடுகிறார்கள்.

அதே மாதிரிதான் இரும்புக் குல்லாவைப்பற்றி எழுதினார்கள்: மோட்டார் வண்டிகளில் செல்லுகின்றவர்கள் இரும்புத்தொப்பி அணியவேண்டுமென்று ஒரு உத்தரவை நான் பொதுமக்களுடைய கருத்தை அறியவேண்டுமென்பதற்காகப் போட்டேன். ஒருவர்- உடனே எதிர்க்கட்சித் தலைவர் சொல்லு வார், அவர் காங்கிரஸ்காரர் அல்ல என்று- அவர் சாதாரணக் காங்கிரஸ்காரர் அல்ல, அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியி னுடைய உறுப்பினர்-அவர் எழுதிய கட்டுரையிலே கருணாநிதி ஒரு கம்பெனியுடன் பேரம் பேசிக்கொண்டு இரும்புக் கவசம் அணிய வேண்டுமென்று உத்திரவு போட்டிருக்கிறார் என்று எழுதினார். நான் வழக்குமன்றம் சென்றேன். அங்கே, கருணாநிதி அவர்களின் நேர்மையிலும் நாணயத்திலும் எனக்குச் சந்தேகம் இல்லை. நான் அந்தக் கருத்திலே எழுதவில்லை, வேறு கருத்திலே எழுதினேன் என்று சொன்னார். அதற்காக நீதிமன்றத்தால் 500 ரூபாய் அபராதம் கட்ட வேண்டுமென்று தண்டனையளிக்கப்பட்டார். அதற்குப் பிறகும் அவர் அப்பீல் செய்துகொண்டிருக்கிறார், நான் அந்த எண்ணத்திலே எழுத வில்லை என்று நிரூபிப்பதற்காக அப்பீல் செய்திருக்கிறார்.

நான் கழகத்தினுடைய பணத்தைக் கையாடிவிட்டேன் என்று எழுதிய போதும் வழக்குமன்றத்திலே அவர்கள் அப்போது தண்டிக்கப்பட்டார்கள்.

பிறகு மதுரையிலே என்னைப் பற்றியும், மதுரை முத்துவைப்பற்றியும் எழுதியதைப்பற்றி வழக்குப் போடப் பட்டது. அப்பொழுது சொன்னார்கள், கருணாநிதியும் முத்துவும் அந்தப் பத்திரிகையை அச்சடித்துக் கொண்டார்கள் என்று.

இம்மாதிரி எழுதுகின்ற நேரத்திலே இருக்கின்ற வீரம் நீதிமன்றப் படிக்கட்டுகளை மிதிக்கின்ற நேரத்திலேயும்

இருக்கவேண்டும். அப்படியில்லாமல், 'புகார்கள் வருகின்றன, புகார்கள் வருகின்றன' என்று அவர்கள் சொல்வது அரசியல் நாகரீகமல்ல, பண்புக்குரியதல்ல. எழுதும்பொழுது குறித்து எழுதுங்கள், அப்படி எழுதினால் அதைச் சந்திப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்ற நிலையிலே எழுதுங்கள். மேடையிலே ஒன்றகப் பேசிவிட்டு நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டால், இல்லை என்று சொல்லக்கூடிய நிலையிலே இருக்கக்கூடாது.

இது மருத்துவ மானியம் என்பதால் இன்னொன்றையும் இங்கே சொல்ல விரும்புகிறேன். ''டாக்டர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உடல் குலுங்கக்கூடாது என்று கூறியிருந்தார்கள். கருணாநிதி அடிக்கடி அவர்களுடைய காலை ஆட்டி ஆட்டி குலுக்கினார், அவர் செத்துவிட வேண்டுமென்று அப்படிச் செய்தார். காமராஜர் வந்து அவரை அப்புறப்படுத்தினார்'' என்று மேடையிலே பேசியிருக்கிறார்கள். காமராஜ் அவர்கள் அண்ணா அவர்கள் மேல் எவ்வளவு அன்பு வைத்து இருக்கிறார்கள் என்பதற்காகப் பேசினார்கள் என்றால் அதுவேறு. நான் போய் அவர்களுடைய உயிர் போய்விட வேண்டுமென்பதற்காக ஒரு காரணமாக இருந்தேன் என்று எல்லாம் மேடையிலே பேசுகிறார்கள். இதைவிட மோசமாக பத்திரிகையிலே எழுதுகிறார்கள்.

எழுதுகிறவர்கள் குறிப்பிட்டு எழுதுகிறார்களா? எப்படியாவது தப்பித்துக்கொள்ள வேண்டும் என்ற முறையிலேதான் எழுதுகிறார்கள். தப்பித்துக்கொள்ள வழியில்லை என்றால் கோர்ட்டிலே மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறார்கள். சமரஸம் கோருகிறார்கள். இல்லையென்றால், கடைசியாகத் தண்டனையடைகிறார்கள். இதுதான் கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக அவர்கள் நடத்தி வருகின்ற நிகழ்ச்சிகள்;

எதிர்க்கட்சித் தலைவர் மற்றப் பத்திரிகைகளைப்பற்றிச் சொன்னால் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். நவசக்தி பற்றிச் சொன்னால் ஒத்துக்கொள்வார்கள். அதிலே இன்று ஒரு செய்தி வந்திருக்கிறது. கருணாநிதியிடம் இருக்கிற கார்கள் கழகத் தோழர்கள் பதவியைப் பயன்படுத்திக்கொண்டு எப்படிச்

சம்பாதிக்கிறார்கள் தெரியுமா? எடுத்துக்காட்டாக கருணாநிதியிடம் 1335 அம்பாஸிடர் கார். இன்னொரு கார் ஹெரால்டு கார் இருந்தது. இப்பொழுது 2728 என்கிற கார் கருணாநிதியின் பெயரில் இருக்கிறது. 4555 என்ற கார் கருணாநிதியின் பெயரில் இருக்கிறது. அதேபோல 9999 என்கிற காரும் கருணாநிதியின் பெயரில் இருக்கிறது. இப்படி 5 கார்களை வைத்துக்கொண்டிருக்கிறார் என்றும் ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள கார்களை வைத்துக்கொண்டிருக்கிறார் என்றும் எழுதியிருக்கிறார்கள். நீதிமன்றத்திற்கு வந்து நிரூபிப்பார்களா? என்னிடம் 1335 என்கிற கார் இருந்தது. அது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே விற்கப்பட்டு விட்டது. ஹெரால்டு கார், என்னுடையது அல்ல, மாறனுடையது. அதுவும் விற்கப்பட்டு விட்டது. 9999 என்ற கார் என்னிடத்தில் இல்லை. ஒரு சினிமாக் கம்பெனிக்கு ஏறத்தாழ 10, 20 கார்கள் இருக்கும், மேகலா பிக்சர்சுக்கு இருக்கக் கூடிய ஒரே கார்தான் 9999. 4555 என்ற கார் மாறன் எம்.பி.யின் கார். அடுத்தபடியாக 2728, அதுகூட என் பெயரில் இல்லை, சர்க்காருடையது. இதைக்கூடத் தெரிந்துகொள்ள முடியாத பத்திரிகைக்காரர்கள் முதல்வர் 5 கார்கள் வைத்திருக்கிறார் என்று எழுதுகிறார்கள் என்றால் என்ன பொருள்? கருத்திருமன் சாக்கடைப் பத்திரிகைகள் என்று சொன்னார். இது பூக்கடைப் பத்திரிகையாயிற்றே. இப்படி எழுதலாமா? நீதிமன்றத்துக்குச் சென்று நிரூபிக்கலாமா? எனவே, வெளியே உள்ளவர்கள் சொல்கிறார்கள். சொல்கிறார்கள் என்று சொல்லாமல் என்ன என்ன குற்றம் என்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள். அந்தக் குற்றச் சாட்டுக்கு நாங்கள் இலக்காகிறோம் என்றால் நாங்கள் பதவியைப் பெரிதாகக் கருதமாட்டோம், ராஜினாமா செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு.பி.ஜி. கருத்திருமன்:** காங்கிரஸ் கட்சிப் பத்திரிகை, அந்தப் பத்திரிகை, இந்தப் பத்திரிகை என்று குறிப்பிட்டு எல்லாம் சொன்னார்கள், ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன், காங்கிரஸ் கட்சிக்கு என்று எந்தப் பத்திரிகையும் இல்லை, பொறுப்பு ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கிறேன். கடிதம், நாத்திகம் போன்ற பத்திரிகைகள் இருக்கலாம்.

காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்று எந்தப் பத்திரிகையும் கிடையாது. அனுதாப பத்திரிகையாக இருக்கலாம். பத்திரிகை எந்தக் கட்சியைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம், ஆனால்...

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** நான் சொன்னதற்குப் பதில் சொல்லுங்கள்.

**திரு.பி.ஜி.கருத்திருமன்:** காங்கிரஸ் கட்சிக்கே பத்திரிகை எதுவும் கிடையாது. காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கின்ற பத்திரிகைகள் இருக்கலாம், காங்கிரஸ்காரர்கள் நடத்துகிற பத்திரிகைகளாக இருக்கலாம். அதை வைத்துக்கொண்டு குழப் பத்தை உண்டாக்கக்கூடாது. இரும்புத் தொப்பி சமச்சாரத்தைப் பற்றிச் சம்பந்தப்பட்டவரிடம் விசாரித்தேன். அவர் சொன்னது என்ன? 'கருணாநிதியும் நானும் ரொம்ப காலம் ஒன்றாக இருந்தவர்கள். நான் எந்த அளவுக்குக் கெட்டவனோ, நான் எந்த அளவுக்குத் தவறுகளைச் செய்வேனோ அதற்குச் சமமாக கருணாநிதி அவர்களும்செய்வார்கள்' என்று கூறினார். (குறுக்கீடு) கோர்ட்டிலே சொன்னார்களா என்று கேட்டால், வெளியிலே என்னிடத்தில் சொன்னதைச் சொன்னேன்.

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** தெருவிலே, வெளியிலே சொன்னதையெல்லாம் இங்கே பேசுவது நியாயமல்ல. நீதிமன்றத்திலே என்ன சொல்லியிருக்கிறார் என்பதை திரு. கருத்திருமன் அவர்கள் இங்கே சொல்ல வேண்டும்.

**திரு.பி.ஜி.கருத்திருமன்:** வெளியிலே என்னிடத்திலே அவர் சொன்னதைச் சொன்னேன். நீதிமன்றத்திலே சொன்ன தாகச் சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளியிலே இப்படிச் சொல்லுவதை எல்லாம் சட்ட மன்றத்திலே சொல்வதற்கு உரிமையிருக்கிறதா? சொல்லுகின்ற கூற்றுக்குப் பொற்றுப் பேற்றுக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** நான் குறிப்பிட்டுச் சொன்னது அவர் நீதிமன்றத்திலே சொன்னது. அவ்வாறு இல்லாமல் கருணாநிதி தவறு செய்யக் கூடியவர்

என்ற முறையிலே அவர் சொன்னதாக இவர் சொல்லுகிறார் என்றால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் நீதிமன்றத்தில் அவர் சொன்னதைச் சொல்லுகிறார் என்றால் அதற்கும் அவர் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

# நான்கு மானியங்கள்

**உரை : 27** **நாள் : 26.03.1969**

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** தலைவர் அவர்களே, இன்று இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டுள்ள நான்கு மானியங்களைக் குறித்து உறுப்பினர்களும், இறுதியாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் தங்களுடைய சீரிய கருத்துக்களையெல்லாம் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். இந்த மன்றம் எப்படி நடைபெற வேண்டும் என்பதிலும் நாம் அனைவரும் இணைந்து நின்று எத்தகைய மரபுகளைக் காத்து வருகிறோம் என்பதிலும் நாம் ஒருவருக்கொருவர் பெருமைப்பட்டுக்கொள்ளத்தக்க அளவில் ஏதோ இடையில் சிறு சிறு மாச்சரியங்களும், அபிப்பிராய பேதங்களும் ஏற்பட்டாலும்கூட பெருமைப்பட்டுக் கொள்ளத் தக்க அளவில் நம் மன்றத்தின் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அதனை நம் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களும் மற்றவர்களும் இங்குச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். எதிர்க்கட்சிகள் எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதில் முன்னேற்றக் கழக அரசு எவ்வளவு பெருந்தன்மையோடு நடந்து வருகிறது என்பதை ஏதோ ஒரு முறை தேவைப்பட்ட நேரத்தில் எடுத்துச் சொன்னால் அதை நம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இது குறிப்பிட்ட திரு. கருத்திருமன் என்பவருக்காக அளிக்கப்பட்டது என்பதல்ல. அந்த இடத்தில் எதிர்க்கட்சித் தலைவராக யார் இருந்தாலும் அவர்களுக்கு அந்தச் சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் என்ற அந்த எண்ணத்தோடுதான், எதிர்க்கட்சி மதிக்கப்பட வேண்டும் என்ற நிலையில்தான், அது அளிக்கப்பட்டதே தவிர வேறு அல்ல.

இன்னும் சொல்லப்போனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக வந்தவுடன் ஆளும் கட்சியின் சட்ட

சபைக் கட்சிக்கான கட்டடத்தைக்கூட ஏற்கனவே இருந்த ஆளும் கட்சி- காங்கிரஸ் கட்சி- பயன்படுத்தி வந்த கட்டடத்தை பெற்றுக் கொள்ளவில்லை. திரு.ஆர்.வி. அவர்கள் எங்களிடம் அதுபற்றிப் பேசியபோது, ஏற்கனவே காங்கிரஸ்காரர்கள் ஆளும் கட்சியில் இருந்தபோது அவர்கள் அனுபவித்துக்கொண்டிருந்த அந்தக் கட்டடத்தையே அவர்கள் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறிவிட்டு, நாங்கள் ஐம்பது பேர்கள் இருந்த நேரத்தில் எந்த அளவிற்கு எங்களுக்கு ஒரு சிறிய இடம் ஒதுக்கப்பட்டிருந்ததோ அந்த இடத்தில் இன்னும் எங்கள் அலுவலகத்தை வைத்துக்கொண்டு சட்டசபைக் கட்சிக் கூட்டங்கள் நடைபெறும்போது மட்டும் பக்கத்தில் ஒரு தாழ்வாரத்தைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். இவைகளை எல்லாம் நான் சொல்லக் காரணம், எதிர்க்கட்சிகளை மதிக்க வேண்டும் என்ற அந்த மன வளத்தின் அடிப்படையில் முன் னேற்றக் கழக அரசு நடந்துகொண்டிருக்கிறது என்பதற்காகத் தான். அந்த அளவில் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும் மற்ற ஏனைய கட்சித் தலைவர்களும் இந்த மாமன்றத்திலே நல்ல வகையில் தங்கள் பணிகளை ஆற்றி வருகிறார்கள். ஆகவே, இந்த சட்டமன்ற மானியத்தின் மீது பேசுகிற நேரத்தில் நான் இந்த மன்றத்தின் முன்னவன் என்ற அளவில் அவர்களுக்கெல்லாம் என்னுடைய அன்பு கலந்த, இதயம் கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய நிலை உயர்த்தப் பட வேண்டும். அவர்களுக்கு என்று இருக்கிற வசதிகள், வாய்ப்புக் கூறுகள் இவைகள் எல்லாம் கவனிக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆளும் கட்சித் தரப்பிலிருந்துகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களும் அதை எடுத்துப் பேசினார்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கு இங்கிலாந்து போன்ற நாடுகளில் தரப்படுகிற மதிப்பும், அவர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகளும், வசதிகளும், வாய்ப்புகளும் இங்கேயும் வழங்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு முரண்பட்ட கொள்கையை உடையதல்ல என்பதற்கு

உதாரணமாக இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர் களுக்கும், எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கும் மகிழ்ச்சி யளிக்கத்தக்க விதத்தில் ஒரு அறிவிப்பினை நான் தர விரும்பு கிறேன். எதிர்க்கட்சித் தலைவரின் சம்பளம் அதிகமாக்கப்படும், கார் தரப்படும், கார் அலவன்ஸ், வீட்டு அலவன்ஸ் இவைகள் வழங்கப்படும், அவர்களுக்கு என்று ஒரு ப்யூனும், ஒரு சுருக் கெழுத்தாளரும் தரப்படும். (ஆரவாரம்). அவைகளுக் கெல்லாம் சட்டம் திருத்தப்பட்டாக வேண்டும். அதிக விரைவில் அந்தச் சட்டம் திருத்தப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு.ஆதிமூலம் அவர்கள் அவசரப்படுகிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு என்ன, என்கிறார்கள். எனக்கிருக்கிற சங்கடம் எல்லாம் சம்பளத்தை அதிகமாக்கிவிடலாம், ஆனால் இப்போது நாட்டில் வறட்சி நிலைமை இருக்கிறது. சம்பளத்தை அதிகமாக்கிக் கொண்டு வறட்சிப் பகுதிகளுக்கு எம்.எல்.ஏ.க்கள் சென்றால் வறட்சிப் பகுதியில் வாடிக் கொண்டிருக்கிற மக்கள், ''வா, வா சம்பளத்தை அதிகமாக்கிக் கொண்டு வருகிறீர்களா?'' என்று கேட்காவிட்டாலும், மொழிகளால் எதிர்க்காவிட்டாலும் விழியால் பார்ப்பது அந்த அர்த்தத்தைத்தான் தெரிவிக்கும். சட்டமன்ற உறுப்பினர் களுக்கு படி 12 ரூபாய் என்றிருந்தது ரூ. 15 ஆக ஆக்கப்பட்டிருக்கிறது. இன்று அது ரூ.20 ஆக ஆக்கப்படுகிறது என்ற அந்த மகிழ்ச்சிகரமான செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கும் நம்முடைய சட்டத்தை திருத்த வேண்டியிருக்கிறது.

சட்டசபை நடவடிக்கைகளை குறிப்பு எடுப்பதற்குப் பதிலாக டேப் ரிக்கார்ட் செய்யப்படவேண்டுமென்று நம் மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்களும், அடிக்கடி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அதையே வலி யுறுத்தி வருகிறார்கள். டேப் ரிக்கார்ட் செய்வதில் நமக்கு ஒன்றும் சங்கடம் இல்லை. அது சுலபமான முறைகூட. ஆனால், அந்த சுலபமான முறையை வேறு மாநிலங்களில் பயன் படுத்தாமல் இருப்பதற்கும், பாராளுமன்றத்தில்கூட அந்த

சுலபமான முறையைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கும் உரிய காரணங்ளை நாம் அறிந்தாக வேண்டும். இப்போது சபாநாயகர் அவர்கள் ஒருவர் பெயரைச் சொல்லி அழைக்கிறார்கள். ''எதிர்க் கட்சித் தலைவர்'' என்று அழைக்கிறார்கள். அப்போது அந்த ஒலி டேப்ரிக்கார்டரில் பதிவாகிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது இடையில் ஒருவர் எழுந்து நின்று பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புகிறார். அப்படி எழுப்புபவர் திரு.ஆசைத்தம்பியாக இருக்கலாம், டாக்டர் ஹாண்டேயாக இருக்கலாம், அல்லது திரு.அரங்கண்ணலாக இருக்கலாம் அல்லது திரு. ஞானசம்பந்தமாகவும் இருக்கலாம், யாராகவும் இருக்கலாம். உடனே சபாநாயகர் அவர்கள், அதை டேப் ரிக்கார்டரில் பதியச் செய்ய வேண்டுமென்றால் ''இப்போது பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்டிருப்பவர் அரங்கண்ணல் அவர்கள்'' என்று சொன்னால்தான் அதற்குப் பிறகு நாம் பதி வேட்டில் அதைக் குறிப்பு எழுதிக்கொள்ள முடியும். ஆனால், நம் சட்டசபை நடவடிகைகளைக் கொஞ்சம் கூர்ந்து கவனிக்கா விட்டால் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எந்தத் திசையிலிருந்து வருகிறது, எந்தத் திக்கில் இருந்து வருகிறது, எப்போது வருகிறது என்றெல்லாம் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு ஒழுங்குப் பிரச்னைகள் அடிக்கடி குவிகிற நிலையில், டேப் ரிக்கார்டர் அல்ல, வேறு எந்தவிதமான சாதனத்தாலும் யார் அந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார் என்பதைக் கண்டு பிடிக்க முடியாது. ஆகவே, அது பதிவு செய்யப்படமுடியாத ஒன்றாக ஆகிவிடும். இங்கே குறிப்பு எடுத்துக் கொள்கிறார்கள். இன்னார் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பினார், இன்னார் பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் கேட்டார், இன்னார் பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் கேட்டார் என்றளவிற்குக் குறிப்பு எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் டேப் ரிக்கார்டரில் அந்த வசதி இல்லாமல் போய்விடும் அவர்கள் சொல்வது, 'எழுதி யதைத் திருத்தி விடுகிறீர்களே' என்ற குற்றச்சாட்டு. நம்மை நாமே நம்பாத அளவிற்குப் போய் விடக்கூடாது. இந்த அலு வலில் ஈடுபட்டிருக்கிறவர்கள், அந்தக் காரணத்திற்காக இருக்கிற சுருக்கெழுத்தாளர்கள் நிச்சயமாக அந்த நிலைமைக்குப்

போகமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு நாம் காரியங்களைச் செய்ய வேண்டும்.

**திரு.பி.ஜி. கருத்திருமன்:** டேப் ரிக்கார்கடரை நம்பி, அதை வைத்து மட்டும் எடுக்கக்கூடாது, சுருக்கெழுத்தாளர்களும் இருக்க வேண்டும். டேப் ரிக்கார்டர் எப்போது அவசியம் என்றால் சந்தேகப்படுகிற சமயத்தில் அது அவசியப்படுகிறது. பாராளுமன்றத்தில் அப்படி டேப் ரிக்கார்டர் செய்து எடுக் கிறார்கள். அதோடு சுருக்கெழுத்தாளர்களும் எடுக்கிறார்கள். அப்படி எடுக்கப்படுகிறபோது சில இடங்களில் ஒன்றிரண்டு வார்த்தைகள் இருக்கிறதா இல்லையா என்று பார்க்கலாம். டேப் ரிக்கார்டரைப் பூர்ணமாக நம்பக்கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** அதைக்கூட உடனே கேட்டால் போட்டுப் பார்க்கலாம், தவறு செய்யாமல் செய்து விடலாம். மறுநாள் டேப் ரிக்கார்டரைப் போட்டுப் பார்த்தால் பலகுரல் மன்னர்கள் இன்று நாட்டில் புறப்பட்டிருக் கிறார்கள். அதே போல் பேசவைத்து, திரு.கருத்திருமன் அவர்கள் பேசியது போல் பேசவைத்து மாற்றிவிடலாம். கோர்ட்டில் சாட்சியங்களுக்கு டேப் ரிக்கார்டரைப் பயன்படுத்து வதில்லை. டேப் ரிக்கார்டரில் சாட்சியங்களைப் பதிவு செய்வதில்லை. இது வழக்கறிஞர் பெருமக்களுக்கு நன்கு தெரியும். அந்த அளவில் இன்றைய தினம் டேப்ரிக்கார்ட் முறை வைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டசபை நிகழ்ச்சிகள் பற்றி எல்லா உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். வெளி நடப்புகள், வாக் அவுட், என்பவைக ளெல்லாம் ஜனநாயக சட்டமன்ற முறைகளில் கொடுக்கப் பட்டிருக்கிற உரிமைகள் என்றாலும் அவைகளை நாம் நிதான மாகவும், நியாயமான முறையிலும், தேவையான அளவிலும், அளவிற்கு மீறிவிடாமலும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்னால் எதிர்க்கட்சி கொறடாவான திரு.வினாயகம் அவர்கள், துணைத் தலைவர் அவர்கள் இருந் தார்கள். இருந்தாலும் அவர்களுக்கு அங்குச் சம உரிமை

கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலோ என்னவோ. அவர்கள் எழுந்து ஒரு பிரச்சினையாக வெளிநடப்பு செய்தார்கள். அவர் கட்சியில் உள்ளவர்கள் அவரைத் தொடர்ந்து அவரோடு எழுந்து சென்றார்கள். எந்தப் பிரச்சனைக்காக அந்த வெளிநடப்பு நடந்தது? வக்காலத்து என்ற ஒரு வார்த்தை பயன்படுத்தப்பட்டது. மத்திய அரசுக்கு வக்காலத்து வாங்குகிறார் என்று உணவு - வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் எடுத்துச் சொன்னதற்காக, அதற்கு எவ்வளவோ விளக்கங்கள் சொல்லப்பட்ட பிறகும், சபாநாயகரவர்களேகூட விளக்கம் அளித்துத் தீர்ப்பளித்த பிறகும், ''வாக் அவுட்'' தவிர்க்க முடியாததாகப் போய் விட்டது. அவர்களுக்கு நான் ஒன்றைப் படித்துக்காட்ட விரும்புகிறேன்.

''அந்தச் சான்றுகளைத் தவறு என்று சொல்லும்படியான அளவுக்குப் புத்தி இல்லாத தனம் என்னிடத்தில் இல்லை. 'அபிஷியல் ரிப்போர்ட்டி'ல் இருந்து தாங்கள் படித்ததை ஏற்றுக் கொள்ளுகிறேன். தாங்கள் இவ்வளவு சிரமப்பட்டு தேடி வக்காலத்து எடுத்துக்கொள்ளும் நேரத்தில் வேறு ஏதாவது வேலையைக் கவனித்திருக்கலாமே.''

இது சபாநாயகரைப் பார்த்து நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் 15-3-1969 அன்று உதிர்த்த வாசகங்கள். 'வக்காலத்து எடுத்துக்கொள்ளும் நேரத்தில் வேறு ஏதாவது வேலையைக் கவனித்திருக்கலாமே'' என்று சபாநாயகரவர் களைப் பார்த்து எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூறினால் யார் வாக்- அவுட் செய்வது? ஆளுங்கட்சி வாக்- அவுட் செய்ய முடியாது, செய்வது இல்லை. சபாநாயகர்தான் வாக்- அவுட் செய்திருக்க வேண்டும், வேறு வழியில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைக்கூட குறிப் பிட்டேன்.

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** அதைக்கூட சபா நாயகரவர்கள் குறிப்பிட்டும்கூட திரு.வினாயகம் அவர்கள் கேட்கவில்லை. வக்காலத்து என்பது இந்தச் சபையின்

நடைமுறையிலேயிருக்கின்ற வார்த்தை என்று சபாநாயகரவர்கள் அன்று குறிப்பிட்டார்கள். எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் அந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இரண்டு, மூன்று முறை பயன்படுத்தியிருப்பதை ரிப்போர்ட்டில் பார்த்திருக் கிறேன். நடைமுறையில் இருக்கின்ற வார்த்தை என்று சபாநாயகர் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார்கள். அவ்வாறெல்லாம் இருந்தும், வாக்-அவுட் நடந்திருக்கிறது. இதுபற்றிப் பத்திரி கைகளில் தலைப்புச் செய்தியாக வந்ததேயல்லாமல், நம்முடைய சபையிலே தேவையில்லாத காரணங்களுக்காக வாக்- அவுட் செய்யக்கூடிய நிலைமை உருவாகிவிட்டதே என்ற கவலையைத்தான் என் போன்றவர்களுக்கு ஏற்படுத்தியது என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது.

நம்முடைய நண்பர் திரு. மார்டின் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மிகவும் பரபரப்போடு ஒரு செய்தியை இங்குச் சொன்னார்கள். மந்திரிகள் சொத்து விவரம் என்று பத்திரிகையிலே வந்திருந்தது. உடனே தமிழக மந்திரிகள் தான் சொத்து விவரத்தைக் கொடுத்துவிட்டார்கள் என்று எண்ணி பத்திரிகையைப் பிரித்துப்பார்த்தேன். ஆனால், டெல்லியி லிருக்கின்ற மந்திரிகள் பாராளுமன்றத்தில் தங்களுடைய சொத்து விவரங்களைக் காட்டிய விவரத்தைப் படித்து ஆச்சரியப் பட்டேன். தமிழக மந்திரிகள் என்னசெய்யப் போகிறார்கள் என்ற கேள்வியை நிறுத்தினார்கள். அதற்குப்பிறகு நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்களும், மத்திய சர்க்காரிலே இருக்கிற அமைச்சர்கள் தங்களுடைய சொத்து விவரங்களைக் காட்டி விட்டதாக எடுத்துச்சொன்னார்கள். அதற்குப் பிறகு அவர் களுடைய ஆச்சரியத்திற்கெல்லாம் மேலாக நான் அதிக ஆச்சரி யத்தோடு அது என்ன என்று, அந்த விவரத்தைப் பார்த்த பொழுது, பாராளுமன்றத்தில், அங்கு மந்திரிகளினுடைய சொத்து விவரங்களைக் கொடுக்கின்ற நோக்கத்தோடு அந்த விவரங்கள் அந்தச் சபையில் வைக்கப்படவில்லை. யார் யார் 'வெல்த் டாக்ஸ்' கட்டியிருக்கிறார்களோ அந்த மந்திரிகளின் சொத்து விவரம் என்று அந்த ஒரு கேள்விக்கு மாத்திரம் பதிலாக திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் சொத்துவிவரத்தை

வைத்திருக்கிறார்கள். திரு. மொரார்ஜிதேசாய் அவர்களுடைய சொத்து விவரமே அதில் இடம் பெறவில்லை. அதிலிருந்து அமைச்சர்கள் வைத்த சொத்து விவரம் என்ற கூற்று, உண்மைக்கு மாறானது, தவறாகப் புரிந்துகொண்ட தன்மையின் அடிப்படையைக் கொண்டது. அது மட்டுமல்ல, 9 மந்திரிகளின் சொத்து விவரங்கள்தான் அதிலே குறிப்பிடப்பட்டிருந்தன. அவர்களுக்கு இரண்டாண்டு, மூன்றாண்டுக் காலத்தில் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது, என்ற விவரங்கள்தான் அங்கு வைக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, எல்லா மந்திரிகளினுடைய சொத்த விவரங்களும் அங்கு வைக்கப்படவில்லை. இதைச் சொல்வதனால், அவர்கள் வைக்கவில்லை. ஆகவே, நாங்களும் வைக்கமாட்டோம் என்பதற்கு இது பீடிகை என்ற அளவுக்கு யாரும் கருதத் தேவையில்லை. மந்திரிகளின் சொத்து விவரங்கள் மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களுடைய சொத்து விவரங்களும் இந்த மன்றத்திலே வைக்கப்படவேண்டுமென்று முன்னேற்றக் கழக அரசு விரும்பு கிறது. அதற்காக நடவடிக்கை எடுத்துக்கொண்டு, விரைவில், அடுத்த திங்களிலேயே நம்முடைய மாமன்றத்திலேயுள்ள அனைத்துக்கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்றினைக் கூட்டி, சொத்து விவரங்களை எப்படியெப்படி வைக்க வேண்டும், என்னென்ன முறைகளில் வைக்க வேண்டுமென்று விரும்பு கிறீர்கள் என்று உங்களைக் கேட்டறிந்து, அந்த அபிப்பிராயக் கோவைக்குப் பிறகு மந்திரிகளின் சொத்து விவரம் இந்த மன்றத்திலே வைக்கப்படும், சட்டமன்ற உறுப்பினர்களின் சொத்துக்களும் இந்த மாமன்றத்திலே வைக்கப்படும் என்பதை நான் இங்கே மிகத்திண்ணமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சீரணியைப்பற்றி, இங்குப் பேசிய நண்பர்களில் சிலர் குறிப்பிட்டார்கள். சீரணி என்ன சாதித்து விட்டது, செலவான தைத் தவிர, என்று கேட்டார்கள். அதற்கு ஒரு குறிப்பை மட்டும் சொல்ல விரும்புகிறேன். சீரணியின் சாதனைப் பட்டியலைச் சொல்லுகிறேன். கட்டி முடிக்கப்பட்ட பள்ளிகள் 171. முடியும் தருவாயில் உள்ள பள்ளிகள் 143 தூர் எடுக்கப்பட்ட கால் வாய்கள், குளங்கள் 388. அமைக்கப்பட்ட இணைப்புச்

சாலைகள் 188. வெள்ளையடிக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்கள் 7,618. பெயர் பலகைகள் வழங்கப்பட்ட பள்ளிகள் 2,562. சுவர்களில் திருக்குறள் பொறிக்கப்பட்ட பள்ளிகள் 6,555. திருவள்ளுவர் உருவப்படம் வழங்கப்பட்ட பள்ளிகள் 2,918. அடுத்து, சீரணியின் குறிப்பிடத்தக்க சில பணிகள். 32,000 ரூபாய் மதிப்புள்ள ஊரூர் பள்ளிக் கட்டடம் பத்தே நாட்களில் கட்டி முடிக்கப்பட்டது. இதில் அரசின் பங்கு 4,000 ரூபாய் மட்டும்தான். வியாசர்பாடியில் ஏழு பர்லாங் நீளமுள்ள வடிகால் ஒன்று 18,000 ரூபாய் மதிப்பில் அரசின் செலவு 1,200 ரூபாயுடன் வெட்டப்பட்டது. திருச்சி மாவட்டத்தில் குடுமியான் மலையில் விவசாயப் பண்ணை அமைக்க நிலத்தைத் திருத்தி மேடிட்டுப் போன பழைய குளம் ஒன்றைக் கண்டுபிடித்து, அது செப்பனிடப்பட்டது, இதனால் 45 ஏக்கர் நிலப்பரப்பு நஞ்சையாக மாறியுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் 95 வாய்க் கால்கள் தூர் எடுக்கப்பட்டன. கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தூர் எடுக்கப்படாமல் இருந்த நான்கு வாய்க்கால்கள் சீரணியால் ஒரு திங்களில் செப்பனிடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் 17,000 ரூபாய் மதிப்பில் 3 மைல் நீளமுள்ள வாய்க்கால் தூர் எடுக்கப்பட்டது. திருவாரூர் ஊராட்சி ஒன்றியத்தில் 2¼ மைல் நீளமுள்ள வாய்க்கால் தூர் எடுக்கப்பட்டது. திருவையாறு ஊராட்சி ஒன்றியத்தில் 2 மைல் நீளமுள்ள வாய்க்கால் தூர் எடுக்கப்பட்டது. பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 2 மைல் நீளமுள்ள வாய்க்கால் தூர் எடுக்கப்பட்டது. இப்படிப்பட்ட காரி யங்களில் சீரணியினர் மிகச்சிறந்த முறையிலே தங்களுடைய ஆக்கப் பணிகளையெல்லாம் ஆக்கி வருகின்றனர்.

பாரதியார் இருந்த வீட்டைப்பற்றி இங்குப் பேசிய உறுப்பினர்கள் பலர் குறிப்பிட்டார்கள். அதை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும், அரசினுடைய ஏற்பாட்டின்படி பாரதியின் நினைவுச் சின்னமாக அந்த வீட்டை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்கப்பட்டது. அந்த வீட்டின் சொந்தக்காரரிடத்திலே, அந்த வீட்டை விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்ட பொழுது, 35,000 ரூபாய் கிரயமாகக் கேட்டார். ஆனால்,

திருநெல்வேலி மாவட்டக் கலெக்டர் அவர்கள், வீட்டின் மதிப்பு 20,000 ரூபாய் என்று மதிப்பிட்டார்கள். தற்பொழுது அந்த வீட்டுச் சொந்தக்காரர், வீட்டின் விலை எதுவாக இருந்தாலும் ஒத்துக்கொள்வதற்குத் தயாராக உள்ளார் என்ற செய்தி வந்திருக்கிறது. ஆகவே, இது சம்பந்தமாக கலெக்டர் அவர் களின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அறிக்கை வந்தவுடன், பாரதியார் இருந்த வீட்டை அரசாங்கம் எடுத்துக்கொள்வதற் கான நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டசபை உறுப்பினர்களின் விடுதியிலே இருக்கின்ற சங்கடங்களைப் பற்றியெல்லாம் உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். போன் வசதி வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு அறைக்கும் தொலைபேசி வசதி வேண்டுமென்று எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அது இந்த ஆண்டிலே நிச்சயமாக கவனிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

உணவு பற்றிச் சொன்னார்கள். இப்பொழுது போடப் படும் உணவு சுவையான அளவிலே இல்லை என்று கூறினார்கள். ஏற்கனவே ஒரு ஏற்பாடு இருந்தது. மறுபடியும் அந்த ஏற்பாட்டை நாம் எண்ணிப்பார்க்கலாம். கூட்டுறவு முறையில், இருக்கின்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் சேர்ந்து ஒரு உணவு விடுதியை நடத்த ஏற்பாடு செய்யலாம். இப்பொழுது அவர்கள் சொல்லும் புகார்கள், ஒரு நாளைக்கு வருபவர்கள் மறு நாளைக்கு வரவில்லை, எத்தனை பேர் வருகிறார்கள் என்று கணக்குத் தெரியவில்லை என்று விடுதி நடத்துபவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, உறுப்பினர்களே சேர்ந்து கூட்டுறவு முறையில் நடத்த முயற்சிகளை எடுத்துக் கொள்ளலாம். அதுபற்றி ''ஹவுஸ் கமிட்டி''யில் தக்க ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. மார்ட்டின் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்களும் இன்றைக்கு என்னவோ அவரையே பின்பற்றிப் பேசினார்கள். அப்படிப்

பேசிய நேரத்திலும், அமைச்சர்களின் சம்பளம்தான் குறைக்கப் பட்டிருக்கிறதே தவிர, செலவு அதிகமாக இருக்கிறது என்று கூறினார்கள். ஒன்றை இடையிலே சொல்ல மறந்து விட்டேன். இப்பொழுது நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களே கூட, எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றிச் சொன்னீர்கள். எனக்குக் கீழேயிருக்கும் துணைத் தலைவரைப் பற்றி எதுவுமே சொல்ல வில்லையே என்று சொல்லுகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் களுக்கு வழங்கப்படும் அத்தனை சலுகைகளும் துணைச் சபாநாயகரவர்களுக்கும் வழங்க நிச்சயமாக ஆலோசிக்கப் படும், அதற்கும் சட்டம் திருத்தப்படும் என்பதை உங்களுக்குக் கூட அல்ல, சபாநாயகரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். (குறுக்கீடு) கொறடாவுக்கு என்கிறார்கள். அதுவே, ''கொறடா'' என்றுதான் இருக்கிறதே, எனவே, இன்னும் குறைக்காமல் இருந்தாலே போதும். (சிரிப்பு)

மந்திரிகள் சம்பளம் குறைவாக வாங்குகிறார்களே தவிர, செலவு அதிகரித்திருக்கிறது என்று நண்பர் திரு. மார்டின் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். இதிலே மந்திரிகளின் சம்பளத்தை 1966-67இல் இருந்ததற்கும் இப்பொழுது இருப்பதற்கும் பார்த்தால் 1966-67இல் ரூ.95,000, 1967-68 இல் ரூ.56,000 என்கின்ற வரிசையில் இருக்கிறது. அதிகப்படியாகச் செலவு ஆகியிருப் பதற்குக் காரணம், 6 லட்சமாக இருந்தது, 10 லட்சம், 11 லட்சம் என்ற அளவிலே ஆகியிருப்பதற்குக் காரணம், ''அதர் சார்ஜஸ்'' சுமார் ஒரு லட்சமாகயிருந்தது. சுமார் மூன்று லட்சமாக ஆகியிருக்கிறது. அதிகப்படியாக இரண்டு லட்சம் ரூபாய் ஆன காரணம், அந்த இரண்டு லட்சம் ரூபாய்களுக்குக் கார்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. அந்தச் செலவினால் அதிகமாயி ருக்கிறதே தவிர மந்திரிகளின் இலக்காவைப் பொறுத்த வரையில் அதிகமாகிவிடவில்லை. அதைப் போலவே ரூ.4,21,000 ஆக 1968-69இல் இருப்பதற்குக் காரணம், அதிகமாக இருப்பதற்குக் காரணம், அமைச்சர்களுக்கு அல்ல ஸ்டாஃப்க்காக கார்கள் வாங்கப்பட்டன.

அதுமட்டுமல்ல, தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் அமெரிக்காவிற்குச் சிகிச்சைக்காகச் சென்றிருந்த செலவு 94,000 ரூபாய், அந்தச் செலவையும் இதில் எழுதியிருக்கிறார்கள். அந்த 94,000 ரூபாயை முன்னேற்றக் கழகத் தலைமை நிலையம் இப்பொழுது திரும்பிச் செலுத்திவிட்டது. என்றாலும்கூட அவர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள். அந்தப் பணத்தை வரவு வைத்துக்கொண்டு திருத்தப்படும். கார் செலவும், அண்ணா சிகிச்சைச் செலவும் சேர்த்து எழுதப்பட்டிருப்பதால் உயர்ந்திருக்கிறதேயல்லாமல் வேறு அல்ல.

டியெர்னஸ் அலவன்ஸ் 1966-67இல் 45,000 ரூபாயாக இருந்தது, 1967-68இல் ரூ.69,000 ரூபாயாக இருந்தது. 1968-69ல் ரூ.91,000 என்கின்ற அளவுக்கு டியர்னஸ் அலவன்ஸ் போன்றவைகள் உயர்ந்திருக்கின்றன. அந்தக் காரணங்களாலே மந்திரி இலாகாவைப் பொறுத்த அளவிலே செலவு அதிகமாகி இருக்கிறதாகத் தோன்றுகிறதே தவிர, வேறு அல்ல என்ற விளக்கத்தையும் நான் இங்கே அளித்து, இந்த மானியத்தின் மீது பேசப்பட்ட எல்லாக்கருத்துக்களையும் உறுப்பினர்கள் எடுத்துச்சொன்ன அபிப்பிராயங்கள் அத்தனையையும் சர்க்கார் நல்ல முறையிலே யோசித்து தகுந்த நடவடிக்கைகள் எடுக்கும் என்று கூறி வெட்டுப்பிரேரணைகளை முன் மொழிந்துள்ள உறுப்பினர்கள் மகிழ்ச்சியோடு இன்றையதினம் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்வார்கள் என்ற நிறைந்த நம்பிக்கையோடு அமர்கிறேன். வணக்கம்.

# நிதிநிலை ஒதுக்கீடு

**உரை : 28** **நாள் : 28.07.1971**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாண்புமிகு திரு. அவை முன்னால் இருக்கின்ற நிதிநிலை ஒதுக்கீட்டில் மாண்புமிகு உறுப்பினர்களும் கட்சியின் தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச்சொன்னது மாத்திரம் அல்லாமல், நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்திலே முன் வைத்தது முதல் அதனுடைய பொது விவாதத்திலும் பல்வேறு மானியங்களைப் பற்றிய விவாதத்திலும், சூடான முறையிலும் எடுத்துச்சொன்னமைக்கு அனைவருக்கும் நான் என்னுடைய நன்றியை மிகுந்த பணிவோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை ஒதுக்கீட்டிற்கான ஒப்புதலைப் பெறுகிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, இங்கே அமர்ந்து இருக்கிறவர்களுக்கு, ஒரு சிலருக்கு ஏற்பட்டுள்ள சந்தேகம் தமிழகத்திலே இருக்கின்ற பல லட்சம் மக்களுக்கு ஏற்படாது என்றே நான் கருதுகிறேன். இன்று நடைபெறுகிற அரசு முதல் தர அரசா, இரண்டாம்தர அரசா, மூன்றாம்தர அரசா, நான்காம் தர அரசா என்று கேட்டால், எங்களை எல்லாம் உருவாக்கிய பெரியார் அவர்களுடைய மொழியில் இது மூன்றாம் தர அரசு கூட அல்ல, நான்காம் தர அரசாகும். பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்கிற நான்கு பிரிவுகளில், நாங்கள் நான்காவது தரத்தைச் சேர்ந்தவர்கள்; ஆகவே, நாலாந்தர அரசு நாட்டிலே இருக்கிறது. நாலாந்தர மக்களுடைய நல்வாழ்வுக்காகப் பாடுபடும் அரசு என்பதை இறுமாப்போடு, பெருமையோடு, கர்வத்தோடு பெரியார் அவர்களுடைய பெயரிலும், பெருமகனார் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரிலும் சொல்லிக்கொள்வதில் நான் பெரு மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன் (ஆரவாரம்).

ஃபாசிஸ அரசா அல்லது ஜனநாயக அரசா என்கிற கேள்வியைக் கேட்டதற்கு, எனக்கு முன்னால் முதல் அமைச்சராக இருந்த என் அண்ணன் பேரறிஞர் அண்ணா அவர்களோ, அவர் வழி நின்று அரசோச்சுகின்ற நானோ அல்லது என்னுடைய அருமை அமைச்சர் பெருமக்களோ எந்த நேரத்திலும், ஃபாசிஸ முறையில் எடுத்தேன், கவிழ்த்தேன் என்று பேசியதில்லை என்பதை நாடு அறியும், நல்லவர் அறிவர்; அறியாவிட்டால் அது அவர்கள் குற்றம்.

இரும்புக்கரம் கொண்டு அடக்குவேன் என்று ஒரு முறை நான் சொன்ன நேரத்தில், எந்தக் கட்சியையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, வன்முறையாளர்கள் எங்கேயிருந்தாலும், வன்முறைச் செயலில் யார் ஈடுபட்டிருந்தாலும், வன்முறையாளர்களை இந்த அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்கும் என்றேன். குறிப்பிட்டு எந்த கட்சியின் பெயரையும் சொல்லி, இந்தக் கட்சியை நான் இப்படி அடக்குவேன் என்று என்றைக்கும் சொன்னது கிடையாது. ஆனால் இங்கே பல முதல் அமைச்சர்கள் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, இன்று ஃபாஸிஸம், ஜனநாயகம் இவைகளுக்கெல்லாம் விளக்கம் அளிக்க வித்தகர்களுக்கு தலைவர்களாக இருப்பவர்கள் பேசியிருக்கிறார்கள், 'கம்யூனிஸ்டுகள் என் முதல் விரோதி' என்று எதிர்க்கட்சியைப் பார்த்துச் சொல்லி, ஜனநாயகம் பேசிய முனிபுங்கவர்களெல்லாம் முதல் அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். தி.மு.கவை மூட்டைப் பூச்சிபோல் நசுக்கி எறிவேன் என்று பேசியவர்கள், மூட்டைப் பூச்சி வீட்டைத் தேடிவரும் அளவுக்கு ஆனார் என்றால், ஃபாஸிஸம் எது, ஜனநாயகம் எது என்பதை நன்றாக உணர்ந்துகொள்வார்கள்.

குலக்கல்வி திட்டத்தைக் கொண்டுவந்து, தன் சொந்தக் கட்சியே அதை எதிர்த்து நின்றபோது, 'நான் சொன்னது சொன்னதுதான், நான் வைத்ததுதான் சட்டம்' என்று யதேச்சாதிகாரப் போக்கில் அந்த அளவுக்கு நிலைமை தடுமாறிப் பேசி அந்தக் கட்சியினாலேயே புறக்கணிக்கப்பட்டு தள்ளப் பட்டவர்களும் முதல் அமைச்சராக இருந்திருக்கிறார்கள்.

இந்த மாமன்றத்திலே , ஒருவர் முதல் அமைச்சராக இருந்த நேரத்தில் பெருமகனார் ஸர் ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்கள் கட்டாய இந்தியை எதிர்த்துப் பேசியபோது, முதல் அமைச்சராக

இருந்தவர் வேறு இடத்தில் பேசிக்கொண்டிருப்பதைக் குறிப்பிட்டு, 'நான் பேசுவதை கேளுங்கள்' என்றபோது, 'உனக்காகத்தான் இந்தக் காதைத் திருப்பியிருக்கிறேன்' என்று கேளாக் காதைக் காட்டி ஜனநாயகத்திற்கு இலக்கணம் வகுத்தவர்களும் முதல் அமைச்சராக இருந்திருக்கிறார்கள்.

ஃபாஸிஸவாதிகளாக இருந்தால், யதேச்சாதிகாரியாக அந்த வழியில் இருந்திருக்க வேண்டும். ஆனால், இங்கே இருக்கின்ற எல்லாக் கட்சித் தலைவர்களையும், ஒரு சிலரைத் தவிர, பண்போடு, பணிவோடு, அமைதியோடு அரவணைத்துச் செல்லும் வழியில் நான் கருதியிருக்கிறேன். இந்த மாமன்றத்தைப் பொறுத்தவரையில் ஜனநாயகம் செயல்படுத்தப்படவேண்டும் என்பதற்காக, எந்த எந்த வகையில் இந்த மன்றம் செயல் பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தால், பிசினஸ் அட்வைசரி கமிட்டி கூட்டங்களில் எடுக்கும் முடிவுகளை நிறைவேற்றியிருக்கிறது. குறிப்பாக முன்பெல்லாம் மேல் அவையில் நம்முடைய மானியங்களை வைத்து விவாதிக்கும் வழக்கமே இல்லாமல் இருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக, மேல் அவைக்கும் அப்படிப்பட்ட நிலைமை வேண்டும். அவர்களுடைய சீரிய, செழுமிய கருத்துக்களை ஏற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற அடிப்படையில், மேல் அவையில் கல்வித்துறை மானியம், மக்கள் நல்வாழ்வுத் துறை, வேளாண்மைத் துறை மானியம், இவைகளெல்லாம் மேல் அவையிலும் விளக்கக் குறிப்புக்களாக அந்தத் தலைப்பில் வைத்து, விவாதங்கள் நடத்தி, மாண்புமிகு அமைச்சர்களும் நல்ல விளக்கங்களை அளித்து வருகிறார்கள்.

இந்த மன்றம் 1962-ம் ஆண்டு 40 நாள் நடந்திருக்கிறது; 1963-ம் ஆண்டு 51 நாள் நடந்திருக்கிறது; 1964-ல் 54 நாள் நடந்திருக்கிறது. 1965-ம் ஆண்டு 57நாள் நடந்திருக்கிறது. 1966-ம் ஆண்டு 50 நாள் நடந்திருக்கிறது. 1967-ல் மார்ச்சு திங்களிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட காரணத்தால், 42 நாள் நடந்திருக்கிறது. 1968-ல் 48 நாள் நடந்திருக்கிறது. 1969-ல் 48 நாள் நடந்திருக்கிறது. 1970-ல் 61 நாள் நடந்திருக்கிறது. 1971-ல் இந்த மாதம் வரையில் 44 நாள் இந்த ஆண்டு மன்றம் நடைபெற்றிருக்கிறது. இன்னும் நாம் அக்டோபரிலும், டிசம்பரிலும் கூட இருக்கிறோம். ஆகவே, மாமன்றத்திலுள்ள உறுப்பினர்கள் கருத்துக்களைக் கேட்பதில் நாம் வேறு எந்த மாநிலத்தையும்விட குறைந்துவிடவில்லை.

நம்மோடு ஒப்பிடக்கூடிய ஒரே ஒரு மாநிலம் மைசூர்; இது ஒன்றிலாவது அவர்கள் நம்மோடு ஒற்றுமையாக இருந்திருக்கிறார்கள். 61 நாள் நடந்திருக்கிறது. மற்ற மற்ற மாநிலங்களில் குறைவாகத்தான் இருக்கிறது. குறைவான அளவில்தான் மன்றங்களில் விவாதங்கள் நடத்தியிருக்கிறார்கள். இந்த மன்றத்திலே இப்பொழுது 34 நாட்களாக மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லி வருகிறார்கள். மார்ச்சுத் திங்களில் ஆரம்பித்து, ஏப்ரல் வரை பத்து நாட்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது நடைபெற்ற 34 நாட்களில், இந்த 34 சட்டமன்ற நாட்களில், 7 நாட்கள் நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் 101 பேர்கள், என்னையும் சேர்த்து, ஈடுபட்டிருக்கிறார்கள். பிறகு 49 மானியங்கள் விவாதிக்கப் பட்டிருக்கின்றன. இந்த மானிய விவாதத்திலே, 383 உறுப்பினர்கள் பங்குகொண்டிருக்கிறார்கள். அதேபோல, வெட்டுப் பிரேரணைகள் 1,025 அனுமதிக்கப்பட்டு, அதிலே வலியுறுத்தப் பட்டவை 161 என்று கணக்குக் கூறுகிறது.

அதே போல், விதி41-ன் கீழ் கவன ஈர்ப்பு தீர்மானங்கள் 29 தொடர் நாட்களில் எடுக்கப்பட்டிருக்கின்றன.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் 15, விவாதிக் கப்படாவிட்டாலும், கொண்டுவந்ததன் நோக்கம் நிறைவேறும் அளவுக்கு அவகாசம் கொடுக்கப்பட்டு, பேசப்பட்டிருக்கிறது.

பில்ஸ் பொறுத்தவரையில், அறிமுகப்படுத்தப்பட்டவை 26, நிறைவேறியவை 10, அதேபோல் கவர்ன்மெண்ட் மோஷன்கள் இருந்தவை 8, "Considered and passed 37"

கேள்விகள் பொறுத்தவரையில், பதில் அளிக்கப்பட்டவை 522 மூலக் கேள்விகள்; துணைக் கேள்விகள் 2,344.

ஆக ஒரு ஃபாஸிஸ சர்க்காரில் இவையெல்லாம் நடைபெற்றிருக்காது; ஃபாஸிஸ சர்க்காரிலே மன்றமே இருக்காது. ஃபாஸிஸ சர்க்காரில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளெல்லாம் இருக்காது. ஜனநாயக இலக்கணத்தின்படி உறுப்பினர்கள் வேண்டியவாறெல்லாம் அனைத்துக்கட்சித் தலைவர்களும் நம்முடைய நேரங்களை ஒதுக்கீடு செய்து, சட்டசபை நிகழ்ச்சிகளை நடத்தி கருத்துக்களைக் கொடுத்து, எந்த எந்த அளவுக்கு ஜனநாயக மரபுகள் காப்பாற்றப்பட வேண்டுமோ, அந்த அந்த வகையில் வழிவகைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு.கே.டி. கே.தங்கமணி அவர்கள் சொன்னார்கள், இங்கே ரூ.20 கோடி மானியத்தை கில்லட்டினில் விட்டு விட்டோம் என்று. வழக்கமாக 20, 26, மானியக் கோரிக்கைகள் கில்லட்டினில் விடுவது உண்டு. 1953-ல் 26 மானியங்கள் விடப்பட்டிருக்கின்றன; 1958-ல் 14 மானியங்கள் கில்லட்டினில் விடப்பட்டிருக்கின்றன. 1961-ல் 7 மானியங்கள் விடப்பட்டுள்ளன. இந்தத் தடவை ஒரே ஒரு மானியம் கில்லட்டினுக்கு விடப்பட்டது. அந்தக் குறையையும் அடுத்த தடவை நீக்கி விடலாம். பலம் இருக்கிறது. செய்தால் என்ன தப்பு என்கிற ஆணவம் ஏற்படவில்லை. காரணம் நாலாந்தர சர்க்காராக இருப்பதால் அந்த அடக்கம் எனக்கு இருக்கிறது என்பதை கம்யூனிஸ்டு கட்சித் தலைவருக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே தியாகிகளுடைய மானியத்தைப்பற்றி நம்முடைய அம்மையார் அனந்தநாயகி அவர்கள் பேசினார்கள். தியாகிகளுக்கு மானியத்திற்காக மனு செய்து கொள்ள ஒதுக்கப்பட்டிருக்கிற நாளை நீடித்துத் தரவேண்டுமென்று சொன்னார்கள். இதைப் பெறுவதற்காகவே, இதுவரையில் தருகிற மானியத்திற்கு நன்றி சொல்லிக் கொண்டார்கள். அவர்களுடைய தந்திரத்தை நான் பாராட்டுகிறேன். 40 லட்ச ரூபாய்க்கு மேல் தியாகிகள் மானியத்திற்கு ஒதுக்கி இருப்பதற்காகப் பாராட்டினார்கள். அதற்குக்கூட அந்த வட்டாரத்தில் அவர் மீது காழ்ப்பு உணர்ச்சி ஏற்படக்கூடும். என்ன செய்வது? எப்படியாவது காரியம் நிறைவேறுவதற்காக அவர் துணிந்து பாராட்டியதற்காக நான் அவருடைய துணிவை உள்ளபடியே போற்றக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிட்டத்தட்ட 1966-ம் ஆண்டு, அப்போதிருந்த அரசு இந்தத் தியாகிகளுடைய மானியத்தை அறிமுகப்படுத்தியது, 1966-ம் ஆண்டில் 5 பேருக்குத் தரப்பட்டது. இதை நான் குறையாகச் சொல்லவில்லை. அப்போதுதான் அறிமுகப்படுத்தப்பட்ட காரணத்தினால் 5 பேருக்குத் தரப்பட்டது. 1967-இல் 1,254 பேருக்கும், 1968-இல் 1,817 பேருக்கும், 1969-ல் 1,742 பேருக்கும், 1970இல், 1,914 பேருக்கும், 1971-ம் ஆண்டு மே திங்கள் முடிய 307 பேருக்கும், ஆக, 7,039 பேருக்கும் இந்த தியாகிகளுடைய மானியம்

வழங்கப்படுகிறது. இந்த திட்டம் அமுலுக்கு வந்த நாள் 1-10-1966 ஆகும். அப்போது அவர்கள் நிர்ணயித்தது, மனு பெறுவதற்கான கடைசி நாள் 31-12-1968 ஆகும். மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். இந்த மனுவை அளிப்பதற்கும், இந்த மானியத்தைப் பெறுவதற்கும் தியாகிகளுக்கு அறிவுறுத்தி வந்த விதிகள், நிச்சயம் 3 மாத காலம் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைச்சாலையில் இருந்திருக்க வேண்டும், எந்த சிறைச்சாலையில் இருந்தார் என்பதற்கு அவர் இருந்த சிறையிலிருந்து நற்சான்றிதழைப் பெற்றுத் தர வேண்டுமென்று இருந்தது. ஆனால் அண்ணா அவர்களுடைய தலைமையில் ஆட்சி உருவான பிறகு, அந்த விதிமுறைகள் கூடுமான வரையில் தளர்த்தப்பட்டு, நானும் இந்த மன்றத்தில் அறிவித்ததற்கிணங்க முன்னாள் அமைச்சர்கள், பொறுப்புள்ள காங்கிரஸ் கட்சித் தலைவர்களுடைய சிபாரிசின் பேரில் வந்த மனுக்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இன்றைக்கு 7,039 பேருக்கு கிட்டத்தட்ட 44 லட்சம் ரூபாய்க்கு மேல் ஆண்டு ஒன்றுக்கு செலவைத் தாங்கிக்கொண்டு இந்தக் காரியம் நடைபெற்று வந்திருக்கிறது.

1968-இல் கடைசி நாள் மனு பெற என்று இருந்ததை முதல் தடவையாக ஒரு வருஷம் நீடித்து 31-12-1969 என்று செய்தோம். மறுபடியும் இந்த மன்றத்தில் இருந்தவர்களெல்லாம் எடுத்துச்சொன்னதற்குப் பிறகு, இரண்டாவது தடவையாக 31-3-1970- வரையில் நீடித்திருக்கிறோம். மேலும் நீடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பெருந்தன்மை வாய்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான வருகிற செப்டம்பர் 15-ம் நாள் வரையில் அதை நீடித்துக் கொடுப்பதற்கு இந்த அரசு சம்மதித்திருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லி, இதை அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஒரு வெற்றி என்றும் கொண்டாடலாம். நாள் குறிப்பிட்டு அவர் எந்த வெற்றியைக் கொண்டாடினாலும் அதில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருந்தன்மை அடங்கி இருக்கிறது என்பதை மாத்திரம் மறந்துவிடவேண்டாம் என்று சுட்டிக்காட்டி, இந்தச் செய்தியை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்தில் அறிவிக்கிறேன்

அதைப்போலவே அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள் முதியோருடைய பென்ஷன் வரவர குறைந்து விட்டதன்று சொன்னார்கள் முதியோர் பென்ஷன் பொறுத்த வரையில் எதுவும் குறைந்து விடவில்லை, முதியோருக்கு, அது ஆரம்பிக்கப்பட்ட வருஷமான 1962-ம் ஆண்டு 49,746 பேருக்கு, முதியோர்களுக்கு இந்த பென்ஷன் அளிக்கப்பட்டது. பிறகு, ஒவ்வொரு ஆண்டும் புதிதாக அனுமதிக்கப்பட்டவர்கள் என்று பார்த்தால் 1963-இல் 12,696 பேர், 1964-ல் 2,891 பேர், 1965-இல் 2,560 பேர், 1966-இல் 8,165 பேர், 1967-இல்3,600பேர், 1968-இல் 3,590 பேர். 1969-ல் 5368 பேர், 1970-இல் 9169 பேர், 1971 இது வரையில் 2710 பேர். ஒவ்வொரு ஆண்டும் புதியதாக அனுமதிக்கப்பட்டவர்கள் தொகை இப்படிப் பெருகியிருக்கிறது. அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு, மாதத்தில் 20 ரூபாய் அளிக்கப்படுகிறது என்ற தன்மையில் 95 லட்சம் ரூபாய் 1971-72-ல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1970-71-இல் அவ்வாறே ஒதுக்கப் பட்டிருந்தது. ஆகவே, அந்த பென்ஷன் தொகையில் நாம் எதுவும் குறைத்துவிடவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அன்றைக்கே நான் சொன்னேன். விடுதலை வீரர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று பார்க்காமல் நாம் செயல்பட்டு வருகிறோம் என்பதை பல உதாரணங்களைக் கொண்டு சொன்னேன்.

நாமக்கல்லாருக்கு நிதி அளித்தது, நெல்லையப்பருக்கு நிதி அளித்தது போல கோமதி சங்கர தீட்சதர் அவர்களுக்காக பென்ஷன் தொகை கேட்டவுடனே; கலெக்டர் ரிப்போர்ட்டு கூடத் தேவையில்லை என்ற அளவிற்கு, அவரை நாமே அறிந்திருக்கிற காரணத்தினால், தரவேண்டுமென்று சொன்னேன். இவைகளைச் சொல்லிக் காட்டுவதற்காகச் சொல்லவில்லை. நாங்கள் ஜனநாயக ரீதியில் நடந்து கொள்கிறோம், பாசிச உணர்ச்சி எங்களுக்கு இல்லை என்பதைச் சொல்லவும், எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் எங்களுக்குப் பாச உணர்வுதான் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டவும் இதில் நடுவிலே 'சி' சேர்ந்து விட்ட காரணத்தினால் பாசம் என்பது பாசிசம் ஆகிவிடுகிறது, ஆகவே 'சி' வேண்டாம் என்று மாத்திரம் நண்பர்களுக்கு எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, அம்பர் சர்க்காவைக் கண்டுபிடித்தவர் ஏகாம்பரம் என்பது தெரியும். ஏகாம்பரம் கண்டுபிடித்த சர்க்காவிற்கு

ஏ' வை நீக்கி, கம்பரம் என்பதற்குப் பதில் "அம்பர் சர்க்கா" என்று பெயர் வைத்தார்கள். அந்த ஏகாம்பரம் இந்த அம்பர் சர்க்காவை கண்டுபிடித்ததற்காக மாதாந்திர உதவித்தொகை தர வேண்டுமென்று பல்லாண்டு காலமாகக் கேட்டு வந்தார். அதற்குப் பிறகு பல சர்க்காக்கள் நவீன முறையில் கண்டுபிடிக்கப்பட்டு விட்டன. அவருடைய இந்தக் கோரிக்கைக்குப் பழைய அரசு இணங்கவில்லை. ஒரு மாதத்திற்கு முன்பு இந்த அரசின் சார்பில் நண்பர் ஏகாம்பரம் என்ற அந்த நபருக்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் இந்த அரசின் சார்பாக பென்ஷன் அளிக்கப்படுகிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். கட்சி சார்பற்ற முறையில், ஜனநாயக ரீதியில் இந்த அரசு நடந்துகொள்கிறது என்பதற்கான இந்த ஆதாரங்களை எடுத்துக்காட்டினேன்.

இந்த மாமன்றத்தில் 34 நாட்களில் பல விஷயங்களைப் பற்றிப் பேசியிருக்கிறோம். எவ்வளவு சமதர்ம நோக்கோடு பல காரியங்களை கவனிக்கவிருக்கிறோம் என்பதையெல்லாம் நிதி நிலை அறிக்கை படித்ததிலிருந்து இதுவரையில் பல்வேறு பிரச்சினைகளில் நடந்த விவாதங்களில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக அறிவார்கள்.

உழவர் பெருமக்களுக்கு வழங்கும் நீண்டகால கடன் தொகை 3 கோடியாக இருந்ததை 21 கோடியாக உயர்த்தியிருக்கிறோம். குறுகிய கால கடனை 61கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். 9 புதிய நீர்ப்பாசன திட்டங்களுக்காக 23 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். காடுகள் என்ற பெயரால் உள்ள சாகுபடி செய்யக்கூடிய நிலங்களை, 50 ஆயிரம் ஏக்கர் நிலங்களை, நிலமற்ற ஏழைகளுக்கு வழங்க முடிவு செய்திருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தில் உள்ள நிலமற்ற தொழிலாளர்களுக்கு அவர்கள் குடியிருக்கின்ற இடங்களை ஒப்படைசெய்ய முடிவு செய்து, அதற்கான மசோதாவைக் கொண்டு வந்து மகிழ்ச்சிகரமாக நிறைவேற்றி இருக்கிறோம்.

கல்வி வளர்ச்சிக்காக 67-68-இல் 53கோடி ரூபாய் இருந்தது. இந்த ஆண்டு 81.84 கோடி ரூபாயாக இந்த மானியத்தில் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 1967-68-இல் 17கோடி

ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போது 33.20கோடி ரூபாய் அளவிற்கு வளர்த்திருக்கிறோம்.

குடிநீர் வாரியத்திற்கு 18 கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கீடு செய்திருக்கிறோம்.

குடிசைப்பகுதிகளை மாற்றுவதற்கான, குடிசை மாற்றுத் திட்டத்திற்காக சென்னையில் மாத்திரம் 4கோடி ரூபாய் 1971-72-இல் செலவிட ஒதுக்கீடு செய்திருக்கிறோம்.

அரிசன மக்களுக்காக 1967-ம் ஆண்டு 4 கோடி ரூபாய் என்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததை, இப்போது 7 கோடி ரூபாய் அளவில் அரிசன மக்கள் நலனுக்காக ஒதுக்கியிருக்கிறோம்.

பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் நலனுக்காக 1½ கோடி ரூபாயாக இருந்தது, இப்போது ஏறத்தாழ 4½ கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அரிசன மாணவர்களுக்கும், பின்தங்கிய மாணவர்களுக்கும் உணவு, உறையுள் ஆகிய இவைகளுக்காக உள்ள உதவித்தொகையை அதிகமாக்கி, இந்த மாமன்றத்தில் நாம் இந்தக் காரியத்தை எடுத்து நிறைவேற்றியிருக்கிறோம்.

குழந்தைகளுக்கு சத்துணவு ஊட்டுவது என்ற முறையில் 130ஆயிரம் குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்படிருக்கிறது.

பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதி திரட்ட தமிழக பரிசுச் சீட்டு மூலமாக 40லட்ச ரூபாய் என்ற அளவிலும், நான் விடுத்த அறிக்கைக்கேற்ப ஏறத்தாழ 20 லட்ச ரூபாய் சேர்ந்து, -நான் எதிர்பார்த்தது 40 லட்ச ரூபாய் என்றாலும், 60 லட்ச ரூபாய்க்கு மேல் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி தாண்டியிருக்கிறது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புக்காக 30 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான திட்டம் இந்த மாமன்றத்தில் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. 6,500 ஆசிரியர்களுக்கு வேலை வழங்குகின்ற திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 50 உதவி மருத்துவர் பதவிகளை ஏற்படுத்துவது என்று இந்தக் கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்டது. 100 மருத்துவப் பட்டதாரிகளுக்கு

மாதம் 250 ரூபாய் உதவித்தொகை அளிக்கும் திட்டமும் இந்தக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

200-க்கு மேற்பட்ட செவிலியர் பதவிகளை உருவாக்குவதன் மூலம் வேலை வாய்ப்புக்கான வசதிகளைப் பெருக்கியிருக்கிறோம். படித்தவர்களிடையே வேலை வாய்ப்புகளைப் பெருக்க காவல்துறையில் பள்ளி இறுதி வகுப்பில் தேறியுள்ள தகுதியுள்ள மாணவர்கள் ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டத்தை இந்தக் கூட்டத்தொடரில் நிறைவேற்றியிருக்கிறோம். இதைப்போலவே 2,000 பட்டதாரி மாணவர்களுக்கு இளைஞர் அணி மூலமாக வேலை கொடுக்க, இந்த மாமன்றத்தில், இந்தக் கூட்டத்தொடரில் அறிவித்திருக்கிறோம்.

தொழில் நுணுக்கப் படிப்பில் தேர்வு பெற்று தகுதியுள்ள 3 ஆயிரம் பேர்களுக்கு அவர்கள் சிறு தொழில் நடத்த நாம் தலைக்கு ஆயிரம் ரூபாய் கடன் வழங்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறோம்.

மேலும் நகர்ப்புறத்தில் ஒரு கிரௌண்டு நிலம் உள்ளவர்கள் அறுபதாயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் பயனடையத்தக்க அளவிற்கு அந்த வரியிலிருந்து விலக்கு அளித்திருக்கிறோம். சமதர்மத்தை நோக்கிச் செல்லும் பாதையில் மற்றொரு படியாக பஸ்களுக்கான உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்து இம் மாமன்றத்தில் நிறைவேற்றியிருக்கிறோம்.

சென்ற கூட்டத்தொடரில் மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள், 'ஆளும் கட்சியில் உள்ள நாங்கள் பாஸிஸ உணர்ச்சி பெற்றவர்கள், பஸ் முதலாளிகளுக்குப் பக்கத்தில் நிற்பவர்கள்' என்றெல்லாம். 'நீங்கள் சொல்லி நாங்கள் கேட்கிறதா?' என்ற அந்த பாஸிஸ உணர்ச்சிக்கு ஆளாகாமல், நீங்கள் சொன்னதை ஏற்று அவற்றை இம் மாமன்றத்திலே நிறைவேற்றியிருக்கிறோம். வேண்டுமானால், இந்தப் பெருமை முழுவதையும் திருமதி அனந்தநாயகி அவர்களே எடுத்துக் கொள்ளட்டும். அதே நேரத்தில் பஸ் முதலாளிகளின் வசவுகளையும் அவர்களே எடுத்துக்கொள்ளட்டும்.

மேலும் 50 பஸ்களுக்கு மேற்பட்ட பயணப் பேருந்துகளை வைத்திருக்கும் நிறுவனங்களை தேசியமயமாக்கியிருக்கிறோம்.

மதுரை மாநகரம் ஒரு கார்ப்பொரேஷனாக மாற்ற அது ஒரு மேயரைப்பெற்றிருக்கும் அளவிற்கு, சட்டங்களை நிறைவேற்றி யிருக்கிறோம்.

அடுத்து, ஏற்கெனவே இருந்த நில உச்சவரம்புச் சட்டத்தில் இருந்த விலக்குகளையெல்லாம் நீக்கிடும் வகையில், கரும்புத் தோட்டம், மேய்ச்சல் காடு என்றெல்லாம் வைத்துக்கொண்டு அச்சட்டத்திலிருந்து விடப்பட்டிருந்த விலக்குகளையெல்லாம் களைந்திடும் வகையில் சட்டத் திருத்தங்களை நிறைவேற்றியிருக் கிறோம். எனவே சமதர்ம மணம் கமழுமளவிற்கு அண்ணா அவர்கள் வழிநின்று, அவர் வகுத்துத் தந்த கொள்கைகளின் அடிப்படையில் பல திட்டங்களை உருவாக்கித் தந்திருக்கிறோம்.

இதிலே இன்னும் பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமலும் இருக்கின்றன. குறிப்பாக, பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்லும்போது காவிரி நீர் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டார்கள். இதற்கென நாம் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்றினை 31-ம் தேதி கூட்ட இருக்கிறோம். மத்திய அரசு இதிலே காட்டும் மந்த நிலையைக் கண்டிக்கும் வகையில், இந்த மன்றத்தின் குரலை எழுப்பியிருக்கிறோம் இங்கே. எனவே அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் எடுக்க இருக்கும் முடிவினை நாம் சிரமேல் தாங்கி, அதை நிறைவேற்றத் தயாராயிருக்கிறோம் என்ற உறுதியையும் கூறி, எதிர்க்கட்சி, காங்கிரஸ் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களுக்கும், அனைத்துக் கட்சித் தலைவர்கட்கும் தமிழக மக்களுக்கும் இவ்வுறுதியை மீண்டும் எடுத்துச் சொல்லிக்கொண்டு உங்கள் அனைவருக்கும் நன்றிகூறி, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.2) சட்டமுன் வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32-1971) நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

உசிலம்பட்டி தொகுதி இடைத்தேர்தல் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது பற்றி தேர்தல் கமிஷனரோடு தொடர்பு கொண்டிருக்கிறோம். இடையிலே ஒரு தேர்தல் நடைபெற வேண்டியிருப்பதால் இரண்டையும் ஒரே சமயத்தில் வைத்துக்கொண்டால் கஷ்டமாக இருக்கும் என்று கமிஷனர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். இவை பற்றிய அறிவிப்பு விரைவில் வரும்.

## துணை மானியம்

உரை : 29 நாள்: 28.3.1973

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே. இந்த இறுதித் துணை மானிய மதிப்பீடுகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நிறைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப் பிட்டதுபோல் கடைசியாக நேரத்தை நானும் அவருமாகத்தான் பங்கிட்டுக்கொள்ளுமளவிற்கு, இன்னும் பத்து நிமிஷத்திற்குள் என்னுடைய பேச்சை நான் முடிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

பல கருத்துக்கள் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டன. குறிப்பாக நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்களும் திருமதி அனந்தநாயகி அவர்களும் ஏலமெடுத்த மதுக்கடைக்காரர்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களைப் பற்றியெல்லாம் மிக விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவைகளை எந்த வகையில் பரிசீலிக்கலாம் என்பது குறித்தும் அரசு ஆராய முயலுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இதன் தொடக்கத்திலேயே பாதிக்கப்பட்ட பல பேர் அரசுக்கு முறையீடுகள் அளித்தபோது வெளியேயிருந்த சில கட்சித் தலைவர்கள் கள்ளுக்கடைக்காரர்களுக்கு, ஏதோ அவர் களிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாயைப் பெற்றுக்கொண்டு சலுகைகளை அளிக்கப்பார்க்கின்றார்கள் என்பது போன்ற தவறானப் பிரசாரங்களை எல்லாம் செய்தார்கள். இப்பொழுது சுதந்திரா கட்சியினுடைய சார்பிலும், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தங்கமணி அவர்களும், திருமதி அனந்தநாயகி அவர்களும் இப்பொழுது சொன்ன இந்தக் கருத்தின் அடிப்படையில் அவர்களுக்கு ஏதாவது கருணை காட்டியாக வேண்டும். சில

குடும்பங்கள் தற்கொலை செய்துகொள்ளுமளவுக்கெல்லாம் போய்விட்டது என்று உருக்கமாக எடுத்துச்சொன்னார்கள்.

**திருமதி த.ந. அனந்தநாயகி:** துணைத் தலைவரவர் களே, எந்தக் கட்சி சார்புடையவர் என்றும் அவர் எந்தக் கட்சியின் சார்பாகச் சொன்னார் என்றும் சொன்னால் நல்லதாக விருக்கும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அவர்களுடைய பெயரைச் சொன்னாலே ஆளும் காங்கிரஸ் கட்சி என்று எல்லோரும் புரிந்துகொள்ளுமளவுக்கு இருக்கிறது. இன்றையதினம் தமிழகத்தில் ஆளும் காங்கிரஸ் கட்சிக்கு ஒரு சக்தி இருக்கிறது என்று சொன்னால் அது திருமதி டி. என். அனந்தநாயகி என்று எல்லோரும் புரிந்துகொள்வார்கள். திருமதி டி. என். அனந்தநாயகி என்று சொன்னாலே ஆளும் காங்கிரஸ் கட்சி என்றுதான் பொருள். அதற்குள் என்ன சந்தேகம் வந்து விடப்போகிறது. அதற்குள்ளாகவா வேறு ஒரு கட்சிக்குப் போக வேண்டிய நிலை வரப்போகிறது?

**திருமதி த.ந. அனந்தநாயகி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அவர்கள் கிண்டலுக்காகவே சொல்கின் றார்கள் என்பது எனக்குப் புரிகிறது. எதற்காக எந்த சமயத்தில் எப்படிப்பட்ட நிலைமையில் ஏற்பட்டது என்று எண்ணிப் பார்த்தால் புரியும். உங்கள் கட்சியில் ஏற்பட்ட அவல நிலைமை பிற கட்சிகளிலும் ஏற்படும் என்பதை உணர வேண்டும். அப்படி ஏற்பட்டதுதான் எங்களுடைய கட்சி நிலையும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** துணைத் தலைவரவர் களே, எங்களுடைய கட்சிக்கு ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. நாங்கள் இருந்த இடத்திலேயேதான் இருக்கிறோம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தத் துணை மதிப்பீட்டில் ஏற்கனவே வரவு- செலவுத் திட்டத்தில் சொன்னதைவிட அதிகமாகக் கோரப்படுகிறது என்றெல்லாம் கூறப்பட்டது. இது

ஒன்றும் புதியதில்லை. இறுதித் துணை மதிப்பீடு என்று ஏன் போட்டார்கள், துணை, மானியம் என்று கூறக்கூடாதா என்று சொன்னார்கள். ஆண்டாண்டு- காலமாக ஆண்டு இறுதியில் தரப்படுவது துணை மதிப்பீடு, அது இறுதித் துணை மதிப்பீடு என்றுதான் பெயரிடப்படுகிறது. 1966-67ல் 62.91 கோடி ரூபாய் துணை மானியம் கோரப்பட்டது. அப்பொழுது பட்ஜெட்டினுடைய மொத்த அளவு 211 கோடி ரூபாய். அந்த நேரத்தில் 62 கோடி இறுதித் துணை மதிப்பீடு கோரப்பட்டது. இப்பொழுது பட்ஜெட்டின் மொத்த அளவு 500 கோடி என்று இருக்கும்போது 64 கோடி ரூபாய்தான் கோரப்படுகிறது என்பதை மறந்துவிடக்கூடாது. மத்திய அரசில்கூட பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது, வருவாய் கணக்கிலும் மூலதனக் கணக்கிலுமாகச் சேர்த்து 6,800 கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் இப்பொழுது இறுதியில் துணை மதிப்பீடு போட்டு 1,302 கோடி ரூபாய்க்கு மத்திய அரசு ஒப்புதல் கோரியிருக்கிறார்கள். ஆகையினால் இது ஒன்றும் புதியதுமில்லை அசாதாரணமானதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

70 கோடி ரூபாயைச் செலவழிக்க முடியாமல் திருப்பித் தந்து விட்டார்கள் என்று சொன்னார்கள். 57 கோடி ரூபாய் வணிகத் துறையில் நின்ற தொகையைக் குறிக்கிறது. சென்ற ஆண்டு வரையில் உணவுக் கட்டுப்பாடு இருந்து அது நீக்கப் பட்டுவிட்ட காரணத்தால் அந்தப் பணம் செலவழிக்கப்பட வேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது. ஆகவே அதை சரண்டர் என எடுத்துக்கொள்ளக்கூடாது. செலவழிக்க முடியாத நிலைமை ஏற்பட்டதுதான் காரணம். அதேபோல் ரிசர்வ் பேங்கிற்கு அதிகப் பணம் தரவேண்டுமென்ற நிலைமையில் ஒரு மதிப்பிட்டோம். அதற்குப் பிறகு 40 கோடி ரூபாய் தர வேண்டுமென்ற நிலைமையில் பேச்சுவார்த்தை நடத்தி 11 கோடிதான் தர வேண்டுமென்று ஏற்பட்டதன் காரணமாக அதிலே 29 கோடி ரூபாய் இருந்தது. இது சரண்டர் என்று சொல்ல முடியாது. செலவழிப்பதற்கு வாய்ப்பற்ற நிலை ஏற்பட்டது. இதை சரண்டர் என்று சொல்வதற்கில்லை. திட்டங்களுக்காக

ஒதுக்கப்பட்ட எந்தப் பணமும் செலவழிக்கப்படாமல் சரண்டர் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பல விஷயங்களை நண்பர் மதி அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். குடிசை வாழ் மக்களுக்கெல்லாம் அவர்களுடைய இடங்களைப் பட்டா செய்து கொடுக்கிறோம். நகரங்களிலும் நகரத்தினுடைய சுற்றுப்புறங்களிலும் அதை ஒழிக்க முடியுமா என்பதை ஆராய்ந்து வருகிறோம். அதற்காகத் திட்டத்தில் உள்ளது. தொழிற்சாலைகள் அபிவிருத்தி அடைகின்ற நேரத்தில் அவற்றின் தேவையைக் கருத்தில் கொண்டு அதனால் ஏற்படுகின்ற தடைகளுக்குட்பட்டு பரிசீலனை செய்து பார்த்து வரவேண்டிய அவசியமிருக்கிறது. குடிசை மாற்று வாரியம் அதற்கான பணியில் ஈடுபட்டு வேலை செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முக்கியமாக நண்பர் லத்தீப் அவர்கள் எடுத்துச்சொன்ன பிரச்சனை, அறிவிப்பு இப்பொழுதே வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மிக வலியுறுத்தி, மிக உருக்கமாக எடுத்துச் சொன்னார்கள். லப்பை முஸ்லீம்கள் ஏற்கனவே பின்தங்கிய வர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். உருது முஸ்லீம் களைச் சேர்க்கவேண்டுமென்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். பிற்பட்டோர் நலக் குழு அறிக்கையில் இதுபற்றிக் கூறப்பட்டிருக்கிறது. சலுகைகளைப் பொறுத்த வரையிலும், அத்தனைபேரும் அவர்கள் லப்பைகளாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி லப்பை என்றே கருதப் படுவார்கள். கொஞ்சம் தமிழ் பேசினாலும் லப்பை என்று பிற்பட்டோர் நலக்குழு ஏற்றுக்கொண்டிருக்கிறது. 1921-ம் ஆண்டு அறிக்கையின்படி பொதுவாக முஸ்லீம்கள் 85 முதல் 90 சதம் வரையில் லப்பைகளாகவே கருதப்பட்டு வரு கின்றார்கள் என்று கூறுகிறது. அதிலே மீதமுள்ள 10 சதவிகிதத் தினர்தான் உருது முஸ்லீம்களாக இருக்கிறார்கள் என்று அந்தக் கணக்கு அளிக்கிறது. வெகு காலமாகவே இருந்து வந்தவர்கள் லப்பை வகுப்பினர். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் மீதமுள்ள 10 சதவிகிதத்தினர்தான், அவர்களுக்கும் எல்லாச் சலுகைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. முஸ்லீம்

சமுதாயத்தின் சார்பாகவும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் சார்பாகவும் காயிதே மில்லத் அவர்களும், அவருக்குப் பிற்பட்டு வந்த தலைவர்களும், தமிழ்நாட்டிலுள்ள முஸ்லீம் தலைவர்களும் இந்த ஒரு கோரிக்கையை இந்த மன்றத்தில் வாதிட்டிருக்கிறார்கள். ஆகையினால் உருது முஸ்லீம்களும் பிற்பட்டோர் இனப் பட்டியலில் சேர்க்கப்படுவர் என்பதை மகிழ்ச்சியோடு இப்பொழுது நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு.திருப்பூர். ஏ.எம். மொய்தீன்:** தலைவரவர்களே, நான் எனது கட்சியின் சார்பிலும், என்னுடைய சகாக்களின் சார்பிலும், என் சார்பிலும் முதலமைச்சர் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அமைச்சரவைக்கும் எனது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தக் கோரிக்கைக்கு ஆதரவு அளித்த மன்றத்திலுள்ள எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும், இதற்குப் பெரிதும் உதவியாகயிருந்த பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது) நேரமாகிவிட்டது. திரு.பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் மற்றவைகளை எல்லாம் நிதி ஒதுக்கீடு மசோதாவில் பேசுகிறபோது நாளை சொல்லிக்கொள்கிறேன் என்று கூறி, அமைகிறேன். வணக்கம்.

# நிதி ஒதுக்கீடு மசோதா

**உரை : 30** **நாள்:29.3.1973**

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடுபற்றி காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களும், மற்றைய கட்சியினுடைய தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை நீண்ட நேரம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

குறிப்பாகப் பல்வேறு மானியங்களைப்பற்றி விவாதித்து நிதி ஒதுக்கீடு பற்றிய கருத்துக்களை எடுத்துச்சொல்கிற நேரத்திலே, பொது விவாதத்திலேயும் மானியக் கோரிக்கைகளிலேயும் எடுத்துச்சொல்ல விட்டுப்போன பல்வேறு பிரச்சினைகளை இந்த நாளிலே எடுத்துச்சொல்லப் பயன்படுத்திக்கொள்வது முறையாக இருந்து வந்திருக்கிறது. அந்த வகையில் பல விஷயங்கள் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. நான் அவை எல்லாவற்றிற்கும் தனித் தனியாக இப்பொழுது பதில் சொல்வது என்பது இயலாத காரியம். ஆனாலும் ஒவ்வொரு உறுப்பினரும் தங்களுடைய தொகுதியைப்பற்றியும் தங்களுடைய தொகுதியிலே நிறைவேற்றப்படவேண்டிய காரியங்களைப் பற்றியும் பொதுப்பணித்துறையிலேயும், வேறு பல துறைகளிலேயும், மருத்துவத் துறையிலேயும், கல்வித் துறையிலேயும், வேளாண்மைத்துறையிலேயும் நிறைவேற்றப் பட வேண்டிய காரியங்களை விளக்கமாக இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் நிச்சயமாகக் குறிப்புப் புத்தகத்திலே இடம் பெற்றிருக்கும் என்ற அளவிலே அதிகாரிகள் வாயிலாக அவை கவனிக்கப்பெற்று ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற உறுதியை மாத்திரம் இந்த மன்றத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக நம்முடைய மன்றத்தினுடைய விவாதங்கள் சில நாட்கள் சுவையாகவும், சில நாட்கள் மிகச் சூடாகவும் ஆகிக் கொண்டிருக்கின்ற நிலைமையைக் காண்கிறோம். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள், என்னையும் சேர்த்துத்தான், இங்குஉரக்கப் பேசினாலும், மெதுவாகப் பேசினாலும், - 50 லட்சம் என்ன ஆயிற்று என்று கேட்டால், பத்திரிகையிலே 50 லட்சம் என்ன ஆயிற்று என்றுதான் வரும், 50 லட்சம் என்ன ஆயிற்று என்று உரக்கக் கேட்டாலும் பத்திரிகையிலே 50 லட்சம் என்ன ஆயிற்று என்றுதான் வரும். அதற்குச் சிறப்பாகப் பெரிய எழுத்துக்களைப் போட்டு யாரும் வெளியிடப் போவதில்லை. ஆனால் பொதுக் கூட்டங்களிலே வேகத்தை உணர்ச்சி முழக்கங்களை வைத்துக் கொள்வது நல்லது. சில நேரங்களிலே ஒருவருக்கொருவர் தனிப்பட்ட முறையிலே தாக்குவதைப் பார்க்கும்பொழுது உள்ளபடியே நான் வேதனைப்படுகிறேன். எந்தக் கட்சித் தரப்பிலிருந்து வந்தாலும், ஆளுங்கட்சித் தரப்பிலேயிருந்து வந்தாலும், எதிர்க்கட்சித் தரப்பிலேயிருந்து வந்தாலும், தோழமைக்கட்சித் தரப்பிலேயிருந்து எதிர்க்கட்சிக்கு வந்தாலும், எந்தக்கட்சித் தரப்பிலிருந்து வந்தாலும் தனிப்பட்ட முறையில் ஒருவருக்கொருவர் தாக்கிக்கொள்வது, கேலிசெய்வது, நாம் நிதியை ஒதுக்குகின்ற இந்த நேரத்திலே, அவைகளையும் ஒதுக்கிவிடுவது நல்லது என்று கருதுகிறேன். நிதியை ஒதுக்கி அரசுக்குத் தருகிறீர்கள், அவைகளை ஒதுக்கி அரசுக்குத் தராமல் அவைக்கு வெளியே எறிந்துவிடுவது நல்லது என்று நினைக்கிறேன். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும். எந்தத் தரப்பிலே இருக்கின்றவர்களானாலும், என்னையும் உள்ளிட்டே சொல்கிறேன், ஒத்துழைக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர் மதி அவர்கள் சொன்னார்கள். மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் சொன்ன விஷயத்தைப் பற்றிக் கூறி யிருக்கலாம், மாஜிப் பேராசிரியர் என்று கூறுவதால் மனமகிழ்ச்சி ஏற்படப் போவதில்லை. ஆசிரியர்கள் மாஜியாக ஆவதில்லை; டாக்டர் ஹாண்டே அவர்கள் டாக்டர் தொழிலை விட்டுவிட்டு

முழுக்க முழுக்க அரசியல் வேலை, கட்சி வேலை செய்தால் கூட அவர்கள் டாக்டர் ஹாண்டேதான். வழக்கறிஞர்களும் அப்படித்தான். என் பெயரைச் சொல்லக் கூடாதா என்று அம்மையார் அவர்கள் கேட்பார்கள், அவர்கள் பெயரையே வைத்துக்கொள்ளலாம், வழக்கறிஞர் தொழிலை விட்டு முழுக்க முழுக்க அரசியலுக்கு வந்தாலும் வழக்கறிஞர்தான். ஆனால் மந்திரிகள்தான் பதவியைவிட்டுப் போனபிறகு மாஜிகளாக ஆகிவிடுகிறார்கள். மக்களாலும், அறிஞர் அண்ணா அவர்களாலும் பேராசிரியர் என்று அழைக்கப் பட்டவர்கள் அவர்கள். நண்பர் மதி அவர்களாலும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் மாஜி பேராசிரியர் என்று அழைக்கப்பட்டதாலே...

**திரு.கே.ஏ. மதியழகன்:** ரொம்ப சாமர்த்தியமாக வாதாடிக்கொண்டிருக்கிறார்கள் முதலமைச்சர் அவர்கள். மாஜிப் பேராசிரியர் என்று சொன்னதே, எனக்குத் தெரியவில்லை, படித்துவிட்டு உறுப்பினர் வரவேண்டு மென்றதால், நிலக்கரி கேட்கக்கூடாதா என்று நான் மூன்று முறைகள் கேட்டபொழுது... அவர்கள்- பேராசிரியர்- என்பதிலே ஆட்சேபணை இல்லை, பேராசிரியர் இல்லாதவர் களையெல்லாம் பேராசிரியர் என்று ஒத்துக்கொள்ளும்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களை ஒத்துக்கொள்வதிலே எந்தவிதப் பாதகமும் இல்லை- அவர்கள் தெரியாதா, புரியாதா என்று சொன்னது எனக்குக் கொஞ்சம் விவரமாக இருந்தது. என்னை மட்டும் முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்வது, முன்னாலே அவர்கள் எடுத்துச் சொன்னதற்கு உதவிபுரிவதாக இல்லை.

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** நான் உட்படத்தான் சொல்கிறேன். மந்திரிகள் பதவிகளைவிட்டுப் போனபின் மாஜி மந்திரிகள் என்று சொல்வார்கள். ஆனால் டாக்டர்கள், வழக்கறிஞர்கள் மாஜியாகி விடுவதில்லை. மன உணர்வுகளை மற்றவர்களைப் புண்படுத்திவிடுகின்ற முறை யிலே பரிமாறிக் கொள்ளாமல் இருப்பது நல்லது, நகைச் சுவைக்குப் பரிமாறிக்கொள்ளலாம். தனிப்பட்ட முறையில்

ஒருவருக்கொருவர் தாக்கிக்கொள்வது நல்லது அல்ல. விட்டு விடுவது நல்லது என்று கருதுகிறேன்.

பிற்பட்டோர்பற்றி இங்கே எடுத்துக்கூறப்பட்டது. இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்பட்டோருடைய நலனுக்கும் எடுத்துக்கொண்ட சீரிய முற்சிகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்காட்டினார்கள். அதிலே அ.தி.மு.க.வைச் சேர்ந்த திரு. வேலப்பன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே பெரியாருடைய கொள்கையும், அண்ணா அவர்களுடைய கொள்கையும் பிற்பட்ட மக்களுக்கு இவ்விதச் சலுகைகள் செய்வது என்பதால், பொருளாதார ரீதியிலே முன்னேறிய சமுதாயம், பின்தங்கிய சமுதாயம் என்று பிரித்து வைத்துக்கொண்டு பொருளாதாரரீதியிலே பிற்படுத்தப் பட்டவர்களுக்கு இவ்விதச் சலுகைகள் வழங்கப்படவேண்டு மென்று சொன்னார்கள்.

இது பெரியாருடைய கொள்கையாக இருந்ததில்லை. பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கையாக இருந்த தில்லை. மற்றும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்காக உழைக்கிற வேறு கட்சிகளுடைய தலைவர்களுடைய கொள்கையாக இருந்ததாக அறியவில்லை. ஆகவே, இந்தக் கருத்தை யாரும் ஏற்றுக்கொள்ள இயலாது.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே உருது பேசுகிற முஸ்லீம்களை இணைப்பதைப்பற்றி முஸ்லீம் லீக் கட்சி உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். நண்பர் கோவைச் செழியன் அவர்கள் கொங்கு வேளாள சமூகத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தைக் குறிப்பிட்டார்கள். 30 ஆண்டு காலமாக முஸ்லீம் மக்கள் கேட்டு இப்போது நிறைவேறியிருக்கிறது. எந்த ஒரு கோரிக்கையும் கனிந்து, பழுத்த பிறகு நிறைவேறும் என்பதற்கு உருது! முஸ்லீம்கள் நேற்றையதினம் சேர்க்கப்பட்டது ஒரு உதாரணமாக இருக்கும். இன்னும் கொஞ்சம் காலம் பொறுத்துக் கொண்டு, அவர்களைப் பற்றியெல்லாம் அரசு பரீசிலிப்பதற்கேற்ற நிலைக்கு அவர்கள் எங்களை ஆளாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

செழியன் ஒன்று சொன்னார்கள். சன்ஸ் ஆஃப் தி சாயில் என்ற ஒரு பெரிய பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதை விளக்கமாகப் பேசுவதற்கு நேரமில்லை. பிரதமர் அவர்கள் கூட ஒப்புக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் முழுமையாக ஒப்புக் கொண்டதாக நான் அறியவில்லை. சன்ஸ் ஆஃப் தி சாயில் என்பதற்கு கடைநிலை ஊழியர்களாக இருப்பவர்கள் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்று சொல்லியிருப் பார்களேயல்லாமல் அதற்கு மேலே உள்ள பதவிகளுக்கு வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் வரக்கூடாது என்ற கருத்தை இன்றுள்ள இந்திய ஒருமைப் பாட்டிற்கு விரோதமாக யாரும் சொல்லியிருப்பார்கள் என்று கருதவில்லை. அப்படி வேறு மாநில முதலமைச்சர்கள் சொல்லியிருப்பார்களானால் அந்தக் கருத்து நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் ஒத்து வராது. அந்தக் கருத்து நமக்கு உடன்பாடு அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நண்பர் சுப்பு பேசுகிற நேரத்தில் 10 ரூபாய் டியர்னஸ் அலவன்சை பிராவிடண்டு பண்டில் சேர்த்தது தவறு என்று சொன்னார்கள். ரூபாய் 300, 200 சம்பாதிக்கக் கூடியவர்கள் இந்த 10 ரூபாயை மீத்து வைக்கவேண்டுமென்று எண்ணுவார்கள். இந்த 10 ரூபாய் தந்து அவர்கள் மீத்து வைக்காமல் இருப்பதைத் தவிர்த்து நாமே மீத்து வைத்து ஒரு ஆண்டு காலம் மீத்து வையுங்கள் என்று சொல்கிறோம். தர வேண்டுமென்ற அனுதாப உணர்வும் அதேநேரத்தில் நம் நிதி நிலைமை நெருக்கடியை உத்தேசித்தும் செய்யப்பட்டிருக்கிறது.

இன்னொன்று சொன்னார்கள். எம்.எல்.ஏ.க்குத் தரப் படுகிற படி மிகக்குறைவு, இது வேறு மாநிலங்களில் அதிகமாக இருக்கிறது என்று இன்றைக்கும் குறிப்பிட்டார்கள். நேற்றைய தினம் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். ஐந்து ரூபாய் உயர்வு என்று வெளியில் சொல்லக் கேவலமாக இருக்கிறது. ஐந்து ரூபாய் உயர்வா என்று மற்றவர்கள் கேட்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் இந்தப் படி உயர்வினுடைய சரித்திரத்தைப் பார்த்தேன். ஒரு காலத்தில்

12½ ரூபாயாக இருந்து 2½ ரூபாய் உயர்த்தப்பட்டு 15 ரூபாயானது. அப்போது அவர்களைப் பார்த்து 2½ ரூபாய்தானா என்று யாரும் கேட்கவில்லை. நாம் 5 ரூபாய் தரும்போது, 5 ரூபாய்தானா என்று கேவலமாகச் சொல்வது, அதெல்லாம் எங்கள் ஜாதகம். இரண்டரை ரூபாய் அதிகமாகக் கொடுக்கும் போது சொல்லவில்லை. ஐந்து ரூபாய் அதிகமாகக் கொடுக்கும் போது, கொடுக்கிற நேரத்தில் கேவலம் என்று பேசுவதாகச் சொன்னார்கள். பதினைந்து ரூபாய் 20 ரூபாயாகி 25 ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது. இதற்கு நாம் மகிழ்ச்சியடைய வேண்டுமேயல்லாமல் இந்த அளவிற்காவது செய்ய முடிந்ததே என்று மகிழ்ச்சியடைய வேண்டுமேயல்லாமல் இதைக் கண்டிக்கத் தேவையில்லை என்று குறிப்பிட்டுச் சொல்வேன்.

ஐ.ஏ.எஸ். சில பேருக்கு கிடைக்காத காரணத்தினால் அரசாங்க அதிகாரிகள் யாரோ தாக்கிப் பேசிக்கொண்டிருப்பதாக நண்பர் சுப்பு சொன்னார்கள். நாம் ஐ.ஏ.எஸ். கிடைப்பதில் அக்கறை செலுத்துவதில்லை. ஐ.ஏ.எஸ்.-ஐ யார் யாருக்குக் கொடுங்கள் என்று சொல்கிற இடத்திலே நாங்கள் இல்லை. படித்தவர்கள், அதற்கான தகுதி பெற்றவர்கள் வருகிறார்கள். ஊன்றி கவனிப்பதெல்லாம் இந்த ஐ.ஏ.எஸ்.-இல் எத்தனை தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். எத்தனை பிற்படுத்தப் பட்டவர்கள் இருக்கிறார்கள் என்பதை மிக மிக அதிகமான உன்னிப்போடு கவனித்துக்கொண்டிருக்கிறேன். அதை விடுத்து எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதைக் கவனிப்பது இல்லை. அரசாங்க, அதிகாரிகள் அரசியல் பேசுகிறார்கள் என்றால், அதுவும் ஐ.ஏ.எஸ். கிடைக்கவில்லையென்று பேசுகிறார்கள் என்றால், ஐ.ஏ.எஸ். கிடைத்ததற்காக அரசியல் பேசினாலும் சரி, ஐ.ஏ.எஸ். கிடைக் காததற்காக அரசியல் பேசினாலும் சரி, அவங்களெல்லாம் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை மாத்திரம் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள், விசாரணைக் குழு எதற்காக என்றெல்லாம் சொன்னார்கள். விசாரணைக் குழுவை நாங்கள் மறுக்கிறோம் என்று- சொன்னார்கள்.

வெளியேயும் சொன்னார்கள். இந்த அவையிலும் சொன்னார்கள். இதை கருப்பு மசோதா ரௌலட் சட்டம் என்றுச் சொன்னார்கள். இதனால், மக்களுக்குக் குழப்பம் வந்துவிடக் கூடாது. அவர் ரௌலட் சட்டத்தைப் பற்றி கேள்விப்பட்டிருக்கலாம். விவரம் தெரியாமல் இருக்கலாம். இந்தக் குழுவை நியமிக்கிற நேரத்தில், இதற்காக சட்டங்களை நிறைவேற்றுகிற நேரத்தில், இதுதான் ரௌலட் சட்டம் என்று மக்கள் தவறான கருத்தைக் கொள்ளக்கூடாது. நான் ஜேம்ஸ் அவர்களுக்குச் சொல்வேன். இந்தச் சட்டம் செலக்ட் கமிட்டிக்கு விடப்பட்ட நேரத்தில் வெளியேறினார்கள். வாக்அவுட் செய்தார்கள். ஆளும் காங்கிரஸ் கட்சியால் ராஜஸ்தானிலும், மராட்டியத்திலும் இதே போன்ற சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் மாறுதல் என்னவென்று பார்த்தால் வேண்டுமென்றே அவதூறு என்று குற்றம்சாட்டினால் அப்படிக் குற்றம் சாட்டியவர்களுக்கு மூன்று ஆண்டு காலம் தண்டனை விதிக்கப்படும் என்று நாம் இங்கே சுட்டிக்காட்டி இருப்பதைப் போலவே மராட்டியத்திலும், ராஜஸ்தானிலும் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

ஒரு பெரிய வேறுபாடு என்னவென்றால் நம்முடைய மாநிலத்தினுடைய சட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது அந்தக் குற்றம் நிரூபிக்கப்பட்டு அவர்கள் குற்றவாளியாக ஆகிவிட்டால் அவர்களுக்கு 7 ஆண்டுகாலம் தண்டனை விதிக்கப்படும். அவர்களுக்கு 7 ஆண்டு காலம் தண்டனை விதிக்கலாம் என்று சட்டம் நிறைவேற்ற இருக்கிறோம். ஆனால் ராஜஸ்தானிலும், மராட்டியத்திலும் நிலைமை என்னவென்றால், குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது இன்னின்ன குற்றம் என்று நிரூபிக்கப்பட்டுவிட்டால் அது சர்க்கார் மூலமாக கவர்னருக்கு அனுப்பப்பட்டு கவர்னர் சட்டசபைக்கு அனுப்பினால் அது சட்டசபையோடு முடிவடைகிறது. ஏழு வருஷம் என்பது அங்கே கிடையாது. அது மாத்திரமல்ல, மராட்டியத்திலும், ராஜஸ்தானி லும் யார் யார் இந்தப் பொதுப்பணியிலே, பொது வாழ்க்கை யிலே இருக்கிறவர்கள் வருகிறார்கள் என்று பார்த்தால், முதல மைச்சரைத் தவிர மற்ற அமைச்சர்கள், மற்றவர்கள் வருகிறார்கள்.

ஆனால், இங்கே முதலமைச்சரைச் சேர்த்து நாம் விசாரிக்கலாம். முதலமைச்சர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டால் 7 ஆண்டு கால தண்டனை உண்டு என்று இந்தச் சட்டத்தில் இருக்கிறது. இந்தச் சட்டத்தைக் குறைத்துப் பேசுகிறோம். ஆனால், மராட்டியத்தி னுடைய சட்டத்தையும், ராஜஸ்தானுடைய சட்டத்தையும் ஆளும் காங்கிரசாக இருக்கிற கட்சி அங்கே நிறைவேற்றி விட்டு இங்கே நம்முடைய மாநிலத்திலே மாத்திரம் இந்தச் சட்டம் வந்தால் இது கருப்பு மசோதா, இது ரௌலட் சட்டம், நாங்கள் வெளியேறுகிறோம். இதை ஆதரிக்க முடியாது என்று கூறுவது பொருத்தமாக இல்லை.

அம்மையார் என்ன சொல்ல விழைகிறார்கள் என்று எனக்குத் தெரியும். அது வேறு மாநிலம், இது வேறு மாநிலம் என்று சொல்வார்கள். நேற்றைய தினம் நாங்கள் அகில இந்திய கட்சி, மத்தியப் பிரதேசத்திலும் போட்டியிடுவேன் என்று சொல்லியிருக்கிறார்கள். மாநிலங்களைத் தனித்தனியாகப் பிரிப்பது அவசியமில்லை. அதில் இந்திய கட்சியாக இருக்கிற அவர்கள் இந்த மாநிலத்திற்கொன்று அந்த மாநிலத்திற்கொன்று என்று பேசக்கூடாது என்பதற்காக இதைக் குறிப்பிடுகிறேனே யல்லாமல் வேறு அல்ல.

தியாகி மானியத்தைப் பற்றியும் முதியோர் ஓய்வூதியத் தைப் பற்றியும் சொன்னார்கள். தியாகி மானியத்தைப் பொறுத்த அளவில் வேறு மாநிலங்களைவிட தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் 7,500 பேர் என்கிற அளவிற்கு நாம் வழங்கி வருகிறோம். இதிலே எந்தவிதமான கட்சி மாறுபாடும் இல்லாமல், இன்னும் சொல்லப்போனால், சில பேர்களுக்கு, நற்சான்றுகள் இல்லாவிட்டாலும்கூட, சிறைச்சாலையில் இருந்தார்கள் என்று முன்னாள் அமைச்சர்கள் காங்கிரஸ் கட்சியின் பெரிய தலைவர்கள், தியாகப் பட்டியலில் உள்ளவர்கள் சிபாரிசுக் கடிதங்களை வைத்து பலபேர்களுக்கு இந்த மானியங்கள் நேரடியாக வழங்கப்பட்டிருக்கின்றன. 1966-ம் ஆண்டு இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டாலும் அந்த ஆண்டு 5 பேர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டது. அறிஞர் அண்ணா அவர்களாலும் அவர்

களுக்குப் பிறகும் இதுவரை 7,500 பேர்களுக்கு வழங்கப் பட்டிருக்கிறது. இது குறைவானதல்ல.

அது மாத்திரமல்ல. ஐம்பது ரூபாயை எழுபத்தைந்து ரூபாயாக நாம் ஆக்கியிருக்கிறோம். அவர்கள் இன்னும் காலக்கெடு தேவை என்று சொன்னார்கள். மூன்று தடவை காலக்கெடு கொடுத்தாகி விட்டது. இதற்கு மேல் தருவது இயலாத ஒன்றாக இருக்கிறது. முதியோர் ஓய்வூதியத்தைப் பொறுத்தவரையில் 95 லட்ச ரூபாய் ஒதுக்கியது குறைவாகக்கூட இல்லை. ஆனால் 95 லட்ச ரூபாயில் 72 லட்சம் செலவாயிற் றென்றால் வருகிற மனுக்களின் அந்தத் தகுதியைப் பார்த்தால் சாதாரண முதியோராக இருந்தால் 65-க்கு மேற்பட்டு, அனாதையாக இருக்க வேண்டும். 65-க்கு மேற்பட்ட முதியோர் என்றால் கூன், குருடாக, தொழுநோய் உள்ள வியாதியஸ்தர் களாக இருக்கவேண்டும் என்ற தகுதிகள் 1962இல் நிர்ணயிக் கப்பட்டிருக்கின்றன. அந்தத் தகுதியின் அடிப்படையில்தான் அவைகளை ஆராய்கிறோம்.

மின்சாரத்தைப் பற்றி வெகுவாகப் பேசப்பட்டது. டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். குந்தா திட்டத்திற்கு கனடாவிலிருந்து ஏன் இயந்திரம் வரவழைக்கவில்லை என்று கேட்டார்கள். நாம் வேறு நாடுகளிலிருந்து உதவி பெற வேண்டி யிருக்கிறது. மத்திய அரசு இந்த உதவியைப் பெற வேண்டி யிருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த இயந்திரங் களை வாங்கத் தயாராக இருந்தும்கூட மத்திய அரசு சார்பில் எடுக்கப்பட்ட முயற்சிகள் கனடாவிலிருந்து வேண்டாம், அமெரிக்காவிலிருந்து வரவழைக்கலாம் என்ற அளவிற்கு யோசனைகள் செய்யப்பட்டு, பிறகு அது கைவிடப்பட்டு கனடாவிலிருந்து வரவழைக்கலாம் என்ற முடிவிற்கு வந்தார்கள். மத்திய அரசு மூலமாக அந்த இயந்திரம் சீக்கிரத்தில் நமக்குக் கிடைக்குமென்று நம்புகிறோம். அதைப்போலவே 5-வது ஜெனரேட்டர் எண்ணூரில் நிறுவ ஹைதராபாத்திலும், திருச்சி யிலும் உள்ள மத்திய அரசு நிறுவனங்களால் செய்யப்பட்டு வருகின்றன. விரைவிலே கிடைத்துவிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் தங்கமணி அவர்கள் திருமால்புரம் போலீஸ் ஸ்டேஷனில் நடந்த கொடுமையைப் பற்றிச் சொன்னார்கள். அது பற்றித் தகவல் இன்னும் வரவில்லை. அப்படி நடைபெற்றிருக்குமானால் உள்ளபடியே அது கண்டிக்கத் தக்கது, வருந்தத்தக்கது. அதிலே யார் ஈடுபட்டிருந்தாலும் தயவு தாட்சண்யம் இல்லாமல் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். முழு விவரங்களையும் நிச்சயமாக அறிந்து ஏற்ற நட வடிக்கையை எடுப்பேன் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நகர்ப்புறச் சொத்துக்களுக்கு உச்ச வரம்பு பற்றி என்ன பதில் சொல்கிறீர்கள் என்று நண்பர் மதி அவர்கள் கேட்டார்கள். நான் இந்த நகர்ப்புற சொத்து உச்ச வரம்பு பற்றி டில்லியில் பேசப்பட்ட நேரத்திலும், வேறு சில மாநில முதலமைச்சர்கள் ''எங்கள் மாநிலத்தில் கொண்டு வந்து விட்டோம்'' என்று சொன்ன நேரத்திலும், நான் அளித்த பதில்- ''இது ஒரு கவர்ச்சி கரமான கோஷமாக இருக்கிறது; நடைமுறைப்படுத்துவதிலே பெரும் சிக்கல்கள் இருக்கின்றன'' என்று சொன்னேன். இப்போதும் சிக்கல்களைத்தான் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

நகர்ப்புறச் சொத்துக்கு உச்ச வரம்பு என்பது- ஒன்றான இந்தியா, ஒருமைப்பாடான இந்தியாவில் அகில இந்திய அளவிலே இலக்கணம் வகுக்கப்படவேண்டுமென்று சொல் லாமல் அந்தந்த மாநிலங்கள் தனித் தனியாக இலக்கணங்களை வகுக்குமானால் மற்றொரு மாநிலத்திற்குப் போய் நாம் வகுத்த இலக்கணம் ஈடேற முடியாமல் செய்ய முடியும்.

உதாரணமாக, பலவீடுகளுக்கு, பல தொழிற்சாலை களுக்குச் சொந்தக்காரராக இருப்பவரை உச்ச வரம்பின்கீழே கொண்டு வருவோமானால் அவர் அதையே அடுத்த மாநிலத் தில் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையைப் பெற முடியும். ஆகவே, இதற்கு அகில இந்திய அளவில் இலக்கணம் வகுக்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் நகர்ப்புற உச்ச வரம்பு பற்றி கவனிக்க வேண்டும் என்று ஏற்கனவே சொல்லி யிருக்கிறேன்.

இது நிறைவேற்றப்பட்ட மாநிலங்களிலும் வீடுகளுக்குத் தான் உச்ச வரம்பைக் கொண்டு வந்திருக்கிறார்களே தவிர, சினிமாத் தியேட்டர், தொழிற்சாலைகள் போன்றவற்றுக்கு உச்ச வரம்பைக் கொண்டு வர முடியாத சூழ்நிலையில், சிக்கலில் இருக்கிறார்கள். சில இடங்களில் சட்டமாக்கி விட்டார்கள். நடை முறைச் சங்கடங்களால் தாமதத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இதிலே அவசரப்பட்டுச் செய்ய எதுவும் இல்லை.

ஆனால், இந்தக் கொள்கை நமக்கு உடன்பாடான கொள்கை என்பதையும், இதை மறுப்பவர்கள் நாம் அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்வேன். ஆனால், அதே நேரம் அகில இந்திய அளவிலே அடிப்படை இலக்கணம் வகுக்கப்பட வேண்டுமென்பதையும் கூறிக்கொள்கிறேன்.

வேலை வாய்ப்புகளைப் பற்றிச் சொன்னார்கள். ஆண்டு ஒன்றுக்குப் பத்து கோடி ரூபாய் அளவுக்கு படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க புதிய திட்டங்களை மேற்கொண் டிருக்கிறார்கள். இதற்கு மேல் 7½ கோடி ரூபாய் அளவுக்குப் புதிய திட்டங்களுக்காக மத்திய அரசின் அனுமதியைப் பெற்றிருக்கிறோம். அடுத்த ஆண்டு வேலை வாய்ப்புத் திட்டங்கள் எல்லாம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழைகளுக்கு இந்த அரசில் எதுவுமே செய்யவில்லை, பணக்காரர்களுக்குத்தான் இந்த அரசு எல்லாம் செய்து கொண்டிருக்கிறது என்று இங்கே சிலபேர் எடுத்துப் பேசி னார்கள். பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம் ஏழைகளுக்காகச் செய்யப்படுகிறதே தவிர, பணக்காரர்களுக்கு அல்ல.

35,000 பேருக்குக் கண்ணொளி வழங்கப்பட்டிருப்பது ஏழைகளுக்காகவே தவிர, பணக்காரர்களுக்கு அல்ல.

அரசு அலுவலர்கள் ஊதிய உயர்வு இந்த ஐந்து ஆண்டுகளில் ஐந்து தடவை அகவிலைப்படி உயர்வு மாத்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கோரிக்கைகள் புறக்கணிக்கப்படவில்லை.

நெடுஞ்சாலைத்துறையில் ஒரு மாத காலத்திற்குள்ளாக சாதாரண மக்களைத் தொடக்கூடிய காரியம் எவ்வளவு செய்திருக்கிறோம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். நெடுஞ்சாலைத் துறையில் கேங் மஸ்தூர் என்று பணியாற்றக் கூடியவர்கள் 11,685 பேர். இவர்களில் பத்து ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்துள்ள 6,700 நபர்கள் நிரந்தரமாக்கப் பட்டுள்ளார்கள். இதற்காக அரசுக்கு ஆகும் கூடுதல் செலவு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 17 லட்சமாகும்.

பொதுப்பணித் துறையில் ஒர்க் சார்ஜ்டு தொழிலாளர்கள் மொத்தம் 8,000 பேர் இருக்கிறார்கள். இவர்களில் 7,000 பேர் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்கள். பொதுப்பணித் துறையிலும், நெடுஞ்சாலைத் துறையிலும் தற்போது 13,700 பேர் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

ஆலயப் பணியாளர் 50,000 பேருக்கு ஊதிய விகிதங்கள் சீரமைக்கப்பட்டிருக்கின்றன. 50,000 குடும்பங்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

இன்னும் சில புதிய அறிவிப்புகளை இந்த நிதி ஒதுக்கீட்டில் அறிவிப்பதன் மூலம் உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் மகிழ்ச்சி தரும் என்று கருதுகிறேன்.

1972 ஏப்ரல் திங்கள் 1-ம் தேதியிலிருந்து குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ. 30லிருந்து ரூ.40ஆக உயர்த்தப்பட்டது. இத்தொகை குறைவாக இருக்கிறதென்று ஒரு குறைபாடு இருந்துவருகிறது. ஓய்வூதியம் பெறுபவர்களின் இந்தக் கோரிக்கையை மனதில் கொண்டு 1973 ஏப்ரல் திங்களுக்கான ஓய்வூதியத்திலிருந்து குறைந்தபட்ச ஓய்வு ஊதியம் ரூ.50 ஆக உயர்த்தப்படுகிறது. (ஆரவாரம்) ஆண்டு ஒன்றுக்கு இதனால் ரூ.30 லட்சம் அதிகச் செலவாகும். 30,000 பேர்கள் இதனால் பயனடைவர். 30,000 பேர் இந்த அரசை வாழ்த்துவார்கள், இந்த மாமன்றத்தை வாழ்த்துவார்கள்.

Dr.H.V.HANDE: Sir, I have been persistently asking on the floor of the House for the increase of pension. On behalf of the pensioners, I thank the Hon. chief Minister for that.

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: கடைசி நேரத்திலாவது நன்றிகளைப் பெறுகிறேன். மகிழ்ச்சி.

ஓய்வூதியதைப் பொறுத்து மேலும் ஒரு கோரிக்கையையும் அரசு ஏற்க முன்வந்துள்ளது. அதாவது, அரசு ஊழியர்களுக்கு ரூ.10 அகவிலைப்படி உயர்வு கொடுத்ததை ஒட்டி, ஓய்வூ ஊதியம் பெறுவோருக்கும் ரூ.5 அகவிலைப்படி உயர்வு கொடுக்கப்படும். அக்டோபர் 1973 வரை இத்தொகை அரசிடம் சேமித்து வைக்கப்பட்டு, மொத்தத் தொகையாகக் கொடுக்கப் படும். அதற்குப் பிறகு மாதாமாதம் கூடுதலாக ரூ.5 கொடுக்கப் படும். குறைந்தபட்சம் ஓய்வு ஊதியம் பெறுவோருக்குக் கிடைக்கும் ஓய்வு ஊதிய உயர்வில் அகவிலைப்படி உயர்வு உள்ளடங்கும்.

உதாரணமாக, 40 ரூபாய் பெறுபவர்கள் 45 ஆகி ஐந்து ரூபாய் அதிகமாகப் பெறுவார்கள். 43 ரூபாய் பெறுபவர்கள் 5 ரூபாய் அதிகமாகப் பெற்று பிறகு 2 ரூபாய் அதிகமாகப் பெறுவார்கள். 46 ரூபாய் பெறுபவர்கள் ஐந்து ரூபாய் அதிகமாக, ஆக 51 ரூபாய் பெறுவார்கள்.

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். நெடுஞ்சாலைத் துறையில் பல பேர் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அதே போல் நெடுஞ்சாலைத் துறையிலுள்ள கேங் மஸ்தூர்கள் வேலை செய்கிற நேரத்தில், வெயில் கொதிக்கிற நேரத்தில் தாரை எடுத்து ஊற்ற அவர்கள் படுகின்ற கஷ்டத்தை நாம் காரில் செல்லும்போது பார்த்திருக்கிறோம். அவர்கள் காலில் சாக்குத் துணியைக் கட்டிக்கொண்டு வெயில் கொடுமையைப் பொறுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்பதற்காக ஓராண்டுக்குக் குறையாது தொடர்ந்து பணியாற்றி வரும் கேங் தொழிலாளர்கள் அனைவருக்கும் வரும் ஆண்டிலிருந்து கிராமக் கைத்தொழில் வாரியம் மூலமாகக் காலணிகள் வழங்கப்படும். ஏறத்தாழ

10,000 தொழிலாளர்கள் இதனால் பயன் அடைவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நல்ல அறிவிப்புகளோடு இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

# துணை மதிப்பீடு

**உரை : 31** **நாள் : 27.11.1973**

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1973-74ம் ஆண்டுக்கான துணைமதிப்பீடுகளின் பேரில் எதிர்க்கட்சியின் தலைவர்களும், தோழமைக் கட்சியின் தலைவர்களும், மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களும் சீரிய செழுமிய கருத்துக்கள் பலவற்றை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்த நண்பர் திரு.ஜேம்ஸ் அவர்கள் இந்தத் துணை மதிப்பீடுகளை அடிப்படையாகக்கொண்டு இதிலே இருக்கிற பல விஷயங்களைப் பற்றி தான் பேச முன்வராவிட்டாலும் இதன் தொடர்பாகவுள்ள வேறுபல விஷயங்களை இந்த மாமன்றத்திற்கு உணர்த்துகிற வகையில் தன் பேச்சு அமையும் என்று குறிப்பிட்டு, அவ்வாறு தம் பேச்சை அமைத்துக் கொண்டார். அவரைப் பின்பற்றிப் பேசிய பலரும் இந்தத் துணை மதிப்பீட்டில், அதிக வேறுபாடுகள், முரண்பாடுகள் காணாது, கூடுமானவரையில் இந்தத் துணை மதிப்பீட்டு மானியக் கோரிக்கைகளை வரவேற்றுப் பாராட்டி, ஆதரிக்கின்ற வகையில் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

சற்றொப்ப 7 கோடி ரூபாய் அளவுக்கு இந்தத் துணை மதிப்பீடுகள் இந்த அவைமுன் வைக்கப்பட்டு, மானியத் திற்கான கோரிக்கைகள் எழுப்பப்பட்டுள்ளன. இவைகளில் மிக முக்கியமான பிரச்சினைகள் பலவற்றை உள்ளடக்கி, இந்த மதிப்பீடுகள் அமைந்திருக்கின்றன என்பதை ஆளுங்கட்சித் தரப்பிலிருந்தும், சில நேரங்களில் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்தும் எடுத்துச்சொல்லப்பட்டதை நான் வரவேற்கிறேன். பாராட்டு கிறேன். அவை எல்லாம் இந்த அரசை மேலும் ஊக்கப்படுத்தி,

உற்சாகப்படுத்தி, அதனுடைய பணியிலே வேகமாக நடப்பதற்கான தூண்டுகோலாக அமையும் என்றும் நான் நம்புகிறேன்.

குறிப்பாக வெள்ளம் ஏற்பட்ட நேரத்தில் இந்த அரசு எவ்வளவு துரிதமாக நடவடிக்கைகளை எடுத்தது என்பதைப் பற்றியும் விவசாயிகளின்பால் எவ்வளவு அக்கறையோடு நடந்துகொண்டது என்பதைப்பற்றியும், இதுவரையில் தமிழகத்திலே பரிபாலனம் செய்த எந்த அரசும் செய்ய முன்வராத காரியங்களை எல்லாம்; வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்படிச் செய்ய முன்வந்தது என்பதைப்பற்றியும் நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிலும் குறிப்பாக, வெள்ளத்தின் காரணமாக தென்னாற்காடு, சேலம், கோவை, திருச்சி, தர்மபுரி, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் கிட்டத்தட்ட பத்தாயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கராக்கள் ஒரு அடி, இரண்டடி, மூன்றடி மண் தூர்ந்துபோய் அந்த நிலங்கள் சாகுபடிக்கு லாயக்கில்லாத நிலை உருவாயிற்று. அப்போது இந்த அரசு வேகமான நடவடிக்கைகளை எடுத்து 10,602 ஏக்கராவில், அந்த நிலங்களைத் தூர்வாரி, பழையபடி நல்ல கழனிகளாக மாற்றி, அரசே முழுச்செலவையும் தானே முன்வந்து ஏற்றுக்கொண்டு, விவசாயிகளுக்கு நன்மை செய்த முதல்தடவையான நிகழ்ச்சி, திராவிட முன்னேற்றக் கழக அரசினால்தான் நடைபெற்றிருக்கிறது என்பதை நான் மிக்க பெருமையோடு இங்கே தெரிவித்துக் கொள்வேன்.

இதற்கு முன்பு பல வயல்கள் வெள்ளத்தால் பாழ்பட்டுப் போனதுண்டு. அந்த வெள்ளத்தால் தங்கள் நிலங்களில் மூடப்பட்ட மண்ணை எடுக்க, முன்பெல்லாம் அந்தந்த விவசாயிகளே பொறுப்பேற்றுக் கொண்டார்கள். அதற்குமாறாக இப்போது 86 லட்சம் ரூபாய் செலவழித்து, அரசாங்கமே பத்தாயிரம் ஏக்கரா நிலத்தை தூர் எடுத்து, சீர்படுத்தி விவசாயிகளுக்குக் கொடுத்த பெருமை இந்த அரசுக்கே உண்டு. அது மாத்திரம் அல்ல.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, லட்சக்கணக்கானவர்களுக்கு உதவிகளையும் நாம் செய்திருக்கிறோம்.

அவைகளின் கோரிக்கைகளை எல்லாம் சேர்த்துத்தான் இன்றைக்கு இந்தத் துணைமதிப்பீட்டில் கோரிக்கைகளை இந்த அவை முன்னால் வைத்திருக்கிறோம்.

இளைஞர் அணியைப்பற்றி நண்பர் ஜேம்ஸ் அவர்களும், மற்றவர்களும் இங்கே குறிப்பிட்டனர். இளைஞர் அணி தோல்வியிலே முடிந்துவிடக்கூடாதென்ற கருத்தை அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். சில பேர் அது தோல்வியிலேயே முடிந்துவிடவேண்டுமென்று கருதுகிற நேரத்தில், இவர்கள் அப்படி முடிந்துவிடக் கூடாதென்கிற கருத்தினைக்கூறி இந்த அரசுக்கு ஒரு எச்சரிக்கை செய்தமைக்காக நான் நன்றி தெரி வித்துக் கொள்கிறேன். இளைஞர் அணியில் பயிற்சி பெறுகிற வர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க அவர்களுக்கு முதலிடம் வகுக்கப்பட வேண்டுமென்ற கருத்தை நண்பர் ஜேம்ஸ் அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். ஆனால் அப்படிச் சட்டப் பூர்வமாகச் செய்ய முடியாது என்பதை நான் இங்கே அவர்களுக்கு எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கூடுமான வரையில் இளைஞர் அணியில் பயிற்சி பெறுகிறவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கொடுக்கும் முயற்சியினை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் 1971-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளில் தொடங்கப்பட்டது. அப்பொழுது ஆண்கள் 1,800 பேரும் பெண்கள் 200 பேரும் ஆக 2.000 பேர் இந்த இளைஞர் அணியில் சேர்க்கப்பட்டார்கள். 1972-73ல் ஆண்கள் 1,450 பேரும், பெண்கள் 150 பேரும் ஆக, 1,600 பேர்கள் சேர்க்கப்பட்டார்கள். 1973-74ல் ஆண்கள் 1,525 பேர், பெண்கள் 275 பேர் என்ற அளவில் மொத்தம் 1,800 பேர்கள் சேர்க்கப் பட்டார்கள். ஆக 4,775 ஆண்களும் 625 பெண்களும், மொத்தம் 5,400 பேர் இந்த இளைஞர் அணியில் சேர்ந்தார்கள். இவர்கள் அத்தனை பேரும் இளைஞர் அணியில் இப்பொழுது இருக் கிறார்களா என்றால், பல பேர் வேறு வேலைவாய்ப்புகளைப் பெற்று, இளைஞர் அணியிலே ஏற்கனவே உள்ள நிபந்தனை யின் அடிப்படையிலே, அவர்கள் அங்கே போயிருக்கிறார்கள். குறிப்பாக, 1971-72ல் சேர்க்கப்பட்டவர்களில் 991 ஆண்களும்,

121 பெண்களும்; 1972-73ல் சேர்க்கப்பட்டவர்களில் 1,191 ஆண்களும், 136 பெண்களும்; 1973-74ல் சேர்க்கப்பட்டவர்களில் 1,200 ஆண்களும், 224 பெண்களும் தவிர, மற்றவர்கள் வேலைவாய்ப்புப் பெற்று இளைஞர் அணியில் இருந்து சென்றிருக்கிறார்கள். ஆக, இந்த இளைஞர் அணியில் தற்பொழுது உள்ளவர்களுடைய எண்ணிக்கை 3382 ஆண்களும் 481 பெண்களும் ஆக 3,863 பேர்தான். மொத்தம் சேர்க்கப்பட்ட 5,400 பேர்களில் 3,863 பேர்தான் இளைஞர் அணியில் இருக்கிறார்கள். மற்றவர்கள் வேறு வேலைக்குச் சென்றிருக்கிறார்கள். படித்து வேலையில்லாமல் இருக்கிற இளைஞர்களுக்கு நாம் வேலை வாய்ப்பும் தர வேண்டும், அதே நேரத்திலே அவர்களுக்கு ஊதியம் அளிக்கிற அளவுக்கு நம்முடைய நிதி ஆதாரம் வசதியாக இல்லை. ஆகவே, அவர்களுக்கு வேறு வேலை கிடைக்கிற வரையில் அவர்களுக்கு மாதாந்திரச் செலவுகள் என்ற அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு ரூ.175 வழங்கி, கிராமாந்திரங்களிலே அவர்கள் முதியோர் கல்வி, தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம், தூய்மை பேணல், வேறு பல உலகத்தொடர்பு பற்றிய அறிவுரைகள் இவைகளிலே அங்குள்ள மக்களோடு தொடர்பு கொள்வதற்கு ஏற்றவகையில் அந்தப் பணி அமைந்திட வேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.

அது சில இடங்களிலே சரியாகப் பணியாற்றவில்லை யென்ற கருத்தும் இந்த மன்றத்திலே எடுத்துச்சொல்லப்பட்டது. அப்படிச் சரியாகப் பணியாற்றவில்லையென்றால், எந்த எந்த ஊரில், எந்த எந்த இளைஞர் அணி சரியாகப் பணியாற்ற வில்லை என்பதை அரசுக்குஅல்லது தொடர்புடைய அலுவலகத் திற்குத் தெரிவிக்கவேண்டிய பொறுப்பினை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இது ஒரு சமுதாயக் கடன். அதை நிறைவேற்றுவதற்காக இளைஞர்கள் இன்றைக்குப் பணிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய தொண்டு சிறந்திடுமேயானால் எதிர்காலத்தில் இந்த நாட்டினுடைய புகழ் விளக்குகளாக அவர்கள் அமைவதற்கு வழிவகைகள் காண

இயலும். அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர்களுடைய பேருதவியும் தேவை என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் துணை மதிப்பீட்டில், தொழில் நிறுவனங்களுக்கு அரசு உதவி செய்வதைப் பற்றி நம்முடைய நண்பர் சௌந்தர பாண்டியன் அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கே.டி. கே. தங்கமணி அவர்களும் இங்கே எடுத்துச்சொன்னார்கள். அதிலும் குறிப்பாக, சக்தி பைப்ஸ்- இதற்கு அரசாங்கம் கடன் தருவதைப் பற்றி இந்த மன்றத்திலே அடிக்கடி எடுத்துச் சொல்லப்பட்டு, அதற்கான விரிவான விளக்கங்களையெல்லாம் நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துக்கூறியிருக்கிறார்கள். சக்தி பைப்ஸ்ஸுக்கு மாத்திரமல்ல, இதுவரையில் 12 பஞ்சாலைகள் பெற்றுள்ள கடன்களுக்கு மாநில அரசு உத்தரவாதம் அளித்திருக்கிறது. அதையும் நாம் மறந்துவிடக் கூடாது. 1972 இறுதிவரை 14 பஞ்சாலைகளின் நிர்வாகங்களையும் இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. அதையும் நாம் மறந்துவிடக்கூடாது. டெக்ஸ்டூல் நிறுவனத்தின் நிர்வாகத்தை மேற்கொண்டு அந்த நிறுவனம் மூடப்பட இருந்ததைத் தவிர்க்கின்ற வகையிலே சுமார் 2,000 தொழிலாளர்கள் வேலை இழக்கக்கூடிய ஒரு பரிதாபகரமான நிலைமை உருவாக இருந்ததையும் தடுத்து, ரூ.13 இலட்சம் டிட்கோ மூலமாக, அதற்குக் கடன் வழங்கப்பட்டு, இப்பொழுது அந்த நிறுவனம் லாபத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. என்கின்ற மகிழ்ச்சியான தகவலும் நமக்கு வந்து கொண்டிருக்கிறது.

அதைப்போல், சக்தி பைப்ஸ் நிறுவனமும், மூடவிருந்த நேரத்திலேதான்- அது மூடவிருந்தது, அந்தத் தொழில் பறிபோக வேண்டிய நிலைமையில் இருந்தது, அப்பொழுது போய் காப்பாற்ற வேண்டுமா என்கின்ற கேள்வியை நண்பர் சௌந்தர பாண்டியன் இங்கே எழுப்பினார்-சாகிற நேரத்திலேதான் இன்னும் அதிகமாக நாம் காப்பாற்ற வேண்டுமென்பதை மறந்து விடக் கூடாது. வாழ்கிற நேரத்திலும் காப்பாற்றுகிற முயற்சிகளை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதை மறந்துவிடக் கூடாது. சாகப்போகிற நேரத்தில் இன்னும் அதிகமாக முயற்சி எடுத்துக்

கொள்ளவேண்டும். ஏனென்றால், அதிலே 300, 400 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையை மையமாக வைத்து, நாம் செய்கின்ற உதவியினால் அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்வும் மேம்படும். அவர்களும் பாதிக்கப்படமாட்டார்கள் என்கின்ற அளவிலேதான் அரசும் அந்தக் கடனை அளிக்க முன்வந்தது.

அது மாத்திரமல்ல, இன்றைக்கு இந்த நிறுவனத்தில் அரசின் பொறுப்பிலேதான் ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அதைப் போலவே, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ். அதுவும் மூடப்படாமல் பார்த்துக்கொள்வதற்காக இந்த அரசு உதவிகளைச் செய்திருக்கிறது. அதையும் இந்த மன்றத்திலே நாம் பல முறை எடுத்து விளக்கி இருக்கிறோம்.

இப்பொழுது தனிப்பட்ட தொழில் அதிபர்களுக்கு இவைகளை எல்லாம் நாம் வழங்கி இருக்கிறோம் என்று கொள்ளாமல், காலப்போக்கில் நாம், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே கருதிக்கொண்டிருப்பது, இந்த நிறுவனங்களையெல்லாம் ஒன்று அரசுத் துறை நிறுவனங்களாக ஆக்கி விடுவது அல்லது இந்த அரசினுடைய புதிய கொள்கையான கூட்டுத்துறை நிறுவனங்களாக ஆக்கிவிடுவது என்பதைப் பற்றியும் இந்த அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னையில் குதிரைப் பயிற்சிக்காக லட்சம் லட்சமாகச் செலவழிக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டது. குதிரைப் பந்தயம் இருக்கிற வரையிலே குதிரைப்பயிற்சியும் தேவை. குதிரைப் பந்தயம் அடியோடு ஒழிக்கப்படுமானால் குதிரைப் பயிற்சியைப் பற்றி நாம் ஒருவேளை கவலைப்படாமல் இருக்கலாம்.

குதிரைப் பந்தயத்தைப் பொறுத்தவரை, முக்கியமான சீசன் முடிவடைந்த பிறகு, ஜிம்கானா ரேஸ்கள் நடக்கின்றன. சென்னை போலோ சங்கமும் குதிரைப் பயிற்சி அளிப்பதற்கான

முயற்சிகளை இப்பொழுது கையாண்டு, அவைகள் இவற்றை நடத்திக்கொண்டிருக்கின்றன. பந்தயங்கள் வாயிலாக, சராசரி ஆண்டு ஒன்றுக்கு 8 முதல் 9 லட்சம் ரூபாய் வரை நமக்கு கிடைத்து வந்தது. 1972-ல் மட்டும் 12 லட்சம் ரூபாய் அந்த வரியாலே கிடைத்தது. இந்தச் சங்கங்கள் தங்கள் நடைமுறைக் கணக்கில் வந்துள்ள துண்டைச் சரிக்கட்ட முடியாமல் சலுகை களைக் கேட்டார்கள். அப்படி சலுகைக் கேட்டபொழுது, நாம் முழுச் சலுகையும் அளிக்காமல், அதற்குப் பதிலாக, மொத்தம் ரூ.1 லட்சம் மானியமாகக் கொடுத்திருக்கிறோம். இது ஒன்றும் பெரும்தொகை அல்ல என்பதையும் நான் இங்கே குறிப்பிடு கிறேன்.

நம்முடைய நண்பர் ஜேம்ஸ் அவர்கள் குமரி மாவட்டம் தாயகத்தோடு இணையப் போராடியவர்களுக்குத் தியாகி மானியம் வழங்கவேண்டுமென்று எடுத்துச்சொன்னார்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே ஈடுபட்ட மொழிப் போராட்ட வீரர்களுக்குத் தியாகி மானியம் வழங்கவேண்டுமென்கிற பிரச்சினை வந்த பொழுது. இந்தப் பிரச்சனையும் எழுப்பப் பெற்றது. நான் அதோடு இதனையும் இணைத்து எத்தனை பேருக்கு வழங்கப்படும் என்கிற கணக்கையிட்டு அது ஆராயப் படும் என்கிற உறுதியினை அளித்திருக்கிறேன்.

தமிழ்நாட்டிலே உள்ள போக்குவரத்து ஊர்தி, பேருந்து வண்டிகள் சீர்குலைந்து விட்டன என்று நண்பர் ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள். நண்பர் குமாரசாமி அவர்கள், போக்குவரத்துப் பேருந்துகள் மாத்திரமல்ல, தமிழ்நாடே சீர்குலைந்து விட்டது. தமிழ் நாடே அமைதியற்ற நிலையில் இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். தமிழ் நாடு ஒழுங்காகத்தான் இருக்கிறது. சில பேருடைய மனம்தான் குழம்பிப் போயிருக்கிறது. அமைதியற்றுப் போயிருக்கிறது. ஐயோ தமிழ்நாடு ஒழுங்காக இருக்கிறதே, அமைதியோடு இருக்கிறதே, இந்தியாவில் இருக் கிற ஒரு சில நல்ல மாநிலங்களோடு ஒப்பிட்டுக் காட்டக்கூடிய அளவுக்கு தமிழ்நாடு இருக்கிறதே என்ற வேதனையில் இன்றைக்குச் சில பேருடைய மனம் அலை மோதிக்கொண் டிருக்கிறது என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இரண்டு நாளைக்கு முன்னாலேகூட, நானும் நாவலரும் கலந்துகொண்ட ஒரு கருத்தரங்கிலே, முன்னாள் தலைமை நீதிபதி சுப்பாராவ் அவர்கள் பேசுகிற நேரத்திலே, வெகு தெளி வாக, அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டார்கள். இந்தியாவிலே நல்ல நிர்வாகமும், அமைதியும் நிறைந்த ஓரிரு மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாக இருக்கிறது என்று பெருமையோடு சொன்னார்கள். ஒருவேளை சுப்பாராவ் சொன்னதை, இந்த மன்றத்திலே இருக்கிற மாற்றுக் கட்சிக்காரர்கள் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம் ஆனால், எங்களுக்கு இப்படிப்பட்ட பாராட்டுக்கள், நல்லவர்களிடமிருந்து, சில நேரங்களில் கிடைப்பது ஒன்றுதான், எதிர்க்கட்சிக்காரர்களால் எங்களுக்கு உருவாக்கப்படுகிற எரிச்சலுக்கு மாமருந்தாக விளங்கி வருகிறது.

மாணவர்களைப்பற்றியெல்லாம் இங்கே பேசப்பட்டது. கிளைவ் ஹாஸ்டல் நீதி விசாரணை அறிக்கை, பாளையங் கோட்டை நீதிவிசாரணை அறிக்கை இவைகளைப் பற்றி யெல்லாம் மாணவர்கள் கிளர்ந்தெழுந்திருக்கிறார்கள் என்று கூறப்பட்டது. மாணவர்கள் நிலைக்காக நான் மெத்த வருத்தப் படுகிறேன் என்று நம்முடைய பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் இங்கே எடுத்துக்கூறினார்கள்; அப்படிச் செய்வதால் தனக்கும் மாணவர்களால் ஆபத்து ஏற்படக்கூடும் என்று அச்சம் தெரிவித்து இருக்கிறார்கள். பெற்றோர் அணி உருவாக்கி மாணவர்களை நல்வழிப்படுத்தவேண்டுமென்று நம்முடைய முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு.வகாப் அவர்கள் சொன்னார்கள்.

பெற்றோர்கள் மாணவர்களை எப்படிப்பட்ட வழியிலே நடத்திச்செல்ல வேண்டும் அல்லது ஆசிரியர்கள் மாணவர்களை எப்படி நடத்திச் செல்ல வேண்டும் என்பதைக் கவனிப்பதைவிட அரசியல்வாதிகள் மாணவர்களை எப்படி நடத்திச் செல்வது என்ற கருத்தை ஆராய்வது நல்லதாகும். ஒரு காலத்திலே காந்தியடிகள் போராட்டத்திலே இறங்க மாணவர்களை அழைத்தார்கள். இந்திய மண்ணின் சுதந்திரப் போராட்டம், விடுதலைப் போராட்டம் அது. அதற்குப் பிறகு தமிழகத்தைப் பொறுத்தளவிலே மொழிப் புரட்சியிலே மாணவர்கள் கலந்துகொண்டார்கள்.

1965ஆம் ஆண்டு மாணவர்கள் மொழிப் புரட்சியிலே கலந்து கொண்டபோது பேரறிஞர் அண்ணா அவர்கள்- காலை ஒரு அறிக்கை, மாலை ஒரு அறிக்கை, மாணவர்களே வேகமாகச் செல்லுங்கள், துடிக்கும் ரத்தமே துவளாதீர்கள் என்றா அறிக்கை விட்டார்கள்? இல்லை. மாணவர்களே, அந்தப் பொறுப்பைப் புரிபவர்களிடம் விட்டுவிடுங்கள், நீங்கள் அமைதியோடிருங்கள் என்று பலமுறை அறிக்கை விடுத்து கடைசியாக அண்ணா அவர்கள் கொஞ்சம் ஆத்திரமாகவே கூட 'நான் சொல்வதைக் கேட்காதவர்கள் யாரானாலும் அவர்கள் என் தம்பிகளல்ல' என்று அழுத்தந்திருத்தமாக அறிவித்தார்கள்.

ஆனால், மாணவர்களுடைய கிளர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக அரசு உருவான பிறகு பல நேரங்களில் நடைபெற்றிருக்கிறது. தமிழ்நாட்டிலே இருக்கின்ற தனிப்பெருந் தலைவர்களிலே யாராவது மாணவர்கள் பிரச்சனையிலே தலையிட்டு மாணவர்களை அமைதியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டு அறிக்கை இடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். இந்தப் பாழும் மனம் எதிர்பார்த்தது தவறு என்பதை எடுத்துக் காட்டுகிற வகையிலே தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணியெண்ணி நான் வேதனைப்படுகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றம்- நல்ல பாரம்பரியத்திற்கும் பாண்பாட்டிற்கும்- வழிகாட்டக்கூடிய மன்றம்ஆகும். இங்கே 1966 ஆம் ஆண்டு வரையில் எத்தனையோ எதிர்க்கட்சிகள் இருந்திருக் கின்றன. 1966ஆம் ஆண்டு வரையில் இப்பொழுது சட்ட மன்றத்தில் நடைபெறுகிற விரும்பத்தகாத வேதனைப் படத்தக்க நிகழ்ச்சிகள் ஏதாவது நடைபெற்று இருக்கின்றனவா என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். எந்த எதிர்க் கட்சியையும் குறிப்பிட்டுக் குற்றஞ்சாட்டுவதாகக் கருதக்கூடாது. நாம் மாணவர்களுடைய செயலை ஒவ்வொரு கட்டத்திலும் தடுத்து நிறுத்திட வேண்டும். மாணவர்கள் மொழிக்காக, நாட்டு விடு தலைக்காகப் போராட்டத்திலே ஈடுபடுவது வேறு. சிறு சிறு பிரச்சினைகளுக்காக ஈடுபடுவது வேறு.

நண்பர் ஜெம்ஸ் அவர்கள் இன்றைக்கு வேறு யாராவது சொல்லிவிடப் போகிறார்கள் என்பதற்காக, முன்னதாகவே கருணாநிதி ராஜிநாமா செய்ய வேண்டும் என்று மாணவர்கள் சொல்கிறார்கள், நானும் சொல்கிறேன் என்று சொன்னார்கள். நானோ இங்கிருக்கின்ற மற்ற அமைச்சர்களோ ராஜிநாமா செய்வதுபற்றி எங்களுக்குக் கவலையில்லை. எங்களுக்கு இருக்கிற கவலையெல்லாம் நாங்கள் போய்விட்டால் வேறு யார் வந்து இங்கே உட்காருவது என்கிற கவலையிலேதான் அதைச் செய்யாமல் இருக்கிறோம்.

கிளைவ் விடுதித் தகராறா, பாளையங்கோட்டைத் தகராறா இந்தத் தகராறுகளுக்கு உடனடியாக நீதி விசாரணை வைத்து நடுநிலையான தீர்ப்பு பெறப்பட்டு அந்த அடிப்படையிலே இன்றைய தினம் நாம் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். இப்படி நடவடிக்கை எடுத்த ஒரு அரசு ராஜிநாமாச் செய்யவேண்டும் என்று கூறிவிட்டு, நீதி விசாரணை என்னுடைய ஆட்சியிலே கிடையாது, அடிக்கடி நீதி விசாரணை வைத்தால் போலீசார் தங்கள் கடமைகளைச் செய்ய மாட்டார்கள் என்று சொல்லி 1965ஆம் ஆண்டிலே மாணவர்களைச் சுட்டு வீழ்த்தி, மத்தியிலே, நாடாளுமன்றத்திலே உள்துறை அமைச்சர் நந்தா அவர்களால் ''பாறை போன்ற மனிதர்'' என்று பாராட்டப்பட்ட பக்தவத்சலத்தை எங்களுக்குப் பதிலாக உட்கார வைப்பது என்றால் அதற்காகக் கவலைப்படுகிறோம், அதனால்தான் ராஜிநாமா செய்ய மறுக்கிறோம்.

முதுகுளத்தூரிலே நாற்பது பிணங்கள் விழுந்தன; தாய்மார்கள் கற்பழிக்கப்பட்டார்கள், குழந்தைகளின் பிணங்கள் வாய்க்காலிலே மிதந்தன, போலீஸார் அத்துமீறி அந்தப் பகுதியை வேட்டைக்காடாக ஆக்கினார்கள் அதற்கு நீதி விசாரணை வைக்க வேண்டும் என்று அண்ணாவும் கல்யாண சுந்தரமும் சசிவர்ண தேவரும் கேட்டபோது நீதி விசாரணை வைக்க முடியாது என்று சொன்ன காமராசர் முதலமைச்சராக இங்கே வந்து உட்கார்ந்துவிடுவாரோ என்றுதான் நாங்கள் ராஜிநாமாச் செய்யவில்லை.

மாணவர் போராட்டம் இங்கு நடைபெற்றபொழுது இந்த மாநிலத்திலேயே இருப்பது தவறு என்று கோவாப்பகுதிக்குப் போய்விட்டார்களே, அவர்களையா முதலமைச்சராகக் கொண்டு வந்து உட்கார வைக்கப் போகிறீர்கள்? ஆகவே மாணவர்களுக்காக இளமை காலம் முதல் பாடுபட்டு மாணவர்களுடைய ரத்தத்தோடு ரத்தமாக உரைந்து இன்றைக்கும் மாணவர்களை எங்களுடைய உடன்பிறவாச் சகோதரர்களாகக் கருதியிருக்கின்ற எங்களை நீக்கிவிட்டு வேறு ஒருவரை தகுதியானவர் என்று சொல்வார் களானால் நாங்கள் விலகிக் கொள்ளத்தயாராக இருக்கிறோம். அவர்கள் இல்லை என்பதற்காகத்தான் நாங்கள் இந்தப் பதவியிலே இருக்கின்றோமே அல்லாமல் வேறல்ல.

**திரு.கே.டி.கே. தங்கமணி:** நீதிவிசாரணை பற்றிச் சொன்னார்கள். சென்ற ஜூலை மாதம் 5-ஆம் தேதியன்று விவசாயிகள் மேல் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற பொழுது 17 பேர்கள் இறந்துவிட்டார்கள். அப்பொழுது நீதி விசாரணை வேண்டுமென்று நாங்கள் எல்லாம் கேட்டோம். அப்பொழுது என்ன பதில் சொல்லப்பட்டது? வேறு சில தலை வர்கள் வேண்டாம். என்று சொல்லிவிட்டார்கள் என்றுதானே சொன்னார்கள். ஏன் அதற்கு அரசிற்குப் பொறுப்பில்லையா? அரசினுடைய போலீஸ்தானே 17 பேர்களைச் சுட்டது? அன்றைக்கு நீதி விசாரணை போடமறுத்துவிட்டு இன்றைக்கு நீதி விசாரணை கொடுத்ததைப் பெரிய பிரச்சனையாக ஏன் சொல்லிக்கொண்டிருக்க வேண்டுமென்பது புரியவில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்று அவர்களது தலைவர் கல்யாண சுந்தரம் கேட்டுக்கொண்டார்கள். கல்யாணசுந்தரம் அவர்களும் விவசாயப் போராட்டத் தலைவர்கள் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் உட்கார்ந்து விவாதித்தபோது வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அப்படியானால் நீதி விசாரணை என்னாவது

என்று கேட்டோம். நீதி விசாரணையைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கல்யாணசுந்தரம் போன்ற தலைவர்கள் எல்லாம் நிருபர்களை வைத்துக்கொண்டு கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்கள். அதனால்தான் நீதி விசாரணை வைக்கப்படவில்லையே தவிர வேறல்ல.

# நிதி ஒதுக்கீடு மசோதா

**உரை : 32** **நாள் : 28.11.1973**

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீட்டு மசோதாவின் பேரில் எதிர்க்கட்சித் தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். நேற்றையதினம், துணை மதிப்பீடு மானியக் கோரிக்கையிலே தெரிவித்த கருத்துக்கள் பலவும் இன்றைய தினமும் திரும்பச் சொல்லப் பட்டிருக்கின்றன என்பதை நான் உணர்கிறேன்.

அது மாத்திரமல்ல, இந்த அவையிலே தொடர்ந்து விவாதித்துக் கொண்டு வரப்படுகின்ற பல்வேறு விஷயங்கள், எழுதப்பட்ட வினாக்கள், அவைகளுக்குக் கிடைத்த விடைகள், இந்த அடிப்படையிலும் பல பிரச்சினைகள் இங்கே எடுத்துப் பேசப்பட்டிருக்கின்றன. அவையினுடைய நேரம் கருதி நான் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக பதில் சொல்கின்ற நிலையை வைத்துக் கொள்ளாமல், விரைவிலே என்னுடைய பதில் உரையை அளித்து, அடுத்த நிகழ்ச்சிகளுக்கு வழிவிடுவது பொருத்தமுடையது என்று நான் கருதுகின்றேன்.

திரும்பத் திரும்ப நீதி விசாரணைபற்றி இந்த மன்றத்திலே பேசப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுவாமிதாஸ் அவர்கள் பேசுகிற நேரத்தில் தவறான காரியங்களிலே சில அதிகாரிகள் ஈடுபட்டு விடுகிறார்கள்; அதற்கும் அமைச்சர்களுக்கும் நேரடியான தொடர்புகள் இல்லாவிட்டாலும் அவர்கள் செய்கின்ற காரியங்களுக்குப் பொறுப்பேற்று நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய அந்தக் கடமை அமைச்சர்களுக்கு உண்டு என்பதை வலியுறுத்திக் கூறினார்கள். அந்தக் கடமையை உணர்ந்த காரணத்தினாலே தான் இங்கே நம்முடைய முஸ்லிம்லீக் கட்சியின் சார்பில் பேசிய ஜப்பார் அவர்கள், மற்றும் சில உறுப்பினர்கள்

பாராட்டியதைப் போல், விசாரணைக்கு இங்கே உடனடியாக உத்தரவிடப்பட்டு, இங்கே தரப்பட்ட தகவல்கள் சரியானவைதானா என்கின்ற சந்தேகம் எழுந்ததும், அவைகளை நீக்கிக்கொள்வது இந்த அரசுக்கு உரிய கடமை என்பதை உணர்ந்து நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நீதி விசாரணையினுடைய முடிவுகள், அவர்கள் அறிவித்திருக்கிற அந்த அறிக்கைகள் காவல் துறை யினர் அத்துமீறி நடந்து கொண்டார்கள் என்று கிளைவ் ஹாஸ்டல் சம்பவம் பற்றியும், பாளையங்கோட்டை சம்பவத்திலே பேராசிரியர் ஒருவர் அடிக்கப்பட்டது தவறானது என்று காவல் துறையினர் மீது குற்றம் சாட்டியும் ஆனால் லூர்துநாதன் என்ற மாணவர் இறந்தது பற்றி, போலீசாரால் கொல்லப்பட்டார் என்பது தவறு, அவர் ஆற்றிலே மூழ்கி இறந்தார் என்ற ஒரு கருத்தையும் நீதி விசாரணையிலே கலந்துகொண்ட இரண்டு நீதிபதிகளும் கிளைவ் ஹாஸ்டலைப் பற்றியும், பாளையங்கோட்டை பற்றியும் முறையே தங்களுடைய அறிக்கையிலே தந்திருக்கிறார்கள்.

நீதி விசாரணை அறிக்கை வந்த பிறகு, அந்த அறிக்கையின் அடிப்படையிலே நடவடிக்கைகள் எடுக்கத்தான் அரசு இருக்கிறது. நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. பாளையங்கோட்டையிலே என்ன நடவடிக்கைகள் எடுத்தீர்கள் என்று திருமதி அனந்தநாயகி அவர்கள் இங்கே கேட்டார்கள். அறிக்கையின் அடிப்படையிலே பாளையங்கோட்டையிலே பேராசிரியர்மீது தாக்குதல்நடத்திய இன்ஸ்பெக்டர் ராஜசேகரனின் இரண்டு மகன்கள்மீதும் போலீசார் மீதும் வழக்கு தொடரப்படு வதற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது. அவர்கள் வழக்கறிஞர்கள் என்ற காரணத்தால், அவைகளுக்குச் சம்பிரதாய முறைகள் எல்லாம் இருக்கின்றன என்பது தெரிந்திருக்கும். பழைய காலத்து ராஜதர்பார் போல 'இவர்களைக் கொண்டு போய் சிரச்சேதம் செய்' என்றோ. அல்லது 'சிறையிலே அடை' என்றோ உத்தர விடுகின்ற காலத்திலே நாம் இப்பொழுது இல்லை. ஜனநாயகத் திலே, சட்ட சம்பிரதாயங்களுக்கு உட்பட்டு சட்டரீதியாகத்தான் நாம்

காரியங்களை நிறைவேற்றவேண்டியவர்களாக இருக்கிறோம். இதிலே அவசரப்பட்டு நடவடிக்கைள் எடுத்தால், நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள் அரசின் மீது பழி சுமத்தி, உண்மையிலே தண்டிக்கப்பட வேண்டியவரேகூட, நாம் அந்தச் சம்பிரதாய முறைகளைக் கடைப்பிடிக்காத காரணத்தால், தப்பித்துக்கொள்ள வழிவகைகள் ஏற்படும். ஆகவேதான், முறை யான நிலையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதைப்போலவே, கிளைவ் ஹாஸ்டலைப் பொறுத்த வரையிலும் ஐ.ஜி. அவர்கள் அதை விசாரிக்க வேண்டுமென்றும், போர்டு மெம்பர் அதை விசாரிக்க வேண்டுமென்றும் நடவடிக்கைகள் எடுப்பதற்காக ஒரு விசாரணை-மீண்டும் நீதி விசாரணை அல்ல- நீதி விசாரணை அறிக்கையின் தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளுக்காக அவர்கள் நியமிக்கப் பட்டு, டி.எஸ்.பி. சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். திருச்சி யிலே இருந்த ஆர்.டி.ஓ. சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்.

இப்பொழுது எழுகின்ற கேள்வி என்னவென்றால், முதலமைச்சரோ அல்லது அமைச்சரவையோ ராஜினாமா செய்ய வில்லை என்பதாகும். இதை நாம் மரபாக, முறையாக வைத்துக் கொள்வதாகக் கற்பனை செய்து பார்ப்போம். இன்றைக்குக் கிளைவ் ஹாஸ்டலிலே போலீசார் அத்துமீறி நடந்து கொண்டார்கள் என்ற ஒரு அறிவிப்பு வந்து, அந்த அறிவிப்பின் அடிப்படையிலே இந்த அமைச்சரவை ராஜினாமா செய்துவிட்டு இன்னொரு அமைச்சரவை வந்தால். ஆக, போலீசார் நினைத்தால், அரசைக் கவிழ்த்து விடமுடியும் என்ற நிலைமை ஏற்படும்.

மாணவர்கள் மீதோ, தொழிலாளர்கள் மீதோ, வேண்டு மென்றே போலீசார் கடுமையாக நடந்துகொண்டு, விசாரணைக் குழு அமைக்கப்பட்டு, அந்த நீதிபதி போலீசார் கடுமையாக நடந்துகொண்டார்கள் என்று அறிவித்த பிறகு, உடனடியாக அதையொட்டி அமைச்சரவை ராஜினாமா செய்யவேண்டு மென்றால் 4 போலீஸ்காரர்களோ அல்லது 10 போலீஸ்காரர் களோ சேர்ந்து, போலீஸ் அதிகாரிகள் நினைத்தால் ஒவ்வொரு

அமைச்சரவையாக ராஜினாமா செய்கின்ற சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டிருக்க முடியும். ஆகவே, அப்படிப்பட்ட மரபுகளை, நிலமைகளை வளர்ப்பது நல்லதல்ல.

தவறு செய்கின்ற அதிகாரிகள் யாராக இருந்தாலும் அது சுட்டிக்காட்டப்பட்டவுடன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டதா இல்லையா என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். அதைத்தான் நான் நேற்றையதினம் மாணவர்கள், இந்த விஷயத்திலே உன்னிப்பாகக் கவனம் செலுத்தி, அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளைப் பாராட்டுவதை விட்டு விட்டு, தங்களுடைய படிப்பை, எதிர்காலத்தைப் பாழாக்கிக் கொள்ளக்கூடாது என்று நான் மிகுந்த பணிவோடு நேற்றைய தினம் வேண்டுகோள் விடுத்திருக்கிறேன்.

இன்றைக்கும் கிளைவ் ஹாஸ்டல், பாளையங்கோட்டை சம்பவங்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியிருக்கிற காரணத்தால் அந்த அடிப்படையில் மீண்டும் நான் மாணவர் களைக் கேட்டுக்கொள்வது, யாருடைய தூண்டுதலுக்கும் ஆளாகாமல், அவர்கள் விரைவிலே வரவிருக்கிற அரை ஆண்டுத் தேர்வு- அந்த அரை ஆண்டுத் தேர்விலே அவர்கள் பெற வேண்டிய வெற்றி-அதிலே அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய பயிற்சி- பிறகு அடுத்த தேர்விலே அவர்கள் பெற்றிட வேண்டிய வெற்றி இவைகளிலே தனிக்கவனத்தை மாணவர்கள் செலுத்தவேண்டுமென்று நான் மீண்டும் மீண்டும் மாணவர்களை இந்த நிதிநிலை ஒதுக்கீடு விவாதிக்கப்படுகின்ற நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு.ஜப்பார் அவர்கள் சென்னை யிலே கலைக்கல்லூரி, ஆண்கள் கல்லூரி பெண்கள் கல்லூரியாக மாற்றப்படுவதால் முஸ்லீம் சமுதாயத்திற்குப் பெரிய கேடு வந்துவிடும் என்பதுபோன்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். சிறுபான்மை சமுதாயத்திற்கு எந்தச் சிறு கேடும் வருகின்ற அளவிற்கு எந்தக் காரியமும் செய்யப்படமாட்டாது. அந்தப் பெண்கள் கல்லூரியாக மாற்றுவதில் என்ன என்ன இடர்பாடுகள் இருக்கின்றன என்பதைப்பற்றியெல்லாம் முஸ்லீம் சமுதாயத்தைச்

சேர்ந்தவர்கள் என்னிடத்திலோ அல்லது மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடத்திலோ விவாதித்து இதற்கு எப்படிப் பட்ட முறையிலே வழிவகைகளைக் காணலாம் என்று சிந்தித்து முடிவிற்கு வர அரசு தயாராக இருக்கிறது. எதையும் அவசரப் பட்டு எந்தக் காரியமும் செய்வதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறுபான்மையோருக்குச் சில இடங்களிலே கொடுமை களும் அநீதிகளும் இழைக்கப்படுகின்றன. அதற்கு நீதி விசாரணை வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிப்பட்ட இடங்களிலே நானும் தலையிட்டு ஆங்காங்கு இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனும், முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்தவர்கள், முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த பெரியவர்கள் ஆகியவர்களுடனும் கலந்துகொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தஞ்சை மாவட்டத்திலே சோழவரத்திலே சாதி இந்துக் களுக்கும்- கட்சி சார்பற்ற முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று திரு.தங்கமணி அவர்கள் சொன்னார்கள்- அரிசனங்களுக்கும் ஏற்பட்டிருக்கிற மோதல்கள் தவிர்க்கப்பட வேண்டுமென்று எடுத்துக்காட்டினார்கள். இவைகள் குறிப்பாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லையென்றா லும் இன்றைக்கு இந்த அவைக்கு திரு.தங்கமணி அவர்கள் எடுத்துச் சொன்ன அடிப்படையிலே அவற்றைப் பற்றி இந்த அரசு தனிக் கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்டபொம்மன் போக்குவரத்து நிறுவனம் ஒரு கார்ப்பரேஷனாக இன்றைக்கு மாறுகிற காரணத்தினால் அங்கே உள்ள ஊழியர்களுடைய ஊதியமும் பணிமுறைகளும் பாதிக்கப் படும் என்ற அச்சத்தை திரு. சுவாமிதாஸ் அவர்கள் வெளி யிட்டார்கள். கட்டபொம்மன் கார்ப்பரேஷனாக அந்த பேருந்து நிறுவனம் மாறுகின்ற காரணத்தினால் அந்த ஊழியர்களுடைய ஊதியமோ பணிமுறைகளோ நிச்சயம் பாதிக்கப்படமாட்டாது என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்

பாதிக்கப்படாத அளவிற்கு வேண்டிய உத்தரவுகள் அரசாங்கத் தால் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டால் நிவாரணங்களைத் தேட வேண்டுமென்பதிலே முனைப்புள்ளது இந்த அரசு என்பதை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக்கூறி- எந்தக் குற்றச்சாட்டாக இருந்தாலும் உடனடியாக அரசாங்கம் அக்னி குண்டத்திலே மூழ்கி எழுந்து வெளியே வரவேண்டுமென்று நண்பர் காளிமுத்து அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். சில நேரங்களிலே அக்னி குண்டத்திலே மூழ்கு என்று சொல்வது, நந்தனார் காலத்திலிருந்தே அக்னி குண்டத்திலே மூழ்கு என்று சொல்வது வழக்கமாக இருக்கிறது. ஏதோ அக்னி குண்டத்திலே மூழ்கிய நந்தனார் தன்னுடைய ஜாதி உணர்ச்சியிலிருந்து அல்லது கீழ் ஜாதி என்ற நிலையிலிருந்து மாறி பெரிய ஜாதியாக மாறினார் என்கின்ற வகையிலே ஒரு கீழ்ச்சாதிக்காரர் நேரடியாக ஆண்டவனைக் காண ஆலயத்திற்குள் செல்லக்கூடாது, கர்ப்பக் கிரகத்திற்குள் செல்லக்கூடாது என்ற காரணத்திற்காக அக்னி குண்டத்திலே மூழ்கி பெரிய ஜாதிக்காரர் ஆனாரா அல்லது அதிலேயே மூழ்கி சாம்பலாகிவிட்டாரா என்பது ஆராயப்பட வேண்டிய புராணக்கதை.

ஆனால், நான் சொல்வது, காளிமுத்து அவர்கள் சொன்ன அக்னிப் பரீட்சையை நாம் ஒருவருக்கொருவர் செய்துகொள்ளவேண்டிய இடம் சட்டப்பேரவைதான், சட்ட மன்றம்தான். இதை விசாரிப்பதற்கு வேறு பெரிய இடம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நான் அடிக்கடி சொல்கிறேன், மாநில அரசு தவறு செய்தால் மத்தியிலே ஒரு குழு போட்டு விசாரிக்க வேண்டுமென்கிறார்கள். மத்தியில் இருக்கிற அமைச்சர்கள் தவறு செய்தால் அதற்கு விசாரிக்கப்படவேண்டிய இடம் நாடாளுமன்றம் என்று சொல்லப்படுகிறது. அதை விசாரிக்க நாடாளுமன்றத்திற்கு உரிமை இருக்கிறது என்று சொன்னால் இங்கே தவறுகளை விசாரிக்க சட்டப் பேரவைக்குத்தான் உரிமை உண்டு.

ஜனாதிபதியிடம் கொடுக்கப்பட்ட புகார் மனுக்கள் பிரதமருக்கு அனுப்பப்பட்டு அவை இங்கே அனுப்பி வைக்கப் பட்டு இங்கே போதுமான விளக்கங்களைத் தந்திருக்கிறோம். இதை விசாரிக்கிற உரிமை அவர்களுக்கு அரசியல் சட்டத்திலே உண்டா இல்லையா என்ற பிரச்னையை எழுப்பி போதுமான விளக்கங்களை அளித்து இருக்கிறோம். ஒரு பதிலுக்கு இரண்டு பதிலாக இந்த மாமன்றத்திலே வைத்திருக்கிறோம். அதைப் போய் அங்கே கொடுத்தவர்கள் தயவுசெய்து இந்த மன்றத்திற்கு வந்து, தைரியமிருந்தால் அதைப்பற்றி விவாதிப்பதற்கு இங்கே தயாராக இருக்க வேண்டும். இதையே அக்னி குண்டமாக மாற்றிக்கொண்டு, இந்த அக்னி குண்டத்திற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது, தயாராக இருக்கிறது என்பதை மாத்திரம் சொல்லிக்கொண்டு இந்த அளவிலே அமைகிறேன். வணக்கம்.

# மாநில ஆட்சித் தலைவர்கள்

**உரை : 33** **நாள் : 01.04.1974**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, பரிவுரையின் மேல் பின்வரும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

''நிதிக் கோரிக்கை எண் 9 - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,32,66,300-க்கு மேற்படா தொகை அரசுக்கு வழங்கப் பட வேண்டும்.''

பேரவைத் தலைவரவர்களே, மன்றத்தின் முன்னால் விவாதிக்கப்பட்டுள்ள இந்த மானியத்தின் கோரிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மிக உன்னிப்பாகக் கவனித்து அரிய கருத்துக்கள் பலவற்றை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவாதத்தைத் தொடங்கி வைத்த நண்பர் செழியன் அவர்கள், தலைமைச் செயலகத்திலே பணியாற்றுகின்ற அலுவலர்களின் வசதிகள் இவைகளெல்லாம் நல்லமுறையில் அமைக்கபட வேண்டுமென்பதையும், காற்றோட்டமான இடங்களில் அவர்கள் இருந்து அலுவல் புரிவதற்கான வாய்ப்புகளை அரசு உருவாக்கித்தரவேண்டுமென்பதையும் எடுத்துக்காட்டினார்கள். நான் இந்த முறையீட்டை வைத்த நண்பர் செழியன் அவர்களுக்குத் தலைமைச் செயலக அலுவலர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனென்றால் தலைமைச் செயலகம் இந்த இடத்திலே யிருந்து மாற்றப்பட்டு வேறொரு இடத்திலே வசதியாக தலைமைச் செயலகம் கட்டப்படவேண்டுமென்கின்ற ஒரு கருத்து அரசின்பால் நிலவி, அந்தச் கருத்து இங்கொன்றும் அங்கொன்று மாக வெளிவந்தபொழுது அப்படிப்பட்ட ஒரு பெரிய கட்டிடம்

கட்டத் தேவையில்லை என்ற மாறுபட்ட கருத்துக்களெல்லாம் வெளிவந்தன. அந்த மாறுபட்ட கருத்துக்களுக்கு நாம் மதிப்பு அளித்தோமா இல்லையா என்பதைவிட நம்முடைய நிதி ஆதாரங்கள் எந்த அளவிற்கு அதிக உதவி செய்யும் என்பதை எண்ணிப்பார்த்து, உடனடியாக பெரிய அளவிலே வேறொரு இடத்தில், 4 கோடி ரூபாய், 5 கோடி ரூபாய், செலவில் ஒரு புதிய கட்டிடத்தை தலைமைச் செயலகத்திற்காகக் கட்டுவது என்பது இயலாத காரியம் என்கின்ற முடிவிற்குத் தற்காலிகமாக வந்து, இப்பொழுது இருக்கின்ற நம்முடைய தலைமைச் செயலகத்தையே கொஞ்சம் விரிவுபடுத்திக் கட்டலாம் என்பதற்காக 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவிற்கு, அதற்காக டெண்டர்கள் விடப்பட்டு, முடிந்து, பொதுப்பணித்துறையின் மூலமாக அந்த வேலைகள் ஏப்ரல் திங்களில் தொடங்க இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பிறகு தலைமைச் செயலக அலுவலாளர்களுக்கான வாய்ப்பு வசதிகள் அவர்கள் பணிபுரியும் அளவில் நிச்சயமாகப் பெருகும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பேசிய உறுப்பினர்களில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், முஸ்லிம் லீக் கட்சியின் உறுப்பினர் திரு. ஜப்பார் அவர்களும், செழியன் அவர்களும் ஓய்வூதியம் பெறுகின்ற அரசு அலுவலாளர்களுக்கு மேலும் பல சலுகைகள் அளிக்கப்பட வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்குத் தரப்படுகின்ற அகவிலைப் படியை இன்னும் உயர்த்தித் தர வேண்டுமென்கின்ற கருத்தை ஹாண்டே அவர்கள் மீண்டும் ஒரு முறை இந்த மன்றத்தில் வலியுறுத்தினார்கள்.

பொதுவாக, ஓய்வூதியம் பெறுகின்ற அரசு அலுவலாளர் களுக்கு இந்த ஆட்சி அமைந்ததற்குப் பிறகுதான் அதிகச் சலுகைகள் வழங்கப்படுகின்றன என்பதை இந்த மன்றத்திலே வீற்றிருக்கின்ற உறுப்பினர்கள் யாரும் மறுத்திடமாட்டார்கள் என்றே நான் திண்ணமாக நம்புகின்றேன். அகவிலைப்படி ஓய்வூதியம் பெறுபவர்களுக்குத் தருவது என்ற முறையைக் கடந்த 3, 4 ஆண்டுக் காலத்திற்கு முன்புதான் இந்த அரசு மேற்கொண்டு ஓய்வுபெறும் பென்ஷன்தாரர்களுக்கு அகவிலைப்படி அளிக்கப்பட்டுபார்த்தால், அரசுப் பணியாளர்களுடைய பணியின் கடைசி 12 திங்களில் வாங்கிய

சம்பளத்தின் அடிப்படையில் இதுவரை கணக்கிடப்பட்டு வந்தது. இப்பொழுது 10 திங்களில் வாங்கிய சராசரி சம்பளத்தின் அடிப்படையில் அந்த ஓய்வூதியம் கணக்கிடப்படுவதால் ஓரளவு ஓய்வூதியம் கூடுகிறது என்பது மட்டுமல்ல, கணக்கிட்டு வரும் முறைகளும் எளிதாக்கப்பட்டிருக்கின்றன.

பணி இடையீடுகள் (பிரேக் இன் சர்வீஸ்) கண்டோன் செய்யப்படுகிறது. இதனால் இடையீட்டுக்கு முந்திய பணியும் ஓய்வூதியத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படும் முறையில் சலுகை அளித்திருக்கிறது. அரசு ஊழியர் ஒருவர் வயதுப்படி ஒரு திங்களில் எந்த நாளில் ஓய்வு பெற்றாலும் அவர் அத்திங்களில் கடைசி நாளில் ஓய்வு பெற்றதாகவே கருதப்படுவர் என்ற புதிய ஏற்பாடு 1-4-1974 முதல் வந்திருக்கிறது. ஒருவர் ஜனவரி 2-ம் தேதி ஓய்வு பெறுகிறார் என்றால் அவர் ஓய்வு பெற்றவராக அறிவித்து விடாமல் ஜனவரி திங்கள் முழுமையும் பணியாற்றச் சொல்லி ஜனவரி திங்களில் இரண்டு நாளைக்குரிய சம்பளத்தைத் தருவதற்குப் பதிலாக அத்திங்களுக்குரிய சம்பளம் முழுவதும் தருகிற அந்தச் சலுகையையும் இந்த அரசு அவர்களுக்கு வழங்கி இருக்கிறது. இதனால் அவருடைய சராசரிச் சம்பளம், தகுதிப் பணிக்காலம் ஆகியவற்றைக் கணக்கிடுவது எளிதாகிறது.

நிலையான பதவி வகிக்காதவரும் (நான்-பெர்மனென்ட் கவர்ன்மென்ட் சர்வன்ட்ஸ்) 1-10-1969 முதல் ஓய்வூதியம் பெற உரிமை உள்ளவர்கள் ஆவார்கள் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.

ஓய்வூதியம் 1-3-1970-ல் குறைந்தபட்சம் ஊதியம்30 ரூபாயாக இருந்ததை 1-4-1972-ல் 40 ரூபாயாக உயர்த்தி, 1-4-1973-ல் 30 ரூபாயாக உயர்த்தப்படும், 1-10-1973-ல் அகவிலைப்படி உள்ளிட்டு 35 ரூபாயாக உயர்த்தினோம். 1-4-1972-ல் அகவிலைப்படி 5 ரூபாயாக இருந்தது; 1-4-1973-ல் 10 ரூபாயாகவும், 1-10-1973-ல் 15 ரூபாயாகவும், 1-4-1974-ல் 20 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

இந்த ஓய்வூதியத் தொகையை அவர்களுக்கு மணியார்டர் மூலம் - பண அஞ்சல் மூலம் அனுப்ப வேண்டுமென்ற கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு முதலில் சென்னை மாநகரத்திலும், நீலகிரி மாவட்டத்திலும் அமுலாக்கப்பட்டு வந்த இந்தத் திட்டம்

1974-ம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் செங்கற்பட்டு, மதுரை, கோவை, தென்னாற்காடு, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங் களுக்கும் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து மற்ற மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்படுவது பற்றி முயற்சிகள் எடுக்கப்படும்.

ஓய்வூதியத்திற்கு இருந்த மேல் வரம்பும் நீக்கப்பட்டிருக் கிறது. அரசு அலுவலாளர்களுக்குப் பண்டிகை முன்பணம் வழங்கும் திட்டம் அரசிதழ் பதிவில்லாத ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இறப்பு அல்லது ஓய்வுக்கால கிராசுடி குடும்ப ஓய்வூதியத்திற்காகப் பிடித்துக்கொள்ளப்படும் தொகை இரண்டு மாத ஊதியத்திலிருந்து ஒரு மாத ஊதியமாகக் குறைக்கப் பட்டுள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவச் சலுகைகள் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

பதவியிலிருந்து ஓய்வு பெறுகிற அரசு அலுவலர்கள் தாங்கள் கடைசியாகப் பணிபுரிந்த இடத்திலிருந்து தங்கள் சொந்த ஊருக்கு செல்ல பயணப்படி அளிக்கும் வசதியை இந்த அரசு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓய்வூதியக் கோப்புகள் - அந்த ஃபைல்கள் - விரைந்து முடிவு எடுக்கப்படுவது இல்லையென்ற குறைபாட்டை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அதற்காகத்தான் ஒரு இடைக்கால ஏற்பாடாக ஓய்வு பெறும் அரசு அலுவலர்கள் அனைவருக்கும் (அரசிதழ் பதிவு பெற்றவர்களுக்கும்) அவர்கள் ஓய்வு பெற்றவுடனேயே தற்காலிக ஓய்வூதியம், இறப்பு ஓய்வுக்கால பணிக்கொடை கொடுக்கப்படவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1974-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ம் தேதி முதல் ஓய்வு பெற்றவர்களுக்கு இரண்டு திங்கள் ஆகியும் பணிக்கொண்ட கொடுக்கப்படாமல் இருந்தால் அவர்களுக்குச் சேரவேண்டிய தொகைக்கு சதவீதம் வட்டியும் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்ற மாற்றத்தையும் நாம் ஏற்படுத்தி இருக்கிறோம்.

தாராள ஓய்வூதிய விதிகளின் நலன்களைப் பொறுத்தவரை அரசுப் பணியாளர்களுக்குக் கிடைக்கும் அதே நன்மைகளை மானியப் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் பெறுகிறார்கள்.

இவர்களுக்கும் ஓய்வூதியத்தைப் பெறுவதில் இருக்கும் சங்கடங்களைக் குறைக்க அரசு எடுத்திருக்கும் முக்கியமான முயற்சி கெசட் பதிவு இல்லாத அரசு அலுவலாளர்கள் ஓய்வு பெற்றவுடனே அந்தந்த அலுவலகத்தின் தலைமை அதிகாரியே புரொவிஷனல் ஓய்வூதியத்தையும், பணிக்கொடையையும் (கிராசுவிடி) கொடுக்கலாம் என்று உத்தரவிட்டிருக்கிறோம். பதிவு பெற்ற அலுவலாளர்களாக இருந்தால் முழு ஓய்வூதியத்தில் 50 சதவிகிதமும் கிராசுவிடியும் துறைத்தலைவர் கொடுக்கலாம் என்று உத்தரவிட்டிருக்கிறோம்.

மேலும் தற்போது நடைமுறைச் சிக்கல்களைக் குறைப்பதற்காக மாநிலக் கணக்காய்வுத் தலைவரோடு (ஏ.ஜி.) கலந்தாலோசித்து ஏற்ற முடிவுகளை எடுக்க அரசு முயற்சித்து வருகிறது. ஓய்வூதியம் கிடைக்க வேண்டிய நாளில் தாமதம் எற்படுவதைத் தவிர்க்கும் நோக்கத்தோடு 8 சதவிகிதம் வட்டி வழங்க ஆணையிட்டிருக்கிறோம் என்றாலும்கூட இடையில் மாவட்ட அளவில் ஏற்பட்டு விடுகிற தாமதங்களை எப்படித் தவிர்ப்பது என்ற பிரச்சினைகளை எல்லாம் ஆராய சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டு, அவர் ஏ.ஜி.-யுடன் தொடர்பு கொண்டு தாமதங்களைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளை எப்படிச் செய்யலாம் என்றும் யோசிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜப்பார் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். சொர்விஸ் ரெக்கார்டுகள் உடனடியாகக் கிடைக்காமல் போகிற காரணத்தால் அதிலே அதிகாரிகள் குழப்பிக்கொண்டு அந்த ரெக்கார்டு வரவில்லை, இந்த ரெக்காடு வரவில்லை என்ற காரணம் காட்டி ஓய்வூதியம் பெறத் தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். நான் இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வேன் - சொர்வீஸ் ரெக்கார்டுகள் உடனடியாகக் கிடைக்காமல் தாமதம் ஏற்பட்டாலும் ஆங்காங்கு இருக்கும் அதிகாரிகள் அதைப் பொருட்படுத்தாமல் கடைசியாக வேலை செய்த ஆண்டு சொர்வீஸ் ரெக்காடு விவரங்கள் இருந்தால் அதை மாத்திரம் வைத்து 80 சதவிகித பென்ஷனை உடனடியாகக் கொடுத்துவிட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வேன்.

இந்த மானியத்தில் மிக முக்கியமாக விவாதிக்கப்பட்ட இன்னொன்று புயல், வெள்ளம். இவைகளின் காரணமாக

நம்முடைய மாநிலத்திலே பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த அரசு எந்தெந்த வகையில் எல்லாம் நிவாரண உதவிகளை அளித்திருக்கிறது என்பதை நண்பர் காமாட்சி அவர்களும், நண்பர் வேழவேந்தன் அவர்களும் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

இந்த நிவாரணப் பணிகளுக்காக 1972-73-ம் நிதியாண்டில் 684 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1973-74-ம் ஆண்டில் 579 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

புயல், வெள்ள நிவாரணத்திற்காக மாத்திரம் நாம் 1974-ம் ஆண்டில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணமாகவும், வீடு கட்ட உதவித் தொகையாகவும், உணவு வழங்க ஆகிய செலவும் 152 இலட்சம் ரூபாய் ஆகும்.

கடந்த வெள்ளத்தின்போது புயலின் காரணமாகவும், வெள்ளத்தின் காரணமாகவும், தென்னாற்காடு மாவட்டத்திலும் குறைந்த அளவுக்கு தஞ்சை மாவட்டத்திலும் மொத்தம் 13,000 ஏக்கர் நிலம் மண்மேடிட்டு விட்டது. நிலம் இருந்த இடமே தெரியவில்லை. அந்த அளவுக்கு ஆறுகள் எல்லாம் திசை மாறி பாய்ந்து நிலங்கள் மண்ணுக்குள்ளே போய்விட்டன. அந்த மண்ணை வாரிஎடுத்து மீண்டும் தாங்கள் பயிர் செய்த நிலங்களைக் காண்பதற்கு விவசாயிகள் அழுது புலம்பிய போது - ஏற்கெனவே அதை விவசாயிகள் தாங்களே செய்து கொள்வதற்காக அரசு கருவிகளை அளிக்கும், அதற்குரிய தொகையைப் பெற்றுக்கொள்ளும் என்றும் நிலை போய், இன்றைக்கு அந்த 13,000 ஏக்கர் நிலத்திலும் மண்ணை வாரி மீண்டும் நிலத்தைக் கண்டுபிடித்து பயிர் செய்யப் பக்குவமாகக் கொடுக்க ஏக்கருக்கு 85 ரூபாய் செலவை இந்த அரசு தானாகவே ஏற்றுக்கொண்டு விவசாயிகளுக்கு எந்தச் செலவும் வைக்காமல் முதல் முதலாக, இந்த மாநிலத்திலேயே, இந்தியாவிலேயே, முதல் தடவையாக விவசாயிகளுக்கு அந்தப் பேருதவியை இந்த அரசு செய்திருக்கிறது. (ஆரவாரம்).

அதை போலவே சிறிய நீர்ப்பாசன வசதிகளைச் சீர்படுத்தவும், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் சாலைகளைச் சீரமைக்கவும் 532 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

நடுத்தர நீர்நிலைகளைச் சீர்படுத்த 265 இலட்சம் ரூபாயும் பாதிக்கப்பட்ட கட்டடங்களை சீரமைக்க 9 இலட்சம் ரூபாயும், முனிசிபல் சாலைகளைச் சீர்படுத்த 38 இலட்சம் ரூபாயும், சென்னை மாநகராட்சி சாலைகளை சீரமைக்க 37 இலட்சம் ரூபாயும், விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட தக்காவிக் கடன்கள் வகையில் 145 இலட்சம் ரூபாயும், 1974 மார்ச் மாதத்தில் எதிர்பார்க்கப்படும் செலவு 117 இலட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 13 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவழிக்கப் பட்டிருக்கிறது.

வீராசாமி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சொன்னார்கள், இதற்காக 14 கோடி ரூபாயை மத்திய அரசிடத்தில் கேட்டபோது அவர்கள் முதலில் தருவதாக வாக்களித்தார்கள். நான் இந்த மன்றத்தில்கூடச் சொன்னதாக நினைவு. அப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள். 14 கோடி ரூபாய் தருவதாக முதலிலே ஒப்புக்கொண்ட மத்திய அரசு அந்தத் தொகையைத் தரவில்லை. 4 கோடி ரூபாய் அளவுக்குத்தான் மத்திய அரசு நமக்கு இந்த வெள்ள நிவாரண நிதியை வழங்கிற்று என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதைச் சொல்லும்போது ஏற்கெனவே ஒருமுறை 17 கோடி ரூபாயை வெள்ள நிவாரணத்திற்காக மத்திய அரசு தரவில்லையா என்று சில பேருடைய கண்கள் என்னைப் பார்த்துக் கேட்கின்றன. அது 1971-க்கு முன்பு.

1971-க்குப் பிறகு ஏற்பட்ட இந்த கொடிய வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக நாம் கணக்கிட்டுத்தந்த 14 கோடி ரூபாயைத் தருவதாக ஒத்துக் கொண்டு 4 கோடி ரூபாய்தான் அளித்திருப்பது என்பது வேதனைக்குரிய செய்தி என்று தெரிவித்துக்கொள்வேன்.

வெள்ள விபத்துக்களைப் போல தீ விபத்துக்கள் பற்றியும் இங்கே பேசப்பட்டது. குறிப்பாக குடியாத்தம் தீ விபத்து பற்றி இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது.

குடியாத்தம் தீ விபத்தில் பிரதமர் அவர்களும், தமிழக அரசும், மற்றும் பல்வேறு கட்சிகளும் எந்தளவிற்கு அக்கறை

எடுத்துக்கொண்டு பொதுமக்கள் தங்களுடைய வள்ளல் தன்மையைக் காட்டியதன் வாயிலாக அந்த மக்களுக்கு போதிய நிவாரணம் அளிக்கப்பட்டு வருகிறது என்றாலும் மேலும் பல நிவாரணங்களை நிரந்தரமாக கையாள வேண்டும் என்ற கோரிக்கையை இங்கே பேசியவர்களும் குறிப்பிட்டார்கள்.

அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நண்பர் துரைசாமி அவர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். இன்று நம் முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த நண்பர்களும் என்னிடம் ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த அவையில் இந்திரா காங்கிரஸ், ஸ்தாபன காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி, மற்ற எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இதேபோன்ற முறையீடுகளைத் தந்து உடனடியாக நல்ல நிரந்தரமான நிவாரணத்தை அங்கு அளிப்பதற்காக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நான் இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இதையும் சில பேர்கள் அந்தப் பகுதியில் உள்ளவர்கள் அரசியல் கண்ணோட்டத்தோடு நடத்துவதற்கு முனைந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். இரண்டு மதங்களுக்கிடையே சண்டைகளை வளர்த்துவிடலாம் என்ற ஒரு முயற்சி. அப்போது நான் சட்டசபையில் பேசும்போது சொன்னேன். ஒரு சிலயிடங்களில் பணம் கிடைக்கிறது என்பதற்காக மிகச் சாதாரணசிறிய குடிசைகளை தாங்களே கொளுத்திக்கொள்கிற சூழ்நிலையும் இருக்கிறது, அவர்களை நாம் எல்லாம் கண்காணிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டேன். குடியாத்தத்தைத்தான் அப்படிச் சொன்னார்கள். குடியாத்தத்தில் உள்ளவர்கள்தான் அதைக் கொளுத்திக் கொண்டார்கள் என்று நான் சொன்னதாக பெரிய துண்டு அறிக்கைகள் எல்லாம்கூட வெளியிட்டு வீட்டுக்கு வீடு அவர்கள் வழங்கி வருவதாக - திரு. லத்தீப், திரு. ஜப்பார், திரு. வகாப் போன்றோர் அங்குச் சென்று பார்த்தபோது அங்கு வீட்டில் உள்ளவர்கள் முதல் அமைச்சர் அவர்கள் இப்படிச் சொன்னார்களாமே, எங்களது குடிசைகளை நாங்களே கொளுத்திக்கொண்டோம் என்று

சொன்னார்களே என்று கேட்டு, இவர்கள் நான் சட்டசபையில் சொன்னதை விளக்கிய பிறகு அவர்கள் ஆறுதல் பெற்றிருக் கிறார்கள்.

இதுபோல் மனிதாபிமானத்தோடு அணுகவேண்டிய காரியங்களில் அரசியல் காழ்ப்புணர்ச்சிகள், அரசியல் வேடிக்கை விளையாட்டுக்கள் இவற்றிற்க்கு யாரும் இடம் தந்துவிடக்கூடாது.

அவர்களுக்கு மிக முக்கியமான தேவையாக இருப்பது தறிகள். அந்தத் தறிகளை உடனடியாகச் செய்து கொடுப்பதற்கு சைதாப்பேட்டைப் பகுதியிலும் காஞ்சிபுரத்திலும் உரிய முயற்சிகள் எல்லாம் இன்றைக்கு எடுக்கப்பட்டிருக்கின்றன.

அவைகளன்னியில் இன்னும் எந்தெந்த வகைகளில் அவர்களுக்கு உதவிகள் செய்யவேண்டும் என்பதைப்பற்றி ஆராய மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையில் ஒரு குழு, அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இருக்கிற ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய முடிவுகளை அறிந்து அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கும் என்று நானெ தெரிவித்துக்கொள்வேன்.

அதேபோல் விழுப்புரம் தீ விபத்து பற்றி ஜப்பார் அவர்கள் பேசினார்கள். அங்குப் பாதிக்கப்பட்டது 18 குடிசைகள். நிவாரணம் அளிக்கும்படி தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் அதுபற்றிய அறிக்கை தரும்படி கேட்டிருக் கிறோம். அந்த அறிக்கை விரைவில் வந்ததும் ஆவன செய்யப் படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்வேன்.

வெள்ளம், தீ, இவைகள் அன்னியில் ஏற்கெனவே இந்த மன்றத்தில் 1969-ம் ஆண்டு நான் அறிவித்ததையொட்டி கடலில் மீன் பிடிக்கச் செல்கிற மீனவர்கள் காணாமல் போய்விடுவார்க ளானால் அவர்களுடைய குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் அரசின் சார்பில் நிதி வழங்கப்படும் என்று அறிவித்ததையொட்டி 1969 முதல் அந்த மானியம் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அப்படி உதவிபெற்ற குடும்பங்களுடைய எண்ணிக்கை 193.

அதை அறிவித்தபோது ஆயிரம் ரூபாய்தானே, நாலைந்து பேர்கள் சாவார்களா, இது என்ன பெரிய செலவு அரசுக்கு என்று கூடச் சொல்லப்பட்டது. ஆனால் 1.39 இலட்சம்

ரூபாய் 139 குடும்பங்களுக்கு 69-க்குப் பிறகு அளிக்கப் பட்டிருக்கிறது.

அதேபோல் பனைமரத்தில் ஏறுகிறவர்கள் கீழே விழுந்து இறந்து விட்டால் அல்லது ஊனமுற்றால் அல்லது சிறு காயமுற்றால் என்று பிரித்து காதிஇலாகா வழியாக அவர்களுக்குப் பண உதவி செய்யப்படும் என்று இந்த மன்றத்தில் நான் அறிவித்திருக்கிறேன்.

இறந்து போனால் அந்தக் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய், ஊனமுற்றால் ரூ. 500, சிறு விபத்து ஏற்பட்டால் ரூ. 100 என்றும் நான் அறிவித்தேன். 31-3-74-ம் தேதி வரையில் அப்படி இறந்தவர்கள் 102 பேர்கள். பனை மரம் ஏறி கீழே விழுந்து இறந்தவர்கள் 102 பேர்கள். அவர்களுக்கு ரூ. 1,02,000 வழங்கப்பட்டிருக்கிறது.

பெரும் விபத்துக்கள் காரணமாக 110 பேர்களுக்கு ரூ. 5,500-ம் சிறிய விபத்துக்களில் 23 பேர்கள், அவர்களுக்கு ரூ. 2,300 என்று ஆகமொத்தம் ரூ. 1,59,300 பனைமரத்தில் ஏறி கீழே விழுந்து இறந்தவர்கள், ஊனப்பட்டவர்களுடைய குடும்பங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

**திருமதி த.ந. அனந்தநாயகி :** அடிக்கடி முதல் அமைச்சர் அவர்கள் பனைமரம், பனைமரம் என்று சொல்வதைப் பார்த்தால் வெறும் பனைமரம் ஏறி விழுபவர்களுக்கு மட்டும்தான் அந்த நஷ்டயீடா? தென்னை மரத்தில் ஏறி விழுந்தாலும் அந்த நஷ்டயீடு உண்டா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** நான் அதை மரம் ஏறி என்று சொன்னால் மரத்தில் ஏறி விழுந்துவிட்டால், எல்லா மரங்களிலும் ஏறி விழுபவர்களும் கேட்பார்கள், ஆகவே பனைமரம் என்பதற்கு யாராவது விளக்கம் கேட்டால் தென்னை மரமும் சேருமா என்று கேட்டால் சொல்லலாம் என்றிருந்தேன். தென்னையும் சேரும்.

விடுதலைப் போராட்டவீரர்கள் பற்றி இங்கு நம்முடைய பெரியவர் மணலி அவர்களும், நண்பர் குருசாமி அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

பலமுறை இந்த மன்றத்தில் இந்த அரசு விடுதலைப் போராட்ட வீரர்களுடைய குடும்ப நலத்தில் எந்த அளவிற்கு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்லி யிருக்கிறேன்.

1-10-1966-ம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியம் பெறும் திட்டத்தை அறிவித்தது. அவர்கள் 1966-ல் ஐந்து பேர்களுக்குத்தான் அவர்களால் தர முடிந்தது. ஏனென்றால், 1-10-66-ல் இந்தத் திட்டத்தைத் தொடங்கிய காரணத்தால் ஆட்சிப் பொறுப்பில் காங்கிரஸ் இருந்த சில மாதங்களில் ஐந்து பேர்களுக்கு அவர்கள் அளித்தார்கள்.

அதற்குப் பிறகு 1967-ல் அண்ணா அவர்கள் முதல் அமைச்சர் பொறுப்பேற்றுக்கொண்ட பின் 1,254 பேர்கள்.

1968-ல் 1,817பேர்கள்.
1969-ல் 1,742 பேர்கள்.
1970-ல் 1,914 பேர்கள்.
1971-ல் 453 பேர்கள்.
1972-ல் 290 பேர்கள்.
1973-ல் 313 பேர்கள்.

1974 பிப்ரவரி முடிய 27 பேர்கள். ஆக 7,815 பேர்களுக்கு இந்த மானியத் தொகை அளிக்கப்பட்டிருக்கிறது.

1966-67 நிதி ஆண்டில் ரூ. 3,057 தான் அளிக்கப்பட்டது. ஆனால் 1974 வரையில் அந்தத் தியாகிகளுக்காக அளிக்கப்பட்ட மானியத்தினுடைய முழுத்தொகை ரூ. 2,72,23,022 என்பதிலிருந்து அந்த விடுதலை வீரர் களிடத்தில் இந்த அரசு எவ்வளவு மதிப்பும் மரியாதையும் அன்பும் பரிவும் கொண்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதில் இன்னும் சில பேர்கள் இந்தத் தொகையைப் பெற இயலவில்லை என்று குறிப்பிடப்பட்டது. இந்த அரசு பொறுப் பேற்றுக்கொண்ட பிறகு இந்த மானியங்களுக்கான கடைசித் தேதியை பலமுறை ஒத்திவைத்து, ஒத்திவைத்து அவர்களுக்கு

சலுகைகள் வழங்கியிருக்கிறது. இப்போது பரிசீலனையில் உள்ளவை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் உள்ளவை 822 மனுக்கள், அரசிடம் உள்ள 1955 மனுக்கள்தான் இப்போது பரிசீலனையில் இருக்கின்றன. இதிலே சிலபேர்கள் சிறையில் இருந்ததற்கு ஆதாரங்கள் இல்லை. சில பேர்கள் சிறைச் சாலையிலிருந்து அவர்கள் தண்டனைக்காலம் முழுவதும் அனுபவிக்காமல் சென்றிருக்கிறார்கள்.

இப்படி பல்வேறு வகையான சங்கடங்கள் இதில் இருக்கிற காரணத்தால் இவர்களுக்கும்கூட உடனடியாக அவர்கள் வழங்கமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருந்த அரசாங்கம் மூன்று மாதத்திற்குக் குறையாமல் தடுப்புக் காவல் அல்லது காவலில் வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று வரையறுத்திருந்தது.

ஆனால், அதில் மிகக் கண்டிப்பாக இந்த அரசு இல்லாமல் இரண்டு மாதங்களைக்கூட சிலநேரங்களில் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு மூன்று மாதம் போட்டிருந்தால் நிச்சயமாக அனுபவித்திருப்பார்கள். நீதிபதி இரண்டு மாதம்தான் போட்டார்கள், ஆகவே அவர்கள் இரண்டு மாதம் சென்று அனுபவித்தார்கள் என்று அந்த வாதங்களை எல்லாம்கூட ஏற்றுக்கொண்டு பலருக்கு இந்த அரசு இந்த மானியங்களை வழங்கியிருக்கிறது என்று நான் எடுத்துச்சொல்வேன்.

1966 முதல் 1972 வரையில் அவர்களுக்கு மாதந்தோறும் ரூ. 50 மாதாந்திர மானியமாக வழங்கப்பட்டு, 25-வது ஆண்டு சுதந்திரதின வெள்ளி விழாவை முன்னிட்டு அதை ரூ. 75 ஆக நாம் மாற்றிக்கொடுத்திருக்கிறோம்.

அவர்களுக்கு மாத்திரமல்லாமல் இந்த மானியத் தொகை பெறுகிற தகுதியை பழைய அரசு வகுத்த வரைமுறைகளுக்குள் வராத வீரபாண்டிய கட்டபொம்மன் வழித் தோன்றல்களுக்கு 11-1-1971 முதல் மானியத்தொகை வழங்கி வருகிறோம் ஐந்து பேர்களுக்கு.

சென்னை என்ற பெயரை தமிழ்நாடு என்று மாற்ற வேண்டும் என்பதற்காக உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த சங்கரலிங்கம் நாடார் அவர்களின் மனைவி செந்தியம்மாள்

அவர்களுக்கு 26-1-1970 முதல் மாதம் ரூ. 150 அளித்து வந்தோம். பிறகு அந்த அம்மையார் அவர்கள் காலமாகிவிட்டார் என்று தெரிந்த பிறகு அது நிறுத்தப்பட்டது.

அரிய கலையின் மூலமாக விடுதலைப் போராட்டத்திற்கு ஊக்கமூட்டிய விஸ்வநாத தாஸ் அவர்களின் மகன் எஸ்.வி. காசி நாதன் மனைவி பிச்சையம்மாள், 2-வது மகள் வி. தங்கத்தாய், 3-வது மகன் எஸ்.எஸ். முத்தையா தாஸ் ஆகியோருக்கு 5-2-1972 முதல் அந்த வீர மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்களின் மகள் ஆனந்த வல்லிக்கும், அவரது மகன் வ.உ.சி. ஆறுமுகம் அவர்களுக்கும் 20-10-1972 முதலும், 1-10-1973 முதலும் முறையே அவர்களுக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர், பெரும் தியாகி, கோமதி சங்கர தீட்சிதர் அவர்களின் மகன் ஜி. மகாதேவன் அவர்களுக்கு 26-6-1971 முதல் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

ஆகவே, இதிலே எந்த காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல், கட்சி மாச்சரியங்கள் அணுவளவும் தலையிடுவதற்கு வழி இல்லாமல், இந்த அரசு இந்த மக்களின் உரிமைக்காகப் போராடிய வீரர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும், அவர்களுடைய குடும்பங்கள் வறுமையில் வாடக்கூடாது என்ற அக்கறையோடு இருந்து தொடர்ந்து செய்துவருகிறது.

இதன் தொடர்பாக நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள், கன்னியாகுமரி பகுதியில் தாய் தமிழகத்தோடு சேர வேண்டுமென்று போராடிய வீரர்களுக்கு எப்போது மானியம் அளிக்கப் போகிறீர்கள், அளிப்பதாகச் சொன்னீர்கள், ஒன்று கொடுப்பதாகச் சொல்லுங்கள், அல்லது இல்லை என்று இப்போதே சொல்லுங்கள் என்று அத்தனை ஆவேசத்தோடு பேசினார்.

கேட்கவேண்டியது நியாம்தான். அளிப்பதாகச் சொல்லி யிருக்கிறீர்கள். நன்றி, விரைவில் அளியுங்கள் என்று கேட்டு இருந்தால், இந்த அரசு இவ்வளவு காரியம் செய்து

இருக்கிறது என்பதை மனமுவந்து பாராட்டுகிறார் என்று கொள்ளலாம். எதிர்க்கட்சியில் இருக்கிறோம் என்ற ஒரே காரணத்திற்காக உண்டா, இல்லையா இப்போதே சொல்லி விடுங்கள் என்று கூறுவது, அதையும் அவர் கொஞ்சம் ஆத்திரத் தோடு சொல்லிவிட்டார்.

அவர் அப்படிச் சொன்ன காரணத்தால் நானும் கோபப்பட்டு இல்லை என்று சொல்லி விடமாட்டேன். இந்த அரசு குமரி மாவட்டம் தாய் தமிழகத்தோடு சேர வேண்டும் என்பதற்காக போராடிய வீரர்களை, அவர்களுடைய குடும்பங்களை காப்பாற்றும் என்று அளித்த உறுதியையும், அதே போன்று இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு இறந்த குடும்பங்களின் வாரிசுகளுக்கும், வீரர்களுக்கும் மானியம் வழங்கும் என்று அறிவித்தோம் எந்தக் காரணத்தாலும் நிச்சயமாக பின் வாங்காது. கொள்கையில் தொடர்ந்து நிச்சயமாக அதைச் செய்யும் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே 1965-ம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளாகி கொல்லப்பட்ட 53 பேரின் குடும்பங்களுக்கு இந்த அரசு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 2,000 வீதம் சென்ற ஆண்டு என்று கருதுகிறேன் - கிட்டத்தட்ட 1 இலட்ச ரூபாய்க்கு மேல் அந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதே போல் தீக்குளித்து இறந்த அரங்கநாதன், வீரப்பன், முத்து, சண்முகம், சின்னசாமி, சிவலிங்கம், முத்து, மாணவர் தண்டபாணி, மாயூரம் சாரங்கபாணி ஆகிய 9 பேர்களின் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் 1-4-72-லிருந்து வழங்க உத்தர விடப்பட்டு, அது வழங்கப்பட்டு வருகிறது.

மற்ற இந்தி எதிர்ப்பில் சிறை சென்றவர்கள், குமரி மாவட்டத்தில் சிறை சென்றவர்கள் தியாகத் தழும்புகளை ஏற்றுக் கொண்டவர்கள் நிச்சயமாக கவனிக்கப்படுவார்கள். விரைவில் அதற்கான முடிவுகள் எடுத்து இந்த அரசு அறிவிக்கும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திட்டக்குழு உறுப்பினர்கள் என்ன செய்து கெண்டிருக் கிறார்கள் என்று நம்முடைய மாண்புமிகு கே.டி.கே. தங்கமணி

அவர்கள் கேட்டார்கள். திட்டக்குழு உறுப்பினர்கள் தாங்கள் செய்யவேண்டிய வேலையை முடித்து 30-3-74 அன்று திரு. ராஜாராம் அவர்களின் தலைமையில் என்னைச் சந்தித்து திட்டக் குழுவின் அறிக்கையை - முழுமையான அறிக்கையை - என்னிடம் தந்து இருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதுபற்றி அரசு பரிசீலித்து, அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம், அவர்களது கவனத்திற்கெல்லாம் அந்த அறிக்கை பற்றிய சாராம்சம் கொண்டுவரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்வேன்.

நண்பர் ஹாண்டே அவர்கள் இரண்டு மூன்று குற்றச் சாட்டுகளைச் சொன்னார்கள். கவர்ன்மென்ட் பிளீடர் ஏதோ ஒரு வழக்கில் அரசாங்கத்திற்கு விரோதமாக வாதாடி இருக்கிறார். ஆஜராகியிருக்கிறார் என்பதை எடுத்துச்சொன்னார்கள். அது ஒன்றும் இந்த அரசு போட்டிருக்கும் சட்டம் அல்ல; வகுத்து இருக்கும் விதி அல்ல. 1889-ம் ஆண்டிலேயே அது வகுக்கப் பட்டிருக்கிறது.

அரசு வக்கீல் குற்றவியல் வழக்குகளில் (கிரிமினல் கேஸ்களில்) அரசுக்கு எதிராக தனி நபர்களுக்கு வழக்காட மறுப்பு இல்லை. அதைப் பயன்படுத்திக்கொண்டுதான் இப்போது நம்முடைய கவர்ன்மென்ட் பிளீடர் ஒரு சில வழக்குகளில் அரசுக்கு எதிராக தனி நபருக்கு வாதாடி இருக்கிறார். இது 1889, 1900-லே போடப்பட்டிருக்கிறது. ஆகவே வாதாடலாம் என்று நான் வாதாடுவதாக யாரும் எடுத்துக்கொள்ள வேண்டாம்.

என்னைப் பொறுத்தவரையில், இந்த அரசைப் பொறுத்த வரையில் நானே நம்முடைய அமைச்சர், சட்ட அமைச்சர் அவர்களைக் கலந்துகொண்டு ஆலோசித்த நேரத்தில், சட்டம் இடம் தந்தாலும் மரபு இடம் தருவதாக எங்களுடைய மனம் ஒத்துக்கொள்ளவில்லை. ஆகவே, இது 1889-ல் போடப்பட்ட சட்டமாக இருந்தாலும், பிறகு 1949-லே அதை மாற்றவேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டு, அந்த முயற்சி தொடக்கத்திலேயே கருகி விட்டது என்றாலும்கூட அதை எப்படியும் மாற்றி, அது போன்ற சூழ்நிலை ஏற்படாமல் இருப்பதற்கு நிச்சயமாக இந்த விதிமுறைகள் திருத்தப்

படுவதற்கு அரசு உத்தரவுகளைப் பிறப்பிக்கும் என்பதை மாத்திரம் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் பற்றி இரண்டு, மூன்று குற்றச்சாட்டுகளை இங்கே ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். இன்டர்வியூ மார்க்குகளையெல்லாம் ஒரு உறுப்பினர் யாருக்கும் கொடுக்காமல் தானே தன்னுடைய பையில் வைத்துக் கொண்டு போய்விட்டார் என்பது அவருடைய குற்றச்சாட்டு. அதுபற்றி விசாரித்ததில், அது முற்றிலும் தவறான தகவல் என்றும், ஒவ்வொரு நாளும் மார்க் பட்டியல் (மார்க் லிஸ்ட்) அவ்வலுவலகத்தில் கொடுக்கப்பட்டதாகவும் தெரிகிறது. டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு கிடைத்தது சரியான தகவல் என்று கொள்ள முடியாது.

இன்னொன்றையும் சொன்னார்கள். அறநிலையத் தோ்வுக்கு. தோ்வுக்காக 30 மார்க்குகளும், இன்டர்வியூக்கு 400 மார்க்கும் என்று சொன்னார்கள். 400 மார்க் என்பது சரித்திரத்தில் இல்லாத செயல் என்று சொன்னார்கள்.

நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். சரித்திரத்தில் இல்லாத செயல் என்று சொன்னார்கள். ஒரு வேளை 400 மார்க் வைத்து இருப்பது ஹாண்டே அவர்களுக்கு வேண்டுமானால் சரித்திரத்தில் இல்லாத செயலாக இருக்கும். ஆனால் 1964 அக்டோபர் 21-ம் தேதி சர்க்கார் பிற்ப்பித்த அந்த ஆணையிலேயே அன்றைக்கே இருக்கிறது. 400 மார்க்குகூட அல்ல. அறநிலையத் துறைத் தேர்வுக்கு 450 மார்க் வேண்டு மென்று அன்றைக்கே இருக்கிறது. ஆகவே, அவர்கள் சொன்னது கூட 400 என்பது தவறாகும். 450 மார்க்கு வேண்டும். இது 1964-ம் ஆண்டிலிருந்து அமலில் இருந்துவரும் விதிமுறையாகும் என்று சொல்லிக்கொள்வேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். டம்மி முறையில் பரீட்சை நெம்பர் போடுவது கைவிடப்பட்டது என்று சொன்னார்கள். இது மாற்றப்பட்ட பிறகு சரியான முறையில் இல்லை என்று சொன்னார்கள். ஒரு வேளை குறைவாக வரும் மனுக்கள் அதிகமான காரணத்தால் அந்த முறை தவிர்க்கப் பட்டிருக்கலாம் என்று கருதுகிறேன். அந்த முறையை மீண்டும்

புகுத்த இயலுமா என்பதை நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்வேன்.

நண்பர் செழியன் அவர்கள் டெல்லியிலே ஒரு அதிகாரி செய்த தவறு பற்றி குறிப்பிட்டார்கள். புதுடெல்லியில் ஒரு அதிகாரி இருந்தார். அவர் காங்கிரஸ் ஆட்சி காலத்திலே அந்த அலுவலுக்கு அமர்த்தப்பட்டவர். தமிழ்நாடு இல்லத்தில் 74,000 சொச்ச ரூபாய். அவர் அதிகாரியாக இருந்தபோது பணம் காணவில்லை என்ற செய்தி கிடைத்தது. 1972-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16-ம் நாளன்று அவர் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டு, பிறகு காணாமல் போன பணம் முழுவதும் அவர் திருப்பிக் கட்டிய பிறகு இப்போது அவர் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப் பற்றி அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. பணத்தைத் திருப்பிக் கட்டிவிட்டதால் அவர் திருச்சியில் சுற்றுலா அலுவலராக பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார். விசாரணை முடிந்து விடவில்லை. எத்தனை நடவடிக்கை எடுக்கலாம் என்ற விஷயம் ஆராய்ச்சியில் இருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊட்டியில் இருக்கிற அதிகாரி பற்றிச் சொன்னார்கள். அதுவும் மூடிவிடப்பட்ட புத்தகம் அல்ல. அது பற்றியும் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்வேன்.

நண்பர் பாலசுந்தரம் அவர்கள் பேசும்போது இந்த மானியக் கோரிக்கையில் ஜமீன் ஒழிப்புத் தொகை கோரியிருப்பதைப் பார்த்து, ஏதோ இந்த அரசு ஜமீன்தார்களுக்குப் பணம் வழங்குகிறது என்று கருதிக்கொண்டு, இந்தக் காலத்திலே அவர்களுக்கு வழங்க வேண்டுமா என்று கேட்டார்கள்.

ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் 1963-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 4-ம் நாள் வரையில் 4 சட்டங்கள் இயற்றப்பட்டு, ஜமீன் முறை ஒழிப்பு சட்டத்தின்படி அவர்களுக்குச் சேரவேண்டிய இழப்பீட்டுத் தொகை, அதை ஒவ்வொரு ஆண்டும் சிறுகச் சிறுக கொடுத்துக்கொண்டு வருகிறோம். அதிலே சில

பேர் நீதிமன்றத்தில் கூட போராடிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையிலே இதுவரையில் கிட்டத்தட்ட 9 கோடி ரூபாய் அளவுக்கு அவர்களுக்கான இழப்பீட்டுத் தொகை அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான பணம் இந்த மானியத்தில் இழப்பீட்டுத் தொகையாக கேட்கப்பட்டிருக்கிறதே அல்லாமல் வேறு அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சர்கள் ஊரிலேயே இருப்பதில்லை என்று சொன்னார்கள். பத்திரிகையில் நாளைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் ஊரிலேயே இருப்பதில்லை என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்று செய்திகள் வரலாம். இந்தப் புள்ளிவிரத்தைப் பார்த்தால் அமைச்சர்கள் அதிக நாட்கள் சென்னையில் தங்கி அலுவல்களைப் பார்த்தார்களா அல்லது சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டிருந்தார்களா என்ற உண்மை தெரியும்.

முதல் அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் - 1973-74-ல் 287 நாட்கள். வெளியூர் சென்ற நாட்கள் 78.

கல்வி அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 282. வெளியூர் சென்ற நாட்கள் 83.

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 303. வெளியூர் சென்ற நாட்கள் 62.

பின்தங்கிய நலத்துறை அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 300. வெளியூர் சென்ற நாட்கள் 65.

அரிசன நலத்துறை அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 286. வெளியூர் சென்ற நாட்கள் 79.

பொதுப்பணித்துறை அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 261. வெளியூர் சென்ற நாட்கள் 104.

தொழில் அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 263. வெளியூர் சென்ற நாட்கள் 102.

வருவாய்த் துறை அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 287. வெளியூர் சென்ற நாட்கள் 78.

வேளாண்மைத்துறை அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 301. வெளியூர் சென்ற நாட்கள் 64.

உள்ளாட்சித் துறை அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 202. வெளியூர் சென்ற நாட்கள் 163. அவர் ஒருவர்தான் கொஞ்சம் அதிகம் போயிருக்கிறார். ஏனென்றால் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 270. வெளியூர் சென்ற நாட்கள் 95.

தொழிலாளர் நல அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 224. அதுவும் ஆச்சரியம். வெளியூர் சென்ற நாட்கள் 141.

மின்வாரிய அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 261. வெளியூர் சுற்றுப் பயண நாட்கள் 104.

போக்குவரத்து அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 243. வெளியூர் சென்றது 122 நாட்கள்.

அறநிலைய அமைச்சர் சென்னையில் தங்கியது 216 நாட்கள். வெளியூர் சென்றது 149 நாட்கள்.

ஆக, இந்தக் கணக்கைப் பார்த்தால் 200-க்கு மேற்பட்ட, 250-க்கு மேற்பட்ட நாட்கள் சென்னையில் தங்கி நாங்கள் பணியாற்றி வருகிறோம். பொத்தாம் பொதுவிலே அமைச்சர்கள் சென்னையில் தங்குவதில்லை; நாங்கள் இவர்களைப் பார்க்கவே முடிவதில்லை என்று கூறுவது பொருத்தமற்றது என்பதற்காகத் தான் இந்த விளக்கத்தை அளித்தேனே அல்லாமல் வேறு அல்ல.

நண்பர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களும், திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களும் அமைச்சர்களுக்கு எழுதப்படுகின்ற கடிதங்களுக்கு அமைச்சர்களே பதில் எழுதவேண்டும் என்று சொன்னார்கள்.

இப்பொழுது இருக்கிற ஏற்பாடு உடனடியாக கடிதம் வந்து சேர்ந்தது என்று அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பதில் மூலம் தெரிவிக்கின்றார்கள். இனிமேல் அதைத் தொடர்ந்து விவரங்களைப் பார்த்து, அமைச்சர்கள் சட்டமன்ற

உறுப்பினர்களுக்குக் கடிதம் எழுதுகின்ற முறை மாண்புமிகு உறுப்பினர் கே.டி.கே. தங்கமணி அவர்களும், நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களும் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இன்று முதல் அமுலுக்கு வரும் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சர்கள் இடைத் தேர்தலில் ஈடுபடலாமா, இடைத் தேர்தலில் பிரசாரம் செய்யவரலாமா? வெட்டுத் தீர்மானத்தில் அதைத்தான் கே.டி.கே. தங்கமணி அவர்கள் கொடுத்திருக் கிறார்கள். வராமல் கூட இருந்து விடலாம். ஆனால், அவர்கள் ஜாக்கிரதையாக நான் எங்கே சொல்லி விடப்போகிறேனோ என்று, கேரள அமைச்சர் இங்கே வரலாம். ஆனால், இந்த மாநிலத்தில் நம்முடைய மாநில அமைச்சர்கள் இடைத் தேர்தலுக்குப் போகலாமா என்று கேட்டுவிட்டார்கள்.

வெட்டுத் தீர்மானத்தை எழுதிய பிறகு யாரோ போய்ச் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

கோவிந்தன் நாயர் அவர்கள் கோவைக்கு வந்து - அமைச்சர்கள் தேர்தலுக்கு வரக்கூடாது என்று இங்கே பேசிய செழியன் அவர்கள் ஆரம்பத்திலே பேசிய அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

கோவிந்தன் நாயர் அவர்களும், நண்பர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களும், கோவை செழியன் அவர்களும் அந்தக் கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். அதிலே கோவிந்தன் நாயர். எம்.ஜி.ஆர். இந்தியாவின் சரித்திரக் கதாநாயகன் என்று கூட பேசியிருக் கிறார்கள்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் கேரள மாநிலத்திலிருந்து ஒரு அமைச்சர் தமிழகத்திற்கு வந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். சரி அந்த மாநிலத்திலிருந்துதானே வந்தார். அவர் இங்கே பிரசாரத்திற்காகத் தானே வந்தார். அமைச்சர் என்ற அளவில் வரவில்லையே என்று சொல்கி றார்கள்.

செழியன் அவர்கள் பேசும்போது அமைச்சர் வந்தால் பின்னால் போலீஸ் பரிவாரங்கள் வருகிறார்கள். மக்கள் மந்திரி

அந்தஸ்தை நிதைத்துக்கொண்டு பயப்படுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அப்படி பயந்தார்களா என்றால் இல்லை.

ஆகவே, அவர்களுடைய வாதம் அடிபட்டுப்போகிறது என்று நான் கருதுகிறேன். அப்படி அமைச்சர்கள் பயமுறுத்தவும் இல்லை, மக்கள் பயப்படவும் இல்லை. எதிர்க்கட்சியில் இருக்கிற பொறுப்பான தலைவர்கள், விளம்பரப்பட்டுள்ள தலைவர்கள், அதிக மக்கள் கூட்டத்தைச் சேர்க்கும் தலைவர்கள் அவர்களுக்கு எப்படி அமைச்சர்களுக்கு போலீஸ் பாதுகாப்பு தரப்படுகிறதோ அதைப்போன்று போலீஸ் பாதுகாப்பு அவர்களுக்கும் தரப்படுகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

பிற மாநிலத்திலிருந்து இன்னொரு அமைச்சர் வந்தது மாத்திரமல்ல. வாதத்திற்காகக் அதைக்கூட விட்டுவிடுகிறேன். நடைபெறுகிற எல்லா தேர்தல்களும் மத்திய சர்க்கார் அமைச்சர்கள் இங்கே வந்து போகிற நேரத்தில், இங்கே பணியாற்றுகிற நேரத்தில், மாநில அமைச்சர்கள் மட்டும் கையை கட்டிக்கொண்டு, சி. சுப்பிரமணியமா வரட்டும், திண்டுக் கல்லுக்கு ஜகஜீவன்ராமா வரட்டும், சவானா வரட்டும், என்று இருக்க முடியுமா? பக்கத்திலிருக்கிற முதல் அமைச்சர், மைசூர் முதல் அமைச்சர் வந்திருக்கிறார். அண்மையில் மறைந்து விட்டார், ஒரு அமைச்சர், ஒரு முஸ்லீம் அமைச்சர் அவர்கள்கூட வந்திருக்கிறார்கள்.

இப்படி பல அமைச்சர்கள் பல மாநிலங்களிலிருந்து வருகிறார்கள். முதல் அமைச்சர்கள்கூட வருகிறார்கள்.

அது மாத்திரமல்ல, மத்திய சர்க்காரினுடைய காபினட் மினிஸ்டர்ஸ் கூட வந்திருக்கிறார்கள். அவர்கள் வந்து தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்கள்.

இன்னொன்றும் நான் சொல்லிக்கொள்கிறேன். தமிழ்நாட்டு முதல் அமைச்சரோ அல்லது கர்நாடக முதல் அமைச்சரோ, ஆந்திர முதல் அமைச்சரோ, பஞ்சாப் முதல் அமைச்சரோ தேர்தல் பிரசாரத்திற்குச் செல்கிறார்கள் என்றால், அவர்கள் தங்களுடைய கட்சி செலவில், சொந்த செலவில்தான் செல்ல வேண்டும். அது விதி. மற்ற மாநிலங்களில் அந்த விதி

மீறப்படுகிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் கட்சிக் கூட்டங்களுக்குச் செல்கிறார்கள் என்றால்கூட, தேர்தல் பிரச்சாரம் மாத்திரமல்ல, கட்சிக் கூட்டங்களுக்குச் செல்லுகிற பொழுதுகூட, அந்தத் தொகையை, அந்த வழிச்செலவை கட்சிதான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிற ஒரு விதியை வகுத்து, முதல் அமைச்சரும், மற்ற அமைச்சர் பெருமக்களும் அதைக் கடுமையாக இன்றைக்குக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

ஆனால், பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எந்த மாநிலத்திற்குத் தேர்தல் பிரசாரத்திற்குச் சென்றாலும், அந்தச் செலவை அவர்கள் அபிஷியல் பங்ஷனுக்கு வருகிற செலவு மாத்திரம் அல்ல, ஒரு கட்சிக் கூட்டத்தில் போய் கலந்து கொண்டாலும் அந்தச் செலவை அந்தந்த மாநில சர்க்கார்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிற ஒரு விதிமுறை செய்யப்பட்டு, எல்லா மாநில அரசுகளுக்கும் அந்த விதிமுறையும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

பிரதமர் அவர்கள், மத்திய சர்க்காருடைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களாக இருந்தாலும் சரி, இனி வரப்போகும் பிரதமராக இருந்தாலும் சரி, அவர்கள் கலந்துகொள்கின்ற கூட்டங்களுக்கு, கட்சிக்கூட்டங்களாக இருந்தாலும், அந்தச் செலவையெல்லாம் அந்தந்த மாநில அரசு முழுமையாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற விதியை செய்திருக்கிறார்கள்.

இதற்கிடையே இடைத் தேர்தலில் நம்முடைய மாநிலத்தில் அமைச்சர்கள் சென்று பிரச்சாரம் செய்வது தவறு என்று கூறுவதில் பொருத்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பல்வகை மானியக் கோரிக்கைகளிலே கிட்டத்தட்ட 94 கோடி ரூபாய் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது. இந்த மானிய கோரிக்கைகளின் மீது உரிய கருத்துக்கள் பலவற்றை வழங்கிய எல்லா கட்சி உறுப்பினர்களுக்கும் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் கூறி, வெட்டுத் தீர்மானங்களை யெல்லாம் திரும்பப்பெற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த அளவில் அமைகிறேன்.

# நிதி ஒதுக்கீடு மசோதா

உரை : 34 நாள் : 21.12.1974

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, இந்த நிதி மதிப்பீடுகள் விவாதத்தில் நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல துணை மதிப்பீடுகளின் பெயருக்கு ஏற்ப இந்த மதிப்பீடுகளைத் துணையாகக்கொண்டு இதில் சொல்லப் பட்டிருக்கிற விவரங்களுக்குள் ஆழமாகச் செல்லாவிட்டாலும் அவரவர்களுடைய தொகுதிப் பிரச்சினை குறித்தும், ஆங்காங்கு நடைபெறவேண்டிய வேலைத் திட்டங்கள் குறித்தும், இருக்கின்ற குறைபாடுகளை எவ்வாறு களைய வேண்டுமென்பது குறித்தும், அதிகாரிகள் சிலர் தவறான செயல்களில் ஈடுபடுகிறார்கள்; அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்பது குறித்தும், வேறுசில பொதுவான நிலை குறித்தும் மாண்புமிகு உறுப்பினர்களும் கட்சித் தலைவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

நம்முடைய நண்பர் திரு. லத்தீப் அவர்கள் பேசிய நேரத்தில் நம்முடைய சமூக நலத் திட்டங்கள் - துணை மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிற இந்தத் திட்டங்கள் வரவேற்கக்கூடியவை என்று கூறிவிட்டு இந்தத் திட்டங்களால் வருமானக் கூறுகள் - சமுதாயத்திற்கு பொருளாதாரத் துறையில் அரசாங்கத்தின் சார்பில் அமையக்கூடிய அந்தக் கூறுகள் குறைவாக இருக்கின்றன. அவைகளை மேம்படுத்த வேண்டுமென்ற ஒரு நல்ல கருத்தை எடுத்துச்சொன்னார்கள்.

இந்தத் திட்டங்களை, உற்பத்தி ஆதாரங்களை மையமாக வைத்து, இன்றைக்கு நாம் செயல்படுத்தி வருகின்றோம். எடுத்துக்காட்டாகச் சொல்வேண்டுமேயானால், ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டத்தில் அவர்களுக்கென ஒரு பயிற்சித் தொழிற்சாலையை அமைப்பதும் ஒன்றாகும். அண்மையிலே முட்டுக்காடு என்கின்ற பகுதியில், மாமல்லபுரம் செல்லும் பாட்டையில், அதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்று

அந்தத் தொழிற்சாலை ஏறத்தாழ ரூ. 10 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையில் அமையவிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையிலே ஊனமுற்றவர்கள் பயிற்சி பெறுவது மாத்திரமல்ல, அந்தப் பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படுகிற நேரத்திலும், பயிற்சி பெற்றவர்கள் அங்கே பணியாற்றுகிற நேரத்திலும் அந்தத் தொழிற்சாலையிலிருந்து மற்ற தொழிற்சாலைகளுக்குப் பயன்படுகின்ற வகையில் பல உற்பத்திக் கருவிகளையும் அங்கே உருவாக்குவதற்கான அந்தச் சாதனமும் இன்றைக்குப் பொருத்தப்பட்டு இருக்கிறது.

அதைப்போலவே பிச்சைக்காரர் நல்வாழ்வு இல்லங்களில் மறுவாழ்வு இல்லங்களில் - இதுபோன்ற தொழிற்சாலைகள் உற்பத்தித் திறன் உடையவைகளாக அமைய வேண்டுமென்ற அடிப்படையில் பரனூரில் அன்னிய நாட்டு உறவோடு, அவர்களுடைய நல்ல உதவியோடு அளிக்கப்பட்ட தொழிற் கூடத்தை நம்முடைய இந்திய நாட்டுப் பிரதமர் அவர்கள் சென்ற தடவை வந்திருந்தபொழுது தொடங்கி வைத்தார்கள்.

அது மாத்திரமல்ல, அந்த இல்லங்களிலேயிருக்கிற தொழுநோய் கொண்ட பிச்சைக்காரர்கள், அவர்களால் இயன்ற அளவிற்குக் கைத்தொழிலிலே ஈடுபடுவதற்கும் பாய் முடைதல், நாற்காலிகள் செய்தல், துணி நெசவு செய்தல் ஆகிய இந்தக் காரியங்களிலே ஈடுபடுவதற்கும் அவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஆகவே, சமூக நலத் திட்டங்கள் பாராட்டத்தக்க வேண்டியவை என்கின்ற வகையோடு மாத்திரமல்லாமல், இப்படிப்பட்டப் பொருளாதாரத் திட்டங்களோடு அவைகளை நாம் இன்றைக்கு இணைத்திருக்கிறோம்.

நம்முடைய அரசின் மிகப் பெரிய திட்டமாக இன்றைக்கு உருவெடுத்திருக்கிற தாழ்த்தப்பட்டோர் வீட்டு வசதி வாரியத்தினுடைய திட்டங்களைப்பற்றியும் இங்கே பேசப்பட்டது. நண்பர் குருசாமி அவர்கள் பேசும்போது, தாழ்த்தப்பட்டோர் வீட்டு வசதி வாரியத்தைப்பற்றிக் குறிப்பிட்டார். அவர்களுக்கு ரூ. 3,000 என்றும், ரூ. 3,500 என்றும் வீடுகளுக்காகத் தருகிறார்கள். அது போதாது என்று குறிப்பிட்டார். அதுவல்ல நிலைமை. அரிசன சகோதரர்களிடம் தனிப்பட்டு அப்படி ரூபாய்களை அளிப்பது கிடையாது. இந்த வாரியத்தின் சார்பில் கட்டப்படுகின்ற

வீடுகளின் பெறுமானம் ரூபாய் மூவாயிரமாகவும், மூவாயிரத்து ஐநூறு ரூபாயாகவும், சில இடங்களில் மூவாயிரத்து எழுநூறு ரூபாயாகவும் அமைகிறது. அது ஆங்காங்கு அடித்தளங்கள் அமைக்க வேண்டியதைப் பொறுத்து சில இடங்களில் பள்ளமாக விருப்பதை மேடாக ஆக்க வேண்டியதைப் பொறுத்து, அந்தத் தொகை அளிக்கப்படுகிறதேயல்லாமல், நாம் தனிப்பட்ட முறையில் அந்தத் தொகை வழங்குவதில்லை.

ஆங்காங்கு வாரியத்தின் சார்பில் நாம் வீடுகள் கட்டுகிறோம். ஏதோ பத்தாயிரம் வீடுகள் என்று விளம்பரம் செய்யப்படுகிறது. ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்படவில்லை என்று திருமதி சத்தியவாணிமுத்து இங்கே கூறினார். அது தவறான தகவல். ஏனென்றால், கடந்த 15-2-1974இல் தொடங்கப் பட்ட இத்திட்டத்தின்படி டிசம்பர் திங்களோடு பத்தாயிரம் வீடுகளைக் கட்டி அரிசன மக்களுக்கு வழங்கப்படுகிறது. இதிலே விழா நடத்தி, தொடங்கி வைக்கப்பட்ட வீடுகளுடைய எண்ணிக்கைக் குறைவாக இருக்கலாம். பத்தாயிரம் வீடுகளைத் தொடங்கி வைக்கிற விழாவினை, நிகழ்ச்சியினை நடத்த இயலவில்லையென்பதற்காக அந்த வீடுகளே கட்டப்படவில்லை என்று கூறுவது சரியல்ல. இந்தத் திங்களில் 10,000 வீடுகளும் அந்த 10,000 வீட்டுக்குரிய அரிசன மக்களுக்கும் வழங்கப்பட விருக்கின்றன. தொடர்ந்து நான்கைந்து மாதக் காலத்திற்குள் மேலும் 30,000 வீடுகள் கட்டுவதற்கு வாரியத்தினால் திட்டங்கள் தீட்டப்பட்டு அந்த வேலைகளும் தொடங்கப்பட்டிருக்கின்றன. 1975-ஆம் ஆண்டிற்குள்ளாக, ஒரு இலட்சம் வீடுகளைக் கட்டி முடிக்க வேண்டுமென்று வாரியம் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது.

தாழ்த்தப்பட்ட மாணவர்களுடைய பெற்றோர்களுடைய ஆண்டு வருமான வரம்பு ரூ. 2,500-லிருந்து ரூ. 3,000-ஆக உயர்த்தப்பட்டிருப்பது பெரிதும் இந்த அவையில் வரவேற்கப் பட்டது என்றாலும், அமைச்சராக இருந்த சத்தியவாணிமுத்து அவர்கள் ஏதோ ஒரு தவறு நடந்துவிட்டது, 1967-லேயே, அண்ணா காலத்திலேயே என்று குறிப்பிட்டார்கள். பெற்றோர்களுடைய வருமான வரம்பு ரூ. 1,500 ஆக இருந்ததை, ரூ. 2,000 ஆக அரிசன மக்களுக்கு மாத்திரம்தான் அண்ணா அவர்கள் 1967-இல் உயர்த்தினார் என்றும், ஆனால் அப்போது

ஆர்டர் - உத்தரவு - போட்டவர்கள் அதை மாற்றி, பின்தங்கியவர்களுக்கும் ரூ. 2,000 என்று போட்டு விட்டார்கள் என்றும் சொன்னார்கள். எப்படித்தான் மனம் துணிந்து தவறு என்று சொல்கிறார்கள் என்றுதான் எனக்குப் புரியவில்லை. எப்படி அரிசனங்கள் இந்தச் சமுதாயத்திலே பின்னடைந்திருக் கிறார்களோ, அதற்கு நேரிடையாகவே - சமமாகவே பின்தங்கிய மக்களும் இந்தச் சமுதாயத்திலே பின்தங்கியிருக்கிறார்கள்.

1967-ஆம் ஆண்டு ஜூலை 31-இல் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அரிசன மாணவர்களுக்கும், பாக்வார்ட் கிளாஸ் மாணவர்களுக்கும், இருவருக்குமே வருமான வரம்பு ரூ. 1,500 என்று இருந்ததை ரூ. 2,000 ஆக மாற்றி, அரசு ஆணை 1967-ஆம் ஆண்டு ஜூலை 31-ஆம் தேதி போடப்பட்டது.

அதற்குப் பிறகு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அரிசன மக்களுக்கும் ரூ. 2,000 என்று இருந்ததை 1970-71-இல் மாற்றி அரிசன மக்களுக்கு மட்டும் ரூ. 2,500 என்று உயர்த்தினோம். பின்தங்கிய மக்களுக்கு இருந்த ரூ. 2,000 அப்படியே இருந்தது. இப்போது அரிசனங்களுக்கு ரூ. 2,500 என்பதை உயர்த்தி ரூ. 3,000 என்றும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ரூ. 2,000 என்று இருந்ததை ரூ. 2,500 என்றும் ஆக்கியிருக்கிறோம். ஆகவே, பின்தங்கிய மக்கள் என்றால் சிலருக்கு ஒரு அலர்ஜி. . . .

**திருமதி சத்தியவாணிமுத்து** : நான் கூறியது, அமைச்சரவையில் எடுத்த முடிவு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மாத்திரம்தான்; ஆனால் ஜி. ஓ. போடும்போது இரண்டு பேருக்கும் சேர்த்துப் போட்டார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : 1967-இல் அம்மையார் அவர்கள்தான் அரிசன நல அமைச்சராக இருந்தார்கள், அண்ணா முதலமைச்சராக இருந்தார். 1967-லிருந்து 7 ஆண்டுக் காலம் கேட்காமல் இருந்துவிட்டு இப்போது யார் அந்த ஆர்டரைப் போட்டார்கள் என்று கேட்பது, இவர்கள் அரிசன நல அமைச்சராக எப்படி இருந்தார்கள் என்றுதான் எனக்கு புரியவில்லை. இவர்கள் அப்போதல்லவா கேட்டிருக்க வேண்டும். ரூ. 1,500 என்பது அப்பொழுதே பின்தங்கியவர்களுக் கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இருந்த தொகைதான். அது

ரூ. 2,000 ஆக்கப்பட்டது. அது பிறகு அரிசன மக்களுக்கு ரூ. 2,500 ஆக்கப்பட்டது. பின்தங்கியவர்களுக்கு ரூ. 2,000 அப்படியே இருந்தது. இப்பொழுது, அரிசன மக்களுக்கு ரூ. 2,500 என்று இருப்பது, ரூ. 3,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. பின்தங்கிய மக்களுடைய வருமானம் ரூ. 2,000 என்பது ரூ. 2,500 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே, பின்தங்கிய மாணவர்கள் என்றால் ஒரு அலர்ஜி வரக்கூடாது. எப்படி தாழ்த்தப்பட்டவர்கள் சமுதாயத்திலே தாழ்த்தப்பட்டிருக்கிறார்களோ, அதைப்போலவே தான், பின்தங்கியவர்களும் சமுதாயத்திலே தாழ்த்தப் பட்டிருக்கிறார்கள்.

இங்கே துரைமுருகன் தெரிவித்த மாதிரி, நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டபொழுதே, நான் உறுதியாகத் தெரிவித்தேன், என்னுடைய வாழ்நாளில், நான் பொறுப்பிலே இருக்கிற நேரத்தில், எந்தக் காலத்திலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும், பின்தங்கிய மக்களுக்காகவும் பாடுபட உழைப்பதற்கு உறுதி எடுத்துக்கொள்வேன் என்றுதான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் நான் தெரிவித்தேன். ஆகவே, இப்படிப்பட்ட திசை திருப்பப்படுகின்ற காரியங்களால் நான் சிறிதளவும் பின்தங்கியவர்களுக்குச் செய்கின்ற காரியங்களிலிருந்து பின்வாங்க மாட்டேன். அதே போல், தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாடுபடுவதிலிருந்தும் பின்வாங்க மாட்டேன்.

பெரியவர் மணலி அவர்கள் இங்கே ஒன்றைச் சொன்னார்கள். சத்திரம் டிபார்ட்மெண்டில் பென்ஷன் தரவேண்டுமென்று உத்தரவிட்டும் செயல்படவில்லையென்று சொன்னார்கள். உத்தரவிடப்பட்டதும் உண்மை, செயல்படாததும் உண்மை. இடையிலே நடந்தது என்னவென்றால், சத்திரம் டிபார்ட்மெண்டிலே பணம் இல்லாததால், அரசாங்கத்தை அந்தச் செலவை ஏற்கும்படியாக, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டிருக்கிறார். 14-11-1974இல் அரசாங்கம் அதை ஒத்துக் கொண்டு இப்பொழுது உத்தரவிட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பணம் உடனடியாக வழங்கப்படும் என்றும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய பேருந்துப் போக்குவரத்துக் கழகங்களைப் பற்றி திரு. பொன்னப்பட நாடார் அவர்கள் எடுத்துச்சொல்லி

அதிலேயிருக்கிற குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினார்கள். நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இப்பொழுது உருவாக்கப்பட்டிருக்கிற அமைப்புகளில் எந்த அளவுக்கு நன்மைகள் விளையும் என்பதையெல்லாம் எடுத்துச்சொன்னார்கள். இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் தனியாக அமைக்கப்பட்டதும், இன்று போக்குவரத்துத் துறையிலே செய்யப்பட்டிருக்கிற ஏற்பாடுகளும், நம்முடைய பேருந்துகளை மேலும் செம்மையாக நடத்துவதற்கான வாய்ப்புகளை இந்த அரசுக்கு வழங்கியிருக்கிறது. பல போக்குவரத்துக் கழகங்கள் உருவாகியிருக்கின்றன. பல்லவன், பாண்டியன், சேரன், சோழன், அண்ணா, கட்டபொம்மன் என்ற பெயரில் போக்குவரத்துக் கழகங்கள் இன்றைக்கு உருவாக்கப்பட்டு நல்ல முறையிலே செயல்படுகின்றன.

மிச்சமிருக்கிற ஒரு பகுதி வட ஆற்காடு, தென்னாற்காடு பகுதி. அதற்கும் ஒரு போக்குவரத்துக் கழகம் உருவாக விருக்கிறது என்பதையும், அதற்குப் பெயர், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் என்பதையும் தெரிவித்துக் கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். (ஆரவாரம்).

மேலும், பல்வேறு விவரங்கள் இந்தத் துணை மதிப்பீட்டில் எடுத்துச் சொல்லப்பட்டிருந்தாலும், அவைகளுக் கெல்லாம் தனித்தனியாகப் பதில் சொல்ல இயலாது எனினும் இங்கு பதிவாகியிருக்கிற குறிப்பேட்டிலிருந்து அரசின் அதிகாரிகள் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுப்பதன் மூலமாக, குறைகளைத் தீர்த்து வைப்பார்கள் என்பதை மாத்திரம் கூறி, இந்த நேரத்தில் நல்ல கருத்துக்களை வழங்கிய எல்லா உறுப்பினர் களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

## இறுதித் துணை மதிப்பீடு

**உரை : 35** **நாள் : 22.03.1975**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1974-75ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்த தொகை 108.28 கோடி ரூபாயாகும். இதில் 55.87 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகைகடன்-மூலதனக் கணக்குகளின் கீழும் அடங்கும். மொத்த மானியக் கோரிக்கைகளில் 107.36 கோடி ரூபாய் அனுமதித்த இனங்களின் கீழும் 92 இலட்சம் ரூபாய் சாட்டிய இனங்களின் கீழும் அமையும். இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியச் செலவினங்கள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

வறட்சித் துயர் தணிப்புக்கு நாம் மேற்கொண்டுள்ள பணிகளுக்காக இந்தத் துணை மதிப்பீடுகளில் மொத்தம் 21.29 கோடி ரூபாய்ச் செலவுக்கு 40ஆம் மானியத்தில் வகை செய்யப் பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்பார்வையின் கீழ் 8.56 கோடி ரூபாய் செலவுக்கும் குடிநீர் வடிகால் நிறுவனத்தின் மூலம் 2 கோடி ரூபாய்ச் செலவுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பல்வேறு வளர்ச்சிப்பணிகளுக்காகச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்களை, இயன்ற அளவுக்கு வறட்சிப் பகுதிகளில் துயர் தணிப்புப் பணிகளுக்காகச் செலவிட நாம் முடிவு செய்துள்ளதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். இவ்வாறு செலவிடும்போது, வறட்சித் துயர் தணிப்புத் தலைப்பின்கீழ் அந்த நிதி ஒதுக்கங்கள் செலவாகக் காட்டப்படும். இதற்காகக் கணக்கு முறையில் அவையின் ஒப்புதலைப்

பெறவும் இம் மானியத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஆறு இலட்சம் பேர்களுக்கு நாளொன்றுக்கு வேலையளிக்கும் வண்ணம் இப்பணிகள் தற்போது முனைப்பாக செயல்பட்டு வருகின்றன.

சமுதாயத்தில் எளிய நிலையிலும் நடுத்தர நிலையிலும் உள்ளவர்களுக்கு சீரான விலைகளில் உணவுப்பொருட்கள் கிடைக்கச் செய்வதற்காக நாம் மேற்கொண்டுள்ள கொள்முதல் முயற்சிகளுக்கென தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு நிறுவனத்திற்கு 15 கோடி ரூபாய் கடனும் நாற்பத்திரண்டு கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு மொத்தமாக ஒரு கோடி ரூபாய்க் கடனும் தருவதற்கு இந்த மதிப்பீடுகளில் 56-ஆவது மானியக் கோரிக்கை வழி செய்கிறது. உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்வது தணிக்கைச் சாவடிகள் அமைப்பது போன்ற தொடர்புடைய செலவுகள் மொத்தம் 86 இலட்சம் ரூபாய் 34-ஆவது மானியக் கோரிக்கையில் அடங்கும்.

வறட்சியின் விளைவாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பயிரிடும் பரப்பு குறைந்ததனால், வரும் பருவத்துக்கு வேண்டிய விதைகளை வேளாண்மைத் துறையினர் விலைக்கு வாங்கி விற்பது மிகவும் அவசியமானதாகும். இதற்கென 1.43 கோடி ரூபாய் செலவுக்கு மன்றத்தின் ஒப்புதலை 20-ஆவது மானியத்தின் மூலம் பெற விழைகிறேன். மத்திய அரசு நமக்கு உரம் ஒதுக்கி வருகின்றது. இந்த ஆண்டு இதற்கான விலை உயர்ந்துள்ளதற்காக 9.49 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கும் இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் வகை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு இதற்கான தகவல்களை அனுப்பியவுடன் மாநிலக் கணக்கு ஆய்வாளர் அரசின் கணக்கில் பற்றுவைப்பதற்கு ஏற்ற நிதி ஒதுக்கமாக இது அமையும்.

வறட்சிப் பகுதிகளில் விரைந்து வேலைவாய்ப்புத் தருவதற்காக இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இராமநாதபுரம் கண்மாய், இராஜசிங்கமங்கலம் கண்மாய், திருப்பத்தூர் கண்மாய், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கவினாடு கண்மாய் ஆகிய நான்கு பெரிய கண்மாய்களைத் தூரெடுத்துச் சீரமைக்கும் பணிகளுக்காக ஒரு கோடி ரூபாயும், குளித்தலை வட்டத்தில் கண்ணூத்து ஓடைத் திட்டத்தை மேற்கொள்வதற்காக 20 இலட்சம் ரூபாய் செலவிட வகை செய்துள்ளோம்.

சென்னை மாநகரில் தற்போதுள்ள தண்ணீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காக உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, மொத்தம் 85.25 இலட்சம் ரூபாய், கடனாகவும், மானியமாகவும் மாநகராட்சிக்கு வழங்க இத்துணை மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. வீராணம் திட்டத்திற்கு சென்னையை நோக்கிப் போடப்பட்டு வரும் குழாய்களைப் பயன்படுத்திக்கொண்டு, பாலாற்றுப் படுகையிலிருந்து கிடைக்கும் நீரை சென்னைக்குக் கொண்டு வருவதற்கான இடைக்கால விரைவுத்திட்டம் ஒன்றுக்கு அரசு அண்மையில் அனுமதி வழங்கியது. இதற்கென மொத்தம் 1.12 கோடி ரூபாய் இத்துணை மதிப்பீடுகளில் இடம்பெற்றுள்ளது. இதுவன்றி குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க பல்வேறு நகராட்சிகளுக்கு மொத்தம் 28.96 இலட்சம் ரூபாய் வழங்குவதற்கான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

பெருகிவரும் நமது வரவு-செலவுகளுக்கு ஏற்ப, எதிர்பாராச் செலவு நிதியின் அளவையும் 10 கோடி ரூபாயிலிருந்து 20 கோடி ரூபாயாக உயர்த்த, மன்றத்தின் ஒப்புதல் அண்மையில் பெறப்பட்டது. இதற்கும் இந்த மதிப்பீடுகள் வகை செய்கின்றன.

ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டத்தின் பகுதியாக, முட்டுக்காட்டில் புதிதாக நிறுவப்பட்டு வரும் தொழிற்சாலைக்கு 14.38 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கமும் கண்ணிழந்தோர் பள்ளிகள் நான்கையும், செவிடர் பள்ளிகள் ஐந்தையும், 4.71 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக அமைக்க அடையாள நிதி ஒதுக்கமும், 555 செவிக்கருவிகள் வழங்குவதற்காக 3.04 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கமும், பல்வேறு பயிற்சித் திட்டங்களுக்கான செலவுகளும் இம் மன்றத்தின் ஒப்புதலுக்காக இத்துணை மானியக் கோரிக்கைகளில் இடம்பெற்றுள்ளன.

1975ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வரும் என்று இப்போதுஅறிவிக்கப்பட்ட அகவிலைப்படி உயர்வுகளுக்கு இந்த ஆண்டு 4.08 கோடி ரூபாய் செலவிட இந்தத் துணை மதிப்பீடுகள் வகை செய்கின்றன. அரசு அலுவலர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக 25 இலட்சம் ரூபாய் கூடுதல் கடன் தொகையும், விழா முன் பணங்களுக்காக இரண்டு கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கமும், 56ஆவது மானியத்தில் இடம் பெற்றுள்ளன.

ஆசிரியர்களுக்கு தடங்கல் இன்றி ஊதியங்கள் தருவதற்கு உதவும் பொருட்டு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு முன்னதாக மானியங்களை வழங்குவதற்கு மொத்தம் 3.12 கோடி ரூபாய் 17 ஆவது மானியத்தில் ஒதுக்கியுள்ளோம். உள்ளூர் மேல்வரி ஈட்டு மானியமாக 3.46 கோடி ரூபாய் ஊராட்சி ஒன்றியங்களுக்கு கூடுதலாக அளிப்பதற்கும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மானியத்தில் ஏற்பட்டுள்ள மிச்சங்கள் போக மீதித் தொகையான சுமார் 70 இலட்சத்திற்கு 28ஆவது மானியக் கோரிக்கையில் இதற்கென ஒப்புதல் வேண்டியுள்ளோம்.

1,500-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலை அமைக்கும் திட்டத்திற்கு கூடுதலாக 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கமும், 1972ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளைச் செப்பனிட்டு மேம்படுத்துவதில் இந்த ஆண்டுச் செலவான 86 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடும், துணை மதிப்பீடுகளில் அடங்கியுள்ள சாலைகள் பற்றிய பணிகளில் குறிப்பிடத் தக்கவை.

மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு கூடுதலாக ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கவும், வெள்ளிவிழாக் கொண்டாடும் சென்னை தொழில்நுட்பக் கழகத்திற்கு ஆறு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கவும் வகைசெய்யப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் பலரை முதல் நிலைத் தமிழாசிரியர்களாக நியமிப்பதற்கு ஏற்றவண்ணம் 23 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவிற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

புதிதாக ஐந்து தொழுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவுகளை அமைக்கவும், மொத்தம் 10 ஆய்வு-மதிப்பிடுதல்-சிகிச்சை (S.E.T.) பிரிவுகளை உருவாக்கவும் 8.48 இலட்சம் ரூபாய் 18 ஆவது மானியத்தில் இடம்பெற்றுள்ளது. குடிசை மாற்றுப் பகுதிகளில் மருத்துவ வசதிகளைச் சென்னை மாநகராட்சி தொடர்ந்து அளித்து வருவதற்காக ஒரு இலட்ச ரூபாய் செலவுக்கு வகை செய்ய அடையாள நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது. அண்ணாநகர், தண்டையார்பேட்டை, ஆகிய இடங்களில் புதிதாக அமைக்க இருக்கும் புறநகர் மருத்துவ மனைகளுக்காக மொத்தம் 45 இலட்சம் ரூபாய் செலவிடவும் வகை செய்துள்ளோம். இதுவன்றி, பல்வேறு மருத்துவ மனைகளில் கூடுதலாக அமைக்கப்பட்டு வரும் வசதிகளுக்கும் பணிகளுக்கும் அவையின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

894.8115
TAM



தந்தை பெரியார் போக்குவரத்து நிறுவனத்துக்கு 35 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் அளிக்கவும், வனத்தோட்ட நிறுவனத்துக்கு 15 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் வழங்கவும், சர்க்கரை ஆலைகள் நிறுவனத்துக்கு 5 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் தருவதற்கும், தமிழ்நாடு உப்பள நிறுவனத்திற்கு 5 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் அளிக்கவும் துணை மதிப்பீடுகளில் வகை செய்துள்ளோம். தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்துக்கு முன்னர் கடன் தொகையாக வழங்கப் பட்ட 30 இலட்சம் ரூபாய் அந்நிறுவனத்தின் பங்கு மூலதனமாக மாற்றப்பட்டுள்ளது. அதற்கான அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது சென்னையிலும் ஆளியாறு நகரிலும் உள்ள பொதுப்பணித்துறை தொழிற்கூடங்களை ஒரு புதிய நிறுவன அமைப்பாக மாற்றுவதற்கு அடையாள நிதி ஒதுக்கமும் கோரப்பட்டுள்ளது.

பேருந்துகள் வாங்கும்பொருட்டு பல்லவன் போக்குவரத்து நிறுவனத்துக்கு மத்திய அரசு கடனாக அளித்துள்ள மூன்று கோடி ரூபாயை வழங்குவதற்கும் நாம் நிதி ஒதுக்கம் செய்துள்ளோம். இதுவன்றி பல்வேறு போக்குவரத்து நிறுவனங்களுக்கு கடன்களும், வழி வகை முன்பணங்களுமாக மொத்தம் 3.93 கோடி ரூபாய் அளிக்கவும் மேலும் வகை செய்யப்பட்டுள்ளது.

G002401

தமிழ்நாடு கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழிவகை முன்பணமாக வழங்கியதற்கும், வீட்டு வசதி வாரியத்துக்கு வழிவகை முன்பணமாக 34 இலட்சம் ரூபாய் வழங்கியதற்கும் 56 ஆவது மானியத்தின் மூலம் மன்றத்தின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள முக்கியமான ஒரு சில செலவினங்களை இதுவரை நான் எடுத்துக் கூறியுள்ளேன். மன்றத்தில் அளிக்கப்பட்டுள்ள விரிவான அறிக்கையில், இவை பற்றிய விளக்கங்களையும், பிற செலவினங்கள் பற்றிய விவரங்களையும் காணலாம் என்று கூறி, 1974-75ஆம் ஆண்டிற்கான இந்த இறுதித் துணை மதிப்பீடுகளை ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன். வணக்கம்.

ANNA CENTENARY LIBRARY
CHENNAI - 600 005.

